உ

குருவேதுணை.

புலவர்புராணம்.

இஃது

திருப்புகழ்ச் சுவாமிகளென்றும்,

தண்டபாணி சுவாமிகளென்றும்

வழங்கும்

வண்ணச்சரபம்

ஸ்ரீமத் முருகதாசசுவாமிகளால்

இயற்றப்பட்டு

ஷெ சுவாமிகள் குமாரர்

தி. மு. செந்திநாயகம் பிள்ளையவர்களால்

சென்னை:

கலாரத்நாகரம் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

கிலகஜ கடகரவி.

1908.

Copy-right: Reserved

முகவுரை.

புலவர்புராணம், என்பது ஆறும்வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையா யிந்நூற்குக் காரணக்குறியாயிற்று. இது, புலவர்களது பழமையானகதையைச்சொல்லு நூலெனவிரியும். புல்வர் என்பதற்கு மெய்யறிவினே யுடையோர் என்பது பொருள். எல் லாமாகி யொன்றினுந்தாக்கற்றுள்ள விறைவனே யுள்ளவாறுணரு முணர் ச்சியொன்றே மெய்யறிவெனப்படும். அவ்வுணர்ச்சிக்குக் கல்வியே முதற்காரணமாம். அதுபற்றியன்றே ? "கற்றதனலாய பயனென் கொல் வாலறிவ னற்றுடொழாஅ ரெனின்" என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர். கல்வியென்பது வடமொழி, ஆந்தரம், கன்னட முதலிய பலபாடைகட்கும் பொதுப்பொருளினதேனும், ஈண்டுநூலா சிரியர்லெடுத்துக் கொள்ளப்பட்டது தமிழ்ப்புலமைக் கல்வியொன் றேயாம். நிற்க.

இந்நூலாசிரியர், தென்பாண்டிநாட்டுத் திருநெல்வேலிச் சுத்த சைவ வேளாண்குலத்தினராகிய செந்திலுயகம்பிள்ளை யென்பவர் வருந் திச்செய்த பெருந்தவப்பயனுய்க் கலியுகம், சகுசக, வருஷத்தில் அவ தரித்துத் தமது பிதாவால், சங்கரலிங்கமெனப் பிள்ளைத்திருநாமஞ் சூட் டப்பெற்றுச் சிறுவர்களுடன் கல்விபயின்று வருங்கால் பிதாசிவபத மடைந்தனர். பின், ஸ்ரீ முருகப்பெருமான், இவரது மனவெளியிற்று லங்கித்தமது பரத்துவநிச்சய முணர்த்தி யுபதேசித்தமையால், எட்டு வயதிலே கல்விப்பயன் கைவரப்பெற்று, அளவிறந்த தமிழ்க்கவிகள் புதுமையாகப் பாடுந்திறமையுற்றனர். ஞானசத்தியாகிய வேலாயுதத் தை நிறுத்திப்பூசிக்கும் பேராசையும் றியற்றிவந்தனராதலின் இவருக்கு முருகதாசரென்றுலகோர் காரணப்பேரோதினர்.

இவ்விவரம், "இளநகைச்சிறுமியர்சொன் மொழியினுங் தித்தித் திருக்கின்ற தமிழ்மணத்தா, லிலகுபொதியைக்கிரியி னருகிலுறுநெல்லே யினி டத்திலொரு குழவியாகி—வளவிலுள பாலொடு பலவாறு விளை யாடி வருகின்ற நாளிலென்னை, வலியவந் தாட்கொண்டு வேலாயுதப் பூசை வாஞ்சைக் கடற்குளாழ்த்திக்—குளம்விரவுபாலன்ன மதுரத்த மிழ்க்கவி கொழிக்குலை முதவியப்பாற், கோலமிகு செந்தூரி லொரு விதக் குறிகண்டு கொள்ளவோ ராடல்செய்தும்" என்ற இவரதுகவி யால் விளங்கும்.

அத்தகைய அநுக்கிரகம் பெற்றதுமுதல், அநேகதலங்கட்குச் சென்று பன்னிருகைமாலே முதலியபிரபந்தகளியற்றி மீண்டு திருநெல் வேலியிற் சேர்ந்திருக்குநாள் "புலவர்புராணம்" என்னும் இக்காவி யத்தை யியற்றிமுடிக்கவேண்டு மென்ற பேராசையுதித்தவாறு தொடங் கிப் பாயிரமுடித்தவுடன் கந்தக்கடவுள் காலந்தாழ்த்துப் பாடலாமென்ற கட்டளையைச் சிரமேற்பூண்டு விடுத்துப்பின், சிதம்பரம், சீரங்கம், பழனி, முதலிய தலங்கட்குச்சென்று, தில்லைத்திருவாயிரம், திருவரங்

கத்திருவாயிரம், பழனித்திருவாயிர முதலிய பிரபந்தங்களியற்றியவர் சான்றோருடைத் தென்றன்றோர் புகழுந்தொண்டை நாட்டினுட் பிரிவான நடுநாட்டிலுள்ள சிவதலங்கள் இருபத்திரண்டினுட் சிறந்துள்ள தாய்க் கோமாதுருபுரமென்னுங் காரணப்பெயர்பெற்ற திரு ஆமாத்தூரடைந்து, அங்கெழுந்தருளியுள்ள ஸ்ரீ அபிராமேஸ்வரரைப் பதிகச்சதகம், சதகப்பதிகமுதலிய பிரபந்தங்களாற்றுதித்துறைநாள் ஸ்ரீ முருகப் பெருமான் முன்பு நீ பாடத்தொடங்கிய புலவர்புராணத்தை யிப்போது பாடுவாயென வுத்தரவு கொடுத்ததன்மேல், அருட்பெருமையும், தமிழ்ப்புலமையும், ஒருங்கேயமைந்த, அன்பர்கள் பலரது அற்புதசரித்திரங்களை யனைவரு முணரத்தொகுத்துப் பாடத்தொடங்கினர். இவ்விஷயம், "நெல்லையினிற்றுவக்குமிது நெடுநாளென் மனக்கருவினின்றுதுன்று, மெல்லையில்பாமாலையினம் பிறந்ததற்பின் மாதைநகரிடத்திங்களிற், குல்லைமலர்க் குகன்கடவ நடைதரும்" என, இந்நூலின் பொதியாசலப்படலத்தி லிவர்கூறியிருத்தலாற் பெறப்படும். அன்றியும், இவ்வாறு இவர், இக்காவியத்தைப்பாடியதற்கு ஆதாரம், ஆன்றோர்வாக்கியமும், கலைமகளமைந்தாவும், முருகப்பெருமான் திருவடியுமேயன்றி வேறன்றென்பது, "ஆதார முன்னோர் நவின்மொழியுங் கலைவாணி நடம்புரியுநாவும், வேற்பிடித்து மலைதொறும்போய்த் திருவருட்பேராடல், விளக்கு முழுதுணர்புலவன் விரைமலர்த்தாள்களுமே" என, இவர் இந்நூற்பாயிரத்திற் கூறியிருத்தலால் விளங்கும்.

இவர், சௌரவம், சைவம், சாத்தேயம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், என்னும் சண்மதத்தையுந் தழுவிய சமரச ஞானியேயாயினும், ஆதியிற் சண்முகனுற் றடுத்தாளப்பட்டமையின் முருகதாசசுவாமிகளெனவும், அளவற்ற சந்தக்கவிகளைப்பாடியமையின், திருப்புகழ்ச் சுவாமிகளெனவும், முழுநீறும், உருத்திராக்கமும், லங்கோடு கௌபீனமும், தண்டமும் பூண்டிருந்தமையின், தண்டபாணிசுவாமிகளெனவும் வழங்கப்பெற்றனர். இவராலியற்றப்பட்ட செய்யுட்டொகையிலக்கத்துக்கதிகம்.

இந்நூலாசிரியசுவாமிகள் கடி திருவாமாத்தூரிலே மடாலயம் அமைத்தெழுந்தருளி, கலி, நித-வரு ஆகிய விளம்பி வரு த்தில் அரிய சமாதிநிலைகொண்டருளினர்.

இப்புராணத்தைச் சிலவேற்பாட்டினுல் முன்பதிப்பு அச்சிட்ட சென்னை திவான்பகதூர் - வ - கிருஷ்ணமாசாரியாரவர்கள், சிலகவிகளை மாற்றியும், களைந்தும், இரண்டு மூன்று பாகமாகப்பிரித்தும் சிலரைக் கொண்டுபதிப்பித்தனர். இப்போது மூலப்பிரதிக்கிணங்கவொரே புத்தகமாய் வெளியிடலானேன்.

இந்நூலாசிரியர் திருநக்ஷத்திரம்.

ஆண்டுவிளம்பிமதி யானியிருபான்மூன்றிற்
றீண்டுதிருவோணஞ் சேய்வாரங் - காண்டகுசீர்க்
கும்பலக்னமென்பார் குருமுருகதாசனெங்கோ
னம்பனிருதாளடைந்த நாள்.

இங்ஙனம்

நூலாசிரியர் மாணக்கனும் குமாரனுமான

தி. மு. செந்திநாயகன்.

குருவேதுணை.

சிறப்புக்கவிகள்.

சென்னை

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தர முதலியாரவர்கள்

இயற்றியது.

செந்தமிழ்வண் ணச்சரப மெனவவதா ரஞ்செய்து செவ்வே லேந்துங்
கந்தனு தியதேவர்க் கைம்பதினு யிரங்கவிகள் கவினப் பாடி
முந்தபர வருணகிரி யெனுமுருக தாசனுயர் முனிவர் கோமான்
றந்தருளும் புலவர்புரா ணத்தருமை கலைமகள்வாய் சாற்று மாதோ.

இந்நூலாசிரியர் மாணக்கர்

திருநெல்வேலி ஜில்லா கழுகுமலை

தமிழ் வித்வான்

தி. இராமகிட்டிணப்பிள்ளையவர்களியற்றியது.

தெய்வத் திருவருள்சால் சித்தார் தமிழ்ப்புலவர்
மெய்வர்க்க மாண்பொருங்கு மேதினிதோர்ந்—துய்வகையெங்
கோமான்கைத் தண்டபற்றுங் கோலமுனி வன்புகன்றான்
பாமாது மேத்தும் படி. (க)

தனதன தான தந்தனத் தானன.

அருள்வலிநீடு செந்தமிழ்ச்சீரெ ணு
வசடையார்க லங்கரற்பான்மையோர்
குருபதநாடி யுய்ந்திடச்செய்முனி
குறுமுனியாதி தன்றருட்பாவலோர்
மருவுபல்சீர்து லங்கரற்சார்பெலாம்
வளர்தவமேவு தண்டைச்சிலம்பர்
பொருள்செறிமான்மி யம்பெறக்கூறுமோர்
புலவர்புராண மென்பதிற்காணுமே. (உ)

இந்நூலாசிரியர் மாணாக்கர்
திருநெல்வேலி ஜில்லா கோபாலசமுத்திரம்
ச. சண்முகதாசப்பிள்ளையவர்களியற்றியது.

சந்தனப் பொழிலிற் றென்றற் றமிழ்மணப் பொலிவும் வாணேர்
செந்தனப் பொன்வாழ் மார்பன் றிசைமுகன் முதலோர் போற்றுங்
கந்தனற் கருணைப் பேற்றுற் கடலயின் முனிக்கோன் மேவி
வந்தனச் சிருந் தோய்ந்து வயங்குதன் மலய மாதோ. (க)

தீரசாத் திரமுற்றேது சிறப்பெலாந் திகழப் பெற்றுப்
பாரத கண்டத் துள்ள பருப்பத மாமக் குன்றின்
சீரவிர் சிகரத் துற்றுத் திகழ்நதிக் கொரு குரோசத்
தோரெல் வேலி யென்னு மொருநகர் மிகமே லாமால். (உ)

வேறு.

அங்ஙகரி னனவரத தானநெடு வீதியினி லறங்குன் றுமன்
மெய்ங்நலஞ்சால் கங்கைகுலத் துற்றசெந்தி னுயகன்றுன் வேட்கையோடு.
செங்நயச்சொற் காந்திமதி யம்மைபதந் தொழுதுநிதஞ் செயுந்தவத்தாற்
பன்னருஞ்சீர்ச் சிகாழிச் சம்பந்த னெனப்புவியிற் பால னுனன். (ங)

வேறு.

கொல்லங்க ழாயிரத்துப் பதினேந்தாண்டு
குலவியகார்த் திகைமதியிற் கூறுபாதி
நல்லத்த நாண்மீன வோரையாறி
னுகஞ்சத் தமத்தின்மதி நவத்திற் புந்தி
யெல்லந்த கன்குளிகன் றசத்திற் செவ்வா
யெட்டிற்சுக் கிரன்பொனிலா பத்திராகு
புல்லலுடன் பஞ்சமத்தோன் றிசையும்வந்து
பொருந்துதலா லப்பெருமை புகலற்பாற்றே. (ச)

வேறு.

உருவேறத் திருவேறு மென்றபழ மொழியைமனத் துறுதியாக்கொண்
டொருவேளை யுஞ்சிறிது மறவாமற் சடாக்காத்தை யுச்சரித்துப்
பெருவேதன் படைப்பிலுரு மற்றமிழிற் றேன்போலும் பிரபந்தங்கள்
பொருவேல்வைத் திருமாதர் நடிக்குலவு முருகோன்மேற் புகன்று வந்தான். (ரு)

அப்படிப்பல் பதிசூழ்ந்தான் கழைவனத்துற் றெருகாணன் காலோசித்தா
னிப்படியிற் றிருவருள்பெற் றிசைபாடி யெண்ணியவா றியலப் பெற்றுத்
தப்படியற் றினிவாராத் தனிவீட்டிற் சார் புலவோர் சரித்திரத்தை
யெப்படியும் பாடிடவே வேண்டுமெனப் பாயிரமுற் றிசைத்துப் பின்னர். (சு)

ரத்தனேரு லோவிசைத்தா னவைகளெண்ணிக் கையினடங்கா திருமுன்றீரை
தித்தனேகா ழியென்றளக்கப் போமோசொல் லிடற்கருகு னியானல்லேன்காண்
மெய்த்தவத்தாற் றிருவருள்பெற் றச்சுதன்போல் விளையாட விழைந்தா னப்பே
றத்தலத்தெந் நாள்வருமோ வென்றுசாய்ந் தாமாத்தூ ரிடத்திற் சேர்ந்தான். (எ)

அத்தலமெல் லாந்தருமென் றுண்டபெரு மான்மேன்மே வாயிரம்பாப்
புத்தமுதம் போலுரைத்துப் பின்புலவர் புராணத்தைப் புகல வெண்ணி
யுத்தமச்சீர்க் கும்பன்முத லோரெழுபத் திருசருக்க முரைத்துத்தீர்த்தா
னித்தரையிற் கலிமகனோர் தமிழ்ப்புலவர் குழாமுணர்ந்திட் டிறைஞ்சுமாதே. (அ)

வே று.

தனன தானத் தனன - தனதத்த தானனா.

வறுமைநோ யுற்றுமதி சிதறிஞாயக் குறைவு
மருவு தாழ்மைக் கவிஞர் தெரியத்தகாததே
சிறுமைதீர் பச்சுடல னரவமீதிற் றுயில்கொள்
செழிய வாரிக்கு ளெழு மமிழ்துக்குமேலதே
மறுமைமா முத்திநெறி விழையுமேன்மைப் பெரியர்
மனது நாடித் தினமு முணர்சுத்தஞானநூல்
பொறுமை சீர்வித்தமலி முருகதாசப் பிரபு
புலவர் பேரிற் கழறு புதுமைப்புராணமே. (கூ)

இந்நூலாசிரியர் மாணாக்கர்
மஞ்சக்குப்பம்ஜில்லாஉரத்தூர்
சின்னுரெட்டியாரவர்களியற்றியது.

திருவள ரிமைய மீன்ற செல்வியைப் பாமனங்நாண்
மருமணஞ் சூட்டல் காண்பான் மலிசபை தன்னிலன்னே
னருமுனிக் காசை நோக்கி யன்பநீ பொதியைமேவி
யிருமணக் கோல மாங்கே யீகுவ மென்றுன்மாதோ. (க)

அந்தமா முனிவன் றுற்றே யகன்றுதென் பொதியைமேவிச்
சந்தமார் தமிழ்மூன் றென்னுந் தனேயரைப் பயந்தன்னேர்க்காச்
சுந்தரக் கமண்டல மத்திற் சுரந்தபா லாகுந்தீர்த்தம்
வந்தது புவியிற் செம்பு மாநதி யெனப்பேர்தாங்கி. (உ)

நடந்தது பலகால் கொண்டு நற்றட நிரப்பிச்செய்யி
னிடந்தொறுஞ் செந்நெ லோங்க வெய்துமத்தீர்த்தந்தன்னி
லடைந்தவர் வினைக டீர்க்கு மகன்றுறை பலவவற்றுட்
டிடந்தவா மனத்தர் மேவுஞ் சிந்துபூந் துறையொன்றுண்டால். ()

அத்துறைக் குடபாலீச னமர்சின கரத்தின் மேவிப்
பைத்தலைப் பாயற்றூங்கும் பண்ணவன் முதலாம் விண்ணே
ருத்தம முனிவர் வேத முணர்ந்தவர் சைவரன்ப
ரத்தவென் றேத்து மோதை யளவிடற் கரியதம்மா. (ச)

காம்புறழ் தோளி காந்தி மதியொடு நெல்லையப்ப
சோம்பிய திருநெல்வேலி யுத்தம வேளாளர்க்குண்
மேம்படு செந்திலுதன் விரதங்கள் பலவாமுற்றித்
தாம்புகழ் மகப்பே றெற்குத் தந்தரு ளென்னவேண்டி. (நு)

எங்குமாய் விளங்குமீச னினியகண் ணருளாற் பெற்றுப்
பங்குறு மனையாளோடு பாலனே வளர்க்கச் சீர்த்தி
தங்குசெந் தமிழ்ப்பா மாலை சாற்றினன் மழலைவாயாற்
பொங்குபே ரன்பா லாய்ந்த புலவரு மகிழ்ந்தாரன்றே. (சு)

அன்றுதொட் டொருநால் வேதத் தறுமதத் தேவர்மீதுந்
துன்றுபே ரன்பு பூண்டுஞ் சூரனுதியரை வேலால்
வென்றுவா னவர்க ளெல்லாம் விண்குடி யேறச்செய்த
குன்றுதோ ருடுவானைக் குருபர னென்னக் கொண்டான். (எ)

இத்தகை யறிந்தமேலோ ரெண்ணில்சீர் முருகதாசன்
சத்திவேற்பூசை செய்யச் சலிப்புறுத் தண்ட பாணி
சித்திரச் சந்தமோதுந் திருப்புகழ்ச் சரபமென்ன
முத்திறத் திருப்பேரோத முழுமனத் தெளிஞனனன். (அ)

இல்லறத் தியற்கை தன்னே டெழிற்றுற வறமும்பூண்டு
வல்லவ மாயுள்கல்வி மலிதரு செல்வம் வாய்மைச்
சொல்லறந் தவமெய்ஞ் ஞானத் தூய்மையார் புதல்வனீன்று
மல்லலார் வயல்சூழ் மாதை மாநகர் வந்துபின்னர். (கூ)

பன்னிரு புயத்துப் பெம்மான் பகர்மொழிப் படியேமுன்னஞ்
சொன்னதோர் கும்ப னுதித் தொகையெழு பானிரண்டு
மன்னிய தெய்வத் தன்மை மருவிய புலவர்காதை
யின்னிசைத் தமிழின்மூவா யிரங்கவி யிசைத்தான் மன்னே. (கo)

ஓங்கிய மனத்தா லங்கா ளுயர்பசுக் கூட்டத்துன்ப
நீங்கிய மாதையூரி னிலைபெறு தவஞ்செய் தென்னைத்
தாங்கிய வன்னைதந்தை சற்குரு தண்ட பாணி
பூங்கழல் வணங்கிநாளும் புகழ்ந்துவாழ்ந் திருப்பே னம்மா. (கக)



குருவேதுணை.

இந்நூலாசிரியர் குமாரரியற்றிய

சிறப்புப்பாயிரம்.

பூமகள் வதன தாமரை யெனுஞ்சீர் பொருந்திய பாண்டிநா டதனிற்
றேமலர்ப் பொழிலார் பொதியமால் வரையின் சிரத்தினி லினிதமர்ந் திலகு
மாமகத் துவஞ்சேர் கும்பமா முனிவன் வளர்கமண் டலத்தினின்றிழிந்தே
சமுளக் கடலேழுக் குபுகுன திசையிற் சாய்வது தாம்பிர வன்னி. (க)

அந்தமா நதியி னிருகரைப் புறத்து மமைந்துள பலதுறை முகத்து
முந்தருட் டிறஞ்சால் சிந்துபூந் துறையி னோரம்வேய் முளையிடைச் சிவனார்
செந்தகை யிலிங்கத் திருவுரு வாகித் திகழ்தரு சீர்த்தியிற் சிறந்து
தந்தமர் வுலவும் வீதியின் பெருமை தழைந்தது நெல்லைமா நகரம். (உ)

ஆயந்ன் னகரிற் சைவவே ளாள ரியலில் வாழ்க்கையிற் சிறந்தோன்
றூயமெய் யறிஞன் செந்திரு யகப்பேர் துதைந்தவ னருந்தவ மியற்றி
யேயதோர் மகப்பே றருளென வடிவா னிருபதம் பணிந்துபின் னவடன்
சேயகண் ணருளாற் பெற்றிடு பாலன் செய்யவேற் பூசனைப் பிரியன். (ங)

திருப்புகழ்க் காரன் றண்டபா ணியன்சீர் திகழ்தரு முருகதா சனுமென்
றெருப்பட்ட வுலகோர் மூன்றுகா ரணப்பே ருரைத்திடப் பெற்றமெய்ச் சில
லுருப்பொலி முழுநீ றக்கமா லிகைகே ளுடித்தகல் லாடைதண் டணிந்தே
குருப்பெரு வேடத் துடன்றமிழ்ப் பனுவல் கொழித்திடு முழுத்தவ ராசன். (ச)

சூரியன் சிவனம் பிகைநெடு மாயன் றும்பிமா முகன்கும ரேசன்
சீரிய குருவா விளங்கியா வையுமாந் தெய்வமொன் றென்னவே தெளிந்தோ
னேரியற் றிருமா மலைமிசை யேறி யெளிதுபூ மியிலுருண் டுய்ந்தோன்
வேரியர் தொடையன் மன்னர்மீ தெனினும் வேண்டியோர் துதிசொலா விரதன். ()

தில்லையா யிரமும் பழனியா யிரமுஞ் சீர்திக ழரங்கத்தா யிரமுந்
தொல்லைதீர் தெய்வத் தாயிர மேழா யிரமுந்தொல் லருணையின் சிகரிக்
குல்லைமா லிகைவேள் சகத்திர தீபங் குணித்தவண் ணத்திலக் கணமு
மெல்லைதீ ரேகத் தாளித முகலந் தாதியு மாறிலக் கணமும். (ரு)

கலம்பகஞ் சந்தத் தொலியலந் தாதி கலின்செய்பிள் ளைக்கவி கோவை
யிலங்குசீர்ச் சதக மாதையூர்ப் புராண மிசைபதிற் றுப்பத்தந் தாதி
கலங்கொள்வெண் பாவந் தாதியும் பலவா நவின்றுசண் முகனடித் துணையே
பலங்கொளக் கருதி யாறெழுத் தரைக்கும் பண்பின னன்பினிற் சிறந்தோன். (எ)

என்னேநேர் சிலர்க்குந் தீமைதீர்த் தியுமா தினிதருள் புரிந்துதன் னடியார்க்
கன்னேநேர் விளங்கிப் பம்பைமா நதிசூ ழணிதிகழ் மாதையூ ரதனிற்
றன்னேநேர் கருணை யழகிய நாதர் சந்நதிச் சார்ந்திருந் திடுநாண்
பின்னேநேர் வடிவேற் குகப்பிரான் கனவில் விளம்புகென் றிசைத்தசொற் படியே.

அருட்பெருந் தகவுந் தமிழ்ப்பெருந் தெளிவு மமைந்திடப் பெற்றுமெய் யறிவான்
மருட்பெருக் ககற்றி யுய்ந்தமெய்ப் புலவர் வண்புக ழனைத்தையும் விளக்கித்
தெருட்டுசொற் சுவையும் பொருட்சுவைப் பொலிவுந் திகழ்விருத் தத்தினுற்கேட்போ
ரிருட்பெருக் கறுபே ரின்பவாழ் வெய்தி யிகபர சாதனம் பெறவே. (கூ)

உலகினிற் சிறந்தோர் சொல்லிடக் கேட்டு முரியநூல் சிலவற்று ணுணர்ந்துங்
கலனணி மயினோர் கலிமினு ணுவிற் காட்டுசொற் பயனது தெளிந்து
நிலவுசெந் தமிழ்நாட் டிடைத்திகழ் தருமோர் நிகரிலா மணிவிளக் கென்னப்
பலர்புகழ்ந் திடுசீர்ப் புலவர்புராணம் பாடிடத் தொடங்குபு பரிவால். (கo)

எழுபதோ டிரண்டு சருக்கமா முடித்திட் டினியதன் மடாலயத் திடையே
தொழுபதக் குகன்பா லினிதரங் கேற்றித் துகளறு பொருள்விரித் துரைத்தான்
பழுதின்மூ தறிஞ ரருகுகேட் டுவந்தார் பலவிதச் சுபசகு னங்கண்
மூழுதுமாங் கியலக் கண்டதாற் றெய்வ மூதரு ளிலங்கிய தம்மா. (கக)

எத்தனே யோகா வியங்களிவ் வுலகத் திருப்பினு மியலருட் புலவோ
ருத்தமப் புகழ்ச்சி ரொருங்கெடுத் துரைக்கு மொருபெருங் காவிய மிதுபோ
லித்தனி காறு மிசைத்துவைத் திட்டோ ரிலரென்றுர் பலரவன் ணுணைத்தாட்
சித்தம்வைத் தவன்றன் மைந்தனிப் பதிகஞ் செந்தினு யகன்மொழிந் தனனே. (கஉ)

உ

குருவேதுணை.

இந்நூ லாசிரியர் குமாரரியற்றிய

சருக்கக் கோவை.

தென்பொதியைக் குறுமுனிவர் தமிழ்விரகர் வாகீசர் திகழ்வன் றொண்ட
ரன்பதிகத் திருவாத வூரடிகள் சேந்தனு ரருள்சேர் மூலர்
துன்பமில்சீர்க் காரைக்கா லம்மையிசைச் சேரமான் றுதிருக் கீர
ரின்புலமைக் கல்லாடர் வெண்காடர் நாரையூ ரிசைந்த பாலர். (க)

சேக்கிழார் மெய்கண்டா ருமாபதியார் விட்டிணுப்பேர்ச் சித்தர் கொல்லி
காக்குமர சாயகுல சேகரர்செந் நாப்புலவர் கரியோ னன்பிற்
றேக்குமிசைத் தொண்டரடிப் பொடியார்நற் பாணழ்வார் செகத்திற் பல்லோர்க்
கேக்கமளித் திட்டபர காலரொடு பொய்கையா ரெழிற் பூதத்தார். (உ)

பேயாரென் றொருமூவர் திருக்குருகைப் பராங்குசப்பேர்ப் பிள்ளை வீணை
மாயாத தேசிகனு மணவாளன் முனுமென வண்பேர் வாய்ந்து
சாயாத புகழிகத்திற் கொளுமிரட்டைக் குரவரருட் டன்மை யாலே
வாயாரக் கவிபொழியு மெளவையா ரிடைக்காட் சீர்மகிமைச் சித்தர். (ங)

வள்ளுவர்பத் திரகிரியா ரொடுபொய்யா மொழிப்புலவர் வண்ணம்பாடிக்
கின்னையுரு வாமருண கிரிகாதர் வில்லிபுத்தூர்க் கிளர்ந்த சீலர்
கொள்ளுகையத் தமிழ்ப்புலமை பிரட்டையார் குகைநமசி வாய ரன்னூர்
விள்ளுமிசைக் குருநமசி வாயரொடு தத்துவரா யப்பேர் மிக்கோர். (ச)

திருச்சிற்றம் பலநாடி யோடுசிவப் பிரகாசர் சிவபிரானே
யருச்சித்த சாந்தலிங்கர் குமாரதே வப்பெரிய ரருட்போ ரூரன்
விருப்புற்ற சிதம்பரப்பே ராளரருட் சோலையர்மெய் விளக்கும் யோகப்
பெருக்குற்ற தாயுமா னவர்குமர குருபரப்பேர் பெற்ற தனயர். (நி)

திருக்கோவ லூரிலிருக் தருட்டிருப்பா திரிப்புலியூர் சேர்ந்து மாயக்
கருக்கோதற் றுயருறிகொ ளாறுமுகப் புனிதருயர் கனகமன்றிற்
றிருச்சேவை பெற்றமுத்துத் தாண்டவர்கச் சியப்பசிவா சாரி யாருட்
செருக்காரும் புகழ்ப்பகழிக் கூத்தரிரு வயிணவராஞ் செவ்வே ளன்பர். (சு)

வரதுங்க பாண்டியர்மெய்க் கவிராச பண்டிதரும் வாம மார்க்கத்
துரமொன்று மபிராமப் பட்டர்புக ழேந்திதிற லொட்டக் கூத்தர்
சரிதங்கொள் சம்பருயர் காளமே கப்புலவர் தகவார் காளி
வரமென்ற கொடுவாக்கின் வசைகவியாண் டானெனும்பேர் வாய்ந்த தீரன். (எ)

வீரபாண் டியப்புலவர் கந்தசா மிப்புலவர் விளம்பு மன்னூர்
சாரமுறு தவச்சிகுவா மாறுமுகப் புலவர்மதிட் டகைசால் கூடற்
சேரம்மே யருளடைந்த சீகிவா சப்புலவர் திருக்குற் றூலத்
தோரமுறு நமசிவா யப்புலவர் முதுகுளத்தூ ருவந்த சீலர். (அ)

நெற்குன்ற வாணர்தலை மலைகண்ட தேவரரு ணெடுமாயற்சே
சொற்குன்றுத் துதிபகர்பிள் ளைப்பெருமா ளையங்கார் துணைக்கண் ணின்றிக்
கற்குன்றிக் குகன்றரக்கொண் முத்துவயி ரவப்புலவர் காதலாட்காப்
பொற்குன்ற மெனப்புகழ்பாண் டியனெதிர்நாட் டியபாணப் புலவர் மாதோ. (கு)

சத்திமுற்றத் தூர்ப்புலவர் முத்துலுக்கப் புலவரொடு தம்பேர் காணச்
சித்தியற்றி யுடன்மறைந்த பலதெய்வப் புலவரருட் செயலின் றித்தம்
முத்தியினுற் செயலியற்று மறிவுத்தன் மைப்புலவ ருடனே யிந்தச்
சத்தியமாம் புலவர்புரா ணத்திலெழு பதிற்றிரண்டு சருக்கந் தானே. (கூ)

முற்றிற்று.

தெய்வமேதுணை.



சருக்க அட்டவணை.

சருக்கம்.	பக்கம்.	செய்யுள்.
பாயிரம்	க	ஈஉ
பொதியாசலப் படலம்	எ	நுக
அகத்தியர் மகாமுனிவர் சருக்கம்	கஈ	சக
திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் சருக்கம்	களி	எஅ
திருநாவுக்கரசு நாயனார் சருக்கம்	உள	உங
சுந்தரமூர்த்தி நாயனார் சருக்கம்	ஈ0	உஉ
திருவாதவூரடிகள் சருக்கம்	ஈங	எங
சேந்தனாயனார் சருக்கம்	சக	ஈஉ
திருமூலநாயனார் சருக்கம்	சசு	உக
காரைக்காலம்மையார் சருக்கம்	சஅ	கஅ
சேரமான்பெருமாணாயனார் சருக்கம்	நி0	உக
நக்கீரதேவர் சருக்கம்	நஈ	சக
கல்லாடனார் சருக்கம்	நுக	கஉ
திருவெண்காடர் சருக்கம்	கூ0	கஈக
நம்பியாண்டார் நம்பிகள் சருக்கம்	எஉ	உசு
சேக்கிழார்நாயனார் சருக்கம்	எநி	உங
மெய்கண்டதேவநாயனார் சருக்கம்	எள	கள
உமாபதிதேவநாயனார் சருக்கம்	அக	சஉ
பெரியாழ்வார் சருக்கம்	அள	கஅ
குலசேகராழ்வார் சருக்கம்	அக	உக
திருமழிசையாழ்வார் சருக்கம்	கஈங	நிஅ
தொண்டரடிப்பொடியாழ்வார் சருக்கம்	க00	உள
திருப்பாணாழ்வார் சருக்கம்	க0ஈ	உங
திருமங்கையாழ்வார் சருக்கம்	க0சு	ஈக
மூன்றாழ்வார் சருக்கம்	ககக	கஉ
சடகோபாழ்வார் சருக்கம்	ககச	ஈள
இரட்டைக்குரவர் சருக்கம்	ககஅ	ஈஉ
ஔவையார் சருக்கம்	கஉஉ	கஉஅ
இடைக்காடர் சருக்கம்	ஈஈள	உங
திருவள்ளுவநாயனார் சருக்கம்	கச0	சுங
பத்திரகிரியார் சருக்கம்	கசள	நுள
பொய்யாமொழிப்புலவர் சருக்கம்	கநுஈ	ஈள
அருணகிரிநாதசுவாமிகள் சருக்கம்	கநுஅ	அஉ
வில்லிபுத்தூரார் சருக்கம்	க'சுள	ஈங
இரட்டைப்புலவர் சருக்கம்	களக	நுசு
குணஈமசிவாய சுவாமிகள் சருக்கம்	களஅ	எஅ
குருஈமசிவாய சுவாமிகள் சருக்கம்	கஅள	கள
தத்துவராய சுவாமிகள் சருக்கம்	கஅக	ஈ0
திருச்சிற்றம்பலநாடிகள் சருக்கம்	கஈஉ	உஅ
சிவப்பிரகாசசுவாமிகள் சருக்கம்	கஈசு	சச

சருக்கம்.	பக்கம்.	செய்யுள்.
சாந்தலிங்கசுவாமிகள் சருக்கம்	உ0உ	ககூ
குமாரதேவசுவாமிகள் சருக்கம்	உ0ச	உச
சிதம்பரசுவாமிகள் சருக்கம்	உ0எ	உரு
சோலையசுவாமிகள் சருக்கம்	உக0	ககூ
தாயுமானசுவாமிகள் சருக்கம்	உகஉ	உள
குமரகுருபரசுவாமிகள் சருக்கம்...	உகசூ	ஙஉ
ஆறுமுகசுவாமிகள் சருக்கம்	உஉக	ஃஅ
முத்துத்தாண்டவர் சருக்கம்	உஉங	கள
கச்சியப்பசிவாசாரியர் சருக்கம்	உஉரு	உச
பகழிக்கூத்தர் சருக்கம்	உஉஅ	ச0
இருவயிணவர் சருக்கம்	உங்உ	ஙள
வரதுங்கபாண்டியர் சருக்கம்	உஙகூ	ஙஅ
கவிராசபண்டிதர் சருக்கம்	உசச	சகூ
அபிராமப்பட்டர் சருக்கம்	உரு0	சரு
புகழேந்திப்புலவர் சருக்கம்	உருரு	சகூ
ஒட்டக்கூத்தர் சருக்கம்	உசுக	ஙகூ
கம்பர் சருக்கம்	உசுரு	கரு0
காளமேகப்புலவர் சருக்கம்	உஅஉ	ஃஅ
வசைகவியாண்டான் சருக்கம்	உகூ0	எக
வீரபாண்டியப்புலவர் சருக்கம்	உகூஅ	ஙஉ
கந்தசாமிப்புலவர் சருக்கம்	ஙஉஉ	சரு
ஆறுமுகப்புலவர் சருக்கம்	ஙஉள	உரு
சிவசுப்புலவர் சருக்கம்	ஙகக	சுசூ
நமசிவாயப்புலவர் சருக்கம்	ஙகஅ	உரு
மூதுகுளத்தூரர் சருக்கம்	ஙஉஉ	உக
நெற்குன்றவாணர் சருக்கம்	ஙஉங	ஙஉ
தலைமலைகண்டதேவர் சருக்கம்	ஙஉள	சக
பிள்ளைப்பெருமாளையங்கார் சருக்கம்	ஙஙஉ	உஅ
முத்துவயிரவப்புலவர் சருக்கம்	ஙஙசூ	கரு
பாணப்புலவர் சருக்கம்	ஙஙள	உக
சத்திமுற்றப்புலவர் சருக்கம்	ஙச0	ஙக
முத்துவிக்கப்புலவர் சருக்கம்	ஙசங	ருசூ
பலதெய்வப்புலவர் சருக்கம்	ஙரு0	ச்ச
அறிவுத்தன்மைப்புலவர் சருக்கம்	ஙருசூ	ருஅ
வாழிவிருத்தம்	ஙசூச	க
தெய்வீகத்தாழிசை	ஷை	க



ஸ்ரீமத் முருகதாசசுவாமிகள்.

K. R. Press, Madras.

குருவேதுணை.

புலவர்புராணம்.

பொதுப்பாயிரம்.

பொதுக்கடவுள்வாழ்த்து.

பொதுத்தெய்வம்.

யாவரெவ்வண்ணஞ்சொல்லு மெவற்றினுமிசைந்துநின்று
மூவலற்றெளிருந்தொல்சீர் முதற்பரம்பொருளேவாழ்த்திக்
காவலர்வெருண்டுபோற்றுங் கவித்தமிழ்ப்புலவர்காதை
[illegible]கொண்டுரைக்கலுற்றே னதுவுமென்செயற்பாற்றன்றே. (க)

விநாயகர்.

எவ்வகைத்தொழிலெந்நாளி லெவ்விடத்தியற்றுமியாரு
மீவ்வவைமுடியவேண்டு மானைமாமுகனேப்போற்றி
யெவலம்பொன்னுநாணு நறுந்தமிழ்ப்புலவர்காதைப்
*பௌவமூடுணர்ந்தமட்டிற் பகர்ந்திடத்துணிவுற்றேனே. (உ)

முருகக்கடவுள்.

எழுதருமறைவல்லான்ற னீரிருசிரத்துமோதிப்
பழுதறுபிரமஞானம் பரமனுக்கருளிச்செய்து
முழுதறிபுலவனான முருகனேமுன்னிவாழ்த்திக்
தொழுதருட்புலவர்காதை சொல்லிடத்துவக்கினேனே. (ங)

சரசுவதி.

புண்ணியச்சுருதியாதப புனிதனூறமருகுதியாவும
வெண்ணிறக்கமலப்போதில் வீற்றிருந்தருள்வாடன்னைத்
திண்ணியவுணர்வாலுடிச் செழுந்தமிழ்ப்புலவர்காதை
மண்ணினிற்பலருந்தேறி மகிழ்வுறவகுக்கின்றேனே. (ச)

பராசத்தி.

வாலியும்புவனைதானும் வளர்திரிபுரையுமாகிக்
கூலியிற்பரிதிபோலக் கவின்றருகவரியுண்கண்
வேலியெப்பொழுதும்போற்றி வியன்றமிழ்ப்புலவர்காதை
நூலியானுணர்ந்தவாறு நுவன்றிடமுயல்கின்றேனே. (ஞ)

* பௌவம் - கடல்.

பரமசிவன்.

எண்வகைப்பொருளுமாகி யிணையிலெந்தொழிலுஞ்செய்து
திண்வரைச்சிலையொன்றேந்துஞ் சிவபிரான்றிருத்தாள்போற்றிப்
பண்வழிந்தொழுகும்பாடம் பயன்பெறுபுலவர்காதை
விண்வயிற் * புலவர்ஞாண விளம்புதல்விரும்பினேனே. (சு)

திருமால்.

இகத்தொடுபரத்துமேவி யெவ்வகையுயிருங்காக்கு
மகத்துவத்தயக்கிரீபன் மலரடிவணங்கிவாழ்த்தி
† நகத்தின்ஞாயமுதமாய நறுந்தமிழ்ச்சுவையுண்டார்க்கு
மகத்தருட்புலவர்தங்க ளணிக்கதையறைகின்றேனே.

வழிபடுகடவுள் வாழ்த்து.

அனவரததான விநாயகர்.

மணிகுலவுமுடிவேந்தர் வாழ்வனந்தஞ்சிதைந்தாலு மாறுதோங்குந்
திணிகுலவுகவிபாடும் புலவர்சரித்திரம்விரித்துச் செப்பச்செய்வீர்
பணிகுலவுதிருமேனிப் பரமனதுநெல்வேலிப் பதியிற்றெண்டீ
ரணிகுலவுநெடுவீதி யனவரததானவிநா யகப்பெம்மானே. (அ)

சேந்திலுயகர்.

பன்னுமுத்தமிழ்ப் பாடலினுடல்கள் பயின்றுயர் புலவோர்தம்
மன்னுமெய்ப்புகழ்ச் சரித்திரமுறைப்படி வழங்கியாண் டருள்கூர்வாய்
மின்னுஞாணுற விளங்கயிற்படைகொடி வியனெழிற் றிருச்செந்தூ.
ரென்னுமாதவத் தலத்தில்வீற்றிருந்தெனக் கிசைந்தவாறுரைத்தோனே.

வாக்குடைச்செல்வி.

திருவுருமாமலைத்தலத்தி லாறுவகையிலக்கணமுஞ் சென்னியூரிற்
பொருவில்பிள்ளைக்கவியுமரங் கேற்றியநாளுலகமுற்றும் புகழ்தற்கான்
பெருவிளையாட்டியற்றியதோர் பெண்கொடியாம்வெண்கிளியே பேதைக்
கருள்வளமைப்புலவர்கதை யத்தனையுமுலகறிய வறிவிப்பாயே. [யேனை

உண்ணாமுலையம்மை, காந்திமதியம்மை.

அண்ணாமலையி லடியேனை யாண்டுகொண்ட
வுண்ணாமுலையே யுயர்ந்தநெல் லையப்பர்
கண்ணார்வமெய்தவருங் காந்திமதியேயெனக்குட்
பண்ணார்கவிப்புலவர் பண்புதிக்கச்செய்வீரே. (கக)

---

* புலவர் - தேவர்கள். † நகம் - மலை.

நடராசர், அண்ணுமலையார், நெல்லையப்பர்.

தில்லைமன்றத் தொருத்திரு வூடுவாய்
செங்கனற்கிரி யாகித் திகழ்ந்துளாய்
நெல்லிவேயின் முளைத்துல காளுவாய்
நேயம்வைத்து நிதந்துதி செய்குவே
னெல்லையின்றிய பாவலர் தங்குழாத்
தேறுபோன்றவ ரின்புகழி யாவையும்
வல்லையோதத் துணிந்துகொண் டேனைவை
வந்துதோன்றவரங் கொடுத்தாண்மினே. (கஉ)

கரியமாணிக்கப்பெருமாள், தேவநாதன், வரதராசர்.

நெல்லைமாநகர்க்கரிய மாணிக்கப்பெருமாளே நிறைந்தவாசக்
குல்லைமலிதிருவயிந்தைக் கோமானேபுதுவைநகர்க் கொண்டல்வண்ணு
கல்லைநிகர்வன்னெஞ்சக் கயவர்களுமஞ்சுதிறற் கவிஞர்சீர்த்திச்
சொல்லையுலகிகழாமற் புரந்தருளுங்கடனுமது சொந்தமாமே. (கஊ)

ச ற் கு ரு.

சூரியனுஞ் சந்திரனும் விழிகளாகிச்
சொல்லுமற்றைக் கடவுளர்பல் லுறுப்புமாகிக்
காரியமுங் காரணமுந் தானேயாகிக்
கருதுவாருளந்தொறும்போய்க் கலந்துநிற்குஞ்
சீரியசற் குருபரனே யெனையாட்கொண்ட
செல்வமே யாவும்வல்ல தெய்வமேமுன்
கூரியமுத் தமிழ்பொழிந்தோர் சரிதஞ்சற்றுங்
குழறுமெற் பகரவரங் கொடுத்தாள்வாயே. (கஎ)

அபிமானக்கடவுள்வாழ்த்து.

பலதெய்வங்கள்.

பன்னிரண்டுசமயத்துங் கொலைபுலையிற்சாராத பான்மையோராத்
துன்னிவளர்பெரியோர்கள் வழிபடுமெத்தெவனையுந் துதித்தல்செய்வாம்
பொன்னிலங்குமுடிவேந்தர் நடுநடுங்கத்தமிழ்மாரி பொழிந்தகீர்த்தி
மன்னியமெய்ப்புலவர்சரித் திரத்தையொருபுராணமென வகுக்கவென்றே.

சமயச்சின்னம்.

வெந்தநீ றக்கங்காவி விளங்குசிந் தூரமண்ணென்னு
மைந்தணிந் *தறுவர்தம்மா லமரா தமைந்தபின்னர்க்
†கந்தரஞ் சொரிதல்போலக் கவிபொழி கடவுட்டன்மைச்
செந்தமிழ்ப் புலவர்காதை செப்பிடச்சிந்தித்தேனே. (கசு)

* அறுவர் - சட்சமயவாதிகள். † கந்தரம் - மேகம்.

பெரியோர் பாததூளி.

இரக்கமாதிய நற்குணமியாவையு மெய்திச்
சுரர்க்கு மேலவ ராயவர் தம்பதத் துகளைச்
சிரத்தின்மீதணிந் திறைஞ்சுதுஞ் செழுந்தமிழ்ப் புலவர்
வரத்தி னற்பெறும் வாழ்வினைச் சொலப்பெறு மாறே. (கள)

புலவர்.

சொற்படி நடத்தும்வலி துன்னுபுலவோர்தங்
நற்பத மெனுங்கமல நாண்மலர் முடிப்பாம்
விற்பனர் விரும்புமவர் மெய்ப்புகழ்விளம்பிப்
பற்பலர் துதிக்குமுயர் பான்மையுறவென்றே. (கஅ)

அபிப்பிராயம்.

அருணெடுஞ் சிகரிதிரு நெல்வேலிச்சிகரி
யாதியபற்பலவாகு மபிமானத் தலமுங்
திருவுருமாமலைவள்ளி மலைதிருமா மலைபோற்
சிந்தையறியதுபூதி செயுந்தலமுஞ் செப்பிற்
பெருகியதோர்காவியமா மாதலினுற் றுதியே
பிறங்குபொதுப் பாயிரத்தைப் பேசியமட்டடக்கி
வருசிறப்புப்பாயிரமென் றெண்ணுகின்றேன் கவிதை
வந்தபின்பார்த் தவப்பதென்றன் வழக்கமுலகோரே. (கக)

பொதுப்பாயிர முற்றிற்று.

சிறப்புப்பாயிரம்.

அவையடக்கம்.

அமர்மன்னவ ராதியர்ப் புகழினு மலர்வெண்
கமலையேங்கர் கவிவலாரிகழ்வர்சற் றவர்தங்
தமரைவாழ்த்திடிற் பிழைபலசாரினுந் தள்ளார்
நமசென்றேர்கில ரிருப்பினும்பொருளல நமக்கே. (க)

வேறு.

இப்புராணத்து டலங்குமவ ரின்னருளா
லொப்புரைத்தற்கெட்டா துயர்ந்தபெருந் தன்மையுற்று
மெய்ப்புனிதனுகும் விருப்பால் விளம்புகின்றேன்
றப்புவருமாகிலவர் தம்மையே சாருமன்றே. (உ)

வே று.

வம்பரைப் பாடுவார்க்கும் வாக்கருள் வாணித்தாய்தன்
செம்பதத் தடிமைத் தன்மைத் திறலுறும் புலவர்காதைக்
கிம்பரார் புகழ்சீர்நல்கா திருக்கிலவ் விழிவுந்தீங்குங்
கொம்பர்நே ரவளையன்னோர் குழுவினைக் கூடுமென்றே. (கூ)

நூற்பொருள்.

தென்றலைப் பொருநையைத் திரிவிதத் தமிழ்களைத்
தன்றவப் பயனெனத் தருமலைக் கிறைமுதற்
றுன்றருட் புலவர்தந் தொலைவின்மெய்ப் புகழ்வனப்
பென்றனுட் குலவுமட் டிதுநுவன் றிமெரோ. (சு)

வே று.

அகலமாகு மருந்தமி ழாக்கமுஞ்
சகலர்காணத் தகாவருட் டன்மையும்
பகலே நேர்புகழ்ப் பாவல ராண்மையும்
புகலுமிந்தப் புராண முணர்த்துமே. (ஙி)

நூற்பெயர் முதலியன.

நூற்பெயர்யா தெனிலுண்மைப் புலவர்புரா ணமதா
நுவலுமிடங் திருநெல்லை நகர்நுவலு நிமித்த
மேற்பவருக் கீவார்தம் பெருநலமு மீயா
ரிடும்பையுஞ்செந் தமிழ்ப்புலவோ ரெழிற்புகழும் விளக்கி
நாற்பொருளும் பெறவிரும்ப லாதார முன்னோர்
நவில்மொழியுங் கலைவாணி நடம்புரியு நாவும்
வேற்பிடித்து மலைதொறும்போய்த் திருவருட்பே ராடல்
விளக்குமுழு துணர்புலவன் விசைமலர்த்தாள் களுமே.(ச)

உவகைவாழ்த்து.

செஞ்சுவைச்சொல் லுணர்ந்துபல காவியங்கள்
செப்பியவர் தமதுகுல தீபம்போன்று
விஞ்சுபுகழ்ச் சித்திரல மடைந்தோராய
மெய்ப்புலவர் சரிதமென்றும் விளம்பாதன்னோர்
நெஞ்சுளிருந் தொளித்தெனது நினைவிற்காட்டி
நிறைவேற்றத் துணிந்ததெய்வ நிதமும் வாழி
யெஞ்சுதலில் லாதவிப்பே நெய்தப்பெற்ற
யான்வாழி தமிழ்வாழி யிந்நால்வாழி. (எ)

புலமைமரபு.

அரன்முனுட் டருமிபாண னன்புறுபெத்தான்கீரன்
றரமுல கறியப்பாடித் தமிழ்க்கவிப் புலவனனன்
கரங்கர் நெடியமைக்கட் கவுரிபாண் டியன்முற்செல்லு
மிரவல னிமித்தம்பாடி யியம்புமப் பரிசேய்ந்திட்டாள். (அ)

கணபதிப் பெயருள்ளான்மெய் கண்டதே சிகனற்செஞ்சொல்
புணர்கவி பாடியுண்மைப்புலவரி லொருவனனன்
மணமலர்க் கடம்பன்பாலே வனத்திலோர் புலவன்றன்னைக்
குணமுரட் பகழிக்கூத்த னதியர்க் குறித்துப்பாடி. (கூ)

முழுதுணர் புலவனென்னு முற்பெயர் நிலைக்கப்பெற்றான்
விழுமிய வாணிநாடா முதலென்றோர் வெண்பாச்சொற்றுப்
பழுதில்சீர்ப் பனுவலாட்டி யெனும் பெயர்ப் பனிதங்கொண்டாள்
குழுவுமற் றையவாறொரு மப்பெயர் கொண்டு வாழ்ந்தார். (கo)

ஆயினு மவர்சீர்சொல்லே னருந்தமிழ்ப் பொதியைக்குன்றின்
வாயிருந் துலகைக்காக்கும் வரமுனி முதலாச்சொல்வே
னீயிவணுவலுஞாய நிகழ்த்தெனி னிகழ்த்தொண்ணுது
பாயிருள் சிதைக்குஞானப் பரிதியோ ருணர்தற்பாற்றே. (கக)

உணர்தன்மூற் றுரையாலெய்து மெனநிச முணர்ந்தமேலோர்
கணதுவன் றிடுதல்பற்றிக் கழறினுங் கனவன்றிண்டோள்
புனர்தலைத் தருணிமுச்சிற் புழுதியாட் குரைக்கைபோலா
மனவருஞ் சகுணபேதத் ததிரக சியந்தானம்மா. (கஉ)

அன்றியும் புலவர்க்கெல்லா மாதர வாகியம்பொற்
குன்றினின் றிலங்கும் பான்மைக் கொழுந்தமிழ்க் குலத்தையீன்
னென்றிடும் பெயரன்னேனுக் கிசைந்ததா லெனவுமாகு [றோ
நன்றினி மலையவெற்பி னலமுத னவிலலுற்றும். (கங)

சிறப்புப்பாயிர முற்றிற்று.

ஆ கவி - கஉ.

குருவேதுணை.

புலவர்புராணம்.

பொதியாசலப் படலம்.

கங்கைதோன்றிய விமயமுங்காவிரி யென்னு
நங்கையைத்தரு சையமுநாணுறப் பொருகை
மங்கையுங்குளிர் தென்றலுந்தமிழ்மூம்வந் ததனைச்
சங்கையின்றிய புகழ்பொறுத்ததுதடம் பொதியை. (க)

உச்சிமீதுறின் றுயர்தினைத்துணைப்பெய சொடுபார்
நச்சிமேற்றிசை கீழ்த்திசைவழிக்கொடங் நலத்துப்
பச்சிருங்கடற் புனர்தருபொருகையாற் பல்லோர்
மெச்சிடும்படித் திகழ்ந்ததுவியன்றிருப் பொதியை. (உ)

சிற்றுயிர்ப்புறழ் தென்றல்சந்தனமணஞ் செறியப்
பெற்றுமாரனைக் கொடுவடதிசைவழி பெயர்ந்து
சுற்றுசெஞ்சடைச் சிவன்வரைகடந்தலை சுவற்றி
முற்றுதீக்கொல விடுப்பதுமூவலில் பொதியை. (ஊ)

வள்ளையங்குழைப் பார்ப்பதிமலர்த்திரு மடந்தை
வெள்ளைவாணியென் றுளவொருமூவரில் விளங்கிக்
கள்ளைவானகத் தமுதினைப்பாலினைக் கடிக்குங்
கொள்ளைமுத்தமிழ்ப் பிறப்பிடங்குலவுதென் பொதியை. (சு)

சேவலங்கொடி யாமெனவெழுந்தகார் திரைநீ
ராவறீர்தரப் பருகலின்மயிலுரு வாகிப்
பாவலார்தமி ழெனப்பொழிமழைமுதற் பலவா
மோவலின்றிய வளத்தினதுயர்புகழ்ப் பொதியை. (ரு)

ஆளவில்வானவர் தம்மிடையாணெடு பெண்ணு
வுளதொன்றுங்கு பன்மலைநதிபயப்பினு மொன்றே
கிளருமேற்கிலாண் கிழக்கினிற்பெண்ணெனக் கெழுமும்
வளமைதோய்ந்தது மாழைமால்வரையுறழ் பொதியை. (சூ)

துதிக்கையும்பிறைக் கோடுமெய்யருண்மதத் தொகையு
மதிக்கைதீர்தரு மானமுந்தலைமையு மனத்தி
லுதிக்கை யற்றவர்தம்புடைச்சேர்க்கையு முற்றுக்
கதிக்கையாங்களிற் றுனனற்கடிக்குமப் பொதியை. (எ)

ஆறுமாமுகம் பன்னிருகைத்தல் மயில்வேல்
கூறுசேவலங் கொடிபெருந்திருப்புகழ்க் குலத்தாள்
வீறுசித்தரை யாணலமாதிய மேவித்
தேறுசெந்தமிழ்ப் பருப்பதங்குகனெனத் திகழும். (அ)

பையராவணி பனித்தவார்சடைக்கொடி பைம்புல்
செய்யமான்கனன் மதிதவழ்றுநெடுஞ் சென்னி
தூய்யகோவணந் திகம்பரமுதலிய தோய்ந்து
பொய்யர்போற்றரும் பொதியையீச்சுரனெனப் பொலியும். (கூ)

நீங்குறுப்புனற் சேர்க்கையுநீடிய நிவப்புங்
காங்குபோர்த்தன கோலமும்பொருவருங் கருணை
தாங்குநீர்மையுந் தமிழ்க்குடன்படுதலுந் தழுவித்
தீங்குதீர்நெடு மாலெனத்திகழ்வதச் சிலம்பு. (கo)

சிங்கவாகனக் காளியும்பணிதரத் திகழும்
பங்கயத்துணைப் பதத்துமையுலகெலாம் பரிக்குந்
துங்கநீரெனத் தமிழ்த்திருநாட்டினைத் துலக்கு
மங்களாகரப் பெரும்பொருளாயது மலயம். (கக)

பரிதியென்றுள பரவெளிக்காவலன் பன்னுட்
பிரியமாதெனு மதியொடுஞ்சேய்முதற் பேசு
முரியகோட்டொகைக் கேளிர்கடம்மொடு முலவும்
பெரியமேடையிற் பிறங்குமத்தென்றலம் பிறங்கல். (கஉ)

உயிர்க்கெலாமொரு தாயகமாகிநின் றுணர்வார்
செயிர்க்கெலாமரு மருந்ததாய்ச்செப்பருந் தெய்வப்
பயிர்க்கெலாந்திரு வருட்புனலூட்டுபு பரமா
* யயிர்க்கெலாந்தலை யாமுணர்வளிக்குமவ் வசலம். (கங)

கயிலைபொன்வரை யிமயமந்தரமுதற் கவினுஞ்
சயிலகோடியிற் றங்கினரேனவருந் தாமே
வெயில்குலாமணித் திரண்மலிபொதியையை வியந்து
பயில்வர்சந்தனப் பசும்பொழிலாதிய பண்பால். (கச)

குன்றெலாமுடைக் குருபரன்பகர்பொருள் கொண்டோர்
மன்றெலாநடிப் பவன்குறுமுனியெனும் வகையா
னின்றெலாவரை யினுமுயர்கயிலையை நிகரா
மென்றெலார்களும் புகழ்தரத்தகுமலை யிதுவே. (கஞ)

வெள்ளிமால்வரைச் சிவனவன்மனையொடும் வேற்கைப்
பிள்ளைதன்னெடு மானிடவுருக்கொடு பேணிக்
கொள்ளவல்லசெந் தமிழ்வளநாட்டினுட் குலவு
மெள்ளநீர்மலைக் கிணைசொலிலெம்மலை யிசையும். (கசு)

---

* அயிர் - துட்பம்.

கானவேட்டுவர் தங்குலக்கன்னியைக் கலந்து
வானவன்றனைக் குறித்துமானதட்பறை முழக்கித்
தேனளாவிய புதத்தினைமாமிகச் செய்வ
தானநல்விழா வணியினுமுயர்ந்ததல் வசலம். (கச)

தேவர்கின்னரர் சித்தராதியர்பலர் செறிந்த
காவகத்தினிற் கலந்திசைத்துவப்புறு கவினு
மூவர்மாதரை நிகரரமகளிர்த மொய்ப்புஞ்
சேவல்கேகய முதற்பலபுள்ளொலிச் சிறப்பும். (கஅ)

மருவிவானிடை வளர்தருமலயமால் வரையி
லருவியாயிர மடற்களிறுயிர மார்க்கும்
பொருவிலோசையைப் புணரியிற்போய்ப்புனல் புசித்த
கருவிமாமுகில் கேட்டுளநாணுறீஇக் கலங்கும். (கசு)

அன்னவாகனத் தயன்றருபுதல்வரு ளண்ண
லுன்னலாலுயர் பொதியையின்றலைவறு பெருஞ்சீர்
பன்னகாதிபன் மிசைதுயின்மாயனும் படையா
னென்னவோதிடற் கிசைந்துளாருலகிலெண் ணிலரே. (உ0)

வே று.

மூருகவேளது முத்தமிழைத்தரு
மொருவன்றன்ன துயர்புகழ்ப்பாண்டிய
நிருபனுள்வதென் றேதிடநின்றுபே
ரருள்விளக்க மளிப்பதக்குன்றமே. (உக)

தேனும்பூவுஞ் செறிபொழிற்சீரதால்
வானுநாண வளர்மலையாசல
மானும்வல்லிய மும்பகைமாறுநீர்
தானுமல்கித் தனிப்புகழ்கொண்டதே. (உஉ)

இந்திரப்பத மெய்தலினீடுசால்
புந்தியின்றிப் புலம்புறு * புல்லன்மேல்
வெந்திலங்குடல் வேறுசெய்வித்தகன்
வந்திருந்த மலைக்கிணைவானமோ. (உங)

தெண்ணிலாமதிச் சென்னியன்சேவடிக்
கண்ணிலாவுங் கருத்தினராதியா
மண்ணிலாறு வகைச்சமயத்தரு
நண்ணிலார்வ நனிதருமந் † நகம். (உச)

செச்சைபூத்த செழுந்தகைக்காடுசூழ்
பச்சைமாணிக ராமப்பருப்பதங்
கொச்சைமைந்தர் குலமணியாதியா
மிச்சையில்லவ ரீட்டமும்வேட்பதே. (உடு)

---

* புல்லன் - கயடன். † நகம் - மலை.

கள்ளினூறு கமழ்தருசாரல்வாய்ப்
புள்ளினத்தள சப்புனம்புக்குவாழ்
வள்ளியன்ன மடக்கையர்வாய்மொழி
கொள்ளின்மஞ்ஞைக் குலமுவப்பெய்துமால். (உசு)

நல்லுபாசனை யின்றியநாவலர்
சொல்லுநாண விருண்மிளைசூழல்வாய்
வில்லுடன்புகும் வேடரும்வேறுயிர்க்
கொல்லுநீர்மை தவிர்ந்ததக்குன்றமே. (உள)

மற்றவெற்பின் வனசரர்போலவே
கொற்றவிற்கரங் கொண்டவர்கொய்கனி
பெற்றமூரும் பிரானிகர்பீடிடை
நற்றவர்க்குண வாமிகநாளுமே. (உஎ)

வானநாடரும் வையகமன்னரு
மேனல்சூழு மெழிற்பெருஞ்சாரல்வாய்க்
கானவேட்டுவக் கன்னியர்க்கெஞ்சுபு
* ஞானபண்டித னுமென நண்ணுவார். (உசூ)

வேடமங்கையர் விண்ணினேவிட்டிழிந்
தாடவந்த வணங்கினர்தங்குழற்
காடரிந்து கயிறெனச்செய்துதம்
பூடணங்கள் புகுத்தணிந்தார்ப்பரால். (ஊ0)

கந்தனம்பொற் கழற்றுணைநீங்குறுச்
சிந்தனைக்குறு மாமுனிசேர்தலா
லந்தமால்வரை யன்புசெய்வார்க்கெலாஞ்
சந்தமுத்தமி ழைத்தரத்தக்கதே. (ஊக)

வழக்கின்மிக்க மரபின்வழிக்கொடு
கிழக்குநாடிய கேழ்கிளர்பூமகட்
† குழைக்கையான்மலை யொக்குமிவ்வோங்கலே
மழைக்கணைய்தி வலத்தனமாயதே. (ஊஉ)

கண்டமுற்றுங் கறுத்தவனதியோர்
தொண்டர்சொல்லிய சொற்படிசெய்வது
மண்டர்நாணு மவர்க் ‡ கரசம்மலை
கொண்டதன்மையுங் கூறுதல்வேண்டுமோ. (ஊங)

மண்படைத்தவன் மைந்தரின்முன்னவன்
றண்படைத்த தமிழ்தருவெற்பின்மேய்
விண்படைத்தவர் வெஃகியவீறெலாங்
கண்படைத்தவர் காணல்கடனரோ. (ஊச)

---

* ஞானபண்டிதன்-மூருகன். † உழை-மான். ‡ அரசு-அகத்தியமுனிவர்.

வேறு.

இந்திரலோகமும்பிரம னெழினகருந்திருமால்வீற் றிருக்குமூருஞ்
சந்திரசேகரன்வசிக்குந் தடங்கிரியுந்தமிழ்ப்பொதியை தனக்கொப்பா
மந்திரசடாக்கரசண் முககுமரகுருபரனே வணங்கும்பெட்பாற் [மோ
றந்திரமுற்றுணர்ந்துபுவி சலதியிற்சாயாதளித்தோன் சார்தலாலே. ()

கேடில்கலிமகளினம்போற் கெழுமுவவாலருவியினங் கிளர்பொன்மின்னூர்
கூடிடலிற்சோதிவனங் குலவுவபல்லுமையவளிற் குழுவுமஞ்ஞை
யாடியவண்டிகழ்வகிலத் தறுசமயத்தொண்டர்களு மருள்பெற்றுய்வான்
பாடிட்டற்காந்தமிழ்விரித்தபவளவாய்முனிவன்வெற்பின்பாங்கர்மன்னே.

காமுகரிற்சசிபோலுங் கடவுளரிற்குகன்போலுங் கவினுர்தீஞ்சொற்
பாமுதிர்பல்கலைப்பெருக்கிற் றமிழ்போலுங்கொடைநலத்திற் பரமன்போலுங்
தீமுனையாயுதத்திரளில் வேல்போலும்பதாகைகளிற் சேவல்போலு
மாமுனிவர்குலத்திலகத் தியன்போலுமலியினத்தின் மலயமாதோ. ()

மாதவர்சேகரன்றினமும் வாழ்தலினுலமரார மகளிர்தம்மோ [லார்
டேதமின்மென்றளிர்த்துயில்கொள் பொழிற்செறிவாற்புதன்போலு மியற்பாவல்
போதவியங்கிடும்வளத்தாற் றனேத்தானேநிகர்த்திலகு பொதியைவெற்பின்
சீதளத்தென்றலின்மதவேளிவசானேலங்தொழிலுஞ்சிதைந்துபோமே.

சித்தர்களுநாவலருஞ் சென்றுகலியரங்கேற்றுஞ் சீர்த்திவாய்ந்து
முத்தமிழ்த்தாயெனநிலவி முனிக்கோமான்றனிடமா மொய்ம்பார்குன்றை
யித்தரையின்மலைமுழுது மெண்ணியெண்ணிகானும்வித மெழிலார்செல்வேள்
கைத்தலத்துவேல்கருதி மற்றையர்கைப்படைகளொல்கல்கடிக்குமன்னே.

பண்டாயநான்மறையும் பகர்ந்தான்செய்தவப்பேறுய்ப் பரவைமுற்று
முண்டானுக்குறைவிடமா மொருமலியின்பெரும்புகழை யுணர்ந்தமட்டில்
விண்டார்க்குங்கேட்டார்க்கும் விரும்பினர்க்கும்வணங்கினர்க்கு மேவிக்கண்ணுற்
கண்டார்க்குமொருசிறிதுங் கலிபுருடனுதியர்செய் கலக்கமின்றே. (८०)

கங்கணமென்றரவணியுங் கைப்பரமனுமையவட்செய் கலியாணப்போ
தங்கணவும்பலர்வினவத் தனேயனேயனெனுமுனிக்கோ னகன்றிடாத
வங்கணமாக்கொளுமலியின் மகிமைமுழுதாரறிவார் வானத்தேகுங்
கொங்கணனுதியருமொரு சிறிதுணர்வாரெனின்மனிதர் கூறற்பாற்றே.

வானரந்தாவலுமருவி சொரிதலுமாதியவியனே மலியின்கூட்டத்
தானவளமெனப்பலபல் புலவோர்முன்னுரைத்துள்ளா ரந்தவாறே
நானறையநாணுகின்றே னவின்றிலுந்திருடியதா நவில்வார்சில்லோர்
ஞானசித்திக்குறுமுனிவன் வசித்தலின்மேதகைத்தாமோர் நலமுமின்றே. (८८)

எம்மலிக்குமொருதலைமை பெற்றுளசண்முகப்பெருமா னிமையோரஞ்சச்
செம்மலர்ப்பீடத்தயனைச் சிறைசெயுநாளீசனெடு செப்பலாய
மெய்ம்மறையையுடன்வினவிப் பெறுமுனிவன்வளர்மலய வெற்பின்மாட்சி
பொய்ம்மழலைமொழிக்கினிஞர் புகன்றிடின்முற்றுறுத்தகைத்தோ புவனிமீதே. ()

கலியுணர்வார்பலர்தாமுந் தொன்றுதொட்டிங்காள்வரையுங் கடல்சூழ்பாரி
னிலெபெறுபொன்மலெவெள்ளி மலையாதியனகோடி நிலவக்கண்டும்
புலெவெறுத்துச்சாபமிட்ட புகழ்முனிவன்வசிப்பிடமாம் பொதியையென்னு
மலையழகுமிகப்பொலித லுணர்ந்தன்றேமலையமென வகுக்கின்றாரே.()

சந்தனமுஞ்செந்தமிழுந் தவமுமரமகளிர்குழற் சவரிக்காடு
மந்தகனெவென்றசித்த ராகமுந்தோய்தருசிறுகா லதனெயேவி
மைந்தருடற்பிணிமுழுது மாற்றிவடகடற்பருகும் வடவைத்தீய
யெந்தமலையவிப்பதுவோ வந்தமலெசொந்தமலை யெமக்குமாதோ. (சஞ)

அந்தமலைத்தலையிலுறு மவையிடைநாளொருகனவி லடைந்தவாறுஞ்
சிந்தனையிற்றேன்றியவா பேசியதுமாங்குவளர் சித்தரியாருஞ்
சொந்தநிலைதவறுராயிருந்ததுவுங் குறுமுனிமுற் றேற்றிறீறு
தந்ததுவுங் * குருபரதத்துவமெனு நற்காவியத்திற் சாற்றினேனே. ()

குருந்தமரநறுநிழலிற் சிவபெருமான்றனைத்தனது குருவாக்கண்டாங்
கிருந்தவனுதியர்தாமுங் காரிதவப்பயனுவந் தீன்றுள்பாலு
மருந்திலனேமுதலினரு மலைக்கடன்முற்றுண்டுவிடுத் தமரர்மூவா
மருந்துறழ்தீந்தமிழளித்த முனிவன்மலைத்தமிழ்கொடுசெய் வடிவத்தோரே. (சஎ)

பிற்பிறப்பிற்பாலையிடை முட்டையெனும்வேடுவனுற் பீதியெய்துங்
கற்பினனுங்கீரனான் கனல்விழியைப்புனற்சடையைக் கண்டுமஞ்சா
வற்பிறந்துதெண்டனிட்டு வண்டமிழ்நூலிலக்கணத்தின் வகைகேட்டுய்ந்த
பொற்பிலங்குபுகழ்முனிவாழ் பொதியைவளமெவராலும் புகலொண்ணுதே. (சஅ)

கயிலையினைவைகுந்தத் தினேக்கந்தலோகமுதற் கற்றோர்தொன்னூல்
பயில்பதங்கடமைக் கருதித்தவம்புரிவாரனேவோரும் பரவையுண்டு
வெயிலவன்போற்றிகழ்கும்ப மாமுனிவாழ்பொதியையிற்போம் வீறுவேட்டுக்
குயிலுறழ்வாலையைக்குனேப்போற்றிவழிபடுஞ்சிலருட்குறிப்பில்லாரே.

வண்ணநிலையுணராராய் மாதவத்தின்முயலாராய் மற்றுமோர்தாய்
கிண்ணமுலைப்பாலருந்தற் கொல்காராய்ச்சமணர்முதற் கிளர்பொல்லார்
விண்ணளவும்பகையிலராய்த் திரிதருபுன்கவிஞர்மிகவியந்துநாளு [பால்
ணண்ணல்குறிக்கலர்கும்பன் பொதியையின்முன்வளர்த்துளராய் நலம்வேட்போரே.

நெல்லையினிற்றுவக்குமிது நெடுநாளென்மனக்கருவி னின்றுதுன்று
மெல்லையில்பாமாலையினம் பிறந்ததற்பின் † மாதைநக ரிடத்திங்ளிற்
குல்லைமலர்க்குகன் கடவுடைதருமெய்யுணருமவர் கும்பஞ்சித்
தொல்லைமுனிவரனெலா லவன்சரிதமுதற்சிறிது சொல்கின்றேனே. ()

பொதியாசலப்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - அஈ.

---

* குருபரதத்துவம் - இந்நூலாசிரியர் தமது சரித்திரத்தைப்பற்றி யியற்றிய காவியம். † மாதை - திருவாமாத்தூர்.

முதலாவது

அகத்தியமாமுனிவர் சருக்கம்.

பூரணப்பரம் பொருளின்முக்குணமெனப் பொலியுங்
காரணத்தினர் மூவரிலொருவனுங் கமல
ஞரணத்தலை நிலையினின்றருண்முதற் புதல்வன்
சீரணப்படா வகத்தியமுனிப்பெயர்த் தெளிஞன். (க)

அவனுதித்தது மலைக்கடலுண்டதா தியவா
முவகையாடலா யிரங்களுங்கங்கைவா யோடத்
தெவளவோதவ முடித்துளாள் வயிற்றிடையிளமைச்
சிவனெனப்* பிறந் தவன்சொனூலினங்கள்செப் பிடுமே. (உ)

ஞானவான்கண்மெய்ப் பரத்தருட்சகளமா ஈவில்வ
ரீனமின்றிய யோகியர்தமதிறை யென்பர்
வானமேற்படர் சித்தர்தம்மினத்தனு வகுப்ப
ரானதாலனைத் தினும்வலானவனெனத் தகுமே. (ஊ)

அந்தமாதவர்க் காசையிந்நூன்முறைக் கடுப்பச்
செந்தமிழ்ப்பெரும் புலவர்தங்கோனெனச் செப்பு
மெந்தமாட்சியு மெண்ணில்கண்ணுடைமைநேர் கல்வி
வந்தசீரியர் மதிப்பினுள்ளடங்கிடு வனவே. (எ)

முந்துநாளர னடஞ்செய்வானுடுக்கையை முழக்க
நந்துபேரொலித் துணைகொடிவிருத்திர னண்ணுஞ்
‡ சிந்துபானன்வண் டமிழிலக்கணமிகச் செப்பித்
தந்துலோகமுற் றுய்வுறச்செய்தன னம்மா. (ஏ)

பின்னிருந்துபா ணினிமுனிவடமொழிப் பெருக்க
மன்னிடும்படி வியாகரணத்தொகை வகுத்தா
னென்னின்முன்னெதோ வெங்ஙனமாயினு மீசன்
றென்னிலத்தைநா டுபுடித்தலும்பிறழ்ந் திடுமோ. (ஐ)

பேரகத்தியஞ் சிற்றகத்தியமெனப் பிறங்குஞ்
சீரநூலிரண் டகத்தியமாமுனி செப்ப
லாரமூவகைச் சங்கமீண்டவிர்ந்தன வவைமுற்
றீராபேமா லிகைக்குகளுட்லிட் டனவே. (ஒ)

நாற்பத்தொன்பது நான்குநூறணைந்தகொண் ணூறு
மேற்பத்தோடிவை பெருக்கியதொகையராய் விளங்கிச்
சூற்பட்டார்த்தெழு முகிலுறழ்சொற்றெனிப் புலவோ
ரேற்பட்டார்கண்முச் சங்கமூடென்னுமிவ் வுலகே. (ஓ)

---

* பிறந்தவன் - வியாதர். ‡ சிந்துபானன் - அகத்தியர்.

தேவரிற்றவ முனிவரின்மனிதரிற் றெருண்ட
பாவலார்தமுச் சங்கமுன்படைத்தபல் கதையுஞ்
சேவலாளனைக் கும்பமாமுனிவனைச் சேவித்
தாவதீர்ந்தவ ரறியலாமற்றையர்க் கரிதே. (கூ)

விடைவலான்றிரு மதுரையிற்செயும்வினே யாட
லடையவார்தரு நூலிடையவிர்கடைச் சங்க
முடையபாவலர் கதைசிறிதுரைத்தது மொள்வேற்
படையுளாற்றெழுங் குறுமுனியெனல் பழமையதே.

மூன்றுசங்கமு மிருந்ததோர்பீடமாய் முழம்போற்
றோன்றுதூகிறப் பலகைதென்மதுரைவா வியினுள்
ளேன்றுமாதவஞ் செய்துதற்பெறவலாற் கேக்கற்
றுன்றுளார்சில ரறிதரக்கிடக்கைமெய் யாமே. (கஎ)

சொன்முடைந்திடுதொழிலு நன்கெய்துறுத்தூர்த்தக்
கன்மநாவலர்கழகவான் பலகைமீதிருக்கு
நன்மைவேட்டவர்நவிலினு நக்குமிக்கிகழ்ந்திட்
டன்மகோததியனைய பொய்ச்செருக்கிலாழ்பவரே. (கஅ)

எண்ணில்பல்பவத் தியற்றமிழ்க்குறுமுனிதன்னை
நண்ணிமாதவமுயன்றுள நாவலர்தமக்கே
விண்ணில்வாழ்கலைவாணிதன் மெய்யருள்விளங்கும்
புண்ணிலாமுதற்கதியினுட் புகுதலெய்திடுமே. (கஉ)

எட்டுவண்ணமும்பாடிடு மிருந்திறற்பெறினுங்
திட்டுசொல்லொடுவாழ்த்து சொற்பலிதமெய்திலரேற்
சொட்டுவந்துமனுங்சுந் துலங்கிடுநிமித்தங்
கட்டுசெஞ்சடைக்குறுமுனி கவித்திறம்பகர்வாம். (கச)

வே று.

ஈசனேத்துதித்தபண்பா லெனையருளவனென்றன்னேன்
பேசமாண்புற்றவாறும் பிறைநுதற்கவரிபொற்ரு
ணேசமிக்கிறைஞ்சுமாற்ரு னிராரிசைத்தர்போற்றத்
தேசவிர்மேனியெய்திச் சிகரிமீதமர்ந்தசீரும். (கடு)

மாயனேப்பழிச்சியன்ரோர் வழுதியை * வழுவையாக்கி
யேயவாங்கவனுய்தற்கா மின்சொலுமிசைத்தபீடிங்
தூயகோடொன்றுள்ளான்மெய்த் தொழும்பர்தந்தலைக்குட்டேற்கு
நேயமுற்றருளற்கான நிசத்துதிநிகழ்த்தும்பாங்கும். (கசு)

பரிதிமண்டலத்திற்றெய்வம் பலவும்வாழ்வுறுமென்ரேதும்
பெரியநான்மறையோர்முற்றும் பேணுசீர்பெற்றபின்னர்க்
கிரிதொறுநடிக்குஞ்செவ்வேள் கிளத்துசொற்கேட்டுப்போற்று
மரியசொற்புலமைதன்னு லடைந்தவாக்கமுமல்லாமல். (கள)

* வழுவை = பாண்டி.

மாயவெற்பதனூனாக வாக்கினற்பொடித்ததாதி
யாயபல்வியனுமுன்னே ளவிலாரறைந்துள்ளாரா
லேயவன்னவற்றையானு மியம்பிடன்மிகைசொன்னாலும்
பேயனரிகழாரங்ஙன் பேசலும்வழக்கமென்றே. (கஅ)

அன்றியும்பரிதிமுன்ன ரகலிலோர்திபமேற்றி
நின்றிதுகாண்மினென்ன நிலத்தினர்க்குரைத்தல்போலும்
பொன்றிரள்கொடுப்பானர்வம் பொலிவுறவிரிக்கவேண்டி
மென்றிதுதுவக்கலன்றன் றென்சுதந்தரமுமின்றே. (ககூ)

வன்சினத்துருவாசப்பேர் மாமுனிவரன்றன்சொல்லான்
முன்சிவன்றிருமால்வேதன் முதலினர்படும்பாடோர்ந்தாற்
றன்சிரம்வணுஞ்சூட்டுங் தாளுடைத்தலைவனுகித்
றென்சிகரியில்வாழ்கும்பன் றிறமைகன்கிலங்குமன்னே. (உ0)

இல்வலன்வாதாவிப்பே ரிரண்டவுணருமுன்வேதன்
சொல்வலிமையினற்செய்த தூர்த்தவெந்தொழிலுமெண்ணில்
பல்வரமுனிவர்சாவும் பரவையுண்டவன்வாய்ச்சொல்லா
லெல்வரிற்பனிமாய்ந்தாற்போன் றிரிந்தவாறெவர்சொல்லாரே. (உக)

காதிசேய்சிலையாற்சிந்துங் கணைவகைமுழுதுமுண்ட
தீதில்சீரியோகதண்டத் தெருண்முனிவனுக்குமுந்திப்
போதினன்றவத்தால்வந்த புனிதமாமுனிசொன்மாட்சி
யாதிசேடன்றனேர்சற் றறைந்திடலறையலாமே. (உஉ)

இரதமும்வாளுமீச னீந்திடப்பெற்றேனுகி
யரதனமுடிபத்தேந்து மரக்கர்கோனழியத்தாக்குங்
கரதலற்கொருவில்லீந்து கனத்தயூகமுமுன்சொன்ன
சரதமாமுனிவன்சொற்சீர் தமியனேன்சாற்றற்பாற்றே. (உங)

மந்திரவேள்விநூறு வாம்பரித்துணைகொண்டாற்றி
யிந்திரனுறப்பாம்பா கிடச்செய்தோரிளநாய்தன்னைத்
தந்திரமியாதுமின்றித் தவளவாரணத்துய்த்தான்றன்
சந்திரமோலியில்லாச் சங்கரனென்பார்தக்கோர். (உச)

காசிபன்சனகனுதிக் கடவுண்மாமுனிவர்பல்லோ
ராசிலருள்ளாரியாரு மாசெனும்பெயர்பெற்றில்லார்
வீசியதிரைநீருண்டு விடித்தவன்றனேவிண்ணோரும்
பேசினரவர்குழாத்திற் பெருந்தகையிவனென்றென்றே. (உ

சிவன்முத்தற்பகர்பல்கோடி தேவருமுனிவரியாரு
முவகையங்கணங்களியாவு முத்தரதிசையிற்சேர்ந்தா
லவ்வொலாங்கடலில்வீழா தகதெனிர்த்திசைபோயுற்ற
தவர்பிரான்மகிமைவேறு சாற்றவும்வேண்டுங்கொல்லோ. (உசு)

தென்னிலக்கயிலேபோலுஞ் சிகரியின்சிவன்போல்வான்றன்
பன்னிருமாணுக்கர்க்குட் பழுதிறைல்காப்பியப்பேர்
தன்னினன்மிக்கோனென்னச் சொலுமொழிசிலராற்கேட்டே
னன்னியனயிந்திரன்தேர்ந் தவனெனச்சிலர்சொன்னரே. (உஎ)

சிலர்பினுள்குரவன்றன்பாற் சினங்கொடுபிரிந்தோனென்றுர்
புலமையிற்சிறந்தோரன்னேன் புகலுநூல்புரையில்வண்ண
நலமிருபதுபாற்றென்கை நாடுபுகழிலக்கண்டே
மிலகுமுத்தமிழும்பாடார்க் கிலக்கணமிலேதோன்றுதே. (உஅ)

ஆயுதவெழுத்தொன்றென்று தவர்களுமையுமெளவுங்
தோயுமாத்திரையிரண்டாச் சொல்பவர்களும்போன்றுள்ள
பேயுணர்வினரெல்லோரும் பெரும்புகழ்க்கும்பநாத
னையுமுன்றமிழ்ச்சிரோர்ந்து நவின்றமைவினவிலாரே. (உக)

இன்றுமாமுனிவர்கோமா னெண்ணின்மெய்யடியார்சிந்தை
யொன்றுறுங்கனவிற்பல்வா றுலவுதல்சரதமாகு
மன்றுளான்றிருமாலாதி வானவர்தம்மைக்கண்டா
னன்றுறுநனவிற்றேன்றி நான்மறைப்பயனீவானே. (உ0)

கணபதிமுருகனுதிக் கடவுளர்தம்மைச்சேடன்
பணமிசைநிலவும்பாரோர் பற்பலர்கனவிற்காண்பார்
தனைவரும்பெருமைவாய்ந்த தமிழ்முனிவனேப்பார்க்கின்றேர்
பிணமெனவீழாதேகும் பெருங்கதியுறவேட்போரே. (உக)

கண்ணிகர்மெய்யுஞ்சென்னிக் கணமுறழினத்தின்கூறுங்
திண்ணியபுயங்களேபோற் றிகழ்தருமுயிரும்வேறென்
றெண்ணிடற்கரியதாகு *மெஃகமுமியலிற்காட்டும்
புண்ணியமுனிக்கோன்செவ்வேள் பொற்பதத்தடிமைதானே. (உஉ)

தேவரிற்சிறந்தோர்தாமுஞ் செழுந்தமிழ்க்கவிகள்பாடிப்
பாவலரானவாறு பாயிரத்தறைந்துள்ளேனு
லியாவர்நங்கும்பநாத னிசைவெறுத்திகழ்ந்திட்டாலுங்
தீவழிநினையந்துய்த்துச் சேரிநாயுருக்கொள்வாரே. (உங)

பத்தரிற்பலர்கும்பேசன் படிவமேகருதிப்போற்றிச்
சித்தராயவனேதானுத் திகழ்ந்தனரவர்தாஞ்செய்த
முத்தமிழ்ப்பாடல்கோடி மூதுலகுரைப்பதுண்டுண்
டித்தகவுணரார்வெவ்வே றெண்ணிமிக்கிகழ்வாரன்றே. (உச)

ஓரகத்தியனேர்கோயி லுள்ளுறையிலிங்கமொன்றிற்
சேரகத்தியர்முக்கோடி திகழ்தரக்கண்டானென்று
லாரகத்தியனேவென்றீண் டலமரவேண்டாமாதிப்
போரகத்தியனேக்கண்டார் பிறப்பிறப்பிலராவாரே. (உடு)

* எஃகம் - ஆயுதவெழுத்து.

தண்புனற்றெறிக்குங்கல்லாற் றருநிழற்குரவன்றானும்
விண்புரப்பவற்காமுங்கீர் வேலியுண்டவனுமொன்றெ
ணெண்புகழ்த்தொனியொன்றுண்டெண் ணெனர்ந்துளார்பலர்சொல்கின்றூர்
திண்புவிமகளும்வானிற் றிகழ்கலிமகளுஞ்சான்றே. (கூசு)

அருணெயூர்க்கிரியின்காதை யவிர்தருகாவியத்திற்
பொருவில்சீர்க்கும்பகாதன் பொன்னடித்துணைக்கன்பான
வொருசிறுகாயின்மாட்சி யுரைத்துளேனந்தவண்ண
மிருநிலத்தவன்செயாட லெண்ணில்பல்கோடியாமே. (கூஎ)

கன்னடவேதியற்கோர் காலியாற்கால்செய்திட்ட
தன்னசில்கதைசொன்னலு மகிலமுற்றவர்கொள்வாரே
முன்னறைந்துள்ளவாய முறைகளிற்பெரிதன்றேயென்
றென்னகருமாலவ்வா றிசைத்திடற்கிசைகிலேனே. (கூஅ)

நால்வகைக்கதிகடோறு நாடுபல்பதங்கடோறுஞ்
சால்வளப்பொதியையாதித் தடமலைக்குகைகடோறு
மேல்வழிச்செல்வார்சிந்தை விளைமலர்ப்பொகுட்டுத்தோறு
மால்வயிற்குருவேபோலு மகத்தியமுனியுள்ளானே. (கூசூ)

அம்முனிக்கடித்ததானத் தவிர்தரத்தக்கோனூரோ
வெம்முனிவனேச்சொன்னலு மிகன்றுளமிசையார்சில்லோர்
நம்முளத்திருக்குந்தெய்வ நடத்துமாறிசைக்கின்றூமோர்
மெய்ம்முதல்சமயவாத விகற்பமுற்றிகந்ததாமே. (சஅ)

வசிட்டனேச்சுகனேயாதி மாமுனிவரானேகர்
விசித்திரத்தினருற்றூலும் வியன்றமிழ்ப்புலமைமேவி
நசித்திடாக்கதியிற்சேர்ந்த ஞானசம்பந்தமூர்த்தி
புசித்தஞானத்தாற்பெற்ற புகழெடுத்துரைக்கின்றேனே. (சக)

அகத்தியமாமுனிவர் சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம், ௬உச.

இரண்டாவது

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் சருக்கம்.

வெள்ளிமலைச் சிவன்றலத்துண் மிக்கமது ராபுரியிற்
றெள்ளியசெந் தமிழ்வளர்க்குந் தென்னவர்தந் திருமாபி
லொள்ளியசூன் பாண்டியனென் றெருவன்வாழ் வுறுநாளிற்
கள்ளிவனம் போற்சமணக் களோமிகவுந் தழைத்ததுவே. (க)

ஆனைமலே முதற்றலந்தோ றம்மணமா முனிவரது
சேனைமலிந் ததனுற்பல் சிவதலமுஞ் சீரழிந்து
பூனிகர் வஞ்சகர்தம் பொய்வாதத் திணக்கஞ்சி
யேனையராஞ் சைவரெலா மிகல்குன்றித் தளர்ந்தாரே. (உ)

அங்ஙாளிற் செந்தமிழ்நாட் டமண்வாதை கெடுத்தருளுஞ்
செங்ஙாவின் வலிசாலோர் சிசுவெனக்கீங் தருளென்னக்
கைங்ஙாக மலிகாழிக் கவுணியவே தியனொருவன்
பைங்ஙாகப் பணியானைப் பணிந்துதவ முயன்றனே. (கூ)

அத்தவசு முற்றுதலு மவிர்கயிலே வாைமீது
சித்தர்களு மெச்சுநலங் திகழுமுரோ மசமுனிவ
னித்தனது சங்நதியி னின்றந்த வந்தணனே
யொத்தமண நிறுமாப்பங் கொழிவதுவேட் டிசங்தானே. (ச)

எல்லாமுங் தானேசெய் தியாதொன்றுஞ் செய்யாளும்
வல்லானம் முனிவரனே மலர்க்கணரு ளுறப்பார்த்தப்
பொல்லாங்கு தீர்தரவோர் புத்திரனு நீதானே
செல்லாங்கென் றுரைத்திடலுங் திடுக்கமுற்று நனிசோர்ந்து. (ஞ)

நாரதன்சொல் வழிதேறி நடனமயிற் பரியூரும்
வீரவடி வேற்குகன்றன் மிகப்பணிந்திவ் விதஞ்சொன்னன்
பாரகத்து மன்னவனும் பருவரற்பட் டாரவன்றன்
சீரருமைப் புதல்வர்தமைச் சேர்ந்துசுக முறல்போன்றே. (கூ)

வே று.

கலசமாமுனி யனையரே யுணர்புகழ்க் கந்த
னலமிகுந்தவம் முனிவனே நோக்கிமெய் யருளாற்
குலவுகாழியிற் றவஞ்செயு மந்தணன் குருந்தா
யுலகவாசனே விளங்குமு னொருசிறி துழல்வாய். (எ)

அதற்பி னெந்தைகண் ணருள்வழி * யம்மைபா லருந்தி
முதற்க ணுயமெய்ஞ் ஞானமுஞ் சித்தியு மூர்க்கர்
குதர்க்க வாதம்வெல் லுாகமும் புலமையுங் கொண்டென்
பதத்த னுகிமுத் தியிற்புகு வாயெனப் பகர்ந்தான். (அ)

அந்தவாறுதித் தாண்டொரு மூன்றுசென் றருமை
மைந்தன்றந்தைபின் போயவ்வூர்க் கோயிலுள் வாய்ந்த
பைந்தண்வாவியின் கரையினின் றழுந்தினம் பண்டு
கந்தனெறிய பால்குடித் தளவறக் களித்தான். (கூ)

கண்டுசேயின்வாய்க் குறியினுற் றந்தைபால் கமழ்சோ
றுண்டுளானெனக் கருதியார் கொடுத்ததோ தென்ன
மண்டுகோபமுற் றுறுக்கின னுடனவன் மலர்வாய்
விண்டுகைக்கொடு சுட்டி † யோர் பதிகம் விண்டனனே. (கூ)

* அம்மை - பார்வதி. † ஓர் பதிகம் - தோடுடையசெவி.

அன்றுதந்தையு மற்றைய வேதியராருங்
துன்றுசைவரு மெய்திய வுவகையுஞ் சொலற்பாற்
றென்றுநாணுரைக் கேனவன் முதைதோ ளேறிச்
சென்றுசில்சிவ தலங்களிற் றமிழ்த்துதி செய்தான். (கக)

அன்னதோளுமற் றதுபுண ராயிழை வயிறு
மென்னமாதவஞ் செய்தனவோவென வெண்ணிப்
பன்னவல்லவ ரியாவரோ வவனைநேர் பார்ப்பா
ரின்னலின்றிய சுகக்கட லிடத்தின்மூழ் குநரே. (கஉ)

திக்குமுற்றிலும் வதிதரு சைவசித் தாந்தர்
*சக்குநேர்சிவ பாதவி ருதையர்தந் தனையன்
கைக்குவேண்டுபொற் முளமொன் றுதவினன் கவின்செய்
மைக்குழம்புறழ் களத்த†னேர் தலத்தினின் வலிதே. (கங)

மூத்துப்பந்தருஞ் சிவிகையுஞ் சின்னமு முறையோ
டொத்துச்சூழ்தரு பரிசனங் களுமொவோர் தலத்தி
னத்துமுன்னமே கொடுத்தனன் ஞானிக ளுணருந்
தத்துவப்பொரு ளாங்கிழ் சகளசங் கரனே. (கச)

அவ்வணந்திரு ஞானசம் பந்தனுக் களித்த
செவ்வணச்சிவன் வேறுபல் செழுந்தமிழ்ப் புலவோ
‡ரெவ்வமெய்திமிக் கேத்தினும் வேண்ட லீகில்லா
னிவ்வரீதமென் னெனவவற் கேட்பவ ரிலையே. (கரு)

மன்னுமுத்தமிழ் விரகனென் றுர்சிலர் மகிமை
துன்னுபாலரு வாயனே யெனச்சிலர் சொன்னு
ரின்னுமெத்தனை யோபெயர் பற்பல ரிசைத்தார்
பன்னுமிப்புவி முழுதினும் புகழ்பரந் ததுவே. (கசு)

பிஞ்சுவான்மதிச் சடைச்சிவ னருள்பெறும் பிள்ளைக்
கஞ்சுதான்வய தாகிய தந்தரா ளமணர்
நஞ்சுபோன்றடல் வழுதிதன் மனைவியா நங்கை
மிஞ்சவன்புகழ் பலர்சொலுந் தொறுந்தினம் வினவி. (கள)

அவனைக்கொண்டிடர் களைந்துத னரசனு நியமைச்
சிவபதத்திறம்பெறச்செயல் சிந்தனை செய்தாள்
புவனிபோற்றிசை வளவன்மா தவந்தரு புதல்வி
தவளமாமுத னுச்சியின் மறைத்தணி தகையாள். (கஎ)

அப்படிக்குலச் சிறையெனு மமைச்சனு மணித
லெப்படித்தெரிந் தனள்கொலோ வெழில்வளை யலம்புங்
கைப்படோலியொன் றவன்வழிக் காழியர் பெருமான்
றப்படுத்த தண்டையம்பதத்திடச்செய்தாடு ணிந்தே. (கஅ)

---

* சக்கு - கண். † ஓர்தலம் - திருக்கோலக்கா. ‡ எவ்வம் - துன்பம்.

உ0

செந்தகைத்திரு மதுரையின் கோயிலிற் றிகழுஞ்
சுந்தரேசர்கண் ணருளினுற் சூதுசெய் திட்ட
வந்தமங்கையர்க் கரசியு மமைச்சனு மரசன்
வெந்தழற்சினத் தொறுப் புருதுயிந்தமை மெய்யே. (உ0)

ஓலைகாண்டலு மொருவர்பாற் கேட்டிணை ராதான்
சேலைவென்றகட் டிருவனுள் சிலமுங் தெளிவு
மாலையன்னமன் மருட்சியுங் குலச்சிறை மதியும்
பாலைநேர்வெணீற் றிகலவ ராக்கமும் பரப்பும். (உக)

தேறினனவன் செலும்படித் தரளவெண் சிவிகை
யேறினனுட னுவினுக்கரசனே முதலோ
ரூறிநாளெனத் தடுத்ததாற் பதிகமொன் றுரைத்தான்
மாறிலீசன்மெய் யருளினும் வலியதின் றென்றே (உஉ)

அங்குசாரண ராற்றுய ரடைந்துயு முனியு
மிங்குபோயவர்ச் செறல்குறித் தெழுமிளங் குருந்தைத்
தங்குமாறுனை சாற்றிய சரதநன் குணரார்
கங்குனேர்மனக் கசடுறு கடையவர் தாமே. (உங)

சூரனைக்கொலக் கந்தவேள் சென்றநா டுதிக்கை
வாரணத்தலைக் கணபதி துணைச்செலா வாறுஞ்
சாரணர்த்தெறத் தமிழ்விர கன்செனுள் சலதி
நீரதைக்கலாற் கடந்தவன் செலாமையு நேரே. (உச)

வளவனுடுமுற் றிகந்தடல் வழுதிநாட் டிடைப்புக்
களவில்கான்கடந் தணிகிளர் மதுரையை யடுத்துக்
களமதிற்கறை யுடையவர் கோயிலின் கண்ணீண்
டெளசில்கோபுரங் கண்டிடன் றெண்டனிட் டெவந்தா. (உடு)

மங்கையர்க்கர சியுங்குலச் சிறையுமே வணங்கி
யங்கைகூப்பிடு மாலவா யிதுவென வமலை
கொங்கையூறுபான் மணங்கமழ் தமிழ்க்கவி கொழித்தான்
சங்கைநீங்கிய புகழ்த்திரு ஞானசம் பந்தன். (உசு)

வெண்ணிலாவுறழ் நீறணி வார்புடை மிடைய
வண்ணிலாவிய மதுரையூர் புகுதலும் வருந்தி
யெண்ணில்சாரண ருணவிலராயின ரிதன்றிக்
கண்ணிலானிக ரரசனுங் கேட்டிளங் கவன்றான். (உள)

நீதியஞ்சல னவனைமன் னீரிவண் வரவொண்
ணுதுபோமினென் றமைந்திலன் றொன்றுதொட் டவ்வூர்
நாத்தன்முக்கண னுதலி னவனரு ணுட்ட
வாதென்செய்வர்கொ லென்னவுஞ் சிறிதுளின் மதித்தான். (உஅ)

சைவராக்கமுஞ் சமணர்தந் தியக்கமுந் தனிவேற்
கைவலார்புகழ் வழுதிதன் கவலையுங் கலிக்கும்
பெய்வளைக்கைமங் கையர்க்கரசியின்களிப் பெருக்கு
முய்வமேயெனுங் குலச்சிறை செருக்குமோங் கினவே. (உசு)

பரிதியாகிய பண்டிதன் பாதலத் தரசற்
கரியகாவலன் பான்மதுராபுரி யதனிற்
பெரியவாதமுண் டாந்தகை நிகழ்ந்தமை பேசப்
பிரியமோடுறல் கடுப்பமேற் பெருங்கடல் புகுந்தான். (ஈ0)

வே று.

அன்றிராவிடைச் சமணரிற்சிலர்தா மாணவக்கசட் டாலறம்பிழைத்து
மன்றிலாடின ரடியவர்வாழு மடத்திற்றீயைவைத் தாரதுபையச்
சென்றிவூரிறைக் காகுகவென்னச் செப்பினனுமை பாணுகர்சிறுசேய்
கன்றினின்றிமெங்கையர்க்கரசி கழுத்தின்மங்கலக் கவின்கெடாவணமே.

அக்கணங்கனற் சுரங்கொடுதவித்தா னருகுற்றூர்களு மாற்றலரா
னுர், மைக்கண்மாமயிற் பீலிகைக்கொண்டார் மாபிற்சீர்த்தவர் தமைவர
வழைத்தா, னக்களுளர்செய் தீங்கிதென்றேன்ற நலமெலாமிக நடத்தி
னெஞ்சயர்ந்தார், செக்கர்வானிறச் சூட்டுடைச்சேவற் றிரள்கூக்கூவெ
னச் சிறகடித்தனவே. (ஈஉ)

தன்னேத்தம்மிறை முதல்விழியென்றே சாற்றுமாண்புடைச் சைவர்
தந்தவமும், பொன்னேத்தாழ்த்தரும் பொருளெனக்கொடுதான் போய
பின்னெரு புசிப்புமுண்கலராய், மன்னேக்கைவசப் படுத்துசாரணர்தம்
வலியுங்காண்பதில் வாஞ்சையுற்றேன்போன், முன்னேத்தெய்வமென்
றுலகுணர்பானு மூர்த்திகிழ்க்கடன் முகட்டினிலுதித்தான். (ஈஈ)

விடியற்காண்டலும் வெந்துயர்சகியா வேந்தன்மந்திரி தனிவினைந்
தழைத்துப், பொடிகொள்சைவர்தந் தலைவனீண்டெய்தப் புரியென்ரு
னதி புளகமுற்றேகி, யடிகடம்மைமிக் குபசரித்தழைத்தாங் கமர்வித்
தானர சனுக்கிருபாலுங், கொடியசாரணக் கூட்டமுஞ்சைவக் குழுவு
நேர்ந்தவண் குலவியவன்றே. (ஈச)

கண்டமெய்கையர்க் கரசிபேருவகைக் கடலுநேர்பொருங் கவலைவா
ரிதியுங், கொண்டுநின்றனள் சிவனருள்பெறுமிக் குழந்தைசீர்பலர் கூறி
டக்கேட்டுப், பண்டுபோல்சுரந் தனளெனச்சிலசில் பாவலார்தமிழ்ப் பனு
வலும்பக்ர்வ, துண்டுதானெடுத் தணைத்துமோந்தார்வ முறுதற்காந்தவ
முளுற்றிலாண் முனமே. (ஈடு)

பானிலாமதிக் குலத்தரசனையும் பகைசெய்சாரணர் பலரையுமதி
யா, தர்னினேற்றிளங் கன்றெனக்குலவு மந்தணச்சிசு வவளேநேர்நோ
க்கி, மானினேர்விழி மாதராய்வருந்தேன் மதுரைநாயக னருளெனக்குள
தால், யானிவ்ணருக் கெளியனல்லேனென் றினியபாடல்பத் திசையொ
டோதியதே. (ஈசு)

வடிவதுட்பமு மிசைத்தொனிப்பெருக்கும் வாய்ந்தசொற்பொருள் வண்மையுமதித்துப், பிடியனடையர் தணிந்தனள்வேந்தன் பிணியற்றுய் வமென் பிரியமிக்கடைந்து, நெடியமாதவத் திருவரிலொருவர் நேரொர் பாதிவெங் நெருப்பினுஞ்சாலக், கொடியதாஞ்சுரந் தவிர்க்குதிரென்னக் கும்பிட்டான்பொதுக் குறிப்பிலங்கிடவே. (கூஎ)

அவன்சொற்கேட்டலு மம்பிகைமுலைப்பா லருந்தும்வாய்மக வாந் தமிழ்விரகன், சிவன்றன்சேவடி கருதிவெண்ணீறு செங்கையிற்கொ டோர் பதிகமுஞ்செப்பி, யுவந்தன்னேனரு குற்றிருருபாதி யுட்லிற்பூ சின னுடனதுகுளிர்ந்து, பவந்தர்பாதியின் சூதானந்தப் பங்குஞ்சேர் ந்ததாப் பகரமிஞ்சியதே. (கூஅ)

அந்தவாறர சுரைப்பவோர்ந்ததனு லமணரிற்சிறந் தார்சிலர்தங்கைப் பைந்தண்* பீலியினன்மிகத்தடவிப்படித்தமந்திரம்பலவுருச்செபித்தார் வெந்தவாதனே குறையவுங்காணு வேந்தனத்தமிழ் விரகனேநாடி யிந்தப்பாதியு நும்மதேயென்ரு னிதுவினுவலு மிகன்றவர்புகல்வார். ()

கையிலுள்ளநீ றன்றிமற்றென்ரூற் கனற்சுரங்கெடக் காட்டினன் றென்ரூர், மையிலங்கிய கண்டர்தங்கோயின் மடைப்பளிக்கிடை வாய்ந் தநீறழைத்துப், பொய்யில்சீரருட் புகலியர்பெருமான் பூசினுன்சுரம் போயதுமன்றி, மெய்யிலொன்றிய கூனுநீங்கியதான் மிகவுநீண்டடல் விண்டுவொத்தானே. (சஎ)

இன்னவற்புதங் கண்டுமோர்மதலைக் கிப்பெருந்திற மேய்ந்தமை யோர்ந்து, முன்னமாயிரம் விதங்கள்செய்துளதம் மூலமந்திர மோசம தாயு, மன்னன்முன்னவ மானமெய்தியுமிம் மட்டினம்முயிர் வாழ்துமெ ன்றகலா, தன்னசாரணர் கழுமரச்சவத மறைந்துதீயைநீ ரதைக்குறித் தாரே. (சக)

இருவரேட்டையு நெருப்பினிலிடும்போ திளையனேடுமட் டெரிந் திடாதெழுந்த, தருகனன்பரே டெரிந்துபாழாய தணிகொள்வையைநீ ரதிலிடும்போதுந், திருநிலாவிய சைவனேடெதிர்த்துச் சென்றதேனைய திருங்கடல்சேர்ந்த, தருவமாரனே நிகர்நெடுமாற னுருத்துச்சாரண ருரி மைமுற்றொழிந்தான். (சஉ)

அவரெண்ணுயிரம் பேர்களுங்கழுவா லாவிவிட்டன ராமதைவிரி த்து, விவரமாச்சொல்வார் சிலரதுவீனே வென்றிதோய்தமிழ் விரகனு ர்தமது, பவளவாய்கொடன் னவர்முனீரெம்மைப் பழித்திடாதுநும் பத த்தில்வாழ்மினெனு, வுவகையோடனைத் ததுமதற்கவர்தா மொப்பிடா மையு முலகமோதிடுமே. (சஊ)

---

* பீலி - மயிற்றோகை.

மடத்திற்றீயிடல் கழுமரச்சவதம் வலிததர்ம்வகுத் திடலெனுமிர
ண்டுங், திடத்தசாரணர்க் காவதன்றதனுற் றீங்கவ்வாறடைந் தாரென்
பர்சிலர்முன், னடத்திற்சீர்த்தநாள் கருதியோர்பதிக நன்குகாழியூர் நா
தனேதுவனேல், * வடத்திலன்றுயு நால்வர்போன்றவரும் வாழ்வரென்
னும் வல்வழக்கருமுளரே. (சச)

ஒறுத்தலாற்சிறி தின்பமேயெய்து மூறுசெய்தவ ருளமிகநாணப்,
பொறுத்தலேபெரும் புகழெனவுணர்ந்தும் புகலியூர்வரு புண்ணியன்ற
ன்னை; வெறுத்தசாரண ருயும்படிபாடல் விளம்பச்செய்திலான் வெரு
த்தபாற்கடலின், கறுத்தநஞ்சமுண் டிலகெலாமுய்யக் காத்துளான்செ
யல் காணரிதம்மா. (சடு)

யாவும்வல்லவ னெம்மதத்தினர்க்கு மிறைவனெங்கணு மென்றும்
வாழொருமெய்த், தேவுளானவன் றன்மையாரறிவார் சிலாவாழ்வித்
துச் சிலர்தமைக்கெடுப்பான், காவுளார்தமைத் தகுவராற்கலக்கிக் கரிய
தானவர்க் கடவுளர்தம்மா, லோவுவானவன் பொதுவனேயன்றி யொரு
வர்பங்கினி லுற்றவனன்றே. (சசு)

அந்தமன்னவ னுயும்படிப்பதினை ருயிரந்தவத் தாரொடுமதுரை,
வந்தகாழிமன் வென்றதாற்சமண வாதைமுற்றிலுமாய்ந்ததந் நாட்டுச்,
சொந்தமாகிய சைவமேநிறைந்து சுந்தரேசரா லயமுதற்சொல்லு, மெங்
தவாலயங் களுமுளுட்சிறப்பிற் கெண்மடங்குமே லெனக்குலாவினவே.

ஆதலான்மதக் குறும்பினர்தம்மை யடக்கல்வேட்டுளீ ரருந்தவஞ்
செய்து, நாதன்மெய்யருள் பெற்றிடநடமி னன்றுதீதென நவின்றுநாய்ச்
சமர்போல், வாதமிட்டுழன் றரசனுணையினுன் மாழ்குறேன்மின்மெய்
வத்துவுண்டெனற்கு, மேதமோருயிர்க் கியற்றுணுதெனற்கு மிசைப
வாமத மியாவுநல்லனவே. (சஎ)

அலரியேமுதற் றிகழ்பலபொருளா லகிலஞ்செய்தளித் தழிக்குமோ
ரம்மல், குலவுதன்னருள் பெற்றவரளவிற் கூடிக்கொள்பவ னென்பது
குறித்தே, வலவர்வாததுர்ப் பலமலாற்சிறிது மதத்தின்றுர்ப்பல மின்றெ
னவகுத்தார், புலமையென்றசொற் பொருளுமோர்கில்லாப் புல்லர்சொ
ல்வழிப் போமவர்பலரே. (சகூ)

இந்தநீதிகள் சிலசொலுமாற்ரு லென்னேஞானசம் பந்தமூர்த்தியி
ன்பா, லந்தரங்கநண் பில்லவனென்றே யறைகுவாரிளஞ் சைவர்களயில்
வேற், கந்தனேயெனச் சொற்றுளன்முன்னுட் கழறிங்கவு மாரரும்பல
ரே, †சொந்தநூல்பகர்சேக்கிழார் முதலாந் தொண்டர்தாமுமத் துணி
வனடந்திலரே. (கூ0)

---

* வடம் - கல்லாலமரம். † சொந்தநூல் - திருத்தொண்டர்புராணம்.

குவியுங்கையிலர்ச் செறும்பரசமய கோளரிப்பெயர் குலவுறும்படியே, சிவிகைமீதொருக் காலவர்தமையென் சிந்தையின்கன வூடுகண்டுள்ளே, னவிவுறுதருட் பேறுறினன்று மாகம்வீழ்வுறி னகிலமீதெவர்யாண், டெவிதஞ்சொல்லினு நிமித்தமின்றினியாங் கியன்றகாதைகளியம்புவன் றெருக்குத்தே. (நுக)

வேறு.

சிறிதுகா ளவ்வூர்வைகித் தெக்கணதிசைப்பாற் சென்று
மறிமழு வணிந்தார்கோவில் வயின்றெறும் பதிகம்பாடிச்
செறிதரு மூங்கிற்கீழ்வாழ் சிவன்றுதிசெய்த பின்னர்ப்
பறிதலைச் சமணர்க்கோறல் பாவமென் றிரங்கினனுல். (நுஉ)

தாருகற் செகுத்தபாவந் தனைத்தொடா நிமித்தஞ்சோணுட்
டோருருச் சமைத்துச்செவ்வே ளுருத்றிய பூசையேபோற்
பாரும்விண் ணுலகும்போற்றப் பருஞ்சிவ லிங்கந்தாபித்
தாருநல் லிதழிவில்வ மாதியுமருச் சித்தானே. (நுஊ)

தண்டமிழ் விரகன்பூசை தனிலரன் மகிழ்ந்தப்போதே
வெண்டகை யிடபமீது விளங்கினின் வினையெல்லாமு
மெண்டரு மெனதென்றுனவ் விலிங்கமூர்த்தியை யெல்லோரு
தொண்டர்க ணயினுரென்னச் சொல்லுபு தொழுகின்றுரே. (நுசு)

அன்னவன் வடக்குநோக்கி யருட்டிரு வாலவாயின்
மன்னவன் முனுமுண்கண் மங்கையர்க் கரசியாரு
நன்னலக் குலச்சிறைப்பேர் நம்பியும்பிறரும் போற்றப்
புன்னகை யொன்றுன்மூன்று புரமெரித்தாரைப் போற்றி. (நுஎ)

தன்னுரித்தாஞ் சோணுடு தனைவிழைந் தேகுமாற்றின்
மன்னுமாணவத் தோர்புத்தன் வலியவர் பலரோடெய்தி
முன்னுவல் சின்னத்தோர்கண் மூகைபோன் றிடவதட்டி
யென்னுடன் வாதுவென்றிட் டேகுதி யவணென்றுனே. (நுசு)

அக்கணஞ் சிவிகைதொட்டே யருகினில் வருகின்றேனு
முக்கணற் றுதித்தபாடன் முழுமையு மெழுதுவோனு
மிக்கதா யுடன்வந்தோனும் வேதவேத்தி யனுமான
தக்கவ *னசனியன்னுன் றலைமிசை விழச்செய்தானே. (நுஏ)

இரண்டொரு நாளிலங்காட் டெய்தியே யளவிலாத
வரன்பதி துதித்துச்சூழ்ந்தா னக்கதை நிற்கபாண்டி
நிரந்தரம் புகலுஞ்சீர்த்தி நின்றசீர் நெடுமாறன்றுன்
வரம்பெறு தனதுநாட்டு வளமெலாம்பார்த்தான் மாதோ. (நுஅ)

நெல்லையிற் சென்றுதன்னை நிருமல னடிமையாக்கு
நல்லையன் வணங்குந்தொண்டர் நாதனைக் கண்டபோதே
யெல்லையில் பணியிவ்வூரில் யான்செய்வே னென்னச்சொல்லிய
தொல்லைமூங் கிலின்கீழ்றூர் தொண்டினிற் றுவக்கிக்கொண்டான். ()

* அசனி - இடி.

கோதில்கோ புரமுளாயிற் குலந்திகழ் மதிலுமாட
வீதிமண்டப முமூஞ்சல் வியன்கலி யாணமாட
லாதிசெய் வதற்காந்தான மனந்தமு மடைவேசெய்து
மீதினி னிவந்துதோன்றே ரிலிங்கமு முளக்கவேண்டி. (சுo)

வருந்துற வளர்ந்தலிங்க மாலிங்க மாகுமென்னத்
திருந்திய பெயருஞ்சாற்றித் திருவிழா பலவுநாட்டி
மருந்தெனத் துவக்குமவ்வூர்ப் பதிகமே வழுத்தியார்த்துக்
கருந்தன முதலவேட்போர் களிப்பவே வழங்கியப்பால். (சுக)

தொண்டர்க ணயினருக்குஞ் சூழ்பணி பலவாச்செய்து
விண்டலர் புகழுமவ்வூர் மேற்கிலோர் வீதிதன்னிற்
றண்டமிழ்ப் புலவரேத்துஞ் சம்பந்தப் பெருமானுக்குங்
கண்டவர் வியக்குங்கோயில் கவின்பெற வமைத்திட்டானே. (சுஉ)

இந்தவான் கதையின்சார மிலங்கிழைப் பரவைகோளுஞ்
சுந்தரமூர்த்தி தொண்டத் தொகையிடைச் சிறிதுதோன்றும்
பிந்தவந்தவர் விரித்துப் பேசாமைக் கியானென்செய்வே
னந்தவூரினிற் சென்றேர்கண் டறிந்துகொண் டாடலாமே. (சுங)

பகருமிவ் வேந்தைப்பிள்ளைப் பாண்டிய னென்றுஞ்சில்லோ
ரகல்கடற் புவியிற்சொல்வா ரகங்கரப் புலவர்தம்மைக்
குகனயன் றனைச்செய்தாங்கு குட்டலுண் டென்னக்கம்ப
னிகழுமோர் விருத்தப்பாவி னிகழ்த்தினு னிசங்கண்டீரே. (சுச)

அவனுமன்னவன் றேள்சேரு மவளுநல் லமைச்சன்றானு
முவகையங் கடலின்மூழ்கி யுலகமுற் றுண்டவாறுந்
தவபல மெனவேதோன்றுந் தனையனுக் காசைசொல்கிச்
சிவபத மடைந்தவாறுஞ் செப்புநூல் செகத்திலுண்டே. (சு

அங்குபாடிய சம்பந்த னருமறைக் கதவஞ்சாத்தக்
கொங்குகா டதனில்வந்த கொடுஞ்சுரம் பலர்தீர்ந்துய்ய
நொங்கு மாண்பனையிற்காய்ப்ப நூலிடை யொருத்திவெந்த
சங்குநே ரென்பிற்றேன்றத் தனக்கெனக் கிடைத்தகாசு. (சுசு)

வட்டமே தொழியவன்னி மரங்கிணற் றெடுசான்றாக
நட்டயாழ்ப் பாணன்சிந்தை நடுத்திக ழுகந்தைதீர
விட்டமாம் படிவிளைத மின்னமு மனந்தமாக
வட்டபாலொடு தேன்போலு மருந்தமிழ்க் கவியாற்செய்தான். (சுஎ)

மாதையி லிவனுக்காக வளிச்செவிப் பெருமான்செய்த
காதையப் புராணந்தன்னிற் கழறிடுங் கலங்கடோறே
தேதையோ சொல்கின்றார்க ளியாவையு முளைக்கவென்றா
லோதைபாற் பொருததாம்பே ருரகமு மொல்குமன்றே. (சுஅ)

சென்றுபாடின வல்லாமற் செழித்தகே தாரமாதி
நன்றுடைத் தலங்கடம்மை நாடியும் பாடித்தீர்த்தான்
மன்றுளாடிய பொற்றுள்வாழ் மனத்தனுந் தாதைவேள்விக்
கென்றுகேட் டதற்குஞ்செம்பொ னீசனுற்பெற்றிட் டுந்தான். (சுகூ)

எவ்வகைப் பயனுநல்கு மியற்சிசு வெய்தினுற்கு
மவ்வசடா யகன்மத் தாசைவந் துதித்ததாலுற்
பௌவநீ ரனேயமுன்னேப் பழவினேயுடைய பார்ப்பார்
வெவ்வழல் வேள்விவேண்டல் வியப்பென விளம்பொணுதே. (ஏ0)

அந்தநாள் வயதுபன்னு றமைந்ததா லமணர்கூற்று
மைந்தனுக் கென்றேர்பெண்ணே வரன்முறை மணஞ்செய்வித்தார்
வந்தவ ரிருந்தார்சூழ மணவரை நீத்தப்போதே
பொந்தணி மாச்சூழாச்சா புரப்பெருங் கோயில்வாயில் (ஏக)

மேவினு னங்கோர்சோதி வெயிலவர் திரள்போற்றேன்றிற்
றுவிமற் றெருதாய்பண்டி யதிற்புகா தயில்வதாகு
நீவிரெல் லோருமுட்போய் நிசபத மடைமினென்றுன்
றுவில்சீர்ப் பரமனேபோற் றம்பதி யெனநின்றுனே. (ஏஉ)

ஆங்குறு பலருமுட்போ யதிற்கலந் ததுவேயானர்
வீங்குபூண் முலேயாண்மாத விடாயின ளொருத்திவேட்கை
தாங்குறு திரங்கியன்னேன் சரண்பணிந்ததனேச் சொன்னு
ளேங்குறேல் பெருநெருப்பிற் சேமின் றேகென்றேனே. (ஏங)

அன்னவள் புகுதத்தானு மனந்தமா தவமுன்செய்து
தன்னதங் கரத்தாற்பற்றுந் தகைபெறுமவளோ டிற்றுன்
பின்னரச் சோதியெங்கோ பெயர்ந்தது பிறையும்பாம்பு
மின்னவிர் சடையிற்பூண்டோன் வியனருட் கயலதின்றே. (ஏச)

உலகினேப் பொருளாக்கொண்டோ சொள்ளிழை யவடன்னேடு
சிலதின மின்பமார்ந்து சென்றில னென்னச்சொன்னர்
நலனுயர் முத்திவேட்டோர் நாமுமக் குழுவிற்கூடி
நிலவில மென்னநாளு நினேத்துநெட் டியிர்த்தாரன்றே. (ஏடு)

தமிழ்மதுரையின் முன்மாய்ந்த சமண்மதக் குறும்பர்தங்க
ளிமிழ்தொனிக் கடனேர்கூட்டத் திரட்டிமா தவர்மட்டென்று.
லமிழ்துறழ் சொல்லாரீறு மவர்குழாத் தளவியாதோ
சிமிழ்முலே யிடப்பாற்காட்டுஞ் சிவன்றிருவடி சேர்ந்தோரே. (ஏசு)

அன்னவர்க் கொன்றபாவ மதையெடித் தறைவார்தம்மு
ளின்னவர்க் கதியிற்சேர்த்த விசையெடித் திசைப்பார்சில்லோர்
சொன்னவவ் விரண்டுமெல்லேத் தொண்டர் கணயினர்சொல்லாற்
பன்னரும் புகழ்ச்சிகாழிப் பனவனர் மதலேக்கின்றே. (எஎ)

கந்தமாண் மலர்வெண்பீடங் கவின்றரு கலைமினைக்கா
லிந்தமட்டினிற் சம்பந்த னிசையினை முடித்திட்டிப்பாற்
செந்தழல் புரையும் பொல்லாத் தீயமண்குழிநீத்தன்பா
லுய்ந்தாவரசர் சீர்த்தி யுரைத்திடத் துணிந்தேன்மாதோ. (எஅ)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உ0உ.

மூன்றுவது

திருநாவுக்கரசுநாயனார் சருக்கம்.

திருநாவுக் கரசர்புகழ் சேக்கிழார் மிகச்சொன்னார்
பெருமாண்பக் கதையினிடைப் பேசியதிற்சிறிதிங்காள்
கருவூல மெனப்புலவர்காணிதினுங் கலைவாணி
தருமாறு சொல்கின்றேன் றவப்பயன்பெற் றுயவென்றே. (க)

கயிலைமலை யினைப்பெயர்த்த கடுங்கோபக் காரரக்க
னுயிருயுங்கல் வரமெய்த வுபாயமுரைத் தமைநாடி
மயிலனையா ளிடப்பாகன் வாகீச முனிவனுக்கன்
றயிலவுரைத் தளசாப வதுக்கிரக முதிர்ந்தாளில். (உ)

நோய்மூப்புத் தவிர்ந்தாரு நுவல்புகழ்சா னடுநாட்டு
வாய்மூரில் வேளாளன் மனையிலொரு மகவாகித்
தாய்மூர லிளநகைமென் * ரோகையின்பின் வளர்ந்துபசுங்
காய்மூத்துப் பழுத்தாங்குகருணைமலி வடைந்தானே. (ங)

வேள்விகொடி தென்றிகழு மிக்கசைவ நெறியோர்சொற்
கேள்வியின்றி யதுவுமொரு கிரியையெனு மிளஞ்சைவத்
தேள்வினைஞர் பகைமீறிச் சினன்சமயத் திடைப்புக்கு
வாள்விதிர்த்தாங் கவிர்கண்ணூர் மயலறுமா முனியாகி. (ச)

தருமசே னப்பெயருந்தலைக்கொண்டச் சமயத்தோர்
குருவெனப்போற் றிசைத்துமகிழ் கொள்கையொடு குலவுற்றுத்
திருவெண்ணீ றணிவார்முற் றிகழ்தரினூர் மூன்றுதின
மொருபுசிப்பு மருந்தாம லுழலன்முத லவுந்தோய்ந்தான். (ஞ)

செப்பிவன்முற் பிறந்தாளாந் திலகவதி தனைமணத்தற்
கொப்பியவ னிறந்தமையா லுலகவாழ் வினைவெறுத்திட்
டிப்பிறப்பின் முத்தியடைந் திடுவேனென் றியாதொன்றுந்
தப்பிலளாய்ச் சிவன்வாழுந் தலந்தோறும் போய்வணங்கி. (ரு)

அதிகைவீரர்ப் பெருமாற்கே யடிமையெனுந் துணிவெய்தி
மதிவளர்பொற் சடையாதி வனப்பெல்லா மிகநாடி
விதிமுறையைந் தெழுத்தோதி மெய்த்தொண்டுஞ் செயுநாளிற்
சதிசெயம னரிற்கூடித் தம்பிகெடல் வினவுற்றுள். (எ)

---

* தோகை - திலகவதியார்.

இவ்விருமக் களுமிவ்வா றேகியதா லீன்ரோரா
மவ்விருவர் களுமேங்கி யவிர்கயிலைப் பதிசேர்ந்தார்
* கவ்விங்கர் விழித்தமக்கை நாடோறும் தம்பியைத்தன்
செவ்வியதொன் னெறிசேர்ப்பான் சிவனருளைச் சிந்தித்தாள். (அ)

இவள்செய்தவ முதிர்தோறு மீனதம் புக்குழலு
மவன்வயிற்றிற் சூலையெனு மருநோய்முற் றியதந்தோ
கவலைமலிந் துயிர்வெறுக்கு மதிந்துயரக் கடலாழ்ந்து
குவடனைய நெஞ்சினிலை குலைந்தழகுங் குன்றினனே. (சு)

மானம்விட்டான் மிடிதீரு மருந்தின்வலிக் கடங்காத
வீனவன்னோய் கொடிதேயென் றியம்புமொழி நிசமாயிற்
ரூனதினத் ததிகையிற்றன் னன்னையிற்சீர்த் துறுந்தமக்கை
தானமக்கோர் தஞ்சமெனத் தன்னகத்திற் றுணிந்தானே. (கo)

அத்தினத்தன் னவன்கனவி லதிகைநகர்ச் சிவபெருமான்
சத்தியுட னவற்குரிய தந்தையுந்தா யருமாகிப்
பத்திமலி திலகவதி பகர்நெறிச்செல் குவையாகிற்
சித்திமுத்தி யடைவையிது திண்ணமெனச் செப்பினனே. (கக)

அக்கணமே கைப்பீலி யணிபாய லுடனீத்து
மைக்கடுக்கு மிருட்போதே வழிக்கூடி நடந்தேகித்
திக்கறியப் புரமூன்றுஞ் செற்றபிரான் றிருவதிகை
புக்கருமைத் தமக்கையிரு பொன்னடிக்கீழ்ப் பணிந்தானே. (கஉ)

வே று.

பணிந்ததம்பி யினைக்கையால் வாரித் தூக்கிப் பாசமிகை யாற்றழு விப் பழுதில் வெண்ணீ, றணிந்துனையீண் டழைத்ததவப் பயனெங்ஙனு மழியாது வாழ்கவென்மென் றறைந்துள் ளன்பாற், றுணிந்தானைத் துதி செயெனச் சொன்னாள் போற்றிச் சூலையியா தியுமனத்தின் றுயருந் தீர்ந்தான், றணிந்தணிசெஞ் சடைக்காட்டெம் பெருமான் சிந்தை தனிற் கிடக்கு நினைவறியத் தக்கதன்றே. (கங)

அன்றுதொட்டுப் பதிகங்கள் பலவாப் பாடி யானந்த பரவசனு யருட்பே ராக்கந், துன்றுதலுற் றுஞ்சிறிது மாண்மை யின்றித் தோள்வருந்த வுழவாரப் பணியுஞ் செய்தான், மன்றுணடிக் கும்பெருமான் வந்து வந்து மனவெளியில் விளையாடி மகிமையாய, நன்றுலக மறிந்துரைக்கு நிமித்தம் பொல்லா நலிவனைய விதஞ்சிறிது நடத்துவானே. (கச)

அங்கமணர் தங்குழுவிற் றருமசேன னகன்றதுஞ்சென் றதுமுடன் முற் † றடலேறுஞ், சங்கரற்கா ளானதும்பற் பலராற் கேட்டுத் தமதுரசற் குனைத்தாரத் தார்வேந்தோலை, செங்கரத்தால் வனைந்தொருதூ

* கவ்வி - மான். † அடலே - சாம்பல்.

தனைக்கொண் டெய்த்தான் றிலகவதி யார்க்கிளையான் றெரிந்துள்ளஞ்சிப், பொங்கரவம் பூண்டபிரா னருளாற் றேறிப் போயினனுங் கவன்கனற் கட் புலிபோற்சீறி. (கடு)

கல்வியறி வுடையாய்நீ யிந்தவாறு கலங்கியதே னீயிதனுற் கண்ட தியாது, சொல்வினைந்தென் றுனதற்கம் முனிவன் பொல்லாச் சூலநோ யத் துயர்முதலிற் றெலைத்தே னுண்மை, யல்விரவுங் கண்டத்தான் றிறமும் பைந்த ணசோகடிப்புத் தேணிலையு மறிந்தே னீயு, நல்விதி யாற் றேறவல்லா யாகிற் றேர்தி நான்பொய்சொன்னு லென்மனமே நகு மென்றனே. (கசு)

என்றமொழி வினவியுமச் சமண மன்ன னியாதொன்றுங் கொலல் கூடா தெனலெண் ணுனுய்க், குன்றதன்மேல் வைத்துருட்டல் விடப் பர்ம்புற்ற குடத்தினுட்கை விடச்செய்தல் கோபவேழ, மொன்றடரச் செலுத்திடல்கற் சுண்ணந் தன்னே டிறநீற்றன் முதலியபல் லொறுப்புச் செய்திட், டின்றமிழ்ப்பாட் டரன்மீது பாடி யன்னு னின்புறக்கண் டினி ச்செயலென் னெனச்சோர்ந்தானே. (களி)

கற்றூணே டிவற்சேர்த்துக் கட்டி முங்நீர்க் கடலினிடைப் போடு மெனக் கழறி னன்மெய்ச், சொற்றாய முனிவனிவன் றெண்டு செய் தாற் சுகம்பெறலா மெனவுணர்ந்து துணிந்தா னில்லை, யற்றூர்த்த மதக் குறும்ப ரருள்கண் டாலு மவரவர்கொள் கையின்வழிச்சென் றழிதி றிண்ணை, மற்றாம கேதனையா ரந்த வாறே வங்கமிசைக் கொண்டுதளரி வந்தா ரன்றே. (கஅ)

கடலிடைவீழ்த் தலுங்கருங்கன் மிதப்பக் கட்டுங் கயிறவிழ மிசை யிருந்து களித்துச் செங்க, ணடல்விடையாற் கருதியெழுத் தைந்தின் மாட்சி யவிர்தருசெந் தமிழ்ப்பதிக மறைந்தா னங்நீர், தொடர்திருப்பா திரிப்புலியூர்க் கையிற் சேர்க்கச் சுகம்பெற்றுன் றலந்தொறும்போய்த் துதித்தான் சோராத், திடமுறுமா தவத்தோரும் புலமையோருந் திரு நாவுக் கரசெனப்பேர் செப்பினரே. (கக)

நடந்தகதை வினவியவன் றமக்கை யார்வ நனியடைந்து சிலநாளி னக்கன் பொற்றூ, ளிடந்தினைத்தா ளவன்முன்னுள் சமண்புக் கெய்து மிழுக்கொழிந்து புனிதமெய்த வீசன் றன்கைத், திடந்தருசூ லப்படை போல் விடைபோற் றேளிற் றிகழ்தருமுத் திரையமைக்குஞ் சீரும்பெ ருன், * வடந்தைதரு கயிலைமலைச் சிறப்பெல் லாமும் வளமலியை யாற் றில்வயங் கிடவுங் கண்டான். (உ0)

கவுரிமுலைப் பானுகர்சம் பந்தப்பிள்ளை கலந்துசின்னு ளுடன்வசிக் குங் களிப்பு முற்றுன், மவுனசிவயோகரும்வேட் புறத்தென் சொல்லான் மறைக்கதவந் திறந்தான்பொன் மன்றி லாடும், புவுரியிறை யவன்வரு

* வடந்தை - வடகாற்று.

கென் றுரைப்ப தோர்ந்தான் பழுதிலெண்ணு யிரமடியார் பரவ வாழ்ந் தான், வெவ்ரகந்தீண் டியமதலையுய்யச் செய்தான் வீழிநகர்ப்பொற்கா சான் மேன்மைதோய்ந்தான். (உக)

என்னப்ப னென்னைப்பா டுவனென்றீச னியம்பியதா லப்பனென் றே யிகமும்வானும், பன்னப்பட் டானதன்றி யப்பூதிப்பேர்ப் பனவன்ம ட்டிற் பழிக்கருந்தொல் பரமேயானன், பின்னப்பால் வளைதரும்பொற் கோயின்மேய பெரும்புகலூர் தனிலிறப்பும் பிறப்புந் தீர்ந்தான், முன் னப்பே றடையுமவன் கதையோர்சோழன் *முதலமைச்சன் விரித்து நன்று மொழிந்துள்ளானே. (உஉ)

ஒருவன்விரித்துள்ள தொரு பயனேமற்று மொருபுலவன் மொழி பெயர்த்தாங் குரைக்கைசாலு, மருவருப்பா மாதலினிக்கதையையிவ்வா றடக்கியுரைத்தே னினியன்னவன் பிற்றோன்றுங், குருபரனுஞ் சுந்தர மூர்த்திப்பேராளன் கொற்றமுஞ் சற்றுரைக்கின்றேன் கூறுமஃதும், பொருவிலதாந் திருத்தொண்டர் புராணத்தூடு புகன்றுளதே யெனத் தேர்மின் புவனியோரே. (உங)

திருநாவுக்கரசுநாயனார்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உஉடு.

நான்காவது

சுந்தரமூர்த்திநாயனார் சருக்கம்.

கயிலைமலைக்கட் சிவபெருமானோர் கண்ணுதி
வயினிலவுந்தன் சாயலேநேரே வருகென்று
னயிலுறழ்கண் மாதுமையதிரண் டாலதுசெய்தாள்
பயிலவலார்மூ வருமவர்கோலப் படிவந்தார். (க)

அவரவர்தங்கட் குரியவர்தந்தொண் டதுசெய்யுந்
தவமுயலுற்றுச் சிற்சிலகாலந் தள்ளிப்பின்
னவமலிநந்தா வனமதிலோர்நா ணளிர்பூவேள்
கவலைவிளக்கப் பட்டவர்தம்மிற் காமுற்றார். (உ)

அத்தகையோர்ந்திட் டரனுமையன்னோர் தமைநாடிச்
சித்தம்வெகுண்டார் போன்றுலகிடைநீர் சென்றும்முள்
வைத்தவிருப்பந் தீர்த்திவண்வருவீ ரெனவந்தப்
பத்தன்வலிந்தாண் டருளெனவீழ்ந்து பணிந்தானே. (ஈ)

அப்படியேசெய் குதுமெனவீச னறைந்திட்டா
னெப்பறுநாவ லூர்வளர்சிவனுக் குயர்பூசை
தப்பறவெப்போ துஞ்செயுமரபின் சடையன்பாற்
றுப்பவிர்மேனிச் சுந்தரநாமச் சுதனுளனன். (ச)

---

* முதலமைச்சன் - சேக்கிழார்.

ஒருமகளாரூர்க் கணிகைதன்மகளா முருவுற்ரு
டிருகிகர்மற்ரோர் வனிதைசினுள்போய்த் திருவொற்றி
யருகுறுமோரூர் தனில்வளர்வேளா ளன்பெண்ணு
வருமுருவுற்ரு ளிருவருமினிது வளர்ந்தாரே. (இ)

உரமிகுநரசிங் கமுனையனென்னு மொருவேந்தன்
பரவுமொழிச்சுந் தரனெனுநாமப் பனவச்சேய்க்
கரண்மனையிற்சேய் பெறுநலமெல்லா மமைவித்தான்
வரனருளுற்ருசெய்தரிதாய வாழ்வின்றே. (ஈ)

அம்மதலைக்கீ ரெண்வயதாயிற் றங்காளின்
மைம்மலிகூந்தற் பெண்மயிலொன்றை வதுவைக்காச்
செம்மணவரைமீ தொக்கவிருத்தித் தீமுன்னர்
மெய்ம்மறைசொல்லும் விதிவழிகிரியை விளைத்தாரே. (எ)

வே று.

அவ்வமயத்தி லொருபெருங்கிழவ னந்தணர் குலத்தவதரித்தோன் கைவ்வயிற்றடியும் பழயவேடொன்றுங் கவினுறக் கொண்டவண்கடிதுற் றிவ்வகைமண மீண்டிவன்செயன்முறையன் றெமதுடன் பாடுபெற்றில்லா னெவ்வகாமெதுசெய்யினுந்தகும்விலேயேயிவன்மரபெமக்கெனவிசைத்தான்.

அம்மொழிவினவி மணமகனெழுந்தாங் கவன்கையேட் டினைக்கிழி த்தழித்து, வெம்மொழிப் பித்தனிவனெனவிகழ்ந்தான் வேறுளார் விட லையைநோக்கி, யெம்மொழிகுறியா திவ்வணஞ்செய்தா யிதுநின்மேற் குற்றமென்றிசைத்தார், மெய்ம்மொழிக்கிழவ னஃதலாலின்னும் வேறெ ரே ளெதெனப்புகன்ரூன். (கூ)

அதனையுங்கிழியா தடக்கியச்சபையோ ரன்போடு பார்த்திவனவர் தம், பதமலர்க்கடிமை தானெனத்தீர்த்துப் பணிந்துபின் போம்படிவிடு த்தா, ரிதமொழிக்கிழவன் றருமுறியதனி லிவன்றன்மூ தாதைகையெழு த்துஞ், சுதரெனத்தமைக் கொள்வார்கள் கைப்பொறியுந் தோய்தலின் மறுத்திலார்துணிந்தே. (கo)

கிழவன்வாலிபன் ரேண்மிசைத்தனதுடைமை கிளர்தரக்கொண்டு போய்க்கேடி, லழகுடைத்தானவெண் ணெய்நல்லூரி லுலையங்கனுட்பு குந்தப்பரன், மழவிடைப்பரிமேலுமை யொடுபலபல் வானவர்சூழ்தரத் திகழ்ந்தான், பழமைநன்கிலங்கலான் மிகப்பணிந்து பணித்தவாபணி செய்வே னென்ரூன். (கக)

சுந்தரன்பகர்சொற் கேட்டுளமகிழ்ந்து சுடர்மணிப் * பணிபுனேதோ ளான், செந்தமிழ்க்கவியாற்றுதி செயல்போலுஞ் சிறந்தகொண்டெமக் கிலேயென்ரு, னந்தவாறியற்ற வறிகிலேனெனலு மாதியிற்பித்தனென்றி கழ்ந்தார்ய், வந்தவச்சொல்லே கொடுதுவக்கென்ரூன் வயங்கொருபதிகம் வாய்த்ததுவே. (கஉ)

* பணி - பாம்பு.

அன்றுதொட்டுள்ளசிவதலந்தொறும்போ யருந்தமிழ்ப்பதிகமிக்கறைந்து
நன்றுளார்வியக்கப்பெரிதுசஞ்சரித்து நாள்சிலகழிந்தபினொருநாட்
கன்றுருவாகிநமன்வரச்சிவனேர் காலியாவருந்திருவாரூர்ச்
சென்றுபோற்றிசைத்தத்தலத்தின்மிக்காசை செறிதரவசித்தனன்றே. ()

இரவினிலவ்வூர்ச்சிவன்றனுலயத்துக் கியன்றதொல்பணிசெயப்பிறந்த
பரவையென்பாளன்னவன்மனையாகப் பற்பலர்கனவினும்பகர்ந்தான்
வரகுலமகளைமணஞ்செயற்றவிர்த்து வரைவின்மின்னுள்வயிற்றுதித்தாட்
டிரமுறக்கொடித்தான்றிருவருட்குறிப்புத் தெரிக்தரைப்பவர்சகத்திலேயே. ()

அவண்மனையாய நாண்முதற்பொன்னே யரும்பொருளாய தன்ன
வனுக், கெவளவோதலத்தி லெத்தனேபொன்னே வெய்தியுந்திருத்தியுற்
றில்லான், குவடுறழ்நெற்போர் குண்டையூர்ச்சிவனுர் கொடுத்திடப்பெ
ற்றதைக் கொணர்ந்தப், பவளவாயணங்கின் மனையிலுய்த்திடற்கும் பதி
கமோதினன் மிகப்பரிந்தே. (கடு)

பொந்துதோறுந்தை கூவுமென்றதற்காப் பூம்புகலூரர் பொற்செங்
கற், றந்துவிட்டதுவும் பழமலைநாதர் தருந்தனத்தினை நதியினிலிட், டுந்
துசோரூர்க்குளத்தினி லெடுத்தவ் வொண்டொடிக் கொடிக்குதவியது,
மைந்துறுதடந்தோட் சேரர்கோன்சிவன்சொல் வழிபொருண் மிகவழ
ங்கியதும். (கசு)

சங்கிலியெனுமோர்தவப்பெணனிகழ்ந்த சரித்திரவிசித்திரம்பலவும்
கொங்கினின்முருகன்பூண்டியூர்ச்சிவனுர் கொள்ளையிட்டதுமவிரசி
தங்கியபனவமதலையைமுதலே தானுகர்ந்தாண்டுமூன்றுகி
மங்கியபின்னர்வளர்ச்சியோடிலகில் வரவழைத்ததுமுதற்பிறவும். (கள)

இந்திரன்வியப்பத்திகழுபாய னெனும்பெயர்ச்சோழனுக்கினிய
மந்திரியுரைத்தகாவியத்தன்னில் வகைபடவிளங்குமானுலுஞ்
சந்திரமவுலிச்சிவபிரான் * மாதை தன்னிடைவன்னியின்காயே
யுந்தியமாற்றுப்பொன்னதாமாட லொப்பனசெப்பிடாதம்மா. (கஅ)

ஆதலாலவன்றன்சரிதமிவ்வளவே யாமெனமுடிப்பவராரோ
வேதமின்றியவற்புதங்களைத்தனேதா னெவரெவரெடுத்திசைத்தாலுஞ்
சீதநீர்க்குளத்துமுதலேயுண்டழிந்த சேயைமீட்டளித்ததற்கொப்பென்
றேதமற்றென்றுமுளதெனவருமோ வுணர்வினிற்சிறந்தவுத்தமரே. ()

அன்றுசோழிக்கவுணியமதலே யழலினில்வெந்தவெள்ளென்பைத்
துன்றுபூணணிபெண்ணுக்கிடப்பதிகஞ் சொல்லியதருமையேயெனினு
மொன்றுமாதரவில்வெறுங்குளத்திடைப்போ யுதகமுமுதலேயுமகவுந்
தன்றுதித்தமிழாற்றம்பிரான்றேழுன் றருதல்சற்றுயர்வெனத்தகுமே. ()

* மாதை - திருவாமாத்தூர்.

காமவேள்கணையின்கதுமைசற்றேனுங் கதுவுறுக்கவுணியமதலை
யாமவனருட்பேறடைந்ததுவியப்போ வணங்கனிருவர்தோளணைந்து
நேமமுந்தவறியதன்பொருட்டிரண்டு நேத்திரங்களுமிழந்தடைந்தோன்
சோமசேகரனேயவர்கள்பாலிதச்சொல் சொலும்படிவிடல்பெருவியப்பே.()

கந்தனேயனேயசுந்தரன்றவளக் களிற்றின்மேற்கயிலேவெற்படைந்தா
னந்தவேலையினிற்சேரமான்றனு மருகொருபரியின்மேற்சென்று
னிந்தமட்டிவன்றன்சரிதையை முடித்திட்டினித்திருவாதவூரடிக
ணந்தலில்சரிதமுணர்ந்தமட்டன்பர் நலமுறும்படிநவின்றிடுவாம். (உ)

சுந்தரமூர்த்திநாயனர் சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உசள.

ஐந்தாவது

திருவாதவூரடிகள் சருக்கம்.

வாதவூர் சரிதம்புவியில் வல்லோர்பலர் சொன்னு
ரேதமெய்துந் தமியேன்றனு மியம்புந்துணி வுற்றேன்
சீதமலிநீர்ச் சைவாசிரியத் திரளிற் றலையாய
நாதனென்னத் துதியார்பலரு நற்பாவல ரன்றே. (க)

அட்டமூர்த்திநிலைமைசிறிது மறியாவிளஞ்சைவர்
சிட்டர்போற்றுந்திருவாசகத்தோன் சீலந்தெரிகில்லார்
நட்டநடுவேநிற்கும்பெரியோர் நன்கோர்ந்தளிகூர்வார்
வட்டநிலமின்முகநேர்பாண்டி வளநாடதனூடே. (உ)

வானேர்புகழ்சிருத்தாகோச மங்கைநகர்தன்னின்
மானேர்கையிற்கொள்ளாச்சிவனேர் வடிவத்தொருகுரவன்
மீனேறெறிற்கண்ணினர்மாலறவே வென்றபல்சீடரொடுந்
தானேர்துணையாவுற்றனனெனநாட் டவமுற்றியபின்னர். (ங)

முத்திக்கிடைபோ குவனினியென்றோர் மொழிகூறினனன்னோர்
பத்தித்துறையாற் கெஞ்சினரியாம்போம் பரிசோதுதியென்ன
வித்திக்கினிலிக் குளநடுவொளியொன் றெய்திடுமதுளகிற்
சித்தித்திடுமெய்க் கதியெனவோதித் தேகமறைத்தானே. (ச)

ஓதுமவாறேசின்னுள்சென்றங் குற்றதுபுக்குய்ந்தார்
பாதுகையேந்துந்தொண்டனெருத்தன் பயமிக்கணுகிலனப்
போதுறுசோதிமறைந்ததுநொந்தே புண்பட்டனனுடல்போய்
மீதுயருலகிடைசாரூபப்பத மேவிவிளங்கினனே. (ஞ)

ஏய்ந்தியபதமிக் கினிதெனமகிழா தீசன்சந்நிதியிற்
கைதினமுங்குவி யப்பிறவாமெய்க் கதிதருகென்றேதி
நெய்திகழ்கொன்றை மலர்த்திரளாதிய நிறையக்கொடுதாளிற்
பெய்திருகண்புனல் சொரியப்பரிவிற் பெரிதுமுயன்றனே. (சு)

அத்தானி மாமாத்தியரா மத்தனர்களின் மிக்கோன்
மைந்தன் வேண்டித் தவானிசெய்தே வாதபுரிக் கிடைவேற்
கந்தன்ருதை யருளாலிவனைக் கான்முளையாப் பெற்றான்
வந்தன்னவனெண் ணெண்கலைதேறி வாலிப திசையுற்றான். (எ)

வே று.

அன்னவற்பிரமாய னுமெனப்பகர்ந்தார்சில்லோ
ருன்னரும்புகழ்சால்வாத வூரனென்றுரைத்தார்பல்லோர்
தென்னவனேயன்மாட்சி தேயமுற்றுரைப்பக்கேட்டுத்
தன்னமைச்சாதல்வேட்டத் தகைமையிலமையக்கொண்டான். (அ)

மந்திரித்தொழில்செய்போது மனத்திடைவயிரவேற்கை
யிந்திரன்வாழ்வுந்தாழ்வே யெனக்கருதிறுமாப்புந்தண்
சந்திரன்முடித்தவேணித் தலைவனேகுருவாக்கண்முன்
வந்தினிதருளவேண்டும் வாஞ்சையும்வளர்த்துற்றானே. (ஃ)

ஈடில்சீர்வசிட்டன்றன்னு லிராகவன்சபைவாழ்ந்தாற்போற்
கேடில்வேல்வழுதிமன்னன் கெழுவுமோலக்கம்பாண்டி
நாடியறவத்தான்முத்தி நலம்பெறவுதித்த * நாதன்
பீடியலமைச்சனுகப் பெற்றதாற்பிறங்கிற்றன்றே. (கo)

அத்தகையமைச்சன்றன்னே யளிமுரல்வேப்பந்தாரான்
புத்தநாட்டிவுளிகொள்ளப் போதியென்றனுப்பினனு
லெத்தனேநலனுற்றாலு மிராசனேச்சாருமீனம்
வித்தகர்க்காகாதென்ன வெறுப்பதேமுறையாமம்மா. (கக)

பொன்னுடைப்பொதிகள்வேண்டும் புறத்துணைப்பரிவாரங்க
டென்னுறக்கிழக்குநோக்கித் துரிதமாச்சென்றனுங்கு
மன்னுமோர்காவிற்செம்பொன் மலர்சொரிகுருந்தின்பாங்கர்
மின்னுறழ்சடிலக்காட்டோர் வேதியக்குருவாயீசன். (கஉ)

பற்பன்மெய்யடியார்சூழப் பரிந்துவீற்றிருப்பக்கண்டான்
பொற்பணம்புரவிவேட்கை புரவலனுனையாதி
யற்பமுமதியானகி யடிதொழுதிறைஞ்சிநின்று
னிற்பவன்றன்னேநோக்கி நின்மலனிகழ்த்தலுற்றான். (கங)

யாவனீயீண்டேன்வந்தா யென்னேநீயிறைஞ்சலேனின்
னுவல்யாதெனலுமன்னே னந்தணச்சிறுவன்யானேர்
காவலனுனையாலிக் கான்வழிவந் தேனின்னேத்
தேவதேவென்னநம்பித் தெண்டனிட்டிறைஞ்சிநின்றேன். (கச)

என்னேநீயாண்டுகொண்டியா னிறந்துபோயின்னுமற்றே
ரன்னேதன்வயிற்றுண்மாழ்கா தருள்செயவேண்டுமென்று
னின்னேநின்னுடலேநின்பா னிகழ்பலபொருளோடுந்தாற்
பின்னேநின்விருப்பமுற்றுப் பெறும்படிபுரிவேனென்ன. (கஞ)

* நாதன் - திருவாதவூரடிகள்.

சற்குருவுரைப்பக்கேட்டுத் தடையறக்கொடுத்தன்னேன்பா
னிற்குமெய்யடியார்பூண்டு நிலவுநல்வேடத்தோடு
சொற்குறியதுவும்பெற்றுத் துகளறுநிலையோனை
னெற்குமுன்பனிமாய்ந்தென்ன விகத்துமாலிரிந்ததன்றே. (கக)

அக்கணங்குரவன்கூட்டத் தவரொடுமறைந்ததாலே
முக்கணன்முனம்மெண்ண முற்றுறப்புரிவானீண்டுத்
தெக்கணமுகத்தனுகித் திகழ்ந்தனனென்னத்தேர்ந்திட்
டெக்கணங்கருதினலு மிதயமூடிலங்கப்பெற்றான். (கஎ)

அவ்வனத்தரசன்றந்த வருந்தனமூலமாகச்
செவ்வனப்பமையுங்கோயிற் றிருப்பணிதுவக்கிச்செய்வித்
தொவ்வருங்களிப்பனுகி யுறையுநாளரையன்றாதன்
னீகவ்வயினேலியேந்திக் கடுகிவந்ததனேயீந்தான். (கஅ)

மந்திரிக்கெழுதுமோலை வாசகமுறையுமற்றோர்
தந்திரத்தொழுகுந்தன்மை சகஞ்சொலத்தெரிந்தவாறு
முந்தியபரிகடம்மோ டிருவிடிலொறுக்கும்பண்புஞ்
செந்திருமார்பன்போல்வான் றிருக்கையின்குறிப்போடோர்ந்தே. (கஉ)

முன்னமந்திரியாய்ப்பின்பு முனிவனுமூர்த்தியென்றுங்
தன்னகத்தொளிர்கின்றோனுஞ் சற்குருபரன்சொனம்பி
யன்மார்வயல்கள்சூழு மணிகிளர்மதுரைக்கேகித்
தென்னவன்றன்னேக்கண்டு சினமுதற்செய்யேலென்றும். (உ0)

இன்னநாள்பரிகணின்பா லெய்திடுமென்றுமியானின்
றன்னதாளென்கைமாறிச் சங்கரனடியார்க்காளா
நன்னலம்பெற்றேனென்று நவின்றனனகிற்கண்டார்
பன்னலும்பிறவும்பாடிப் பாத்தொகைபெருக்கல்வீணே. (உக)

கடிமணஞ்செய்துற்றோரோ கருதியபயன்கைக்கொள்வா
னடிகடாமதுசெய்யாதுந் றனர்கொலோவறிகின்றில்லே
னென்டியபாரிருவாரும் நிகழ்த்திடுநிறையப்போர்த்த
பொடியொடுகீளுங்காட்டும் புதுப்பிறப்பானதுண்டே. (உஉ)

ஈசனேவிழிமுற்றோற்றி யீந்தமெய்வேடமாற்றி
யாசதாமுதல்வேடந்தொட் டடைந்தனரெனவஞ்சாமற்
பேசவுந்துணிந்தார்சில்லோர் பெருஞ்சினமரசன்செய்தா
ஞசமக்கணத்திலெய்து ஞாயநன்குணர்ந்திலாரே. (உங)

மன்னவன்சைவந்தாங்கு மரபனுயிருந்தும்வந்த
வன்மாமுனிவற்போற்றி யடிபணிந்தில்லானுக்கும்
பொன்னவாவதுமேலிட்டாற் புந்தியுநிலையுமாறு
மென்னமூதுணர்ந்தோர்சொல்லற் கிஃதுமோர்சான்றுயிற்றே. (உச)

வேடமுந்தொழிலுமாறும் விதம்பலர்விளம்பக்கேட்டுக்
கூடலம்பதிவாழ்கோமான் குலைந்தமுற்கோலங்கண்டா
னுடறிதிருடனென்ன வவிலுமாறுணராரங்ஙன்
பாடலும்பலசெய்துள்ள பாவமென்னெனச்சொல்வேனே. (உடு)

அன்னவர்நாவின்மீதும் றங்ஙனம்பகர்ந்தவாணி
யென்னதுநாவுற்றிங்ஙா ளிங்ஙனமிசைக்கின்றுளாற்
பின்னவட்காண்போரன்பாற் பெரிதுன்மங்கலஞ்சான்றுச்சொ
லென்னநன்குறுத்திக்கேட்டா லிதனிசமறியலாமே. (உசு)

பிரமனேநமனேவேளைப் பெரும்பகையெனத்தேர்ந்தெள்ளும்
வரமுனியரசற்கஞ்சி மற்றொருவேடமிட்டா
லரனருள்வலிமைகுன்று மறநிலையனேத்தும்பேருங்
கரவினனெனவிப்பாருங் ககனமுமிகழுமன்றே. (உஎ)

வயிணவர்களிற்சில்லோரு மாசுணபதியேயென்னப்
பயில்பெருங்குருமீதின்ன பழிசுமத்திடலுண்டின்னே
ரயில்வலியினுமெங்கோன்மெய் யருள்வலியெளிதென்றெண்ணி
வெயிலினிற்புழுப்போற்சோர்ந்து வினைப்பயனுகர்கின்றுரே. (உஅ)

அறைந்தநாள்வருமட்டந்த வரசனம்முனிவன்றன்னை
மறைந்ததோரறையுள்வைத்து வலியாராற்காவல்செய்தா
னிறைந்தபேரறிவுள்ளாற்கு நிட்டைவாய்த்ததுமற்றோராற்
குறைந்திடச்செயும்விகாதக் குழுமுழுதொழிந்ததாலே. (உசு)

தீர்த்தனுக்காலயஞ்செய் திருப்பெருந்துறையின்வாழ்விற்
சீர்த்தசம்முனிவற்கந்தச் சிறைத்தனிக்கூடந்தீய
தூர்த்தமானிடரோரார்கள் சுருதிசொனிலையினின்றூர்
மூர்த்தமேகுறியாப்பற்றி முயல்பவருணர்தற்பாற்றே. (ஈ0)

வே று.

குறித்தவாவணிமூ லத்திருநாளிற் குலநரிகளைப்பரி யாக்கி
மறித்தடங்கரத்தார் சேவகராகி வானவர்தமைத்துணை யாக்கொண்
டெறித்தபொன்மதிள்சூழ் மதுரையின்கீழ்பா லெய்தியவாரவா ரத்தால்
வெறித்தகைதவிர்ந்தாங் குவகைமேற்கொண்டவ்வியனகராளும்வேல்வேந்தன்.

சிறையிலுற்றுளவோர் முனிவரன்முதலாஞ் சீரியருடனவ ணேகித்
தறையின்வாம்பரிக ளன்றிவைவானந் தனிலுளவேயென வியந்து
பிறைமறைத்தொருபொற் கலைபுனைதலையாற் பிரமையாற் கைகுவித்ததற்பின்
முறைபிறழ்ந்தனமென் றுளமிகநாணி முகமலர் குவியநின்றனனே. ()

இவ்வயிற்குதிரைக் குரத்துமென்றுகளி னெழுச்சியும்விலாழியின் பெருக்கும்
பௌவநீர்த்திரைநேர் பாய்ச்சலுந்தொனியும் பணிப்பொலி வாதியபிறவு
நவ்வலந்தீவிற் புலவர்பற்பலர்முன் னவின்றவா நானுமோதிடினுஞ்
செவ்வறிவமைய முதிர்வுறுக்கல்விச் சிறியவர்க் குவகையீந்திடுமே. ()

நின்றமன்னவன்முன் னிகமவாம்பரிமே னிலவியதலிவனின் னமைச்சன்
பொன்றரற்பொருட்டா லீங்கிவைகொணர்ந்தேம் போதுமட்டுகுதங்கோடி
யுன்றனக்குவைமுற் றிருருபரிவிலைக்கு மொவ்வுரு நீயுநன்குணர்வா
யென்றனனவ்வா றீந்தனன்பிறவோ டேகினனெங்குமேயவனே. (ஈச)

அன்னவற்கொரு பீதாம்பரமளித்திட் டதைக்கசையாலவன் கொளலான்
மன்னவன்சினந்தான் வஞ்சகவேட மந்திரிவழக்கமென் றிசைத்தா
னென்னவும்புகல் வாரியானதற் கிசையேனிரவினிற் பரியெலாநரியாய்
முன்னம்வாழ்காட்டிற் கேகியதந்தோ முதல்வனுட் டுணர்வரியதுவே.

அரண்மனைக்குதிரைத் திரளினைக்கொலிசெய் தகன்றவென்பாதவம்பே
யுரனுடைப்பரிக ளானவாநெடுநா ளூறும்படி செய்யவும்வல்ல
பரமர்தாந்தமது திருப்பணியினும்பல் பரிகொள னலமெனக்கருதும்
புரவலன்மடமை குறித்ததாற்பொய்மை பொய்மையாகிடப்புரிந்தனரே.

தந்திரக்கபட நரிகளைக்கூட்டித் தவளவா ரணப்பிடரேறு
மிந்திரன்றன்னூர்ப் பரியினுஞ் சிறப்ப விறைசெயற் கண்டுபோமிரவி
மந்திரமுறைக்கு மமைவுறுவடிவில் வழுதிகைப் பிரம்படிதாக்கச்
சந்திரமோலி மறைத்துவந்தாடுந் தகுதிகாண்பதன்பொருட் டெதித்தான்.

விடிந்ததுமிரவி னிகழ்ந்தவாறுணர்ந்து விசயனேயனேயவேல் வே
ந்தன், 'கடிந்தசொற்சொரிந்தம் முனிவனைப்பிறர்போய்க் கண்ணெதிர்
கொடுவரக் கண்டு, படிந்தவிச்சாலமெங்கு கற்றனையோ பகர்தியென்று
றுக்குபுவையைப், பொடிந்தநுண்மணன்மே னிறுத்திமிக்கொறுத்துப்
புண்படப் புரிமினென் றுரைத்தான். (ஈஅ)

அரையனதுறவு மகண்டபூரணமா வமைதருமாதிதன் னுறவுந்,
தரையினிற்சதமன் றெனுமொழிக்கீதோர் சான்றென நிகழ்ந்ததத்தவன்
றன், றிரையறுகடனேர் சிந்தைதத்தளிப்பச் செழுந்தமிழ்த்துதி சிலசெ
ய்தான், விரைவிலன்னவர்தாங் கொண்டுபோயாற்றின் வெம்மணற் குன்
றின்மேல் விடுத்தார். (ஈக)

நெற்றியிற்கல்லு நெடுவிரற்கிட்டி நெருக்கமுமமைத்துநீ ணிலத்தின்
பற்றிலான்றன்னே யொறுப்பதுநினைத்தார் பரனருளாற்புனல் வெள்ள
முற்றிருகரையும் பிறழ்ந்ததுநீந்தி யுய்ந்தனரூர்நிலை பெறுஞ்சீர்
பெற்றிடக்கருதி யரசனும்பிறரும் பேதுறுபீடைமிஞ் சியதே. (சஅ)

தெய்வமேதுணையென் றுணர்ந்தொருமூர்த்தித் தியானமுஞ் செ
பமுந்ன். கியற்றி, யுய்வதுகுறிக்கு முறுதிபெற்றுள்ளீ ரும்மதுகனவினிற்
பொறிக, ளேவகையொடுங்கு நிட்டையிற்றேற்று மவைகளாலாண்மை
யெய்திடன்மின், சைவநாயகனைக் கண்டருள்பெற்றேன் றயங்குமாறு
ணர்ந்தடங்குமினே. (சக)

அக்கண்மச்சன் முனிவனேப்பண்டை யறையுளுய்த்திலந்தொறெவ் வொன்ரு, மக்களேக்கூட்டி மண்சுமந்தாற்றின் வார்கரைதிரட்டலின் முயன்ரூன், றிக்கதொன்றில்லாள் பிட்டுவிற்றுண்பா டிரைஞரைக் கூலு டலொருத்தி, சொக்கநாயகன்மு னெனக்கொராளமைத்துத் துயரொழி த்தருளெனத் தொழுதாள். (சஉ)

கொடியகோல்செங்கோ லெனுமிரண்டேந்துங் கொற்றவ ராணையாற்குலியு மடியவர்க்கிறைவ னருளலாற்றுணையின் ருநிசமவிர்தரும் பொருட்டா னெடியமாலறியாப் பதத்தவன்ருனே நேரிலோ ராளெனநிலவிப் பொடியதாம்பிட்டு முழுதுமாங்கூலி புகன்றவ ளிசைந்தபின்போனுன்.

இன்னவனவர்தங் கூட்டமுட்புகலு மியாவருமிவன்வழித் திரும்பி யன்னவேலையின்மிக் குழைப்பதுதவிர்ந்தா ரடிக்கடி கூலிபெற்றளித்துத் தின்னலும்பிறவு மேநனிசெய்தான் சேவகர்தெரிந்து * வேத் திரக்கை மன்னனுக்குரைத்தா ரவன்விரைந்தோடி வந்தடித்தனன்சின மலிந்தே.

அவ்வடியடித்தோன் முதற்பலர்மீது மவ்வயிற்ருக்கியதன்றி யெவ்வகிலத்தும் யாவர்தம்மீது மேய்ந்ததுதேவராதியர்தாந் தெவ்வறக்களேயுங் கணவிழைந்தான்கைச் சிலையடிபட்டவன்றன்னே யிவ்வமையத்தில் யாவனேவடித்தா னெனத்தெளிந் தின்பமெய்தினரே. (சடு)

அத்தகைக்கடவு ளியாவனேவனே யகண்டபூரணப்பரப்பிரம மெத்தகவினனென் றியாவரேத்தினுமாங் கிலங்குவோ னெண்ணில்பல்வேத வித்தகச்சமய புறச்சமயங்கள் விரும்புவோன் விகற்பமுற்ருழிந்தோன் சுத்தநிற்குணமுஞ் சகுணமுமாகுந் தொல்பொருளென்பதுதுணிவே. ()

அவனுருக்காந்தவாறுமெல்லவர்க்கு மடித்துயர்மீறலுமறிந்து தவளவாரணத்தோன்மணிமுடிகளேந்தான் றன்மரபினில்வருந்தளயன் சிவனடிகருதிச்சிறையில்வாழ்முனிவற் றெண்டனிட்டேத்திநீசெய்யுந் தவநிலேயதன்மாண்பறிகிலேனிழைத்த தவறெலாம்பொறுத்தியென்றிரந்தே. ()

எப்பணிநின்வாயிடினுமாங்கியற்றற் கெட்டுணேதவறிடேனெனக்கின் றிப்படியரசுங்கசந்ததுன்னருளா லிறைநிலேயெளிதுணர்ந்துய்ந்தே னப்பரன்றன்னேயடித்தவெம்பாவ மகலுமாறறிகிலேனெனலு முப்பழச்சாறேயனேயசெந்தமிழ்தேர் முனிவரன்மகிழ்ந்திதுமொழிவான்.()

என்னேமுற்றிலுமேற்றுள்ளவனருளா லென்சுகதுக்கமுற்றியலு முன்னேநான்சினவேனுனக்குமோர்செயலின் றுன்பொருளாற்செய்புண்ணியமுன் றன்னேயேசாருமெனக்கிகபரத்தின் சார்பினியின்றிதுசரத முன்னேகாட்டவமிக்கிழைத்தளாயதனுன் † முதலிருக்கானின்மூற்றிகழ்ந்தான்.(சகூ)

மற்றையவரசர்போன்மகபதியூர் வயிற்புகுந்தவுணரால்வருந்தாய் பொற்றைவிற்சிவனூர்புகுவையான்றுவக்கும் புதுத்திருப்பணிக்குறைதீரு முற்றைநீகண்டின்மகன்றலேமிசைநின் முடிகவித்தருந்தவமுயலென் றற்றையேமதரைவிடுத்தியுவப்போ டருட்டிருப்பெருந்துறையடைந்தான். (ஙo)

* வேத்திரம் - பிரம்பு. † முதலிருக்கு - முதன்மையுள்ளவேதம்.

அன்னவாறரசன்சிறிதுநாளையிலாங் கப்பணிமுடிக்கைகண்டதற்பின்
வன்னமாளிகைசூழ்த்தரகோச மங்கையுமருணையுங்கழுகே
யென்னமாதவர்வாழ்மலையுமாதியபார்த் தினியசொற்றொடைமிகவனைந்து
பொன்னதாற்சமைத்தவம்பலங்குலவும் புலிசையிற்சிவன்சொலாற்போனான். (நக)

அப்பதியினர்தன்பெருமையோர்சிறிது மறிந்திடாதன்னமேற்றருந்தி
வெப்பமார்தில்லைக்காட்டிடைவசித்தே மிகுதவம்விளைத்தனன்விரும்பிச்
செப்பகப்பொருட்கோவையும்பிறபனுவற் சிருமேற்றுவந்தருட்செழிப்பான்
மைப்படிகண்டரவற்குமாணிக்க வாசகனெனப்பெயர்வகுத்தார். (நஉ)

இட்டபேர்பெற்றேனெருவனேயறிவா னின்னணமிருக்குநாளெறிநீர்
வட்டவாரிதித்தீவினில்வளர்பவுத்த மதப்பெருங்குரவர்மூவெழுவர்
மட்டறுதிறற்றம்மன்னெடுற்றவ்வூர் மறையவர்தமைச்சயித்தீச
னிட்டமாடிடுங்கோயிலைத்தமதாக்க நண்ணுபுகவின்றுமார்த்தனரே. ()

அந்தணர்பலரிற்கருமமேதுணையென் றசக்கொலிவிழைவுறுதவராய்ச்
செந்தகைவடிவங்கருதியைந்தெழுத்துஞ் செபிப்பவராஞ்சிலர்கனவில்
வந்தரனிவ்வூர்த்தில்லைமாவனத்தின் மாணிக்கவாசகப்பெயரோ
னுய்ந்தீருள்வலியோடிற்றுளானவனு லொறுக்குதிரிவரையென்றுரைத்தான். (நச)

அம்மொழியுணர்ந்தங்கவர்புகுந்தப்பே ரறைந்தழைத்திடலுமம்முனிவ
னிம்மொழியுரைப்பாரியாவரென்றடித்தா னீசனுத்தரமென்றருடன்போய்
வெம்மிமாழிப்பவுத்தவாதிகட்சயித்து விளம்பருமூமைகளாக்கிச்
செம்மெழிவலத்தோடவிர்ந்தன்னவர்க்காத் தேர்மிசைவந்தமன்செப்பும்.()

என்மகளொருத்திபிறந்தாண் முதற்கொண்டியாதொருமொழியுமோதில்லாண்
மன்மதன்சேனைத்தலைவிபோன்றுள்ளாள் வாய்திறந்துரைசெயச்செய்தா
னின்மதமுயர்வென்றதிற்புகுந்தெனது நிலத்துளார்பலரையும்புகுப்பே
னுன்மகத்துவமூன்றுலகினுமொளிரு முண்மையீதெனத்துணிந்துரைத்தான். (நசு)

அப்படிச்செயற்கோர்தடையுமின்றெனச்சொற் றம்முனியவளையாங்கழைப்பித்
தெய்ப்பறக்குருந்தினடியில்வந்தாண்டா ரிருபதங்கருதிறீறிட்டுக்
கைப்பவர்போன்றுசிவசரித்திரத்தின் காரணம்பலவினவினன்செந்
துப்பவிரதரமலர்தரத்தமிழாற் றுகளின்மாறுத்தரஞ்சொன்னள். (நஎ)

இவ்வயினவடனெழிலுறுப்பமைதி யிணைகலைகலன்முதலியவு
மவ்வயினவடாய்கண்டநற்கனவே யாதியசகுனங்கள்பலவும்
வெவ்வழன்மெழுகொத்துருகியாடவர்தா மெலிந்துபேசியபலவிதமும்
* பௌவமொத்தகலப்புகலினுஞ்சலியாப் பண்பினர்படிமிசைப்பலரே.

மன்னவன்றனுங்குரவருமுதலின் மகளணிந்திட்டநீறணிந்து
பொன்னவிரக்கமாலையுந்தரித்துப் புனிதன்வாய்புகன்றவைந்தெழுத்துஞ்
சொன்னகாவினராய்த்தமதுநாட்டேகித் துகளுறுபுலிமதந்துறந்தா
ரின்னவாறுணர்ந்தும்பிறசிலகுரவோ ரெதிர்த்தவர்க்கொலிசெயலிழிவே. (நக)

* பௌவம் = கடல்.

செந்தமிழ்ப்பாண்டிநாட்டிறையாகித் திகழ்குலசேகரன்பின்னு
டந்தகாவியமொன்றினிலிவன்பவுத்தத் தலைவரைக்கொலைசெய்தானென்று
னந்தநாள்பிட்டுக்காகமண்சுமந்த வரனேமன்னவன்றனதாளா
லைந்தரிலொருவனடித்ததாத்துணிந்தோர் வண்டமிழ்க்கவிஞனெனினனே. (சுக)

வேறு.

புத்தர்களேவென்றுயர்மெய்ப் புகழ்முனிவர்மகிழாம
லத்தகையராகிழங்தே யறைந்தகவியாவையுமோர்
புத்தகத்தில்வரைவிப்பான் பொருவறுசெந்தமிழ்நாட்டு
வித்தகனீண்டொருவன்வர வேண்டுமெனவிழைவுற்றார். (சுக)

காணுதபுத்துருவற் காண்டலுங்கின்காணியதா
மாணுடியாதெனவினவும் வழக்கமொன்றும்வாய்ந்திட்டா
ராணுகிப்பெண்ணுகி யலியாகுமருட்பெருமான்
சேணுடர்ஙனிவியப்பத் திருவுருவங்கொடுசென்றார். (சுஉ)

கையதனில்வெள்ளேட்டுக் கனமுமெழுத்தாணியுங்கொண்
டெய்யவந்தவிரத்தன்போன் றெளிரொருவற்காண்டரலு
மையமின்றியிவனங்காட் டவனேயென்றறிவுற்றும்
பையவினுயவனுவாற் பாண்டிநாடெனல்கேட்டார். (சுஙு)

என்பாடலுள்ளனஙன் கெழுதவல்லாயோவெனலு
மன்பாரவொருக்காற்கேட் டங்ஙனமேவரைகிற்பேன்
பின்பார்த்துக்களிகூர்வாய் பேசெனக்கைப்பிடித்துற்றே
யின்பாரப்படிப்பாருக் கிளையாராயெழுதினரால். (சுச)

ஒருக்காற்கேட்டங்ஙனமே யூசினுற்பொறித்தல்வியங்
திருக்கான்முக்காற்பார்த்து மியாதொன்றும்பிழைகாணர்
திருக்காலொன்றெடுத்தபிரான் செயலிதெனத்தெளிந்தில்லா
ருருக்கார்வத்தமிழ்க்கவிதை யொருங்குரைத்துமுடித்தாரே. (சுடு)

சொல்லிடலோடெழுதினர்கைச் சுவடியொடுமறைந்திமைய
வல்லியெதிர்நடமாடு மன்றகத்தில்வைத்திட்டா
செல்லிடையித்தகையினர்பா லின்னணஞ்சுதியற்றியவ
ரல்லலிளம்பக்குவரை யயர்வித்தல்வியப்பன்றே. (சுசு)

கைத்துரிதங்கண்டுமிவர் கண்ணுதலென்றுணராரா
யத்துவிதசித்தாந்தத் தவருமருண்டனராஞற்
பித்துடையாரனையபிறர் பிரானெதிர்வந்துற்றலுஞ்
சித்துமிகச்செய்தாலுந் திருடனென்கைமுறைதானே. (சுஎ)

எழுதியவர்மறைந்ததற்பி னியாக்கையொடுகதிசேரு
முழுவிதிபெற்றமைந்ததவ முனிவர்வியந்தளிகூர்ந்தார்
*தொழுகுலத்தாரவையிடையச் சுவடியைக்கண்டனரோருங்
குழுமியவிழ்த்தாதியந்தங் குறிக்கொண்டுபார்த்தனரால். (சுஅ)

* தொழுகுலத்தார் - தில்லைமூவாயிரவர்.

வண்டமிழ்ச்சீர்மாணிக்க வாசகர்சொற்படிலே
கண்டமுளானெட்டெழுத்தென் கைக்குறிப்போர்ந்திசயித்து
*விண்டவரைக்கண்டன்பான் மிகவுமுபசரித்தாங்குக்
கொண்டனைந்ததனைக்காட்டிக் கூறுமிதன்பொருளென்றார். (சுகூ)

அன்னவர்சொற்கேட்டவர்தா மளப்பருமார்வத்தினரா
யின்னதுதானிதன்பயனென் றியம்பியசொல்லுடனந்தப்
பொன்னவையினிடைப்புகுந்தார் போனவரைக்காண்கில்லா
ரென்னவிதமுத்தியினு மிதுமேலென்றுணர்ந்தாரே. (எ0)

அத்தகையமுத்திபெறு மருந்தவருமரன்றனது
கைத்தலத்தால்வரைந்தேற்குங் கவிபாடும்புலவர்களு
மித்தரையிலின்றுவரை யிலையினிமேலெப்படியோ
வெத்தகவுஞ்செயவல்லா னிதயமறிந்திடுமன்றே. (எக)

சத்துவசற்குணராகிச் சமரசநிச்சயஞான
தத்துவந்தோய்தருசைவத் தலைவராமவர்பெருமை
சித்துடையபெரியோரிற் சிலர்தாமேயறிவரென்றுற்
பைத்துறுபாம்புறழ்கோரப் பண்பினரோர்தரற்பாற்றே. (எஉ)

சீதளநீர்ச்சடையாடத் திருநடஞ்செய்வானருளால்
வாதவூரடிகள்புகழ் வாரியிற்சற்றுரைத்திட்டே
னேதமில்சீர்த்தில்லைநடத்திறை யருட்சீர்பெற்றுவந்த
மாதவத்துச்சேந்தனர் வண்மையெடுத்திசைப்பேனே. (எஊ)

திருவாதவூரடிகள்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ஈஉ0.

ஆ ரு வ து
சேந்தநாயனார் சருக்கம்.

திருவெண்காடர்தம் மனைக்கணக்கெழுதுமோர் செய்கையிற்சிறந்தன்னர்
மருவுமெய்த்துற வடைந்தநாளங்ஙகர் மன்னவன்றனைமேவி
யுருகுமன்புறு மனைவியாதியர்ப் பிரிந்துற்றிடுஞ்சேந்தன்றன்
னருமைமைந்தனவ் வடிகடம்மடிமிசை யஞ்சலியுடன்வீழ்ந்தான். (க)

அஞ்சுதன்மையெய் தாதொருமதலைவந் தடிபணிந்திடக்கண்டு
பிஞ்சுவாண்மதிச் சடிலர்தம்மடியவர் பிரியமிக்கருள்கூர்ந்து
நெஞ்சுளார்வமுற் றெடுத்தருகிருத்திவெண் ணீறணிந்தியார்கீறிற்
கெஞ்சுசொன்முறை யுளதெனில்விளம்புதி யெனவினவினரன்றே. (உ)

எந்தைநுங்கணக் கெழுதியசேந்தனு மியானவற்றெரிகில்லே
னிந்தையோரர சன்சிறைச்சாலையி னிகளம்வாய்ந்துளனென்பார்
கந்தகட்டுமென் னன்னெற்குத்தலாற் காலம்யான்கழித்துள்ளேன்
சிந்தையஞ்சலென் றவளனைத்தேற்றலாற் றிருமுன்வந்தனனென்றான்.

---

* விண்டவர் - சிவபிரானெழுதும்படி கவிசொல்லிவைத்த திருவாதவூரடிகள்.

என்றவாசகங் கேட்டலுமவர்சிறி திருவிழிப்புனல்சிந்திக்
குன்றவார்சிலை யாரொனச்சினங்கொடு குழந்தையினுடனேகி
மன்றன்வாயிலி னின்றுமத்தனதயி னெனத்துவக்கியபாட
லொன்றறைந்தனர் சேந்தனுக்கரசனிட் டெதனோவொறுங்கிற்மே. (ச)

அதுகண்டச்சமிக் கரசன்விட்டனனவ னடிகடம்மடியாய
பதுமமேல்விழுந் திறைஞ்சினனுடனவன் பாலகன்றனையேற்பித்
திதுமுளள்வினைப் பயனநுபவித்தனை யெனத்தெளித்தினிவேட்கை
யெதுகொண்டாலுநல் குவமெனவீளித் திட்டனரவன்சொல்வான். (ஞ)

மீதுலோகரும் வியந்தசெல்வத்தினை விட்டுமேதினிமாந்த
ரோதுநிந்தையேற் றியாதுகாரணத்தினு லுலவுகின்றீரோநீர்
தீதிலாவதை யானும்வேட்டனனெனச் செப்பலுமெழுத்தைந்து
மோதுகென்றுனைத் துளமொடுங்கிடத்தகு முபாயமுமுனைத்தானே. ()

வேறு.

சற்குரவன்பகர்கவியாற் றனைநீங்கியரண்மனையின் றலைவாயிற்க
ணிற்குமவன்றனைத்தொழுது தன்மகவுமுத்திபெறு நெறியும்பெற்ற
பொற்குவடுபுரையுமனச் சேந்தனவன்மனைவியெதிர் போனன்கண்டா
டெற்குடையானூர்புகுந்தார் திரும்பிவரப்பெற்றூரிற் றிருத்தியுற்றுள். ()

கண்டவுடன் பலநாண்முன் பிரிந்துழன்ற கொடுமையெண்ணிக்
கலுழவில்லை, தெண்டனிட்டின் றனையிழந்து பின்காணத்தவமுமுன்செய்
திருந்தேனென்றுள், விண்டமொழி வினவியதான் மனமொருகூறுருக
லுற்று மெலிவுறுமற், றிருண்டதிகத் தவம்புரியச் செல்கின்றேன் றுணை
யாகின் சுதற்கொளென்றுன். (அ)

நின்றெய்வந்தனைநோக்கி நீதவஞ்செய்திடன்முறையே நின்னை
யன்றி, யென்றெய்வம்பிறிதிலையா லினிப்பிரிந்தாலிறந்தொழிவே னிது
மெய்யென்று, ளின்றென்பின்வருவாயே லேதேனும்பிழைசெயில்விட்
டிரிவேனென்று, னன்றென்றுதொடரலுற்று ளொருமூவர்களுந்தில்லை
நகரிற்சேர்ந்தார். (கூ)

சென்றவர்தாமிரசந்தருந்த நாணமுற்று விறகெடுத்துத் தினமும்விற்
றுக், குன்றலில்கேழ் வரகாதி யனவாங்கிப்பொதுத்தலத்திற் கூழே
செய்து, மன்றகத்தினடிப்பானைக் கருதிநிவேதனம்புரிந்து மாந்திச்சற்
றுங், கன்றலுறு மனத்தினரா யைந்தெழுத்தி னுருவேற்றிக் களித்து
வாழ்ந்தார். (கo)

தன்குரவன்சொன்னபடி சேந்தனடந்தானவன்சொற் றவறிடாம,
னன்குமனைவியுமகனு நடந்தார் மெய்த்தவம்பெருகி ஞானமீந்த், தென்
குறைதீரென்றிரப்பார் தமக்குமருள் சிவபெருமா னிவர்தம்மாட்சி, வன்
குணப் பொய்த்தவ ருணர்ந்து நாணமுறச் செயச்சிறிது மனங்கொண்
டானே. (கக)

அங்ஙாளிற்சோழனெரு நிமித்தத்தாணூறுகல வரிசியன்னம்
பைங்ஙாகப்பணியணிவான் சங்ஙதியிற்படைப்பித்தான் பனவர்கூடித்
தங்ஙாவான்மறைகூறித் தூபமிடத்துவக்குமுனச் சபையோர்கேட்கச்
செங்ஙாவாற்சேந்தன்கூ மெதுக்களிக்கின்றதெனுமொழி செப்பினனே.()

அதுவினவிச்சிலநேரம் பொறுத்துநிவேதனம்புரிய லசமென்றுற்
ரூர், மதுகையிடவனைத்தடிந்தா னிகர்சோழன்சேந்தனெங்கு வாழ்கின்
ரூனே, வெதுவனையன்னவற்காணு திடைவேனேகாணும்விதி யில்லேன்
ரூனே, சதுமுகனத்தகையனேயும் படைத்தானேவெனக்கவன்று தளர்ந்
தானன்மே. (கஉ)

அப்பூசைமுடித்தமுது முழுமையும்பங்கிட்டதற்பி னரசன்சேந்த,
னிப்பூவிற்றலமெதனி லிருந்தாலுமவற்றெரிந்தென் னிடஞ்சொல்வார்
க்கு, மெய்ப்பூணும்வியன்கலையு நிதிக்குவையு மளிப்பனென்ரூன் விருப்
பால்ன்னேன், செப்பூறுதவிர்மாற்ற மக்கணமூரவர்பலருந் தேர்ந்தா
ரம்மா. (கச)

யாவர்களு மூன்றுகட்டி விறகினனென் ரூற்றெரிவா ரிப்போதே
ரூர், தேவர்பிரா னெனமேலத் திசைச்சுங்கக் கணக்கினனுந் தெரிவா
ளுநுங், காவலனனையின் வழிமுக் காசவன்பாற் பெற்றெழுதுங் கடமை
யொன்ரூன், * மாவருளன்னவற் ரெடர்ந்து விளைந்தோடி யறிவனென
மன்பாற்சொன்னன். (கடு)

எப்பொழுதென் கண்காணச் செய்வாயென் றவனேவினு விடலு
நாளை, யிப்பொழுதி லெனவிவரத் துடன்மொழிந்தா னதுகுறித்தவ்
விறைவந்துற்ற, வப்பொழுதவ் வாச்சரியஞ் சகியாராய்ப் பலர்கூண்டா
ரானேய்ன்பான், முப்பொழுது முணர்சேந்தன் வழக்கம்போல் வரும்
போது முன்னலானன். (கசு)

எத்தனேநேரஞ் செலுமோ காசுபெற்று நமையனுப்ப விங்கோர்
நாளு, மித்தனேபே ரிவணீண்டக் கண்டிலமே மனையவளு மிளந்தைச்
சேயு, மத்தனேகூ முருந்தியவ ரெங்ஙனஞ்சோர் வடைவாரோ வந்தோ
வென்று, நித்தனே நாடியமனத்தோ டம்மூன்று சுமையினையு நிற்க
வைத்தான். (கள)

அத்தருணத்தக்கணக்க னவற்காட்டலாற்றுணிவுற் றரசனேடி, யுத்
தமசற்குருபரனேச் சீடர்தொழல்போற்பணிந்திட் டெய்ந்தேனென்ரூன்,
பித்தமிகுந்திட்டதுவோ வெனவாங்குளார்பலரும் பேசலுற்ரூர், பத்த
சிகாமணியான சேந்தன் வெருண்டாங் கொதுங்கிப் பகர்வதானன். ()

அன்னையெனப் பல்லுயிருந் காத்தருளுந் திருமாலங் கிசத்தனுநீ,
யென்னை வணங்கிடத் தகுமோ யானெடுநா ணின்றனையி னிடைப்பட்

* மா - இலக்குமி.

டெய்த்தேன், பின்னேயொரு பிழைப்பின்றி விறகெடுத்து விற்குமிடிப் பெருநோயுள்ளே, னுன்னேயுல கிகழுமன்றே வுசிதமிதன் றெனப்பலவா றுரைத்தானன்றே. (ககூ)

அவனுரை கேட்டச்சோழ னின்மகிமை யம்பலத்திலாடல்செய் யுஞ், சிவனுரையாற் றெரிந்துள்ளேன் பலர்சாட்சி நின்னுமஞ் சேந்தனன் றே, வுவகையுறத் தினந்தொறுங்கூ முவற்குநிவேதிப்பதின்றே வுரை செயென்றான், றவறுரைக்க மாட்டாதா னென்செய்வா னருணடித் தறி போனின்றான். (உ0)

இன்றுதொட்டெ னரண்மனேயி னீங்கள்வசித்திடவேண்டு மின்றே லுங்கட், கென்றுறையு ளமைக்கின்றே னன்றியுநீர் விரும்புவன வெல் லாஞ் செய்வே, னன்றுரைத்தென் பணியினேக்கைக் கொளவேண்டு மென்னுமன்ன ணுமெய்த, வொன்றுமுனதுபகார மெமக்காகாதெனத் துணிவுற் றுரைத்தானன்றே. (உக)

முன்னுளி லிருடியரு மரசருபகாரமிக முன்னிவாழ்ந்தார், பின்னு ளோத் தவசிகண்மன் னிடஞ் சேவிப்போர்களேயும் பேணக்கண்டே, மன் னனங்ஙனமுரைத்த வாச்சரியமாரறிவா ரரனேதேர்வான், பொன்னுசை யுள்ளமட்டும் புவியிலருட் பேராண்மை பொருந்திடாதே. (உஉ)

சேந்தனுரைத் திடுங்கொடுஞ்சொற் சகியாமற்செம்பியன்றன் சிந் தைநொந்து, போந்தவென்றெண்டத்தனீதிங் கினதாகிலினியரசு புரிய மாட்டே, னுந்தகத்தாலுயிர்விடுவே னென்றிடலுமதைமறுத்தி நாளுநா னிற், கீந்தசுங்கத்தீருவைக்கா சொருமூன்றுநின்கொடையாக் கெனச் சொன்னனே. (உங)

அவ்வளவாயினுமிசைந்தா னெனக்களிகூர்ந்தவ்வணமே யாக்கியப் பா, லெவ்வளவிவ்விறகுவிலே யெனவினவியுரைத்தாங்கே யீந்திட்டிடில், செவ்வழற்குன் றெனநடிப்பான் றிருக்கோயின் மடைப்பளியிற் சேர்ப்பி த்தென்று, மிவ்வணஞ்செய்வதிற்றவறேன் மின்னெனவங்கிருப்பவருக் கிசைத்திட்டானே. (உச)

ஐதவண்விட்டரசாட்சி மண்டபம்புக்கிருந்துமுர சறைவார்தம் மான், மெய்தழைக்குந் தவச்சேந்தன் மகிமையூர் முழுதறிய விளம்புவி த்தான், கைதவம்விட்டனேவோரு மவனுவகை குறித்தொழுகுங் கட மைதோய்ந்தார், பொய்தவிர்பே றடைந்தோரெப் பதத்துறினுஞ் சுகத் தினெடு புகழ்கொள்வாரே. (உடு)

அப்படிச்சின்னுள்கழியி லம்பலத்தினடம்புரிவா னருண்மேலீட்டா லொப்பரியதிருவுருவ முழுதினுங்கூம்மிகைதோய்வும் றெளிர்ந்தோர்கள் ளிப்பரிசிண்டியல்வதற்குக் காரணமச்சேந்தனென்றே யெண்ணியவ்வூர் மெய்ப்பனவரசனிட மறிவித்தார்பலர்தாமும் வியந்துபார்த்தார். ()

மன்னனிதென் னரசியற்கைக் கடங்கியதன் றெனைச்சொன்னுன் மறையோர்கூடி, யன்னவனேவரவழைத்திவ் வநாசாரநீவிளக்க லாமோ வென்ரு, ரென்னதுநெஞ்சகமறிய விதனிமித்தமியான்முயன்ற தில்லை யென்ரு, னின்னதருட்செயலாகி வினிக்குறிக்கும் விளையாட்டு மியற்று மென்று. (உஎ)

இம்மூர்த்திதனைத்தேரி லலங்கரித்துவைக்கின்றே மீர்ப்பாரின்றி
யெம்மூர்த்தியினுமேலென் றுலகறியத்தானேசூழ்ந் திடச்செய்வாயேன்
மெய்ம்மூர்த்தியாமறுபத் தொருமூவருடனுனையும் விளம்பச்செய்வேம்
பொய்ம்மூர்த்திபோன்றிருக்கிற் புன்மையுறத்தக்கதண்டம் புரிவேமென்ரூர்.

அதுவினவியம்பலவர் திருவுளப்பாங்கெத்தகைத்தோ வறியேனென்ரூன்
கதுமெனவாங்கதுசெய்திட்டார் கவித்தமிழாற்பல்லாண்டுகூறலுற்ரூன்
சதுமுகனேச்சிடமறைக ளாம்பரிகளீர்க்குமத்தேர் தானேபோன்று
பொதுநலந்தோய்புலியூரின் றெருநான்குஞ்சூழ்ந்துநிலை போந்ததம்மா.

அன்றுமுதற்பலருமவன் றனைச்சேந்தநாயனென்றே யறையலுற்ரூர்
குன்றுதொறாடமாடுங் குகன்மீதுஞ்சிலகவிகள் கூறியப்பான்
மன்றுடையார்பதம்புகுந்தான் மலைமகடன்பதத்திலவன் மனையாள்சேர்ந்தா
னன்றுணருமவர்புதல்வன் * ஞாங்கர்புனைவேள்பதத்தி னண்ணினனனே.

செந்தமிழ்ப்பே ரிலக்கியமாந் திவாகரஞ்செய் ததுமிவனுச் சிலர் சொல்கின்ரு, ரந்தநூலுரைத்தவன்வே ரொருவனெனைச் சிற்சிலபேர றைகின்ரூர்க, ளெந்தவிதமானலும் பெயரொன்றே யெனற்கையமில்லை யில்லை, யிந்தவழக்கினதுண்மை யெழிற்றவள மலர்வாணியியம்புவாளே.

சிரியபட்டினத்தடிக ளுபதேசம் பற்றியுய்ந்த சேந்தநாயன்
பேரியற்கைச்சரிதமொரு வாறுரைத்திட்டேனினி யூர்ப்பெற்றமேய்க்குங்
காரியற்கைப்பொதுவனுடற் புகுந்தவற்றைப் புரந்துமுயர்கருணைகாட்டு
மேரியற்கைத்திருமூலர் சரிதமுணர்ந்தள விலுரைத்திடவேன்மாதோ.

சேந்தநாயனர்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ருடுஉ.

---

* ஞாங்கர் - வேல்.

ஏழாவது

திருமூலநாயனார் சருக்கம்.

ஆதியாந்திரு மூலனே வவன்பெரு மாபி
னீதியால்வரு மொருவனே வறிகிலே னிலத்தி
லேதினுமுமற் றெல்குறு மெழினலம் படைத்துத்
தீதில்சீர்பெறு சோழநா டதனிடைச் சென்றான். (க)

சென்றவன்றிருவாவடு துறையினுக்கருகிற்
குன்றலில்லதாம்பசுத்திரண் மேய்க்குமோர்கோன்றான்
பொன்றலெய்தியோர் புதரிடைவீழ்ந்ததாலாக்கள்
கன்றலுற்றவற்சூழ்ந்திரங் கிடுவதைக்கண்டான். (உ)

தன்னுடம்பினையொருவயின் மறைத்ததனிடைப்புக்
கின்னுரைத்தொனியுடனெழுந் தவற்றினையீட்டித்
துன்னுமத்திரள்போம்வழி தொடர்ந்துபோய்நகரி
லுன்னுகன்றினமுறுமனை தொறும்புகவுய்த்து. (கூ)

மாறித்தன்னுடல்குறித்தவண் போயினன்வைத்த
தூறிற்காண்கிலனென்செய்வான் மனமிகச்சோர்ந்தா
னூறில்சித்திகளியாவுமெய் தினர்களுமுலகொத்
தீறிலானருட்செயலினை வென்றிடலரிதே. (ச)

அந்தவூரினிற்போயறச் சாலையிலணையு
மைந்தர்தங்களிலொருவனு மெனும்படிவசித்தா
னந்தகோபனல் லினத்தராமவனுடனசையோர்
முந்தவந்தனரூரவர் களும்பலர்மொய்த்தார். (டு)

பெண்டுபிள்ளைகளாதிய சிலரையும்பிறராக்
கண்டுளன்பிலனுச்சில கைக்குறிகாட்டி
யண்டுறேன்மினென் றகற்றினன்பித்தமிஞ்சியதா
விண்டுபோயின னென்செய்வார்முற்றிலும்வெறுத்தார். (சு)

திருவருட்பெருஞ் சிறப்புடைச்சித்தனுட்புகுந்த
பெருமையாலுடம்பளர்ச்சிபோய்த் தவத்தொளிபிறங்கும்
றிருமையுங்குறித்துழைப்பவர் பலருமீண்டிவனை
ரருமைமாதவனேயெனத் தொழுதலாயினரே. (எ)

சிகைவெண்கோவண நீறுகல்லாடையாதியவாம்
வகைமுற்றேய்தலி னன்றுதானிழந்தவாறுடலின்
றகைமைவாய்த்தது தவசிகாமணியெனத்தழைக்குந்
திகையிலுள்ளவ ரியாவரும்புகழ்தாத்திகழ்ந்தான். (அ)

விரசைமாநதிக்கப்புறத் * தயமுகன்விழையு
மரசையேநிகர்மாநிழ லொன்றிடையமர்ந்து
பரசைமாலெனுபரித்தவன் றிருவடிப்பதுமஞ்
சிரசைக்கண்களேச்சிந்தையைத் தொடத்தவஞ்செய்தான். (கூ)

மூந்துநாளிலெண்ணுயிர மாதியமுதுநூ
றந்துளானிவன்றனெனைத் தமிழ்வலாருணர
† வந்துகாப்பவர்க்காத்திரு மந்திரமொவ்வொன்
றுந்துசீரினதாநுவன் றனெனுமுலகே. (கo)

வருடமொன்றினுக் கொருவிசைமலர்விழிதிறக்கும்
பொருவினிட்டைமூ வாயிரந்தரமவன்புரிந்து
தருவதாகுமத் தொகைக்கவியுளதனிப்பனுவ
லொருவொணத்துணை யெனப்பெருஞ்சைவர்வைத்துள்ளார். (கக)

அந்தநூலிடை யருமறையாகமசாரப்
பந்தமுத்திமாத் திரஞ்சொலவில்லைபல்விதமா
மெந்தவித்தையுஞ் சித்தியும்புத்தியுமியம்பு
மந்தபக்குவத் தினர்க்கதன்மகிமைதோன்றுதே. (கஉ)

கௌவைவாரிதியேழுடித் தவிர்தருகவின்றோ
யிவ்வையத்திடை யெண்ணில்பன்னூலிருந்தாலுங்
கொவ்வைவாய்க்கலே மடந்தையங்கிசமெனக்குலவு
மெளவைபாடலிற் பகர்ந்தவாமவற்றுளஃதொன்றே. (கஙு)

எங்கணுயகனெனப்பல சித்தர்களியம்பச்
செங்கணுயகன்போற்புரந் தவிர்திருமூலற்
கொங்கணுதியகுரவர்தங் குரவர்தாங்கூடித்
தங்கணுதனென்றிறைஞ்சிடல் சத்தியந்தானே. (கச)

ஆலமுண்டவன்றனக்கிணை யெனுமகத்தியனேப்
போலமேம்படுபுனிதனு ரெனிற்பலபொருப்பிற்
சாலவுற்றுளசித்தரா தியபெருந்தவத்தோர்
மூலனேயெனப்பகர்தன்முக் காலுமெய்ம்மொழியே. (கரு)

பரவைசூழ்தருபார்மிசை யருணெறிபற்றிக்
குரவனேதுணையென்னநன் குணர்தருகுழாத்தோர்
மரபிரண்டலாற்பிறிதிலே யவற்றுளோர்வகைபோற்
றரசன்மூலனேயென்னவன் னவர்முழுதறிவார். (கசு)

நான்வணங்குதறகாதரை யாமெனநவின்றோன்
றான்வகுத்துளபாடலு மரபினேச்சாற்றும்
வான்வழிச்செலன் முதலியபயன்பெறவாஞ்சித்
தான்வரந்தெரிந்தடங்குர தனேயெள்ளாரே. (கஎ)

---

* அயமுகன் - அயக்ரீவர் - அதாவது விட்டுணுவின் மூர்த்தபேதத் தொன்று.

† வந்து - பிராணவாயு.

அந்தமூலர்முன்றில்லையி லோருடலமைத்தார்
பைந்தண்டாருகாவனத்திலோர் மேனியைப்பதித்தார்
நொந்தவானினமுய்யவொன் றிகந்தனர்நுவலு
மிந்தயாக்கையையென்செய்துள் ளார்கொலோவறியேன். (கஅ)

மூலையில்வைத்தனரெனச்சிலர் சொல்லினர்வந்த
நிலையிற்சேர்த்தனரென்றனர் சிற்சிலர்நீங்கா
தலைவற்றுற்றதாம்பொதுத்தகைத் தெனச்சிலரறைந்தார்
கலைகற்றுன்றமெய்யருளடைந் தவரையார்கணிப்பார். (கக)

புதரில்வைத்திழந்திட்டதோர் மேனியும்பொன்னூர்ச்
சதமகன்புனைவார்திரு டுபுகொளுந்தகைத்தே
யதனையம்முனியறிகிலா னென்னநானறையேன்
மதனற்போற்றுநருடலென மாய்வதன்றன்றே. (உ)

ஈடில்சீர்த்திருமூலர்தஞ் சரித்திரமியாவும்
பாடிடுந்திறமெனக்கிலை யிங்ஙனம்பகர்ந்தேன்
பீடிலங்கியகாரைக்கா லம்மையார்பெருஞ்சீர்
நாடியாய்ந்தளவுரைத்திடத் துணிந்தனனனியே. (உக)

திருமூலநாயனார்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ஈஎஉ.

எட்டாவது

காரைக்காலம்மையார்சருக்கம்.

சோழநாட்டிற் றுலங்கெழிற்காரைக்கால்
வாழவந்த வணிகர்பல்லோருளோர்
வேழமன்னவன் வேட்டதொர்மெல்லிய
லாழநெஞ்சின ளன்பின்மிக்காளரோ. (க)

காவில்கற்பொடு காமருங்காமநூல்
பரவத்தக்க பருவமுமெய்தியு
மானடித்தொழும் பாளர்தந்தொண்டுசெய்
விரதமொன்று மிகமுயன்றுற்றனள். (உ)

அன்னள்கேள்வ னவளொடுதானுமே
தின்னல்வேட்டொர் தினத்திருமாங்கனி
தன்னதாள்வசந் தன்னிலனுப்பினன்
பின்னமில்லவள் பேணிவைத்திட்டபின். (ஊ)

அன்னமாதிய வட்டெதிர்நோக்கினு
ளென்னகாரண மோவவனெய்திலான்
பன்னகாபர ணன்பதம்பற்றுமோர்
நன்னர்யோகிவந் தார்நைக்கோலமாய்.. (எ)

வந்தவர்க்கமு தோடொருமாங்கனி
யந்தவேளை யறந்தவறுதிட்டாண்
முந்தவுண்டு முனிவரர்போயபின்
பைந்தகைத்தண் பரிகலமானதை. (கூ)

தெருவிலிட்டனள் செட்டிகண்ணுற்றுவந்
தொருவன்வேறுள னேவெனுமையமுற்
றருவருப்புட னன்னமுண்டானது
புருடரிற்பல பேர்கொளும்புன்மையே. (சு)

யாருக்கிட்டனை யென்றவன்கேட்டிலா
னேருமாற்றை யவளுநிகழ்த்திலா
ளாருமோர்கனி யன்றிமற்றொன்றின்போக்
கோருமாறு கொணர்கெனவோதினன். (எ)

அந்தவேளையி லாயினுமம்முனி
வந்தருந்திய வாற்றினைச்சொல்லாஞ்
சிந்தனைக்கலப் பில்லளிற்செப்பிலா
ளிந்தநீர்மைபல் லேந்திழையாரதே. (அ)

அத்தகைக்கனி யாமவ்விரண்டுமுன்
வைத்ததார்குமொர் மட்கலமுன்புபோய்
நித்தன்றன்னை நினைத்துக்கைகூட்டியுள்
ளுய்த்தபோதங் கொருகனியெய்திற்றே. (கூ)

அதனையக்கண மந்தவணிகனு
மதனலீலை மணாளனுக்கிட்டனள்
புதமுதன்னவஃ துண்கையிற்பூவைபா
லிதன்மெய்சொல்லென் றிதமிகக்கூறினன். (கo)

நடந்தவண்ண நவின்றனளின்னமக்
கடந்தனூடொர் கனிவரச்செய்கென்று
னிடந்தனிற்பெ ணிசைத்தவற்போற்றியாங்
குடன்பெற்றீந்தன ளச்சமிக்கோடினன். (கக)

வே று.

ஓடியற்றையே சிலபொருட்கிழியுட னுததி * காவாயேறிக்
கேடில்பாண்டிநாட் டிறங்கியாங்கினத்தொரு கிளிமொழிமடவாளைப்
பீடியன்றிட மணந்திருந்தெழின்மிகப் பிறங்கொர்பெண் மகவீன்று
நாடினும்பயந் தருமுதன்மனைவித னற்பெயரிட்டானே. (கஉ)

முந்துசீர்மனை யாம்புனிதவதியம் முறைமுழுமையுங்கேட்டு
நொந்துசிற்சிலர் தம்மொடாங்குற்றது நுவன்றனுப்பினளன்னேன்
வந்துபின்மனை யொடுமகவொடுமவண் மலரடிபணிந்தேத்தி
யிந்துசேகர னருள்பெறுமுனையினி யான்றொடேனென்றனே. (கஊ)

* காவாய் - மரக்கலம்.

என்றவாசகங் கேட்டலுநின்பொருட் டில்வுடற்கிக்கோலங்
தன்றவைத்திருந் தனனினித்தகாதெனச் சொல்லியன்னவன்காண
வன்றருட்கனி யிரண்டளித்தவர்திரு வருளாடினளாங்கே
வன்றகைப்பெரும் பேயுருவளித்தனர் மனிதரஞ்சினர்மன்னே. (கச)

அக்கணத்தினி லருந்தமிழ்ப்புலமையு மருள்வழியளித்திட்டார்
மிக்கசீர்ப்பதி கங்களந்தாதிகள் வேண்டியபடிபாடித்
தக்ககாரைக்காற் பேயெனுமுத்திரை தானும்வைத்தனள்யார்க்கு
முக்கணுதனைக் கருதிலெய்தரும்பயன் மூவுலகினுமின்றே. (கடு)

பேயுருப்பெற லான்முதுகாட்டையே பெரிதுபோற்றினளம்மை
யாயுமுத்தமிழ்ப் புலவருமுலகரு மச்சமிக்குறலுன்னி
யேயுமித்தொழில் செயவலார்மூவர்பி னிலங்குவரிம்மட்டு
நீயுரைத்தது போதுமென்றரன்பத நீழலில்வைத்தானே. (கசு)

முந்திவந்தவ ரரன்கொலோவலதவர் முண்டகப்பதம்பேணி
யந்தியும்பகற் பொழுதினும்வழிபடு மடியரோவறிகில்லே
னிந்திராதியர் தமக்குமெய்தருங்கனி யிரண்டவள்பெறுமாட்சி
தந்தியம்வன் சரபநேர்புலமைதோய் தவத்தரோர்தரற்பாற்றே. (களு)

அம்மையென்றர னழைக்குமாண் படைந்ததோ ரரிவைதன்சரிதத்திற்
செம்மையாவினு வியவனவினிற்சொலித் தீர்த்தன னினித்தீரா
மெய்ம்மைஞானமெய் தியபுகழ்ச்சேரமான் வியனரு ட்சரிதத்தி
லிம்மையோர்பலர் சொல்லிடக்கேட்டமட் டிசைத்திட நினைத்தேனே.

காரைக்காலம்மையார்சருக்க முற்றிற்று.

ஆடு திருவிருத்தம் - ஈகூக.

ஒன்பதாவது
சேரமான்பெருமாணாயனார் சருக்கம்.

ஆதியும்பகவனு மளித்தமக்களி
னீதிவேந்தாகியே நிலவுஞ்சேரமான்
பாதிவான்மதியுனே பவளவார்சடைச்
சோதிதன்னடியவர் தொழும்பிற்சோர்விலான். (க)

உலரின்மட்சுமையெதிர் தருமத்தேகலிற்
றவளநீற்றணிபெறு தனிவண்ணன்றனைச்
சிவனடியாரெனத் தெண்டனிட்டன
னிவனெனப்பார்முழு தியம்பலுண்டரோ. (உ)

ஆவினன்குடிவள ராயிற்கைவானவன்
கோவிலுமதில்களுங் கோபுரங்களு
*மூவிதத்தியற்றுபு முற்றக்கண்டனன்
முயில்சீர்க்கேரளத் தலைமையெய்தலால். (கூ)

அன்னவன்சைவனென் றறைகுவார்பலர்
பன்னகாதிபப்பெரும் பாயலிற்றுயின்
றின்னநீர்ந்துலகமும் றேத்தக்காப்பவன்
றன்னடியவனெனச் சாற்றுவார்சிலர். (சு)

நிசபரமாமொரு நிமலற்போற்றியெட்
பிசகுமுறுநெறி பேணிநான்முகக்
குசவனுர்சிருட்டியிற் குலவும்பல்லுயிர்
வசனமுந்தெரிதரு மாட்சிமேவினன். (நி)

மதுரையிற்பரமர்தம் மாட்டியாழ்பயில்
சதுரனும்பாணனுட் சலனந்தீர்தரக்
கதுமெனவனைதரு கவிதையொன்றுபெற்
றதுமுதலவன்கலி யனேத்துமோவினன். (சுரு)

அண்டர்நாயகன்றிரு வருளினுற்றிருத்
தொண்டர்தந்தொகைத்துதி சொன்னசுந்தரன்
றண்டமிழ்ச்சுவைதெரி தகவிற்றனுமோர்
வண்டமிழ்க்கவிஞனும் வாழ்வும்வாய்ந்தனன் (எ)

பரிப்பெருக்கினைப்புழைப் பாழியங்கைமால்
கரிக்குலத்தினைப்பல கவின்செய்தேர்களை
யரித்திரளனையகா லாளையீண்டியான்
விரிப்பினுங்கேட்பவர் மிகவுள்ளார்களே. (அ)

இராகவன்றருமனே ரியற்கையோனெனத்
தராதலம்போற்றிடத் தனிச்செங்கோலுகைத்
தராவணிவான்றிரு வருளோடுவார்
பராவுதற்கா† முலாப் பனுவல்பாடினன். (கூ)

பாடியதமிழ்ப்பிர பந்தந்தன்னையிந்
நாடினிதுணர்ந்திட நவின்றிடாதுவிண்
ணூடிடபஞ்செல வுகைக்கின்றேன்மலை
மோடியலவையிடை மொழிதன்முன்னினன். (கo)

---

* மூவிதம் - சாமம், பேதம், தானம். ஆகிய மூன்று. சான்காவதாகிய
ண்டம் வேண்டலில்லையாயிற் றென்றபடி.

† உலா - திருக்கைலாய ஞானவுலா.

முன்னியவாறருண் முடிக்கினன்றெனும்
வன்னினேப்பேமிக மருவப்பெற்றனன்
பன்னிருசமயமும் பரவத்தக்கதாத்
தென்னிலத்தரசுசெய் சேரமானரோ. (கக)

இரவலர்க்கன்னேயா யெதிர்த்துப்போர்பொருங்
கரவினர்க்கியமனுய்க் காணுங்காட்சியான்
நரமறிந்துரைசெயிற் சரதசைவசற்
குரவரிலொருவனுக் குலவத்தக்கவன். (கஉ)

விற்கொடிச்சேரலன் விரும்புநாட்டிடைப்
பொற்கொடியனேயவர் போதவின்புறன்
முற்கொடிவ்வுலகினர் முழுதுந்தேர்தர
மற்கொடியானுவலினு மலியும்பாடலே. (கங)

தூயமால்களிற்றில்வன் றெண்டன்போம்பொழு
தேயவோரிவுளியிலிவனுஞ் சேர்ந்துடன்
போயரன்கயிலேயிற் புதியபாடல்சொற்
றுயபின்சாத்தனு ரகிலத்துய்த்தனர். (கச)

அரியபொன்வண்ணத்தந் தாதியாதியாம்
பிரியநூலெத்தனே பேசினுன்கொலோ
தெரியகிற்கிலமவன் சிந்தைதன்னிடை
கரியதள்போர்த்துறுங் கடவுளோர்வனே. (கஞ)

இவ்வுலகத்தினி லெடுத்தயாக்கையு
மவ்வுலகத்தின றிவுந்தோய்ந்தருட்
செவ்வுருவத்தரன் சிலம்பில்வாழ்கதி
யொவ்வுதலின்றியே யுயர்ச்சியுற்றதே. (கசு)

கொற்றவர்துணிந்துவெங் கோனடாத்திடு
மற்றமெய்திடுந்தொறு மறிஞராமவர்
நற்றகைச்சேரனே நாடிநீயிவ
ணுற்றறம்புரத்தியென் றேதலுண்டரோ. (கஎ)

திரும்லிகேரளத் தரசர்செல்லுநா
ளருகிருந்துரிமையேற் பவர்கடம்மிடம்
பொருவில்சீர்க்கயிலேயிற் போனசேரமான்
வரும்வரையெனச்சொலும் வழக்கம்வாய்ந்ததே. (கஅ)

நல்வரத்தினர்புகழ் ஞானச்சேரமான்
செல்வதுகயிலேயோ திருவைகுந்தமோ
வொல்வதெங்கடவுளூர்க் கென்றென்றுள்ளவாம்
பல்வகைச்சமயரும் பகர்கின்றூர்களே. (கசு)

சைவமும்வயினவந் தானுமற்றுள
பொய்வழிமெய்வழிச் சமயப்பொங்கழுங்
தெய்வமொன்றினைத் தொழுமென்னுந்தெள்ளிமை
கைவலிச்சேரர்கோன் கதியுணர்த்துமே. (உ0)

சேரர்கோன்சரித்திரந் தெரிந்தமட்டினிற்
பாரகத்தொலிதரப் பகர்ந்திட்டேமினித்
தாரணிபோற்றிய தமிழ்நக்கீரர்தஞ்
சீரருட்பெருந்திறஞ் சிறிதுசெப்புவாம். (உக)

சேரமான்பெருமாணயனார்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - சகஉ.

பத்தாவது.

நக்கீரதேவர்சருக்கம்.

முத்தியடைந்திட்டானென் றுலகினிற்பற்பலர்தாழு மொழியவுண்மைப்
பத்திசெய்தோனெருவனலைப் பரவைசார்நெய்தலிலோர் பரவனில்லிற்
புத்தியுடைச்சேயானன் பாலப்பனெனநாமம் பூணையப்பெற்றான்
சத்திநிபாதம்பதிந்த நிமித்தத்தாற்குலமுறையிற் றடைப்பட்டில்லான்.

சங்கங்கையாலறுத்துச் சீர்படுத்திவிற்றுண்பான் றன்சேயாயு
மங்கந்தழ்தொழின்முயலச் சம்மதியாதருந்தமிழ்தேர்ந் தறிஞனெகித்
துங்கஞ்சேர்துறவறமும் பூண்டுமதுராபுரியிற் சொக்கரன்பாற்
சிங்கங்களெனக்குலவு கடைச்சங்கப்புலவர்நடுச் சேர்ந்தானன்றே. (உ)

தந்தைசெயுந் தொழிற்றுணையுந் தான்முயல்கைக் காந்துணையுஞ் சங்கமான, விந்தைபெறுவான் பெயர்முற் பொருள்பெறவே கீரனென விளம்பினுர்பின், சிந்தைவலியுந்தெளிவுந் திகழ்தலினக் கீரனென்றுஞ் செப்பலுற்றுர், நந்தையணி செவிப்பெருமான் றிருவுளப்பாங்கறிந் தொ ருவர் நவிலொண்ணுதே. (ஊ)

வல்லாண்மைபெறுங்கீர னெருபொருளையொப்புவனேல் வாழுஞ்சங்கத் தெல்லாருமொப்பியது தானெனுமோர்பெரும்புகழு மிசையப்பெற்றான் சொல்லாமலபிநயத்தாற் கலகந்தீர்த்திடும்வணிகச் சுதனுமன்னோற் பொல்லானென்றிகழாமற் களிகூரத்தகுநலமே புரிந்தான்மன்னோ. (எ)

அவ்வணிகமகன்வரலு மரன்றருமிக்கருளியபாட் டதனையின்னோ னிவ்வகிலவறியவிகழ்ந் தெதிரவன்றேற்றியுஞ்சிறிது மிசையாவாற்று லெவ்வமிகத்தளர்ந்ததுவுங் குறுமுனியாலிலக்கணந்தேர்ந் திலங்கும்வீறு கௌவலந்தீவதன்முகம்போன்றவிர்*மதுரைப்புராணநன்குவிலுமாதோ.

---

* மதுரைப்புராணம் - திருவிளையாடற்புராணம்.

சிவன்கொடுத்தசாபத்தாற் கடைச்சங்கமிடைக்காட்டுச் சித்தனுலு
மவந்தவிர்மாதவப்பயனே வடிவாகிவிளையாடு மௌவையாலு
நவம்பொலிதெய்வப்புலமை பெற்றதிருவள்ளுவப்பேர் நாயனுலு
நிவந்தபுகழிழந்தழிந்த பின்னந்தப்புலவரெலா நிலத்திற்சூழ்ந்தார். (சு)

ஆயவரிற்றலையாய நக்கீரன்ருனுமவ்வா றலையலுற்ருன்
றூயகயிலையுங்காளத் தியுங்கலந்தோர்துதிப்பனுவல் சொல்லிப்பின்னு
மேயதமிழ்ப்பிரபந்தம் பலபாடிச்சிவதலந்தோ றினிதுசூழ்ந்தான்
வேயனையதோளிபங்க னடியவர்க்கெங்கிருந்தாலு மேன்மைதானே. ()

அந்நாளிற்றமிழறியும் பெருமாளென்றெருமாதிவ் வகிலத்துண்டாய்ச்
செந்நாவலோர்பலரு நடுநடுங்கவிறுமாப்புச் செலுத்திவாழ்ந்தாள்
கைந்நாகம்புரைசங்கப் புலவர்முதலோரவளைக் கணிக்கவில்லை
மெய்ந்நாணந்தவிர்ந்தாள்போன் றெருதினஞ்சின்மகளிரொடு வீதிவந்தாள். (அ)

அங்குவிறகுத்தலைய னொருவனதைச்சுவர்சார்த்தி யயர்ச்சிமீறிக்
கங்குல்பகன்மறந்துவா யீயிரிப்பக்கலேசோரக் கண்ணிற்பீளை
பொங்குறத்தூங்குபுழிக்கும் போதவடன்புறங்காலாற் புழுதிமேலிட்
டிங்குகிடந்திதுமோர் புருடசென்மமோவெனமிக்கிகழ்ந்துபோனுள்.

அக்கணமேயவனந்த விறகுமறந்தவனுகி யகிலத்தூடு
புக்கவடன்னிலைமைமுழு மையும்விசாரித்தறிந்து புலமைச்சீரின்
மிக்கவனக்கீரனெனும் விதமுமவ்வாறுணர்ந்தவன்பான் மேவிக்கீழ்வீழ்ந்
திக்கடையேன்றனைப்புரப்ப தன்கடன்கைவிடிலுயிர்விட் டிடுவேனென்ருன். (க0)

என்றபோதருட்கீர னேன்றநலஞ்செய்வனெழுந் திருவென்றேதிக்
குன்றவார்சிலையானை நினைந்துவெண்ணீ றளித்தவன்வாய்க் குறையெல்லாங்கேட்
டென்றனுதாசைமுடி வுறச்செய்வேனெனத்தேற்றி யுலகிலியார்க்கு
நன்றதாம்விதியிவற்கு வந்ததுபோல்வரலரிதிந் நாளென்றெண்ணி. ()

வத்திராபரணமுத லியகோலநன்கமையும் வகைசெய்தப்பாற்
சத்தியோர்பாகமுளா னைந்தெழுத்துஞ்செவியினிடைச் சாற்றிக்கல்வி .
யுத்தியாதியதோன்ற வுண்டபரிகலசேட முதவியாண்டு
பத்தியாலவன்செய்வழி பாடுமொருசிற்சிலநாள் பரிந்துகொண்டான். ()

ஒருதினத்திற்கீரனவன் றன்னுடனம்மகண்மனையி லுற்ருனன்னு,
ளருமையுடனடிபணிந்து தேவரீர்வருகிமித்த மறிகின்றில்லேன், மருவ
வெனைவிரும்புமிளம் புலவரநேகரைச்சயித்து வயங்காகின்றேன், பொரு
விலுமைக்கண்டதனு லினிநீர்சொல்லிலெறியிற்புகுவேனென்ருள். ()

அன்னவர்தம்பெருமையறி யாதவர்தம்மொடும்வாதிட் டனனென் றேசில், சின்னமதியோர்புகல்வார் தவவேடமிழந்ததனைச் சேர்வாரல்ல, சென்னவறிவாளதன்றி யாலவாய்ச்சிவன்சங்கத் தியம்போர்பாட்டான், முன்னடந்தகதைமுழுதும் பலராலுங்கேட்டிமுளாண் மூடியன்றே. ()

அவளுரைத்தபாடல்களுஞ் சிற்சிலவிப்பூதலத்தி லவிர்வதுண்டுண்
டெவளவுபாவலர்களேயோ வெதிர்த்தடக்கியவமதித்த வியற்பாவல்லி
தவமொகல்வியும்பொலியுங் தீரனேக்காண்டலும்வணங்கித் தாழ்ந்தமேன்மை
சிவனுணர்வான்முழுப்புலமை யினருணர்வார்சிறியவர்க டேராரன்றே.

அந்தமட்டினக்கீர னளிசூர்ந்தக்கொடியிடைபா லம்மேயுன்றன்
செந்தகைமேனிப்பருவங் தனைவீணிற்கழியேனிற் செயிப்பார்வேறின்
றிந்தமகனென்சிட னிவன்றனையேற்றறந்தவறு திருந்துவாழ்தி
சிந்தனையிலையமுற்று லேதேனுமவனைவினைப்பத் தெளிதியென்றான்.(கசு)

விண்டமொழிகுறித்தவனை நோக்கியெழிலிளமைகுன்று மேனிச்
சீரு, மொண்டகையவுடைநடையா தியுமியல்பாத்தோன்றுதலு முண
ர்ச்சியோர்வான், வெண்டளையில் வியப்பியாதென் றனளைசான்கினைச்
சிலகான் மேலோர்மூன்றுக், கொண்டறைதலெனச்சொன்ன னுடனி
ணங்கிச்சிறிதுமுகங் கோட்டிநின்றாள். (கள)

இளைத்தழகுகுன்றியவ ருணவுடையாற்சீர்பெறற்கு மியாதுந்தேரா,
துளைத்தமனச் சிறியவர்தாம் பெரியரைச்சேர்ந்திடின்முழுது முணர்ந்
தோங் கற்குந், தினைத்தபுகழ்நக்கீரன் றன்சிடனெருசான்றுய்த் திகழ்வுற்
றந்த, வளைத்தடங்கைத் தமிழறியும் பெருமாளாம் வனிதையினை மணந்
தானன்றே. (கஅ)

அவ்விருவர்களுமுதலு ளமளிமிசையுறும்போதே யவனப்பெண்
பா, லிவ்விதநீ செயத்தெருவிற் கிடந்தவிறகுத் தலைய னியானேயென்
றான், மைவிழிப்பாவையையனையா ளருட்செயலை நினைத்துமனம் வருந்
திநாணி, யெவ்விதக்குற் றஞ்செயினும் பொறுப்பதினி நின்கடனென்
றிறைஞ்சித் தாழ்ந்தாள். (கக)

அத்தகைய பேருணர்ச்சி யறிந்தனங்க வேளனையா னணங்கன்னுள்
பாற், சித்தம்வருந்தேலுனது சீறடிமென்றுகளெனது சிரத்தில்வாய்
திட், டெத்தனையோ விதத்துயரும் விலக்கியிகசாதனமுற் றீந்ததியான்
செய், மெய்த்தவப்பேறேநீயென் றுரைத்தவணைஞ்சுருகவின்பம் விளை
த்திட்டானே. (உ0)

அன்னவர்க்காசீர்வதித்திட் டவிர்புகழ்நக்கீரமுனி யகன்றுபோனான்
பின்னவர்தாங்கல்வியின்பங் கலவியின்பத்துடனையின்றூர் பிச்சையேற்கு
நன்னலச்சீரெளவையொரு நாளவர்தம்மனையில்வந்தா னன்குபோற்றிப்
பொன்னடியின்முடிபுனைந்திட் டுபசரித்தாரவளவர்பாற் புகல்வதானாள்.

ஓரரசன் மகன்கல்வி சிறிதுமிலான் யௌவனத்தோ டுடைபூண் வா
ய்ந்து, மாரனெனத் திகழ்கின்றான் கற்கினன்றி யரசுதவ மாட்டே னென்
னுந், தீரகுணத் தந்தைசொல்லாற் றேசாந்தரம்போனான் செலுமோ
ரூர்க்கோன், சீரருமை மகள்குளிக்கு நீரோடு மோடையொன்று திகழக்
கண்டான். (உஉ)

அப்புனலாற் பலர்வாசந் தம்முடற் கூட்டிடுதலும் பார்த் தாலோ சித்திட், டிப்புனலா சோமுழுகி விட்டதென்றேர்ந் ததைத்தாண்டி யேகலுற்றான், மைப்புயல்போலுங் குழலவ் வனிதைதன்மா ளிகையிருந் தவ் வாற்றை நோக்கி, யிப்புருடன் றனையின்றே யினிதணைய வேண்டு மெனு மெண்ணங் கொண்டு. (உக)

தோழிகையி லொருசீட்டுத் துணிந்தெழுதிக் கொடுத்துவிட்டா டொடர்ந்திங் திட்டாள்,பாழிமதக் களிறனையா னதைப்படிக்குங் திறமில தோர் பள்ளிக் கூடத், தாழிதயத் தொடுகருங்குட் டமுந்தோயு மொரு வனிட மளித்தா னன்னேன், வீழிதயத் தவள்விருப்போ டன்றிரவில் வருந்தலமும் விளங்கத் தேர்ந்து. (உச)

குற்றமெது செய்தனையோ விக்கணமே மற்றேரூர் குறுகில் வாழ் வாய், நிற்றடிதற் குறித்துளதென் றலுமணநீர் தாண்டியதை நினைத்துப் போனு, னற்றமது தொட்டுமற்றேன் முழுகிமணத் திரவியத்தோ டா டைபூண்டு, கற்றனிமண் டபமாமத் தலத்திருளி லவள்வரவு கருதியுற் றான். (உடு)

அவ்வணமக் கொடியாங்குற் றனங்கவேள் சமர்க்காற்று தணைந்த பின்ன, ரெவ்வகையா லோவிவனப் புருடனல னெனத்தேறி யார்நீயென் றுள்,கைவ்வயிற்சீட் டெய்தன்முத னடந்தவித மத்தனையுங் கழறினனப், பெய்வளையக் கணமுயிர்விட் டத்தலத்தி லொருகொடும்பெண் பேயா கின்றுள். (உசு)

அங்குவரு வார்பலரை யெற்றெற் றென்றப்பேய்தா னழித்த தியா ன் போய்த், தங்குமிரா வினிற்சாமந் தோறுமென்பால் வந்தேர்நூற் றமிழ்ப்பாக் கேட்டுப், பொங்குதுயர் தீர்ந்துய்ந்த தவ்வுயிரும் வெருண் டோடிப் போனன் றுணு, மிங்குறுநீ ரிருவருமாப் பிறந்துள்ளீர் பழ வினைதா னேய்ந்த தென்றுள். (உஎ)

அவ்வுரைகேட் டெளவையினைப் பணிந்துமிக வுபசரித்தா ரருள் செய்தன்னு, ளிவ்வுலகிற்பினும் விளையாட் டியற்றிடவேண்டியதலந்தோ றேகலுற்றுள், வெளவுமிரு வருமுதலிற் கொளும்விகற்ப சேடமும் போய் மகிழ்ந்து வாழ்ந்தார், நவ்வுடையான் மனையருள்சேர் நக்கீரன்றல ங்கடொறு நண்ணிச் சூழ்ந்தான். (உஅ)

வே று.

சிவதலந்தொறுஞ் சென்றுதினந்தினந்
தவமுடிக்குந் தகவுடைக்கீரனுள்
ளுவகையாற்பல் கனுவிலொளிர்ந்தனன்
குவடுதோறுங் குலாவுங்குமரனே. (உசு)

வந்துவந்து வயங்கியற்பாக்கொடென்
னுந்துசீர்த்தி யுரையெனக்கேட்டலு
மிந்துசேகர னேப்புகழியானுனே
மைந்துளாயென வாழ்த்தல்செய்யேனென்றான். (கூ0)

அன்னகாலத் தரன்றிருப்பூசையிற்
பின்னநெஞ்சமுற் றோரையெல்லாம்பிடித்
தின்னலின்றிவைத் தாயிராயபின்
றின்னவல்லதொர் பூதந்திரிந்ததே. (கூக)

அதனைச்சிற்சில ராணைனச்சொல்லுவார்
மதனைவென்றவர் வாழருணைக்கணேர்
புதனில்வாழ்ந்த புலவன்பெண்பேயென்று
மிதமின்மாமுக மேய்ந்ததென்றுஞ்சொனான். (கூஉ)

பருவதம்புரை பாரவுடம்பினஃ
தொருவனத்தொகைக் கின்மையிலுள்ளுடைந்
திருநிலத்தினி லீசனைப்பூசிப்பார்
மருவுதானந் தொறுஞ்சென்றுமாழ்கிற்றே. (கூங)

பூவில்வேதன் புகனெறியாறுந்தன்
னுவியென்னு மணிப்பரங்குன்றுசார்
வாவியொன்றிடை வண்டமிழ்க்கீரன்றான்
மேவியத்தனை வேட்டருச்சித்தனன். (கூச)

அங்குதிர்ந்த வரசிலையொன்றுநீர்ப்
பங்குபாதி கரையினிற்பாதியா
யுங்குமீனுட னேந்தியுமாகியே
யிங்குமங்கு மிழுக்கைகண்டானரோ. (கூடு)

மரத்தின்றன்மையென் பார்சிலர்வைகொள்வேற்
கரத்தன்செய்த கபடமென்பார்சில
ருரத்தினீர்மைக் குவமையென்பாருமுண்
டரத்தநாட்டத் தலகைக்கதார்வமே. (கூசு)

கண்டுசிந்தை கலங்கலும்பேயவற்
கொண்டுசென்றக் குகையுளடைத்ததான்
மண்டுவார்பலர் தாமும்வருந்திநீ
தண்டைடைச்சமன் முனெனத்திட்டினர். (கூஎ)

இவ்வராவிடி லியாமிறவேமெனு
வவரெலோரு மழுங்கலறிந்தவன்
சிவனேநாடினன் சிந்தையிற்றோன்றியென்
றவமகன்குகன் றன்றுதிசாற்றென்றான். (கூஅ)

ஆயிரந்தவ ராகமுன்னுங்கொடுஞ்
பேயிங்கெய்துங் கொலென்னும்பெரும்பயு
மேயியற்கவி யொன்றுவிண்போலவே
சேயின்வண்மை திகழ்தரச்செப்பினன். (கூசு)

மறியறுத்து வனசரமாந்தர்தாம்
வெறியயர்ந்திட லும்பல்வினைதமுஞ்
செறியும்பாடலிற் சிந்தைமகிழ்ந்தனன்
குறியுரைக்குங் குறக்கொடிகொண்கனே. (சஂ)

வேலியேவியவ் வெற்பிடித்தங்குளா
ரோலையாயிர மும்புரந்தானவா
வாலிகேரும்வாய்ப் பேயையடர்த்திட்டங்
ஞாலையாரு நுவலச்செய்தானரோ. (சக)

வேள்வியின்கொலை தன்னையுமிக்கிகழ்
வாள்விளங்கிசை வண்ணப்பெருக்குமாத்
தாள்விடைக்குருதிப் புனற்சாற்றுமக்
காள்வியன்கவிக் கொல்கல்கண்டானரோ. (சஉ)

வலிதினேழெழின் மங்கையர்த்தாழ்த்திமால்
சொலினுஞ்சீறிடுந் தூர்த்தமின்னார்கள்பால்
மலியுமன்புசெய் வார்களைப்போல்பவன்
குலிசர்போற்றுங் குமாரக்கடவுளே. (சஙு)

வீரவேற்கை விசாகன்விழைந்தபின்
கீரனன்று கிளத்திய * பாடலைப்
பாரகத்திற் பலபலர்போற்றியே
சீரனந்தம் பெறுவதுதிண்ணமே. (சச)

ஒருவன்கீர னுரைத்தசொற்பாடலா
லிருநிலத்தி லெதோபயனெய்தினே
னுருவம்வெந்தவெண் ணீறெழுர்மயானத்தி
லருளின்வாச மணைந்துகிடந்ததே. (சடு)

அங்குபேய்துரத் தப்படைராடவன்
கங்குலூடு கலங்கியச்சாம்பர்மேற்
றங்கும்போதிலப் பேயதன்றன்மைசொற்
றிங்குவாசற் றெளக்கறுவிற்றரோ. (சசு)

பேயும்பித்தரு மொன்றெனும்பெற்றியோர்ந்
தேயுமப்பொடி தன்னுடலெங்கணுந்
தோயுமாறணிந் தள்ளித்துரத்தினன்
வாயுவேகத்திலோடி மறைந்ததே. (கூஎ)

---

* பாடல் - திருமுருகாற்றுப்படை.

இனையகாதைக ளெண்ணிலவாய்ந்ததா
மினியபாடலறைந்த நக்கீரன்முன்
வினையினுல் வருமெய்க்குடினீங்கியே
முனைவனூர்ப்பதி முத்திபெற்றனரோ. (சஅ)

கீரன்கீர்த்திப் பெருக்கினிற்கேட்டமட்
டிரவண்டமிழா லிசைத்தேனினி
யாரருட்கொள்கல் லாடத்திருப்பெயர்த்
தீரன்மாட்சியிற் செப்புவன்சற்றரோ. (சகூ)

நக்கீரதேவர்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - சசுக.

பதினேன்றுவது
கல்லாடனார் சருக்கம்.

செல்வச்செருக்காற்கனகநகர்த் தேவேந்திரன்சிரழிந்ததெனக்
கல்விப்பெருக்கினிறுமாப்பாற் கடைச்சங்கத்தோர்கனங்குலைவான்
பல்வற்பருமைப்புலவர்பலர் பாவைப்பழித்தார்பரவெளியி
லொல்வித்தகனுந்திருவாத வூரன்கவிக்குமூறுரைத்தார். (க)

ஆறுபுனைந்தசடைப்பெருமா னருமைக்கரத்தால்வரைந்தபெரும்
பேறுமதியாராயவன்முன் பேசுங்கோவைப்பிரபந்தத்
தூறுபடுகின்றனவேயென் றெருசின்னூலின்வழிமயங்கி
நூறுகவிகட்களைந்திட்டார் நுவலாணவப்பேய்வலிகொடிதே. (உ)

அவருளொருவன்முனுகி யமர்வுற்றிருந்தவொருபுலவ
னிவர்சொல்பிழைமுற்றவொருவி யிவற்றைத்தாபித்திடுவலெனச்
சிவனேவெகுவாவுபாசித்துத் திகழாசிரியப்பெரும்பாவால்
விவரந்தெரியும்படியந்த வியனூற்றுறைநூற்றையும்விளக்கி. (ஙி)

அந்நூற்றுணைக்கொண்டவரெதிர்நீ ரருள்சேர்வாதவூரடிக
டந்நூற்கூறுபகர்ந்ததுநந் தவறேயர்குஞ்சரதமென
விந்நூல்விளக்குமதற்கிவ்வூ ரிலிங்கப்பெருமான்சாட்சியென்றுன்
செந்நூற்புலவரனேவருமத் திருச்சங்கதியிற்சென்றடைந்தார். (ச)

மன்னனமைச்சனுதியரும் வந்தங்கிருந்தார்வண்புலவ
னன்னசுவடிதனேயவிழ்த்திட் டதனிலுளபாட்டொவ்வொன்றுஞ்
சொன்னபொழுதிலவ்விலிங்கஞ் சோம்பலின்றித்தலையசைத்த
தின்னவியன்கண்டவர்பலரு மிறுமாப்பொழிந்தாங்கிதஞ்சொன்னர். (ஙி)

மாமேருவையேங்கர்த்தபெரு மர்ட்சியடைந்தோர்தமைவெறுத்துப்
பூமேற்சிறியோரிகழ்வாரேற் பொருவிலருண்மற்றெருவன்சவிட்
டீமேதகைகாட்டிடல்விளங்கிற் றரனுருவப்பாலவர்தலையைத்
தாமேயசைத்தாசொருனாறு தரமென்றெருபாச்சமைந்ததுவே. (சு)

முன்னமவனுக்கியைந்தபெயர் முழுதுமறைந்துகல்லாட
னென்னப்புலவோர்களுமுலகு மியம்பும்புகழ்வாய்த்திடப்பெற்று
னன்னபெயரேயவனூற்கு மமைந்ததவன்றன்சரிதமிகப்
பன்னவிருப்புற்றுளனடங்த படிசொல்லிடக்கேட்டிலன்மாதோ. (எ)

சங்கப்புலவரெனவாழ்ந்தோர் தசையென்புதிரமாதியவாற்
பங்கப்படுஞ்சில்பாட்டுரைத்தார் பழுதில்கல்லாடத்திருப்பேர்ச்
சிங்கந்தசையுண்பவர்தவம்போற் றேய்ந்ததிடைசேயிழைக்கென்ன
வங்கப்பனுவலிடையுரைத்தா னறிஞர்தாந்தேர்ந்தறிவாரே. (அ)

மொழியுங்கவியொவ்வொன்றினுக்கு மூவாப்பரமன்முடியசைத்துக்
கழியின்புறுசீரியற்றமிழாற் கல்லாடஞ்சொல்கவின்புலவ
னழியுஞ்சடமும்பிறந்துழலு மான்மாவுந்தோய்ந்தவனென்னூர்
பழியும்பவமுமாணவமும் பறியுந்தவஞ்செய்பான்மையரே. (கூ)

கல்லாடத்தின்பொருள்பலவுங் கருதித்தெளியுங்கருத்தினர்பான்
மல்லாடுதல்கூடாதெனவே வாரியுடைப்பார்வகுத்துரைக்குஞ்
சொல்லாடுதலேதொழிலாகிச் சுழல்புன்கவிஞர்சுவையறியார்
நல்லாடகத்தின்மாற்றுணரு நாட்டநிகர்ஞானமதரிதே. (கo)

பன்னுமருமைத்தமிழ்ப்புலமைப் பயன்றேர்புலவர்பலருமுள
முன்னுஞ்சுவைசால்கல்லாட முரைத்தோன்றிருக்கண்ணப்பரிசை
துன்னுமறமாதியபனுவல் சொற்றுனென்பாரவைமுழுது
மென்னுள்விளக்கக்கலிமகளு மிறவாத்தவருமிசைந்திலரே. (கக)

கங்கையணிவானடியார்புகழ் கணியாதிகழ்வார்தமையொறுக்குஞ்
சங்கையறுசீர்க்கல்லாடன் றனதுபுலமைத்தகவுரைத்தேன்
மங்கைமயலாதியமூன்று வல்லேடணையுமறத்துறந்து
செங்கையினிற்பேய்க்கரும்பேந்தும் திருவெண்காடர்செயலுரைப்பாம்.

கல்லாடனுர்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - சஎக.

பன்னிரண்டாவது
திருவெண்காடர் சருக்கம்.

இந்திரனேமுத லெண்டிசையாள்பவ ரெத்தனேயோபலபேர்
வந்திகமீது பிறந்துதவஞ்செய்து மாசறும்வீடுற்று
ரந்திநிறச்சிவ னுக்குறவோனெனு மப்புகழொடுவடபான்
முந்தியிருந்த * வொருத்தனவாழ்வற முத்தியின்விழைவானன். (க)

சிவனுலகிற்சில காலம்வதிந்து தியானசெபஞ்செயலாற்
புவனியினிற்றிகழ் † பொன்னிமகோததி புக்கபுகார்நகரிற்
குவைஇதிசேர்தரு மொருவணிகன்றரு குழவியுருக்கொண்டு
தவமுறுபெட்பினமி யாவுமிணங்க நயந்துவளர்ந்தனனே. (உ)

---

* ஒருத்தன் - குபேரன். † பொன்னி - காவிரியாறு.

மாபினர்செய்திடு முறைவழியாய்மிகு வாணிபமேமுயலுந்
தாதனமாதிய வாதுவலும்பொரு ளளவறுதொகைபெற்றுன்
பாவையின்மீது கலங்கள்விடுப்பவர் பற்பலருந்தமதோர்
புரவலனென்று மதிப்பவிளங்குபு பொற்பொடுவாழ்ந்தனனே. (கூ)

மருதனெனும்பெயர் வாய்ந்தனனென்றுசின் மானிடருரைசெ வா
ரொருசிலர்வெண்கா டப்பெயருற்றன னென்னவுரைத்திடுவார்
தருமுயர்தாதைய வன்றனெவனம்வரு தற்குமுன்விண்புக்கா
னருள்வடிவாகிய வன்னையொருத்திய ருந்துணையாவுற்றுள். (சு)

உந்தியசெல்வ முளாரையயற்குல முற்றவருந்தமினத்
தந்தினராக வுரைப்பவொணுஞ்சொ லதற்கொருசான்றுகப்
பிந்தியொர்சிற்சிலர் தொழில்வழிவணிகர் பிரானெனவுஞ்சொற்றூர்
செந்திருவனையதொர் மகளைமணந்து திருத்தியுமெய்தினனே. (டு)

பாண்ர்குலத்தொர் வயோதிகனுசி பரித்திடுகைத்தொழிலோன்
மாணவிர்ஞான மடைந்துமிலத்தொரு மனையொடுவாழ்தகவோ
ணமிகுத்தவ னண்ணனெனும்படி யநுதினமும்பழகுற்
றாணளவிற்கொள வுங்கடனேயென வொத்துநடந்தனனே. (சு)

அன்னவனுலர ணருயிராகிக முக்காரமைந்தும்வினை
யுன்னருநல்லுணர் வெய்தியுநெஞ்சினு லோபமொழிக்கிலனுய்ப்
பொன்னதையேபொரு ளென்றுமதித்திவை போதுமெனக்களியா
தின்னமும்வேண்டு மெனப்பலவாமுய லின்னனுகர்ந்தனனே. (எ)

நத்தியசெல்வம் வளர்ந்திடல்கண்டு நராதிபரும்புகழ்சீர்
தய்த்திகமீது மகிழ்ந்தனன்வாழ்வு துலக்கும்விளக்கினேநேர்
புத்திரனில்குறை யாலொருவேளை புழுங்கலுமுண்டவனேர்
பத்தினிமட்டு நினைந்துபல்போது பதைத்துவருந்துவளே. (அ)

அத்தகவங்கு நிகழ்ந்திடுநாளையி லணிகிளரிடைமருதூர்
நித்தனருச்சனை செய்பவரூடதி நியமமுளா *னெருவன்
சித்தமதுமகணஞ் செயுமாசைசெறிந்து பொனிலனுகி
யித்தளர்வோவுதி யென்றுதினந்தன திறையெதிர்சொலிவந்தான். (கூ)

ஒருதினமன்னவன் மனையின்முகப்பினி லுற்றுவருந்துகையி
னிருமலனெருசிறு சேயுருவாகிமு னின்றமுதிடுகெனலு
மருமலியுங்குழல் வனிதையிலாவெறுமனையிதுமணமுயலப்
பொருளிலைமருக னிடந்தினமீது புகன்றுளனென்றனனே. (கo)

இச்சைமிகுந்தவர் கன்மரமாதியிடத்தினு மோதுவரா
லச்சைவனேரில் விளங்கியபாலனெ டதுசொலல்வியனன்றே
பிச்சையெடுப்பவர் கட்கரசாகிய பிள்ளையவன்றன்பாற்
செச்சைமலர்க்கணை யதரமலர்ந்தொரு திறமுரைசெயுமினிதே. (கக)

* ஒருவன் - சிவசருமர்.

வேறு.

என்னைநீமகவுவேண்டு மிச்சையுள்ளவர்க்குவிற்றப்
பொன்னையேற்றினத்திலோர்நற் பூவையையமனத்தியென்ற
துன்னைநான்விற்றுற்பெற்று நுறுகணெய்தாரோவென்று
னன்னையைத்தந்ததன்னை யறிகிலேனெனச்சொல்லிற்றே. (கஉ)

ஆத்திரக்காரன்புத்தி யற்பமென்பதற்கோர்சான்றுச்
சாத்திரமனந்தத்துள்ள தத்துவமுரைப்பக்கேட்டு
நேத்திரமூன்றுவாய்ந்த நிமலனென்றுணராதேற்கும்
பாத்திரமறிந்தால்விற்றுப் பைம்பொனியான்பெறுவேனென்றான். (கங)

பூம்புகார்நகரிலிங்ஙா பொருட்பொலிவினர்மிக்குள்ளா
ராம்புகுந்தறிதியென்ற தக்கணமுதுநெய்யுந்
தீம்புளிக்கறியுஞ்சில்சிற் றுண்டியுந்திரிந்துவாங்கி
யோம்புதற்பொருட்டானல்கி யுவகைவாரிதியிலாழ்ந்தான். (கச)

அன்றிராவிடியுமுன்ன மதனுடனவ்வூர்விட்டுச்
சென்றிரண்டொருநாடங்கிச் செப்புபட்டினத்துட்புக்குப்
பொன்றிரண்மிகையுமின்சொற் புதல்வரின்மையுஞ்சேர்ந்துள்ள
தென்றியம்பினராற்றேறி யிசையுமம்மனையிற்புக்கான். (கடு)

வடதிசையரசுநீங்கி * மழைவிரும்புநரிற்றேன்றிக்
கடன்மிசைப்பொருட்காச்செல்வார் கைத்தொழிற்கொண்டுமற்றே
ருடல்பெறுவிதியோடுற்ற வொருவனப்பனவற்பார்த்தென்
னிடமிநாண்மகவோடுற்ற தென்னெனவினிதுகேட்டான். (கசு)

இம்மகன்றன்னைவிற்பா னீண்டுவந்துற்றேனுன்றன்
சம்மதமிருக்கில்வேண்டுந் தனந்தருகெனலுமன்னே
னம்மகன்வயதைந்தாண்டி னளவினுங்குறைதலோர்ந்து
மெம்மனைக்குரியவேலை யாதுநீசெய்வாயென்றான். (கள)

அவன்வினவிடலுமச்சே யக்கணமகிலத்துள்ளா
ரெவர்செயுந்தொழிலுஞ்செய்த லெனக்குமிக்கெளிதேயென்றுஞ்
சிவனெனவிருவர்தாமுந் தேர்ந்திலர்செட்டிற்சீர்த்தோ
ரவகையான்மணியொன்றீந்திஃ துறும்விலையுரையென்றானே. (கஎ)

அம்மணிகலமுந்தீது மமைதருவிலையுங்கூறி
யெம்மணித்திறமுந்தேறு மியல்புதோற்றிடவும்பேசிற்
றிம்மணிலிச்சேயார்க்கு மெய்தரிதென்றுளெண்ணிக்
கைம்மணிவாங்கிக்கொண்டக் களிப்பினைக்காட்டாலுகி. (கஅ)

மனைவிதன்வயிற்கொண்டுய்த்து மாழைவேட்டளவிலீந்தித்
தனையனைக்கோடனிற்குஞ் சம்மதந்தாவுவென்று
னினையசொல்வினவும்போதே யின்றநாள்பிரிந்துகண்ட
வனையிவடானேயென்ன வார்வமுற்றணைத்துமோந்தாள். (உ0)

* மழைவிரும்புநர் - வேளாளர்.

ஆங்கதுகண்டும்பூரித் தந்தணன்விரும்புமாறே
தாங்கருஞ்சுமையதாகத் தனங்கொடித்தனுப்பினனால்
பூங்கணைமாரற்செற்ற புனிதனைமகவாப்பெற்ற
சோங்கனேர்தவத்தின்மாட்சி யுணர்ந்துநானுரைப்பதன்றே. (உக)

அப்பிராமணன்றனின்ன லாழிமுற்றவேநீங்கித்
திப்பியவுவகையாய திரையறுகடலின்மூழ்கிக்
கைப்பிடித்தவளோடுன்ற கான்முளைத்திரளுமாகி
யிப்பிறப்பினிதென்றெண்ணி யிடைமருதூரில்வாழ்ந்தான். (உஉ)

எவ்வுயிரையுமுன்னீன்ற விறைவனைமகவேயென்ன
வெளவுமவ்விருவர்தாமு மலடரியாமெனமுன்வாடு
மவ்வுளத்துயர்தீர்ந்தச்சே யாடலுந்திறலுநோக்கி
யொவ்வுவார்நமக்கின்றேயென் றுயர்புகார்நகரில்வாழ்ந்தார். (உங)

யாவையும்வல்லேனியானென் றியம்புமவ்வெழிற்சேயீன்ற
பாவைபாற்பிறந்தபாலர் பயில்வனமுழுதுஞ்செய்தான்
றேவைமுற்றடிமைசெய்வார் திரள்பெறவழங்குந்தெய்வக்
கோவையுமவ்வாரூட்டுங் கொடுவினையிருந்ததம்மா. (உச)

பன்னிரண்டாண்டின்மேலாம் பருவம்வந்துறலுந்தாதை
தன்னிடத்துரைபெற்றுன்ற சலதிமேற்கலத்திற்போய்ப்போய்ப்
பொன்னினையீட்டியீட்டிப் பொருப்பெனக்குவித்தன்னானை
மன்னியகதியிற்சேர்க்கு மாறுமாறுடல்செய்வான். (உடு)

ஒருதுறைமுகத்திற்றுன்கொண் டிற்றகைப்பொருளுமாங்குப்
பெருகியுற்றனவும்போக்கிப் பிறர்கடன்வெகுவாக்கொண்டு
வெருவுநெஞ்சகத்தனேபோல் வேடமுங்காட்டிவந்தா
னருகுறுமகன்மேற்றுதை யழற்பிழம்பெனக்கோபித்து. (உசு)

முன்னளவிறந்தபைம்பொன் முறைமுறைக்கொணர்தல்சற்று
முன்னலனுகித்தன்வீட் டுள்ளதோரறையுளுய்த்துக்
*கன்னலுந்தாறேழ்மட்டுங் காப்பொடுபூட்டுமிட்டா
ன்னபாங்கம்மைகேட்டங் கியாவருமறியாதேகி. (உஎ)

துயரமிக்கெய்திப்பூட்டைத் தொடுதலுந்திறந்ததாங்கு
நயனுறுபுதல்வற்காண ணரைவிடைப்பரிமேலீசன்
புயலுறழுமையோர்பாகம் பொலிதரப்புயங்கணின்கும்
வியன்மறிமழுவோடியாவும் விளங்கல்கண்டுவகைபூத்தே. (உஅ)

ஆக்கணங்கனவற்கூவி யாங்குவந்தனளன்னானு
மூக்கணற்கண்டான் காணுமுன்மறைந்ததுபோற்சென்று
னெக்கணத்தினர்க்குந்தஞ்ச மெனவுளவிறைவற்கண்டுந்
தெக்கணம்புகாதுவீடு சேர்கைசிந்தித்திலானே. (உகூ)

* கன்னல் - காமிகை.

அரன்மகவாகிநல்கு மார்வமுற்றிழந்தவம்மை
யிரவொடுபகலுமெண்ணி யெண்ணிமிக்கேங்கியேங்கிக்
கரவினெஞ்சகத்தினின்னற் கடலிடைப்படிந்தாளாகித்
திரமுறுகயிலைவெற்பிற் செவ்வையிற்சேர்ந்திட்டாளே. (கூ0)

அத்தகைமனைவிதன்னே யருந்திறற்சேயைநீத்த
சித்தநோய்மலிந்துஞ்செம்பொற் றிரண்மயக்கொழியவில்லை
யித்தகையினற்பெற்றுளு மிவன்றன்மூற்பிறந்துள்ளாளு
முத்தமபலன்பெற்றுரா வுள்ளுவப்புற்றுரன்றே. (கூக)

அந்தமட்டினிலானலு மரும்பொருள்வளர்க்குமாசைச்
சிந்தனைநீங்கிடாமற் றிரைகடற்கலமேற்சென்று
மைந்தனிற்றுனும்போன வயினுளுருதியமுமின்றி
நொந்தநெட்டமெய்தி நுடங்குபுமீண்டானன்றே. (கூஉ)

அவனலூர்வயினில்லாநா ளருந்துணைப்பாணப்பத்தன்
சிவபதமடைதல்வேட்டான் றெரிந்தவன்மனைவிசெம்பொ
னெவளவோகடனீந்துள்ளாற் கென்சொலிப்போதியென்றுள்
கவலைநீயுறுதல்வேண்டா மெனுமொழிகழறித்தேற்றி. (கூங)

பட்டினைப்பரப்பித்தன்கைப் பலபல்காதற்றலுசி
கொட்டியீங்கிவையும்போங்காற் கூடவாராதென்றோர்சிட்
டிட்டிறுக்குபுதைத்தன்னு ளிடங்கொடித்திதனையீந்த
மட்டினின்றுயர்போமென்று மலர்க்கணைக்கமும்வைத்தப்பால். (கூச)

அன்னவனகண்டமான வதனுடனதுவாய்ப்போனுன்
மன்னவன்கோடிசெம்பொன் வைத்துளார்மனையின்மீதோர்
பொன்னணிக்கலசம்வைக்கும் பொருட்டொருத்தரவுசெய்தா
னின்னநாளையில்வெண்காட னிலங்குதன்மனைவாயேய்க்தான். (கூடு)

முன்னைநாண்மகவாய்வந்த முதல்வனையடைத்தவாறு
தன்னையுமடைத்துவைக்கத் தகுந்ததுமெனநொந்துற்று
னன்னையாதியராற்றேறி யகன்றபினூர்விசேட
மென்னையோவெனவினுவி யியன்றவாறிரண்டுமோர்ந்தான். (கூசு)

மற்றைநாளரையன்றன்பால் வயங்குமாமணிக்கூட்டத்தி
லொற்றையைக்கொடுபோய்க்காட்டி யுளம்பிரமிக்கச்செய்திட
டிற்றையென்பொருளின்கோடி யித்தனையெனநான்றேறேன்
சொற்றையேலவ்வாறில்லிற் சூட்டுவேன்சிகரமென்றுன். (கூஎ)

அம்மொழிவினவிமன்ன னவமதிப்படைந்துநாணி
வெம்மொழிக்குறிப்புத்தோன்ற விளம்புதும்போதியென்று
னிம்மொழிப்பயன்யாதென்றென் றெண்ணிவெண்காடனேகிச்
செம்மொழிப்பாணனை தேசிகன்மனையாட்கண்டு. (கூஅ)

அண்ணனென்சொல்லிப்போந்தா ரறைமினென்றிடலுமந்த
வெண்ணரைக்குழலாள்பெற்ற வியன்கிழியினேயிங்கிட்டாள்
கண்ணதாற்பார்த்துக்கையா லவிழ்த்ததுட்கவின்சீட்டோர்ந்தான்
மண்ணகத்தாசைநெஞ்ச மறந்துமேல்வழிநோக்கிற்றே. (ரூசு)

ஈசனேவிடைமேற்கண்டு மெய்திடாஞானமங்கா
ளாசகல்குரவனுட்ட மைமைந்ததோர்கிழிநல்கிற்றூற்
பாசநோய்தவிர்த்துமுத்திப் பயன்பெறமுயல்வார்மட்டிற்
றேசவிர்தெய்வந்தன்னிற் றேசிகன்சிறந்தோன்றனே (சரு)

வே று.

செம்புபொன்னுரு வாதலின்மயலறத் தெளிந்தசிந்தையனுகிப்
பம்புதன்மனைப் பொருளெலாமுலகில்வாழ் பலருமெய்திடச்சிந்திக்
* கம்புவார்செவிக் கணிந்தவனருள்வழிக் கதிபெறுந்துணிவெய்தி
நம்புமைந்தெழுத் தேதுணையெனக்கொடு நடித்தெருவினிற்சென்றார்.

பித்தமிஞ்சிய தெனப்பலரிகழ்ந்தனர் பிறப்பறுத்திடுஞானஞ்
சித்தமூடுதித் திட்டதென்றன்பொடு சிற்சிலர்தொழுதிட்டா
ரத்தமேகல மெனச்சிலமனேயிலேற் றமுதயின்றளிகூர்ந்து
சுத்தமாகில மேயுணேயெனக்கொடு துறவிகட்கரசானார். (சஉ)

அந்தவைபவம் வினவியசோழனங் கவரெதிர்போய்நின்றே
னிந்தவம்புசெய் தனேயிதாலென்பய னெய்தினேயெனக்கேட்ப
முந்தநீயிருந் திடினின்முனியானிற்கு முறைபிறழ்ந்திடக்கண்டேன்
பிந்தயாதுநல் கிடுங்கொலோபிறைச்சடைப் பிஞ்ஞகனெனைச்சொற்றார்.

அதுவினுவலு மரசனவ்வயின்விடுத் தவர்மனேயிடமேகிக்
கதுவுபொன்மணி யாடகமாதியாக் கழறுவமுழுதும்போய்ப்
பொதுமையார்தரு சத்திரம்போனிகழ் புதுமைகண்டுளநொந்து
விதுவிளம்பிறை யனேயதாய்நெஞ்சினுள் வெதும்பிவாய்விடக்கேட்டு. ()

அவணுளார்தமக் காமளவினிற்பொரு ளடக்கியவிதந்தேறித்
தவலரும்புகழ்ச் சேந்தனுங்கணக்கனேத் தனிக்கொடுவரச்செய்தீண்
டெவ்வளவாடக மாதியவிருந்தன வியம்புகென்றுறுத்தன்னேன்
விவரமோர்கில னென்றலுஞ்சிறைப்பட விளைந்துவல்விலங்கிட்டான்.()

அரசனவ்வள வினிலதைமறந்துதன் னரண்மனையிடைவாழ்ந்தான்
பரவுசிருடைப் பட்டினத்தடிகள்பஞ் சாக்கரசெபந்தானே
யிரவினும்பக லினும்புரிந்தருள்சிறி திதயசாட்சியதாப்பெற்
றுரகபூடண மின்றியசிவனென வுருத்திகழ்தரச்சூழ்ந்தார். (சசு)

அடிகண்மாடசியித் தகையினதாகுமென் றறிகலாரனேவாரும
படியிலியாவரு மதிக்கவாழ்ந்திருந்தநீ பலர்மனேதொறுமேற்றுண்
டிடியையேர்வசை கேட்டிவணலேவதென் னெனவினுவிடுந்தோறுங்
குடியிருந்தவீட் டினிற்கொள்ளிவைப்பது குறித்துளேனென்றாரே. ()

* கம்பு - சங்கு.

சாதிமானம்விட் டிரந்துணுங்கொடிதவர் தமக்கைதான்சகியாளாய்க்
காதியின்புறல் விழைந்தடையிடைவிடங் கலந்தழைத்துபசார
மோதியிந்தனள் வாங்கினரொடித்தன ருண்ணுமுன்னதன்றீமை
யாதிகாயக னருளுணர்த்தலிற்றெரிந் தக்கணமவள்பார்க்க. (சஅ)

தன்னேத்தன்வினே சுற்றிடும்பிறவினே தனதுகால்களேச்சுற்று
மென்னேக்கொல்லநீ யிட்டவோட்டப்பம்வீட் டினேச்சுடுமெனப்போட்
ரன்னேக்கன்றிட மளித்தவர்நகைப்பிலொன் னுர்புரமெரிந்தாங்கே [டா
மின்னேப்போலிடை யவண்மனேபற்பலர் வியப்பவெந்ததுமன்னே. ()

அதுமுதற்றிரு வருட்செயலவரிடத் தமைந்தமைபலரோர்ந்தார்
மதுரவண்டமிழ்ப் பாடலும்பலபல வகைபடத்தினஞ்சொன்னர்
முதுமையார்தரு தாயிறந்தாரவர் முறைப்படிசுகோட்டிற்
கதுமென்றிட்டுமீண் டமைதெரிந்தழலுடற் கதுவுமுன்னணைந்தாரே. ()

அங்குசென்றழன் மூட்டியமூட்டம தனேப்பிரித்தநியாசை
தங்குமன்னேதன் னுடம்பினேயெடுத்துளிற் றுபமிக்கழுதப்பாற்
பொங்குதீஞ்சுவைக் கவிகளுஞ்சிற்சில புகன்றுதீப்பகையென்ன
வெங்குளாருநன் கறிதரும்வாழையா மிந்தனமிசைவைத்து. (நக)

முன்னையிட்டதீ முப்புரத்தெனுங்கவி மொழிந்துசொற்றீமூட்டி
யன்னைவெந்தபின் னறலினிற்கைத்துமா டாடுமேய்ப்பவராகித்
தன்னேச்சூழ்ந்துநிற் பவர்களேநோக்கிநீர் சலிப்பின்றிச்சிலநேர
மென்னேப்போன்றுசெய் வீரொனிற்கூலியிங் கிதுவேனெனச்சொல்லி. ()

நின்றுமார்பினி லடிக்கடியடித்துவாய் நிரைநிரைதாயாரே
யென்றுசொல்லிடக் குதித்துவீழ்ந்தலறின ரேனேயர்களுஞ்செய்தார்
துன்றுமண்ணெரு முட்டையாதியவற்றைச் சுண்டலாதியவாக்கி
நன்றுநன்றெனுஞ் சுவையவாத்தினும்படி நல்கினரன்னூர்க்கே. (நக)

அந்தநாண்முத லெவரையாரிழப்பினு மங்ஙனஞ்செயும்பான்மை
செந்தமிழ்க்கலே பயில்பவர்வழக்கமாத் திகழ்ந்ததுசிலநாட்போ
யிந்தமூர்த்திதான் சேந்தனுக்கரசனிட் டளதனேயிறப்பாடிச்
சொந்தமாமுப தேசமுஞ்செய்தருட் சுகமுறப்புரிந்தாரே. (நச)

அதன்பினன்னவ னடந்தவாற்றினேயிவ ணறைவதுவிரிவாகு
மதன்றனேப்பொடித் தாரருள்பெற்றவர் மன்னன்மேற்சினவாதே
யிதந்தரும்பெருங் கருணேயாற்சென்றன ரெட்டுணேச்சினஞ்செய்தாற்
சுதந்தரத்தனி யாண்மையுமகுடமுந் தூலமும்பாழாமே. (நந)

பேறுபெற்றமட் டினிற்களித்தளப்பரும் பெருமைகொண்டாடாராய்
வேறுவேறுள சிவதலந்தொறுந்தினம் வியன்றமிழ்த்துதிபாடி
யீறுமாதியு மில்லதாங்கதிதர லெதுகொலோவெனநொந்தா
* ராறுசூடியோர் குரவனுப்பேய்க்கரும் பதனேயங்கையினல்கி. (நசு)

* ஆறுசூடி - கங்காநதியைச்சடையிற்தரித்த சிவபிரான்.

இதுதித்திக்திடும் தலமெதோவதுவுனக் கிறப்பொடுபிறப்பில்லாப்
புதுமையார்கதி கல்குமென்றுரைத்துடன் பொருக்கெனமறைவுற்று
னதுசற்றேனும்வா டாதுபூமிசைநின்றும் கவிர்ந்துநீடிடக்கண்டும்
பதுமனின்னமும் படைக்குமோவெனும்பெரும் பயங்கொடுதெவித்தாரோ.

அற்பமெஞ்சுடைத் தவசிகள்பேறுசற் றடையுமுன்னிறுமாந்து
தற்பரத்துவம் பெற்றதாகினைத்தெனில் சடமெடுத்துழல்வார்கள்
சிற்பரத்துடன் கலக்கவேபிறந்துள சீரியதவத்தோர்தா
முற்பரன்பல்காற் றிகழ்தரப்பெறினுநன் முயச்சியிற்றளராரே. (நிஅ)

ஆதலாலவ ரொத்தலத்தினுங்கரும் பதன்சுவைத்துணைக்கொண்டே
யீதறிந்துகொள் வோமெனுந்துணிவுறு தேன்றமட்டுபாசித்துச்
சீதநாண்மலர்க் கொன்றையொப்பாந்துதிச் செழுந்தமிழ்க்கவிபாடி
பாதரத்தொடு பணிந்தெழுந்ததற்பினே யறிந்துநீங்குவதானார். (நிசூ)

தில்லையாதிய தலங்களொவ்வொன்றினுஞ் சிற்சிலஞ்கழித்தப்பால்
வல்லைநேர்முலைப் பரவைகோன்வேட்டுள வாறெலாநனிகேட்ட
சொல்லைமாலிகை யாமெனப்பதங்களிற் றுதைந்தவர்வளர்நாகை
யெல்லைபுக்கிரந் தயிலுணவோர்தின மெய்திடாமையினெஞ்சே. (சுo)

பசிக்குதையகோ நாயடியேனது பாழ்வயிற்றினைப்பற்றி
யிசிக்குதையகா ரோணரேயென்றுரைப்பாட் டிசைத்தொருவயிற்றுஞ்சு
நிசிக்கணலயத் துள்ளபொற்பாத்திர நிவேதனத்தினைக்கொண்டாங்
கசிக்கணம்பிகை யருத்திடத்துய்த்தன ராங் * கதுற்றதுமாதோ. (சுக)

விடியற்போதினி லாலயத்தினரது வெளிப்படல்புகன்றிட்டார்
கடியசேவகர் பாத்திரத்துடனவர்க் கண்டுமன்னெதிருய்த்தார்
நெடியமாலயே யானவர்தமைக்கொடு நிலைக்கழுவிடச்சொன்னான்
கொடியநீர்க்கொலை யாளர்தாமவ்வயிற் கொண்டுசென்றனரம்மா. (சுஉ)

எதிரினிற்கழுக் காண்டலுமென்செயலி யாதுமில்லென்றேயோ
ரதிநயக்கவி தெய்வமேயெனவிளித் தறைந்தனரப்போதே
சதிசெய்வார்நடுங் கிடவருட்கனலதைத் தகித்ததுதரையாள்வோன்
மதியுணர்ந்திடப் பரைசெயலுணர்த்தினள் வணங்கிவாழ்த்தினனன்றே.

அன்றவூர்விடுத் தனந்தவூர்வழிநடந் தணிமலிமதுரைக்கட்
சென்றவண்சில நாள்வசித்தாரொரு சேயிழைதிருப்போல்வாள்
குன்றவில்லிதன் னடியரென்றுணர்ந்தவர் குறுகுநெந்தொறுமன்பா
னன்றவாமுண வேமிகச்சொரிந்தன ணைசையொடுண்டனரன்றே. (சுச)

ஓருதினத்தின்முன் னிரவினிற்பசியின்மை யொத்தபொய்ம்மந்தத்தோ
டிருளுங்கூடலா லிரந்திடச்சென்றில ரிருந்தனர்திருக்கோயி
லருகிலுள்ளமண் டபத்தினிலியாமமே லரும்பசிவரநொந்து
க்ருகிடுங்குடர் வாதனைமிகுதியாற் கனற்புழுவெனத்துள்ளி. (சுடு)

* அது - பொற்பாத்திரம்.

அங்கிக்கட்கடு வாயினுங்கொடியதே யாம்வயிறேங்கிற்கின்
றிங்கியாரிடு வார்கள்சோறுணமோ டெனவொருகவிசொற்று
மங்கிடாதுநீ டிடும்பசிதீர்க்கவம் மகண்மனேவயினேகிச்
சங்கியாமலித் ததியினிலமுதிட றருமமென்றுரைத்தாரே. (சுசு)

அந்தவேளையி லவடனக்குரியனே டணைமிசைப்படுத்துற்றுள்
சந்தமார்கலே யவணுடற்கீழகப் படுதலிற்றணந்தன்பால்
வந்தமூர்த்திபோய் விடுங்கொலென்றுத்திர மலிவுடன்விரைந்தோ்டி
முந்தவைத்துள வன்னமத்தனையு மொக்கிடும்படியிட்டு. (சுஎ)

நீரும்வார்த்தன ளத்ததியினினிரு வாணமாயவளாங்குப்
பேருந்தன்மையும் பேசலுந்தெரிந்தவன் பேயெனச்சினந்தோடி
நேருமவ்விரு வரையுமொத்தினனவ ணிகழ்த்துசொல்வழிதேறி
யாருங்கொன்றையு மணிந்தவனடியரை யடித்ததற்கயர்வுற்றான். (சுஅ)

அவர்சொற்கேட்டலு மவனையுமெழுப்பிநன் கவிர்தருவிளக்கேற்றி
யுவகையோடமு தளிக்கலாம்பெண்மதி யூறிதுவிளைத்திட்ட
தெவளவுண்மையா நடந்திடுமாதர்தம் மிடத்துமையுறுந்தன்மை
புவனியாடவர் பண்பெனத்தக்கபொல் லாங்குனன்கிலங்கிற்றே. (சுசூ)

விடப்படுங்கொலென் றெடுத்துலகினிற்பல வீனர்தம்மனைக்கேகிப்
படப்படுங்கொலென் முடிவுறச்சவுந்தர பாண்டியன்றனைப்பாடிக்
கடப்பதேமுறை யெனக்கையிற்றிகழ்பசுங் கரும்புணர்த்திடத்தேறி
நடப்பதேதொழி லெனக்கொடப்பெரியவர் நற்றலந்தொறுஞ்சூழ்ந்தார்.

பசியினுற்சில மனேயினிற்புகுந்துள பானேயினமுதுண்டுண்
டசிகிலாவுகண் மடந்தையர்நிந்தையேற் முடவரடிக்குங்காற்
கசியுமன்பொடு வயிற்றின்மீதடித்திடக் கழறினனெச்சொல்வார்
சசிகுலாஞ்சடைத் தம்பிரான்றிருவருட் டகைமையோர்வரிதம்மா.(எக)

பூணும்பொற்பணி முதற்கொடுசிவபதம் புகல்வரையெளிதாக்கிச்
சாணுருப்பெறும் வயிற்றினேவளர்ப்பதே சளமெனவொருபாட
னுணுருதுசொற் றனரவர்பெருமையை நற்றுறவினர்தேர்வா
ரேணுறுந்திரு வருட்டிறம்பெற்றுமாங் கியன்றபண்பினரின்றே. (எஉ)

ஓட்டினேப்பழங் கந்தையைத்திண்ணையை யுரியநீற்றினேமேலாம்
வீட்டிலுய்க்குமைங் தெழுத்தினேயுலகினே வியந்துபற்பலவாய
பாட்டினஞ்சொலி நான்மணித்தொடைமுதற் பனுவலுஞ்சிலசெய்து
காட்டிடகத்தொனி வண்ணமும்பன்னினர் தமிழ்த்திறஞ்சிறிதன்றே. ()

ஓங்குமெய்ப்புகழ்ப் பட்டினத்தடிகளா ரூரிலேற்றமுதுண்டு
தீங்குதீர்தியாகனைத் தொழுதிறைஞ்சியோர் திண்ணையின்மிசையுற்று
சாங்குவந்தன னெருவனம்மனையிலுள் ளவருடனவனும்
பாங்குகண்டயற் புருடனேயிவனவள் பதியலனெனத்தேர்ந்தார். (எச)

இங்கிருப்பது தகுதியன்றெனவெழுந் தேனையதெருப்போந்தா
ரங்கிராப்பொழு துற்றனரவன்றனை யவட்குரியவன்கண்டு
செங்கிலாலம்வி டாவணங்கொன்றுதே ரோடும்வீதியிலிட்டான்
பைங்கிளிப்பரி யான்புகழ்க்கடற்றுறை பலவற்றுளீதொன்றே. (எடு)

அவளிட்டப்படி நடக்கலாமென்னு மனந்தளாளிருந்தாற்றன்
றவனைக்கொல்வித்து மற்றொருநாயகன் றன்னெடுகளிகூர்வா
ளிவனைநீங்குவ னென்னுமுன்கொல்லுமன் னிருந்ததாலென்செய்வா
ளுவகையின்றியுள் ளவன்றனதாணையி லொடுங்கியுற்றனண்மாதோ. ()

வந்தவன்றனைக் கொலுந்திறம்வாய்ந்தவன் வாய்ந்தமையறிந்துற்று
மந்தமங்கைதா னவனைவேட்டணைந்ததோ ரதிசயமதுபோலு
மெந்தநன்மையுந் தரத்தகுபரத்துவ மியைந்ததேவினைவிட்டு
மைந்தர்பற்பலர் மாமிசநசைப்புன்பேய் வணக்கமேற்கொளன்மன்னே.

மன்னன்பான்முறை யிடிலிருவரையுமே வதைசெய்வான்மனைபாழா
மென்னநாடியங் ஙனஞ்செய்தான்மானமி லீனனேயவனேனும்
பொன்னவாமிகை யான்மனையவட்கொடோர் புருடனிற்செலவுய்ப்பான்
சின்னம்த்தனை யிலனிதைக்குறித்தினுஞ் செப்புதன்மிகையாமே. ()

வைகறைப்பொழு தாதலும்வீதியின் வாயொருபிணங்கண்டு
மொய்கடுப்பவூர்ச் சனமிகச்சூழ்ந்தன மொழிந்தனபலவாரு
மெய்கவின்றரு திருவுளத்தடிகளு மேவியவ்விதமோர்ந்து
நெய்கனிந்தகொன் றைப்பிரானருளினை நினைத்துநெட்டுயிர்த்தப்பால். ()

எருவின்வாயினுக் கிருவிரலளவுமே லேறுண்டேயிருக்கின்ற
கருவின்வாயினுக் கோவிஙன்கண்கலங் குற்றிறந்தனையென்ன
வொருவெண்பாட்டினைத் தலைமுயிர்த்தெழுந்ததாழ்ந் தொல்கல்கண்டுணர்வோதி
யருகுள்ளார்சிலர் வியப்பதற்குவப்புரு தப்பதியகன்றாரே. (அ0)

காமமாதிய செயல்களையிகழ்ந்துபல் கவிமழைபொழிந்தேகிப்
பாமரத்திர ஞனர்வரும்பெரும்புகழ்ப் பத்திரகிரிமன்ன
னேமம்முற்றிடத் தொடர்ந்தினிதாண்டவ னிசகதிபெறுமட்டு
மேமவில்லிதன் பதிகளுண்மிக்குய ரிடைமருதூர்வாழ்ந்தார். (அக)

அங்குவாழ்வுறு மொருதினத்திரவினி லருந்துநீர்நசைமீறி
யிங்குமென்றுதின் றிவ்விடாய்ப்படுந்துய ரொன்றுதீர்தருமென்னப்
பொங்குகங்கைவாழ் சடைத்தலைமருதன்மேற் புகன்றனரொருபாடல்
கங்குலூடவ ரனையனுய்வந்துநின் காதலென்னெனக்கேட்டே. (அஉ)

யானிரந்துணு மோட்டினீருளதுநிற் நிசையுமோவெனவன்னூர்
வானினீரிணு முயர்ந்ததென்றன்பொடு வாங்கியுண்டனர்காணு
ரேனினங்கதி நல்கிடாதலைத்துளா யெனச்சினந்தவ்வூர்விட்
டானின்வெண்கொடித்தலம்பலபார்வையிட் டணிவடதிசைச்சென்றார்.

அங்கொர்காட்டினி லருந்துதற்கியாதுமற் றதிவெயிற்பொடிச்சூட்டா
லெங்கொழிந்தன னேசிவன்செத்தன னெனமிகச்சொலிப்போங்காற்
றங்கொரில்லமும் பந்தருமின்மொழித் தம்பதியொடுகண்டா
ரிங்கொர்நாளிரு மெனவவரன்புட னினியவூணிடவுண்டார். (அச)

அன்னம்பாற்குழம் பாதியவேண்டுமெட் டருந்தலுமதிசோகந்
துன்னலுற்றது மலயவெற்புயிர்த்தகாற் றுணைக்கொடுதுயில்கூர்ந்தே
யின்னல்வெய்யிலுந் துயிலுநீங்கலினெழுந் திருந்ததம்பதியோடு
கன்னரில்லமும் பந்தருங்காண்கிலர் நக்கனுட்டெனத்தேர்ந்தார். (அடு)

அன்புளார்தம தகத்தினிற்கட்டுணு மரன்றிருவருடன்னுற்
றுன்புமின்பமா மெனற்கிதோர்சான்றெனத் துணிபவர்சிலர்தாமே
பின்புமன்னவர்க் காங்கிழ்ந்தனவெலாம் பேசுமாறறிகில்லேன்
வன்புமாலயன் செயருங்கின்றதா மலையருகணைந்தாரே. (அசு)

அம்மலைப்பெருங் கோயிலிற்பணிசெயு மரிவையர்களிற்சீர்த்துச்
செம்மலர்த்திரு வனேயளாமொருத்திமேற் சிவன்செயலான்மோகித்
திம்மயற்பிணி தீர்ந்துயவேண்டுமென் றியற்கவிமிகப்பாடி
மைம்மதப்பயல் வரிச்சிலைக்கினைத்துமா மரங்கொள்கச்சியிலெங். (அள)

அங்குவாழ்சிவ னேயுமிகத்துதிசெய்திட் டதனிலுந்தீராமற்
பொங்குசீர்த்திரு வருணையின்மாறியும் போயவடனைக்கண்டு
நங்குபேசுவார்க் கொல்கிடாதீர்த்தவ ணடுங்கலில்விடுத்திட்டு
மங்குருவருள் வளத்ததாஞ்சுக்கிலம் வழிந்ததைக்கரத்தேந்தி. (அஅ)

அரசினிற்பழுத் துதிர்ந்ததோரிலையில்வைத் தகமெலிவுறும்வேளை
கரவிருப்மகட் கொண்டுவந்தவளொடு கான்மலர்மிசைவீழ்ந்து
விரகமுள்ளவா முள்கவென்றிரந்தனள் விரும்பல்யானலனென்றோர்
சரதவாசகப் பாடல்சொற்றதனையே தன்கரங்கொகொட்டி. (அக)

இனிவிரும்பிடே னெனுங்குறிப்புணர்த்தலு மேந்திழைமகள்வாயிற்
கனியுமன்புட னுணும்படியருத்தினள் கண்டவர்சிவன்றன்னை
நனிநினைந்திதோர் கற்சிசுவாம்படி நல்கெனவிரந்தப்பாற்
றனிநடந்துகா ளத்தியாதியபல தலங்களிற்சரித்தாரே. (கூ0)

எத்தகைப்பெரு வல்லவமுடையவ ரியாவரேயானலு
மத்தனாரரு ளாட்டியவண்ணமே யாடுவரெனுமுண்மைக்
கித்தனிச்சரித் திரமுதற்சாட்சிக ளின்னமெத்தனையோவாற்
பத்தர்சொற்படி தெய்வமேதுணையெனப் பற்றலிற்பழுதின்றே. (கூக)

வேறு.

கற்றிருநீற் றணிசால நான்மறைவிர்கோவணஞ்சாத்திப்
பற்றியபேய்க் கரும்போடு பட்டினத்துப் பிள்ளையெனச்
சொற்றிடும்பேர் கொண்டுலவுந் துதித்தமிழ்வா ரிதியனையா
சொற்றிருகர்த் தலத்தினிற்போ யுமைகணவற் பணிந்தப்பால். (கூஉ)

ஏன்றமட்டிற் றுதிபாடி யெத்தலத்தும் பார்த்தாற்போ
லான்றபுகழ்க் கரும்புருசி யதுபார்த்தா ரம்பகமோர்
மூன்றமைந்தான் றிருவருளான் முன்னிருந்த கைப்பொழிந்து
வான்றலத்துள் ளாரமுத மானுமினிப் பாகியதே. (கூஈ)

உடலுருகத் தித்திக்கு மோங்குபுக ழொற்றிநகர்க்
கடலருகே நிற்கின்ற கரும்பென்றூர் கவிபாடிப்
படர்தெருவிற் றிரிகின்றூர் பதங்களையு மவைதம்மைத்
தொடவணைந்தாங் குதிர்கின்ற துகளினையுந் துதித்தாரே. (கூச)

நாடுளார் களிற்சிலர்பா னன்மொழியும் பலர்தம்பாற்
கோடுமாற் றமும்பேசுங் குணத்தினைவிட் டொழியாரா
யீடுசா லவ்வூரி லினையில்களிப் பொடுவைகி
மாடுமேய்த் திடுஞ்சிறிய மக்களுட னுறவாடி. (கூடு)

கடற்கரையின் மணற்றூண்டிக் கண்ணுதலோ னருள்வடிவா
முடற்புதைக்கும் விளையாட லொவ்வொருக்காற் செய்தோர்நாண்
மிடற்றளவிற் புதைத்ததனை வேறொருவர் பாராமற்
றிடத்தமட்சால் கொடுமூடிச் சென்றுபின்னுள் வரச்சொன்னூர். (கூசு)

அவ்வாறே யவர்செய்திட் டானினைத்தி னுடனூர்புக்
கிவ்வாறு செய்துவந்தோ மெனப்பலருக் கிசைத்திடலாற்
செவ்வாக,விடிந்திடலுந் திரண்டுசென்று பார்த்திடவே
றெவ்வாத சிவலிங்கத் துருவாகி யொளிர்ந்ததுவே. (கூஎ)

அன்றுமுத லுலகத்தி லரபத்தி குருபத்தி
தன்றுமவ ரனைவோருந் தொழுதுபயன் மிகப்பெற்று
ரின்றுகட லூடுமறைந் திருக்கின்ற தென்பார்மற்
றொன்றுபிர திட்டையுஞ்செய் துள்ளாரன் புடையோரே. (கூஅ)

பட்டினத்துப் பிள்ளையெனப் பாருலகம் பகர்நாமந்
தொட்டிருந்த பெரும்புலமைத் துறவிசரித் திரஞ்சொன்னேன்
மட்டில்புகழ் நாரையூர் வாரணமா முகனருளிற்
பட்டிசைகொ ணம்பியாண் டார்நம்பி பரிசுரைப்பாம். (கூகூ)

திருவெண்காடர்சருக்க முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - கிஎஉ.

பதின்மூன்றுவது

நம்பியாண்டார்நம்பிகள் சருக்கம்.

நறுமலர்ப் பொழிற்சோணாட்டு நாரையூர் தன்னில்வாழ்க்கை
யுறுமொரு சைவப்பார்ப்பா * னும்பன்மா முகனேப்போற்றல்
பெறுதொழி லாகக்கொண்டோன் பேதைமைப் பெருக்கத்தோடு
மறுவறு கற்பும்வாய்ந்த மனையொடு மகிழ்நாளில். (க)

முக்கண்வெற் பனையவேழ முகப்பிரா னருளினாலே
தக்கதோர் புதல்வற்பெற்றுச் சடங்குகள் பலவுஞ்செய்து
நக்கனேர் பெரியோர்சொல்லா னம்பியாண் டானென்றோர்பேர்
வைக்கவம் மகனேர்பத்து வயதுடை யவனைநல். (உ)

அந்தரா ளவன்றன்றுதை யாங்கொர்சூத் திரப்பெண்மோகப்
பந்தமுற் றதனற்கோயிற் படிநிவே தனங்களெல்லாஞ்
சொந்தமா யவளேபெற்றுச் சுகித்திடக் கொடித்துவந்தான்
வந்தவன் வெறுமைநோக்கி மனையவள் விளவினாள். (ங)

கேட்டிடு மவள்பாலாங்குக் கிளர்விரா யகப்பிரான்று
னீட்டிய வருண்மேலீட்டா லெதிரினிற் படைப்பவெல்லாங்
கோட்டிடைத்திகழுங்கையாற் குழைவுற வாரிவாயிற்
போட்டினி துண்கின்றுன்மெய் பொய்யெனக் கருதேலென்றுன். (ச)

அம்மொழி வினவியந்த வருந்ததி யனையாண்முற்று
மெய்ம்மொழி யென்றேநம்பி வேண்டுவ மிகவேசெய்தாள்
பொய்ம்மொழிப் பனவனேர்நாட் புறத்தொர்கா ரியமாப்போனன்
கைம்மொழி யறியாடன்னேர் கான்முளைக் கிதுசொல்கின்றுள். (ஞ)

அப்பகின் னப்பன்வந்தீண் டடையவெங் நேரமாமோ
மெய்ப்பசிக் கடவுள்சற்று வெதும்பினுஞ் சகிக்கொண்ணுதா
லிப்பகன் முதற்காலத்தே யினிதுபூ சித்துவாவென்
றெருப்பறு மமுதேயாதி யுபகர ணத்தோடெய்த்தாள் (ட)

சென்றவன் றெண்ணீராட்டித் திருவெண்ணீ றலங்கல்சாத்தித்
தென்றலங் குன்றின்சந்தத் திலகமுந் திருத்தியன்பாற்
றின்றல்யா வையுமுன்வைத்துத் தீபதூபங்கள் காட்டித்
தன்றகப் பன்பாற்கற்ற தாமருச் சனையுஞ்சாற்றி. (ண)

தெண்டனிட் டெழுந்துபார்த்தான் றிரள்பெருந் துதிக்கைதன்னும்
பண்டமொன் றினையாளுலும் பரிந்தெடுத் தருந்தக்காணு
ணுண்டலுண் டென்னத்தன்று யுரைத்தசொல் லுன்னியுன்னிக்
கண்டரு தாரைசோரக் கதறிமிக் கழுதிட்டானே. (அ)

* உம்பல் - யானை.

அழுதருகு குண்மைநோக்கி யைங்கரத் தமலமூர்த்தி
பழுதில்சீர்க் கருணைபொங்கிப் படைத்தன முழுதுந்துய்த்தா
னெழுதுசில் பாடங்கற்பா னிளமகன் விரைந்துபோய்த்தான்
றொழுதகைத் தாய்பாலாங்கு நடந்தன சொற்றனன்றே. (கூ)

அவளுமவ் விடயங்கேட்டுள் ளதிசயித் தில்லாளான்ற
தவன்முயல் கிரியையாதோ தவறிய நிமித்தஞ்சற்றுங்
கிவனுட னுடல்செய்தா னெனநினைத் தனளவ்வேளை
கவலுநெஞ் சினனுமூழ்கிக் கடுகியே கணவன்வந்து. (கஎ)

பூசனைக் கானநேரம் போனதாற் பொருக்கென்றின்னே
வாசமா நிவேதனங்கள் வழங்கென்றன் மனவிருந்தம்
பாசமார் மகன்போயின்றப் பணியினை முடித்துவந்தா
னீசன்மா மகனுமுண்டி யினிதயின் றனனுமென்றாள். (கஅ)

அச்சிவப் பனவன்றன்னு ளதிசயித் தார்வவாரி
யுச்சிமேற் கொள்ளச்சேய்வா யுரைப்பவும் வினவினீயே
நச்சியப் பணிசெய்கென்ன நவின்றுநன் காரப்புல்லி
யிச்சிசுப் பெறமுன்செய்த தென்றவ மெனவெண்ணுற்றான். (கஉ)

மற்றைநாண் மகனேடேகி வழுவற நெருனற்செய்தாங்
கிற்றையுஞ் செய்கென்றுற்று னிவன்விழிப் புலங்காணும
லற்றையு மந்தமூர்த்தி யமைத்துள நிவேதனத்து
ளொற்றையு மிகாதுதுய்த்தா னுலகமுற் றுணர்ந்ததச்சீர். (கஊ)

பற்பலர் தம்மாலேன்ற படிநிவே தனங்களாங்குய்த்
தற்பக லச்சேய்தன்னு லருத்திமிக் குவகையார்ந்தார்
சிற்பர்செய் மூர்த்தி *யிட்ட தின்றிடுங் தகைமைகேட்டு
மற்படு திண்டோட்சோழன் மனத்தின்மிக் கையமெய்தி. (கசு)

இன்னநா ணுரையூர்வா †ழிபமுகற் குணவுநல்க
வென்னநாம் போதுநும்மா லேன்றன கொணர்மினென்னத்
தன்னது நாட்டிலுள்ள தகுதியோர் பலர்க்குஞ்சாற்றி
மன்னனங் நாளங்குற்றன் வந்தன ரவருமாதோ. (கடு)

பகடிடைச் சகடக்கூட்டிற் பருங்கரும் பிளநீர்தேங்காய்
திகழுமுக் கனிகளன்னந் தீஞ்சுவைப் பலபண்டங்க
ளகலமோர் காதஞ்சுற்ற வளவறப் பரப்பிநுரப்
புகர்முகத் திறைபாலந்தப் புண்ணியச் சிறுவன்சொல்வான். (கசு)

உன்னையு முனையேபூசித் தனதருட் செயலேநாடு
மென்னையுஞ் சோதித்தற்கா விங்ஙனஞ் செயுமிங்காட்டு
மன்னெஞ் சுவக்கச்செய்ய வல்லையோ வென்றனப்போ
தன்னையிற் சிறந்தமூர்த்தி யறிதியோர் கணத்திலென்னு. (கள)

* இட்ட-அஃதிணைப்பன்மை-அதாவது-இடப்பட்ட நிவேதனங்கள். † இபம்-யானை.

துதிக்கையி னுனியெல்லோர்க்குந் தோற்றிடக் காட்டியாண்டு
மதிக்கரி யனவாவைத்த வான்சுவைப் பொருள்களியாவும்
பதிக்கண ணாதனுண்டான் பரப்பவற் றொன்றுங்காணு
மதிக்குடைச் செல்வன்போல்வான் மனமிக வருந்தினாணி. (கஅ)

நந்தலி னம்பியாண்டார் நம்பியென் றவன்பேர்சாற்றி
யந்தவே தியகுமாரற் கடிமையே யாய்த்தனூர்போய்ச்
சொந்தமா முபகாரங்க டொகைபடச் செய்தானச்சேய்
தந்தமா முகன்கணேக்காற் றமிழ்ப்புல மையும்வாய்ந்தானே. (கக)

பெருமைசா லவன்சகாயம் பெற்றதாற் பிழைதீர் * சோழ
னிருமல னடியார்மூவர் நிகழ்த்துபல் பதிகத்தேடு
மருமலர்ப் பொழில்சூழ்தில்லை மன்றினி லெடுத்ததாலே
திருமுறை கண்டானென்னச் சிறந்தபே ரொன்றும்பெற்றான். (உ0)

அன்னபல் பதிகச்சீரு மருணம்பி யாண்டானேக்கிப்
பொன்னணிப் பரவைகேள்வன் புகழ்றொண்டத் தொகையின்சார
மின்னவென் றோரந்தாதி யியம்பிய னதுகொண்டன்றே
பின்னர்சேக் கிழார்புராணம் பேசினர் பெருக்கமாதோ. (உக)

நம்பந்த ரங்கப்பண்பா னலங்கொளப் பனவப்பாலன்
சம்பந்தப் பிள்ளைமீது தமிழ்க்கவி வெகுவாச்சொற்று
னம்பந்த விழியார்மோகத் தழுந்தியில் லறஞ்செய்தானே
வெம்பந்த மிகழ்ந்துற்றானே விவரமாத் தெரிவதின்றே. (உஉ)

மூப்படி யினிலுற்றாரு முதற்றொழும் புகழ்சேர்முன்னோன்
மெய்ப்படி வினையேயாடி வியன்பணி மிகச்செய்கின்றே
ரெப்படி யிருந்திட்டாலு மிகபரங் கடந்தவீட்டி
லப்படிப் புகுவாரென்கை யறிஞர்முற் றறிந்தவாறே. (உங)

முற்செய்மா தவத்தின்மாண்பான் முதிர்தராப் பருவத்தேயக்
கற்செய்விக் கிரகமான கணபதி யருள்பெற்றுய்ந்தான்
சொற்செய்நூ லிளமைத்தன்று தொல்புவிப் புலவர்பல்லோர்
மற்செய்வான் படைகள்போலும் வண்ணமுங் கலந்ததாமே. (உச)

நல்லவர் பெரிதுபோற்று நம்பியாண்டார் நம்பிப்பேர்
வல்லவன்பகர்ந்த நூலின்வகை சொல்வார்சிலரே யுள்ளார்
கல்லதூடருளின் றென்றுகடைப் படுமதத்தோர் தம்மை
வெல்ல வன்னவன்போல் வானைவிரும்புநர் பலருள்ளாரே. (உடு)

நாரையூர்ப் பிள்ளையாரானலம் பெறுபனவப் பாலன்
சீரையான் வினவுமட்டிற் செப்பினேன்றிகழ் சோணாட்டோ
ராரைவாழ்நபாயன்றா னமண்மதம் புகாமற்காத்த
காரைநேர் சேக்கிழார் தங்கதையினிக் கழறுவேனே. (உசு)

நம்பியாண்டார்நம்பிகள்சருக்க முற்றிற்று.

ஆரூ திருவிருத்தம் - ஙகூ.

* சோழன் - அபயகுலசேகரசோழன்.

பதினொன்காவது

சேக்கிழார்நாயனார் சருக்கம்.

தில்லை நகர்க்கிடை யானியிற் றிகழ்தர லாமொர் விழாவினிற்
றொல்லை நலம்பெறு தமிழ்வளந் தோய்தரு தேய மளிப்பதா
லெல்லையில் சீர்பெறு மன்னரீ ரிருவரு மேவின ரியாரொனில்
வில்லை யுயர்த்தவன் வழுதியார் வேய்ந்தவன் வேங்கட வெற்பனே. (க)

அன்னவர் நால்வரின் மூவர்மற் றங்கிய நாட்டின ராதலான்
மன்னந பாயனெ னும்பெயர் வளவ னவர்க்குப சாரமிக்
கின்னண மென்ன வியம்பொணு வியல்பினெவாக வியற்றியே
தன்னர சாட்சிசெய் மண்டபந் தன்னிலிருக்கைசெய் தானரோ. (உ)

அவர்களொ ருப்பட லான்மகிழ்ந் தங்கொருநாவல னெளவையா
லிவருறு நாடுகொண் மாண்புகூ றிடுமொருபாட லியம்பினன்
கவளம தக்கரி வஞ்சியிற் காவிரிநாட்டிடைச் சோறுசெந்
துவர்புரையுந்தமிழ் பாண்டியிற் றொண்டைந ணுட்டில்வலோரென்றே.

அக்கவி கேட்டலுந் தொண்டைநா டாள்பவ னன்றிய மூவரு
மிக்கவ ரன்னவ ணுட்டிலே மேவின ரென்றசொ லால்வெள்கித்
திக்கறி யத்தகு சாட்சிநீ தேற்றுதி யென்றலு மென்செய்வான்
றக்கவு பாயம தாலுணர் தருகட னும்மதென் றனரோ. (ச)

மலைகடன் ஞாலமென் மூன்றினும் வலியனநல்கவல் லான்றனைக்
கலைவர்க ளாயநால் வேந்தருஞ் சத்தியமா விழைந் தாரொரு
வுலைவறு மொற்றர்க ணுடெலா மோடியுரைத்து சாவச்செய்தார்
நிலைபயன் காலமென் மூன்மொழி நிகழொலிப் பாடலோர் மூன்றினை. ()

வள்ளுவன் சொன்முனு னிடையெடா வழுவுரு வண்ணமூன்றே ட்டமைத்
தொள்ளுடைப் பட்டினிற் கட்டிமிக் குபசரித் தரசர்பா லுய்த்தனன்
புள்ளுலாம் பொழிலுடைக் குன்றையூர்ப் புனிதவே ளாளரும் புத்திரன்
றெள்ளுமெய்யுணர்வுடைக் கல்விதோய் சேக்கிழா னென்பெயர்த்தீரனே.

அதுவரக் கண்டுமிக் கின்புறீஇ யதிசயித் தவையினுக் கதுசொ
லுஞ், சதுரரிற் சோழன்மற் றையர்கள்பாற் றுழ்தகைச் சொன்மிகச் சாற்
றியீண், டிதுவிடுத் தவனீரீர் விழையொணு தென்றிரந் தவர்கடம் மிசை
வெய்திக், கதுமெனச் சிவிகையுய்த் தவனேநேர் காணல்வேட் டமைசொ
லிக் கண்டபின். (எ)

வந்தவற் கினியசொற் சொல்லியே வளவன்மற் றையருநன் கறியநீ
யிந்தநாட் டின்றுதொட் டிற்றெனக் கினியமந் திரியெனக் குலவென்றுன்
கந்தமார் குவளையந் தாரினன் கழறுமென் சொற்கொளிற் கடவனென்
பந்தமார் தருமுடன் பாடுறப் பண்ணியப் பாலியைந் தானரோ. (அ)

விழவு முடிந்தது வந்தேர் வேந்தர்த நாட்டிடை மேவினர்
தழல்விழி கொண்டவ ராடுபொற் சபையத னிற்பணி செய்வதாற்
பழமை குறித்திடு சோழனும் பழுதி லுணர்ச்சி யமைச்சனு
நிழறரு வெண்குடைமத்தியி னீர்மலி நாடளித் தார்களே. (கூ)

அவரவ ணம்புவி யாளுநா ளருக மதத்தவ ராஞ்ஞமலா
ரிவரை வசஞ்செய வேண்டுமென் றேயவ ணைய்தி யிணங்கலாற்
சிவபர னிந்தனே கொஞ்சமுஞ் சீவகனுதியர் சீலமு
நவரச சாரம் விராவியே நன்குரவின்றனர் நாளுமே. (கo)

அத்தக வோர்ந்தரி மர்த்தனற் காகனெதி ரச்செ யமைச்சனேர்
*வித்தகன் வளவனெ டிவரைநீ விழைத லொழித்திடு கென்னவே
சித்த முறுத்துரை செய்தலுஞ் செம்பொன் வழங்கி யனுப்பிவிட்
டுத்தம மாதவர் சரிதமியா னுரை வுணர்த்துக வென்றனன். (கக)

பண்டுதென் மதுரையி லுற்றகூன் பாண்டிய னிக்கொடும் பாவிகள்
விண்டுள நூல்வழிச் சென்றதால் வேதனை யுற்றன வாயிர
முண்டு தவிர்ந்தனை யாலுனக் கொப்பல னன்னவ னென்றுசொற்
றெரண்டுவர் வாயுமை பங்கன்மாண் போதி யுணர்ந்தத னுலுய்ந்தோர்.

பற்பல ரன்னவர் சரிதமிப் பாரிலு ளார்கள் பகர்ந்திடல்
சொற்ப மவற்றை விரித்துநான் சொல்லிடு மாறு துணிந்துளேன்
சிற்பரன் மெய்யருள் வேண்டுமாற் றேட விடுக்குதி யென்றுபோய்ப்
பொற்பதி கங்கொள்பொ னம்பலம் போற்றினனேந்து பொறிக்கொடே.

மந்திரி வேடம் விடுத்துநன் மாதவ வேட மணிந்தெழிற்
செந்திரு நாயக னடருந் திருவடி யேநனி சிந்தித்தா
னிந்திர னேரந பாயனென் றென்றென வேயெதிர் நோக்கினுன்
சந்திர சேகர புங்கவன் றண்ணருள் வாரி தழைத்ததே. (கச)

ஒருமொழி நீதரி னன்றியா னுதுகி லேனென வுன்னுமப்
பெருமதி யாளன்மு னுலகெலா மென்றெர்சொ லங்கு பிறந்ததா
லருளொளி யாமதை யேமுத லாவமைத் தம்பலத் தாடுவான்
றிருவடி வாழ்த்தி வணங்குவா மென்று முதற்கவி செப்பியே. (கஞ)

சீர்திக ழுந்திரு நாரையூர்ச் சிந்துர மாமுக னருளினுற்
போர்திகழ் நம்பியாண் டானெனும் பிள்ளையங் காதித் துணைக்கொடு
வார்திகழ் மென்முலை வாணித்தாய் வாக்கருள் வண்ணம் வகுத்தன
னூர்திகழ் செஞ்சடை யண்ணலா ரடியர்புராண மவிர்ந்ததே. (கசு)

சுந்தர னின்புறற் கீசனுர் தூநகைப் பரவைதன் வாயிலுக்
கந்தணன் வேடநீத் தேகுமவ் வவசரத் திற்றலைக் கங்கைநீர்
சிந்தலு சைக்குமவ் வேளையிற் சேக்கிழான் றன்செவி கேட்பநீ
யெந்தவி டத்திருந் தீர்த்தகண் டாயெனை சொலியெழுந் திட்டதே. (o)

* வித்தகன் - சேக்கிழார்நாயனார்.

ஒப்புறச் சிற்சிலோர் தாம்வரைந் துட்பொருட் கேட்டினைர்ந் திட்டபி
னப்புரா ணத்தினைத் தில்லையூ ராலயத் தேயரங் கேற்றினர்
பப்புகூட்டத்தரெல் லாங்கொளப்பலவயிற் சொல்வதற் காகவே
யிப்புகழ் பெற்றதூ லொன்றுமின் றீதுரைப் பார்ப்பலோ ரென்று ம.

கன்னிமுன் விண்ணுளோர் காணுறக காலெடித் தாடுமக் கடவுளார்
சங்கிதக் கண்ணரு ரந்தணர் தாமுமா முனிவருங் தகவுடைச்
சென்னியா மன்னனுங் கேட்பவே சேக்கிழார் வாக்கினுற் செப்பினர்
பின்னிவர்க்குருவெனப் புரவலன் பேணினு னென்பர்பல் பெரியரே. ()

அன்றுமு தற்பர சிவனிலா வாலய மெங்குமெ யடியர்தா
முன்றுதி செய்துயு மூவர்தம் முதிர்தமி ழோடிதுமோதினர்
பின்றுக டருமு மாபதிப் பெயர்முனி யப்புகழ் பேசினு
னின்று தெரிந்தள விப்புரா ணத்திடை யோதினனி யாதுமே. (உ0)

பாண்டிந ஞட்டிடை முன்னுறும் பழுதது சோழந ஞட்டினு
மீண்டிவ ராமுன மேதகித் திட்டவராய்நிகழ் சேக்கிழார்
வேண்டிய முத்தி யடைந்தனர் வென்றிவை வேலநபாயனு
மேண்டிக ழிந்திரர் நாணும்வீ டெய்தின னீச னருட்கொடே. (உக)

ஒருவராயே நிகழ் சேக்கிழா ரோர்சினுள் மன்னமைச்சாகிப்பின்
றிருவருட்சீர்விழைதருதவச் செல்வரா வாழ்ந்தமைதிகழவே
மருவுமன் னவர்புகழ்ச் சொல்லுமிவ் வயினமைந்துள்ளவோர் வகையபா
விருவகைப்படு நடைகாட்டுமா றெளிதினிற் றேர்வொற்கினியரே. ()

அண்டர்நாயகனெலும் பாரமிட் டம்பலத்தாடுவாரருடருங்
தண்டமிழ்ப் புலமைசால் சேக்கிழார் தஞ்சரித்திரமிவண் சாற்றினேன்
கண்டகண்ணுலிருட் கணுயுமெய் கண்டதே சிகனருட்காதையும்
புண்டரீகத்தயன் செய்தவிப் புவியுளார்மகிழ் வுறப்புகல்வனே. (உக)

சேக்கிழார்நாயனர்சருக்க மூற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உஉக.

பதினைந்தாவது.

மெய்கண்டதேவநாயனர் சருக்கம்.

கச்சிநகர்தன்னிலுறை யொருவேளாளன்
கான்முளையில்லாமையினுற் கலங்கிவாடி
நச்சிவெகுசோதிடர்பாற் கேட்டானந்தோ
நலமொருவனுனலு நவிலவில்லை
பச்செனுமேனிக்கவுரி பாலுண்டுய்ந்தோன்
பகர்ந்ததிருவெண்காட்டுப் பதிகத்திற்றின்
மெய்ச்சிசுவெய்திமொறு சொன்னதோர்ந்தவ்
விதஞ்செயற்காமனவியொடு விளைந்துபோனுன். (க)

சென்றவனத்தலத்தினிடை யுள்ளவான
திருக்குளமூன்றிடத்தினிலுந் தினமுமூழ்கிக்
குன்றவில்லார்சந்நதியி னின்றுபோற்றிக்
குறித்தபடியேகுழந்தை பெற்றுக்கொள்வ
தொன்றலதப்பதிகமொழி யினைப்பொய்யாக்க
லொன்றெனவேதுணிந்து பெரிதுபாசித்துற்றான்
மன்றன்மதிச்சடைப்பெருமா னுள்ளங்கொண்டு
மதித்திட்டானடவாத வாறொன்றுண்டோ. (உ)

அப்புனிதற்கருமகவாய்க் கதிசேர்கென்ன
வரன்கயிலைக்கிரியினில்வா ழடிமையாமோர்
மெய்ப்புலவற்கருள்செய்திட்டா னவனவ்வாறே
மேதகுநாளையிற்பிறந்து விளங்கலுற்றான்
கைப்புதல்வனுடனவ ரவ்வூரில்வாழ்ந்து
களிகூர்ந்தார்கண்டவரு மதிசயித்தார்
தப்புனைத்தசோதிடர்பின் னுரியவைந்தாம்
தானத்தோன்றனைக்குருப்பார்த் தானென்றாரே. (ஊ)

அன்னதவச்சேய்பிறந்தோ ராண்டின்பின்ன
ரன்னையுடன்பிறந்தவரு மருமைமாமன்
றன்னதுபேரன்பதனு லழைத்துச்சென்று
தகைகொடிருவெண்ணெய்நல்லூர் சாரச்செய்து
பன்னரியபெருஞ்சிறப்பி லமைத்துமேலாம்
பரமானந்தக்கடலிற் படிந்துவாழ்ந்தான்
கன்னலெனக்குதலைமொழி பயின்றேயந்தக்
கான்முளைபற்பலர்மனமுங் கவர்ந்ததம்மா. (எ)

அக்குழந்தைவயதொருமூன் றுகிமுன்றி
லகத்தில்விளையாடிடும்போ தாகாயத்தின்
மெய்க்குளிகைவலிகொடுபோ மொருசித்தன்பான்
மேனட்செய்தவத்தினழல் வீசக்கண்டு
பக்குவமுற்றமையுமுணர்ந் திறங்கியோர்சொற்
பகர்ந்தாங்கோர்கணபதிதன் பாலுய்த்தைய
மிக்குருவாற்றெளிதியென்றிட் டவற்குக்தேற்ற
லினியுனதுகடனெனச்சொற் றேகினானே. (ஏ)

அக்கணமச்சேய்விழிக்கம் மூர்த்திமெய்யா
மானேமுகமாதியசீ ரவிரக்காட்டித்
தக்கமொழிபலபேசிற் றதனுலங்கே
சந்ததமும்வசித்தரிய தவமேசெய்தான்

மக்களினமிகவியந்தா ரவனைத்தேற்று
மாறுவெண்பாவெண்பதிற்றூர் நான்குபாடிற்
றெக்கணமுஞ்சிவசொரூப மாகப்பெற்று
னியாவருமெய்கண்டானென் றியம்பினரே. (சு)

சம்பந்தப்பிள்ளையன்றி மற்றூர்சேயுஞ்
சரிசொலற்கொவ்வாதெனவுஞ் சாற்றினர்கள்
கம்பந்தக்குழைச்செவியா தியசீர்தோற்றக்
கல்லாலின்கீழிருந்த கருணைமூர்த்தி
வெம்பந்தமறுத்தடியார்த் தேற்றக்கொள்ளும்
வீரூர்ந்தசிவஞான போதநூலைக்
கும்பந்தன்னிடையுதித்தோன் றமிழாற்செய்து
குருத்துவம்பெற்றிரவியெனக் குலவினனே. (எ)

பின்னுமவனைத்தனைபாட் டினைத்திட்டானே
பிரமன்மனையவளறிவாள் பெருமைசால
மன்னுதவமுற்செய்தார் பலர்வந்தன்னென்
வழிபாட்டாற்சித்திமுத்தி வாய்ந்துய்ந்தார்கள்
பன்னுசகலாகமபண் டிதப்பேர்சூடும்
பனவகுருவவன்குலத்தோர் பலர்தம்பாலும்
பொன்னுரிமையாலடைந்தாங் கியன்றதாமப்
புதுமைவினுய்க்கண்டுசில போதுபோக்கி. (அ)

தாய்முலைப்பான்மணங்கமழ்பல் விழுந்துவேறு
தந்தமுலைப்பதன்முனச்சேய் சாற்றுகின்ற
வாய்மையுணர்ந்தநிசயிக்கும் போதோர்தொண்டன்
மனந்தேறவாணவமா மலத்தின்வெம்மை
வேய்முளைத்தோட்கவுரிபங்க னருளல்லாது
விலகிடாதெனலுமதை விளக்கிவெல்சீர்
தோய்மகிமைத்தாதெறியுங் காட்டுவாயோ
சொல்லுகவென்றப்பனவன் றுணிந்துகேட்டான். (சூ)

கேட்டலுமஃதிங்ஙனந்தா னிருக்குமென்றக்
கேடிலான்முகநோக்கிக் கிருபைசெய்தான்
வாட்டடங்கட்கவுரியையு நீத்துமேனுண்
மலரவனன்முகத்துதித்தார் மகிழக்கல்லான்
மாட்டமர்ந்தான்றிருவுருவாய் வயங்கக்கண்டு
மனத்தகந்தீர்ந்தப்பனவன் வணங்கினனந்
நாட்டனதுநிலையவனுந் தோயச்செய்து
நாமமருணந்தியென நவின்றிட்டானே. (கo)

அப்பனவ னந்தமுறை யவ்வூர் நோக்கி
யவனூர்விட் டேகுகையி லடியார் சில்லோ
ரெப்பயனும் வல்லானென் றிடுஞ்சொல் லோசை
யினேவினவி யொருமடமா தெதிர்சென் றஞ்சா
திப்படியி லெம்மினர்நெற் புழுங்க லாலாட்
டிடும்பருவ மறிவாளே வென்னக் கேட்டுத்
தப்பறையேன் மின்னென்ரு ளென்பா ரஃதே
தடுத்தாள்வாற் காண்டரற்கோர் சகுனமாதோ. (கக)

தங்குரவன் மெய்கண்டா னென்னும் பாலன்
றனக்கடிமை யாதல்கண்டு தந்தைதாயு
மங்குளசுற் றத்தினரு மிவனே யன்ரு
னடிவணங்கத் தகுங்கொலென வயர்ச்சி கூர்ந்தார்
கங்குல்விடிந் தனேயமனத் தந்த ணாளன்
கருதுமவர் நினேவறிந்து கலங்க வேண்டா
மெங்குலதே வனேயனவன் பெருமை நுந்த
மிதயத்தான் மதிப்பரிதென் றியம்பினனே. (கஉ)

ஆகமத்திற் சொன்னவிதிப் படியே யெல்லா
வபிடேகங் களும்வகிக்கு மாதி சைவர்க்
கேகமணி விளக்கனேயா னருணந்திப்பே
ரேய்ந்ததினந் தொட்டவர்தம் மினஞ்சே ராமல்
யோகசமா தித்துறவோர் நிலேமை யெய்தி
யுலப்பருஞ்சீர்த் தன்குரவ னுரைத்த நூலைப்
பாகமுறச் சிவஞான சித்தி யென்னப்
பாடியா னடியருய்யப் பரப்பி னனே. (கங)

மெய்கண்ட தேசிகனூரா னுய்ந்த
வெண்ணெய்நல்லூ ரிடத்திலிச்சை மிகக்கொண்டிற்ரூன்
கைகண்ட சித்தியுட னவனு மன்னேன்
கண்ணருளா லுய்ந்தோனுங் கவினு நாளின்
மைகண்ட மிடற்றிறையென் றவனைப் போற்று
மறைஞான சம்பந்தன் மாயை யென்னும்
பொய்கண்ட கண்டபரம் பொருளுங் கண்டு
புகார்நகர்வெண் காடனெனப் பொலிவுற் ரூனே. (கச)

திருமலிமெய்கண்டபிரான் வெண்ணெய் நல்லூர்ச்
சிந்துரமாமுகப் பெருமான் றிருக்கண்ணேக்காற்
பொருவரிய சிவஞானச் செல்வத்தூடு
பொருந்தியடிய வரிதயப் பொக்கமாற்றிக்

கருவண்டுயாக்கையினிடை யேகமாக்கக்
கலந்தனன்னன்னவன் வடிவங்கவினுமாது
பெருகியவாலயமமைத்து வணங்கிப் பல்லோர்
பிழையறுபேரின்ப நலம்பெறுகின்றாரே. (கரு)

சூரியனுண் மற்றிரண்டே சுடருந்தோய்ந்து
தலங்குதல்போன் மெய்கண்டான் சொருபாந் தன்னிற்
சீரியனு மருண்ந்தி தேவன் முனுந்
தெருளுண்மறை ஞானசம்பந் தப்பேரோனுங்
காரியமா யவன்றனேக்கா ரணமாக் கொண்டு
கவின்றதனும் பிரித்தவரைக் கழற வில்லை
நீரியல்வா ரிதியுடுக்கு முலகினின்னு
நிலத்திலவர்கதை பலவாநிகழ்த்து வாரே. (கசு)

மெய்கண்ட தேசிகனேடவன் கணேக்கம்
விரவுமருணந்திப்பேர் மிக்கோன்முனும்
கைகண்டபேறவனு லடைந்து வாழ்ந்த
க்டந்தைமறை ஞானசம்பந்தனு மாமின்னேர்
மைகண்டமிடற்றிறை வனருளாலுய்ந்த
வகையொருவாறுரைத்தேன் பின்மாயாபந்தப்
பொய்கண்டமனந் தெளிந்தவுமாபதிப்பேர்ப்
புனிதனதுபவத்திறமும் புகலுவேனே. (களி)

மெய்கண்டதேவநாயனர்சருக்க முற்றிற்று.

ஆடு திருவிருத்தம் - கூடுஅ.

பதினேழாவது

உமாபதிதேவநாயனார் சருக்கம்.

திருவினடிக்குஞ் சிவனெடுசேர்த்துச் செப்புமு வாயிரர்தம்மி, லலலியிலுணர்ச்சி பெறுமுமாபதிப்பே ரேய்ந்தவ னெருவன்வந்துதித்துத், தொல்லைவல்வினையைத் தொலைத்தமெய்யருட்சீர் தோயுமாறே மிகக்கருதி, வல்லையாண்டருளத் தக்கசற்குரவன் வரவுபார்த்திருந்தன்மன்னே. (க)

பக்குவமுதிர்ந்துங் கருமநூற்சடங்காற் பரதவிப் பாரொடுபழகித், திக்குமுற்றுணரு மாலயபூசைத் திருப்பணி யாதியுஞ்செய்தி, விக்கு தொண்டையன்போற் பிறருடனிந்த விதமெதித் துரைக்குமாறின்றி, யிக்கும்வெண்ணீறு மிகைபடப்புனைந்தே யைம்தெழுத் தருச்செபித்தமர்ந் தான். (உ)

அந்தாளதிவன் ஞச்சிரமத்தோ ணுமறை ஞர்னசம்பந்தன்
செந்தழன்மேனிச் சிவபிரானுரையாற் றில்லையம் பதியினிற்சென்று
பைந்தமிழ்க்கவிக்காத் தேர்நடைதருசீர் பதிதரு தெருவினேர்பாங்க
ரிந்தமாதவமே தியன்வருமாறே யெண்ணுபு படித்திருந்தனனே. (கூ)

அன்றுதான்பூசை செயுமுறைவரலா லவனெரு சிவிகையிலருகு
துன்றுதிவட்டி முதலியசிறப்புத் துலங்கவந் தனன்பகற்குருடா
மொன்றுபட்டமரத் தேகுகின்றதெனு வுரைத்தனன் முனியவனுருவ
மன்றுளாடினராத் தோற்றலினிறங்கி மலரடி மிசைவிழுந்தனனே. (ச)

தொழுமிவனெழுமுன் னவனெழுந்தோடத் தொடர்ந்திவ ணேடினன்சூழக்
குழுமினர்பலரீ தென்னெனவியந்தார் கூடவுஞ் சிற்சிலர்போனூர்
பழுதிலம்முனிவன் சென்றுசெங்குந்தர் பாவடிக் கூழ்கையேற்றருந்த
நழுவுதன்முழங்கை வழியிவனயின்ரு னுட்டினர் நக்கிகழ்ந்தனரே. (ஞ)

அற்றைநாட்பூசை யடித்தநாண்முறையோ ணுற்றின னவ்விருவோரு
மொற்றைபட்டொழுகிச் சிறிதுநாளோயிற்றம் முளத்தது பூதியிலொத்தார்
மற்றையசரித மொன்றுமக்குரவன் மாட்சியென் றியான்வினவில்லேன்
பொற்றைவிற்பரமன் றிருவடிமலரிற் புகுந்ததற் கையமின்றம்மா. (சு)

குரவனீங்கியபி னவனருட்டிறந்தோய் கோளரி யேறனன்கோதி
லிரவலனகி முறைப்படிதவமே யிழைத்தன னவனுடலினத்தார்
பரவுபண்பினற்கித் தீங்கியன்றிடலென் பாவமென் றிரங்கினர்பணங்காட்
டரவுலாஞ்சடையார் விடைக்கொடித்திருநா ளானிமா தத்தணுகியதே.

அத்திருநாளின் முன்னேநாளிரவே யாங்குளார் பலர்கனவினும்போய்ச்
சத்திமுன்னடிப்பா ரியாந்திருக்கோயி றனிலிலே முமாபதிமுனிவ
னத்தியபூசைப் பெட்டகக்கோயி னண்ணுபு வசித்துளேமென்ரு
ரித்திறமுணர்ந்துங் கொடியுயர்த்தினராங் கேறிடா திற்றுவீழ்ந்ததுவே.

அவ்வதிசயங்கண் டரசனும்பிறரு மம்முனி யிருந்துழியடைந்து
செவ்வனக்கமலத் திருவடிபணிந்து சிவன்செய லனேத்தையுஞ்செப்பித்
தவ்வருங்கருணே யுறுமவனுடன்போய்த் தன்மனேப்பெட்டகந்தருவித்
தெவ்வமில்கோயிற் கொடிமரத்தருகி லியாவருங்காணுறத்திறந்தான். ()

முன்றனேர்குருப்பின் போனநாட்டரித்த முகுளநாண் மலர்த்தி
ரண்முழுது, மன்றணிந்தனபோன் றிருக்கைகண்டியாரு மதிவியப் பொடு
மிகமதித்தார், குன்றவிற்பெருமான் கொடியுமேறியது குலத்தினர் களு
மிகமகிழ்ந்தார், மன்றலந்தடந்தோண் மன்னவன்பலகால் வணங்கியோர்
வேண்டுகோள்வகுப்பான். (கo)

உன்றவத்தருமை யுலகமுற்றுணர்ந்த தென்னினு மொருமடாலயத்
தும், றின்றமிழ்ப்புலவோர் களுந்தவத்தினரு மிறைஞ்சுமா றியற்றிட
வேண்டு, மென்றனனிசைவு கண்டுதான் கொற்றங்குடியிலஃ தியற்றியீந்
திட்டான், மன்றகத்திறைவ ராருடரும்பயனே மாற்றிட யாவரேவல்லார்,

அம்மடத்தவன்போய்ப் புகுந்தினத்தரிதன் னரிவையுமயன்மனை யாளுந்
தம்மலர்ப்பீட மாமெனவிழைந்து தாங்களு முடன்புகுந்தனராற்
செம்மணிக்கவினர் தானைமாதவரும் புலவரா தியர்களுஞ் செறிந்தார்
கைம்மணிப்புலமைக் காழியூர்ப்புதல்வன் கழகமே யெனக்கவின்றதுவே.

கோயின்மான்மியமுஞ் சேக்கிழார்புகழுங் குளிர்திரு முறைபெறுங்
கதையும், பாயிரத்தெழில்சேர் புராணமாச்செய்து பழுதில்சித்தாந்த
நூல்பதினொன், காயினவவற்றுட் சிவப்பிரகாச மருட்பயன்முதலிரு
நான்கு, வாயினுலியற்றிச் சைவதேகிகனு மாட்சியும்பெற்றனன்மன்னோ.

குலையொடுபழுத்தாங் கனைவரும்வேள்விக் கொலைசெயுங் குலத்
தினிற்பிறந்தோ, னிலையிடுவார்க்குங் கதியைநல்கிடுந்தன் னிணையடிப்பெ
ருமைதேர்ந்தெனைத்தும், புலையுறுச்சைவா சிரியனுகிடவும் புரிந்தருள்
புராணபுங்கவன்முன், மலையணுவாக வணுமலையாகச் செய்யவும் வல்ல
வன்முனே. (கச)

மைந்தருந்தேவர் தாமுமிக்குவப்ப வயங்குகொற் றங்குடிமடத்தி,
லந்தமாமுனிவன் வாழுநாள்களன்க வம்பலத் தாடல்கூரமலன், முந்த
வீடடைந்தோ சொருவருஞ்செய்யா முறையவன் றனைக்கொடுமுடிப்
பான், கந்தனேப்பயந்த திருவுளந்தன்னிற் கருணையாற் கருதினனன்றே.

அத்தினமெந்த வூரினிலிருந்தோ வந்தமும் பிறப்பினிலரன்பாற்
பத்திசெய்ததன்பின் பிறந்தவனுமோர் பஞ்சமன் பன்னிதன்னெடு
மூத்திதானடையுமிமித்தமோர்மனத்தின் முதிர்புகழ்த்தில்லையிற்சேர்ந்தா
னத்தியமனவி யபக்குவியானு னுயகன் பின்வராளம்மா. (கசு)

அவன்பெத்தான்சாம்பா னெனச்சொல்வாரவள்பே ரறைபவர்க்
காண்கிலனன்னோன், சிவன்பதங்கருது மாறவனுவருவ சிந்தனே யேய
வள்செய்தா, னுவந்தசில்பணியா லுடல்புரந்ததற்பி னும்பரு முனிவரு
முலவுந், தவந்தழைத் திடுமவ் வூர்த்தெருவிளக்கித் தகைமலிசிகரிகை
தொழுதார். (கள)

இன்னணஞ்சிலகா லியற்றலுமிவாட் டாயனூர் கழுத்தரிந்திடு
மட், டின்னல்செய்தவர்தந் திருவுளமிரங்கி யிரவெலா மவன்மனக்கன
விற், பொன்னதாற்சமைந்த வம்பலமுதலாம் பொற்பெலாம் பொலிவு
றக்காட்டிப், பின்னரோர்தினத்திற் பிறைச்சடைமுதலா முறுப்பெலாம்
பிறங்கநேர்வந்தார். (கஅ)

அங்கியில்விழுந்தார் கழுத்தறுத்திட்டா ரசலமேற் போய்நிலத்து
ருண்டார், பொங்கியகடனீ ரிடைப்புகுந்திறந்தார் பொறியடக் குபுத
வுஞ்செய்தார், தங்கினோதுறந்தார் தமிழ்த்துதிசெய்தார் தாங்களுங் காண்
பரிதாய, செங்கிரியனையாற் றில்லையிற்பெத்தான் சேவைசெய் திடலரு
மையதே. (கக)

காண்டலுமுருகிக் கண்கணீர்சொரியக் கரங்குவித் திறைஞ்சியேஎி
ழுந்தா, னீண்டவனறியாத் துணைப்பதத்தொருவ னின்விருப் பியாதென
வினவ, வீண்டையன்படையாப் பெருங்கதியன்றி யாதும்வேட் டிலனெ
னவிசைத்தா, னுண்டவணிரக்கும் தகைமையோரான்மா வடைகுவதரி
தாமாலோ. (உ0)

தலைகளையுடலிலக்கனலிடையெரித்துந்தவளமால்விடைமிசைத்தகைசான்
மலைமகண்முருகோ டுடனுறச்சகலவானவரிடையரற்கண்டு
நிலைபெறுபயன்வேண் டாதழிந்திட்ட வுயிர்களு நிலத்திருந்தனவாற்
புலையரிற்பிறந்த வுயிரிதுகேட்ட புதுமையென் னெனப்புகல்வேனே. ()

தேவர்தானவர்மா முனிவரர் மனிதர் திசள்களிற் றவஞ்செய்
தோர்க்கெல்லாஞ், சேவதன்முதுகிற் பலர்தனைச்சூழச் சேணிடைத்
திகழ்தருமீசர், ஞவலங்தீவிற் றில்லையிற்பெத்தா னனவினிற் றனிவரு
மாட்சி, யாவரோயறிவா ரவன்செயுந்தவத்தை யென்னென வியர்துரைப்
புதுவே. (உஉ)

அவ்விதவரங்கேட் டலுமிகமகிழ்வுற் றரனிடக் கையினருக்கோலி,
செவ்விதிற்பிடித்து வலக்கையினெழுத்தா ணியையதிற்சேர்த்துமெய்ய
டியார்க், கெவ்விதத்தினுமிக் கெளியவன்சிற்றம் பலவன்கொற் றங்குடி
யாற்கு, வெளியேயெழுது நீட்டிதென்னென்னின் மண்மிசை வருபெத்
தான்சாம்பான். (உட)

தனக்குநீபேத மறும்படிதீக்கை செய்துமுத் தியிற்றனிசேர்க்கை,
யெனக்குநல்லுவகை தருமுறையென்றோர் வெண்கவி யெழுதியன்னவற்
றோ், தனக்குவீடவனே தருவனங்கேகென் றுரைத்துருக் கரந்தனனவன்
பேர, தினக்குழாம்வருந்தி யழைப்பினும்போகா தியன்மனை யொடுபணி
செய்தான். (உச)

என்பணிசெய்தா ரென்னினுடோறு மிந்தனக் கட்டிரண்டெடுத்
துப், பொன்பரிந்தளிப்பார்க் கொன்றுவிற்றுதர போசனஞ் செய்துமற்
றொன்றை, மின்புலிஞ்சடையா னடியர்வாழ்மடத்தின் மெல்லெனப் பிற்
புதைத்திட்டா, ரன்பசரயரன்கும் றவரதையெடுத்தே யவென முழுதுமாற்
றினரால். (உரி)

ஒருதலைச்சுமையாம் விறகதன்விலையா லுண்பன முழுதுதவினு
ளும், பெருமடத்தவ யாவுமற்றொன்றும் பிழையற நடக்கைகண்டவ
ரு, * மிருவர்கைக்கரசாவ் வொன்றுபெற்றெண்ணு யிரருமற்றவர்க்கி
ரட்டியருக், திருவொடுபொலியச் செய்தருள்சிவனுஞ் செட்டியென்
றுணர்பவர்சிலரே. (உசு)

* இருவர் - திருநாவுக்கரசுநாயனாரும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரும்.

மதுரையூர்மறுகில் விறகொடுபோயவ் வருத்தமுற் றுணர்தரும்
வள்ள, லதுசகியாராய்த் தமதுகைத்திருச்சீட் டருமைகுன் றுபுசுமாட
தன்கீழ்ச், சிதறும்வோர்வையினும் றினநனைந்துலருஞ் சீர்த்தியுங் கருதுபு
பேராற், றெதுவுமோர்ந்மித்த மின்றியே வெள்ள மிருகரைப் பிறழல்
செய்தனரே. (உஎ)

அந்தநாளினிலவ் விருவருமுணவே யயின்றிலர் மடத்தமுதடுவா
ரிந்தனமிலதாற் பொழுதுபோக்கினர்வே றியாவனெங் கோபுகுந்திரந்து
வந்தபின்பூசை நடந்ததரற் றினமும் வரும்விதமி யாதெனவினவி [ரூர்.
லெந்தஞாயத்தோ வீங்கொருபெருங்கட் டிருக்குமின் றின்றெனைப்புகன்

அத்திறங்கருதி நாளையங்கதுவீ முமையமா ரெனவிளுவுதிரென்
றுத்திசொற்றிருந்த வுமாபதிமுனிவ னுளத்தரன் சிலகுறிப்புணர்த்த
நத்திநெஞ்சழிந்தா னஞ்ஞனேர்கர னல்லவர் வியப்புறமுழுவாப்
பத்திஞானத்தோ ரின்புறவிரித்துப் படிப்படி யுரைத்தனன்சாற்றுவான்.

அவ்வுரைபெற்றுர் நிற்கவென்றவன்பா லறைந்துபோ யருண்முனிக்
குரைத்தா, ரிவ்வுழிக்கொணர்மி னெனைக்குலமுறைமுற்றிகந்தழைத் தன
னவனேகிச், செவ்வுருச்சிவனே யிவனெனைக்கருதித் தெண்டனிட் டனித்
தனள்சீட்டை, யெவ்வுலக்கத்தியார் பெற்றனரிப்பே றெனக்களித் திரு
கரத்தேந்தி. (கூ0)

கவுரிதன்வளைக்கை பற்றியதிருக்கைக் கவினெழுத் துணர்ந்துகண்
சாத்தி, மவுனயோகியரும் பெறலரும்பேறு வழங்குவான் றன்னெதிர்
வைத்துத், தவுதலிலுணர்ச்சி பெற்றவர்சிலரும் தன்னரு கிருந்துபார்த்
துவக்க, நவுமுதலெழுத்தோ நாந்துளானருளா நாடியன் னவன்றலை
தொட்டான். (கூக)

தொடுதலுமவன்றன் னுடனெடிப்பொழுதிற் சோதியாய் வெளியி
னிற்கலந்த, தடுதொழிற்கூற்றை யடர்கழற்பெருமா னருட்டிற மாரறி
கிற்பார், நடுநடுங்கினரா யங்குளார்பலரு நன்கவன் பெருமையோர்ந்த
மைந்தார், விடுபடும்வினையாற் கக்குலத்துடலம் வேதிய னமைத்தோர்
வியனே. (கூஉ)

அன்றிலின்பேடொத் தவன்மனைவெகுவா யலமரற் றெரிந்துசிற்
சிலர்பேரய், நின்றிருக்கணவன் முத்திபெற்றுய்ந்தா னீயுமேன் றனசெய்
தீண்டிருந்தாற், றென்றிசைச்சமன்மு துவர்தொடாநெறியிற் செல்லலா
மென்றலுந்திருத்தி, யின்றியமனத்தாளாகியங்காட்டி னிறையெதிர்போய்
முறையிட்டாள். (கூங)

வெள்ளநீர்த்தடையா லொருதினங்கட்டி விறகிடாநிமித்தமென்
கணவற், கொள்ளருமுறையான் மடத்தினுட்கொடுபோய்க் கொன்றன
ரென்றவள்கூற, வள்ளனீர்ப்புவியி லப்பெருங்கிழை யதிகரித் திடுதலி
னரசன், வள்ளலந்தகைசா லம்முனிவுசிக்கும் வயினடைந் தன்பொடு
ணங்கி. (கூச)

தினந்தினம்பணிதாஞ் செய்ததுமொருநாட் செய்திடப் பெற்றிலர் மையுஞ்சேர்த், தனந்தலற்றவடான் முறையிடுமோசை யளவறப்பரந்த தாலடிக, ளினந்தனேப்புனைவார் களும்புறச்சமயத் தினரு நன்குணர்ந் தஞ்ச, முனந்தருமுத்தி மற்றுமோருயிர்க்கும் வழங்கலே கடனென மொழிந்தான். (கூடு)

இதுவுநம்பெருமான் றிருவருட்குறிப்பே யிசைபெருக் கிடும்பொரு ட்டென்றவ், வதுலமாமுனியோர்ந் ததுபெறத்தக்க வாருயி ரின்மையா லவற்கே, மதுரமார்தருகாய் தினந்தருமுள்ளி வண்செடி யொன்றிருப்ப துகண், டுதுபெறக்கொடுக்கின் றுமுனுட்கருத்தின் படியென வுரைத்த னன்மன்னே. (கூசு)

மன்னனக்கணமே பறையறைவித்து வரத்தக்கார் பலரையும்வருவித் தன்னமாமுனிவ னடிதொழவவன்போ யச்செடியருகில்வீற்றிருந்து . பொன்னதாற்சமைந்த வம்பலமுடையார் பூங்கழல் கருதியேபுரைதீர் தன்னதுகரத்தாற் றொட்டனனெளியாய்த் தனிவெளி யிடைக்கலந்ததுவே.

கண்டவர்பலரு மெய்மையாமுத்திக் காரணங் தெரிந்துளங்களித்தா ரண்டரூர்வரையே யவனிசைபரந்த தாருயி ரனேயனேயிழந்தாள் . [ண்டு விண்டசொன்மறந்து முன்னெனத்தொண்டு விரைந்துசெய் திடுமுணவு சண்டவாதனேதீர்ந் திந்திரனுலகோர் தமசெனத் தழுவவேகினளே. ()

அந்தமாமுனியு மன்னனுமனேயா ரகிலமீ தவிர்தருநாளிற் கந்தகாண்மலரோன் வேதமுறுதற்கட் கடவுளா கமப்பெருங்கடலுஞ் செந்தமிழ்ப்புலவோர் கழகமுமடவார் திரளுறுங் கற்புமானினமு மெந்தஞாயமுமோ ரிடருமெய்தாதே யிலங்குறு மென்கைசத்தியமே.

கற்றைவார்சடையார் கைத்திருச்சீட்டுக் காண்டலுங் காட்டினன்கருத்தொத் தற்றையேமுத்தி யளித்தவன்றனிவீ டடைந்தது மறையவேண்டுவதோ மற்றையோரறியா தடைபவர்தாமு மாநிலத் திற்பலராமா லெற்றையுமழியாப் புகழ்நிறீஇக்கதிபெற் றிடுதலே யேற்றமாமம்மா.

முள்ளியின்செடியு மடைந்தசேயாமான் முத்திமாத் திரம்பெறலரிதன் றெள்ளிதுங்கொடியோர்க் கிடர்மிகவிளைத்திட் டேத்துவர்க் கின்பமீந்தருளி வள்ளிநாயகனே மாயனேவெனப்பார் மதிப்பவாழ்ந் ததன்பின்வீடடைத தெள்ளிமையாமென் றுணர்ந்துழைக்குருவுந் திகைகடற் புவியிலுள்ளாரே.

திண்புவித்தவரி லுயர்ச்சி மிக்கடைந்து செழுந்தமிழ்ப் புலமையுஞ்செய்த வண்புகழ்க்கட மேருயுமாபதிமுனிவன் வான்கதை யுணர்ந்தவாவகுத்தேன் பண்புணர்தமிழான் மாயவன்புகழேபாடியு மாடியும்பணிந்து தண்புவிமகளே மகவெனப்பயந்தான் சரிதமுஞ்சற்றுரைப்பேனே. ()

உமாபதிதேவநாயனுர்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கூ அ.

பதினேழாவது

பெரியாழ்வார் சருக்கம்.

பாண்டிநாட் டினிற்சதுர கிரியருகில் வில்லிபுத்தூர்ப் பதியென்
றொன்றுண், டேண்டிகழ்வே தியர்வசிக்கு மாண்பதுநா ராயணன்வா
ழில்லம்வாய்ந்த, தாண்டிகலோ கஞ்செய்தவப் பயனேபோன் றொருபெ
ரியோ னவதாரஞ்செய், தீண்டியநான் மறைச்சடங்கொவ் வொன்றுக
டப்பவளர்ந் திலங்கினனே. (க)

பத்தியுளா னமுந்தவமும் பட்டர்பிரா னெனும்பெயரும் படைத்
துகல்ல, சித்திமுத்தி தருந்துணையாந் திருவெழுத்தோ ரெட்டுநனி செபி
ப்போனுகி, மத்தியிற்றன் மரபினரால் வடமீனேர் மனையவளும் வாய்க்
கப்பெற்றிட், டித்திறமாங் குறுநாளிற் பாமாலைபூமாலையிரண்டுஞ்செய்து.

கரும்பாந்தண் மிசைநடிக்குங் கமலமலர்ச் சேவடிக்கே கனிந்துசாத்திக்
திரும்பாத வீடுபெறச் சிந்தித்து வருநாளாங் திருநாளொன்றிற்
பெரும்பார்மின் னொருசிறிய மகவாய்ந்த் தாவனத்தோர் பிருந்தைமீது
வரும்பானு வெனக்கிடந்து வாய்விடக்கண் டெடுத்துவந்து மனைபாலீந்தான்.

அம்மகளை யவள்கரத்தில் வாங்குதலு மிமயமலை யரசன்றேவி,
மைம்மலிநேர் கவுரியினைப் பெறுநாளின் மகிழ்ந்தாங்கு மகிழ்ந்தாள்
கொங்கைச், செம்மணிக்குன் றருவியெனப் பால்சொரிந்த தருத்தியணை
சேர்த்துப்போற்றி, யெம்மதுமா தவப்பயனே யிறும்பூதே யெனத்தா
லாட் டிசைத்தாளன்றே. (ச)

பொற்றும ஈபியினுன் புணர்மனையாய் நான்முகவன் புதல்வியாய்ப்
பொன், விற்றுங்கு புயத்தொருவன் விடுந்தேரா யெண்டிசையின் மேவி
யாளப், பெற்றுரை முனிவரரை மானிடரைச் சராசரத்தின் பெருக்கந்
தன்னை, நற்றுயாய்ப் பெற்றவளை மகவெனக்கொண்டார்பெருமை நவில்
வரியாரே. (டு)

ஆண்டாளென் றொருபெயரு மணிந்துவளர்த் தார்வயதைந் தாறே
ழெட்டாய்த், தூண்டாத மணிவிளக்கொத் தவிர்வுற்று ளருந்தமிழ்த்தீஞ்
சுவைநன்கோர்ந்தா, ணீண்டாணுள் ளூரிமைமனை யாட்டியெனல் விளங்
குமுன்பே நிறையுமன்பு, பூண்டாராய்த் தந்தையுந்தா யருமகிழ்ந்தா ரறி
ஞரெலாம் புகழ்ந்தார்மன்னே. (சு)

அன்னணமாங் கியனளி லணிக்கூட லம்பதிவா முரசர்கோமான்,
பொன்னமைந்த பெருங்கிழியொன் றினைத்தனரண் மனைவாயிற் புறத்திற்
றூக்கி, யின்னதறச் சொலவல்லான் றெழுந்தேவே யென்றேவென் றிசை
த்திட்டந்த, நன்னலமிவ் வுலகமுழு தொலிதரத்தோற் பறைச்சாற்று
நடப்பித்தானால். (எ)

அந்தவொலி யுணர்ந்தரிய தமிழ்ப்புலனம்ப் பட்டர்பிரா னுக்கும் நெண்ணின், மைந்தருமன் னனும்பார்க்க வக்கிழியைச் சொற்கவியாம் வாளாற்கொய்து, செந்தகைப்புட் பரிமிசைமால் பலதேவ சொவோனிற் நிகழக்காட்டிப், பந்தமற்றோர்க் கேயினிதாம் பல்லாண்டுத் துதியுமன் பிற் பாடினனே. (அ)

மன்னனுட னெட்டெழுத்துந் திருமண்ணு தியசீரும் வாய்க்கப்பெற் றுத், தன்னகரத் தழகனுக்கா லயச்சிறப்பு மேன்மேலுந் தழையச் செய்து, பொன்னணியா டைகண்முதலா வனபிறவு மவனடியார் போ நும்போது, மென்னலளித் தான்கிழிகொய் தலிற்பெரியாழ்வானெனப்பா சினைத்ததன்றே. (கூ)

தக்கபெரி யோர்பலரு மிவன்றிருப்பேர் விட்டுணுசித் தன்றுனென்றுர் மிக்கசிறப் பொடுபோயவ் வேதியன்றன் வில்லிபுத்தூர் மேவிவாழ்ந்தா ன்க்கன்றித் நுழ்ச்சியென மற்வாமம் நினைந்தோறு மலர்பூமாலை மைக்கருமா முகிலனைய மாயனுக்கு வனைந்தணிந்து வழிபட்டானே. ()

பாமாலை யினுமன்பி னெடுவெகுவாக் கண்ணனிசை பயின்றுன் கேட்டுப், பூமாதி னங்கிசமாம் புத்திரியு மவன்மோகம் பொலியக்கொ ண்டா, டாமாவந் தெவரேனும் விழைந்தாலு மவர்வெறுக்கத் தகுஞ் சொற்சொன்னு, ளாமாறு தானுமவன் வைபவமா தியகவியி லமைதகிட் டாளே. (கக)

அந்தமுள கூறையும்பொற் பணிமுதலா வனவுமெடுத் தணிந்துதன் முன், வந்தெடு மாயனுக்கு மணஞ்சூட்டன் முதற்கனவு மலியக்கண் டாள், சந்ததம்வந் தவன்றனைத்தொட் டணையுமின்பச் சுவைதெவிட்டித் தளர்ச்சிதீர்ந்தான், முந்தவணைந் துய்ந்தவிடைச் சியருடல்வா சமும் விழைந்து முதிரப்பெற்றுள். (கஉ)

அப்பருவந் தனிற்றனது தாதைதெடு மாற்கெனச்செய் யலங்கலியா வும், தப்பறத்தான் சூடியெழிற் றருப்பணத்திற் பார்த்தொருவர் தாமும் பாரா, தொப்பறுஞ்சீர்க் குடலையினுண் முன்னிருந்த வாறுதின முய்த் துவந்தா, லெப்பரிசா லோவொருநா ளிதுசெயச்சோம் பினளவற்றை யிவன் கொண்டுய்த்தான். (கஊ)

அங்ஙாளின் மால்பலரு மறியவொரு மானிடன்மே லாவேசித்திட், டிங்ஙாளிம் மாலைகளி லொன்றுமுவந் திலனின்மக ளெனும்பூங்கோ தை, யெங்ஙானும் போற்சூடிக் கொடுத்திலளா லெனச்சொன்னு னிது தேர்ந்தந்த, மின்னுள்சூ டியமலர்மா லிகைகளோரா ணன்மூடிமேல் வேய்ந்துவந்தான். (கச)

அன்றுதொட்டிக் காருமினி மேலுமெழில் விஞ்சியுத்தாரான்டான்
பூண்ட, மென்றுணர்மா லிகையினேக்கொண் டியாவனெவ்விட் டிணுதலத்
தின் மேவினலு, நன்றுணர்பாகவதர்குழா ரான்மலரிற் சீர்த்தனை
நண்ணியேற்றுப், பொன்றுலங்கு மார்புடையான் புயங்கையின் மணிமு
டியிற் புனையுமம்மா. (

உத்தமதேவரிற்பெரிய மாயனிவணிமித்தமென்ணி லுருவமெய்தி
யத்தமிசையெம்படைகொண் டமரும்வெகு வாவினேக்கை யருமையன்றன்
றெத்தகவோர்களுமறிய முடித்துதவுதார்புனைத லேற்றமாகு
நெய்த்தமலராளிதனு னெட்டியிர்த்துப் பலவாறு நினைக்கின்றாளே. ()

அன்னநடைப் பூங்கோதை யாருமவர் தந்தையுந்தா யாருமாகு
மின்னவர்தஞ் சரித்திரங்க ளின்னம்வெகு வாநிகழ்வும் நிருக்கலாகு
மென்னது காதலகினர்பாற்கேட்டள விற்பகர்ந்துள்ளேனிவர்பின்னுளிற்
பன்னகத்திற் றுயில்கூரும் பகவனருட் பெருங்கடலிற் படிந்திட்டாரே.

விட்டுணுசித் தன்புகழ்க்கு மேதினிமின் மகளாகி மேயதொன்று,
மட்டுறுவேப்பந்தொடையன் மன்னெதிர்பொற் கிழியறுத்த மாட்சி
யொன்று, நெட்டுருவ மாலருளால் விழிகளெனக் குலவுகின்ற நிசந்தேர்
ந்துள்ளீ,ரெட்டுமெறிவளவுகுல சேகரப்பேராழ்வான்சீ ரிசைக்கின்றேனே.

பெரியாழ்வார்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ரூகூ.

பதினேட்டாவது
குலசேகராழ்வார் சருக்கம்.

பூமகட்கொரு முகமெனத்திகழ்தரு புகழ்தோய்
மாமகத்துவ மிகுந்தமிழ்த்தேயத்தில் வன்பாந்
தாமதக்குணத் தினரணுகரியது தகைசா
னும நீர்க்குட கடலது கேரள நாடு. (க)

அத்தகைத்திரு நாட்டிடையவிர்பதி யனந்தத்
துத்தமச்சொலிப் புறுமரண்வளவதா யுவகைப்
பத்தர்தாம்வரின் மகிழ்வதாய்ச்சதமகன் பரிவா
னத்துபேரெழி லுடையதுகொல்லிமா நகரம். (உ)

ஆயநன்னக ரதனிடைவேதிய ரணிசா
ராயமாமறைத் துழனியுமகத்தின்வெண் மே
மேயமூவழற் சாலையுந்தருப்பையும் விளங்கிச்
சேயநான்முக னுரெனச்சிறந்துள தம்மா. (ங)

தேவர்தங்திகைப் பாற்றுவான்றினமும்வந் துள்ளத்
தாவலோடுறு மணிப்பசும்பொதும்பரூ டலரும்
பூவழிந்ததே னுறுகள்பாலையம் பூகக்
காவழிக்கொடி நடந்துபோய்ப்பணைதொறுங் கலக்கும். (சு)

மழைவளத்தினுன் மாதவர்முழக்கினுல் வண்பூங்
குழையுடைச்செவி மடந்தையர்நடம்புரி கோல
முழவினுைசையார் முன்கொடிமாளிகை முதலாத்
தழைவளங்களாற் றலைமையதாகுமத் தனியூர். (ரு)

உரத்தமாகத ரிடைமதிக்குலத்தர சொருவன்
சிரத்தையோடுசெ யருந்தவப்பயனதாய்த் திருமால்
வரத்தினுைருயி ரவன்மனைவயிற்றிடை வாய்ந்தே
தரத்தின்மேம்படு கும்பபூர்வத்துவா தசியில். (சூ)

புகரின்வாரநற் புகர்வசுநாளினிற் புரைதீ
ரகலமீதுநா ரணன்புனைகவுத்துபா மிசனுச்
சகமதூடுதித் திட்டனனுதலிற் றவத்தோர்
நிகரில்சேய்குல சேகரனெனப்பெயர் நிகழ்த்த. (எ)

செயுஞ்சடங்குக ளியாவையுமியற்றினர் சிரோ
யெந்திறம்பெறு சேய்வளர்ந்தருங்கலை யுணர்ந்தே
வயம்பொருந்துதல் யௌவனப்பருவம்வந் துறலும்
பயந்ததந்தைதாய் களிப்பெருவாரியிற் படிந்தார். (அ)

அவர்தமாற்புவி யரசுபெற்றறநெறி வழுவா
துவகையோடுகாத் திகலவர்புறங்கொடுத் தோடக்
கவளமால்களி றுதிராற்படைகொடு கடிந்தே
நவமதாஞ்செருக் கொடுகளித்திருந்திடு நாளில். (கூ)

பசுவும்வேங்கையு மொருதுறைப்பாங்கர்நீர் பருகி
விசுவமீதுவாழ்ந் துவந்திடும்பருந்துகண் மேலாம்
பசுநிறக்கிளிக் குழாத்தொடுகூடியே பழகு
மசுரர்வானவர் தாமுமுள்விகற்பமற் றமைவார். (கo)

யாவும்வல்லவ னுகியெங்கணுநிறைந் திருந்துந்
தேவராதியோர்க் கறிவரும்பொருளதாந் திருமா
லாவலோடவன் மனத்தவிர்ந்தருணிலை யறிவித்
தோவலற்றமெய்ஞ் ஞானமுமளித்துவிட் டொளித்தான். (கக)

வே று.

மாயனருட்சேவையினே வழங்கியருளீந்திடலுந்
தூயகுலசேகரப்பேர் தோய்ந்தவிடியேறனேயா
னேயவரசாட்சியின்மீ தெள்ளளவுமாசையிலா
தாயவனையன்போ டருந்தமிழாற்போற்றினன். (கஉ)

கம்பமதயானைக் கழுத்தகத்தின்மேலிருந்தே
யின்பமருஞ்செல்வமுட னியலரசும்வேண்டானு
யெம்பெருமான்வேங்கடத்தி லீடார்கற்றூணருஞ்
செம்பெருமைமுதலாகச் சிந்தையிற்றேற்றியவாறே. (கஉ)

ஆர்த்தியொடம்மலைக்குவடா யதனெறியாய்ப்படியாய்க்கோன்
றீர்த்தமதிற்புள்ளாகித் திகழ்மீனுய்ச்செண்பகமா
யார்த்தபுனற்கான்யாறு யன்பின்வட்டிற்கொடிசெல்லுஞ்
சீர்த்தபணியினனுகிச் செறியுநிலையுறவேட்டான். (கசி)

பூவுலகத்தரசாட்சிப் புகழனைத்தும்விண்ணுலகத்
தேவிளங்குசீரும்வெறுத் தெழின்மிகுமெய்யன்பினனு
யேவுடையசிலைக்கரத்தெம் மிராகவன்றன்புகழ்பலவு
மோவருஞ்சொற்சுவைத்தமிழா லொருபதிகத்திடையமைத்தான். ()

அன்னகதையினைப்பலப லறிவுடையோராற்சொலவைத்
தின்னலறவொருமனத்தோ டிருந்திவன்கேட்டுவந்தனனு
லின்னபொழுதவர்வாயா லிராகவன்றன்னிளையோனைப்
பொன்னுறழ்சானகிக்கருகு புறத்துணையாவுறவைத்தே. (கஙு)

திரிசிரன்றூடணன்கரன்முற் றிகழ்சேர்ந்சகத்திரரா
விரியுமிராக்கதருடன்போர் விளைப்பவெழுந்தனனென்னு
மருமொழிகாதுறக்கேட்ட வளவிலதிதுயசெய்துற்
றிருவர்துணையிலராலியா னுடன்செல்லக்கடவனென. (கள)

வில்லொடுவாள்பலகைகதை மிக்கணைத்தூணியெடுத்
தெல்லொளிவீசியகழல்பூண் டூடார்நாற்படைகளுடன்
பல்லியங்களார்ப்பவெளிப் படர்ந்தமைகண்டமைச்சரெலா
நல்லியற்பேரன்பனிவ னலந்தெரிந்தோர்விதஞ்செய்வார். (கஅ)

இகற்சிலைவீரருக்கரசா மிராகவன்றன்புயபலத்தா
லகப்பொலிவாரரக்கர்களை யழித்ததிகசயங்கொண்டு
செகத்தினரின்புறுமாறு திரும்பினனென்றுரைத்திட்டார்
நிகழ்த்தரும்பேரின்பமுறு நெஞ்சினனுயுடன்மீண்டான். (கசு)

அவ்வமைச்சர்தாங்குழுமி யரியடியருறவாலே
யிவ்வகையவுணர்ச்சிக்கே டெய்தினனுலிவனெடவ
ரெவ்வகைக்காரணத்தாலு மிணங்காமலறுமாறு
செவ்வறிவாற்செயவேண்டு மெனநினைத்தார்தீவினையார். (உ0)

அவன்றினமும்பூசைசெயு மரிபூசைப்பெட்டகத்தி
னிவந்தமணிப்பணியொன்றை நெஞ்சிலுறும்வஞ்சகத்தாற்
கவர்ந்துமறைத்திறையெதிர்போய்க் கரியனடியவரிவ்வா
றுவந்துபுரிந்துள்ளாரென் றுரைத்தாரவ்விதநாடி. (உக)

காரணனேவேண்டியங்கு நடந்தசத்தினைத்தேறி
யீரமிகுமனத்தினனு லின்னலுறவவர்த்தடியா
தோரரவக்குடத்தினுட்கை யுய்த்தருளின்றிறங்காட்டி
மாரனைப்பெற்றோனடியார் மகிமையினைத்துலக்குதலும். (உஉ)

பாகவதர்பெருமையினைப் பாவியேமறியாது
சோகமுறுதீநெறியிற் சுழன்றேமென்றுள்ளதுசொற்
றூகம்வெயர்த்தவர்பணிந்தா ரப்பிழைக்குமவன்சினவாப்
பாகமுற்றதெண்ணிலருட் பரந்தாமனருளன்றே. (உங)

தெய்வநிலைதவத்தினிலே தெரியாவிச்சிதடருட
னேவதினித்தகுதியல மைக்கென்னுந்துணிவெய்தி
மெய்வழித்தன்றனையன்மிசை மேதினியின்சுமைசார்த்தி
யுய்வழிச்செல்குவனியானென் றுதித்தமனத்துறவோடே. (உச)

திருநாமமெட்டெழுத்துந் தினஞ்செபிக்குஞ்சீரினரு
மொருபோதுந்தீநெறிப்பா லொழுகாநல்லுத்தமரும்
கருவூலத்தமிழ்ச்சுவைதேர் கவிஞர்களும்போற்றிசைப்பத்
தெருவூடேபுறஞ்சென்றூன் செங்நெறியின்றலைநின்றூன். (உடு)

சென்றவன்பல்பதிவணங்கித் திருவரங்கப்பெருநகரிற்
பொன்றயங்குமரவணைமேற் பூங்கொடியாரடிவருட
மன்றலம்பைந்துளவணிமைம் மலைபோல்வான்றுயில்கூருந்
தென்றயங்குமியோகநிலை தெரிசித்தான்றிருவுற்றூன். (உசு)

செங்கைதலைமேற்குவியத் தேகமுரோமஞ்சிலிர்ப்ப
வங்கநெகிழ்ப்புறவிழிநீ ரருவியெனப்பொழியமுதிர்
கங்கைதருதாண்மலர்மேற் கனிதமிழ்வாய்கொடுபாடிச்
சங்கையில்பேரானந்தச் சலதியிடைப்படிந்தானுல். (உள)

அன்றுகுலசேகரப்பே ராழ்வானப்பேழ்வாய்ப்பாம்
பொன்றணையாக்கொளும்பகவா னுரத்திலணிகவுத்துபமா
யொன்றவமைத்தானவனன் குரைத்ததிருமொழியனைத்து
மின்றமிழ்மாமறைநாலா யிரத்தினிடையமைந்தனவே. (உஅ)

அருண்மிகப்பெற்றுயர்பதவி யடைந்தகுலசேகரப்பேர்ப்
பெருமிதத்தோன்சரிதமிதிற் பேசினேன்சிறிதிப்பாற்
குருமொழிமெய்யெனமனத்திற் கொண்டசிவவாக்கியப்பேர்த்
திருமழிசையாழ்வான்றன் சீர்த்தியுஞ்சற்றிசைப்பேனே. (உகூ)

குலசேகராழ்வார்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - எஉஎ.

பத்தோன்பதாவது

திருமழிசையாழ்வார் சருக்கம்.

முற்பிறப்பின்ஞானசாத னந்துவக்கிமுற்றுரு
வெற்பிணைக்கருத்தனுமொர் மெய்யனிந்தமேதினி
நற்பிராமணக்குலத்தி னிற்பிறந்துநான்முகன்
பிற்பிறந்தவேளெனப் பிறங்கலுற்றுலாவினன். (க)

காசியாத்திரைக்கண்மிஞ்சு காதலாகியேகினு
ஞசில்சீடன்வேண்டுமென் றவாவுஞானியானதோர்
தேசிகன்கடைக்குலத்தி னிற்பிறந்ததேகன்மிக்
கேசினுர்க்குமேத்தினுர்க்கு மின்சொலோதுகின்றவன். (உ)

செருப்பனந்தமாயவாறு செல்லுவார்தமக்கெலாம்
விருப்பமோடுநல்குவோனவ் வேதியன்றனைத்தெரிந்
திருப்பளித்தெனதுதங்கை யீடில்கங்கையென்றல்கேட்
டருப்பமீறுபெருவமுற்று மதைமறுத்தறைந்திலான். (ங)

ஒப்புநீர்மைகண்டுதோல்கொ டுங்குசெய்சில்காசளித்
தப்புரூபமாமவட்கு னண்ணனல்கலென்றுநேர்
செப்புசொல்லொடுதிபின்பு தின்னுணுதானபாழ்ங்
கைப்புநீடுபேய்ச்சுரைக் கனத்தகாயிதாடவே. (ச)

ஆட்டிநீயுமாடியஃதொ டைதிலிங்கணெய்தென்றுன்
கேட்டியைந்துமற்றொர்சொற் கிளத்திடாமலேகுமத்
தாட்டிகப்பிராமணன் றடங்கைநல்கல்கொள்ளநீர்
மாட்டிரண்டுமஞ்சளங்கை வளைகளோடவிர்ந்தவே. (ஞ)

அதுகுறித்துமொருவியப் படைந்திலானவண்ணமே
கதுமெனக்கையிற்பிடித்த காயொடங்குமேவினு
னிதுசெயும்பொருட்டுமுன் னியம்பியேவுஞானிதன்
பொதுநிலைக்கியைந்ததாமொர் புதியசொற்சொல்வானரோ. (சு)

தோற்குழித்தணீருமாங்கு தோன்றுகங்கைதானதன்
பாற்கொடுத்தகாசைநீ பரிந்துகேளெனச்சொனு
னேற்குமோவெனத்தளா திரந்துபெற்றுநல்கலு
மாற்குளானுர்ஞால்வருக் கறைந்தவொன்றையருளினன். (எ)

கல்விசெல்வஞானமென்று கழறுகின்றமூன்றுமுன்
னல்வினைப்பயன்கொடெய்தன் ஞாயமன்றிஞாலமேற்
பல்விதப்படச்சொன்மேன்மை பற்றியன்றுகற்றுளார்
சொல்விதிக்கடங்கிடாது சுத்தமானசோதியே. (அ)

கங்கையென்றனுதங்கை காணெனப்பகர்ந்தவ
ளங்கையாலுணர்த்திலுனே யாயனென்றுரைக்கலாஞ்
சங்கையற்றஞானிகட்கொர் சாதிபேதமோதிடார்
மங்கைபங்கனுதியோரை மாலுமோனயோகரே. (கூ)

வே று.

சீரியகுரவனந்தவேதியற்குத் திகழுருட்பொலிவுறத்திருத்திப்
பேரினமகந்தங்கொடுவளர்தெய்வப் பெரும்பொருளொன்றெனத்தேற்றி
நாரியோடிருக்கவேண்டுகின்றனையோ நரலொலாந்தொழுந்தவமுனியா
யூரிடந்தோறுமமுதிரந்தருந்தி யுறுகதிவிழைதியோவென்றான். (கo)

குருமொழிவினவிச் சிறிதுநாணின்றிக் கொவ்வைவா யிதழுணக்
கொடுக்குங், திருவனர்கலவி யினிதெனக்கருதுஞ் சிறுமதிதீர்ந்திலேனெ
னலும், பருமணலிருநா ழியுமவன்கொணரப் பசுசைக்காயுமீந் திவற்
றை, யருமையாற்சமைத்திட் டிடுமவடனைச்சேர்ந் தநுபவியெனவனுப்
பினனுல். (கக)

தன்குலத்துயர்வுமவன்குலத்திழிவுந் தவிடளவேனுமெண்ணும
னன்குதாழ்ந்திறைஞ்சிப்போயினன்கருத்தி னுட்டமிழ்சிதலினவைதீ
ரின்குளம்பேபாலுந்தமிழ்த்திருவாக்கு மெழுந்ததாலீசனேமாலே
வன்குணச்சமயமுறைப்படிபோற்றி வத்துவொன்றென்பதோர்ந்தமைந்தான். (கஉ)

சைவர்தாஞ்சிவவாக்கியனெனப்பகர்ந்தார் தருக்குறும்வயிணவர்ப
லரு, மெய்வருமுறையான்மழிசையாழ்வானென் வியன்பெயருரைத்த
னர்வெகுநாள், கைவயிற்காயுமணலரிசியும்பல் கன்னியர்தம்மிடங்காட்
டிச், செய்வதோர்கேலிக்கிலக்கெனப்புவியிற் றிரிந்தனன்சிந்தைதான்றி
கைத்தே (கங)

கரும்பருந்திடுவோன்வேம்பின்மீதாசை கடுகளவெய்தினுமதனைப்
பெரும்பயனுகக்கருதலுமனம்போற் பெற்றலதமைவுறுவாறும்
பொரும்பனித்திரைநீர்க்கடல்சுலாவுலகிற் புலவர்பற்பலர்புகன்றுளரா
லிரும்பதுபுரையுமின்பம்வேட்டம்பொ னேயுறழ்தவத்திவனினைத்தான்.

நால்வகைக்குலத்துச்சிறுமியர்பாலு நாட்டினிற்கேட்டலுத்தப்
பால், வேல்வலிக்குறவரினத்தொருபிரிவாய் வேய்பலவெட்டிநாருரித்
துச், சேல்வரிவிழியார்பெறுமுறஞ்சமைப்பார் சேரியுட்சென்றிருகுடி
லுட், பால்வழிந்தனையமொழியுடைழிலும் படைத்தொர்பெண்டனித்
துறப்பார்த்தான். (கஙி)

அங்கவடனித்துவசிக்கைகண்டுவந்து னன்னையெங்கப்பனெங்கென்றி, னெங்ககன்றனரோவென்றனளரிசியிதுசுசைக்காயிதுசமைத்தென், பொங்கழற்பசிதீர்ந்திடும்படிபடைக்கிற் புண்ணியமுண்டெனப்புகன்றான், சிங்கநேரிடையாண்மற்றமங்கையர்போற் சிரித்திகழாதுகைக்கொண்டாள். (கசு)

அவடனெஞ்சகத்திலிதுவுமோர்தேசத் தரிசியென்றேற்றனளதுகல்
கிவனுளத்தனிலிப்பண்பிலோர்மகளு மிகத்துதித்தனளெனவியந்தா
றவபலமனேயவமுதொடுகுழம்புஞ் சமைத்தொருகணத்தினிற்படைத்தா
ளுவகையோடுண்டாங்கிருந்தனனப்போ துற்றனரவளையின்றுள்ளார். ()

இம்மகடன்னோநாங்கொளவிவளை யின்றுளாரீகுவார்கொல்லோ
வெம்மதுமரபிற்கேற்றிடாதென்பா ரோவெனவெண்ணியேயிருந்தா
னம்மகட்பயந்தாரணுகிமுன்கண்ணுற் றச்சமுற்றடிகடாமீண்டு
சம்மதப்பட்டுவருதலியாமுனரச் சாற்றுவீரெனச்சரண்பணிந்தார். ()

பணிந்தவர்தமைப்பார்த் தஞ்சன்மினென்பாற் பரிவொடுவம்மினெ
ன்றழைத்துத், துணிந்துநும்மினத்திற் சேர்ந்தனன்கண்டீர் சோறுதும்
மனையிடைத்துய்த்தே, னிணந்தசைதின்பா ராயினுநல்ல நெறியுளார்தம்
மையேமதிப்பேன், றணிந்தணிசடையான் மாலெனுமிருவர் தமையு
மொன் றெனத்தெளிதகவேன். (ஙஙூ)

என்றவமுமது தயையினுற்பெரிதி டேறிட வேண்டுமென்றிரந்தா
னன்றதைத்தகைத்தே யாயினுஞ்செய்வோ நாமெனவவரிசைந்ததற்பின்
மின்றனப்புனையும் வடிவொடும்மனையின் மேவியமகளைநான்வேட்டே
னின்றளித்திடவே வேண்டுமென்றிட்டா னீவதிற்றடையிலையெனினும்.

எம்மதுசேரிக் குடிலிலெம்மினத்தோ டிசைந்துவாழ்வதுகடனென்றூர்
சம்மதமெனலு மக்கணங்கலத்தைத் தட்டியேமணம்புரிவித்துத்
தம்மதுதொழிற்செய்கருவியுமளித்தார் தவப்பிராமணன்மிகமகிழ்ந்தான்
மெய்ம்மதாதீத முணர்ந்துமோரிச்சை மேயதால்வினைந்ததிவ்வினையே.

நச்சுவார்க்கரிய சற்குருவதிதி னண்ணலுங்கங்கைசெய்நலமு
மச்சுணைக்காய்பச் செனைநெடுநாளா யவிர்ந்ததுமனலரிசியினுன்
மெய்ச்சுரரமுத மனையவெண்சோறு விளைந்ததும்விளம்புவாரில்லை
பொய்ச்சுகம்விழைந்தோரந்தணன்குறவர் புன்குடிற்புகல்சொனார்பலரே.

ஆதலின்மடவார் நலநினைத்திடினு மகத்தினிலருவருப்புண்டா
மாதவர்தாமே தனித்துறற்குரியார் வனப்புருவாதியகருதிப்
போதநோமனத்தா ரவரொடுகலந்தே புனிதமாதவஞ்செயலாகு
மீதளவறிநூற் சம்மதமெனினு மில்லறந்தவத்தினுக்கிடரே. (உஙூ)

அன்றியோர்சரத மரனரிமுதற்றே வகந்தமுமாகுமதறிய
நின்றிசத்தொளிர்வ தெனினென்மடவார் நேயம்விட்டருந்தவமுயன்று
பொன்றிடாமுத்தி புகுந்தவர்பலரே புகன்றசொற்றவறிடாமனையோ
டொன்றிமாதவஞ்செய் துய்ந்தவர்சிலரே யுடல்வராக்கதிகுறியெனலே.

அத்தவப்பனவ னுங்குறுகுறவ ரறிதொழிற்கற்றதின்முயன்றிட்
டெய்த்தனனெடுநா ளொருதினங்கானத் தொருபெருமூங்கிலைத்தறிக்கப்
பத்தரைமாற்றுப் பொன்கொடுசெய்த பணமிகச்சொரிந்திடப்பயந்து
மத்தகமுரித்தோற் கருதியோர்தமிழ்ப்பா மதிமயக்கேலெனவகுத்தான்.

சொன்னவன்சிறிது நிலைபெறுதோடித் தூரநின்றுற்றுநோக்கிடலு
மென்னவென்றருங்கு வருமொருநால்வ ரிவன்றனைவினையினரியான்வெட்
டன்னமூங்கிலிலாட் கொல்லிதோன்றியதாலஞ்சினேனென்றலுமவர்தாம்
பொன்னதென்றுணர்ந்து நீயிவணில்லேல்போவெனவனுப்பிவிட்டப்பால்.

இத்தனைபித்தன் ருனுமிவ்வுலகத் திருப்பதென்னெனவியந்தருகும்
றத்தமத்தனையு மொருமுடிப்பாக்கி யாதவன்மறைந்தபின்கொடுபோஞ்
சித்தமுற்றவரா யிருவரையாங்கத் திரவியங்காப்பவைத்திருவர்
நத்தமுற்றமுதுண் டவர்க்கதுகொணரு நலங்குறித்தேகினரன்றே. ()

போயினர்தாமு மிருந்தவர்தாமும் பொருக்கெனவிருபிரிவினரே
யாயினரவரையிவர்கொலல்குறித்தா ரவரிவர்தமைக்கொலல்விழைந்தார்
பேயினுங்கற்போரணுத்துணையேனும் பிடித்திடாப்பெண்ணினும்பெருங்கான்
றீயினும்பொல்லாப் பொன்னிதுதிங்கே செயல்பெருவழக்கமாந்தினமே.

அன்னமுன்னையின்ரூர் பின்னருந்துருக் காலமுங்கலந்துகொண்டணைந்தா
ரின்னவரவரைக் காண்டலும்பசியா லிளைத்துளேமிக்கிணற்றிறங்கி
முன்னர்நீர்கொணர்மி னென்றனரவரம் மொழிவழியிறங்கலுமுன்னுங்
கன்னமித்தலைமேற் போட்டிருவரையுங் காலனூர்க்கனுப்பினர்கடிதே. ()

அவரனூரிடம்போய்ச் சேரலுமிவரு மவ்வமுதயின்றவணடைந்தார்
தவசிகாமணியா மந்தவேதியன்சொற் சரதமாயிற்றெனத்தருவாழ்
சுவணபூமியினர் முதலினர்சொன்னர் சுமைக்கிடைக்காடுவேறென்றும்
பவமிலப்பனவன்மற்றைநாளவண்போய்ப் பார்த்துளம்பதைத்தனனென்றும்.

சிற்சிலர்சொலவுங் கேட்டுளேனதனற் றிருவருட்செயலேயார்தணப்பார்
பிற்சிலகாட்போ யொருதினமவன்ரூன் பிடுங்குரையைக்கையாற்பிடித்தோர்
நற்சிலையுருப்போற் றன்னிலைகூடி நளிர்பெருங்கானிடைநின்ரூன்
பொற்சிலைக்கரத்தா னனையகொங்கணன்விட் புலவழிபோயினனன்றே.

சூடவணைழுந்த தாற்கடிதிறங்கிச் சொக்கியமனநிலைதிரும்ப
நாடலுற்றிருவர் தாமுமிக்குறவாய் நன்மொழிசிற்சிலபேசி
யேடலர்மலர்ப்பைங்குழன்மினலொருத்தி யின்பம்வேட்டக்குறச்சேரிக்
காடதில்வசிப்ப துணர்ந்துரைபெற்றுக் கனமேற்சென்றனன்களித்தே.

அத்தகைப்பெரியோன் றன்னையுமயக்கு மாசையாம்பேயினை வெ
ல்வா, ரெத்தகைத்தவரோ வவர்திறந்தெரிவா ரியாவரோ வன்றுதொட்
டொவொர்நாள், சித்தர்சேகரனு மவனிவன்வசிக்குஞ் சிறுகுடிற்சேரலு
ண்டிவர்தாந், துய்த்தலுந்துணியும் பெறும்பொருட்டியற்றுந் தொழிற்று
யர் சகித்திடாதந்தோ. (கூக)

ஒருதினமணற்சோ றட்டவட்டனிக்கண் டிற்றவக்கொங்கண னம்
மே, கருவிகளிரும்பாற் சமைந்தனவுதவாக் கழிவெலாங்கொடுவருகென்
ரூன், றிருவுளங்கொணர்ந்தா னுடனவையனைத்துஞ் செம்பொனச்செ
ளித்தகன்ரூன், வருதனுயகன்பா லவற்றினைக்காட்டி வகைபடச்சொற்ற
னண்மன்னே. (கூச)

உடனவனவற்றை யக்கணங்கொடுபோ யூர்ப்புறத்துள்ளபாழ்ங்கிணற்றி
லிடவுரைத்திட்டான் விரைந்தவாறியற்றி யின்முகத்தோடுவந்திருந்தாள்
கடலுடைப்புவியி லத்தகைமடவாட் காதலியாப்பெறுமவர்தாங்
கிடமனத்துறவாற் பலபலபிறப்பிற் செய்தவச்செறிவினராமால். (கூடு)

சாத்திரந்தகுதி பெரியவர்முறைமை சற்றுமோர்கிலரவன்றனது
மூத்திரப்புனலாற் பொன்செய்தானென்று மொழிகுவாரம்மொழிகிசமே
லாத்திரமவளுக் குதித்திடாவண்ண மடக்கலாமறிவுளாரறிமின்
பாத்திரமறியா தெங்ஙனஞ்சொலினும் பழங்கதையெனவிளுவுவரோ. ()

அவ்விருபெரியர் தங்களிலொருவற் காடகவேடணையில்லை
செவ்விதழ்மடவா ரேடணையொருவன் சிந்தையிலில்லையித்திறத்தான்
முவ்விதவேட ணையுந்தவிர்ந்துயர்ந்த முனிவருஞ்சிற்சிலரிருப்பா
ரெவ்விதப்பயனு மிறையருட்டிருநோக் கின்றெனிலெய்திடாததுவே. ()

ஆனேதான்படுக்கிற் குதிரையினுயர மாமெனும்பழமொழிப்படியே
யேனேயவுணவுந் தினத்தகுகுறவ ரினஞ்செறிசேரியினிடையோர்
மானேவேட்டதனு லவனிலேதவறி மாழ்கிலன்மற்றையர்சிலரு
மூனேதீத்தேன்ற வளவினன்னடைதொட் டொழுகிடத்திருத்தினுனைத்தே.(கூஅ)

அப்படியிருந்துங் கருமமேபரமென் றலமருமந்தணர்பலரு
மிப்படித்தாழ்ச்சி யடைந்தனனெனமிக் கிகழ்ந்ததாலிவன்பலகவியான்
முப்படியினரு மறிதரவவர்தம் முறைமைமுற்றிகழ்ந்தனனவைதாஞ்
செப்படிவித்தை யனேயபொய்ச்சமயத் தினர்க்குவப்பளிப்பவாயினவே.

அம்மகளுடலின் பருவமோரேழு மகலுமட்டின்பமார்ந்ததற்பின்
செம்மலர்த்தவிசின் றிருவுடனெழிலுஞ் சிவையுடன்கருணையுந்திறம்பா
மெய்ம்மறைத்தலையின்பொருளுடனுயிரும்விரவிடவிடுத்தகத்துறவோர்
தம்மதாசாரந் தலைக்கொடுசகத்திற் றனியனுய்ச்சஞ்சரித்தனனே. (சo)

வே று.

வெண்ணீறு மிகப்பூசி வேணியரன் றுதிசெய்வான்
மண்ணீடச் சாத்திநெடு மாலையொருக் காற்புகழ்வான்
றண்ணீருந் தீயுமவர் தஞ்சொருப மெனத்தேரூர்
கண்ணீர்விட் டழுவிரண்டுங் கலந்தணிந்துங் களிகூர்வான். (சக)

மன்னர்முதற் சீரியர்தம் மனேதொறும்போய்ப் புகுந்தவருக்
கின்னலுநல் லின்பமுமிக் கீவதுவே தொழிலானுன்
றன்னகத்தி லிச்சையொரு தவிடளவு மில்லானே
யின்னவித மியக்குவது மிறைவனருள் விளையாட்டே. (சஉ)

காமருபூம் பொழிற்கச்சிக் கணிவண்ண ஞமொருவன்
பூமடந்தை களிகூரப் பொருவருசெங் கோலோச்சு
நேமமுளா னெனக்கேட்டு நிகழ்சிவவாக் கியனென்னு
மாமழிசை யாழ்வானம் மன்னனரண் மனேப்புக்கான். (சக)

முந்தியொரு நாளமரர் முதுகுரவன் வரும்போதாங்
கிந்திரனுக் கிடையூறு யியைந்தாற்போ லிவன்சபையிற்
செந்திருவன் னுங்கடிக்குஞ் சீராட்டுக் குகழ்ந்ததனைப்
புந்திமருண் டிவன்றன்னைப் போவென்னப் புகன்றனனே. (சச)

போவென்ற மொழிவினவிப் பொருவரிய சினங்கொண்டு
கூவென்ற மனைவியுறு கோவிந்தன் றனைக்கண்டு
வாவென்ற னுடனுன்றன் மாசுணப்பாய் சுருட்டென்றோர்
பாவென்று முலகுணர்ந்து பகர்தரத்திற் பகர்ந்தானே. (சடு)

அபபாடல் பகர்ந்தேகு மவனுடனத் திருமாலும்
பைப்பாயு மனைவியரும் பறிந்ததனைப் பணிசெய்யு
மெய்ப்பார்ப்பா ரனைவருமவ் வேற்றிடம்போய் நடந்தவிதத்
தப்பாமற் புகன்றினிய தமிழ்ப்புலவன் றயைவழியே. (சசு)

மாயவனை மீட்டுமுன்போல் வயங்குறக்காட் டியின்றே
னீயறிய விக்கணமே நிரைபடமாய் குவமென்று
ராயமொழி வினவுதலு மவனடுங்கி யப்புலவன்
போயவழி விளைந்தோடிப் புதைபொருட்காண் டலிற்கண்டான். (சஎ)

கண்டவன்றுண் மலர்மீது கனகமணி முடிதோயத்
தெண்டனிட்டென் குற்றமுற்றுந் திருவுளத்திற் பொறுத்தருள்செய்
மண்டலத்தென் னனையார்க்கிம் மடமையுநின் னனையவருட்
டொண்டர்கட்குப் பொறுமையதுஞ் சுயகுணமன் றேவென்றும். (சஅ)

கோயிலின்மால் வாராமற் குலத்தொடுவே தியரென்முன்
மாயிணுரா னுடலோடு வாழ்ந்திருக்கத் துணிவேனே
வாயிரம்வாய்ப் பாம்பணையா னெனைநிற் றெரியாதுஞ்
சேயிழையார் மயலாலுஞ் செறிந்ததிப்பொல் லாங்கென்றும். (சகூ)

இத்தனைக்குங் காரணநின் னியற்றமிழ்ப்பாட் டொன்றென்று
மத்தனையு நீசகித்திட் டாலுமிந்த வகிலமவன்
சித்தமெனு முனதுபுகழ்ச் சிறப்பழியா தென்றுமிவ்வா
றுத்தமப்பண் பாயமொழி யுணர்ந்தழுது பலசொன்னன். (நo)

சீர்கிளர்செங் காப்புலவ னெனச்சிலமா னிடருரைக்கும்
பேர்கிளரத் தவமுனிவன் பெருமனத்தி னிடையங்கா
ணீர்கிழிந்த வடுவேபோ னிலவுசினத் தகையாறிப்
பார்கிழிக்கு மருப்பேனப் படிவமுங்கொள் பவற்பார்த்து. (நக)

கணிவண்ணன் வாவென்றுன் காமருபூங் கச்சிநகர்
மணிவண்ணு நீபோக வாண்டாமுன் மன்னுமிடங்
துணிவுடனே சேர்குதியான் றுணைவருகின் றேனெனமுன்
னெணிவிண்ட பாடலத னேனைபட விசைத்தானே. (நஉ)

கச்சிவிட்டு வரும்போது கவிஞன்பின் செலுமாய
னிச்சிறுபாக் கேட்டிடலு மியாவருக்கு முன்போலு
னச்சிறுவிக் கிரகப்பி னருந்தவன்போ யினனவன்பி
னச்சியழைத் தவனுன நரபதியா கியர்போனர். (இக)

அவ்வண்ணங் திருக்கோயி லணைதலுமாங் குள்ளவெலாஞ்
செவ்வண்ண மாயினவாற் றேர்வேந்தன் றவற்பணிந்திட்
டிவ்வண்ண மியற்றினேயா லியான்செயுமா றென்னுளமீ
யெவ்வண்ணஞ் செய்தாலு மிகபரத்திற் றகுமென்றே. (இச)

செயத்தகுநல் லுபசாரத் திரளனைத்துஞ் செய்ததற்பி
னயத்தகுமா றுரையெனலு மொண்டமிழ்ப்பா வல்லார்க்கு
நயத்தகுணத் தவத்தோர்க்கு நல்லவனு நடந்தென்றும்
வயத்தகுவ ரனேயார்க்கோர் மறலியா கெனச்சொல்லி. (இஇ)

அப்பதிவிட் டனேயபதி யநந்தங்க டொறுமேகி
மெய்ப்பதிக முதற்பாடல் விளம்பிமிக வினேயாடி
யெப்பரமெய்ப் பரமோயா தின்னுமொரு தாய்வயிற்றி
லுய்ப்பதற்கொப் பாததுவோ வதனிடைப்புக் குறைந்தானே. (இசு)

*மூப்பெயரு மொருபெயரா மொழிகுவா ரெதிர்முரணி
யப்பெயரொவ் வொன்றினரு மயலெனச்சொல் வாருமுளா
செப்பெயரு மெவ்வுருவு மேகனதா மெனுமறைகள்
பொய்ப்பெயர்ப்புன் மதக்குறும்பர் போராட்டம் பொல்லாதே. (இள)

சைவவயி ணவப்பொதுவாஞ் சமயாதீ தப்புலவ
னுய்வடைந்த சரித்திரமீண் டுணர்ந்தளவி லுரைத்திட்டேன்
மெய்வழியின் றுறைநின்று விண்டுவின்மா யைத்திறத்தாற்
பொய்வழிச்சென் றதின்மீண்ட புண்ணியன்சீர் புகல்வேனே. (இஅ)

திருமழிசையாழ்வார்சருக்க முற்றிற்று.

ஆஅ திருவிருத்தம் - எஅடு.

---

* மூப்பெயர் - சிவவாக்கியர் - திருமழிசையாழ்வார்
செக்காப்புலவர் - என்பவை.

இருபதாவது
தொண்டாடிப்பொடியாழ்வார் சருக்கம்.

மெய்ப்பிரகாசம டைந்தவரேயுணர் விண்டுவைவெகுசென்மத்
தப்பிரமேயனெ னக்கருதித்தொழு மன்புடையோனெருவ
னெப்பிரமாவுமி னிப்படையாநல மெய்துநிமித்தத்தால்
விப்பிரநாரா யணனெனுநாமம் விளங்கொருமகவாகி. (க)

பாரில்வளந்துங லெவ்வனமென்றுசொல் பக்குவமெய்திடலுஞ்
சீரியநந்தா வனமதுசெய்து செறிந்தபிருந்தைமுதற்
கூரியதுல்பக ரப்பபுட்ப குலங்களெலாமிகவைத்
தாரியனேத்தரு நாரணனன்ப ரவாவறநல்கினனே. (உ)

அன்னவரன்புமி கக்கொடுதொண்ட ரடிப்பொடியென்றொருபேர்
பன்னவிளங்கினன் மங்கையர்மீதுறு பற்றணுவளவுமிலா
னின்னவிதந்தெரி வுற்றரிதன்னெடி லக்குமிதேவியிநா
ளுன்னதுமாயைவி னோதமொர்சற்றிவ னென்றல்செயென்றனளால். ()

அன்னமுயர்த்தவ னேத்தருநாரண னங்ஙனமேசெயுமா
றுன்னலுமந்நக ரிக்கணிகைத்திர ளுடொருமேதகையா
ளின்னவனேப்புண ராதுயிர்வாழ்கல னென்றொருதுணிவெய்தித்
தன்னதுகோலமெ லாமும்விடுத்தொரு காதியுருக்கொண்டாள். (ச)

பொன்மணிபட்டுடை யாதியிகழ்ந்து புனத்துளவின்குறடா
நன்மணியுங்கம லத்துறுகொட்டையு நன்குதரித்துமினி
ரின்மணிடத்திவ ளொப்பவரின்றென வேகுலவிக் * குளமீ
தொன்மணிரந்தர மாகவிரந்தமு துண்டுமுலாவினளே. (ரு)

கண்டவர்சிந்தைக ளியாவுநெகிழ்ந்து கரைந்தனகாசறுமெய்த்
தொண்டரடிப்பொடி நெஞ்சினுமன்பு சுரந்ததுணர்ந்தினிமால்
கொண்டோனவானென நம்பியமாது குலாவவனந்தனின்மேய்த்
தெண்டனிழைத்தித னிற்பணிசெய்திடு சீர்தருகென்றிடலும். (சு)

இப்பணியென்னது சொந்தமதேமு னெவர்க்குமளித்திலனீ
செப்பணிநேர்முலை மாதிதிலாசை செலுத்தறகாதென்றுன்
றப்பணிடாவழி யேன்றனசெய்குவ றந்தருளாயிவனத்
துப்பணிவாய்குழ றிக்கணினீர்சொரி யும்படிகெஞ்சினளே. (எ)

பெண்ணினலார்நய மோதிடில்வன்புறு பேயுமிரங்குமெனிற்
றண்ணியபேரரு ளாரணனன்பர் தமாதுளமென்படுமோ
நண்ணியவாறுசெ யென்றனனம்மொழி நல்வரமென்றளிசூர்ந்
தெண்ணில்பணிப்பொலி விற்சிலநாளு மியற்றினளின்புறவே. (அ)

எத்தனைவீரவை, ராகமடைந்தவ ரென்னினுநாரணனுர்
சித்தமயக்கநி னைத்திடின்மையல் செறிந்துழல்வாரெனலா
லத்தனியன்பனு மம்மகளும்பழ கார்வமலிந்திடலு
நெய்த்தமலர்க்கணை யங்கசன்வந்து நெடுஞ்சமர்செய்தனனே. (கூ)

* குளம் - நெற்றி.

அங்குறுமாதைவி ணூர்ந்சைவிட்டிவ ணுல்வருவாளெனவே
யிங்குசொல்வாருமு ளாரவரோர்குடி லிற்புகவேயொருநாள்
கங்குலுநீர்பொழி மங்குலும்வந்தன காமமயின்றிட்டார்
பைங்குதிரைச்சக டோன்வரல்கண்டு பதைத்துவருந்தினரே. (கo)

அன்றுமுதற்பக னந்தனவேலை யருக்கன்மறைந்திடலுங்
குன்றுதலின்றிய காமநல்வாரி குளித்திடும்வேலைசெய்தார்
மின்றுணையன்னவ ளன்னவனெஞ்சம் விலேப்படுமாறுதெரிந்
தின்றுமனேத்தலை போகுவனென்ன வியம்பியகன்றனளே. (கக)

மின்னனையாளவள் வீடுபுகுந்து வெறுத்தனவெஃகியணிந்
தின்னவடன்றலை யேறியபித்த மிறங்கியதென்றுறவோர்
பன்னவிருந்தன ளப்பனவன்பரி தாபமலிந்தினிநா
மென்னசெய்வோமென வன்றுபகற்பணி யாவுமியற்றிலனே. (கஉ)

அப்பகலோருக மாகிநிகழ்ந்த தருக்கன்மறைந்திடலுங்
துப்பவிர்வாயவ டன்னெதிர்சென்றுயர் தொண்டரடிப்பொடிதா
னிப்படியென்னை வெறுத்தனையேயென வேங்கினனுங்கவளோர்ந்
தொப்பறுநல்லுனை யோதியணைந்ததி யோகைவிளைத்தாளே. (கங)

இன்னவிதத்திரு வோருடன்திட லியாவருமோர்ந்திகழ்சொற்
பன்னல்விளைத்தன ரங்கவரஞ்சிலர் பைங்கிளிவாகனனுன்
மன்னையும்பொரு ளாமதியாதுயர் மாதவருங்கெடுவா
ரென்னலுமாதர்செ யுங்கபடங்கொடி தென்னலுமன்னினவே. (கச)

தன்குலமாதை மணந்திடலுந்தவ சிற்கிடரென்றுதணந்
தின்குணனுகி மலர்த்திரண்மாயவ னீரிருதோளொடுதா
ணன்குபுனைந்திட வேமுயலந்தண னஞ்சுறழ்வஞ்சகமார்
புன்குலமாது முயக்கமயக்கிடை புக்கதொரற்புதமே. (கரு)

வேசியெனத்தெரி வித்துமிடுந்தவ வேடம்விடுத்துமிகப்
பேசியுமன்புட னுசைவிடாதுபி ராமணன்வந்துபுனர்ந்
தாசியுரைப்பத றிந்தவள்பொன்றரி னன்றியிணங்குகிலே
னேசியடிப்பவர் சிற்சிலருற்றன ரென்றுமியம்பினளே. (கசு)

முன்னுரிமைத்திற மெய்தவணங்கி முயங்கிமுதிர்ந்தமயற்
றுன்னுறல்கண்டு வெறுத்தழலேநிகர் சொற்களுரைத்தவளைத்
தன்னுயிரென்றுணர் தொண்டரடிப்பொடி சாமவர்நேர்தளர்வுற்
றின்னுயிருய்வகை யின்றியொர்தன்குடி லேகிவிழுந்தனனே. (கள)

அன்றிரவிற்றிகழ் திங்களின்வெய்யி லழற்றலுமாரமலைத்
தென்றிசைவாயு வடர்த்தலும்வேள்கணை சிந்தலுமாதியவா
முன்றிகழ்காமவி காதங்ணேந்துமு டைந்தபல்பாடல்களியான்
சொன்றிடலுஞ்சில சொள்ளுநர்கன்கு துதிப்பவர்பற்பலரே. (கஅ)

எத்தனைதூரம் வெறுப்பினுமாதரிடத்தருராகமுறுஞ்
சித்தமமாதவ னுக்குமளித்த திருட்டரியோர்முதுமைப்
பத்தனிலம்மகள் கண்ணைதிரோகியொர் பைம்பொற்கலமதனை
யத்தவனல்கின னிற்கெனவன்பொ டளித்துமறைந்தனனே. (கசூ)

அக்கலமங்க ரத்துறுகோயில கத்தினதாதலினுன்
மிக்கவருச்சக னுதுகளுவிலும் விண்டுவ்தின்னதலம்
புக்கதெனச்சொலி யேகினனவ்வழி புரவலனேவலர்போய்க்
கைக்களவோடுகொ ணர்ந்தனரம்மகள் காவலனெதிரஞ்சி. (உ0)

தொண்டரடிப்பொடி நல்கியதாவொரு தூயவயோதிகர்கைக்
கொண்டடியாளிட நல்கினொன்னமெய் கூறினளங்கவனைக்
கண்டதனுண்மைவி ஞவினனியானது காரணமோதறியேன்
புண்டரிகக்கண் முராரிதனுணைமெய் பொய்யலவென்றனனே. (உக)

அனகனிதோதலு மாடகவட்டி லடைந்ததலந்தெரியுங்
கனவுபெறும்பன வன்றலியிற்கரி யோனுவேசமதா
யெனதருளாடலி தென்றனனங்குள ரியாவருமவ்விருவர்ப்
பனகவணைப்பர னடியவனொன்று பணிந்துபராவினரே. (உஉ)

வஞ்சகவேசியெ னும்பெருநிந்தை மறைந்துயர்மாண்பினளா
யெஞ்சலில்சீர்கொள்வை குந்தமடைந்தன ளேழையரிற்கொடிதா
நஞ்சனையாரெனி னுந்தவசீலர் நயந்தணையப்பெறினோர்
கொஞ்சமுமேம பயந்தொடராநெறி கூடுதறிண்ணமதே. (உங)

அத்தவவேதிய னுகியதொண்ட ரடிப்பொடிமீதரிதான்
வைத்தபொய்மாயையை நீக்கியருட்பெரு வாழ்வுறநோக்கினனு
லுத்தமயோகியர் தம்மதுபூதியொ ருங்குபொறுத்துலவா
முத்தமிழ்மாலைக ளுந்துளவோடவன் மொய்ம்பிலணிந்தனனே. (உச)

தூயவனேச்சில நாள்விலைமாது தொடர்ச்சியின்மாழ்கவிடுத்
தேயநலஞ்செ யெனத்திருமங்கை யியம்பியவண்ணமகாண்
மாயனியற்றலி யெண்ணிலவன்பெரு மாயையுமன்னவள்பாற்
பாயதிறத்துள டக்கமெனச்சில பக்குவர்செப்புவரே. (உஞ)

ஆசறுசீல மிகப்பெறுதொண்ட ரடிப்பொடியாழ்வான்முன்
வாசமலர்ப்பிர மாவருளாயுள் வகுப்பினுமிஞ்சியநா
ணேசரனேக ருவப்புறுமாறு நிலத்திலிருந்தரிதாட்
பூசனையன்பர் மலிந்தவைகுந்த புரத்திலடைந்தனனே. (உசு)

ஆன்றுள தொண்டரடிப்பொடி நாமமணிந்ததொரந்தணன்முன்
னேன்றுதவம் பலகாள்செய்து மாயனெழிற்பதமேவல்சொனேன்
றேன்றுளிமல்கு மலர்ப்பொழில்சூழ்தரு சீரங்கத்திடையோர்
பான்றுதிகூறுபு பாணுழ்வாணுறு பரிசதுபகர்வேனே. (உஎ)

தொண்டரடிப்பொடியாழ்வார்சருக்க முற்றிற்று.

இருபத்தொன்றுவது

திருப்பாணாழ்வார் சருக்கம்.

எண்ணில்பல பிறவிகளி லெட்டெழுத்து மிகவோதும்
புண்ணியத்தோ டேதோவோர் புனையுமியற் றியவொருவன்
றிண்ணியநாற் குலத்தோரும் தீண்டாவைந் தாங்குலத்தின்
மண்ணிலுயர் சோணுட்டோர் மகவாகி வளர்ந்தானே. (க)

அம்மகனைப் பெற்றார்த மருந்தவமும் பெருந்தகவு
மிம்மணுல கிடத்தியாரு மியம்பிடக்கேட் டிலனியானென்
சம்மதத்தாற் சிலபுலவர் தமைப்போற்சொல் லவுமாட்டேன்
மைம்மலிநேர் நெடுமேனி மாயனறிந் தனவாமே. (உ)

மேற்குலத்திற் சிலர்நரக வேதனைப்பட் டிடல்போற்கீழ்ப்
பாற்குலத்திற் கதிபெறுஞ்சில் பக்குவரி லிவனொருவன்
மாற்குரிமை மிகவெய்தி மாமிசங்கள் எருந்தானுய்
நோற்குநரி லொருவனென நுவனடைதொட் டொழுகினனே. (ங)

இளமையினிற் புனிதமிக வெய்தினனுய்த் தினந்தினமுந்
துளசிமுத லியவெடுத்துத் தூயபுனற் காவேரிக்
கிளர்மணலிற் கோயில்செய்து கிடந்தருள்வாற் பூசித்துத்
தளர்வொழிய முதற்கதியே தருகெனநன் கிரந்தானே. (ச)

அதுமுதிர வவனினத்தா ரணுகுதற்கு மச்சமுற்றூர்
சதுவகைய குலத்தோரிற் றக்கவர்மிக் குபசரித்தா
ரிதுதுணையாற் பிறமுயற்சி யாதொன்று மிலனுனன்
பதுமன்முதற் றேவர்களும் பார்த்துமிக வியந்தாரே. (ஞ)

அந்நாளைப் பலகனவி லரங்கநகர்ப் பெருங்கோயிற்
பைந்நாகத் தணவணையிற் படுத்திருக்கும் பரந்தாமன்
மைந்நாகக் கிரிபோலும் வடிவுமிரு மடவாருஞ்
செந்நாவாற் றுதித்துய்ந்தார் திரள்களும்பார்த் துவந்தானே. (சு)

அன்னதவத் தருட்பாண னங்கொருநாள் வழக்கம்போற்
றன்னதுகை யாற்பூசைச் சடங்கியற்றி யுறும்போது
பொன்னரங்கக் கோயிலுக்குப் புனல்கொணரப் போந்தவர்தா
மின்னல்விளைத் திகழ்ந்துகல்லா லெறிந்துதுரத் தினரன்றே. (எ)

அஞ்சியவ ணேதலு மவர்புனற்கொண் டங்குற்றூர்
கஞ்சியல்பாம் பணைக்கிடந்தா னற்கோயிற் கதவவர்தா
மிஞ்சியபல் பாடுபட்டும் விடுபட்டுத் திறக்கவில்லை
கெஞ்சிமிகத் தொழுதெழுந்து கெட்டேமென் றிரங்கினரே. (அ)

நம்மூரிமைத் தொழும்பனுக்கு நலிவுசெய்தீ ராதலினிவ்
விம்முதய ருறப்பெற்றீர் விளைந்தவனைத் தொழுதழைத்தின்
றிம்முறைசெ யருச்சகன்மீ தேற்றிவரு வீரென்ன
மெய்ம்முதலா மரங்கேசன் விளம்பொலியொன் றெழுந்ததுவே. (கூ)

அக்கணமே யுற்சவச்சி ரவிர்தரவன் னவர்போயம்
மிக்கவனைத் தேடினரவ் வேளையவன் வெகுவாய
துக்கமொழிந் திவர்வாராத் தூரத்தே கோயிலமைத்
திக்கனைப்பெற் றுன்பூசை யினிதியற்றி யிருந்தானே. (கo)

தேடியவர் காணுமற் றியக்கமுற்றுச் சிறப்பனைத்துங்
கூடியவர் பலர்களுமக் குளிர்துறையி லுறநிறுவிப்
பீடியன்மெய் யறிஞர்சிலர் பெயர்ந்தவன்போம் வழியேபோய்
நாடியவ னேடாம னலம்புகன்று பணிந்தாரே. (கக)

பணிந்தவர்க டமைப்பார்த்துப் பாணுழ்வா னெனைக்கொல்லத்
துணிந்தடித்துத் துரத்தியநீர் தொடர்ந்துதொழ லேனென்ரு
ணணிந்தபடைச் சங்காழி யரங்கனுனை யழைக்கின்ருன்
விணிந்திரா தியர்மதிக்கு மேதகவெய் தினையென்ரூர். (கஉ)

என்னைநீர் தொழுத்தகுமோ யானங்கும் வரலாமோ
முன்னைநா ளயன்விதித்த முறைபிறழ்ந்த தோவென்னத்
தன்னையே தாழ்த்திடுமத் தவன்றனையன் னவர்தொட்டீர்த்
துன்னைநேர் வார்சகத்தி லொருவருமின் றெனக்கொணர்ந்தே. (கஙு)

ஆழியுளான் சொற்படியே யருச்சகன்றன் பிடரேற்றி
யேழிசையாழ் முதற்கருவி யெல்லாமு மினிதொலிப்பப்
பாழிமதக் களிற்றினநேர் பாகவதர் துதிபாட
வாழியதென் னரங்கருகர் மறுகினிடை வரலுற்ரூர். (கச)

அருச்சகன்செஞ் சிறைப்புள்ளா வவன்மேற்கொள் பாணுழ்வான்
மருச்செறிபைந் துளவணியு மாயவனுத் திகழ்வுறலும்
விருச்சிகநேர் கொடியோரு மிகவெருண்டு கரங்கூப்பிக்
கருச்சளந்தீர்த் தருள்சேவை கண்டனமென் ருடினரே. (கஞ)

பூவிலெவ னேவொருவன் பொருவில்பெருந் தவஞ்செய்திட்
டாவியுடைக் கலுழன்மிசை யனேயமுகுந் தனைக்காண்பான்
பாவிகளு மதுபெறலாற் பரமபத மரங்கமென்றுங்
காவிரியே விரசையென்றுங் கணித்தறிந்தோர் சிலர்தாமே. (கசு)

அவ்வண்ண மங்குள்ளவணி கிளர்சங் நதிச்செல்காற்
செவ்வண்ணக் கதவங்க டிறந்திடலாற் சேவித்தா
ருய்வண்ணப் பாணுழ்வா னெருபதுபாட் டுரைத்திடலு
மைவண்ண மாலவனே வாய்மலரா லுட்கொண்டான். (கஎ)

விழுங்கிடலு மலன்காலின் விரலிரண்டுங் கடைவாயி
லொழுங்குபடத் திகழ்ந்ததனு லுருத்தாங் கிசம்போன்று
னழுங்குமனத் தினராகி யடியர்பல ரலமந்தார்
செழுங்கருணைக் கடற்பெருமான் றிருவுளப்பாங் குணராதே. (கஅ)

போதகெடு நாட்சென்றிப் பூதலத்திற் புகழ்வாய்ந்த
நாதமுனி யென்றொருவர் நலந்திகழ்வை ணவசமயத்
தாதரமாய் விளங்குற்று ரவரரங்கத் தொழுநாளி
லீதழகன் றனக்கெனநன் கிறைஞ்சியபின் மறைத்தானே. (கக)

அண்டமுழு துண்டுமிழ்ந்த வலர்கமலத் திருவாயாற்
பிண்டமொன்றை முற்றயின்றும் பெருவிரலோ ரிரண்டுமெட்டுங்
கண்டவர்தா மிகழவெளிக் காட்டியுற்ற கருங்கள்வன்
கொண்டவெண்ண மெவராலுங் குறித்துணரக் கூடாதே. (உ0)

துன்றடியார் களைத்தனது சொருபத்தே கலந்துகொள்பண்
பின்றரிக்கென் றேகருது மிளம்பருவ வயிணவர்க்குத்
தென்றமிழ்ப்பாட் டொருபத்தாற் றிருப்பாணழ் வானவனூ
டொன்றலுற்ற கதிசொன்ன லொருசிறிது மினியாதே. (உக)

பத்துப்பாட் டொத்ததிருப் பாணனைத்தன் கனிவாயாற்
றுய்த்துக்காட் டியவரங்கன் றுதிக்கவியா யிரங்கேட்டு
மெய்த்துப்பா ருலகினிடத் திடையவெனை விடுங்கொடுமை
முத்துப்போன் றேதிகழு மூதறிஞ ருணர்வாரே. (உஉ)

சேணுட ருணர்வினுக்குந் தெரிவருஞ்சீர் வாய்ந்ததிருப்
பாணழ்வான் சரித்திரமிப்படி சொலக்கேட் டளவுதைத்தே
னீணுகப் பாயலுளா னிசநெறியே கடைப்பிடித்த
மாணுர்ந்த பரகாலன் மாட்சியுஞ்சற் றுணைப்பேனே. (உங)

திருப்பாணழ்வார்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - அஙடு.

இருபத்திரண்டாவது
திருமங்கையாழ்வார் சருக்கம்.

கள்ளரியாமெனக் காசினியோரிடம்
விள்ளநாணமு ருவியனுர்குலத்
துள்ளமாதவ மோருருக்கொண்டென
மள்ளர்கூற்றுறழ் மங்கைமன்ரோன்றினன். (க)

பிறந்தவூருமப் பிள்ளையைப்பெற்றிடச்
சிறந்தமாதவஞ் செய்தவர்பேர்களு
மறந்தழைக்குமுற் சென்மமுமாதிய
பறந்தசெம்புட் பரியினன்றேர்வனே. (உ)

விண்டுபத்தி திரண்டொருமெய்யுருக்
கொண்டுவந்த குணங்கொடுநீடியே
தண்டுசக்கரம் வாள்விற்றரித்துநற்
ரெண்டுகோயி ரெறுஞ்செய்தெய்த் தானரோ. (ஊ)

கற்றிடாது வருங்களவுத்தொழில்
பற்றினாளும் பயின்றுபொன்றேடியே
நெற்றியிற்றிரு மண்ணிடுநேயர்பா
லுற்றிறைஞ்சி யுதவுதலாற்றினன். (எ)

ஒருமனப்பி னிராவிலொருத்திகை
திருகியேகலங் கொண்டனன்சேவைரே
ரிருகட்கொண்கனங் கியாரெனக்கேட்டலுங்
கருணைநாரண னென்னக்கழறினள். (ஏ)

அச்சொற்கஞ்சி யவள்கையிற்கொண்டதும்
வைச்சிருந்தசில் பண்டமுமற்றவர்
துச்சுவக்கச் சொரிந்துவிட்டோடினு
னிச்சலிக்கதை நீணிலஞ்சொல்வதே. (ஐ)

சக்கரத்தினைத் தந்துறழ்நாரினுன்
மிக்கதாங்கத லித்தண்டினுல்வென்றே
புக்கவண்செறி பொற்றிரள்கொண்டுபின்
பொக்கமின்றிய புண்ணியச்சிந்தையால். (ஒ)

சீரங்கப்பணி செய்ததுஞ்சிற்சில
பேரங்கத்தைப் பெருகியூதிதாழ்த்
தேரங்கக்கதி யீந்ததுமெண்ணில்பல்
லோரங்கங்குரைக் கின்றதுண்டுண்டரோ. (ஓ)

முட்டுப்பட்டறி யாவிவன்மூர்க்கத்தால்
வெட்டுப்பட்டவ ரெத்தனையோவியன்
கட்டுப்பட்டவ ரெத்தனையோகையின்
குட்டுப்பட்டவ ரெத்தனைகோடியோ. (கூ)

அன்னவண்ண மடற்பரகாலன்ரு
னின்னன்மாநிலத் திற்பலர்க்கீந்தவர்
பொன்னனைத்துங் கவர்ந்துசில்புண்ணிய
முன்னவின்ற முறையின்முயன்றனன். (கo)

வே று.

வாட்கலிய னெனவுலகோ ரச்சத்தா லிடும்பெயரும் வகித்துக்கொ
ண்டான், கோட்கலுழப் பரியுகைப்போ னடியரலார்க் கெமன்போலுங்
கொடுமைசெய்வான், வேட்கடுக்கும் பேரழகும் விசயனையே நிகராகும்
வென்றிப்பேருங், தோட்கமைந்த பலபடையுஞ் சுமந்துள்ளான் * முதலை
மஞ் சொலச்சோம்பானே. (கக)

மன்னர்மன்ன னெதிர்த்தாலு மவன்படையோ டறத்தடியும் வலி
மைவாய்ந்து, மின்னவய வீரனர சாட்சியினை யணுத்துணையு மிச்சித்தில்
லான், பொன்னருமை யெனச்சேர்ப்பார்க் கிடர்விளைத்து நாரணனைப்
போற்றுமன்ப, ரென்னவெளி வேடமட்டிற் றிகழ்வார்க்கு முவகைமிக
வியற்றினனே. (கஉ)

எந்தவிதச் செயல்களுந்தன னருள்வழியே செயுந்திருட னெனப்
பன்னூலுஞ், சந்ததமும் புகல்பகவன் றிருவுளத்திற் கருணையொரு சற்
றேதோன்றிற், றிந்தநிலத் தொருகளவு மிவன்றனக்கன் றெய்தாம லேக்
கற்றேகி, வெந்தகெருப் புறழ்கானில் வழிப்பறிவேட் டொருசெடிக்கீழ்
வேங்கைபோன்ரு. (கங)

உச்சியிற்சூ ரியன்குலவு முருமத்தே தனிப்பரியூர்ந் தும்பர்தாமு,
நச்சிடற்காம் பணிபலபூண் டாடையும்பொன் னலணிந்தோர் நரனங்கு
ற்ரு, னச்சிறுவன் றனைக்கண்டாற் பரியிரிய வுகைப்பானென் றடுத்தபோ
து, பச்சிறகார் சிறுபுட்போற் பாய்ந்துகடி வாளமதைப் பற்றினனே. ()

பற்றிடலு நடுநடுங்கி மணஞ்செயப்போ மெனைக்கொல்லேல் பாவம்
வேண்டல், பெற்றிவுளி யுடன்செலவிட் டிடிற்போது மெனக்குமுறிப்
பேசலுற்ரு, னெற்றியினீற் றணியவிர்ந்த தன்றிமண்பூ சியதழும்புநிலவி
னலும், வெற்றிமலி சக்கரத்தா, னடிமையெனத் தொழுதுதுணை மிகச்
செல்வானே. (கஙி)

* முதலைமம் - அட்டாக்கரம்.

துணைச்செலுங்கா ரணமென்னே வெனவினவிற் சொலக்கேண் மின் றுணிந்துவெளவு, மிணைக்கையராந் தன்னினத்தா ரியாவருஞ்செவ் வேளடிமை யேகதேசங், கணைக்கலந்த விசயனிடங் கலகமிட்ட வேடுவ னேக் கருதுவாருண், டணைக்கடன்மேற் றுயின்றவன்ற னடிமையிவ னெ னத்துயர்மிக் களிப்பாரென்றே. (கசு)

அன்றுகன காசுரன்செங் கீர்குடித்த வாயிரம்வாய் களுமொன்று கிக், குன்றுறழ்தோ ணிரைக்கணியாக் குடர்கவர்கை களுமிரண்டாக் குறுகிக்கோபங், துன்றுரக துகர்பரியும் பிடிபடுமாச் சரியமென்வாய் சொல்லற்பாற்றே, மன்றுடையா னயன்மகவான் முதலியதேவரும்விய ந்து மதித்திட்டாரே. (கள)

வேடமவ்வா றிடலருமை யன்றன்று நடுநடுங்கி வெயர்த் தென்னுவி யோடனுப்ப வேண்டுமெனக் கெஞ்சியதே மிகவருமை யொருகனுவிற் பாடல்விழைந் தென்னிடத்துந் திருவல்லிக் கேணியிலப் பாசாங்கிட்டா னுடறிய விளையாடச் சோம்புகின்று னவன்மனமே நகைக்கு மன்றே. ()

மாவில்வந்து தன்கைவசப் பட்டமண மகனையந்த மறவர்கோமா, னீவிசனப் படவேண்டா மாயுதங்கொண் டமர்செயினே நின்னைக்கொல் வேன், பாவியலேன் பகவனடி யவர்தொழும்பிற் காத்திருடும் பண்பி னேன்கா, ணேவியம்போன் றிருத்தியெனத் தேற்றியவன் பணிகழற்ற லுற்றுனன்றே. (கசு)

துப்பனைய திருவடியின் விரலணியைக் குறிப்பாகச் சூ*ழொன்றன்றி யெப்பணியு மொவ்வொன்றுக் கழற்றியவ னுத்தரியத்தினிற்சேர்த்திட்டு மப்பணியை விடமனமில் லாதவனுய்க் கடித்துநெகிழ்த் தானப்போதே மெய்ப்பகவ னிவனெனலே முதலாய ஞானமெலாம் விளங்கிற்றம்மா. ()

காரணனென் றிவனறிந்த வுடனவன்புள் ளரசின்மிசை களிபோகஞ் சேரமணி முகிலேபோற் சிவனயனிந்திரன்முதலோர்செறிந்துபோற்றப் பாரணங்கிற் காச்சுமக்கும் படையைந்துந்தோணன்கும்பதுமச்செங்கட் சீரவிர்மா முகமுமெழிற் றிருவடியா தியுந்தெரியத் திகழ்ந்தானன்றே. ()

புறவெளியிற் கண்டபடி யகவெளியி னிலும்பெரிது பொலியப்பெ ற்றுன், மறமுழுதுந் தவிர்ந்தறமே வடிவானுன் பழவடியார் மரபிற்சேர் ந்தான், றிறமலிசெந் தமிழ்ப்பாடல் பலபலவுந் துதித்தொலிக்குஞ் சிறப் புந்தோய்ந்தான், முறவினரா சாரமொடு திருப்பதிதோ றேகியன்பிற் றுதிசெய்தானே. (உஉ)

அலந்தருபோர்ப் புலவருய வகப்பொருளா தியவிளக்கி யவர்தம்வாயா னலந்திகழ்காற் கவிராச நம்பியென்றூர் திருப்பெயருகவிலப்பெற்றுன் சிலந்தியுணுங்குரங்கினமாந்தேவருக்குத்துணையாஞன்றிருக்கணேக்கங் கலந்தமனத் தினர்க்கரிய காரியமொன் றுள்ளதெனக் கழறுண்ணுதே.

* ஒன்று - கால் விரலிலுள்ள மோதிரம்.

அவன்பிறந்த தலமெனவுஞ் சிலர்பகர்சி காழியிற்போ யமரசேத்த
நிவந்தபுகழ்த் தாடாளன் சங்கதியே தஞ்சமென நெடுநாளுற்றான்
சிவன்றனருட் பெற்றதிரு ஞானசம்பந் தனுமாங்கு நிகழ்ந்தானங்கா
ளுவந்திருவர் களுமொவ்வோர் காற்பரிதி மதிகலந்தாங்குறுவதுண்டே.

இத்தனேபா லப்பருவத் தீசனருள் பெற்றனனென் றிவன்வேட்டாங்கே
யத்தனேகோ ரந்தவிர்வுற் றரியருள்பெற் றமைகருதி யவனும்வேட்டான்
பித்தனெனத்திருடனெனப்பேசினுங்காத்தருள்வதொருபெருந்தேவென்னச்
சித்தர்முத லோர்கபகர்தல் சரதமெனி லவருரிமைத் திறமெய்யாமே.()

சிவனேயிழி தேவதையாச் செப்புசிறு வயிணவருஞ் செங்கட்கார்போல்
பவனேயொரு பசுவென்றே பகருமிளஞ் சைவர்களும் பழுதில்காழித்
தவரிருவர் களுமுறவாய் நிகழ்ந்தனரென் றுற்சகியார் சண்டையிட்டுக்
கவலிமிகவொருவனேமற்றொருவன்வென்றுனெனப்பகர்ந்துகளிப்பான்றே

சதுர்வேத சித்தாந்தந் தனிற்குலவு சட்சமயத் தலிவர்தம்மு
ளிதுகாறுமொருவனைமற் றொருவர்பொரு தழித்தகதை யில்லையில்லை
பொதுவாயபரஞான முதியாமு னிளம்பருவப் புதல்வர்போல்வா
ரதுதாழ்வென்றிதமேலென் றறிந்தளவிற் புகன்றுசின்னு ளயர்வதண்டே. (உள)

மழவிடைமேற் சிவனெதிரில் வரமுயலுஞ் சைவனுக்கும் வயினதேய
னழகியபொற் பிடாரிலரி யவிர்தரவே கருதும்வயி ணவர்க்குந்தாங்கள்
பழகுதவ முதிர்தரலுந் தெய்வமொன்றே யெனுஞான பலமுண்டாமேற்
கழல்கடித்தும் பால்குடித்து முய்ந்தவருட் பகைவருமோ கருதுவீரே.()

என்றெய்வம் பெரிதென்போன் கன்னியொப்பான் றெய்வமொன்
றேயெனத்தேர்ந்துள்ளோன், குன்றென்ன முலைபருத்துக் கொண்கனுக்
காம்பருவமுறுங் குமரிபோல்வா,னன்றென்ன லழிந்திடவு மாமெனலுண்
டாகவுஞ்செ யருள்வாய்ந்துள்ளோ, னென்றென்ன வுலகுபுகழ் மதலைபயந்
துளவனிதை யொப்பானன்றே. (உசு)

தெய்வமிரண் டென்னுமவர் பிறவாத முத்தியினிற் சேர்வதின்றுற்
சைவகுரு வாயகவு ணியன்மனத்திற் சிவன்வடிவே சங்கமூது
மைவனநா ரணன்வடிவும் வாட்கலியன் மனத்திலரி வடிவந்தானே
நெய்வழிசூ லப்படையோன் வடிவுமெனல் குருவாணை நிசங்கண்டீரே.()

நான்முகனு மகத்தியனே முதலாய முனிவரரு ளகுவெண்டிங்
கள், போன்முகங்காட் டிடுமெளவை வள்ளுவனு தியராஞ்சில் புலவர்
தாமு, நான்முகத்துந் தெய்வமொன்றே யெனநுவன்று ரொருசமயநோக்
கத்தின்னேர், மேன்முகப்பே றடைந்துமுதற் பிடித்தபிடி கடைப்பிடி
யாய் விளம்பினரே. (ஊக)

அருட்பேறு பெற்றவரெச் செயல்செயினு மழகேயா மஃதெய்தா
தார், பொருட்பேதஞ் சொற்பேத மிகவுணர்ந்தா யிரம்பனுவல் புகன்

றிட்டாலு, மிருட்பேயன் ஞரிகழ்ச்சிக் கடல்கடக்க மாட்டாம லினைவா
ரந்தோ, தெருட்பேற்றிவ் விருவர்களுஞ் சிகாழிப் பதிவிழிபோற் சிறக்
குகாளில். (கூஉ)

தாடாளன் கோயிலிற்சில் பொருள்களேமூ துணர்விலிளஞ் சைவர்
வெளவிக், காடாய வயிற்புதைப்பக் கண்டுபர காலனவர்க் கட்டிக் கொண்
டாங், கேடாம தனேக்கனலி லிட்டெடுத்தான் முன்னருய்த்தா னிவன்
கைதன்னில், வாடாங்கி யிருந்துமவர்க் கொன்றில்லான் கருணைமிக வள
ர்ந்ததாலே. (கூஊ)

மெய்ப்பிரம குலமகவாங் குரவனவன் கருணையினே வியந்தங்காளி
லப்பிழைசெய் தாரெதிர்தும் முயிர்ப்பிழைத்த தாச்சரிய மாமென்றேதி
யொப்பில்சிவன் றிருவடிவி லவன்பாதியானவித முணரக்காட்டித்
திப்பியநாரணன்பணியத் திருக்கோயி லிடஞ்செய்துயச் செய்வித்தானே.

அன்புமவன் பெருந்தகவு மறிந்துபர காலன்வியந் தார்வமெய்தி,
யென்புபெண்ணு கிடப்படித்த நின்வாயா லொருகவியெம் மிறைமேற்
பாடிப், பின்புனடி யவரறியும் படிசெயெனப் பெரிதிரந்தான் பேணுந்
தொண்டர், மன்புனைவார் சம்மதத்தா லெம்மதமு நிலைபெறுஞ்சீர் வயங்
குமாறே. (கூடு)

இடங்கொண்ட நெஞ்சகத்துக் கிணங்குவன பள்ளிகொண்டா னிரு
தாளென்னத், தடங்கொண்ட தாமரைசூழ் தருகுடந்தைத் தலங்குறித்
துச் சாற்றலுற்று, னடங்கொண்டான் றிருவடியைப் புகழெனச்சொற்
றிலனவனு நவிலவில்லே, கடங்கொண்ட கரப்பிரமன் மனேவியுளக் குறிப்
புணர்தல் கடினமாதோ. (கூசு)

எத்தனேயோ நாரணர்மான் மழுவணிந்தான் றனேத்தொழலு மெழிற்சங்காழி
வைத்தகரத் தானேயுமவ் வாறுபல வுருத்திரர்கள் வணங்குமாறுஞ்
சித்தமறி தரக்குரவன் றிருவடிசான் றுகவொவ்வுந் தெருட்சிவாய்ந்த
வித்தகரோ நான்முகனே வியாதன்முத லினையுறழ் விரகுள்ளோரே. ()

வெண்ணீறிட் டோர்பலருஞ் சிவனென்றுந் திருமணிட்டு விளங்கு
வோராம், வண்ணீர்மை யோர்பலரு மாலென்றும் பெரியோர்சொல்வகை
நன்கோரார், புண்ணீடுமனத்தினராய்ப் புலர்வதன்றி யின்பமொருபோது
மெய்தார், தண்ணீரு நெருப்புமவர் தங்கிடமென் றுணர்ந்தரிய தவஞ்
செய்யாரே. (கூஅ)

அந்தவண்ண மங்கைமன்னன் சரிதமுழுதறிந் துரைத்தற் கருகனல்லேன்
கந்தரநேர் நெடுமேனிக் காகுத்தன்றிரு வடியிற் கலந்தேபோலு
னிந்தமட்டி லிதைமுடித்துப் பொய்கையார் பூதத்தாரெழிற் பேயாரென்
செந்தமிழ்ப் பாவலர்மூவர் சீதரனுலுய்ந்த கதை செப்புவேனே. (கூகூ)

திருமங்கையாழ்வார்சருக்க முற்றிற்று.

இருபத்துமூன்றுவது

மூன்றுழ்வார் சருக்கம்.

பொய்கையார்பூதத்தார் பேயாரென்னப்
புகலுமொருமூன்றுதமிழ்ப் புலவரன்னோர்
செய்கையாவனவுலந்த மிருக்கலாகுந்
தெளிந்துலகிலுள்ளவர்கள் செப்பவில்லை
யுய்கைமாத்திரம்பலமா வுரைக்கின்றார்க
ளொவ்வொருவர்தாமுமொரு நூறுபாட
னேகைதீர்த்துயற்பொருட்டு முய்ந்தவாறு
நாரணனைத்துணைக்கொண்டே நவின்றுள்ளாரே. (க)

மன்னுதுவாபரயுகத்திற் பிறந்துவாழ்ந்த
மனிதர்களிற்சேர்ந்தவரா வகுக்கின்றார்கண்
முன்னும்வயிணவர்துதிக்கும் பதின்மர்தம்மின்
மூத்தவர்களிவர்களென்றே மொழியவேண்டும்
பொன்னுமடவாருமண்ணும் வெறுத்துநெஞ்சம்
புனிதமுறுந்துறவிகளே போதஞான
மென்னுமொருகடலினுக்கு வரம்பேயானு
ரிகபரசாதனங்குறித்த வீடுற்றாரே (உ)

மெல்லியலார்வயிற்றகத்திற் புகுந்திடாமல்
வேறுதலங்களிலுடல்கொண் மேலோரானர்
கல்லிடத்தும்விண்ணிடத்து மலையுஞ்சித்தக்
கணங்களேயோர்பொருளாகக் கருதிடாதார்
வல்லிருப்புத்தடிச்சமனு வுருக்கொண்டோனு
மாயவனேயெனுந்துணிவின் மயக்குறுதார்
நல்லிதயத்தடியவருக் கடிமையாகி
நாட்டிலமுதிரந்தருந்து நசைவாய்ந்தோரே. (ங)

சோமசூரியருடனக் கினியுமான
சுடர்மூன்றுமனையவவர் சூடிக்கொண்ட
நாமநலத்தாற்பேயார் சாத்தனுதை
நற்பூதத்தார்கயிலை நாதனுனைக்
காமர்மலிபொய்கையார் கமலனுனைக்
கடிப்பரெனக்கழறவல்லார் கழறலாகு
மாமவருக்கத்தகைவாய்ந் துள்ளவாறு
மறியாதாரிளம்புலமை யாளர்தாமே. (ச)

பேயனேத்துமையனுர் சேனையென்றும்
பெரும்பூதமத்தனேயும் பிராகபாணித்
தூயனதுசொந்தமென்றும் பொய்கையெல்லாந்
தொல்பிரமதேவன்மனேத் துணேயேயென்று
ஞாயமெடுத்துரைத்தாலு மவர்க்கொப்பாக
கவிலல்பிழையென்றிகலு நரரெல்லோருந்
தீயவரேயவர்திருமா லகண்டனென்னத்
தெளியாரேகண்டனெனைச் செப்புவாரே. (கூ)

அத்தகவோர்மூவர்களு முறவோரல்ல
ரவரவருந்தனித்தனியே யகிலஞ்சூழ்ந்து
சித்தமதிற்றேற்றியவா றுடல்செய்து
சீதரனுலையந்தோறுந் திருப்பாட்டோதிக்
கைத்தலங்கள்கூப்பியன்பிற் றெண்டனிட்டுக்
களிகூருந்தகவோரே கரியமாய
னுத்தமசூத்திரதாரி யென்கைதோன்ற
வொருதினத்திற்றிருக்கோவ லூர்சேர்ந்தாரே. (கூ)

அன்றிரவிற்காற்றுமழை யிருளுங்கூடி
யதனுலவ்வூரா ருலமந்திட்டார்
சென்றிடுமூவரிலொருவ ரங்கோர்சின்னத்
திண்ணேயிற்போய்ப்படுத்தார்பின் சென்றேர்தொண்ட
ரென்றியக்கந்தீர்தரச்சற் றிடங்கென்று
நிருவருமுட்கார்தலுமற் றிவர்போல்வாரு
நின்றிடுமாறங்கணேந்தார் மூவர்தாமு
நெடியபிரானருள்கருதி நிலேபெற்றாரே. (எ)

ஒருவர்படுத்திடற்காகு மிருவரானு
லுட்காரத்தகுமூவ ருறலானின்றே
திருநெடுமாலருட்டூப மேற்றுமாறு
செப்பினுர்தனித்தனியத் திருடன்றானு
மருவுமவரிடம்வினவா தவர்கள்போலும்
வடிவெடுத்தங்குடன்கலந்தான் வருத்தமிஞ்சிற்
றருவொருநான்காயதென்னென் றுசாவும்போதி
லுங்களுச்சேர்ந்தவன்றானென் றெளித்திட்டானே. (அ)

அக்கணமம்மூவர்களுந் தம்மைத்தேறி
யடிபணிந்துவந்தொளித்தோ னரியென்றேர்ந்து
முக்கனியுங்கலந்தாற்போற் கசிந்துகொந்தார்
முகுந்தனுளத்தருள்சுரந்து முனேசான்மூக்குஞ்

செக்கர்நிறச்சிறைத்துணையுங் கொள்ளும்புள்ளிற்
றிருமகளுந்தறைமகளுஞ் சேரச்சேவை
மைக்கடுக்குமிருளொளியா மாறுகல்கி
மனக்கவலையத்தனையு மாற்றினனே. (கூ)

ஒருவரிருவரைவணங்குந் தன்மையாங்கும்
றுள்ளவராமூவர்களு முற்றபின்னர்
வருதெடுமாலவராடிப் பாடிவீழ்ந்து
வசமிழப்பக்கண்டுமலர் வனசம்போலுங்
திருவிழியாற்றேற்றிதுந்தம் வேட்கையாது
செப்புமென்றுனவரினியோர் தேகம்வாராப்
பெருதெறியேயெனச்சொன்னு ருடன்றன்றுளிற்
பேதமறக்கலந்துகொண்டு பெயர்ந்தானன்றே. (கo)

அன்னவர்தஞ்சரிதமளப் பிலவேயாகு
மச்சாவதாரமென வரிதன்கோயிற்
றுன்னலுறுமாழ்வாரின் மூவராகித்
துலங்குகின்றுரதீதகிலே தோய்ந்துய்ந்தோரா
லின்னம்வெகுவாயவர்தம் பெருமைசொல்ல
வெனக்காசைவிவரமொன்று மெய்தவில்லை
யென்னதுகற்பனையாச்சில்புலவரோபோன்
றியம்பிடுதலென்றகுதிக் கேற்றதன்றே. (கக)

மருக்கோகனகமலர்ச்செங் திருவைமார்பில்
வைத்தபிராலுலகளந்த வடிவங்காட்டுங்
திருக்கோவலூரதனி லாழ்வார்மூவர்
திரும்பாதபரமபதஞ் சேர்கைசொன்னேன்
பெருக்கோதக்கடல்புடைசூ ழுலகமேத்தும்
பெருமைமிகுவாணுமா மலையிற்றுன்றித்
தெருக்கோலத்திருக்குருகூர்ப் புளிக்கீழ்ப்புக்க
செய்யசடகோபனிசை செப்புவேனே. (கஉ)

மூன்றாழ்வார்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - அஅசு.

இருபத்துநான்காவது

சடகோபாழ்வார் சருக்கம்.



பாண்டிநாட்டிடைப் பைந்தமிழ்க்குன்றினீ
ரீண்டியோடு மெழிற்பொருநாகநி
தாண்டித்தென்றிசை யிற்றனிக்காரிமன்
ணண்டிருந்த வணிநகரொன்றரோ. (க)

* மேழியங்கொடி மேயதுவெண்டிரை
யாழியிற்றுயில் வான்றலத்தான்றது
தாழிபோலுந் தயிலக்கிணற்றது
கீழினத்தர் கெழுவரிதாயது. (உ)

† வாணுமாமலைப் பேர்கொளம்மாநகர்ப்
பூணுறழ்ந்து பொலியும்புரவலன்
மாணுறுங்கொடை வள்ளன்மைவாய்ந்துளான்
ருணுமாலயன் ருடொழுந்தன்மையான். (ஊ)

நங்கைதன்னெடு நன்மகப்பேறுவேட்
டங்கைகூப்பி யருந்தவஞ்செய்ததாற்
கங்கைதோன்றிய காலுடைக்கார்முகில்
சங்கையின்றிய தண்ணருட்பெய்ததே. (எ)

அன்னவன்மனை யாள்வயிற்றுதவ
னென்னமேம்படொ ராருயிரேய்ந்தது
மன்னர்மாட்சித் துவாபரமாயுகத்
தின்னதீற்றுறு மாண்டிடையென்பரால். (ஏ)

பத்துமாதமப் பாவைநல்லாள்வயிற்
றத்தவிக்கிர கத்துருவாயபின்
னித்தனைக்கண் வரத்துணிந்திட்டபோ
தித்தமிட்ட தொருசடமாயையே. (ஐ)

சுகனுமஞ்சுமத் தொல்பகையைத்தனுண்
மிகநிறைந்து விளங்குமெஞ்ஞானத்தா
லகலநோக்கி யழன்றனனக்கணங்
கனவாழ்க்கைக் கடவுளராதியோர். (ஒ)

கூறினுர்சட கோபனென்றோர்பெயர்
பேறிதென்னப் பெருந்தகையன்னையு
மீறில்கீர்த்திகொ ளப்பனுமின்புற
மாறில்சீர்கொடு வந்தனன்மண்மிசை. (ஓ)

---

* அக்கரராசன் வேளாளனுதலின் - மேழியங்கொடி மேயதாயிற்று.

† வாணுமாமலை - என்பது நாங்கூனேரியென வழங்குவது.

அந்தநாள்கலி யாதிவைகாசியி
னிந்துமுற்றி விசாகத்திலேய்ந்ததாற்
செந்தகைச்சிவன் றீக்கட் * புலிங்கமாக்
கந்தவேள்வரு காலமுமாயதே. (கூ)

மற்றமைந்தரில் வாய்விடுத்தேங்கிலான்
பெற்றதாய்முலைப் பாலுணவும்பெறான்
வற்றலாகி மடிந்திலனுட்குநாண்
முற்றலெய்தி முகமலர்ந்தானரோ. (கo)

கண்டுதாய்முத லோரரிகண்ணரு
ளுண்டுநீடுறு முண்மையுணர்ந்திலார்
மண்டுதங்குல மக்கள்பண்பெய்துவான்
றெண்டுகோயி றெறுஞ்செய்தெய்த்தார்களே. (கக)

தவழும்பக்குவ மெய்தியுந்தந்தவர்
கவலையெய்தன்முன் கண்ணனைப்பெற்றவ
ரவளவற்புதங் கண்டுமவுணரா
லிவனிறுங்கொலென் றேங்கியதொத்ததே. (கஉ)

வே று.

விரசைபோலவட கையிலோர்வைகுந்த மேவியபொருநைத்தென்
கையிலுள்ளது கழனியுஞ்சோலையுங் காமரும்பொலிவுற்ற
தரசனுகிநம் மாதிநாதப்பிரா னுள்வதுபணிக்கோமான்
புரையில்பூம்புளி யாயுறங்காதுறும் புகழதுகுருகூரே. (கங)

நெடியமாயவ னேபரமென்பவர் நிறைவதுநிகமாந்த
மடியமெய்திடக் கொடுப்பதுசித்தர்வந் தாடிடச்சலியாத
திடிவினுவுபாம் பினமெனப்புறநெறி யினருடங்கிடுமாண்ப
தொடிவில்சித்தியு முத்தியும்வேட்பவர்க் குதவுதென்குருகூரே. (கச)

நான்மறைப்பொருட் பதரலாதனவெலா நறுந்தமிழிடைப்புக்க
தான்மகோடிக ளேபரமென்பவ ரணுகரியதுபைங்கண்
வான்மயூரமுங் கிள்ளையுங்குயிலுநேர் வனதருதொனிசால்வ
தூன்மகஞ்செயற் கிசைவுறுவேதிய ருறைதிருக்குருகூரே. (கஞ)

அத்தகைத்திரு நகர்ப்பெருங்கோயிலி லணிமுகிலெனவாழும்
வித்தகத்திரு மால்செயுமாடலின் வியன்பலர்சொலக்கேட்டு
நெய்த்தபூந் † குவ ளைத்தொடைக்காரிமன் னேரிழையொடுஞ்சாலு
மெய்த்தவச்சிசு வொடும்பலர்தம்மொடும் விரைந்தவணடைந்தானே. (ட)

சென்றநாளில்லை கானசவாகமஞ் செப்பியமுறைசற்றுங்
குன்றலின்றிய வாறபிடேகமுங் குலவுதீபமுமேலோர்
தின்றலேயெனத் தகுநிவேதனங்களுஞ் சிறப்புமிக்குறச்செய்து
தன்றவப்பய னுமகற்கருள்செயத் ததியிதென்றிரந்தானே. (கள)

* புலிங்கம்-தீப்பொரி. † குவளைத்தொடை-நீலோற்பலமாலை-வேளாளர்க்குரியது.

தகன

அக்கணத்திலக் குழந்தைபோ * யரவர சாம்புளியதன்பொந்திற்
புக்கதோர்ந்திலர் கண்டனரியாவரும் பூரணமதியொன்று
தெக்கணத்திசை நோக்கமும்வலக்கையிற் றிகழ்சின்முத்திரையுங்கீழ்க்
கைக்கவானுமே தகுபதுமாதனக் கவினுமுற்றதுபோன்றே. (கஅ)

அன்னைதாயெனு மிருவருமீதுநந் தனயனன்றெருதெய்வம்
மின்னையாதுசெய் வதன்பொருட்டோவிவண் மேயதென்றூர்சென்றூர்
பன்னைநேர்முலைப் பாலுணுமதலைபின் பயந்தனரோவின்றே
ரின்னைதீர்ந்துமுக் காலமுமறிந்தவர் நிகழ்த்திடத்தகுமன்றே. (கக)

ஆனைமாமுக மைந்துகைத்தலங்களோ டமைந்துபல்வயின்மேவிச்
சேனைமாமுத லியெனவைகுந்தம்வாழ் சிறப்புடைப்பெருந்தேவன்
வானைவையகத் துடனளந்தவன் சொலால் வகுளமாலிகைசூட்டி
யேனையோருண ராவொருமந்தன மிசைத்துருக்கரந்தானே. (உ0)

கண்டபேர்சில ரவனிவனென்றனர் காமனென்றனர்சில்லோர்
புண்டரீகனென் றனர்சிலர்மாலெனப் புகன்றனர்சிலராற்கீழ்த்
தொண்டர்சூழ்குரு வென்றனர்சிலர்சிலர் தோகைவாகனனென்றூர்
விண்டபேருமற் றையருமீங்கிவனென விழைந்தனர்சிலர்மாதோ. (உக)

முன்னினேப்பவ ரிடர்கெடுத்தலிற்கரி மொய்த்தொடையலின்மாரன்
பன்னிடுஞ்சொலிற் பிரமன்வாழ்தலத்தின்மால் பழுதில்கைக்குறிதன்னுல்
வன்னிநேத்திரச் சிவன்பிறந்திட்டநாள் வாய்ப்பினில்வடிவேலர்
னென்னியற்கைகொள் குழந்தைமாமுனிவனெற் கியாவுமாங்குரவோனே.

அந்தவாறவ னசைவறவிருப்பதோர்ந் தகிலமீதினில்வாழு
மைந்தரிற்பலர் வந்துவந்திறைஞ்சுபு மனத்தினண்ணியவாழ்வுற்
றிந்தமாதவ னிதயமேமாயன்வா ழிடமெனுந்தெளிவுற்ற
சந்தவான்கதை பற்பலவவற்றினுட் டலைமையாயதுசொல்வாம். (உங)

வே று.

இமையமலை யடிவாரத் தியற்றமிழ்வா சனைசிறிது
மமைவரிய தாங்குலத்தோ ரந்தணன்மெய் யறிவுள்ளோன்
சிமையநெடுங் குடையானைத் தேசிகனு வருகென்று
கமைமுதற்சொல் குணங்கள்கொடு கடினவுபா சனைசெய்தான். (உச)

தடுமாறு நிலைநின்று தவஞ்செயுமத் தக்கோற்கு
நெடுநோட்சென் றெருகனவி னீண்டபிரா னெதிர்தோன்றித்
தொடுநீர்ப்பா ரின்றுணராச் சோதியொன்று காணுமத
னுடுபோதி நின்குறைமுற் றெழியுமென வுரைசெய்தான். (உடு)

---

* அரவசாம்புளி = ஆதிசேடனுடைய புளியமரம், அது திருக்குருகூர்க் கோயிலிலுள்ள தலவிருட்சம்.

அக்கனவு கண்டுவிழித் தலுமொளிதோற் றியதமிழ்த்
தொக்கதடந் தனனதுபோ புயர்புலம்பத்தென் குருகூரிற்
சக்கரத்தோ னருட்கடலின் றண்ணமுதத் திரளொளிவான்
புக்கவுறங் காப்புளியின் பொந்தகத்திற் புகுந்ததுவே. (உஉ)

அங்குபோய்க் குருபரன்ற னணிவதனங் காண்டலும்
பொங்குதமிழ்ச் சுவையமுதப் புணரிநிலே விளங்கியது
பைங்குவளைத் தார்க்காரி பாலனென வருமவனு
மிங்குவரு கென்பான்போ லிருவிழியுங் கொடுபார்த்தான். (உஎ)

மெய்த்திருநோக் கிருள்கெடுக்கும் வீறுணர்ந்தும் வேதியன்ரூன்
சித்தினது வயிற்றகத்திற் சிறிதுபிறந் திடுமாகி
லெத்தினைத்தின் றெங்குகிடந் திடுமென்ரு னதற்குவிடை
யத்தினைத்தின் றங்குகிடந் திடுமென்ன வறைந்தானே. (உஅ)

அம்மொழிகேட் டடிபணிந்தா னுயிரம்பாட் டந்தாதிச்
செம்மொழிப்பா மாலையொன்றுஞ் செப்பிடக்கேட் டெழுதிவைத்தான்
மெய்ம்மொழிப்பா வலரதன்சீர் மிக்குணர்வார் வெள்ளறிவாற்
கைம்மொழியென் றிகழ்கின்ரூர் கடையர்களிற் கடையோரே. (உசு)

மாலடிமை யெனுந்தகவு * மாறனன்னட் டிவன்போலுஞ்
சீலரிலா மாட்சிமையுந் தெரிந்துசிலர் மாறனென்ரூர்
சாலவிகற் பித்திகலுஞ் சமயாயு மீர்த்துத்தன்
பாலடக்கும் பண்புணர்ந்தோர் பராங்குசனென் றுரைத்தாரே. (உடு)

அப்படிச்சின் னுள்கழித்திட் டடிமைபுகு மந்தணன்ரூ
னிப்பரம குருவன்றி யினியொருதே வறியனெனு
மெய்ப்பதிகஞ் சூட்டியதால் வியன்மதுர கவியெனும்பேர்
தப்பறமா நிலமுழுதுஞ் சாற்றுதல்கேட் டுவப்பெய்தி. (உக)

தன்னுருவங் காப்பதெண்ணுந் ததியினிற்ரு மோதரன்ரூன்
மன்னுதிரு வைகுந்தம் வாழ்வுறுமோர் வயிணவனுய்
முன்னுதித்தெம் பெருமான்றன் மூதுலகில் வருகென்ரு
னென்னுமொழி வினவுதலு மெழிற்றிருவாய் மொழிமாறன். (உஉ)

வைகுந்த மன்றியொரு வயினறியேன் வான்பரமும்
பொய்குன்ரு மாயையுமாம் பூரணன்மா லெனத்தேர்ந்தேன்
மெய்குன்றப் பகர்ந்தனையே வேரேரீ யெனலுமவ
னுய்கும்ப லுன்னுயர்ச்சி யுணர்வுறச்செய் தேனென்ரூன். (உஉ)

என்றலுமாங் கொருசோதி யிலங்கியதஃ தோடதுவா
யொன்றலுற்ரு னிவற்கந்த வுணர்ச்சியுற்ற தருமையல
கொன்றருந்தும் வல்லவுணக் குலக்கனகன் மகற்குமன்ரே
துன்றலுற்ற தருட்பெருமை சொல்லிலடங் குவதன்றே. (உச)

* மாறனன்னுடி - பாண்டிநாடு.

அப்பாலம் மதுரக்வி யாழ்வானம் மாழ்வானென்
றிப்பாரின் மிகப்பேசி யெம்மதமுந் தம்மதமா
மொப்பாரி நிறுவினன்முன் னேனைநாந்து சமயிகளுங்
கைப்பாமென் வயிணவமோர் கதிரவன்போற் பிறங்கியதே. (கூடு)

களம்பகநஞ்சினன் முதலாங் கடவுளரைப் பழித்தோது
மிளம்பருவ வயிணவருக்கியற் றமிழ்ச்சீர்க் குருகூரான்
விளம்புமொழி யினியாது விண்டுவையோர் கண்டமெனச்
சளம்படுவா ரித்தகைய சரதமளப் பிலவாமே. (கூசு)

இந்தமட்டிற் சடகோப னெழிற்சரித முடித்திட்டுப்
பிந்தவருந் தேசிகனும் பெருமணவா ளனுமாகு
மந்தவயி ணவக்குரவ ரதுபெருமை தெரிந்தளவிற்
செந்தமிழாற் சொல்கின்றேன் றெளிஞருவப் புறுமாறே. (கூஎ)

சடகோபாழ்வார்சருக்க முற்றிற்று.

ஆடி திருவிருத்தம் - கூஉங.

இருபத்தைந்தாவது
இராட்டைக்குரவர் சருக்கம்

அண்டகோடிகளெல்லா மலர்ந்தசெங்குமுதவாயா
லுண்டளித்தருளுமாய னுந்தியாங்கமலப்போதிற்
பண்டளவிறந்தவாய படைப்பினுமழியாவேதங்
கொண்டயனெனுநாற்சென்னிக் குரவன்வந்துதித்தான்மாதோ. (க)

அவனுவன்மறைகணன்கா லறுவகைநெறியுண்டாகிச்
சிவனுமைபரியனாச் சென்னியோன்செவ்வேளென்றிட்
டிவகைகூர்சமயமைந்து மொன்றுபட்டொழுகவோது
மிவனேநல்கரியென்றேத்து மேகமுந்தனித்ததம்மா. (உ)

பிரணவங்கருணைசுத்தம் பெற்றதாற்செய்யும்பெற்றி
யரணமாக்கொள்ளுமேன்மை யாறுமுள்ளனவானலுஞ்
சரணடைந்தவரைத்தெய்வந் தனுட்கொளுமெனுமவ்வைந்துங்
கரணவாதனேதீர்த்தாண்டு காக்குமென்றிடுமற்றொன்றே. (ஊ)

ஐந்துடனெறியொன்றேனு மணுகுறுதவற்றினூடு
நொந்துறுபலருமற்று நுவல்பலசமயத்தோரு
மிந்துதவிதயத்தண்ண லியற்றுநற்றிதியேவேட்டுப்
பைந்துணராதியிட்டுப் பல்விதத்திறைஞ்சுவாரே. (எ)

பொய்வழிச்சூனியச்சொற் புல்லராதியசில்லோருங்
தெய்வமேயானென்றோதச் சிறிதுநாணுருமல்லா
ரெவ்வகைச்சமயத்தோர்க ளென்னினுமிலங்குமாழிக்
கைவலான்கருணைவேட்டுக் கசிதருகருத்தினேரே. (ஙி)

மூவலில்பாத்தின்செய்கை மூன்றினுள்ளினியதான
காவலேவடிவமான கமலநாண்மலர்க்கண்மூர்த்தி
யாவலைக்குறிக்கொண்டெய்ந்தோ ராடகன்மகன்முன்னுகப்
பாவலர்பனுவல்கூறப் படுமவர்பலபல்லோரே. (சு)

நாரணன்பரமென்றேர்ந்து நாடொறும்வணங்கிப்போற்றி
யாரணம்பகர்ந்தமுத்தி யடைந்தவர்பலரானாலும்
பாரணங்கறியப்பொல்லாப் பறிதலையினரோடுள்ளார்
போரணங்கொழியவென்ற புகழ்க்குருவொருவன்றானே. (எ)

அக்குருப்பெருமைகோடி யறைபவரறைவானன்னான்
றிக்குமுற்றுணர்வியாசன் செய்தசூத்திரங்களெல்லா
மைக்குழம்பனையமேனி மாயன்மாட்சிமையேயென்னப்
பக்குவமுள்ளார்தேறப் பரிந்துதாபித்தானம்மா. (அ)

வடமொழிப்புலமைவாய்ந்தும் வயிறுநொந்தீன்றவன்னை
குடமுலைப்பாலுமுண்ணக் குருபரன்முதலோர்கூறுந்
திடமுறுதென்சொற்பாடற் சிறிதுமெள்ளாதசிந்தை
யுடனவிர்ந்தவனேமுற்று முடையவனெனும்பேருற்றான். (கூ)

ஆதலாலவன்றன்சீட ராகியக்கரமோரெட்டான்
மாதவன்றன்னைநாடும் வயிணவப்பெருங்குழாத்தோர்
வேதநூல்கற்கின்றாரும் வியன்றமிழ்த்துதிகற்பாரும்
பேதமொன்றின்றியொன்றுக் கூடுபுபிறங்கினரே. (கo)

வடகலைபயில்கின்றாரும் வயங்குதென்கலைகற்பாரு
மிடம்வலமாகநம்மாட் டிருமினென்றெருக்காற்சொன்ன
னடன்மிகும்வயிரச்சிந்தை யவர்களாலங்காட்டொட்டுப்
புடவியிற்றூயத்தாரே போன்றிருபகுப்பானரே. (கக)

ஒவ்வொருவருமற்றொன்றி னிரிமைசற்றுறவேவேண்டு
மிவ்வொருகலையேகற்பே மெனச்சொலற்கிடமேயில்லை
வெளவொருகலைமேலென்னும் வழக்கிருவருங்கைக்கொண்டார்
தெவ்வொருங்கடிமான்மூர்த்தத் திரள்களைப்பிரித்திலாரே. (கஉ)

பெண்கொளல்கொடுத்தல்செய்தும் பேச்சிகல்வினைத்தார்சின்னூ
ரூண்கையுங்கலப்பிலாரா யுயர்பகையுற்றூர்பின்னு
ளெண்கும்வன்குரங்குந்தன்றெண் டியற்றவுந்திருத்துமம்மான்
கண்களேயனையாரன்றே யெனச்சொல்வார்கறையற்றேரே. (கஙு)

வடகலைக்குரவனுகி வந்ததேசிகனுமற்றூர்
திடகலைக்குரவனென்னத் திகழ்மணவாளன்றானும்
புடவியில்லறமுகீத்துப் போந்தறவறமுங்காட்டி
யிடரின்மெய்யருட்பேரெய்தி யெம்பிரானடிசேர்ந்தாரே. (கச)

ஒருவர்தம்மரபினோர்மற் றொருவரையிகழ்ந்துரல்லோ
சருவருத்திடத்தாழ்கின்று ரவருளார்சிறியரேனுங்
கருமுகிலனையகோலங் கனவினுங்காணமாட்டா
திருவ்படுமெனத்தோராகு மிவரினுமிழிந்தோரன்றே. (கஇ)

அவர்கடம்பகையாற்செய்த வகீதிகளனந்தமாகும்
விவரமாச்சொலின்முற்றுவே மீனெகெமடமாகி
யுவரியிற்புகுந்தும்விண்ணோர்க் குதவிசெய்தவனன்புற்றே
செவர்களானலுமன்னோர்க் கெளியராய்வணங்கனன்றே. (கசு)

தண்டமிழ்க்குருகூரண்ணல் சாதிநான்கினுங்கீழாகக்
கண்டசண்டாளரேனுங் கருமணிவண்ணன்றொண்டர்
தொண்டர்தந்தொண்டரேலியாந் தொழத்தகுகடவுளென்ன
விண்டசொற்கருதத்தக்கார் மெய்யடியவராவாரே. (கள)

இருகலைக்குரவர்தாமு மேற்றமுற்றவரேயென்னத்
திருவருளறியமெய்யாச் சிந்தனைசெயவல்லாரைக்
கருமுகிலனையமேனிக் காகுத்தனறிவானன்னோர்க்
கொருகனவினிலானலு முறுதிசொற்றருள்வானம்மா. (கஅ)

இருகலைப்பாடலன்னே ரிருவருமிசைததுளளாரா
லொருகலைக்குரவரோயென் றுரைக்கையெங்ஙனமெய்யாமோ
மருமலிதுளவத்தின்டோண் மாயனேகுருவாத்தோன்றும்
பெருமைநன்குணரமாட்டாப் பேயரைத்திருத்தொண்ணுதே. (கசு)

தேசிகனென்னுமாசான் றெளிவொடுபொறுமைச்சீரும்
வீசியகடனீர்ப்பாரில் விளைத்தபல்வினைதக்கூட்டும்
பேசிடவல்லாராரோ பெருந்தகையயக்கிரீவன்
மாசின்மெய்யருட்பேறெய்தி வடகலைபுரந்தான்மன்னே. (உ0)

மாமுனியென்னுந்தன்மை வாய்ந்தவிர்மணவாளன்றன்
காமுறுசிந்தைமுற்றுங் கரியவன்கழற்கேயாக்கிப்
பாமுதிர்சுவையவாகப் பலபலவிதத்திற்பாடித்
தீமுகக்கருமம்வேண்டாத் தென்கலைபுரந்தானன்றே. (உக)

தென்கலைக்குரவனென்றே செகத்தினிற்பலருஞ்சொல்சீர்
நன்கமைதரப்பெற்றேனு நான்மறைபிறந்ததாய
வின்கலைப்பனுவற்கூட்டு மியம்பினனென்றேசொல்வார்
வன்கணர்க்கென்சொன்னலு மகிழ்சமரசம்வாராதே. (உஉ)

இருகலைக்குரவர்தாமு மியற்றமிழ்ப்பனவரில்லி
னருமகவாய்வந்தோரே யவருபகயனத்தோதும்
பெருமறைதானும்பின்னர்ப் பெறுமட்டாக்கரமும்பேசிற்
றிருமலிவடநூற்சொல்லே யெனுமிசந்தெரிந்துய்வீரே. (உங)

நாரணற்கடிமையாலே னளிர்வடகலேசெய்திட்டான்
சீரவிரிக்கன்புள்ளான் றென்கலேசெய்தானென்கை
பாரவர்பலருந்தேர்வார் பகரிவற்றெதுமேல்கீழோ
வாரம்வைத்தளிக்கும்வெள்ளே மலர்மகளறிவாளன்றே. (உச)

அணிகுறிப்பேதமாதி யாயசம்பிரதாயங்க
ளெணியவைகலேயின்பேத மென்பவரிளமையோரே
கணிசமாமுகினேர்வண்ணக் கண்ணனேபரமென்றேதும்
துணிவினர்செய்கையாவுந் தூயவேயாகுமாதோ. (உடு)

இத்தனேவிதத்திலியானீண் டிருகலேக்குரவர்மாட்சி
வித்தகரினங்கொண்டாட விளம்பிடல்விபுதர்நாணு
மத்தகையவனாவீனே யயலெனமதித்தெள்ளாமன்
மெய்த்தவத்தரிதன்றெண்டர் விகற்பமற்றிறைஞ்சுமாறே. (உசு)

அவர்பிறந்ததுவுங்கல்வி யறிவடைந்ததுவுமப்பாற்
சிவனயன்முதலோராயுந் திகழ்தருசெங்கண்மாய
னுவமையிலருள்பெற்றென்னு மொருங்கறச்செகுத்தவாறு
மிவரிவர்பெரியராமென் றிகல்பவரிசைக்கின்றாரே. (உஎ)

ஒருகுருமரபினேர்மற் றொருவனுமுலப்பில்சீர்ச்சற்
குருவெனவிடினுந்தம்போல் பவனெனக்கொளினுமன்றே
பெருமைசாலடியார்பல்லோர் பேணிடறெரிந்தும்வீணே
யருவருத்திகழுந்தீமை யளப்பரும்வியப்பாமன்தோ. (உஅ)

இருகலேப்பகுப்புமொப்பி யிவையுண்டாவதன்முனுள்ள
வொருகலேத்தகையுங்கைக்கொண் டொழுகுதொண்டனேக்கண்டாலு
மருவருத்தொருதன்கூட்டத் தவனையேமதிக்குமந்தப்
பருவமுற்றவரோயிந்தப் பார்மிசைப்பலருள்ளாரே. (உகூ)

தன்னுடைக்கடவுட்குண்டு தனிப்பரத்துவமென்கின்றே
னென்னுடையவனனலு மினமெனத்தழுவும்பெற்றி
மன்னுமெய்ஞ்ஞானயோகி மனிதனேயெனினுமன்னே
னன்னுதற்றிருமணாள னல்குநான்முகனன்னானே. (கூ0)

ஆதியிற்கவுமாரத்தி லழுந்துபுகிடந்துபின்னர்
வேதியன்விதித்தவாறு விதமெறிப்பொதுவனுகி
யேதில்புன்னெறியோரேனு மிரங்குநெஞ்சினரோலன்னே
சோதிடுந்தேவுநந்தே வுருவெனவுணர்ந்திட்டேனே. (கூக)

குருபதத்தருமைதேறிக் கொண்டன்மேனியன்றாள்போலு
மிருகலேக்குரவர்தாமு மியற்றமிழ்ப்புலமைவாய்ந்த
பெருமைநன்கிலங்கச் சொன்னேன்பீடியலெளவையார்த
மருமையாஞ்சரிதந்தன்னு ளறிந்தனசிலசொல்வேனே. (கூஉ)

இரட்டைக்குரவர்சருக்க மூற்றிற்று.

இருபத்தாறுவது

ஔவையார் சருக்கம்.

மூற்படப் பிறந்த வௌவை முதுகதை யினைச் சேரற்குப்
பிற்படப் பகரு மென்மேற் பிழைவகுத் திகழ வேண்டா
மற்படு களத்தான் வெற்பிற் கவனெடா ரூரன் மூற்போஞ்
சொற்படர் வதனு லன்னூர் தோல்வி நன்கிலங்கு மாறே (க)

பிரமனங் கிசத்தோ னை பிராமணப் பகவன் முனுங்
கரவில்சீ ராதி யென்னுங் கலிமினங் கிசத்தி னுரு
மிரவொடு பகலு மோடி யினிதுசேர்ந் திடமொவ் வொன்றிற்
றரவரு மகவோ ரேழிற் றலிமக வௌவை தானே. (உ)

ஆண்மகார் மூவர் பெண்மை யடைந்தவர் நால்வ ரந்த
மாண்மக வேழும் பாரில் வரலும்வெண் டூளைப்பாட் டொவ்வொன்
றேண்மலி யீசன் றன்மை யிலங்கிடப் பகர்ந்த வேயாம்
பாண்மக னெனப்போ மௌவை பண்படைந் தவர்வே றின்றே. (ஊ)

வள்ளுவன் கபிலன் சேர மானெனு மூவர் தாமு
மொள்ளுடைப் புலமைத் தன்மை யுலகினில் விளங்கச் செய்தார்
வின்னுமற் றையரா மூன்று மெல்லிய லாரு மப்பண்
பெள்ளுரு வனைத்துங் காட்டா திருந்துபோ யினரென்பாரே. (எ)

பாணரு ளொருவன் கையிற் பழம்பொரு ளெனச்சே வௌவை
யாணவா வுருவ மெய்தி யவிர்ந்தவா றுன்றுங் கேளேன்
வேணபே றனைத்து நல்கும் விநாயக மூர்த்தி பொற்றுட்
பேணலுற் றுய்ந்தா னென்கை பொருதுகேட் டுள்ளே னம்மா. (ஏ)

அங்கையி னெல்லி யேபோ லருட்பிர சாதம் பெற்று
நங்கையர் குலதே வாகு நலந்திக ழௌவை தன்னைச்
செங்கையாற் றொட்டுப் புல்வான் செகத்திருந் திருப்பானுகிற்
கங்கையு மதியுஞ் சூடுங் கவின்சடைச் சிவன்போல் வானே (ஐ)

ஔவையை மணஞ்செய் தார்வ மடைந்துகல் லின்ப மார்ந்தன்
றிவ்வையந் தனிலுற் றோன்முன் னிறந்துபேர் மறைந்தா னென்னிற்
செவ்வையா முணர்வுற் றோர்கள் சிறிதுமொப் பார்கள் செம்பொற்
கொவ்வைவா யுமை மணாளன் கொடுத்தபே றதும்பொய் யாமே. (ஒ)

காயுஞ்வல் லிரும்பு நாணக் கவின்றரு சிவன்பா லோர்பெண்
பேயுருப் பெற்றுங் கிந்தப் பெருந்தகை யௌவை தானு
மேயுமுன் னவனைப் போற்றி யிளமையிற் றானே மூப்புத்
தோயுருப் பெற்று ளென்னச் சொல்வது துணிவா மன்றே. (ஓ)

ஆதலி னன்றே வென்று மவடனைக் கிழவி யென்றிப்
பூதலத் துள்ளோ ரெல்லாம் புகன்றிடற் கிசைவும் ரூர்கள்
காதலோர் சிறிது மின்றிக் கவித்தமிழ் கொடெசித் தாடி
யேதமெண் ணிலர்க்குத் தீர்த்திட் டிரந்தயின் றுலவி னளே. (சூ)

ஒவ்வொரு தினத்து மிந்த வுலகின ருய்ய வேண்டி
யௌவைசெய் திட்ட வாட லனேத்துமோர்ந் தறைவா னரோ
பௌவநீர்த் திரைகள் போலும் பலபல பலவே யாமாற்
செவ்விதா வினவு மட்டிற் சிலவிதஞ் செப்பு வேனே. (கo)

பாண்டியன் சேரன் சோழன் பழுதிலா தொண்டை மன்ன
ணுண்டிடும் பாகநான்கா யமைதரு தமிழ்த்தே யத்தி
னீண்டிய தவமே போல்வா ளியம்பிடு மிவற்றுவ் வொன்றைத்
தாண்டியே போய்வந் தெண்ணில் சரித்திர நடவி னளே. (கக)

சதுமுகப் பிரமன் ரூலுங் கவளவா ணியுநன் கோர்ந்து
கதுமென வியந்து பேசக் கனிதமிழ்ச் சுருக்கச் சொல்லாற்
பொதுவெனச் சிறப்பென் றுள்ள புண்ணிய முதலா நான்கு
மதுலமூ தறிஞர் கண்ணென் றகிலமீ தமைத்தா ளம்மா (கஉ)

பாரியென் றிருபேர் தாங்கிப் பாண்டிநாட் டிறைக்கீழ் வாழுஞ்
சீரியல் சிறிய வேந்தன் திருக்கிள சௌவை யார்தன்
னூரினில் வருந்தோ றன்பா லுபசரித் தொண்பொன் னுதி
வாரிமிக் குதவி வன்னச் சிவிகைமேல் வயங்க வைப்பான். (கங)

முன்றிலி னின்று கண்டு முழுமதி தன்னே யாண்டுஞ்
சென்றிடே லென்று வேண்டுஞ் சிறுமதிச் சிறுர்போ லென்றுங்
தன்றிரு நகரில் வைகித் தமிழ்மழை பொழியென் றேத்திக்
கன்றின்மிக் குரிமை யெய்திக் கழறுழுச் சிறிதுஞ் சோம்பான். (கச)

அவனகர் விடுத்து மற்றே ரணிநகர்க் கேகு நாளி
லிவளிடங் கொடுத்த வெல்லா மேவலாற் பறித்துக் கொள்வா
னவரவ மாயவ் வாறு நடந்தமைக் களவின் றேனு
முவகையோ டாங்குப் போத லொழித்திலா ரூணர்வின் மிக்காள். ()

அண்டமுற் றம்பொ னுக வவளொரு கவிசொன் னலும்
விண்டபோ தாமாம் சற்றும் வெதும்புரு மனத்தோ டேகித்
தொண்டவன் செயலுந் தன்னூர்த் துணையென விரும்ப வாவுங்
கண்டபோ தளிகூர் பண்புங் கருதியே வருவான் மாதோ. (கசு)

பழையனூர் தன்னிற் புன்செய்ப் பயிரிடுங் குடிவே ளாளன்
* கழைதரு சாறு போற்சொற் கழறிடுங் காரி யென்பா
னுழையிவ ளிரந்த நாளி லொருகளைக் கோலை நல்கித்
தழைபுலா கியநீப் பித்துத் தாணுகர் கூழ்வார்த் தானுல். (கள)

---

* கழை = கரும்பு.

இந்திரற் குறித்தோர் பாட லியம்பிடி லமுத மீண்டித்
தந்தினி துபச ரிக்கத் தகுபெரு வாழ்வுற் றுளுஞ்
சிந்திய வேர்வை யாளாச் சிறியவர் பணிசெய் தப்பா
னெந்திடுங் கூழன் றுண்கை நுண்ணிய ருணர்தற் பாற்றே. (கஅ)

வல்லியைப் புரையுஞ் சாயன் மடந்தைய ரினத்து ளான்ற
நல்லிய லெளவை யிந்த ஈனிலத் தினர்க்கும் வானிற்
புல்லினர் தமக்கு மெய்தாப் புதுமைதோய்ந் துள்ள தாய
நெல்லியங் கனியொன் றுண்ட தாச்சிலர் நிகழ்த்துவாரே. (ககூ)

அக்கனி யெய்து மாறு மயின்றதா லடைந்த தாய
மிக்கசீர்ப் பயனும் பற்பல் விதம்பட வுலகோர் சொல்வார்
முக்கண்வெற் பனைய வேழ முகப்பிரா னருட்பே றென்றே
நிக்கறி தருபே ராண்மைச் சீரியர் சிலர்சொல் வாரே. (உ0)

அன்னவன் றனைநேர் கண்ணுற் றளவில்பே ரார்வ மெய்தற்
கென்னமா தவஞ்செய் தாளோ வெனப்பல ரேங்கி வாடி
யின்னம்வெங் துயர வாரி யிடைக்கிடந் துழைக்கின் றூர்கண்
முன்னவ னருள்சற் றில்லார் முயலினும் பயனெய் தாரே. (உக)

சேரர்கோ னவையி லெளவை செலுந்தொறுஞ் சிறிது நெஞ்சில்
வாரமில் லவன்போ லோர்சொல் வாவென்று மழைத்தி டாமற்
றூரணி வியக்குஞ் சிங்கா தனத்தைவிட் டிறங்கித் தன்னேர்
மாரத னைய மெய்த மகளிர்வாழ் வயிற்செல் வானே. (உஉ)

இவளோகா முபச ரித்தற் கேற்றபாத் திரமன் றென்ன
வவனுள ஞாணிப் போமா றவையினி லறிவா ரில்லை
தவசிகா மணியா மம்மை தனையவ மதித்தா னென்னைக்
கவலுநெஞ் சினராத் தம்மூட் கசுகிசென் றுரைசெய் வாரே. (உங)

முன்னையாய்ப் புலமைச் சீரின் முதல்வியா யுலகோர்க் கெல்லா
மன்னையாய்த் திகழ்வா டன்னை யடிபணிந் தன்பாற் போற்றி
யென்னையான் செயற்பாற் றென்ன விதமொழி பகர லாகுந்
தன்னைநேர் பரம னன்னேன் றனையவா றசைத்தி லானே. (உச)

மின்பிறங் கியவே லேந்தி விற்கொடி புரக்கும் வேந்த
னன்பிலா னன்றே பாண ஞதிய ரளவி லார்க்கு
வன்பிணித் திரளிற் பொல்லா வறுமைநோய் தவிர்த்தோ னேனே
முன்பிறந் தாட்கிவ் வாறு முறைப்பிழை செய்திட் டானே. (உடு)

மன்மன மதிக்கு மாற்றுன் மனையினி லுளபல் லோரு
நன்மனத் துபசா ரங்க ணடவல்கண் டிவகை பூத்தா
னென்மனக் குறிப்பி தென்றங் கியாரொடு மிசைத்தி லானுற்
கன்மனக் கொடியோ னென்னைக் கருதலுஞ் சிலர் செய்தாரே. (உசூ)

கரிமலி தானைச் சேரன் கருத்திணுண் மதிப்ப தாய
வரிசையும் விழைவா ளாங்கு வந்துசின் னுரூற் றன்னேற்
குரியகே ளத்தை நீங்கி யொண்டமிழ்ப் பாண்டி நாட்டின்
பிரியமுற் றேகுங் காளிற் பெருமழை நனைப்புற் றனே. (உ எ)

நனைதலு மவளை யாங்கோர் நல்லிடைச் சிறுமி யப்ப
னனையிலா ளண்ணன் பன்னி யாணையாற் றுயர்மிக்கார் வாண்
மனையில்வா லிபர்கன் காணின் மதிமருள் வனப்பு வாய்ந்தா
டினை * யிறுங் கிட்ட புன்செய்ச் சிறுபரண் வசிப்பாள் கண்டாள்.(உஅ)

கண்டழைத் துபசரித்துன் காழக முலர்த்திக் கட்டிக்
கொண்டல தேகொ ணுதிக் குடிலிடை மறைந்தென் றனை
விண்டளித் திடுவே னென்றுள் வெயிலுமக் கணந்தோன் றிற்றுத்
தண்டமிழ்க் கிழவி யப்பெண் டருங்கலை யினைக்கை தாங்கி. (உக)

பாரிதன் பறியு மன்று பழையனூர்க் காரி தந்த
கூரிய களைக்கோ லொன்றுங் குடகுகா டளிக்குஞ் சேர
னேரிலென் றனைவா வென்று கிழத்திடா வரிசை தானுங்
காரியல் புறுமித் தானை கடிக்குமென் றிருபாச் சொன்னள். (கூ)

சொன்னபின் னவ்வா றுற்றித் தூநகைக் குமரி தானை
யன்னவட் குதவி யம்மை யளவில்பே ருவகை யெய்தி
யின்னவட் கினிய வாழ்வீண் டியற்றியே போதல் வேண்டு
மென்னவுட் கருதி யாங்கும் றினிதுசெய் தமைசொல் வேனே. (கூக)

வே று.

எழுத்தாணி யெடுத்தொருமுச் சிட்டெழுதி யக்கானத் தியல்
வோர் கூடி, வழுத்தார்வத் தேவதைகைக் கொடுத்திடலு மதுகொடு
போய் வழுதி பாலு, மழுத்தாங்கு வானணிதார் புனைவளவன் றன்பாலு
மயினேர் மாதர், குழுத்தான்மே லெனத்திகழ்நாட் டிறைபாலு மதிவி
ளைவிற் கொடுத்ததம்மா. (கூஉ)

அவர்மூவர் களுமதுபெற் றம்மைகைச்சீட் டெனத்தெரிந்தக் கண
மே தம்மூர், விவகார நீத்தொருநாற் படைகளுஞ்சூழ் தரத்தேரின் மிசை
யங் குற்றுப், பவவேலைப் புனையாய பதம்பணிந்தா ரவளவனைப் பார்த்
திம் மங்கைக், கிவணேயென் விழிகாண மணஞ்செய்விக்க வேண்டுமெ
ன வியம்பினளே. (கூஎ)

மூவர்களுந் தனித்தனியே முழுப்பனையா தியவான்மூப் பந்த ரிட்
டுத், தேவர்களும் வியந்தோதச் சிங்காரம் பெரிதமைத்துச் சிறுமி கொ
ண்க, ளுவதற்காந் தவமுடையான் றனைக்கொணர்ந்தம் மரபினருக்கார்
வம் பொங்கத், தாவறுநூல் விதியுணர்ந்த வேதியர்முன் மங்கலநூ றரிப்
பித் தாரே. (கூஅ)

* இறுங்கு - ஒருவகைச்சோளம்.

அப்பந்தர் நடுவேயக் குலமுறையிற் பசுவாடா தியவு மன்றி யொப்பந்தம்பொன்வெள்ளிவெண்கலத்தாற்செய்தனவுமுதவித்தீர்ந்தார் முப்பந்த னெனும்பெயரக் காட்டினுக்கிங் நாளுமிக மொழிவா ராங்குச் செப்பந்த முலையுடைப்பெண்டேவதையொன்றும்பெரிதுதிகழுமாதோ.

அனையமண முடிந்ததற்பி னரசரொரு மூவர்களு மௌவை பொற் ருள், புனைமகுடத் தினராகித் தொழுதெழுந்து விடைகேட்கும் பொழு தங்குள்ள, பனையிலெரு சிறுதுண்டைப் பார்த்தொருசெந் தமிழ்ப்பா டல் பகர்ந்தாளஃதோர், தினையளவு பொழுதின்முழுப் பனையாய்முப் பழமுதிர்த்துத் திகழ்ந்த தம்மா. (சுசு)

அப்பாட லந்தடியென் றுரைப்பர்சிலர் நான்கடியென் றறைவர் சில்லோ, ரெப்பான்மைத் தாயினுநன் றிவர்க்கொவொரு பழங்கொடுத் திட் டேகச் சொன்னு, ளிப்பாரும் வானகமும் பாதலமும் பெற்றிடலு மெளிதே யாகு, மெய்ப்பாரத் திருவருளால் விளைதருமக் கனிப்பெரு மை விளம்பொ ணுதே. (சுஎ)

அளக்காத பெரும்புகழ்ச்சீ ரௌவையார் திருவாக்கி னடலு மான்ற வளக்கானிற் கவணேந்திப் பயிர்காத்த சிறுமிதவ வலியு மாசி லுளக்கார ராம்வழுதி வளவனெனு மிருவேந்த ருதாரப் பண்பும் விளக்காது வைத்திருந்த சேரர்பிரா னுள்ளன்பு மிளிர்ந்த வன்றே. ()

ழுந்தவருள் பெற்றசில பெரும்புலவர் தங்கருத்து முற்றுவிப்பான் றந்தமது கடவுளைத் துதித்ததுவு மௌவையொரு தாலத் துண்டு கந்தமலி தருகனியீந் திடற்கதையே கேட்டதுவுங் கருத்தா னுடி யிந்தநிலே யந்தநிலே யிரண்டுமெதித் தறிதகைமை யெளிதன் றம்மா. ()

அணுத்திரண காட்டமுதற் றெய்வவடி வாவிளங்கி யதனுலன்றே, கணுப்பொலிவார் பனந்துண்டைப் பழந்தருகென் றௌவையங்நாள் கழ றிப்பெற்று, டிணுக்கமுறும் வன்னெஞ்சச் சிறுவருமிப் பெருந்தகைமை தெரிதற்பாற்றே, நுணுக்கமுறு பேரறிஞ ருணர்வரவர் பலபிறப்பி னேற் றுள்ளோரே. (சo)

தொண்டைநாட் டினிலொருபெண் வதுவைமுடிந் திருநிமித்தந் துணிவுற் றௌவை, பண்டைநாள் பெண்ணேநன்னீர் பாறயிர்நெய் யா மாறும் பகர்ந்தா னென்பார், மண்டையோட் டரனிரந்த வாறுமரி காடு ணைந்த வாறுங் கூறுங், கண்டைவா யுறுமவளியாண் டெதுசொலினு நடக்கு மென்கை கடமைதானே. (சக)

பாண்டிநாட் டினிலிடித்து மலைநாட்டைக் குறித்தேகும் பாதை யொன்றி, லீண்டியவா ரியன்காவி னருகிலிரண் டெயினர்குடி லிட்டு வாழ்ந்தா, ரேண்டிகழ்வா ருடன்பிறந்தோர் மூத்தவன்பெண் டேயுடை யோ னிளையோ னேழெட், டேண்டிறற்சேய் களுமுடையான் பொதுவி னிற்பல் கனிகாய்நல் கொருபலாவும். (சஉ)

சிறுபுன்செ யொன்றுமுளா ரம்மரத்தி லுள்ளவற்றைத் தினம்பங் கிட்டுப், பெறுபண்பா ரொருநாண்முன் னவனிடம்பின் னேன்றுணிந்து பிள்ளைகட்கா, வுறுமுன்பங் கினிற்சிறிது வழங்கிடிற் றகாதோபின் னுன க்குஞ் சால, மறுகுந்துன் புடைத்தளர்ச்சி வரிலுதவ லவையன்றே மதி யென் றனே. (சஉ)

என்றமொழி வினவலுந்தான் மகப்பேறெய் தாமைகுறித் திகழ்ந் தா னென்னக், குன்றனைய சினங்கொண்டன் னவன்பாகத் தையுமறந்து கொடுவா ளேந்தி. நின்றமரத் தினைவெட்டி நிலமிசைவீழ்த் தினனுல கோர் நெடுநா ளாக, வின்றகைப்பண் பொருக்காலு மலடருறு ரெனுஞ் சரத மிலங்கிற் றன்றே. (சச)

எவ்வுயிருந் தன்னுயிர்க்கொப் பாகுமெனு ஞானமிலா ரெவரா னலு மிவ்வுலகின் மகப்பேறு மெய்திலரே லிரக்கமுறு ரென்கை திண்ணம் வெவ்வுரக நிகர்சினத்தவ் வேடுவன்றன் றம்பியினு மெலிந்தா னன்னேன் வெளவுகிழங் காதியிற்சற் றெவ்வொருக்கா லண்ணனுண வழங்கினனே.

தம்பிமனத் துயர்ச்சியுந்தன் மனத்திழிவு முணர்ந்ததனுற் றனே தன்னுள், வெம்பியழும் வேடன்முத லங்குள்ளா ரனேவோரும் வியன்ப லாப்போம், வம்பினேயே நினைத்துநினைத் தலமருநா ளையிலொருநாள் வானே ரேத்துங், தும்பிமுகப் பெருமான்ற னருள்வடிவா மௌவையங் குத் தோன்றி னனே. (சசு)

வந்தகிழ வியைவணங்கி நீயாரிங் கேன்வந்தாய் வாஞ்சை யாதென், றந்தவன சரர்வினவ வருட்புலமைத் திறத்தினளியா னயில்வேற் சேர ன், செந்தகைநா டதுகுறித்திவ் வழிவந்தே னென்விருப்பஞ் சிறிதா ணை ன்று, ளிந்தமரந் தழைவுறப்பா டிடிலியாம்வைத் துளதினேவித் தீவோ மென்றார். (சஎ)

கூரியவா ளாற்குறைத்த கூன்பலா வெனத்துவக்கிக் குலவு முன் னேச், சீரினிற்க வெனமுடித்தோர் கவிசொன்ன ளக்கணமே திகழ்ந்த தாங்கே, தூரினுங்கொம் பினும்பலபல் கனிகாய்பிஞ் சுறக்கண்டார் சொன்ன வாறே, பாரில்விதைத் திடத்தாம்வைத் திருந்ததினே விதை முழுதும் பரிந்தீந் தாரே. (சஅ)

அத்தினேமூ வுழக்காழாக் கையும்பாறை நிலையுரலி லானேக் கொம் பாற், குத்தியட்டுண் டாளவட்கே னந்தவிதி நான்முகத்தோன் குறித் திட் டானே, வித்திறமுள் ளார்க்கிதுதா னெழுதுவா னவனெனும்பாங் கில்லை யில்லை, சித்தி * முத்தி யடைந்தாலும் விதிவழியே மதிபோத றிண்ணந் தானே. (சகூ)

---

* முத்தி - பதமுத்தி, ஐக்க முத்தியன்று, அஃதடையின் விதியு மதியுமின்றுதலின்.

தினையளவுந் தழைத்தபலாக் கூழையெனும் விவரமுஞ்சிற் சிலசிற் றூரிற், றனையறியா ரிடம்போயுப் பினைப்புளியை விரும்பியுஞ்செந் தமிழ்ப்பாட் டோதும், வினைவலியுங் திகழ்தரவோர் கவிசோழன் செவிகேட்ப விளம்பி ஞளவ், வனைபெருமை யாரறிவா ரருட்பேறு விழைந்துழைப்போ ரறிய லாமே. (நிஂ)

ஒருமனமுன் றிலிற்போமுன் னதற்குரியான் சினந்திகழ்ந்திட்டோடிவந்தான், வெருவினள்போல் வெளிப்பட்டா ளவன்றெழின்மேற் போயதற்பின் விரும்பி யன்னென், மருவுமனை யாளிவளைக் கண்டுதொழுதுபசரித்து மாறில் லாத, வருமைமொழி பலகூறி யன்னமுத லாமுணவு மளித்திட் டாளால். (நிக)

வற்றன்மர மனையாற்கிம் மானவகுத் திட்டதனுன் மலரோற் கங்ஙாளற்றதலை போகவமைந் துள்ளதலை நான்கினையு மலறப் பேர்த்துச் செற்றமொழிப் பேனவனைக் காணுறிலென் றெருகவிதை செப்பி ஞளக் கொற்றமுடை யாளையுமோர் கிழவியென வுலகுரைக்கைகொடுமையம்மா.

ஒருசிறிய வீட்டின்முற்போ யமுதெனக்கேட் டாளுடனங் கொருத்தி கும்பிட், டருமைமொழி பலபேசி வஞ்சமின்றி யுள்ள * புற்கை யருத்தி யென்முன், வருமுன்னமா னிடவடிவென் றெண்ணுகிலேன் றெய்வமென்றே மதிக்கின் றேனென், பெருமிடிதீர்ந் தேற்பவர்க்கிட் டுணும் பயனல் கொருவிரதம் பேசென்றருளே. (நிஙூ)

அம்மொழிகேட் டதிவியப்போ டவகையுமுற் றெளவையென்பாளவளை நோக்கி, யிம்மொழிசொல் லிடுமுணர்ச்சி யுனக்களித்த விதிப்பயன்மிக் கேற்ற மேயாம், பொய்ம்மொழிவஞ் சனைமுதலாந் தீயகுண மத்தனையும் போக்கி யன்பாற், செம்மொழிப்பா வலர்பரவுஞ் சிந்துரமா முகத்தானைச் செவ்வாய் நாளில். (நிச)

ஆடவர்சம் பந்தமொரு சிறிதுமுறு வண்ணமின்ன வடையா ளங்கள் கூடநிவே தனங்களுமிவ் வாறமைத்துப் பூசைசெய்தாற் குறித்த செல்வ நாடறிய விம்மையிற்றூ னேகிடைக்கு மெனவிரித்து ரவின்று போனு ளேடலர்பூங் குழற்பாவை யங்ஙனஞ்செய் துன்னியபே றெய்தி ஞளே.

அன்றுதொட்டிங் நாளுமினி வருநாளுஞ் சிலநாட்டி லெளவை பூசை, யென்றுசின்னுட் டினிற்செவ்வாய்ப் பிள்ளையார் பூசையென வியங்கு மந்நோன், பொன்றுமெளி தன்றன்று சிலபுருட ரதற்கிடையூறுஞற்றிக் கண்போய்த், துன்றுமிடி யொடுநோயுந் துய்த்துநர கடைவதுவுந் தொன்மைதானே. (நிசூ)

* புற்கை - கூழ்.

எங்கெங்கே நடத்திடுமோ விருத்திடுமோ இடத்திடுமோ வீசனுர் தங், தங்களுச்சே ரருளெனுமோர் கவிவகுத்தன் முதற்கதைக ளெங்க ளில்லே, யங்கங்தோய் படைவேந்த ரொருநான்கு நாட்டியர்ச்சி யனைத் துந் தேறிப், பொங்கஞ்சால் பொழிற்பொதியைத் தமிழ்க்கவியான்மிகப் பாடிப் பொறித்திட்டாளே. (நுஎ)

உருவம்விழைந் துணர்வுவெறுத் துயிர்விடுத்தோர் பெண்பேயா யொருகாட்டுள்ள, விருண்மடத்திற் றங்குநரைக் கொன்றிடுந்தீங் கறும் படியீ ரிரண்டு பாடற், றருகதையா தியவுலகிற் பலருணர்வார் விரித்தா லுங் காலத் துண்டாங், கொருகணத்திற் கனிமூன்றன் றுதவுதலிற் பெரி தாகா துணர்வுள்ளோர்க்கே. (நுஅ)

வே று.

வேழ முள்ளது கோள மிக்கசோ றுளது
சோழ நாடுசெந் தமிழது பாண்டியன் றென்னு
டாழ நெஞ்சின ரதுதொண்டை மண்டல மெனும்பாட்
டூழ ருய்ந்தவூர் மதிட்புறத் தெழுதின ளிவளே. (நுசூ)

அன்ன வாறுபல் கோடிசித் தாடிய வெளவை
முன்ன வன்றனைப் பூசைசெய் திருக்கையின் முருகோ
னென்ன வாழுமா ரூரனுஞ் சேரனு மீசன்
றன்ன தாந்திருக் கயிலைவேட் டேகலோர்ந் தனளால். (சூ0)

விளைந்து பச்சிலே யாதியிட் டனலோந்தாம் வேதம்
வளைந்த கைப்பிரான் மெல்லெனச் செய்தியவ் வளைமேற்
றிளைந்த மேல்கொணீ முந்துறச் சேர்க்குது மெனலுங்
களைந்த நெஞ்சொடோ ரகவலுங் கழறினள் களித்தே. (சூக)

அக்க ணத்திலச் சிகரிமேற் றுதிக்கையா லமைத்தான்
முக்க ணுயகன் சந்ததிச் சென்றுபன் முனிவோர்
தொக்க பேரவை வியப்பமுன் னீட்டின ணேனத்தாண்
மைக்கண் மானிக ருமையவண் மனம்வரும் தியதே. (சூஉ)

அதனே னன்குணர்ந் தரனுமை யவளேநோர் நோக்கி
யெதனேச் செய்யினு மவளொடு வாய்க்கொடே லென்று
மதன வேட்குவில் லொடுகணே யளித்தவள் வாய்வின்
டிதனே நீசெயன் முறைமைகொ லெனவினி தினைத்தாள். (சூட)

பொங்கு பேரருட் சிவைமொழி வினவிமெய்ப் புலமை
தங்கு மௌவைதா னெழுந்துபன் முறைமிகத் தாழ்ந்து
கங்கு லும்பகற் பொழுதுமென் கண்முனிக் காட்சி
யெங்கும் காண்டலி னிப்பிழை விளைந்ததீண் டென்றுள். (சூச)

அதுவி னுவலு முமைசிறி தொல்கின ளகத்தா
லிதுசெய் தில்லளிக் கிழவியென் றியாவரு முணர்ந்தார்
மதுர வாணிதன் னங்கிச மாமவள் வசிப்ப
விதுவு லாஞ்சடைப் பிஞ்ஞகன் வேறிடம் வகுத்தான். (சுடு)

அந்த வேளையி லணிதிகழ் நாவலூ ராணுங்
குந்த வேற்கரத் தினர்புகழ் கேரளக் கோவுங்
கந்த மாமதக் களிற்றினிற் கந்துகந் தன்னில்
வந்தங் குற்றவட் கண்டுள நாணுபு மதித்தார். (சுசு)

அவர்க டன்னேநத் தாதுபோ யதில்வருஞ் சலிப்பும்
பவள யானைதான் முந்துறச் செய்ததாற் படரு
முவகை வாரியுஞ் சிவனிலு மவன்மகா ருயருங்
தவவி சேடமுந் தோற்றவோர் கவிதைசாற் றினளால். (சுஎ)

மதுர வாசகத் துமையவ ளுதவிய மகன்றன்
பதும நாண்மலர்ப் பதகினே பவர்க்குமொன் றரிதோ
கதுமென் றேகிடுங் குதிரைக்குங் கிழவிக்குங் காத
மிதுநன் கோர்திமன் னேயெனு மஃதிகத் துளதே. (சுஅ)

இந்த மட்டினி லெளவைதன் சரிதமுற் றியது
பிந்த வோர்மக ளவளருட் பேறுபெற் றதனு
லந்த வெளவையே யிவளென வுலகமுற் றறையச்
செந்த மிழ்க்கவி யாற்பல சித்தியற் றினளால். (சுக)

வாணி யக்குல மகளடல் வளவனுட் டினிலோ
ராணி முத்தெனப் பிறந்தவள் பாலியத் தெளவை
தாணி னைந்துமுத் தமிழ்ச்சுவை முதற்பயன் பெற்று
வாணி லாங்கிழத் தனம்வரும் வளைமறைந் திருந்தாள். (எo)

தக்க சீர்ப்புக ழேந்தியு மொட்டக்கூத் தனுமே
ரொக்க வந்திடி லொருபத மடக்கிமுன் னுரைத்தான்
பக்க லெய்திடி லிரண்டையு மடக்கிப்பின் பகர்ந்தாற்
கெக்க ணத்தினு மிரண்டுநீட் டியமக ளிவளே. (எக)

அவடன் மேனியின் பருவமே மூங்கடந் தளகந்
தவள மாயபின் கம்பனென் பவன்றலை யெடுத்தா
னிவனெ ராயிரம் பொன்பெறிற் பாடலொன் றிசைத்துக்
கவள வேழமூர் சோழனூர் கண்ணெனக் கவின்ருன். (எஉ)

அந்த நாளிலந் நாட்டிடை வைகுமோ ரரிவை
யெந்த ஞாயத்தி னுற்றனித் தனள்கொலோ வறியேன்
சொந்த மாயதோர் பெயர்நிலை நிறுவிடத் துணிவுற்
றிந்த வாஞ்சைமுற் றுறலெவா றெனவிசா ரித்தாள். (எக)

புவியி லியார்பெறுங் கீர்த்தியுஞ் செந்தமிழ்ப் புலவர்
கவிகொள் வார்புகழ்க் கொவ்வுரு தெனவலோர் கழறு
மவிர்சொற் கொண்டுளங் தேறியக் கம்பன்முன் னணுகி
யிவித மீசெய வேண்டு மென்றிரந்தன ளினிதே. ச)

குறித்த பொன்றரிற் பாடுவே னென்றனன் குடிலிற்
செறித்த சொத்தெலாங் திரட்டினள் பாதியே தேறிற்
றெறித்த பாடலு மவ்வள வினில்வனைங் தீந்தான்
வெறித்த நெஞ்சொடு கொட்டைநூற் றனள்பொருள் விழைந்தே.(எடு)

அங்கு ளாளது முயல்கையி லௌவையென் றகில
மெங்கு மோதிசைக் கிழவியூர் தொறுமிரந் தருந்திப்
பொங்கும் வெந்துயர்ச் சிலம்பியா மவண்மனை புகுந்து
பங்குன் பாணியின் கூழிலெற் குதவெனப் பகர்ந்தாள். (எசு)

ஏற்கு மன்னவட் பார்த்திவ னீகுவே னிந்நூ
னூற்கு மாத்திர மிதுவென வகைபட நுவன்றுள்
பாற்கு நேரைக் கவியினைக் கிழவிதான் பார்த்துக்
கோற்கு நீர்க்குமண் ணினுக்குமோ தினன்பொருள் கொடுத்தும். (எஎ)

உனக்கென் றோர்சொலு முரைத்தில னின்பெய ரோங்கக்
கனக்கும் கீர்த்திநாட் டிடவலே னியானென்றுள் கம்பன்
றனக்குஞ் சம்மத மாங்கொலோ வென்றனள் சலிக்கு
மனக்கொம் பேகிகர் சிலம்பியன் னவட்கிது வகுப்பாள். (எஅ)

அவனென் பாடலை யொப்புமு னின்மனை யகலே
னுவகை கூர்தியென் றுரைட னிராட்டினத் துறுக
ணிவள வேயென விடுத்தவ ளெழுந்துபோ யின்சொற்
பவள வாயுப சாரமொ ணிவுணைப் படைத்தாள். (எகூ)

உண்ட பாட்டியக் கணத்தனைப் பாட்டின்வெள் ளோலைத்
துண்ட நிற்பெணே கேளம்பொற் சிலம்பியூங் துணைத்தாள்
கொண்ட பொற்சிலம் பேசிலம் பென்றனை கூட்டி
யண்ட ராதியர் வியப்புற வனைந்துனைத் தளித்தாள். (அ0)

அதுபெற் றுரைட னருந்தமிழ்க் கம்பன்மாட் டணுகி
யிதுநின் பாட்டின்முற் றுணர்ந்துசொல் லென்றுகைக் கொடுத்தாண்
மதுர மிக்கதே யாவர்சொற் றுரென வான்வாழ்
விதுவின் கன்றெனக் கூனுமோர் விருத்தையென் றனளால். (அக)

அன்ன வட்குமென் றனக்குமோர் வழக்கிதுண் டாக்கிற்
றுன்ன தாவன்முற் றியதென்றுன் சிலம்பிசற் றுறுத்தென்
பொன்ன டைந்துநீ யெனைப்புகன் றிலையவள் புற்கைக்
கென்ன தாம்பெயர் மூவிசை யுரைத்தன ளென்றுள். (அஉ)

சொல்லின் சாரமு மறிகிலாட் கிப்பெருந் துணிவு
புல்லி டும்படி கொடுத்ததோர் தெய்வமே புவிமுற்
றெல்லி டுந்தனி யரசுசெய் பவர்சிலர்க் குதவாக்
கல்லி ரும்புநேர் மனக்கய மையும்வழங் கிடுமே. (அஉ)

சிலம்பி யென்பவ ளக்கவி பெற்றபின் செல்வர்
நலம்பி றங்கிடச் சமைத்தகோ புராமுத னவில்வ
நிலம்பி ளந்ததாற் குலுங்கலா னெருப்பொடோ துவவாற்
றலம்பி ரித்துரைத் திடற்குமில் லாதொழிந் தனவே. (அச)

அச்சி லம்பிதன் மனையிலுற் றெளவையா மவளை
மெச்சி யன்பொடு தெண்டனிட் டியன்றன விளம்பி
நச்சி னுடனே டுறும்படி பாரிமன் னனைப்போற்
சிச்சி யோர்வயிற் குடியிரே னென்றவள் சென்றுள். (அடு)

பூண மங்கலம் பூட்டினன் புகன்றசொற் பொருட்டா
லாண மின்றியோ ரரிவைதா னசன்மிட் டதனைக்
காணக் கண்கள்கூ சியதுமள் ளிடவுணக் கைவாய்
நாண முற்றதுந் துலங்கவோர் கவிநவின் றனளே. (அசு)

கான்செய் நாண்மலர்த் தார்புனை வளவனைக் காண்பான்
றேன்செய் பாடலாள் செலும்வழி யினிற்சில தீயோர்
யான்செய் தேனெனுஞ் சீட்டொடு மலமுமிட் டிருந்தா
சோன்செய் தாரொனிற் கம்பனு லெனப்பல ரிசைப்பார். (அள)

சீட்டி னைக்கையா லெடுத்தனள் படித்தனள் சிலர்போய்ப்
பாட்டி னீசெயி லெடுத்தியென் றனருடன் படலுந்
தாட்டி கச்சில தொடுத்திட விடுத்திலர் தடுத்தார்
நாட்டி னல்லவர்க் கிடர்வரி லிவணழு விடுமே. (அஅ)

கண்ண கன்றபார் மிசைப்பல புருடர்கண் டொல்க
வெண்ண றும்படி கற்றெழுத் தறப்படித் திடினும்
பெண்ண தாப்பிறந் தவர்மதி பீயினைத் தூக்குந்
திண்ண மென்றுரைச்சொற் செப்புபு சென்றன ளன்றே. (அகூ)

கற்றைத் தாழ்குழ லெளவையைக் கண்டொர்நாள் கம்ப
னுற்றைக் காலினு லிலைப்பந்த லடியென வுரைத்தான்
பற்றைப் போக்கின ருறுங்கதி பெறுந்திறம் படைத்து
மற்றைத் தீயரி லவமிருத் தடையவந் தவனுல். (கூ0)

அதுவி னுவலு மாரைய டாசொனு யடடா
விதுசொ னீயவ லட்சண மெருமையா னழுகி
மதுர மற்றமாங் காயிடி சுவர்மனை மூத்தாள்
கதுவும் வாகன மெனுமொரு கவிகடி தனைத்தாள். (கூக)

அந்தப் பாடல்கேட் டஞ்சின னினியொருக் காலு
மிந்தப் பாட்டியோ டிகலொணு தென்றெணிப் போனுன்
பிந்தப் பார்புரப் பவற்பெருங் காட்டினிற் பிரிய
முந்தப் பாவல னுமவ னுடனுறு மொருநாள். (கூஉ)

சொல்லி டாவணந் தொடர்ந்துபோ யிலையுதிர்ந் தவணேர்
நெல்லி நிற்பதே னெனவினு வகைக்கவி நிகழ்த்திப்
புல்லி டும்பொருள் கொடுப்பவர் பொய்வழக் கோங்க
வெல்லி யற்கையோர் கிளைக்கிணை யெனுமனை விடையாய். (கூஈ)

பெற்று நின்கவி யாயையோர் பெண்மக ணிமித்த
முற்று றச்செய்தே னெனமுனி வுறலொழிக் குதியான்
கற்று ளார்தமை வினவைக் கவியைநீ முடியச்
சொற்று ளாயித னுலெனத் துணிந்துசொல் லினளால். (கூச)

மன்னன் மந்திரி யாதியர் வியந்துள மகிழ்ந்தா
ரன்ன கம்பனு ஙாணமூற் றின்சொன்மிக் கறைந்தா
னின்ன பாட்டிசெய் திருவிளை யாடலெத் தனையோ
பன்ன ரும்பல வுணர்ந்தமட் டிகபரஞ் சொலுமே. (கூடு)

கம்ப னும்பிளள் கனிந்துரை கூறலிற் கடல்சூ
ழிம்ப ரார்பல ரிவளொரு தெய்வமே யென்றூர்
ஙம்ப வல்லஙன் னரர்துயர் கெடுப்பதே தொழிலாக்
கும்பன் மெய்த்தவப் பயனதாந் தமிழ்க்கவி கொழித்தாள். (கூசு)

ஒருதி னத்தடல் வளவனே ரும்பன்மேற் கொண்டு
தெருவி லெண்ணிலா டம்பரப் பொலிவொடு திகழ்ந்தா
னருகு சென்றுபார்த் தவர்பலர் தம்முளோ ரிவை
பொருவில் பாழ்மிடிக் கனற்பெருஞ் சூட்டிடைப் புலர்வாள். (கூள)

உலக்கை யேதுணை யெனக்கொடு முயன்றுயி ருய்வாள்
குலக்கொ ழுந்துறழ் மதலையொன் றிடுப்பினிற் கொண்டா
ளலக்க ணேர்வரு மச்சிசு வரசன்மேற் போர்த்த
விலக்கம் பொன்பெறு தானேவேட் டிரங்கிய தன்றே. (கூஅ)

அந்த வேளையி லெளவையங் கவளேநேர் கண்டின்
சொந்த மாமக வெனின்முலை யருத்துதிசூழ்
மைந்தர் தம்மையெண் ணுபுமன ஙாணிடேன் மகப்பே
றெந்த மாதடை யினுமிது சகசமென் றிசைத்தாள். (கூசூ)

அன்ன வாசகங் கேட்டவ ளம்மைபா லன்போ
டின்ன வாஞ்சைமிக் கீதழு கின்றதென் ழுழ்வு
மன்னன் மாட்சியும் வகுத்துரைக் கினுங்தெரி யாதா
லென்ன காரணத் தாலினித் தேற்றலா மென்றாள். (கஅ0)

எனலு மௌவைதன் றிருவுளத் தருள்சுரந் தியானே
யினது மேல்வரு மன்னனே நிற்றியென் றிசைத்துத்
தனது கைக்குறி காட்டின டொனியறத் தவிர்த்து
மனந டுங்கின னுவப்புறும் படியிது வகுப்பாள். (கoக)

அம்பொ னூற்றுப்பத் தாயிரம் பெறினுநூ லாடை
வம்பொன் றேபல கீற்றெனக் கிழியுமென் வாய்ப்பாட்
டெம்பொ னும்பொனென் றிகல்பவர் பற்பல ரிறந்துஞ்
செம்பொன் மேருவிற் பொறியெனத் திகழுறுங் கண்டாய். (கoஉ)

அகளங் காவெனும் பொருளுறு பாடலொன் றறைந்தா
ணிகள நீப்பவ ரெனமகிழ்ந் திட்டன னேர்ந்த
மகளங் கைச்சிறு மகற்களித் துவகையை வளர்த்தாள்
சகள சித்தியில் லார்க்கிது செயலருந் தகைத்தே. (கoங)

இந்த மட்டினிற் போயதென் றிறைமன மகிழ்ந்தா
னந்த மாதுதன் மிடிக்கன லவிந்துயப் பெற்றுள்
வந்த மானிடக் குழுமுழு மையும்பல வாறுத்
தந்தம் புந்தியி னிகழ்ந்தமை பேசினர் தாமே. (கoச)

சோர நாயகன் விருப்பினுற் சொந்தநா யகனே
யீரம் போற்பலுக் கிதந்தரு கல்லும்வெற் பினத்தி
னுர லர்த்தொகை யொவ்வொன்றின் முப்பது மளித்தி
வீர னீயெனி லென்றொரு மெல்லியல் விடுத்தாள். (கoஞ)

அவன்செ லத்தின மௌவையைக் கண்டன னம்மே
யிவண் சொனண்மனே யாண்டவை யெய்துமோ தென்று
னுவந்தென் சொற்படி கேட்டியென் றவனையாங் குடனேர்
நிவந்த கூடையின் மறைத்தெடுத் தவன்வரு நெறியே. (கoசு)

கொண்டு போயிருள் செறியிராப் பொழுதிலக் கொடியா
ளுண்டு சற்றிட மென்றிட நயமொழி யுரைத்திட்
டண்டு கூடையொ டடிமனைத் திண்ணையி லமர்ந்தாள்
வண்டு லாங்குழ லவளினி யவனெடு மகிழ்ந்து. (கoஎ)

தெய்வ மொன்றினுக் கேன்றநி வேதனஞ் செறித்து
மெய்வ ரன்செல வுடனவன் மரணமும் விரும்பும்
பொய்வ ழிப்புரு டன்றனே டுவப்பதும் புகன்று
கைவ ளிக்கொடு கும்மியு மடித்தனள் களித்தே. (கoஅ)

பாட்டுக் கூறிய பயன்வெளி ருதலிற் பாட்டி
சாட்டுக் கூடையை விளித்தொரு கரத்தினுற் றட்டிக்
கேட்டுக் கொள்ளென விருவிசை கிளத்தினள் கேட்டு
மாட்டுப் புத்திபோய் மனிதர்த முணர்ச்சிவாய்ந் தனனரீ. (கoகூ)

கொன்றி டாதுதற் றுறந்தமை நினைத்தவட் கொல்லா
தன்றி ழுந்துரித் தினஞெடு போம்படி யகற்றித்
தன்றி யக்கறத் தேற்றிய தாய்பதம் பணிந்து
நன்றி கத்தொடு பரத்தினு மடைந்தன னனியே. (ககo)

கிழவி யன்னவற் கூடையிற் கொடுவரல் கேட்டி
தழகெ வாறவள் சுமப்பளென் றையுறு மஞர்காள்
கழகர் கைதொழுங் கடவுளா மவளுளிற் கருதின்
மழவி டைச்சிவன் மலிகொடு வரவும்வல் லவளே. (ககக)

பருப்ப தத்தலை கணபதி விடச்செலும் பழையாள்
விருப்ப முற்றலி னவளுரு வாயவள் வியன்சால்
செருப்பை யூரிலோர் சிற்ற ரனையனிற் சென்று
ளிருப்ப ளித்துப சரித்தவன் மனைவிதன் னிடம்போய். (ககஉ)

தானி ருந்தவ ளளகம தனைநனி திருத்திப்
பேனி னங்களைங் தொருவிருங் தென்னுமுன் பேய்போன்
றேனி தென்னெடு பகர்ந்தனை யெனமுற மெடித்து
மேனிங் தித்தடித் தோட்டினண் மனமிக வெறுத்தே. (ககங)

முன்னும் பின்னுமத் தகையபெண் கொண்டவர் முங்நீர்
மன்னும் பாரிலி ராரெனச் சொலத்தகு மதுரங்
தன்னு பாப்பொழி கிழவியு மதிசயங் துளும்பப்
பன்னு வார்மலி வீதியிற் கடிக்கெனப் பறிந்தாள். (ககச)

அங்கு போயவன் மயக்கமுங் தியக்கமு மழியப்
பொங்கு பேரருட் கண்கொடு பார்த்திரு புதுப்பாட்
டெங்கு ளார்களுங் தினந்தினஞ் சொலும்படி யிசைத்தா
ளிங்கு நீரெருப் பினையள்ளிக் கட்டிக்கொள் ளெனவே. (ககஞ)

அக்க வித்தொனி முற்றலு மவனுளங் துணிந்து
மிக்க மாதவ வேடமிட் டரன்றிரு வேணி
புக்க நீர்வரு கங்கையாற் றருகினிற் போயும்
றிக்கன் கூற்றயன் வழக்கிலா ரினத்திலேய்ந் தனனே. (ககசு)

தாட கைக்குஞ்சூர்ப் பகுக்கு மிணையெனத் தமிழாற்
பாட வெளைவைமுற் பதியினை யொறுத்தவப் பாவி
நாட நிந்திட வுடனிறை புழுச்சொரி நவைதோய்ந்
தீட றைந்திடற் கரியதீ நரகிலெய் தினளே. (ககள)

வே று.

தென்பாண்டி நாட்டினிடைத் திகழ்முல்லை நிலக்கானி
லன்பாளர்க் கொருதுணையா மௌவையா ரொருநாட்போய்
வன்பார்வன் பழிக்கொடுமை மாற்றிடவோ ராட்டிடையன்
றன்பானின் னுணவுண்ணத் தருகெனநன் கிரந்தாளே. (ககஅ)

அவ்விடைய னுட்டெப்பா லதுகலந்த கூழருத்திச்
செவ்வியதா முபசாரந் தெரிந்தளவிற் சிலசெய்தா
னீவ்விதமாங் கியன்றிடலு மீடிலருட் பீடுடையாள்
வெளவிநிலத் தினர்பேசு மாட்சிநல்க மனங்கொண்டு. (ககசூ)

நின்பெயரியா தெனக்கேட்டா ணெடுநாளே யயதியென்ரு
னுன்பிறப்பிற் கிடமாய வூர்ப்பெயரென் னெனக்கேட்டா
டன்பெயரை மறந்திட்டோன் றலத்தின்பே ரறிவானே
வன்பியன்முள் ளுடைக்கருவேன் மரமைந்து வாய்ந்தகென்ரூன். ()

அயதியெனும் பெயர்மறதிக் கறைந்ததனு லவன்றன்னே
வயமலிபாண் டியனுட்டி மனிதனெனத் தெரிந்துரைத்தே
னியலிசைநா டகப்புலவீ ரீனமதென் றெள்ளேன்மி
னயமதுரச் சொற்பலவந் நாட்டுவழக் கினிலுளவே. (கஉக)

அவன்றனடை யாளமைவே லயதியெனக் குறிக்கொண்டு
சிவந்தசொலா லகப்பொருட்சீர் திகழ்கோவை செப்பியப்பாற்
றவந்தழைக்குந் தென்புலியூர்ச் சபையினிடை யரங்கேற்றி
யுவந்தபள்ளிக் கூடமுறு மூர்தோறும் பரப்பினளால். (கஉஉ)

அவ்வுயிர்தா னென்னபய னந்தரத்தி லடைந்ததுவோ
விவ்வுலக முழுதுமிரா ளியம்புதல்கேட் டிருக்கின்ரேம்
வெளவுமழ கியவேலால் வயங்குமைகா ரத்ததிதே
வொவ்வுமெனக் கவுமார சொருசிலரீண் டுன்னுவரே. (கஉங)

ஐந்துபடைக் கலமேந்தி யழகதிகம் பெறுமாலென்
றுந்துமறி வுடைச்சில்லோ ருரைப்பதற்கு ஞாயமுண்டுண்
டிந்துமுடித் தவன்முதலோர்க் கியம்புநரு மிருப்பாரே
தந்துணர்வா ரமைத்துரைக்கத் தக்கபொரு டணவரிதே. (கஉச)

பந்தனுக்கோ ரந்தாதி பகரன்முத லியசரித
மிந்தவுல கினிற்பல்லோ ரியம்புவா ரியானறியே
னந்தவெளவை யிந்தவெளவை யாமிருவ ரென்னுத
மைந்தரனே வருங்கால மதிப்பறியா மனத்தினரே. (கஉடு)

முன்னெளவை கலிவருட மூன்ரூவ தாயிரத்தாள்
பின்னெளவை நாலாவ தாயிரத்திற் பிறந்திட்டா
ளன்னவடன் றிருவடியி லடுத்தவள்போய்க் கலந்ததனு
லின்னவளைப் பிரிக்காம லேகமென்ரூர் பலர்தாமே. (கஉசூ)

விக்கிரமார்க் கன்புவியின் மேவுமுன்னு ளொருத்தியுற்ரு
ளுக்கிரனு மவற்கொன்ரு னுற்றவெண்ணூற் றேழாண்டின்
மிக்கிகலுங் கம்பனிடம் வேதனேப்பட் டாளொருத்தி
யக்கிரமாம் புத்தியுள்ளா ரறிந்துகொளத் தக்கதம்மா. (கஉஎ)

இவ்வையத் தொடுவானு மியற்றுதவப் பயன்போலு
மெளவைசரித் திரப் பெருக்கூ டறிந்தளவிற் பகர்ந்திட்டேன்
கவ்வைதீர்ந் துலகுய்யக் கவிபகரு மிடைக்காடர்
செவ்வையுறு சரித்திரத்திற் சிறிதுரைக்கத் துணிந்தேனே. (கஉஅ)

ஔவையார்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கஅஅக.

இருபத்தேழாவது

இடைக்காடர் சருக்கம்.

தென்பாண்டிநாட்டிலுயர் திருமதுரைப்பதிக்கீழ்பா
லின்பார்செந்திருவாழு மிடைக்காடென்றிலங்கூரின்
முன்பாயர்மனையினிடை முகுந்தனுதித்திடுமாறே
வன்பார்முற்றவத்திலெரு மகனுதித்துவளர்ந்தானே. (க)

வளர்ந்தவனுற்றந்தையொடு மாதாவுங்களித்தினத்திற்
கிளர்ந்தமுறைப்படியாட்டுக் கிடைபுரக்கவிடுத்திட்டா
ரிளந்தையெனும்பருவம்போ யெவ்வனந்தோன்றியநாளிற்
களந்தறுகுருஞ்சுடையான் கடுக்குமொர்சித்தனேக்கண்டான். (உ)

அக்காட்டிலவற்கண்ணுற் முன்றவிதிப்பயன்வலியான்
மிக்காட்டுப்பாலருத்தி வேண்டியவாறேவலுஞ்செய்
தெக்காட்டுக்குங்கடவு ளெனுநெடுமாலங்கிசனைத்
திக்காட்சியினர்தாமுஞ் செப்புசித்தனுய்த்திகழ்ந்தான். (ங)

அத்தனேபேறடைந்திருந்து மகங்காரத்தின்முழுகாமற்
பித்தனெனத்தன்றெழிலிற் பெரிதுமுயன்றளிகூர்ந்தான்
சித்தர்குழாத்திடையங்ஙா டிருநெடுமால்செய்துள்ள
பத்தவதாரத்துளெது பலத்தெனென்வாதுதித்ததுவே. (ச)

அவ்வழக்குத்தீராம லகந்தமலைதொறும்போய்ப்போ
யெவ்வரியபலத்தென வெவ்வொன்றுந்திகழ்தாவே
பௌவநிகரவர்பேசிப் பலநாட்சென்றதன்பின்னர்த்
தவ்வருஞ்சீர்ப்பொதியவனைத் தவராசற்கறிவித்தார். (ஞ)

அன்றுமுறைப்படிவணங்கு மவனைப்பார்த்தம்முனிவ
னின்றுபாண்டியனுட்டி லிடைக்காடனெனுஞ்சித்தன்
றுன்றுபலவாட்டியெமி சூழ்காணிற்றிரிகின்றான்
குன்றுகுடையெனவெடித்த கோவலவனேயனையான். (ட)

அன்னவன்பாற்போய்க்கேண்மி னக்கணமேயவன்சொல்வான்
சொன்னமொழியினேரும்பிச் சூழ்கலகமறத்தீர்மி
னென்னதுசம்மதமுமதே யானுனைக்கொண்ணுதவனைச்
சின்னவனென்றெண்ணேன்மின் றெளிஞர்சிகாமணியென்றான். (எ)

வாழையடியெனத்தொடர்ந்து வருகுரவர்மரபினரா
யூழைவென்றோராமவர்தா மொருங்குபோயவற்கேட்டா
சோழையேயிடையனே யிளிச்சவாயினனேயிக்
கோழைமதியேனெனல்போன் றதனுறுதிகூறினனே. (அ)

ஈடிலன்போன்றிரங்கியதா லேழையிராகவனென்றுங்
காடியைந்துவாழ்ந்ததனுங் கண்ணனேயிடையனென்றும்
பீடியலாடகற்கீன்றோன் பிறங்கிளிச்சவாயனென்று
நாடியுணர்ந்தவெல்லா நகந்தொறும்போயமர்ந்தாரோ. (கூ)

மன்னியசீரிடைக்காடன் மாநிலத்திற்பாவத்தாற்
பன்னிரண்டாண்டளவிலொரு பஞ்சம்வரும்விதந்தேறித்
தன்னிடத்தாட்டினங்களுக்குச் சமுத்திரத்தின்றண்ணீரு
முன்னிவளருமுரியிலை யுணவுமுணும்படிபழக்கி. (கo)

வரகொடுமண்கலந்துசுவர் வைத்தொருகோட்டையுஞ்சமைத்திட்
டரசொடுவாழ்ந்தாட்டினங்க ளுரைத்துரைத்துசுவரடியிற்
றரவருநல்லரிசியினைத் தனிப்பாலிலட்டருந்திக்
கரவில்சிவயோகத்தாற் கண்டுயின்றுங்களிகூர்ந்தான். (கக)

பொறிபுலன்களாதியவாப் புகல்பலபல்பொருள்களையுஞ்
செறிதருமாட்டினமாகச் செய்தனனென்பார்சிலபே
ரறிவரியதத்துவமா மகண்டபரத்தருள்பெற்றோர்
குறிவழிமுற்றுதபயன் குவலயத்துளொன்றுமின்றே. (கஉ)

அப்படியப்பஞ்சமதி லளவிறந்தகோடியுயிர்
துய்ப்பதற்காதாரமின்றிச் சோர்ந்திறந்துசிற்சிலுயி
ரெப்படியோவுய்ந்துறுநா ளிரவியாதியகோட்கண்
மெய்ப்பரதேசிகள்வடிவா மேதினியினிடைவந்து. (கங)

பார்த்திடைக்காடன்சிறிதும் பதையாதுகளிகூர்ந்து
சீர்த்திருக்கும்விதந்தேர்ந்து சென்றிரந்தாரவன்றேறி
யார்த்தியுடனமுதருத்தி யவரவர்க்கொவ்வொருகட்டில்
சேர்த்திவற்றிற்றுயின்மினெனச் செப்பிமிகவுபசரித்தான். (கச)

வைத்துளவாங்கட்டில்களை வானினிலைப்படியமைத்துப்
பொய்த்துயில்கூர்ந்தனரவர்க்காப் புரதகனனருணடி
மெய்த்துயில்வந்திடுமாறு வேண்டினனவ்வாறே
யத்துயில்வந்தவர்கிடந்தா ரவற்றைநேர்படச்சேர்த்தான். (கரு)

சேர்தலும்பூதலமுழுதுந் திருமலியமழைபெய்து
நீர்தழைத்ததெவ்வுயிர்க்கு நிரப்பெனுநோய்நீங்கியது
நேர்தவிரன்னவொழுந்து நின்னருட்பேறுயர்வென்று
*ரார்தரனுந்தடையின்றி யருண்மினெனவடிபணிந்து. (ககூ)

* ஆர்தான் - பொருந்தியதரத்தின ராகிய விடைக்காடர்.

இடைக்காடர் சருக்கம்.

விடம்போலுமக்கொடுமை மேதினியிற்பின்வாரா
வுடன்பாடுபெற்றவர்த முரைப்படியொவ்வோராண்டின்
றிடந்தானுமுலகறியச் சீரியவெண்பாவறுப
திடம்பாடிவிரித்திட்டா னின்றுமந்நூலுளதம்மா. (கஎ)

முன்னிவிதப்பஞ்சமது மூதுலகிற்படராமற்
றன்னிகர்வெஞ்சனிக்கோள்பாற் றயரதன்போய்ச்சமரிட்டான்
பின்னிடைக்காடன்கிரகப் பிணக்கமுற்றுகேர்செய்தா
னென்னிலெவனுயர்ந்தோனே வினிதுணர்வார்சொலற்பாற்றே. (கஅ)

தெக்கணநாட்டியல்வழுதி செயும்பிழைக்காத்திருமதுரை
முக்கணன்றன்கோயில்விட்டு முனிவொடுபோம்படிபாடி
யக்கணமேயவன்றெழும்பா லகமிளகியாங்குறவோர்
வக்கணைப்பாட்டிடைக்காடன் வகுத்தகதைதமறைவன்றே. (ககூ)

அக்கதையின்விரிவதனை யாலவாய்ப்புராணந்தான்
றிக்கறியநாடோறுஞ் செப்பிடலுண்டல்லாமற்
றக்கபுகழ்வள்ளுவன்றன் றமிழ்வேதந்தாபிப்பப்
புக்கதினந்துணையாகிப் போங்கதையுமொன்றுண்டே. (உ0)

இன்னமிடைக்காடன்ற னியற்சரிதமெத்தனையோ
பன்னவலார்பன்னிடுவார் பரகதியிற்புகலுண்மை
யென்னநவின்றிடலாகு மியாக்கையொடுமலைக்குகையி
லன்னவர்வாழ்ந்துள்ளாரென் றறைவாரும்பலர்தாமே. (உக)

சித்தர்களிற்சொற்சுவைதேர் தேரையார்முதலாகு
மெத்தனையோபேர்கவிக ளிசைத்துள்ளாராலுலு
மித்தரையோர்கண்காண வியற்புலமைநடத்திலா
லத்தகவோர்களையிந்நூ லறைந்திடுதல்வழக்கன்றே. (உஉ)

புள்ளுகைத்தாருயிர்முழுதும் புரந்தருண்மாலங்கிசமா
விள்ளுமிடைக்காடன்றன் வியன்சரிதஞ்சிறுதைத்தேன்
றெள்ளுதமிழ்த்திருவாக்குத் திகழ்தெய்வப்புலமைபெறும்
வள்ளுவனுர்சரித்திரமும் வந்தமட்டில்வகுப்பேனே. (உங)

இடைக்காடர்சருக்க முற்றிற்று

ஆடு திருவிருத்தம் - ககoசு.

இருபத்தேட்டாவது

திருவள்ளுவநாயனார் சருக்கம்.

மன்னுபேரருட்சீரொய்தி வாழ்ந்தவள்ளுவருற்பத்தி
முன்னுதித்துய்ந்தவளவை முதுசரித்திரத்திற்றோற்றும்
பின்னுதித்திட்டவேழாம் பிள்ளையையொருவேளாளன்
றன்னுடைத்தவப்பேறென்னத் தனியெடுத்தகம்புக்கானே. (க)

புக்கவன்மனைபாலீந்தான் பொருக்கெனவவள்கைக்கொண்டு
மிக்கபால்சுரந்துகொங்கை விம்மலால்வியப்புற்றூட்டி
யிக்கவின்சேயையிங்ஙா ளெளிதினினமக்குநல்கன்
முக்கணனருளேயென்ன முடிவில்பேருவகைபூத்தார். (உ)

பாலமுதூட்டலாதி பயந்தசேயினுக்குமேலாய்ச்
சாலவுநடத்திப்பாலத் தன்மைபோய்க்குமரனுகி
வாலறிவினளுமங்ஙாள் வாசுகியெனுமோர்பெண்ணை
நூலணிமணஞ்செய்வித்து நுவலருமுவகையார்ந்தார். (ஊ)

முன்னயனுகத்தோன்றி முண்டகப்பொகுட்டில்வாழ்ந்து
பின்னரிவ்வுருவம்பெற்ற பிள்ளையாற்பெரிதின்புற்ற
வன்னவரிருவர்தாமு மரனடித்துணையிற்சேர்ந்தா
ரின்னவன்மனைவிதன்னே டிருடியர்மதிப்பவாழ்ந்தான். (எ)

மாசறுதவத்தின்மிக்க வசிட்டமாமுனிக்குவாய்த்த
தேசவிர்வடமீன்சீர்த்தி செப்புவார்செப்புந்தோறும்
வாசநாண்மலர்ப்புத்தேளாம் வள்ளுவன்மனைதன்மாட்சி
பேசலுமுலகிலென்றும் பெருவழக்காயிற்றம்மா. (ஙி)

எள்ளுபுன்மதத்தோர்நாண வெலும்பொர்பெண்ணுருவாமூரி
லுள்ளுளாரொடுவாழாம லூர்ப்புறச்சேரிசார்ந்து
தெள்ளுசொற்புலமைவாய்ந்து சேலேநெய்திருந்தவாற்றல்
வள்ளுவனென்றூர்பல்லோர் வளமையோனெனலோராரே. (சு)

பாதிவான்மதிவாழ்சென்னிப் பரமனேபரமென்றேர்ந்து
சோதிடமாதிநூல்க ளேனவாகச்சொல்லி
நீதிமுற்றுணர்த்தும்பெட்பா னிகமமேயிதுவாமென்னத்
தீதின்மெய்யறிஞர்போற்றத் திருக்குறணூலுஞ்செய்தான். (எ)

அந்தநாள்பாண்டிநாட்டி லவிர்கடைச்சங்கத்தற்றூர்
செந்தமிழ்ப்புலவர்பல்லோர் திடுக்குறக்கொடுமைசெய்து
சுந்தரேசரர்தம்பாட்டுந் துகளினதெனப்போராடி
வெந்தவாணவமேற்கொண்டு மிகைபடும்வினைசெய்தாரே. (அ)

என்னபாட்டெவர்சொன்னலு மிதுபழம்பாடலென்னப்
பன்னலுமெழுதிக்காட்டும் படிறுமாதியகைக்கொண்டு
ஈன்னலப்புலமைத்தேற்ற ஈம்மதேயாகுமம்மோ
டின்னவாதனைத்தில்வைகு மீட்டினரிலொன்றூர்த்தார். (கூ)

உத்தமப்புலமைதன்னு லுறுதிபெற்றுள்ளமேலோ
ரெத்தனேபேர்வந்தாலு மிடங்கொடுத்திமைப்பீட
மத்தர்தாமமைத்ததாதி யாகியகதையநேகஞ்
சித்தராயவர்வந்தாடல் செயுநகர்ப்புராணஞ்செப்பும். (கo)

அக்கடைச்சங்கந்தன்னே யழிபபதுகருதியான்ற
முக்கணனருளாநாடி மொழிந்துளமுப்பாணூலைக்
கைக்கணேர்துணையாக்கொண்டு கவின்றிருமயிலைநீங்கித்
தெக்கணதிசையைநோக்கிச் செறிபெருங்கானிற்சென்றான். (கக)

ஆங்குறுமழைகண்டஞ்சி யாலடிதனிற்போய்நின்றான்
பாங்குறுபுளிக்கீழ்நின்று பரிந்திடைக்காடனன்னேற்
றாங்குபுத்தகத்துப்பேயா தயங்குசிற்றிலைக்கீழ்வாவென்
றேங்குபேரொலியாற்கூவ வுடனவணுற்றானேர்ந்தே. (கஉ)

அற்றமம்மழைசின்னேர மங்குபெய்தகன்றபின்னர்
மற்றவன்றனேவினுவி மனக்குறிப்பறிந்துன்கையி
லுற்றநூலிடைசொற்றுள்ள வொண்பொருள்வகைசொல்லென்று
முற்றயாவையுஞ்சொற்றுள்ளே னெனுமொழிமுதியோன்கேட்டு. (கங)

ஆட்டினமருந்தியுய்ய வடைபறித்ததவமஃதைக்
காட்டியீதினுக்கும்பாடல் கழறியுள்ளாயோவென்றான்
கேட்டிமைகொட்டுமுன்னங் கிளருரனென்னுநல்ல
தோட்டியாற்பொறிகளாய தும்பிகளைந்துங்காப்போன். (கச)

வரனெனும்வைப்புக்கோர்வித் தெனுங்கவிமகிழ்விற்சொன்னன்
பிரமனேரவற்குமால்போல் பெரியவன்றுணையாச்சேர்ந்தான்
கரவினெஞ்சகத்தளான காதலிதன்னைக்காட்டிற்
பரவுமாட்டினத்தையாவர் பாதுகாப்பினில்வைத்தாரோ. (கடு)

தக்கவர்வசஞ்சேர்த்தன்றித் தமிழ்த்திருமதுரைநோக்கி
யக்கவிப்புலவர்போகா ரதன்வகைதுலங்கவில்லை
மிக்கதாங்காட்டுத்தீயின் மேற்றிசைக்காற்றுஞ்சேர்வ
தொக்கவேயெளவைதானு மொருதுணையாகிச்சேர்ந்தாள். (கசு)

மூவரும்விளைந்தங்கேகி முதிர்தமிழ்ச்சங்கத்தார்மு
னியாவருமறியநின்று செந்தலுரெனலுமன்னர்
பாவலரென்னத்தேர்வான் பகைத்தவள்ளுவனேர்வெண்பாத்
தேவரியாவருக்கும்வித்தாத் திகழ்பெரும்பாழுரென்றான். (கள)

விள்ளுநீயாவனென்ன வெறுப்பொடுவினவலோர்ந்து
வள்ளுவனெனலுஞ்சற்று மதிப்பின்றிக்குலக்குந்தன்மை
கொள்ளுதிகொல்லோவென்றூர் குலைக்கவேவந்தேனென்றுன்
றெள்ளுமூதுணர்வுற்றூர்க்கும் தீவினைப்பயன்பொல்லாதே. (கஅ)

அவளவிலிடைக்காடன்று ஞற்றங்கையிலென்றூர்பாட்
டெவர்களுமெழுதாணுச்சொ லியைதரும்படிசொற்றிட்டா
னவமிதென்றுப்புக்கொண்டார் நாரியரினத்தினல்ல
தவமுடையவளாமெளவை சைகைசிற்சிலசெய்திட்டாள். (ககூ)

அவற்றினைமதவேட்காற்று வங்கனைக்கமைத்துச்சொன்னூர்
தவத்தினுக்கமைத்துச்சொல்லித் தாழ்ச்சிகண்டொல்கச்செய்தா
ளிவர்க்குளங்கியன்றகாதை யின்னமெத்தனையோசொல்வா
ருவப்பொடம்மூவர்ப்போற்றற் குளமவரிசையாதுற்றூர். (உ0)

அத்தியறிந்துமுன்னு ளயனுருவாகிவாழ்ந்த
வித்தகப்புலவன்றன்கை மேவியவியனூரேடவ்
வுத்தமப்பலகைமீதி லுறும்படிவைத்தானுங்கு
வைத்தலுமவளவேயாய் மற்றையர்த்தள்ளிற்றன்றே. (உக)

ஆணவக்கீரனுதி யனைவரும்புனலில்வீழ்ந்து
நாணமுந்துயருமெய்தி நளிரொடுகரைசேர்ந்துய்ந்தார்
சேணகத்தொருசொலூமைச் செட்டியாஞ்செவ்வேள்போலு
மாணவனிந்நூல்சொன்ன வள்ளுவனென்றதன்றே. (உஉ)

வண்டமிழ்ப்பலகையென்றூர் வடிவெடுத்துள்ளவாணி
மண்டலம்புகழுஞ்செங்கோல் வழுதியைவிளித்தென்வாக்கே
பண்டையன்பகர்ந்தநூலும் பராசரன்மகன்சொனூலும்
விண்டவள்ளுவன்சொனூலு மெனுங்கவிவிளம்பினூளே. (உங)

கள்ளினுமினிப்பதாகிக் கவின்றருதமிழ்ச்சீரோர்ந்த
வொள்ளியபுலவர்நாற்பத் தொன்பதுபேருமன்பாற்
றெள்ளியதெய்வத்தன்மை செறிந்தவள்ளுவனேப்போற்றி
நள்ளியொவ்வொருபாட்டோதி நலமிகப்பொறுத்தாரம்மா. (உச)

சங்கநாவலரெல்லோரும் தனித்தனிப்பிரிந்துபோனு
ரங்கவரகஞ்செற்றூரு மவரவர்தொழின்மேற்சென்றூர்
மங்கலின்மதுரைப்பொற்றூ மாைப்பெருவாவிநீரிற்
றுங்கமார்பலகையொன்றுந் தோற்றிடாதமிழ்ந்ததன்றே. (உடு)

மூவரிலிருவர்காதை முன்னுரைத்துள்ளேன்மற்றூர்
தேவனேயவன்றூபித்த திருக்குறளென்னுஞ்சீர்நூல்
பூவகத்துறைவான்சொன்ன புனிதஞான்மறையினுண்மைச்
சீவனேர்பொருள்களியாவுஞ் செகத்தினர்க்குணர்த்திற்றன்றே. (உசு)

நால்வர்சொல்சைவர்வேத நளிர்குருகூரன்சொல்லும்
போல்வலார்சிலர்தஞ்சொல்லும் பொருவில்பாகவதர்வேதம்
வால்வளையுலவுமீதி மயிலைவள்ளுவன்சொலியார்க்கு
மேல்வழியுணர்த்திக்கீழ்மை விலக்குநல்வேதமாமே. (உஎ)

இந்திரப்பதவிக்கேற்று மிவுளியாகமும்பொல்லாதென்
றுந்தியகருணைவாய்ந்தோர்க் குறுதியுண்டாகத்தேற்றுஞ்
சந்திரவதனத்தாதி தருமகாரெழுவர்தம்மிற்
பிந்திவள்ளுவப்பேர்தாங்கும் பெரியவன்பேசுநூலே. (உஅ)

அத்தனிநூலான்மாட்சி யகிலமுற்றவிரப்பெற்று
மத்தகவேழமூரு மன்னராதியராற்பொன்கொண்
டொத்தபல்போகமாந்தா துரியமுற்றெழிலேசெய்திட்
டித்தமமனிதன்னை யிலப்பிலில்லறமுய்த்தானே. (உக)

நல்லறந்தானென்றெளவை நவின்றுவற்புறுத்தலான
வில்லறமென்னும்பொன்னுக் கியலுரையாணியென்னச்
சொல்லறமுயலுநாளிற் சுரசெலாம்பார்க்கவீச
னல்லறலனையகூந்த லம்மையோடாடலுற்றான். (கo)

ஆடலிலவள்வெல்வாள்போன் றவிர்தருதருணத்தன்னை
னூடகத்தாளிலொன்றை நருக்கெனத்தூக்கிநந்தத்
தோடதைக்கழற்றிமுன்போற் றுலங்கிடத்தரித்தான்காதிற்
சூடகக்கையாணைத் தோல்வியேற்றவளாகின்றாள். (கக)

நந்திமத்தளமுமஞ்சு நடனமுற்றியதானக்கன்
வந்திருந்துவகையார்ந்த வானவர்தம்மைநோக்கி
முந்திவென்றவராருண்மை மொழிகுதிரென்றனன்னோர்
புந்திசோர்ந்தவசமானேம் புகலுமாறறியேமென்றார். (கஉ)

நாணமற்றதுசொன்னார்க்கு நடனநாயகன்றான்பாரின்
மாணறுமயிலையூர்ப்பால் வள்ளுவனெருவனுள்ளா
னணோடவன்பாற்போய்க்கேட் டறிந்துகொண்டதன்பினென்ற
சேணகத்துமதூர்தோறுஞ் சென்மினென்றிசைத்தான்மன்னே. (கங)

வேறு.

அதுவினுவலு மமரரெல்லோர்களு மகமளவறவொல்கிக்
கதுமென்றுங்குதம் முருக்கரந்தேகினர் கண்ணுதனடங்கண்டாற்
கிதுவிளங்கிடா தெனகினைத்திட்டதென் னெனச்சொல்வேனெங்காளு
மதுவுமாமிச மும்புலைவேள்வியின் மாந்துபுன்மதிப்பண்பே. (கச)

அவர்வந்துற்றவா றுணர்ந்துவள்ளுவப்பெய ரமைந்தவந்தணன்முன்னுட்
டவளமூரனீ ருடனிடுமனைவிபாற் றழலெனச்சுடுமிவ்வு [ட்டாள்
ணைவணமுண்பனியா னென்றனன்விசிறியொன் றெடுத்துவந்தசைத்தி
சிவசிவாவதி லாவியுண்டாயது திகழ்ந்திலார் வியந்தாரே. (க

அன்னமுண்டபின் கயிற்றெடுதோண்டியங் கமைதருகிணற்றிட்டம்
மின்னனுளதன் பாதியிற்புனல்கொணர் வேளையிலழைத்திட்டா
னென்னவோவென வவளவில்விடுத்துவந் தெய்தினளதுநின்ற
தின்னவற்புதங் காண்டலுமறைந்தவ ணிருந்தவரிலங்குமூர். (கூசு)

யாகஞ்செய்பவர் முதலினர்க்கிந்திர னிசைக்குநாளளவுந்தம்
போகமீந்திட லேதொழிலாகிழ் பொதுமடந்தையர்தம்பொற்
றேகந்தோய்ந்திடு தேவர்கள்வாசுகித் திருப்பெயர்மகள்கற்பின்
பாகங்காண்டலு நடுநடுங்கினரதும் பரனுணர்த்தலின்மாதோ. (கூஎ)

தமிழினுன்மறைப் பொருள்செய்தோனும்பர்க டமக்குநல்லுபசார
மமிழ்தின்மிக்கசொல் லொடுதகச்செய்தன னவர்களுமவன்றன்னைத்
திமிரமெள்ளள வேனுமில்கற்புடைச் சேயிழையொடுவாழ்த்தி
யெமிதயத்தவா வுற்றிவண்வந்தவா றின்னதென்றிசைத்தாரே. (கூஅ)

அவளங்குற்றவர் வத்திராபரணமுன் னுயசீர்குறித்தேனு
மிவர்களியாவரென் றவனிடம்வினவில ளித்தகைமனேவாய்க்குந்
தவமுளானிழை நக்கிடுமேழையேன் றுனறிகுவன்கொல்லோ
சிவன்றன்னுள்கொடு குழைகவர்கூத்தெனுஞ் சிறுகவியுரைத்தானே. ()

அந்தமட்டினி லேயமற்றுண்மையோர்ந் தவர்தமூர்வயிற்சென்றூர்
சந்தனசலக் குறுமுனிவரன்றரு தமிழ்க்கொருபெரும்பேரு
வந்தவள்ளுவ னிகபரத்தியாவரு மதிக்குமேதகவார்ந்தா
னெந்தமாட்சியுங் கற்புடைமனைத்தொடர் பெய்தினர்க்கரிதன்றே. (சஅ)

மட்டில்பேரருட் கடற்பயனுகர்ந்துறும் வள்ளுவன்றனக்காளா
யெட்டிநேர்வினைத் தொடர்பறக்களையவே லேலசிங்கப்பேர்கொள்
செட்டிவாஞ்சையுற் றடுத்தனன்றடுத்ததிற்றிரும்பிலான் செகத்தியார்க்கு
மொட்டிடாதசில் சோதனையினுமன முடைந்திடாதுற்றனே. (சக)

ஒருமரத்தினி லேறவிட்டிருகையு மொருங்குவிட்டிடச்சொன்னுன்
குருபதந்துணை யெனவிடித்தவன்மனை குடங்கிணற்றிடைநின்றுங்
கருவமாம்வெளி தாங்கிடநின்றன னன்றபக்குவநோக்கித்
திருவருட்பயன் பெறுநெறியினேவலச் செவியிடையுரைத்தானே. (சஉ)

அன்றுதொட்டவன் வாசுகிப்பெயர்மனை யவளொடுபிறந்தான்போ
னன்றுதீதெனல் கருதிடாதுரைப்படி நடந்துவந்தான்சின்னட்
சென்றுலோகமும் றெருருபெரும்பஞ்சநோய் செறிந்தன்னவன்றன்பாற்
குன்றுபோலநெல் லாதியதானியக் குவைகளுற்றனமன்னே. (சஊ)

அவற்றினேப்பண மில்லவர்க்கற்றையூ ணளவினிலளந்தேனுேர்க்
குவப்பினேடுநீ கொண்டதற்கொருபடி யுயர்த்திவில்லெனச்சொன்னுன்
றவத்தின்முற்றினிற் பிறந்தவனுதலிற் றவறிடாததுசெய்தான்
றுவக்குபஞ்சமுற் றெழிந்ததக்குவையினங் தொலைந்திலவளர்வுற்றே. ()

விற்றபொற்பணத் திரளதியூதிய வியப்பொடுதிகழ்ந்திட்ட
தற்றமப்பொனே யொருபெருஞ்சதுரமா வமைத்ததிற்பெயர்தீட்டி
வற்றலில்லதாங் கடலிடையிட்டிவண் வருகெனக்குருச்சொன்னான்
சொற்றவாறுசெய் தணுத்துணைச் சோர்வுமில் சுழுகனுமெனவாழ்ந்தான்

அன்னசீடன்முன் மாமிசத்துணவின னுதலினுலோர்கா
லின்னசற்குரு வதனைமுற்றெழித்தியென் றியம்பலாமயனுரள் [ராற்
சொன்னதூலின்முன் வேள்வியிற்றினல்சொலித்தொடாமைபின் சொலுமீ
சின்னவாயிரந் திணுதுசெத்துளபெருஞ் சேல்கொளென்றிசைத்தானுல்.

அந்தவாறொரு நாள்கொளுஞ்சேல்வயிற் றுடகச்சதுரத்தைச்
சொந்தவாளர்கண் டதிற்படர்பாசியாற் றுய்த்தகல்லெனவெண்ணிச்
சந்தவாயிலிற் போட்டனர்செட்டிதன் றுணுதைத்திடுமாற்றுல்
வந்தவாறுணர்ந் ததனையக்கணந்திரு வள்ளுவற்குரைத்தானே. (சள)

அதனைக்கேட்டலுமற வினைப்பொருளெவா றகற்றினுமகலாதென்
றுதகத்தின்பிணந் தினலுதீத்துயர்ந்துளா ருண்பவேயுணச்செய்தா
னிதனைத்தேர்ந்துல கன்றுதொட்டின்றுமே லேலசிங்கத்தின்பொன்
பதனஞ்செய்யவும் வேண்டுமோவெனச்சொலும் பழக்கமெய்தியதம்மா.

சிறந்தமேலவர் தீவினையொருவனைச் செயும்படியுரைத்தாலு
மறந்தழைத்ததோர் ஞாயமங்கதனிலுண் டாவதற்கிதுசான்றும்
பறந்தவோதிமப் புள்ளிறையாதியர் பகர்ந்தசொற்குறித்தேனு
மிறந்தவுணுமுண் பதுதகாதென்பதே யியற் * றமிழ்மறைக்கோளே. ()

மகிதலம்புகழ் வள்ளுவன்மனைவியை மலைச்சிலைக்கரன்றேவி
சகிகளோடிவைத் தின்புறவிழைந்ததிற் றடைசிறிதுறக்கண்டவ்
† வெகினமன்னளே யேனெனவினவின னியானமுதிடுந்தோறு
மெகினல்லூசியு நீரும்வைத்திடும்படி யியம்பியதேனென்றுள். (நo)

அன்னஞ்சிந்திடி லதனிடைக்கோத்தெடுத் தலம்பியுண்பதுநாடிச்
சொன்னதுண்டவ ணியலவிந்நாள்வரை சோர்ந்திலேயெனச்சொன்னான்
பன்னல்கேட்டலும் பரையருகேகினள் பாரிடைவாழ்மாந்த
ரென்னஞானமெய் திணுமினியவர்ப்பிரிந் திடிற்றுயருறுமாறே. (நக)

அடிசிலுக்கினி யாய்முதிரன்புடை யாய்சொல்சொற்றவருதாய்
நெடிதுதாள்வரு டிப்பினேதுங்கிமு னேயெழுந்திடும்பாவாய்
கடிதுபோகுதி யோவினியிரவிலென் கண்டுயில்வுறுங்கொல்லோ
விடியற்காண்டன்மிக் கரிதெனும்பொருள்கொளோர் வெண்கவியுரைத்தானே.(நஉ)

தன்னுடைச்சரீ ராங்கிசத்துதித்திடி தனையரிற்சிறந்தோன்ரு
னென்னுமாண்கொளே லேலசிங்கப்பெய ரிசைந்ததோர்வணிகன்பா
லின்னுஞ்சிற்சில பொழுதினிலியாணுமங் கேகுவலெனலாலே
நின்னுயிர்க்குடி லாமுடற்செயும்வித நிகழ்த்துதியெனக்கேட்டான். ()

* தமிழ்மறை - திருக்குறள். † எகினம் - அன்னம்.

கேட்டுநின்றவன் பாலிருகாலினுங் கிளர்வைக்கோற்புரிகட்டி
மாட்டுமானிடர் பலர்சொலவீர்த்திலூர் வடபுறத்துறுகாட்டிற்
போட்டுவந்திருந் திடுகவென்றலுமவன் பொருவறுத்துயரெய்தி
நாட்டுளோர்முறை மறந்திதுவினையது நம்பிழையெனத்தேர்ந்தான். (நிசு)

அந்தவள்ளுவ னெருதினம்பற்பல ரறிதரவுடல்வீழ்த்திச்
சொந்தநன்னிலை சேர்ந்தனனுடனவன் றெழும்பனுகியசெட்டி
நொந்தயர்ந்தழு தேங்கியங்குளசிலர் துவன்மொழிவழிதேறிக்
கந்தநீர்முழுக் காட்டிநன்கியைதரு கவின்பெறப்பூசித்து. (நிஎ)

வீரசைவநன் னெறிப்படிநிவேதனம் வேண்டுநொடுதுய்த்துத்
தோரமைக்குமுன் னவ்வுருவிழித்துநான் செப்பியபடிசெய்யு
மீரமின்றியே னிதுசெய்தாயென்றலு மென்செய்வானிசைவுற்றுன்
பாரணங்கொரு பஞ்சணையாயினள் பகர்ந்தவாமுடித்தானே. (நிசு)

அவ்வுடற்றெடுங் காகமாதியவெலா மக்கணமமசோசர்
வெளவுசீர்விமா னத்தினிற்கயிலைமால் வரைத்தலைபோய்ச்சேர்ந்த
விவ்வுலோகமா னிடரினுமங்ஙன மேகினர்பலரீற்றி
லொவ்வுசெட்டிபோய்த் தேடிகொண்டென்பொர் சிற்றுழுந்தளவினிற்கண்டான். ()

அதனைநீரினி லுரைத்தினியவருட னருந்தியாங்குறப்பெற்று
னிதனைநன்குணர்ந் திடுமுழுப்புலவர்க ளியாவருமெங்ஙனு
மதனைவென்றவ னருள்பெறுமேலவர் மனத்தினிற்குறியாக
வெதனையெண்ணினு மங்ஙனமுடிவதே யியற்கையென்றிசைத்தாரே. ()

அச்சரீரத்தான் முத்திபெற்றவர்தொகை யதிகமோமதனுட்
றுச்சமென்றெணித் தமிழ்விரகன்பெறு சோதியிற்புகுந்துய்ந்தோர்
மிச்சமோவறி கின்றிலேனதனிசம் வேதனுதியரோர்வா
ரிச்சரித்திர மாதொண்டைமண்டலத் திறைபலர்சொலக்கேட்டு. (நிசூ)

கச்சிவிட்டலை கடற்றுறைமயிலையிற் கடிக்கெனப்புகுந்தாங்கு
நச்சிவாழொரு சிற்பனுல்வள்ளுவ நாயனருருச்செய்து
மெய்ச்சிவன்றரு மாகமவிதிப்படி மேவுமவ்வயின்றுபித்
திச்சியாநனி பூசைசெய்துயும்படி யிலிங்கதாரணர்க்கீந்தான். (சுo)

அந்தவிக்கிர கத்தினதமைதியு மதன்மிசையலங்கார
மிந்தநாளினுஞ் செயுமவர்பழக்கமு மென்னெனையான்சொல்வேன்
கந்தநாண்மல ரோனுமேலேலசிங் கமும்வியந்திடக்கூடுஞ்
சொந்தவாய்கொடு தொழுமவருணர்மொழி சொல்லினுஞ்சொலலாமே.

இன்றுமத்திருக் கோயிலங்குளதுமெ யெண்ணிலாவடியார்கள்
சென்றுபோற்றுபு வணங்குகின்றூர்களிச் சிறியவனேனும்போய்
நன்றுளார்பலர் மகிழவோர்பதிகமு நவின்றுகைதொழுதுள்ளேன்
கொன்றுதின்பதே கொடிதெனுந்தெளிஞரக் குரவன்மாண்பறிவாரே. ()

இல்லறத்துறை ஞானிகட்கிறையென விகபரத்தினரியாருஞ்
சொல்லவாழ்ந்தவள் ளுவரருட் புலமையைச்சுருக்கமாச்சொலித்தீர்த்தே
னல்லலின்றிய துறவறத்தினர்க்கர சாமெனும்புகழ்தாங்க
வல்லபத்திரகிரி யருட்பெருந்திறம் வந்தமட்டுரைப்பேனே. (கூஉ)

திருவள்ளுவநாயனார்சருக்க முற்றிற்று.

ஆஉ திருவிருத்தம் - ககஙஉ.

இருபத்தோன்பதாவது
பத்திரகிரியார் சருக்கம்.

வேதியனொருவன்வேத வித்துறழ்மேன்மையெய்தித்
தீதின்மந்திரத்தாற்சிற்சில் சித்தியும்பெற்றுளுகி
யாதிவாழ்காசிக்கங்கை யதனிடையாடியாய்ந்தோ
ரோதிடும்வடநாட்டோரூ ருடையமன்னவனைக்கண்டான். (க)

அன்னவன்வித்தையாலவ் வரசனுரைன்பனுகித்
தன்னதுமகளையீந்தான் றனிப்புகழமைச்சன்றனும்
பொன்னதாலளகையானைப் போலுமோர்வணிகன்றனு
மின்னனரினத்திற்சீர்த்த வேசியுமதுவேசெய்தார். (உ)

* மான்மகனனையபார்ப்பான் மதிக்கருமுவகையெய்தி
நான்மகளிையும்வேட்டு நலமுகர்ந்திருக்குநாளில்
வேன்மகிபனேயேபோலும் விக்கிரமார்க்கன்றன்னைப்
பான்மதிப்புதல்வற்கொப்பாம் பட்டியென்பவனையென்னல். (ஙஉ)

தெரிவரும்பெயருற்றுளுதித் திகழுமோர்செட்டிதன்னைப்
பரிதிநேர்சீர்த்திவாய்ந்த பத்திரகிரியைப்பெற்று
சரிவையர்நால்வர்தாமு மாண்மகார்ப்பயந்ததோர்ந்து
விரிதருபுவனத்துள்ளார் மிகைபடவியந்திட்டாரே. (ச)


அச்சிறுர்நால்வர்தம்மி லரசனுடைமைச்சன்பெண்க
ணச்சியபுதல்வர்கூடி நாரணியருள்சற்றெய்தி
யுச்சினிநகரந்தன்னி லுயரராசாட்சிசெய்து
குச்சிதம்பலரும்பேசக் குசமகவொன்றுன்மாய்ந்தார். (ஞ)

செட்டிதன்மகளங்கின்ற செல்வனுமொருவன்செம்பொன்
வட்டியைப்பெருக்கியீகை மறந்துநாட்கழித்தான்போலு
மொட்டியமூவர்கீர்த்தி யுலகமுற்றுளிரும்பண்பிற்
கெட்டிலொன்றேனுமன்னு னிசைநலமிலங்கலின்றே. (ரு)

சொற்றமூவருக்கும்பிந்தும் தோன்றலாத்துணர்மென்கூந்தற்
பொற்றனிமயில்போலால்வாள் புத்திரிபயந்தபாலன்
பற்றலர்நெஞ்சுதாக்கும் பணைப்புயமுதற்பல்சீர்தோய்
சிற்றரசாகித்தென்பாற் செந்தமிழ்த்தேயஞ்சேர்ந்தான். (எ)

---

* மான்மகன் - பிரமன், அல்லது மன்மதன்.



(அ

(கூ)

மன்னவனுகிவேண்டி மகளிர்தோண்மருவப்பெற்றும்
வன்னமெல்லிதழ்வாய்ச்செல்வ மக்களீப்பயவாதுற்ற
பின்னலின்கொடுமைதன்னே யாவரோயறியவல்லார்
பன்னகத்தோடுநாளும் பழகரனரியல்லாதே. (கo)

ஆதலின்முத்திவீட்டி லடைதலேகடமையென்னும்
போதமிக்கெய்தியென்றும் புனிதசற்குருவைத்தேடி
மேதமேதலியாப்பெற்று மிராச்சியபாரந்தாங்கி
மாதராதியரோடாடும் வழக்கமுகடத்திவந்தான். (கக)

திருவருட்பரனேநாடிச் சிந்தைதத்தளித்துத்தன்முன்
குருவரக்காணுவாற்றுற் கோரமுந்துயருமெய்தி
யிருநிலத்திடைநற்சீட நிருக்கின்றுர்குருவின்றென்ன
வொருபறையறையச்செய்வித் துயிர்வரைவெறுத்தங்குற்றன். (கஉ)

அப்பறையறைவான்றன்பா லாங்கொருவீதியின்கட்
பப்பருட்டிறமைவாய்ந்த பட்டினத்தடிகளன்பா
லிப்படியரசன்சொல்ல வில்லேநற்குரவனுள்ளான்
றப்பறவொழுகுஞ்சீடன் முனிலேயென்றுனென்றுர். (கங)

அதனேநன்கவனுமாராய்ந் தாகுமாமென்னத்தேறி
யிதமுறுமந்தவாறே யிசைத்துவந்திறைமுன்னின்றன்
விதமுணர்ந்திங்ஙன்மாறி விளம்பலேனெனலும்வேர்த்துப்
பதமுதலுடலமுற்றும் பதறிடப்பணிந்துபோற்றி. (கச)

ஐயநீயுரைத்தவாறே யறைந்துபோயினனியானங்கோர்
துய்யநீறணிந்தமேனித் தொண்டர்வந்திதனேச்சொல்லி
மெய்யறிவதனேமாற்றும் விஞ்சையும்விளைத்தார்கெட்டே
னுய்யவிட்டிடுதல்வேண்டி மொறுத்திடேலென்றுனேர்ந்தே. (கஞ)

மன்னனங்கேகியந்த மாமுனிவரைநோக்கி
யின்னதேனுரைத்தீரென்று னியாஞளேனுனக்குவேண்டு
நன்னலமுழுதுஞ்செய்ய நவையில்பக்குவமெய்தில்லா
யென்னநன்குமுறைத்திச்சொன்னு ரின்னலுங்களிப்புமேய்ந்தே. (கசு)

என்றினிப்பருவமியானெய [illegible]
பொன்றிரளனைத்துமள்ளிப் புறத்தளார்க்கைத்[illegible]
கன்றிடேல்வாரமொன்றிற் கவின்றருங்கான்பாய்வேதா
சென்றிடேனுன்னைக்கொண்டே செல்லுவேனென்னச்சொல்லி

நவினயவசனங்கேட்டு நாளொருயுகமாத்தோற்றக்
குவிதருகரத்தனுகிக் கோயிலுட்குறுகிவாழ்ந்தான்
செவியணிவலையானன்பர் செப்புநாளதன்முன்னுளி
லவிர்தருகதிரோன்மேற்றிக் கலைக்கடலமிழ்ந்தபின்னர். (கஎ)

அரண்மனைவிலாசமெங்கு மலகிடுமொருத்தியண்டர்
பரவுசீருடையதாய பளிக்கறைப்பள்ளிக்கட்டில்
விரவுபூவணையின்மேவி விளைந்தெழல்விரும்பியுற்ற
கரவுதான்பொய்த்துமெய்யாய்க் கண்டியிலடைந்தாளந்தோ. (கசு)

அப்பிழையறிந்துமன்ன னவட்சிறைச்சாலையுய்த்துத்
திப்பியத்துயில்கூர்ந்திட்டித் தினகரனுதித்தபின்னர்க்
கொப்பியல்புளிவளாறு கொண்டுவந்தடிக்கச்செய்தான்
செப்பினைத்தனத்தப்பாவை சிரித்துமிக்களிகூர்ந்தாளே. (உ0)

அதுதெரிந்தடியைநீக்கி யம்மகடன்னைநோக்கி
யிதுகுறித்தழாதுநீமிக் கின்புறலென்னுவென்றான்
பொதுமுதலாகுமீசன் பொற்பதத்தருச்சித்தற்கா
மதுமலர்விரித்தபாயல் வாயரைக்கடிகையுற்றேன். (உக)

பாவமித்துயரீந்திட்டாற் பலதினமடவார்தம்மோ
டாவலுற்றதனிற்றுஞ்சு மரசனையந்தாட்டிற்
றேவதாதுவரெத்துன்பஞ் செய்வரோவெனச்சிந்தித்தே
னேவரும்வியப்பதாகு மிச்சிரிப்பெழுந்ததென்றாள். (உஉ)

என்றலுங்குரவனங்கா ளியம்புநாளிதுவென்றோர்ந்து
மன்றனதாள்கைமுற்று மறந்துகைவிடுத்துத்தற்சேர்
மின்னனையனையார்தம்மை வெருளுறவிலக்கித்தண்ட
மொன்றணிந்துரிமைநாயொன் றுடன்றொடர்தரச்சென்றானே. (உங)

சென்றுபேய்க்கரும்பொன்றேந்தும் தேசிகன்றிருமுன்வீழ்ந்திட்
டின்றுனதடிமையானே னிகத்துமாலிழந்தேனித்தண்
டொன்றுமென்னவையவத்தோ டொத்ததாலொழித்திட்டில்லே
னன்றுபின்றொடருமிந்நாய் நசையுமாற்றறியேனென்றாள். (உச)

ஆனையும்பரியுந்தேரு மரிவையர்குழாமுமம்பொற்
றூனையும்பணியுமற்றுஞ் சாற்றுவமுழுதுநீத்த
கோனையவ்வளவிலேற்றுக் கூட்டியோர்காட்டிற்கொண்டேய்த்
தானையர்வாராத்தானத் தீண்டுநில்லென்னச்சொல்லி. (உடு)

போயினரன்றுமுற்றும் புலர்ந்தவணின்றுன்வந்த
நாயிவன்றன்னேவிட்டு நழுவிடாதயர்ந்ததன்பா
லாயிரம்வினையுந்தீர்க்கு மன்னமட்கலத்திலேந்தித்
தாயினுமினியர்வந்தார் தவபலம்பெற்றுன்போன்றுன். (உசு)

அங்குறுகுளத்திலாட்டி யரியவெண்ணீறுபூசிச்
செங்குணத்தருமைகாட்டிச் சேந்தனுக்குரைத்ததோதிப்
பொங்குதீப்பசிநோய்தீரப் புசிப்பளித்துடனுங்கெய்து
மங்குறுத்தவந்தோய்நாய்க்கு மகிழ்வுடனிட்டாரன்றே. (உள)

ஐயமுற்றெழியத்தேற்றி யரசனென்றருமையாருஞ்
செய்யமாட்டாதவேற்றூர்த் தெருவினிலிவனேக்காட்டிக்
கையடகாக்கொள்வார்க்கோர் காசுபெற்றளிப்பேனென்றூர்
பையரவனையவல்குற் பரத்தையாமொருத்திவேட்டாள். (உஅ)

அவளிடங்காசொன்றேற்றிட் டன்னவன்றன்னேநோக்கி
யிவள்பணிசெயலிற்சோரே லியாஞ்சிலநாளின்மீட்பேஞ்
சிவனருட்செயலேயென்னச் செப்புபுசென்றூரஃதே
தவமெனமுயன்றங்குற்றுன் றனயனிலவஞ்சார்ந்தே (உசூ)

கணவனுத்தரவின்மாறுக் கன்னியிற்கருணைப்பான்மை
யணவுசற்குருசொற்றள்ளா வறிவுடைச்சிடனுனென்
றணவறுமுவகைவாய்ந்து சரதசித்திகளுந்தோய்ந்து
பிணமெனவீழாவீடும் பெறுமெனல்பிரான்சொல்லாமால். (ஊ0)

அங்கவள்பணியுமோராந் தக்கரஞ்செபிக்கும்பண்பு
மங்கலிறவமாக்கொண்டான் வாழ்வுமிஞ்சிடலினன்னுள்
பொங்கமார்தரநல்கன்னம் புசித்துநாயினுக்குமிட்டான்
சங்கரனருளுண்டாங்காற் றடைசெய்வாரொருவரின்றே. (ஊக)

தடியொடுசுவானந்தானுந் தன்றுணையாகக்கொண்டாற்
கடிகடாமுதலிலன்ன மளித்தபாத்திரமுஞ்சேர்ந்த
திடிவினுவரவொத்தேங்கா திருப்பினுந்தன்னேயந்தக்
கொடியனுளடகாக்கொண்ட கோதறக்குறிப்பதுண்டே. (ஊஉ)

ஒருதினத்திருளிராவி லுண்கலங்கழுவுநீரைப்
பெருநலத்தன்னேணூற்றப் பிறையெனவெளுத்துக்கூனன்
மருவுதாய்க்கிழவிமீது வாய்ந்ததான்மகளிற்சீர்த்த
திருவுருப்பெற்றுமூப்புத் தீர்ந்திளமையினுளானுள். (ஊங)

அவ்வியப்புணர்ந்தபோதே யவண்மகண்முதற்பல்லோரு
மிவ்விளம்பருவமின்னே னெச்சிலாலியன்றதென்று
லெவ்விதஞ்செய்யமாட்டா னெனக்குறித்திறைஞ்சினரச்
செவ்வியனெல்லாஞான தேசிகன்றிருக்கூத்தென்றுன். (ஊச)

அன்றிராமுழுதுமீங்கி யருக்கன்வந்துதிக்கும்போது
கன்றினைநீத்துப்போன காலிநேர்கருணையாசான்
முன்றில்வந்தவளைக்கூவி முன்னவடருங்காசிந்திட்
டென்றிருப்பணிசெய்தான்கொ லூறிலாதென்னக்கேட்டார். (கடு)

இத்தகைத்தவனென்றோரா தியான்பணிகொண்டேனென்றப்
புத்தமுதனையசொல்லாள் புலர்ந்துதாழ்ந்திறைஞ்சிநொந்தா
ளத்தவரிருவர்தாமு மருமைவாசகங்கள்பேசிச்
சித்தர்தம்பெருமானுந் திருவிடைமருதூர்சேர்ந்தார். (கசு)

குருவெனத்திகழ்வார்மேலக் கோபுரவாயிலுற்றூர்
தெருளுடைச்சீடனுசான் செப்புசொற்படியேகீழ்பான்
மருவுகோபுரத்தின்வாயில் வைகினன்மருதன்செய்த
திருவிளையாடல்கோடி தெரிந்தவர்செப்புவாரே. (கஎ)

மன்னனுயிருந்தோன்கற்பில் வனிதைபாலடகதாகிச்
சொன்னகுற்றேவல்செய்த துயரதோதொகைசொல்லொண்ணாப்
பொன்னழித்தவரோர்காசு புரந்தவெந்துயரோமேலென்
றுன்னவல்லவருஞ்சில்லோ ருலகினிலிருக்கலாமே. (கஅ)

வேறு.

ஓரிரவின்போ துமைகணவன்றூ னுடையுமி லவனுகிச்
சீரியமேலச் சிகரியுளார்பாற் சென்றமு திடுகென்று
னூரிலிரந்துண்டாலு மெனவனைவா யொருகோ வணமுளதா
னேரிலெனக்கண் டேற்றதுதகுமே நீயென வினிதோதி. (கசு)

என்னினுமிக்கோ ளெருசமுசாரி யியல்கீ முச்சிகரி
தன்னிலுளானன் னவனிடமேற்கிற் றரலா மமுதென்று
ரன்னியமில்லா னவனுமிரக்கின் றதுசொல வாங்குள்ளா
னுன்னிலையிவ்வா றென்றனனெனவெய் தோதி மறைந்தானே. (சஎ)

பற்குனனனையார் புகழிசையிகழ்சீர்ப் பத்திர கிரியுண்மைச்
சற்குரவன்சொற் சாரமறிந்தே தடியாற் றன்னருகே
நிற்குருவையு யடித்தனனுயிர்போய் நீட்டி நிமிர்ந்ததுடன்
றெற்குடையானைச் செறுமவனருளைச் சிந்தைசெய் துளநொந்தான். (சக)

தடியையொடித்துத் தளர்கிழவிக்குத் தமகிய நகர்மடவார்
வடிவருநுங்கைக் கலமுமுடைத்து வண்பொடி யுறுபையுங்
குடியிலிரத்தற் காதரமாகுங் கோவண முங்கொண்டே
யடியவர்முறையிற் றமிழ்கொடுபாட லநேக மொழிந்தானே. (சஉ)

இன்னிசையுஞ்சுவை யும்பொருளும்பொலி யெக்கா லக்கண்ணி
பன்னினனுசிரி யன்பழுதின்றிய பக்குவ னெனமகிழ்சீர்
தனனினனென்னினு நாய்தனதோரடி துய்த்துயிர் விட்டிடுதீங்
குன்னிவருந்திடு சோகமுநெஞ்சிடை யோர்வயி னுற்றதுவே. (சக)

தனையரின்மிக்குயர் நாயுயிரெவ்வழி தட்டழி வுற்றதுவோ
வினையிலதப்படு மோகமனூரிடை மேவிடு மோபிரமா
வனையவுடற்றர நோவுறுமோவென வரனரு ளினைநாடி
யெனைமிகநம்பு மதைக்கைவிடேலென வென்று மிரந்தானே. (சச)

பத்தினிமந்திரி யாதியராகிழ் பற்பலர் களுமெய்தா
மெய்த்திடபத்தி யுடன்றொடர் நாயதன் மேதகை யாரறிவார்
முத்தியடித்தத னுலதுசோர்வறு மூதுணர் வெய்தியதோ
ரத்தியுரித்தவர் கண்ணருளெய்திடி லார்கதி யடையாரே. (சடு)

வே று.

அந்தநாயுயிர்போய்த் தொண்டைமண்டலத்தி னணிகிளர்மங்கல மென்னுஞ், செந்தகைநகரிற் பொருண்மிகைபெறுமோர் செட்டிதன்ம கனெனச்சனித்து, நந்தலிலெழிலு முணர்வுமிக்கடைந்து நாளொருமே னியாவளர்ந்து, குந்தவேனிகர்கட் பார்வையும்பொலிவுங் கொண்டுநற்ப ருவமெய்தியதால். (சசு)

அத்தனிப்பருவம் வருதலுமருத னருட்டிருநோக்கினுலன்னுள் சித்தமதனிற்பத் திரகிரியார்தந் திருவுருவாதியசிறப்பு நித்தமுமுடன்ற கதைகளுநாயாய் நிகழுடனேயமிக்கான்றன் கைத்தடியடியாற் பிரிந்ததுமாங்குக் கவினுடற்பெற்றதுந்தோன்ற. ()

அவற்றைமற்றொருவ சொடுமுரைத்தில்லா ளவள்குலத்தினர்மணம் பேசத், துவக்குதோறிசையா மொழிமிகச்சொன்னுள் சோகமுற்றன்னை தந்தையர்தா,முவக்குமாறனக்கியா தெனவிரந்திட்டா ருளசிவதலந்தொ றுமேகிப், பவப்பெருக்கொழிக்க வேண்டுமென்றுரைத்தாள் பழுதிலா நலமெனமகிழ்ந்தே. (சஅ)

தாங்களுந்துணையா மகளொடுகூடிச் சகடமேற்பலபொருள்களுங்கொண் டாங்கனபரிவா ரங்கள்சூழ்தரவே யருணையாமாதையாதியவா வோங்கருட்டலங்க டோறுமொவ்வொன்றி லொவ்வொருதினமிருந்தொருவி யேங்கலுற்றவடா னெண்ணிடுந்தலமா மிடைமருதூரினிலேய்ந்தார். ()

அங்குவந்திடலு மம்மகடன்னூ ராமெனுமுணர்ச்சியளாகி யிங்குநின்றிடுமி னெனவனேவையு மிகந்துதான்றனித்தினிதேகித் தங்குபேரன்பார் பத்திரகிரியார் சரணநாண்மலர்மிசைப்பணிந்தாள் பைங்குழற்சிகிநே ரவளேநோர்பார்த்துப் பரிந்துயார்பகரென்றார். (நo)

ஐயநின்பிறகோர்சனியெனத்தொடர்ந்தன்றருந்துயர்விளைத்தநாயடியாள் கையதாலெனக்கவ்வுடலொழித்தனையிக்கவினுடற்கொடுவந்தெனைலு மெய்யறிவடைந்த வியனினைந்துவகை மேவியும்வீட்டிலுய்க்காமல் வையமேற்பிறப்பே னளித்தனனென்ன மருதன்மேற்சினந்தடனெழுந்தார்.

அவள்வலக்கையை விரைந்துதான்பற்றி யத்திருக்கோயிலுட்பு
கலு, முவகைதீர்ந்தவரா யவளுடன்வந்தா ரொருங்குநொந்தணுகினரப்
பெண், சிவனிவனெனவே கருதியீண்டியலுஞ் செயலினைத்தெரிமினென்
றனண்மெய்த், தவசிகாமணியா மவன்மகாலிங்கந் தன்னெதிர்சென்று
தாட்டிகமாய். (கூஉ)

பிச்சைச்சோற்றிற்கும்பிறப்புண்டோமருதாபேசெனக்கேட்டனனதனுக்
கச்சைவனெதிரித் தகவுலகெல்லா மறிதரச்செய்தனனென்றப்
பச்சைமாமயினேர் மகளையங்கியாரும் பார்த்திடவிழுங்கினனவனக்
கொச்சைநெஞ்சுடையா ரறிதரப்பழமை கூறியக்கோபரஞ்சேர்ந்தான்.()

வரகுணன்கரத்தான் மங்கலந்தரித்த மகளையுமருந்துமவ்விலிங்கங்
கரவறுஞானக் கனிங்கரவளைக் களிப்புடன்விழுங்கலோர்வியப்பன்
றரனருட்செயலோர்ந் தவளினத்தவர்தா மகன்றனரவர்தமூரருட்சீர்
விரவுநாயடியாண் மங்கலமெனும்பேர் மேயதுதொண்டர்கள்சொலவே.

அன்னவூரருணு சலத்திணுத்தரத்தி லவிர்வதாமன்னதோரைந்து
வன்னமேநாடு மரனடியவர்தாம் வரின்மிகமகிழ்வதம்மங்கை
முன்னம்வீடடைந்த துன்னுவாருணர்வின் முதலடியவரினுமவர்தம்
பின்னடியவர்தம் மடியவர்மேலாம் பெருமைநன்கிலங்கிடுமாதோ. (கூஉ)

அவ்விடைமருதூ ரினிற்சிலநாட்போ யருள்கிளர்பத்திரகிரியுந்
திவ்வியகுரவன் றிருவுளக்குறிப்பாற் சிவசொருபத்தினிற்கலந்தா
னிவ்விரண்டியிர்க்குமுதற்பெருந்துணையா யிலங்கிசைப்பட்டினத்தடிகள்
வவ்விவீடடைந்த சரித்திரமவர்க்கா வகுத்துளசருக்கமோதிடுமே. ()

அத்தியீருரிபோர்த் தவர்திருவருளு மருந்தமிழ்ப்புலமையுமமைந்த
பத்திரகிரியு மவற்றொடர்நாயும் பரகதியடைந்தவாறுரைத்தே
னத்தியபொய்யா மொழிப்பெயர்பூனைந்த நாவலன்றனதகநாணச்
சத்திவேற்குமரன் றடித்தினிதாண்ட சரித்திரஞ்சாற்றுவன்சிறிதே. ()

பத்திரகிரியார்சருக்க மூற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கஉஉசு.

முப்பதாவது
பொய்யாமொழிப்புலவர் சருக்கம்.

செய்யாளருணீடுபுகழ்த் தென்பாண்டிநனூட்டிற்
பொய்யாமொழியூருடொரு புலவன்பிறந்திட்டான்
மையான்மகிழ்நாலாங்குலம் வாழ்வார்தவமனையான்
மெய்யாலவனூர்ப்பேர்தலை மிசையேறமிளிர்ந்தான். (க)

அவன்வாலிபதிசையின்கதை யகிலஞ்சொலவில்லை
சிவநேசமுமருமைத்தமிழ் தேறும்பெருந்திறலு
நவமார்பணிபலபூண்பவர் நாணுங்கவின்மனையு
முவமானமின்மிடியின்றொடர் போவாமையுமுற்றான். (உ)

இனமுஞ்சிலர்பாலன்பொடு சென்றின்றமிழ்பாடித்
தனமேனுநென்முதலாகிகழ் தருதானியமேனு
மனம்வந்தவர்தாலேச்சிவன் மகிழ்வாலிடலெனவேற்
றனநேர்மனையவள்பாலிடு மதுவேதொழிலானன். (கூ)

அவனூபெல்கனவிற்றிக முயில்வேல்புனைமுருகோன்
றுவர்போலொளிர்தருவண்கவி சொல்லென்மிசையெனலுஞ்
சிவனுகியகோழிக்கொரு சிறுகுஞ்சனையாய்நிற்
கெவணம்புகல்வேனீயவ னிசையின்கிலேயென்றான். (சு)

அதுசொல்லியுமவனப்புல வன்பாலொருகனவி
லிதுமுன்புகல்கீரன்பட லேனேர்கிலேயென்றும்
விதுவார்சடையானல்லது வேறேர்கடவுளின்மேன்
மதுரம்பொலிகவிபாடிட மாட்டேனெனநின்றான். (கூ)

மனிதத்திரண்மீதுங்கவி வனையுந்துணிவுற்றோன்
பனிவெற்புடையாள்கைச்சிறு பாலன்பலகால்வந்
தெனிசைத்தமிழ்பாடென்று மிணங்காவிதமென்னிற்
றனிமைப்பரநிலேயோர்ந்தவர் தாமுஞ்சகியாரே. (கூ)

தஞ்சைப்பதியினிலோர்தரு மனேநேர்தகைவாணன்
விஞ்சைத்திறன்மன்னர்க்கொரு வேந்தாமெனவாழ்ந்தா
னஞ்சைப்பொருமிடிதீர்வது நாடிப்புலவன்போய்
மஞ்சைப்பொரவேயன்னவன் வண்மைக்கவி பெய்தான். (எ)

பொருவாதுயர்சுவைதோயகப் பொருட்கோவைசொலிடலு
மொருபாடலுக்கம்பொன்னெரு தேங்காயள வொப்பப்
பெருகார்வமொடதவிப்பிற பொருளும்பலபெய்தா
னருகோர்துணையில்லானவை கொடுவீதியணைந்தான். (அ)

அங்குள்ளபன்மிடியாளரு மவனைத்தொடர்ந்தேற்ற
ரெங்குள்ளவர்கீரென்றும் வினவாதுளிரங்கித்
தங்குங்கலிதருவாதனே தனையுங்குறியாமற்
பொங்குங்களியொடுநல்குபு போதப்புகழ்பூண்டான். (கூ)

மன்னனவனிவனுக்கிட லொருவண்மையதன்றன்
றின்னனிரவலருக்கிட லேமிக்குயர்வென்னச்
சொன்னர்பலரிவனிட்டது துதியின்விலையன்றான்
முன்னளிருந்தாங்கேகலி மொய்க்கும்படியுற்றான். (கo)

அருளில்லவர்பொருண்மிக்கடைந் தாலுங்கொடுக்கறியார்
பொருளில்லவரருளுற்றிடிற் போதக்கொடைபுரிவார்
தெருளின்பமுளாரோயிது தேர்வார்பிறர்தேறார்
மருளில்புலவன்றற்கென வைக்காதிடல்வியனே. (கக)

திதமுஞ்செயுமுயல்வின்படி நேரோர்சிறுகரூ
டிதமின்சொலுரைத்துச்சில நீயப்பெறுகம்போ
திதகம்பெயுலேக்காரிகை யுறுதன்மனையுன்னி
மிதமின்றியகடையோடழல் வெம்பாலையில் வந்தான். (கஉ)

அருமைத்தமிழ்மிகைகல்கியு மழனேர்கொடுமிடியா
லொருபொற்கொடியொடுநாடொறு முழலச்செயுமொருவன்
பருவப்பிரிவொடுசூழ்தரு பலமக்களையுதவித்
தெருள்கெட்டிளமறுகும்படி செய்யாமையொர்நலமே. (கங)

வே று.

வெய்யில்வாதனை யதுஞ்சகியாதவன் விளைந்துபோந்தருணத்திற்
கையில்வேன்முத லியபடைசிலகொடு கருமுகிலெனத்தோற்றும் [வேள்
பொய்யில்வேட்டுவக் குமரனுமுருக்கொடு பொருப்பெலாமுடைச்செவ்
பையில்பாம்புறழ் சினத்தனுநில்லெனப் பகர்ந்தெதிர்திகழ்ந்தானே.(கச)

கண்டுநெஞ்சகங் கலங்குபுநடுங்கினன் கம்பினேக்கவர்ந்தேகைக்
கொண்டுபோங்கொலென்றெண்ணினனென்செய்வான்குமரவேட்டுவமூர்த்தி
யண்டுதன்மைய னுகியீயாரென வதட்டலுமயர்ந்தாரூப்
புண்டுலங்குபாழ் மிடிச்சளத்தழுங்குறு புலவனென்றிசைத்தானே.(கஞ)

புலவனென்றசொற் கேட்டவனக்கெழிற் பொதியமால்வரைக்கோமா
னலதுநீயுமோர் புலவனுவிளங்குத லதிசயமெனவன்னுன்
கலகவேட்டுவக் குலத்திவன்கல்விநூற் கணக்கறிபவனுற்சொன்
னலமுணர்ந்துயி ரொடும்பொருளொடும்விடு நமையெனமதித்தானே. ()

மதித்ததன்றியத் தகவினுக்கியைந்ததாம் வார்த்தையொன்றுரையாமற்
கதித்ததோர்தறி யேயெனநின்றமை கண்டுவிற்கார்வேடன்
விதித்தநூல்வழி செந்தமிழ்ப்பாடனீ விளம்பலுண்டோ வென்னக்
கொதித்தநீர்க்கட லுடைப்புவியுணர்கவி கோடிசொற்றுளனென்றுன்.()

ஆயினென்பெயர் முட்டையாமென்மிசை யருந்தமிழ்க்கவியொன்று
தீயினுங்கொடி தாயவிப்பாலியின் றிறத்தொடுபகரென்றுன்
வாயியம்புமுன் பொன்புரைகள்ளியின் வண்பொறியுகுகானிற்
போயினுள்சிறு பேதைவேன்முட்டையைப் பேற்றலாரெனவந்தோ. ()

வேலமுள்ளதிற் றைக்குமேயென்றுரு வெண்கவியுரைத்திட்டான்
பாலலோசனத் தந்தையோர்வேடனுப் பார்த்தன்முற்போமங்நாள்
சிலவேடிச்சி யானதாய்தோட்சுமைச் சிறியவேணையிற்றுஞ்சுங்
கோலங்கொண்டவன் வினவியிப்பாடலிற் குற்றமொன்றுளதென்றுன்.

வில்லுக்குங்கதிர் வேற்குநின்றேட்குநான் வெருள்வதுண் டிலனே
துஞ், சொல்லுக்கஞ்சிடே னெனச்சொலிப்புலவனியான் சோர்ந்தவா
றுரையென்றுன், கல்லுக்கோரிறை யாமவன்கள்ளியிற் கனல்படுந்தான
த்தே, யொல்லும்வேலமுள் வெந்திடாதிருக்குமோ வுணர்ந்துசொல்லெ
னக்கேட்டான். (உ0)

குஞ்சின்மேற்கவி பாடிடேனென்றதிற் குறியமுட்டையைப்பாடற்
கொஞ்சிலானது கேட்டுளநாணிமற் றொருவரின்மையையுன்னி
நெஞ்சிணூடுசற் றுவப்புமுற்றிச்சிறு நீலவேடுவனேர்மைக்
கெஞ்சினேமென வருந்தலுமவனின்பே ரென்னெனவிவன்றன்பால். ()

வினவிச்சொன்னபி னம்பரத்தேகின்று விழுந்துளிவேமென்றுங்
கனலிற்றோயினு மெழுந்துதற்சுடுமென்றுங் கருதுபுகார்மேகம்
புனல்பெய்யாச்சுரத்தென்மகள்போதல்பொய்யாமொழிப்புலவோனுக்
கினமல்லாப்பகை வரின்செலவொக்குமென் றேயொர்வெண்கவிசொன்னன். (உ)

வேடன்பாடல்கேட் டப்பெரும்புலவன்றன் வெட்கமிக்குறும்வேளை
யாடன்மாமயிற் பரியிற்றன்கோலமா யரிவையரிருவோருங்
கூடவைகுறத் தேவர்கள்சூழ்தரக் குலவுசேவையதீந்தான்
பாடலாயிரம் பலசொல்வார்க்கதுநல்காப் பண்புமன்னவன்பாற்றே. ()

கனவிற்காண்டொறு மிகழுமப்புலவன்றன் கண்ணெதிர்பகற்போதி
னன்விற்காண்டலு மளப்பறுமுவப்பனு நன்குனதருள்வேண்டா
வெனதுமீதுனக் கித்தயையுற்றவா றென்னெனவியந்தோதி
யனகமாதவப் பயனெனத்தேறிவீழ்ந் தழுதுகைதொழுதானே. (உ)

இருட்பெருங்கட லனையதன்சிந்தையி னேதமுற்றறநீங்கி
யருட்பெருந்திரு வாக்குமெய்திடப்பெற்ற னஃதருள்குமரேசன்
மருட்பெருக்கறு மாதவரிதையத்தோ மறைமுடிவினிற்றூலை
பொருட்பெருக்குறு மலைக்குகைதோறுமோ புகுந்துருக்கரந்தானே. ()

புதுநலம்பெறு புலவன்றன்மனையினிற் போய்மனையவடன்பா
லிதுசொலாதிரண் டொருதினங்கழிக்கையி லின்மொழிக்கிளிபோல்வா
ளெதுகொலோவொரு பேறுபெற்றுளாய்முகத் திலங்குகின்றதெனென்றுண்
மதுரைமன்னனைப் பார்த்துவந்ததன்றிறம்வகுத்துநிற்குரைசெய்வேன்.

என்றுசென்றவன் சொக்கநாயகற்றொழுற் கேகும்வீதியிற்கண்டு
குன்றுமுற்றுளா னருள்பெறும்புலவனியான் குறித்துனைனெனச் சொல்கா
லன்றுவாழ்ந்தவ ராயமெய்ப்புலவரை யனையைகொலெனவஞ்சா
வன்றுலேக்கைமால் களிற்றினேயேகிகர் வழுதிமன்னுரைத்தானே. (எ)

அக்கணத்தினிற் சங்கநாவலர்குழாத் தணியுருச்சிலைவாய்ந்த
மிக்கதானமெய் தினருடன்புலவனவ் வியனுருக்களைநோக்கி
யொக்கவுங்களோ டியானுநுந்தமிழொடெ னுரையுமாமெனிலோரத்
தக்கசாட்சிமன் னனுக்குரைத்திடுமென்றோர் தனிக்கவிபகர்ந்தானே. ()

அந்தவெண்கவி யொலித்தலுமவைமுழு தாகுமாமெனச்சொல்லித்
தந்தஞ்சென்னிமுற் றசைத்தனமன்னவன் றன்மருண்டுடன்றழா
நிந்தவாறொரு வித்தைசெய்தனன்கொலென் றெண்ணினனெல்லோரும்
பைந்தணீர்மலி தருபொற்றுமரைத்தட்டப் பக்கல்வந்தனர்மாதோ. ()

வரலுமன்னனே நில்லெனச்சொல்லியவ் வண்டமிழ்ப்புலவன்முன்
புரவலத்திரள் களின்முனுளிருந்தவர்ப் போல்பவரிலரென்றுங்
கரவில்கற்புடைப் புலவர்வாழ்குவரெனல் கட்டுரையாமாகிற்
பரவுசீர்ச்சங்கப் பலகைமீதெனப் பகர்ந்தனனொருபாட்டே. (கூ0)

அதுவிளம்பலு மனைவருங்காணுற வம்மனைமிதந்திட்ட
திதுதெரிந்துடன் மன்னனென்பிழைபொறுத் திடுகவென்றவன்முளிற்
கதுமெனுவிழுந் திறைஞ்சினனதனையுங் கணித்திலனெனிலோர்பா
மதுரைமாநக ரிருந்தோர்கதையென மறையவும்பகர்வானே. (கூக)

அந்தமட்டிலம் மன்னனப்புலவனை யறிந்ததுமாராயிற்
சுந்தரேசுரர் கருணையேயாமெனச் சொல்லிடத்தகுங்கண்டீர்
மந்தபக்குவ மன்னர்தம்படையற மாய்த்தணிமனைமாரைச்
சொந்தமாக்கொடு தமைச்சிறைப்படுத்துநர் தோளைமட்டறிவாரே. ()

தமிழ்வளர்த்தவர் மரபினனென்றசொற் றவறிடாதிமித்தத்தே
யமிழ்தமன்னசொற் புலவனைச்சிவிகைவைத் தரசன்முன்முற்கொம்புங்
சிமிழ்குலாமுலை மனைவிபிற்கொம்புமாச் சிலர்துணைக்கொடுதாங்கி
யிமிழ்கடற்றிரைகை யேழுமோர்வாவியா மெழினகர்வலம்வந்து. (கூஙூ)

வேண்டுகின்றபல் செல்வமும்புலவன்றன் வெறுமனையிடஞ்சேர்த்திட்
டாண்டுவாகனத் தவனையுமுய்த்தன னங்ஙனஞ்செய்யாம
லீண்டுமெய்ப்புகழ் வாணனிற்கொடுத்திடி லேற்பவர்களுக்கீந்திட்
டியாண்டுகம்புகேழ் வரகளிப்பவருளா ரெனமுன்போற்றிரிவானே. ()

கனகமாதிய மிகைபடமனையினிற் காண்டலும்புலவோன்ற
னனகபத்தினி கன்வுகொலோவிதென் றையமுற்றனளன்னேன்
பனகபூடணன் விழிதருசேயருட் பயனெனச்சொலத்தேறி
யினநல்வாழ்வுமிப் பிறப்பினிற்பெறும்விதி யிருந்தென்றளிகூர்ந்தாள்.

அன்னவாழ்வயின் றறம்பலபெருக்கிமற் றையரிடமலிந்தேற்கு
மின்னன்முற்றெழிற் திருவருமொருமனத் தினரெனவுலகோது
நன்னலம்பொறுத் தறுமுகக்குருபர னட்டுறுகதிசேர்ந்தார்
சொன்னபாடலின் படியரசரினலோர் தோற்றரிதாயிற்றே. (கூசு)

போனகம்பெற வேமுயன் றுழன்றபொய் யாமொழிப்புலவோனை
ஞானவேள்வலி தினிற்றடுத்தாண்டரு ளனந்தரு கதைசொன்னேன்
பானலார்வய லருணையிலொருபெரும் பாவலன் கிளியாகித்
தேனளாவிய நீபமாலிகைப்புயஞ் சேர்ந்தவாறுரைப்பேனே. (கூள)

பொய்யாமொழிப்புலவர்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கடகூக.

முப்பத்தோன்றுவது

அருணகிரிநாதசுவாமிகள் சருக்கம்.

அருணகிரி நாதற்கென் றன்றெருகா வியஞ்சொற்றேன்
றெருளுறுமிப் புராணத்துஞ் சிறிதொருவா றுரைக்கின்றேன்
பொருளதனிற் றேர்மினெனப் புகன்றிட்டாற் புலவர்புக
ழிருள்படுமென் றஞ்சியதா லிஃதுணர்வார் களுமுளரே. (க)

பட்டினத்துப் பிள்ளையொரு பாவைகல்லாண் மோகத்தால்
விட்டிடுஞ்சுக் கிலத்தையவள் விழுங்கியது வையவர்தம்
மட்டில்புகழ்ச் சருக்கத்தால் வயங்குமதா லவள்சூலா
யெட்டினுட னிருமதியு மிகந்தொருசேய் பயந்தாளே. (உ)

பெற்றவளு மவடாயும் பெரிதுவக்கும் விதங்கண்டு
மற்றவிலே மகளிலொலா மகட்பெறல்போன் மகிழ்வதென்னென்
றற்றமதி வியப்புற்று ரம்மகவு மதன்மூத்த
நற்றகைய பெண்மகவு நாடோறும் வளர்ந்தனவே. (ஊ)

அம்மகள்பேர் தெரிந்தில்லே னருந்தவப்பே ருவருமச்
செம்மகனுக் கருணகிரித் திருநாமம் புனைந்திட்டா
ரிம்மகன்றன் வயதொருமூன் றெய்திடலும் பாட்டியென்பாண்
மைம்மருவு கண்டத்தார் வாழ்கயிலே மலைசேர்ந்தாள். (ச)

அவள்போயாண் டாயதற்பி னவ்வூர்க்கோ யிலில்வாழுஞ்
சிவனுர்தம் மங்கலமச் சிறுமிதனக் கணிந்திட்டா
ரிவனேழாண் டிடைச்சேயா யிலங்குகையி லெழிற்றுயுங்
தவர்மேன்மை நன்குணர்தன் றுய்போன வழிநோக்கி. (ஙு)

தன்மகட்குத் தான்பெற்ற தவபலத்தின் வகைகூறி
நன்மகன்சொற் றட்டாது நடப்பதே நன்குறுத்திப்
பன்மறைக்கு மேலாய பரத்துவம்பெற் றிருந்துமொரு
வின்மலையாக் கொண்டபிரான் வியனுலகின் மேவலுற்றுள். (சூ)

தாய்போன துயர்சிறிதுந் தம்பிமனத் துதியாம
லாய்போதத் தினளாகி யக்காண்மிக் காதரித்தாள்
சேய்போலு மெழில்வாய்ப்பத் திகழ்பருவம் பெற்றிடலும்
பேய்போலு மனத்தினுய்ப் பெருங்காமக் கடல்வீழ்ந்தான். (எ)

தன்றமக்கை சலியாமற் றரும்பொருளைத் துணைக்கொண்டு
மின்றணேரு ரிடைநல்லார் வீடுதொறும் போய்ப்புணர்ந்து
குன்றலின்றி வளர்சூட்டாற் குட்டநோய்த் தொடர்புற்றும்
பொன்றணையே விழைகின்றூர் புணர்ச்சியொழிந் திலன்மன்னே. (அ)

அபபருவந் தனிற்றமக்கை யாபரணங் களும்வீடுங்
கைப்பலபண் டமும்விற்றுக் கனங்குலைந்து மிடிமீறி
யொப்பவளா மற்றொருத்தி யுறுமனையின் சிறுகுச்சி
லெப்படியோ வமுதுசமைத் திவன்றனக்கோர் நாளிட்டாள். (கூ)

அன்றுமவன் வழக்கம்போ லாடகநல் கெனக்கேட்டா
னின்றுமுத லெனைச்சேர்வா யானுமவ ரினத்தினளே
யென்றுரைத்தா ளக்கணமே யாக்கையின்மேல் வெறுப்பெய்திக்
குன்றுறழ்கோ புரத்தேறிக் கூசாமற் குதித்தானே. (கo)

குதித்தவன்முன் னங்கமருங் குமரனெரு குருவாகு
மெதித்தலைவ னெனமுழுநீற் றெழிலாதி யனகாட்டி
விதித்திறத்தா லுய்ந்தனையிவ் விதஞ்செய்தன் முறையன்றென்
றுதித்தபகல் போன்மனத்தி லுணர்வுண்டாம் படிநோக்கி. (கக)

தக்கபுகழ்க் கவுமார சடாக்கரத்தின் முறைகூறி
மிக்கநுட்டித் திவாயேல் வேற்பெருமான் மயின்மீது
பக்கலுறு மிருவரொடும் பரிந்தெதிர்வந் தருள்வானென்
றக்கணமே யாங்கிலங்கு மணியுருவிற் கரந்தானே. (கஉ)

குருவாகி வந்ததுமக் குமரனே யெனத்தேறி
யொருவாம லிரவுபக லுருச்செபித்துத் தியானித்தான்
பெருநோய்தீர்ந் தவிர்நாளிற் பின்னுமொரு தவனுய்வந்
தருளார்மெய்த் திருவேட மளித்துமறைந் தனனம்மா. (கங)

கனவிரண்டி னனவிரண்டிற் கண்டவரு பவமெல்லா
மனதறிந்த களிப்பளித்து மற்றையவர் கண்காண
வனகவிளை யாட்டியற்று மதுகிடையா மையினேங்கித்
தினமும்வெகு வாமுயன்று செழுந்தமிழாற் றுதிசெய்தான். (கச)

நோய்மாறி யெழின்மலிந்து நோக்குநொல் லாம்விழைசீர்
வாய்மாற னெனத்திகழ்ந்தான் மாட்டணுகிப் பலகான்முன்
றேய்மாதர் செயுநயத்திற் சோராமெய்த் துணிவுற்றுன்
பாய்மாவு னசைவெறுத்துப் பசும்புனுகர்ந் துயல்போன்றே. (கடு)

எவ்விரதங் களுமரிதன் றேந்திழைமின் னர்வலில்
வெளவிடினு மருளாமை மாவிரத மெனச்சொல்வா
ரவ்விரத்தி பெருங்காமத் தருணகிரிக் கமைந்ததெண்ணிற்
செவ்வியவேற் படையேந்துஞ் சிகிப்பரிவேள் செயலாமே. (கசு)

வெய்யின்மலி தருநாளின் மேகமழை பெய்தாற்போ
னெய்யிடுதீ யனையதுயர் நெடிதுறுமத் தவன்காணத்
தொய்யின்மென்றே ளிருவரொடு தோகைமயிற்பரிமீது
கையிலணி வேன்முருகன் காட்சியினி தளித்தானே. (கஎ)

காண்டலுந்தன் முயர்முழுதுங் கண்டில்லான் கருணைமலிந்
தாண்டருள வந்ததெண்ணி யளப்பரும்பே ருவப்பார்ந்தான்
வேண்டன்முழு மையும்பெறலால் விண்ணவரின் மேன்மையுற்று
நீண்டவனன் முகன்முதலோர் நிகழ்த்துபுகழ் பொறுத்தானே. (கஅ)

தானேமெய் யருள்வாசஞ் சகமுழுதுங் கமழ்ந்ததுசெந்
தேனேயென் றினித்தமொழித் திருப்புகழா தியபனுவல்
வேனேயற் கணிந்திட்டான் மெய்ப்புலவர் வெள்ளேறிற
மானேர்வா ளருள்சான்று மதித்துணர்ந்து பகர்வனவே. (ககூ)

நோயினருங் குறையினரு நூறுநூ றுச்சிகரிச்
சேயினெதி ரிவன்சான்றுத் தெண்டனிட்டுப் பயனெய்திக்
காயிகத்தொண் டியற்றுநரும் கனகமுத லியகொணர்ந்து
வாயிலினிற் குவிப்பாரு மலிந்துபணி வாய்ந்ததுவே. (உo)

கோபுரத்தை யொட்டியொரு கோயிலுண்டா யதுகுன்று
லாபுரப்பா னங்கிசரா மரசர்களு மதித்திட்டார்
நாபுரப்ப தருமையென நவிலுநூல் பிழையாதம்
மாபுரத்திற் சிலர்கணிகை மகனெனவெள வாருமுற்றூர். (உக)

அரியதமிழ்ப் பெருஞ்சந்தத் தருணகிரி தனைப்போற்றும்
பிரியமுளார்க் கானந்தப் பேறும்வசை பேசுமிகற்
குரியவருக் கெந்நாளு மோவாத வுறுகண்ணுங்
கிரியனையன் மகளீன்ற கேகயவேள் கொடுத்தானே. (உஉ)

அந்நாளத் தவன்றமக்கை யகத்துயர்முற் றறநீங்கிச்
செந்நாவாற் றுய்பகர்சொற் றிறமென்னுந் தெளிவெய்திக்
கைந்நாகத் துரிபோர்த்தார் கயிலைமலைத் தலைசேர்ந்தாள்
வெந்நாகக் குணத்தோரும் வியந்துமிகப் புகழ்ந்தாரே. (உங)

ஆன்மநிலை வத்துநிலை யகிலநிலை முழுதுணர்ந்தும்
பான்மணக்குஞ் சொற்றமக்கை பரகதிசேர்ந் ததிற்களித்தும்
வேன்மருவு தடந்தோட்சேய் வியனருட்சீர் மேவுமவன்
றுன்மனிதக் குலமுறையிற் சற்றழுது தேறினனே. (உச)

அங்குநடந் தனவாய வதிசயமெல் லாமறிந்து
பங்குபங்கா விரித்தோதும் பக்குவமுள் ளாரெவரோ
கொங்குநாட் டிறையுதவுங் கொடிவாட்கை யினனுளத்திற்
றங்குமா ணவக்கசடு தவிர்ந்துய்கை சாற்றுதுமால். (உடு)

வே று.

ஓங்குகச்சியூர் வயிணவவேதிய னொருவன்
றீங்குதீர்நெடு மால்வளர்தலந்தொறுஞ் செல்வான்
றூங்குசக்கர கிரியெனவருணைய தனிற்போ
யாங்குகோபுரத் தமர்புலவனையுநன் கறிந்து. (உசு)

பித்தன்றன்சிறு மகன்பெருமாளெனப் பேசும்
வித்தகத்திருப் புகழ்சிலவினவலால் வெதும்புஞ்
சித்தமெய்துபு தென்றிசைவழிக்கொடு சென்று
பத்தர்போற்றிய பலதலங்களிற்சில பார்த்து. (உஎ)

பூமுடித்தரிக் குதவினுள்வில்லிபுத் தூர்புக்
கேமுருதவை கானசவிதிப்படி யிறைஞ்சிப்
பாமுழக்குநாச் சக்கரவர்த்தியாம் பனவன்
மாமுகப்பிரா னெனக்குலாவிடல்வினுய் மகிழ்ந்து. (உஅ)

தானங்குற்றரு ணையிலறிந்திட்டமை சாற்றிக்
கூனல்வால்வளை யுலவுதென்குருகையா தியவா
மானமார்தலத் தாவன்மேலிட்டதால் வணங்கிப்
போனபின்னவன் றன்னுளத்தாணவம் பொங்கி. (உக)

விருதுவாகனம் வேண்டியபரிசன மிகக்கொண்
டெருதுபோரினுக் கெழுதல்போன்றருணையி லெய்திக்
கருதுமெண்ணம தனையவூர்மன்னிடங் கழறி
யிருதரத்தரு மொருதலத்தெய்தின ரன்றே. (கஐ)

எண்ணில்பாவலர் செவியறுத்திட்டவே தியனுங்
கண்ணிலாமதிச் சடிலர்சேயருள்பெறுங் தவனும்
விண்ணினீடிய சிகரிவாய்வாதிடும் விதத்தைக்
கண்ணியாங்குவந் துற்றனர்கணிக்கரும் பலரே. (கக)

அந்தணன்றனைக் காண்டலுமருணையின் றவநேர்
மைந்தன்கைகுவித் திட்டுமாசீர்வதி யாமல்
வெந்தசிந்தைய னுயவன்விளைந்துநீ தொடுத்த
சந்தவான்கவி களிலொன்றுசாற்றுதி யென்றான். (கஉ)

உடனன்னேன்சிறு மதிப்புலவோருரைக் கரிதாக்
கடலேநேர்விரி வுள்ளதாக்கழறினன் கருத்திற்
றிடனினைத்ததி சயித்தும்வெற்றிலேச்சரு டினவெற்
கிடவந்துள்ளவ னிதுபுகன் றிடுவனென் றிசைத்தான். (கங)

அச்சொற்கேட்டலு மறுமுகக்குருபர னடிமை
யிச்சொற்பேசுநீ யெங்ஙனங்கவிபுகன் றிடுவாய்
பொய்ச்சொற்புல்லனென் றிகழ்ந்தனன்புரவல னெழுந்து
மெய்ச்சொற்சீலரா னீரிவண்பொரல்விதி யன்றுல். (கச)

நூறுபாடன்மட் டொருவர்முன்னுவலமற் றொருவர்
தேறுசெம்பொருள் விவரமாச்செப்பிடல் வேண்டு
மீறுவார்கையான் மெலிபவர்செவிகளை விரைவிற்
கீறுதற்றுணை யாகுவேனெனக்கிளத் தினனே. (கஞ)

கழறல்கேட்டலு மியமகவந்தாதியாங் கவினூன்
மழவரூக்குகன் மிசைத்தவன்றுவக்கினன் வந்தோ
னழகிதென்னுகல் லுரைகவிசொலுந்தொறு மறைந்தான்
பழகுந்தேற்றமன் றிரண்டுமெய்யருட்பெரும் பண்பே. (கசு)

பாதிதீர்ந்துமேற் பிரபந்தகடக்கையிற் பகைத்த
வாதிதான்செயம் பெறுங்கொலென்றஞ்சுபு மற்றோன்
சோதிவேலனைக் கருதலும்வேறோர்தொந் தமின்றிக்
காதிகழ்ந்ததோர் கவிதையங்குதித்தொலித் ததுவே. (கஎ)

அதன்பொருட்சொலுந் திறமிலனுகியக் தனன்றன்
மதந்தவிர்ந்துதோற் றேனெனவாய்கொடு பகர்ந்தா
னிதன்பெருந்தகை யெதிர்த்தவன்மட்டறிந் திட்டான்
கதங்கொடங்குளார் செவியறுப்பதுகட னென்றார். (கஅ)

ஓதல்கேட்டருந் தவனென்பாற்றோல்வியும் றிடுமேற்
காதறுப்பவ னேயவனுயினுங் களைந்திட்
டேதநல்கிடே னியாவருமறிதர யானின்
றீதலாகியன் னவன்செவிவாழ்கவென் றிசைத்து. (கசு)

வாளைவாங்கிமன் னவனிடங்கொடுத்தனன் மாற்றார்
தோள்ச்சென்னியைத் துணித்திடுமவன்மிகத் துதித்தான்
வேளைநம்பின னக்கவிப்பொருளையும் விளம்பி
நாளையென்றிடா தகன்குறைக்கவிகளு ரைன்றான். (சஎ)

இவற்றிற்குந்தகு முரைசொலியிசைத்தவா றெழுதித்
தவற்கொர்பேரரு ணேசனென்றமைத்தவன் றமிழ்ப்பாட்
டெவற்றிற்கும்பெரி தென்றொருகவிதைதன் கியம்பிக்
கவற்றிடாதுயிர்க் கிதஞ்செய்வோனுகியக் கவிக்கோன். (சக)

சிறிதுகாளவண் வசித்தருணேசனுஞ் செங்கை
மறியுளாற்றொழும் பிரபுடதேவமன் னவனுஞ்
செறியுமன்பின ராயபின்றன்னகர்ச் சென்று
பொறிகுலாமணி மார்பனைப்போற்றிசைத் திருந்தான். (சஉ)

ஒன்றுமாய்ப்பல பொருளுமாம்பரத்தரு ஞறினுங்
துன்றுகாருணி யத்தளவேவலி தோயு
மென்றுசொல்வதற் கெழிலருணேச்சிக ரியின்முன்
னன்றுவாதிடு மிருகவிப்புலவர்சான் றுமே. (சஊ)

மன்னர்போற்றிய வண்டமிழ்ப்புலவனைச் செயித்தா
னென்னவேந்தனு மேனையமானிடர் பலரு
நன்னலத்தரு ணேசனைத்துதிசெய ஞடி
நின்னலோடழுக் காறுமிக்கெய்தினர் சிலரே. (சச)

அருணையூர்விடுத் தவன்பலதலந்தொறு மணைந்து
பொருணயம்பெறு சிற்சிலகவிகளாற் போற்றித்
தெருண்மனந்தரு செந்திலிற்றிருப்புகழ் முழுதுங்
கருணைநீர்மலி கந்தவேள்களிப்புறப் படித்தான். (சடு)

அவன்களிப்புணர்ந் தடியனேன்பகரிவை யனைத்து
மெவன்சொலுமன் னவற்கென்பேறிதெவென் றிரந்தான்
சிவந்தவேலனங் ஙனஞ்செய்வே னெனச்சொலாதிருக்க
வுவந்திலானெனைக் கடலிலேதிருவியிட் டனனே. (சசு)

அங்குவிட்டன பற்பலர்கொண்டன ரருட்சீர்
தங்குமேற்றிசை யிலஞ்சியிற்குகற்றொழு தழுதா
னெங்குபோயினு மினியொர்காற் சேருமென் றிடலும்
பொங்குமார்வமுற் றவன்றனூர்புகுந்தன னடந்தே. (சஎ)

வரவுகாண்டலும் பற்பலர்மகிழ்ந்தனர் சில்லோ
ரரவினேர்படு தேரையின்கூட்டமொத் தயர்ந்தா
ரிரவினும்பகற் பொழுதினும்பழமலை யிடம்போய்க்
கரவிலியோகஞ்செய் தானெனக்கழறுந ருளரே. (சஅ)

வே று.

அந்நாளிலருணகிரிக் கரசன்முதலினர்தாமு மருமைகூறிச்
செந்நாவாற்சொன்னபடி நடக்கும்விதஞ்சகியாமற் சிந்தைநொந்து
பைந்நாகம்புனைதியோன் சம்பந்தாண்டானெனும்பேர் படைத்தபாவி
மைந்நாகமலைபோல்வான் மலைமகளைத்தினங்கருதும் வழிபாடுள்ளான். ()

மன்னவன்பாற்றினந்தினமு மருணகிரிதனையிகழ்ந்து மதியாவண்ணஞ்
சொன்னதன்றியுமையவளை நீகாணச்செய்வனென்றுஞ் சொல்லியவ்வா
றன்னவன்கந்தனைக்காட்ட வல்லான்கொலோவினவி யறிதியென்ரு
னின்னவிதஞ்சிற்சிலகாற் கழறியுமாங்கவன்முயலா திருந்தானன்றே. ()

கலைப்பார்தாங்கலைக்கும்வண நாடோறுஞ்சலியாமற் கலைப்பாராகின்
முலைப்பாலும்வேம்பாகு மென்றபழமொழிப்படியே மூவாவென்றிச்
சிலைப்பார்த்தனையனைய பிரபுடதேவனுக்கன்னன் செப்புஞ்சொல்லான்
மலைப்பாவைதனைமுருகோன் றனைவிழிநேர்காணுமிச்சை வாய்ந்ததாலே.

மந்திரியைக்கோபுரத்துக் கங்குளமாதவனுமந்த வாற்றிற்கொப்புந் [றி
தந்திரஞ்செய்திடவிடித்தா னவன்போயதவனடிக்கீழ்த் தாழ்ந்துபோற்
முந்தியுமையவளையெதிர் காட்டுவதற்கவனிசைதன் மொழிந்துவேண்டப்
பிந்திமுருகோனையுநான் காட்டுகின்றேனெனவொருசொற் பேசினனே.

அந்தவாறரசனுணர்ந் தானந்தக்கடற்படிந்திட் டவனைநோக்கி
முந்தையுரைத்தபடி யுமையவட்காட்டுதியென்றுன் முயன்றுபார்த்துக்
கந்தவேளாடலினும் றடைப்பட்டாளென்னநிசங் கழறிச்சோர்ந்தா
னிந்தவாறேயவன்மே லெனற்சான்றுமெனப்பலரு மியம்பினரே. (நிஉ)

மற்றைநாளருணகிரி யங்குளதோர்மண்டபத்தின் வடகீழ்த்தூணி
லிற்றையேவரவேண்டு மெனைக்குகனேப்பூசித்தா னிமயவல்லி
யற்றைவேண்டிடுமவற்காத் தடைசெய்தாண்மயிற்பரியா லதனைநீக்கிக்
கற்றையாங்கிரணங்க ளேழ்தினையுந்துளைத்தொளிரக் கண்டானன்றே.()

கண்டவுடன் வெளிவந்தம் மன்னனைக்கொண் டொருகண்ணுற் கா
ணீயென்றுன், விண்டமொழி குறியாம லிரண்டாலும் பார்த்திழந்தான்
வேற்கை வேளைத், தண்டமிழ்ச்சீ ரருணகிரி யிரந்தவைபெற் றிடக்கொ
டுத்தான் சகத்திரக்கான், மண்டபமா தியபணிகள் செயற்குடன்பா
டிற்றரசன் வணங்கினனே. (நந)

அக்கணமே யங்குள்ளா ரனைவோருந் துணிந்துசம்பந் தாண்டான்
றன்னைப், பொக்கனெனப் பழித்திட்டார் மலைச்சாயைக் கப்புறத்திற்
போவேனென்ற, மிக்கசவதப்படிபோ வதற்கிசைந்து மவன்சிகரி மே
யான் றன்பாற், றக்கபல ரறிதரப்போய்க் கற்பகத்தண் மலர்கொணர்ற்
றவன்று னென்றுன். (நசு)

அன்னவன்சொற்கேட்டதனுக் கியாதொன்றுமருணகிரி யறையானகி
மன்னனைப்பார்த்தம்மலர்கின் றிருப்பணிமுற்றுறுநாளில்வழங்குவேன்கா
ணின்னவனையிக்கணமே வெளிப்படுத்தியிவன்வசித்த விடத்தோர்வாவி
நன்னயத்தாற்செய்தங்நீ ராற்குகனுக்கபிடேக நடத்தென்றனே. (நஎ)

அனியாய மாவலிதிற் பகைத்துயர்ச்சி யிழந்தசம்பந் தாண்டானைப்
போ, தினிநானிங் கிருக்கும்வண மிரந்தாலுஞ் சம்மதியே னிவன்போய்
விண்ணூர்த், தனிவாச மலர்கொணர்நாள் வந்துபோம் படியொருசொற்
றருதியென்றுன், முனிவோன்சம் மதந்தெரிந்தே மன்னிசைந்தா னவன்
போனன் முகச்சோர்வுற்றே. (நஅ)

அப்பணிசின்னளினிறை வேறியதாலம்முனிவ னளியுண்டாடாச்
செப்பணிமாமலர்கொணர்நா ளின்னதெனத்தெரிவித்தான் செகமுற்றூர்
தெப்படியுமிடர்செயவே குறித்தவிகலவனுளனென் றெண்ணிடாம [ந்த
லொப்பறுபைங்கிளியுடற்புக் குள்ளவுடல்சிகரியில்வைத் தோடினனே.

போனவிதமாங்குமுசம் பந்தாண்டான்றுன்வணங்கும் புவனியாற்றோர்ந்
தினமுற்றுனருணகிரி யெனப்பலருமறிதரச்சொற் றிறைமுன்னேகி
வானமலர்தருதுமென்றுன் வல்விடந்தின்றிறந்தானவ் வஞ்சப்பாவி
யூனதுகோபுரத்தின்மிசைக் கிடப்பதனற்கோயிலிற்றீட் டுற்றதென்றும்.

அத்திறமெற்கில்லையெனச் சொலநாணியவமதிப்புற் றழிந்தானென்றுஞ்
சித்திமுற்றும்பெற்றுன்போற் செய்ததிருட்டின்றுனன்றுத்திகழ்ந்ததென்
பத்தியுளாரறியநிச மரணமுறிற்சமாதிசெயப் படுவானென்றுங் [றும்
தத்திசமாச்சுவதுவே தருமமென்றும்பலவாறு சாற்றினனால். (சுக)

பேயுலகமென்கைமெய்யாப் பலர்தாமுமவன்வாய்ச்சொற் பெரிதுநம்பித்
தீயுளந்தவுடலையிட்டுத் தகித்திட்டார்கிளியாஞன் செம்பொனூரின்
மேயுரைக்குந்தமிழ்மொழியால் வியந்தமராரிந்திரன்பால் விளம்பவன்ஞன்
வாயுபசாரம்பலசொற் றதன்விருப்பப்படியேயோர் மலரீந்தானே.(கூஉ)

அம்மலர்கொண்டதிரும்பும்போதேதான்வைத்தவுட லழிந்ததோர்ந்து
கைம்மலைமாமுகற்கிளையான் றிருவுளப்பாங்கெனத்தேறிக் கவலைநீங்கிச்
செம்மலைச்சாரலினருணை நகராளுமன்ன னிடஞ் சேர்ந்திட்டப்பா
லிம்மலர்தானிமையாரூர்த்தருமலொன்கடன்றீர்ந்ததெனச்சொல்லிற்றே.

சொன்னவுடனவனிந்த வுடற்புகுந்துபோனவிதந் துலங்கியந்த
மன்னன்வெகுவாவருந்தி வாளெடுத்தக் *கொடியவனை மாய்க்கப்போ ஞ
னன்னவனைக்கிளியழைத்து நீபதறேனடப்பவெலா மறிதியானின்
றின்னவுடலிடைவசிப்பக் காண்பதுவுங்குகனருளே யென்றதன்றே. ()

அவ்வசனங்கேட்டரச னுன்றனக்குமென்றனக்கு மானநேய
மிவ்வளவுதானுனென்றிரங்கினதற்கதுதா னின்னஞ்சின்ஞ [றுன்பா
லொவ்வருஞ்சீர்க்கோபுரத்தில் வுடலினத்தோடிருப்பேனங் குறுந்தோ
லெவ்வமில்சொற்பகர்வேனென் றிசைத்துடன்கிக்கியென வாங்கேகிற்றம்மா.(சுடு)

அங்கிறந்துகிடந்துயிர்த்துப் பறந்தோமெசுவலி யடைந்தென்னப்
பைங்கிளியெல்லாங்களித்துப் பழகுகலுமவற்றினது பகர்ச்சியாவுஞ்
செங்கிரிநேர்குமரகுரு பரனருளாற்றேறிமிகுந் திருத்திசெய்தா
னெங்கிருந்திட்டாலுமருட் பேறுடையாரானந்த மெய்தன்மெய்யே. ()

தென்னருணைக்கோபுரத்துக் கிளிகளுடனென்றுகித் திகழுமன்னுன்
றன்னருமையறிந்தபெரும் தவர்வரினுமன்வரினுந் தனதுவாயாற் [ற்றே
சொன்னகவியெழுதிநுவன் றுணரவல்லார்வரினுமின்சொற் சொலலிம
ரின்னதெனத்தெரிபாத வாறிருந்தானடந்தகதைக் கெண்ணின்றுமே. ()

பாகசாதனனகர்போய்க் கண்டமதில்வாழுமிச்சை படைத்திடாமற்
சிகரீர்ப்புவித்தலையாந் திருவருணைக்கோபுரத்திற் றிகழ்பைங்கிளை
தேகமதேயான்மாவென் றுணருமதத்தினர்பகர்சொற் றிருட்டின்கூற்றுய்க்
காகமெனக்கலந்துவக்கும் புலவோர்தங்கண்மணியாய்க் கவின்றதன்றே.

அச்சமணனிவ்வளவிற் பகைதீர்ந்தென்றுமகிழ்ந் தமைந்திராமற்
பச்சணிக்கிள்ளையையரசாம் பிரபுடதேவனைப்பிணந்தற் பழிக்கின்றுரை
நிச்சலுமச்சுறுத்திவணங் காவிடிற்கொல்லுதல்குறித்து நீலக்காளி
நச்சரவப்பணியாதி யொடுதோன்றத்தகுமுயற்சி நடத்தினானே. (சுசூ)

சிரியர்தாஞ்சிறிதுமொவ்வாத் தீமைகளுமவன்றுணிந்து செயுமங்காளிற்
கூரியவேற்குகன்றனது கிளியிடமென்றுய்துதிநீ கூறுகென்று
ஞரியமாதியமொழிகள் பலகலந்திட்டவள்பெருமை யறைந்தப்பாலங்
காரிதருபாலனறு முகப்பெருமாளென்றுர்கவி நவின்றதன்றே. (எ0)

* கொடியவன் - சம்பந்தாண்டான்.

ஆயிரஞ்சென்னிகளிரண்டா யிரங்கரங்களொடுகாளி யாண்டான்றன்பால்
வாயிடிபோற்றெனிதரவந் ததட்டுதலுந்திடுக்கமுற்றுன்மடியக்கொன்று
போயினடன்வினைதனையே சுற்றுமெனும்பழமொழிதான் பொய்யாமெய்யே
யாயினதென்றுலகிலுறு நல்லோரெல்லோருமகிழ் வடைந்தாரம்மா. ()

ஆறுறுயிரந்திருப்பு கழும்வகுப்பெண்ணன்குடனந் தாதியொன்றும்
வீறுர்வேல்சேவன்மயில் களைப்புகழ்ந்தவிருத்தமுமுன் விளம்பிமேனி
வேறுயபின்புகந்த னலங்காரமறுபூதி விளக்கிச்சில்பாட்
றேறுமதின்றிவன்மூக் கால்வரைந்ததாயுமுல குரைக்குமன்னே. (எஉ)

தந்திமுகனைக்குகனை யெனவாத்தாள்குறத்தியெனச் சமயநோக்கி
வந்திடும்பாடலும்பலவே வான்மலர்சூடியமகுட மன்னனுவி
யிந்திரனூர்புக்கதற்பி னவன்மகன்றனரசாட்சி யினுஞ்சின்னுள்போய்ப்
பந்திபடுமினத்தோடு வடதிசைநோக்குபுகடிதிற் பறந்ததன்றே. (எங)

சென்றுகயிலாயவெற்பின் மேற்றிசையிற்கந்தகிரிச் சிகரத்துற்றுப்
பொன்றுதலுறுமுனிவோர் பலர்வினவஞானநு பூதிபாடிற் [ண்டா
றன்றுகவேளழைத்துத் தனதுவலத்தோளின்மிசை யமைத்துக்கொ
னின்றுமவ்வாறிருக்கின்ற தெனவுலகிற்பலர்தாமு மிசைக்கின்றுரே.

அத்தகையவருணகிரி தனைக்குறித்து முருகோனென்னறிவுசான்று
வெத்தனையோதாமொருசொ லிசைத்துள்ளானதைப் பலபாட்டிடத்திற்சற்றுஞ்
சித்தமொல்காதுரைத்துள்ளே னின்றுவரை சந்தேகந்தீரவில்லை
பொய்த்தமொழியஞ்சாமற் புகலுமவரெவரேனும் புலியர்தாமே. (எரு)

வாக்கிலுயர்ந்தோனருண கிரியேயென்றெருபுலவன் வகுத்துச்சொன்னன்
றேக்கியசீர்த்திருப்புகழைக் கேட்கின்றசெவித்திறமோர் தெளிஞன்செய்யு
ளாக்கியவன்பகர்பாவென் றறிவில்லார்பலருரைப்ப வதனிற்சேர்த்தா
னுக்கிழத்திமகிழ்வண்ணப் புலமையுளார்நன்குணர்ந்து நவிலற்பாற்றே.

பூவிலெவனேவொருமந் திரவாதிகந்தனபூதிறுலைத்
தாவில்பெருமந்திரமென் றுணர்ந்துகவிக்கெல்லாஞ்சக் கரந்தாபித்தா
னுவதனுலதையுருவேற் றிடுமொர்விடன்றிருமதுரை நகரின்பாங்கர்
மேவிடுமோர்சிற்றூர்க்கு வெற்றிலேதின்றக்கவிகள் விளம்பிப்போனன் ()

போமவன்றன்பொன்னுமணிப் பணிகளும்பட்டாடையுங்கொள் பொலிவையோர்ந்
தீமனத்தத்திருடர்நெருங் கிடத்தனைபட்டுருவ விடுஞ்செவ்வேலாவென் [கு
ருமவொலியுடனெறிவெற் றிலேக்காம்பாலுரம்பிளப்புற் றவர்கண்மாய்ந்
நாமநெடுங்கடற்புவியி லிக்கதையைத்தினநவிலு நரர்பல்லோரே. [தார்

சிவகாசியூரிலொரு பரதேசியருணகிரி செஞ்சொற்பாடற்
றவயேத்தொடுதிப்போன் றனையமித்தோனெருவனுய்யத் தகுஞ்சொற்சொன்ன
னவனுதுகுலகுருவங் தவன்சிகைநீப்பதின்முயன்ற னவ்வாறுற்றிற்
சவமாவாயென்றவன்சொல் லியுமுயன்றக்கண்மிறந்தான் சரதமாதோ.()

பூதவேதாளவகுப் பினைமிகச்சொல்சங்கரப்பேர்ப் புனிதன் சோணைட்
டேதமில்வேளாளனடி யவர்க்கடிமைத்திறஞ்செய்வோ னெழிற்செந்தூர்க்குப்
போதருபாதையின்மயங்குந் ததியிலைந்தாண்டுடைப்பனவப் புதல்வனுகி
யாதரஞ்செய்தவ்வூர்போந் துணைவரலுமுருக்கரந்தா னயில்வேலானே.

இன்னணஞ்செந்தமிழ்ச்சுந்தக் கிளிப்புலவன்கவித்துணைகொண் டிகத்திற்பல்லோர்
நன்னலமுற்றமைமுழுது நவின்றுமுடிப்பதற்கறியே னுளுங்கோடி
யன்னவண்ணநடந்து கொண்டேயிருக்குமதனுன் முருகோனருள்வேட்டுள்ளீ
ரென்னபட்டானுமவற் றொன்றேனும்பிழையறச்சொற்றிறைஞ்சுவீரே.

கந்தனதுபுயமீதி லருணகிரிகிளியான கதையுமன்னோன்
செந்தமிழாலிவ்வுலகிற் சிற்சிலர்பேறடைந்ததுவுஞ் சிறிதுசொன்னேன்
மந்தகுணத்திறுமாப்பு மலிபுலவர்க்கெமனேபோல் வயங்குஞ்சீர்த்தி
சொந்தமெனக்கொண்டுவில் லிபுத்தூர்வாழ்ந்திருந்தவன் சீர்சொல்லுவேனே. (அஉ)

அருணகிரிநாதசுவாமிகள்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ககூசடு.

முப்பத்திரண்டாவது
வில்லிபுத்தூராழ்வார் சருக்கம்.

செய்யசீர்ப் பெண்ணைநாட்டிற் றிருமலிசனியூர் தன்னில்
வையமா மகள்புரிந்த மாதவப் பயனேயாகிப்
பையர வணையான்றன்னைப் பணியுமோர் பனவனில்லிற்
பொய்யறு புலமைதாங்கும் புண்ணியத் தொருசேய்பூத்தான். (க)

அன்னவன் வில்லிபுத்தூ ரடைந்துவாழ்ந் திருக்கப்பெற்றான்
பின்னவனுடனேதோன்றிப் பிறங்கின னொருவனென்பா
ரின்னவர் தம்மிற்பின்னோற் கியல்கதை யொன்றேயாகு
முன்னவன் பங்கேமற்றைச் சரித்திர முழுதுமாமே. (உ)

அண்ணனுக் கடங்கியன்னே னவயவத் தொன்றுபோன்று
திண்ணமா ருரிமைபூண்டு சிரிய தம்பிவாழ்ந்தா
னெண்ணமிக்குலகத்துள்ளாரி யாவரும் வியந்துசொல்ல
வண்ணவான் புலமைப்பண்பின் மடங்கலே னனையரானார். (ங)

எழுத்தொரெட் டிரைத்துநாடி யாவையும் புரப்போன்றன்சீர்
வழுத்தலாற் செல்வப்பேறும் வளம்படப் பெற்றோரானார்
பழுத்தமெய்ப் புலமைப்பாங்கும் பரித்ததாற் பரிவொன்றில்லார்
கழுத்தணி மடவாரோடுங் கலந்துவாழ்ந் திருக்குநாளில். (ச)

கொங்குநா டளிக்குமன்னுங் குவலயந் தொடையன்மார்பன்
பொங்கும்வா ரிதியேபோலும் பொலிவுறு பாரதத்தை
நங்குறு முனிமுன்னல்கு நறுந்தமிழ்க் கவிகளாக்கற்
கிங்குவல் லவர்சோவென்றிச்சையால் வினவலானான். (டு)

பற்பல வறிஞர்தாமும் பாண்டியின் வில்லிபுத்தூர்
விற்பனப் பனவர்தாமே விளம்பிட வல்லார்வேண்டும்
பொற்பண மிகுதியுள்ளார் புரவல ருறவுவேண்டா
ரற்பமும் பிணக்கமில்லா ராமிரு துணைவரென்றூர். (சு)

அதனோன் குணர்ந்திட்டன்னே னவர்குல முதியாளாமோர்
விதவையை யழைத்தாங்கன்னேர் மேவுமில் லிடத்திற்சார்ந்தும்
றிதமறு கலகமுண்டாக் கிடுதனின் கடமையென்னப்
பதமலர் தொழுதற்கேற்றம் பதின்மடங் குபசரித்து. (எ)

வேண்டிய பொருளுதவ்கி விடுத்தனன் விரைவிலேகி
யாண்டியன் றின்சொற்பண்பா லவருடன் கலந்துகொண்டாண்
மூண்டிடும் பகையுண்டாக்க முயன்றமன் மதுரைக்கேகிப்
பாண்டியன் றன்பாற்சின்னுள் பழகுபு தனித்தவேளை. (அ)

இத்திற முழுதுஞ்சொற்றவ் விருவர்தம் வழக்குவந்தா
லெத்திறத் தேனுமென்பா லியன்றிட வனுப்புகென்றேற்
றத்திறம் பெற்றுமீண்டா னவன்பெய ராண்டான்பிள்ளை
செத்திற வாதகீர்த்திச் சீரிய னென்பார்சில்லோர். (கூ)

சேர்ந்தவக் கிழவியாங்கு சிறியவன் மனைவிதன்பா
லார்ந்தபல் விசற்பமூட்டி யவடனே ரகத்தியோடு
கோர்ந்தசொற் பேசச்செய்து நிகழ்த்தரும் பகையுண்டாக்கிச்
சார்ந்தவர் கொழுகர்த்தத்தம் வசஞ்செயச் சமர்த்துஞ் செய்தாள். (கo)

இருதிரத் தினருளல்லா லெனச்சொலப் பொதுவேயாகி
யொருவரோ டொருவர்கூடா வுட்பகை விளைத்தபாட்டி
தருகை ராண்டான்பிள்ளை தவமுமித் தரைத்துன்பீரு
மருளுடைக் கரியமாய னுனையு மனையாளன்றே. (கக)

ஒருமனைப் பிறந்தபால ரொன்றுபட் டொழுகிடாம
விருநிலத்திடை வெவ்வேறு யிகல்வதனேது வெண்ணிற்
றிருவில்லி புத்தூரார்தஞ் சீர்மனைத் திறத்தாற்செப்பும்
பருவமோ ரேழுந்தாண்டும் பாவையு மாகுவாளே. (கஉ)

அந்தண ரிருவர்தாமு மவர்பொருட் பாகஞ்செய்வான்
முந்தவே கொங்குமன்னன் முயன்றவா றவன்பாலவந்தா
ரிந்தவா ளேனுன்னுளென் றியம்பரு முவகையூக்கு
வந்தவர்க் குபசாரங்கள் வளம்பட நடத்தியப்பால். (கங)

பாரதந் தனையிரண்டு பாகமாப் பிரித்துரல்கி
ரீரரும் தமிழ்ப்பாட்டாக்கி நிகழ்த்திய பின்னர்துந்துஞ்
சீரதைப் பாகித்தீவேன் றிண்ணமென் றிசைத்தானேற்று
நாரணன் பணியேயாமா னலமெனக் களிகூர்ந்தாரே. (கச)

அபபடிச் சிறிதுகாளங் கவன்வசத் தினராவைகி
முப்பழச் சாறும்பாகு முதிரவே யட்டபாலு
மொப்பவே வண்ணப்பாட்டு முடனுடன் கலந்துபாடி
யெய்ப்பறு கவிகளாரு யிரமெனமுடித் திட்டாரே. (கடு)

காவியப் புலமைவாய்ந்தோர் கணக்கில்பற் பலராலுங்
காவில்சீர் வில்லிபுத்தூர்த் தமிழ்ப்புல வரையொவ்வாரே
தேவினத் தெதுவானாலுங் தேசிகன் றனக்கொப்பாமோ
வாவியை யுடலிலுள்ள வவையவத் திரள்போலாவே. (கசு)

இருந்ததற் கொருபாட்டப்பா லெழுந்ததற் கொருபாட்டோதிப்
பெருந்தொகைப் படுத்துவாரைப் பேதையர் வியந்துகொள்வார்
மருந்துறழ் கவியொன்றுற்பல் வரன்பொரு டெளிவாச்சொல்லுங்
திருந்தியற் பாரதச்சீர் தெரிபவர் சிலர்தாமன்றே. (கஎ)

தொடைச்சிதை வோசைமோனைச் சோர்வுறச் சொல்லும்பெட்பாற்
கடைப்படு புலவர்தங்கள் காவியப் பகுதியெல்லா
மடைத்தலைக் குருகைவாளை மருட்டுசீர் வில்லிபுத்தூ
ருடைப்பெரும் புலவர்பாடற் கொப்பெனச் செப்பொண்ணுவே. (கஅ)

ஆமையுங் தவளையாதி யனவுமே யனையவாகிப்
போமையக் காவியங்கள் புவியினி லகந்தமுள்ள
தீமைதீர் மகவான்விண்ணிற் செலுத்தும்வெண் பரிபோற்செல்லும்
பாமைய லறக்கொள்கின்ற பாரத முதற்சினாலே. (கசு)

திண்ணமுங் தெளிவுமோசைச் செறிவுமார் தருபாச்சீலம்
வண்ணவாய்ப் புலவரோர்வார் மற்றைய ரறியமாட்டார்
வெண்ணகை மடவார்தானே வேள்புரை யாண்டான்பிள்ளை
யெண்ணமும் றியதாலார்வ மெனுங்கடற் குளித்திட்டப்பால். (உ0)

அவ்விரு பனவர்தம்பா லவர்குலக் கிழவிதன்னுல்
வெவ்வினை விளைத்ததாதி விதமெலாம் விளம்பிக்கூட்டி
யிவ்வித மிசைத்திட்டென்னு ளிச்சைதீர்த் தீரானீர்தா
மெவ்விழை வடைந்திட்டாலு மியான்முடித் திடுவேனென்றுன். (உக)

அந்தமன் னுரைகேட்டண்ண னருந்தமிழ் முனிக்கோன்சொற்போற்
சந்தமோ திடுதற்கொப்பித் தவறினேர் செவிகள்கொய்வா
டந்தனுப் புதியென்றுன்பின் றம்பியென் றனக்கென்றியாதுஞ்
சொந்தமின் றெனலுமார்வந் தோய்ந்துபல் விருதோடுந்தான். (உஉ)

அவ்வள வினிலன்னேர்தா மவர்தமூ ரடைந்தாரங்கு
வெவ்வழற் பகைமுன்மூட்டும் விதவையாம் பாட்டிதானு
மெவ்வள வோஞாயங்க ளியம்பிமா தையுமுன்போன்
றெவ்வவே கூட்டிவைத்தா ளுரைத்திறம் பெரிதாமன்றே. (உங)

மூரல்வாய் மயினேர்மாதர் மொட்டைச்சி யொருத்தியாலே
பாரத முடிந்ததென்னப் பழமையாப் பகரலுற்றூர்
வாரள கத்தாடன்னல் வயங்கிய வதுதானந்தோ
நேரதன் விரோதமாக நிகழ்த்தவும் பட்டதம்மா. (உச)

மூத்தவன் புலவர்கோவா முரணிய புலவர்காதைக்
கோத்தசில் பணிகளோடு கொய்வதே செய்வதாலு
னேத்தடற் புலமைவாய்ந்து மிலையவ னென்றுமெல்லாங்
காத்தருள் கமலக்கண்ணன் கருணையே கருதிவாழ்ந்தான். (உடு)

புரைதவிர் கவிதாசார்வ பூமனென் றிருபேர்பெற்றுத்
தரையில்வாழ் புலவருள்ளத் தருக்கெலா முருக்குந்தக்கோன்
கரையில்பே ருவகையெய்திக் களிக்குநாள் கவிசொன்மாண்பா
லரையர்பற் பலர்கொண்டாட வனந்தனென் றிருவன்வந்தான். (உசு)

அன்னவன் பாற்போய்வந்திட் டதற்கெலா நிலைப்பக்கண்டு
பன்னருந் தகையதாய பருங்குழிப் பெடுத்துநல்கிச்
சொன்னதிற் பிழைகண்டார்த்துத் தோற்செவி யறுக்கப்போங்கா
லென்னது பெயர்கொள்சேடற் கிலையிதாய்ந் தியற்றுகென்றான். (உஎ)

அம்மொழி வினவிக்கொய்தா லவனெடொப் பாதலோர்ந்து
செம்மொழி சமயங்கண்டு செப்பலுக் குவகையெய்தி
யிம்மொழி விலைப்பேருநிற் கீந்தனன் செவியென்றிட்டான்
மெய்ம்மொழிப் புலவர்தம்முள் விகற்பமும் வியப்பாமன்றே. (உஅ)

பொருப்புறழ் பெருமையோனுப் பொருவில்சீ ருணைக்கேகித்
திருப்புகழ் நாதன்றன்பாற் றீர்வருஞ் சிநேகனுகி
நெருப்புநேர் கோரநீங்கி நெடியமா லடியார்போற்றும்
விருப்புறு தவமேற்கொண்டு மீண்டுதன் னூரில்வந்தான். (உசு)

காளிகாட் டேறியாதி களையுபா சித்தாலுலும்
தேளினிற் றுயர்செய்வாரைச் செகம்பெரும் புலவரென்னும்
வாளினுற் புலவர்பல்லோர் வார்செவியரிந்து வாழ்ந்த
வாளிநேர் பனவன்மாட்சி யறிந்தவர் சிலர்தாமம்மா. (ஈ0)

வரைதொறு நடஞ்செய்வானே வழிபடு மருணைநாதன்
கரையில்சித் திரமாச்சொல்லுங் கந்தனந் தாதிப்பாடற்
குரையுட னவன்சொன்மாட்சி யொண்டமிழ்ப் புலவரோர்வார்
திரையுறு கரியசிந்தைச் சிறியவர் தேறிடாரே. (ஈக)

செயமலி ராமன்காதைத் திருப்புகழ் செப்பியப்பா
னயுகுணப் பெரியோனென்ன நாடெலாஞ் சொல்லவாழ்த்திட்
டயலறக் கலந்தசிந்தை யண்ணன்முன் றம்பிபின்னுப்
புயலுறழ் மேனியான்வாழ் புனிதவை குந்தஞ்சேர்ந்தார். (ஈஉ)

வில்வலி தனிலிராமன் விளங்கிலக் குமிணன்போலுஞ்
சொல்வலி யிருவர்காதை சுருக்கமாச் சொல்லித்தீர்த்தே
னல்வலி தவிரிரட்டை யாரெனுந் துணைவர்காதை
கல்வலிச் சிந்தையோருங் கசிவுறவகுக் கின்றேனே. (கூகூ)

வில்லிபுத்தூரார்சருக்க மூற்றிற்று.

ஆகு திருவிருத்தம் - கஙஎஅ.

முப்பத்துமூன்றுவது
இரட்டைப்புலவர் சருக்கம்.

பைந்தமிழ்வளம்பெருகு பாண்டிவளநாட்டி
னந்தலில்சதுர்த்தர்களி னல்லவனெருத்தன்
கந்தமலியுங்குழல்கொள் காரிகைதனோடு
மைந்தர்பெறவேண்டுமென மாதவமுயன்றான். (க)

உருகலமறந்தரு ளுணர்ச்சியுயர்கல்வி
யொருமைபிரியாமைமுத லொத்தபல் குணத்தோ
டிருபுதல்வர்நல்குதி யெனப்பெரிதிரந்து
நிருமலனடித்துணையை நெஞ்சினிடையுன்னி. (உ)

தொண்டர்பணியேபெரிது தொட்டினிதிழைத்தா
ரண்டர்தொழுமீசனுமை யாதியரைநீத்தோர்
தண்டணிவயோதிக தவத்தரெனவந்துண்
டிண்டமிகையம்மக ளுணுப்படிகொடுத்தார். (ங)

அவ்வுணவருந்துதலு மன்றுமுதலாவச்
செவ்வுருவமாதினது சீரியவயிற்றில்
வெளவுகருமுற்றியிரு மக்கள் குருடுங்கா
லொவ்வுதலிலாதது மெனக்கடிதுதித்த. (ச)

ஆண்மகவிரண்டொரு கருப்பமதிலாயுஞ்
சூண்மருவலான்மிகு துயர்க்கடலிலாழ்ந்தார்
வாண்மதனீற்றினர் மனத்தினிடையென்னுங்
கோண்மனிதராமவர் குறித்தறிவதேயோ. (ஞ)

வாளெனவிளங்குகண் மடந்தையொரிரட்டைக்
கோளெனவளித்தமகர் கோதடைதல்குன்ற
வேளெறுழ்துறந்தருள் விளக்கமுறுமேலோர்
சூளெனநினைந்துயிர் துடித்துகனி சோர்ந்தார். (ஃ)

சூனுறுமுடற்கொளிரு தோன்றல்பெறலின்முன்
போனவலவாழ்மலடி போதகலமென்று
மானுடையர்தொண்டரரு ளும்பரிகலத்தா
லேனுறுகணுற்றதுகொ லென்றுமனகொண்டார். (எ)

அவினைஞர்தங்கனவி லாயிழையொர்பாகர்
செவ்வியகலாடைபுனை தேசிகரின்மேவி
யிவ்விருமகாருமிக லோகபரலோகத்
தொவ்வினரிலாதயரு மொண்டகையரென்றூர். (அ)

ஒண்ணிறைகணுள்ளமக வொன்றுதவழ்தோறுங்
கண்ணிலதுவுந்தொடர்தல் கண்டுகளிகூர்ந்தார்
திண்ணியபினைனடை திறப்படலுமுன்னே
னண்ணியபுயத்துட னலைந்திடலுமாய்ந்தார். (கூ)

எத்தகையவாச்சரிய மோசெயவினைர்தா
மித்தரையில்வந்துளனெனப் பெறுநர்தம்மோ
டுத்தமரெலோருநனி யோதியுணர்நாளின்
முத்தமிழ்நறுங்கவி மொழிந்திடன்முயன்றூர். (கo)

முன்னவன்விழித்துணையு மொய்ம்புமலிபின்னென்
றன்னதுபதத்துணையு மென்றுகவிதானு
மன்னவர்பொதுப்பட வறைந்தனரநேக
நன்னலமுடன்பிறவு ஞாலமுறுமாறே. (கக)

தோளிலுறுமண்ணன்வழி சொன்னபடிகூடித்
தாளின்வலியாலினிது தம்பிசெலல்காண்பார்
வேளினையளித்தவரி வீயரசிலேறுங்
கோளினைநினைந்துகளி கூர்வர்பெரிதம்மா (கஉ)

நொண்டிகுருடெனவசை நுவன்றுகெடுவாரும்
வெண்டிருவருட்பொலியும் வித்தகர்களென்னக்
கண்டினிதுதொண்டுசெய்து காதலடைவாருந்
தெண்டிரைவளைந்தபுவி யிற்சிலர்களன்றே. (கங)

நச்சுரகூடணனை நாடொறுநினைந்து
பச்சுருவமாதருள் படைத்தபெரியோர்கண்
மெய்ச்சுரரின்மிக்கபத மேவிவரைமுன்னே
யச்சுவினிதேவதைக ளென்றுமறைவாரே. (கச)

செவ்வையதமிழ்க்கவிகள் செப்பியெணில் சித்தி
யிவ்வையமதிற்செயு மிரட்டையரை நாடி
யெளவைதருபாலர்கொ லெனுவதிசயித்துக்
கொவ்வையிதழ்வாய்மகளிர் கூறுதலுமுண்டே. (கடு)

அன்னமிவர்வான்மனை யங்கணருளெய்திச்
சொன்னபடியேநடவு தாயிருவர்க்குந்
துன்னல்கொடிதென்னுமிரு சூனுறவிழைத்த
தின்னவினையாமென வியம்புமவரின்றே. (கசு)

காலமொருமூன்றுமுணர் வார்களேவினவிச்
சீலமிகுமன்னவர் செயற்றொகுதிசெப்பின்
மாலகிலமானிடருள் வந்த * கதையொன்று
போலவிரிவாகுமெனல் பொய்ம்மையறுமெய்யே. (கள)

தம்மையருமாதவ முயன்றுதவுதக்கோ
ரிம்மையினர்முன்னிகழ் விசைத்தமொழியாலாம்
வெம்மைமிகுதண்மையுற மேதகுமுவப்பா
யம்மையிலரன்பத மடைந்தகடன்முற்றி. (கஅ)

நீரொருமையெய்தியவர் நித்தமுலகத்தூ
டோரொருவர்பாலொவொர் பணங்கொடுகளித்துச்
சீரொருவர்நல்கினும்வெஃ காதிடமல்கி
யூரொருதினம்புவி யுலாவருதலுற்றூர். (ககூ)

சோழனதுநாட்டினிடை துன்னினரநாளி
லாழறிஞனமவனெ ராச்சரியங்கண்டு
வேழமுறழ்பாவலவர் வில்லல்கடனென்று
கேழவிர்பொருட்பொதி கிழிப்பயனமைத்தான். (உ0)

அக்கிழிபெறத்தகு மவாவினிடைமூழ்கி
மிக்கியலுணர்ந்தபலர் வெஃகிமனநொந்தா
ரிக்கினிகர்த்தசொ லிரட்டையர்களாங்கும்
றுக்கிளருமன்சபையி னேரமதினின்றூர். (உக)

நின்றவரையங்குறு நெடுந்தகையரியாரு
மன்றவருகெய்திடன் மதித்தும்வினவில்லார்
பொன்றருகடிக்கனெடி பொற்புமலிதானே
யொன்றலுறின்வம்மினென வோதுமவர்தாமே. (உஉ)

கோரகுருடன்றன்மிசை கோதுபடுதாளா
னூரல்கொடிதாகுமென வுன்னியொருவில்லர்
ரீரமுடனின்சொலிசை யாவிடினுமிஃதே
யோரருமையாகுமென வுன்னறகுமாதோ. (உரு)

வே று.

ஆனபொழுதிளையவனியா னடந்துவந்ததூரமறக் கொடிதேயென்றன்
கானலங்குன்றியதெனும்பாட் டுரைசொன்னனவன்றேளிற் கவினுமுன்
றேனசைசூனத்தைகொளுந் திருநாடாவிங்கணிருந்தேனுக்கெங்கே [னென்
தானமெனப்பின்னரைப்பா டலும்பகர்ந்தான்வளவனதி சயத்தனகி. ()

அக்கணமேயரியணைவிட் டெழுந்துபோயவர்திருத்தா ளருகில்வீழ்ந்து
மெய்க்கடவுட்புலமைகொணீ ரிங்ஙனமீண்டெய்தியதேவியனென்றுதி
பக்கலினதனத்திருத்தி யவையறியவயற்செந்நெற் பயிரிறுற்றே [ப்
லுக்கதனேநத்தையுணக்கண்டவர்தேனதனேயிவருரைத்தாரென்றான். ()

* கதை - இராமாயணம்

என்றமொழிவினவலுமாங் குற்றவர்களெல்லோருமிறைஞ்சலானர்[த்தா
மன்னனேதவலரதற்காச் செய்துளபொற்கிழியையவர் வயின்கொண்டுய்
ரின்றமிழ்வாணரின்மூத்தோனெருபணமாத்திரங்கரத்தாலெடுத்துக்கொண்டு
குன்றவில்லார்திருக்கோவிற் பணியிலவற்றினேச்சேர்க்கக்கூறினனே. ()

அத்தகுதியறிந்தவர்தா மிவர்மனிதரலர்ககனத் தமரரோமெய்ச்
சித்தர்களோதிகழ்வேட நிசமோபொய்யோவெனவுஞ் சிந்தித்தாரவ்
வித்தகர்தாமரசனிடம் விடைகேட்டாரவனன்பால் விரும்புண்ணை
மெத்தனேயோபகர்ந்தானென் றினுக்குமிசையாதுமறுத் தேகினரே. ()

மன்னவன்பொற்சிவிகைமணிப் பணித்திரள்பட்டாடைவகை வழங்கப்பெற்றிட்
டன்னவனுட்டினிற்பலர்குந் தேவல்செயவாழுநல மதையெண்ணராய்
முன்னடந்தவாறெருவர் மிசையொருவரிவர்ந்தேகு முறையேவேட்டா
ரென்னவிதமோவவர்தந் திருவுளப்பாங்கரனடியா ரெளிதோர்வாரே. ()

அத்தினத்தோர்குளக்கரையி லரசடிவிநாயகன்பா லண்ணன்கை
யில், வைத்திருந்தபணமுதலா வனவமயமுழுக்காடி வந்துபார்த்துச், சத்
தியமாய்த்தம்பியைக்கூய்ப் பணங்காணேனெனச்சொன்னன் சலிப்போ
டன்னே, னித்திருட்டிப்பகற்பொழுதிற் கண்ணுளநீயறியாதியா ரிழைத்
தாரென்முன். (உசு)

தந்திமுகக்கணபதிமுன் வைத்ததுண்டுமற்றெருவர் தாமுமீண்டு,
வந்திடக்கண்டிலனெனவே தமையனுரைத்தலுமவன்கை வழிப்பின்னே
ன்போய்த், தொந்திமுதலியவுறுப்பு முழுமையுந்தன்கைகளினுற் றொட்
டுப்பார்த்து,முந்தியதேவாமிவனே திருடிவைத்துள்ளானிதுமெய்ம் மொ
ழியென்றப்பால். (ஈ0)

தம்பியோபெண்டிருடி தாயினுடன்பிறந்தவனுஞ்சண்டிமாமன்
கொம்பியலாய்ச்சியர்குலைய நெய்திருடினேனெனது குலத்துக்குள்ள
வம்பிதெனநானறிவே னீயுமெந்தம்பணந்திருடல் வழக்கோவென்று
தம்பிமுகப் மெருமான்றன் மடிபிடித்தோர் முழுப்பாட்டுஞ் சொன்னனன்றே.(ஈக)

அக்கவிக்கோர்பணமுமுன்று னெடுத்ததொருபணமுமிரண் டாக
வாங்கு, முக்கணுடைக்கணபதிதன் றுதிக்கையினுற்கொடுத்திடலு முன்
னேன்பார்த்து, மிக்கவியப்படைந்துதம்பி யினேத்தழுவிநிண்கண்ணே
மெய்க்கண்ணுகும், பொய்க்கண்முகந்தொறும்பலர்க்கு மிருந்தெனெனப்
பலவாறு புகழ்ந்தானம்மா. (ஈஉ)

அப்புகழ்ச்சியாற்களிகூர்ந் தாணவப்பேராழியினி லமிழ்ந்திடாமன்,
மெய்ப்புலமைத்துணைவனண்ணன் றனேத்தொழுதுடம்புரியும் விமலன்
ருட்கே, யொப்புரைக்கத்தகுமுனதாள் சுமந்தபயனேயிதுவா முண்மை
யென்ரு, னெப்புனிதரிவர்போன்றென் ருய்ப்பிறந்திட்டாலுமிப்பண்
பெய்திடாரே. (ஈஈ)

அன்னவர்தாமப்பணத்தா லன்னமமைத்தருந்திமுன்போ லருங்கா னீந்திப், பன்னரும்பல்பதிகளிற்போ யொவ்வொருவர்பாலோரோர்பண மேகொண்டு, நன்னலமாயிரம்விளைத்தோர் குயப்பிரபுகொடைத்தி மம நாடிச்சேர்ந்தா, ரின்னவரையவன்மதியா தின்றசிறுமகட்கிதஞ்செ திரு ந்தானன்றே. (கூச)

ஆங்காட்டுக்குருகுமவன் விழிகாணத்திகழ்வாரி லண்ணனிந்த மாங்காட்டுவேளான்றன் மகளைமருமகன்றன்பால் வதுவைசெய்து போங்காட்டியின்பாகப் புசித்தானென்றரைப்பாடல் புகன்றுன்றம்பி தீங்காட்டந்தொனிக்குமதைத் திருக்குறண்மேற்கோள்காட்டித் திருத்திசெய்வான்.

மக்கண்மெய்தீண்டலுடற் கின்பமாமவர்மழலை வாய்ச்சொற்கேட்டன் மிக்கசெவிக்கின்பங்கா ணைனுங்கவிசொன்னுனுடனவ் வேளானஞ்சித் தக்கபுலவோரெனத்தேர்ந் திலனுரோவென்றிருந்தேன் றவறென்மீதே யக்கணீராரெனக்கேட் பதுகடன்றுனென்றவர்தம் மடியில்வீழ்ந்தே.()

ஆதனத்திலிருவரையு மிருத்திமிகுமகமனுரை யறைந்தானன்னேர் நீதரவேண்டுவதொர்பணம் தானெனப்பெற்றவனேவிட்டு நீங்கிப்போனர் போதவுணர்விலனுகி லங்கனஞ்செய்யானவரும் போயங்கெய்தார் சீதமலர்க்கற்பகமும் பெறவல்லாரிவணிலதல் சிவன் கூத்தாமே. (கூஎ)

கல்வியில்கண்ணுக்கினியா னேனையசீர்பெறுதிருவேங் கடத்தானென் னுஞ், சொல்விளங்குமிருதுணைவ ரொருவளவிற்குடியிருப்பார் தொங் தந்தீர்ந்தார், நல்வினைஞர்க்காகாதான் மூத்தவன்பின்னுனவர்மே னசை மிக்குள்ளான் பல்விதத்தாலினையவன்பேர் வினவியிந்தப்புலவரவர் பதி சேர்ந்தாரே. (கூஅ)

அங்கவர்வாழ்மனைமுகப்பிற் போதலுமூத்தவன்றுன்கண் டதட்டிச்சீற்று புங்கவரிற்சிரியரா மவர்வெருண்டார்போனழுவிப் போகலுற்றூர் [ன் செங்கணெடுமாலனைய விளையவன்கண்டுடன்வணங்கித் தினமுநாயே னுங்கள்புகழ்வினவியெதிர் காணுறச்செய்தவப்பயனுவுற்றீ ரென்று. ()

பேரன்பாலழைத்திடலு மறுக்கிலராய்மகிழ்ந்தவன்றன் பிறகிற்சென்றூர் வாரமுறுமனைவியுமக் களுமவர்தாடொழுவித்து மணம்விராவுஞ் சீரதயிலமுரீரு முழுக்காட்டியுணவருத்திச் செம்பொற்கட்டில் சாரவைத்துப்பணிபலவுஞ் செய்தனனன்னவர்குலத்தோன் றுனென்பாரே. (சo)

தேன்பொழிந்தவாய்த்திருவேங் கடத்தான்முன்வேம்புறழ்சொற்செ ப்பும்வாயோ, டேன்பிறந்தாளெகண்ணுக் கினியானென்றனன்மூத்தோ னினையோன்மேனுண், மான்புரைகட்டிருவருபாற் கடலிடைமுன்மூதே வி வரலேனென்றுன், வான்பரவுபுகழிரட்டை யார்கவியென்றின்றுமது வழங்கலுண்டே. (சக)

கல்லாலயமுந்தேவு மாகுமலம்பன்றியுண்கைக் காமென்றுற்போற்
பொல்லாதபொருள்களைச்சொற் றவற்றையுநல்லனவாகப் புகழ்ந்திட்டென்று
மெல்லாரும்வெருளுறுகண் ணுக்கினியானிழிவிலிணை யில்லானென்னைச்
சொல்லாயேபேசினரச் சொற்களுமோர்கவியாகித் துலங்கிற்றம்மா. ()

வெம்பியொருகவியுரைத்தா லவன்றலைபற்பலதுண்டா வெடித்தேவீழுந்
தம்பிகுணசீலதவ நோக்கத்தாற்பிழைத்துநடைச் சவம்போன்றுற்றான்
கம்பிதமெய்தாதுயிர்கட் கிதஞ்செய்திருவேங்கடத்தா னெனுங்காராளன்
செம்பியன்பாண்டியன்சேரன் முதலினரிலொருவனிகர் சீர்பெற்றானே.

அவனிடத்துமொருபணம்பெற் றகன்றிரட்டைப்புலவோர்தா மந
ந்தமூரிற், சிவனறிந்தவிளையாடல் பலசெய்தருணபுரியிற்சென்றங்குள்ள,
நவமலிவாழ்வினனெனக்கேட் டொருசமணன்கண்ணெதிர்போய் நகை
ப்பநின்று, நிவரைமதியாதுவெறுத் தியாரென்றுன்றமிழ்ப்புலவ ரெனச்
சொன்னாரே. (சச)

சொன்னவரைப்பார்த்துமுன்பினின்னசொற்களியைதரப்பாத்தொடு
மினென்று, னன்னவர்தாமுடன்மன்னுமருணைநகர்வாழ்சம்பந் தான்டா
னுக்கீண், டென்னவிதத்தினுக்காகத் தலைச்சவரம்பண்ணுகின்ற தென்று
மின்னர், வன்னவனைக்காந்தளங்கை கொடுகுட்டாமலுக்கென்றும் வகுத்
திட்டாரே. (சடு)

தானுரைத்தசமத்தியினிற் பெருநகையிரசங்கலந்து சாற்றக்கேட்டும்
வேனுடனச்சமுஞ்சிறிது கொள்ளாதுகண்களினுல்வெகுண்டானன்னோர்
பானுவுள்ளமட்டுமெறுப் பழிசுமப்பாயெனச்சினத்தாற் பகர்ந்துபோயேற்
றானுகைக்குஞ்சிவபெருமா னருள்வழிசித்தாடினரிவ் வகிலத்தம்மா. ()

தில்லைநகர்க்கலம்பகமுங் கச்சியூர்க்கலம்பகமுஞ் சீருலாவு
மெல்லியல்பஃறலங்களிடை யெப்பிரபந்தங்களுமோ வியம்பியாவுங் [ளி
தொல்லையெனுந்துணிவெய்தி முத்திபெறுங்கருத்தினராத் துயிலோர்நா
லல்லைநிகர்கண்டத்தா ராமாத்தூர்க்கேகுமினென் றறைந்திட்டாரே. ()

அக்கனவுகாணன்முத லாயவிதம்விரித்துநன்று யவ்வூர்க்காகு
மிக்கபுராணத்தினிடை விளம்பியுளதவராங்கு மேவும்போதே
யிக்கனியமதுரமுறு மிசைத்தமிழாற்கலம்பகமொன் றியம்பித்தீர்த்தார்
புக்கவரையரசன்முத லினர்தாமுஞ்சிவனுரையாற் போற்றினாரே.(சஅ)

அச்சுததேவப்பெயர்கொ ளரசன்முதற்பற்பலரு மருகிற்சூழ
நச்சுரகப்பணியுமணி தருமபிராமேசர்முன்பி னவிலும்போது
மெச்சுபுகழ்ப்பம்பைநதி மேற்கரையிற்கோயிலென்றார் வேந்தனுதிக்
கச்சுறுமென்முலைமகளிர் வரையாருமிதுபொயெனக் கழறினாரே. (சக)

அந்தமட்டிலிதன்முடிவு தெரிந்தபின்ருன்குறையுமரங் கேற்றலாமென்
றுந்தருட்பாவலரிருவர் களுமெழுந்தாரரசன்மனை யுணவுநீத்துச்
சிந்தனையிற்கொதிப்புமிகுந் தக்கோயிற்சந்நிதியிற் றியானித்துற்றூர்
பைந்தண்முகிலன்றிரவின் மழைமிகப்பெய்தவ்வாறே பண்ணிற்றம்மா.

ஆதவன்வந்துதித்தலுமங் குள்ளவரெல்லோர்களுங்கண் டதிசயித்து
வேதன்முதற்றேவர்களி லிவரிருவருடற்சுமைபொய் வேடமென்றூர்
மீதமுளபாடல்களும் படித்துமுடித்ததற்பினந்த வேந்தன்றுழ்ந்து
போதவுநீர்புகன்றபடி புரிவலென்றுனவரவன்பாற் புகல்வதானூர். (நிக)

வருமுனைமைக்குறித்தொர்களுக் கண்டிலேயேலணுத்துணையு மதிக்கமா
யருமைமிகுகவிகேட்டு நதிபிறழாவிடிலிகழு மவரிற்சேர்வாய் [ட்டா
நிருமலனெம்விருப்பளிக்கைக் கிருக்கின்றுனீயருட்சீர் நேடிவாடும்
பெருமையுறுதவர்புலவ ரன்றியிரவலர்தமையும் பேணென்றுரே. (நிஉ)

இன்றுமந்தஞயிவ்வா றெழுகுதலும்பெருவெள்ள மெய்துமாயின்
முன்றுலங்குவழியினும்போய்மாதைநகர்ச்சூழ்தரலுமுறையிற்காண்மின்
குன்றுறழுமாணவங்கொண் டிகலுமிளம்புலவீர்காள் கோடிகோடி
யென்றுபஞ்சாக்கரஞ்செபித்தா யினுமரன்பாலருள்பெறலே யேற்றமாமே.()

ஏதினெறிக்குரியாரும் வியந்துபயங் கொளும்புலமை யிரட்டையார்தா
மாதிரத்திற்றிரிதருமா லறத்துறந்துநந்திருவா மாத்தூராளு
நீதிமன்செய்தவபலமாச் சிலநாளுற்றெருநாள்கண் ணேரிற்றோற்றுஞ்
சோதியினிற்கலந்தேபோயயனியமனெனுமவர்கைத்தொடர்பற்றுரே.

இத்தகையகவிக்குரிய ரின்னுரென்றெருபாட லிசைத்தோனுரோ
கைத்தலில்சீர்க்கலம்பகத்துக் கிரட்டையர்களெனத்துணிந்து கழறினுன்மெய்
யெத்தனைமாதுரியமொடு சாதுரியமியைதரப்பாட் டிசைத்திட்டாலு
முத்தமப்பேரூயவருட் செயலிலேயேலுலகமுழு தொப்பாதன்றே. ()

எப்பிறப்பின்றவத்தாலோ வருட்பெரும்பேற்றுடன்பிறந்த விரட்டையார்தம்
மெய்ப்பிரதாபக்கடலிற் சிறிதறிந்தமட்டுரைத்தேன் விண்டுவோடு
திப்பியஞான்மறைப்பிரமன் றேடுமெலிக்குகையி னிடைசேர்ந்துவாழ்ந்த
தப்பிதமில்லாதகுகை நமசிவாயன்பெருமை சாற்றுவேனே. (நிசு)

இரட்டைப்புலவர்சருக்க முற்றிற்று.

முப்பத்துநான்காவது

குகைநமசிவாயசுவாமிகள் சருக்கம்.

முன்னமாதவர்பலர் முக்கணனரு
ணன்னலமிகப்பெறு ஈந்திதன்னெடு
துன்னலாற்பெரும்புகழ் தோய்ந்துவாழ்வது
கன்னடதேயமாங் கவின்கொள்பூமியே. (க)

அந்தநாட்டிடையிலோ ரரியமாதவ
னெந்தமாதாபிதா வீன்றசேய்கொலோ
சொந்தமாங்குருவெனத் தொடர்ந்ததாரையோ
செந்தகைச்சிவனருட் சீர்பெற்றனரோ. (உ)

அருட்பெரும்பேறுபெற் றவனேயன்பினு
லிருட்கருங்களப்பிரா னியற்றமிழ்த்தனித்
தெருட்புனேதேயத்திற் றிருவண்ணுமலைப்
பொருட்சொலுங்குருவெனப் போதிநீயென்றான். (ஊ)

அக்கணமன்னவ னடல்விடைப்பரி
தெக்கணத்திக்கினிற் செலுத்தினனது
மிக்கவீராகம தவத்தின்மேம்படு
தக்கவரூர்தரு தருமந்தானரோ. (ச)

இடைவழிதன்னிலோ ரூரிலேய்தலு
மடைவுடன்மணஞ்செய்வீட் டதிபனுய்மலர்த்
தொடைமுதலியகொடு தொழுதுபோற்றித்த
முடையகாயகனென வுன்னிக்கொண்டுபோய். (ஙி)

மனையினிலுள்ளவர் வந்துற்றுரெலு
மனைவருமவன்கைநீ றணியச்செய்தபின்
புனைமலர்ப்பந்தரும் பொருளெலாமுழுஞ்
வினைவலியாலழல் வேவச்சுட்டதே. (சு)

அத்தனைகாண்டலு மாங்குள்ளார்பல
ரித்தவனீற்றினு லெரிந்தவென்றனர்
சித்தமொந்தவன்பர சிவனைத்தீர்வரும்
பத்தமோடின்னுபு படைத்திட்டானரோ. (எ)

வெந்தனமுழுமையு மீண்டுமுன்னென
வந்தனகாண்டலும் வைதமாந்தரே
யிந்தமாதவன்சிவ னேயென்றேத்தினு
ரந்தமான்மியத்தள வறியொண்ணுதே. (அ)

வருமவர்நெஞ்சக மகிழுநானினி
யொருவர்தம்மனையினு முறுகிலேனெனும்
பெருவிரதத்தொடம் முனிவன்பேர்ந்துபோய்த்
திருவருணையினிடஞ் சேர்ந்திட்டானரோ. (கூ)

சென்றவண்வைகியுந் திருப்பொற்கோயிலின்
குன்றவில்லியைக்கரங் குவித்திடாதுநீ
நன்றடைந்திருத்தியோ வென்றுநாடொறும்
தன்றடங்கையொன்றுற் சைகைசெய்குவான். (கo)

அங்கவன்செய்திட லகமன்றுசறு
துங்கவீராகமந் தமர்கள்சூழ்குரு
புங்கவனுவரு புராரியல்லனேச்
செங்கரங்குவிக்கொணு தென்றுசெப்பிற்றே. (கக)

குருலிங்கசங்கம மெனுமுக்கூறலா
லொருபொருட்டொழவொணு தெனுஞ்சொலுற்றுணர்ந்
திருளறவணங்கலா மிலிங்கந்தன்னுர
மருவலொன்றேயென மதிக்கைவம்பரோ. (கஉ)

அந்தமாதவத்தின னரன்சொலாலவண்
வந்தவாறுணர்கிலர் வருந்தினுரவன்
செந்தமிழ்த்தீஞ்சுவைத் தெருட்சிமிஞ்சலாற்
பந்தமார்தருவெண்பாப் பகர்பண்பெய்தினன். (கஊ)

கன்னடமல்லதோர் கலையுங்கற்றிலா
வன்னவன்றமிழுணர்ந் தாரிற்சீரியர்
பன்னலாந்தகைகொள்வெண் பாச்சொலச்செய்தா
னென்னரன்செய்திடா னிதயத்தெண்ணினே. (கஎ)

அக்கினிகிரிப்பிராற் கன்பிலானெனக்
கைக்குறிகாட்டலைக் கண்டொர்நாளதி
யுக்கிரச்சிவாக்கிர யோகிவேத்திர
மெய்க்கிடர்தரும்படி வீசினனரோ. (கஏ)

இல்லறந்துறந்தவ னெதிர்த்தெள்ளாதெனை
நல்லசற்குரவனுய் நாதன்மோதிடல்
கொல்லவன்றுள்ளதிக் குணங்கள்போக்கவென்
றெல்லருந்தரத்தொரு கவிதையோதியே. (கசு)

போயினன்போதலும் பொருவிலியோகியத்
தீயுறழ்தவனிலை தெரிந்திலேனென
வாயினுலுரைத்துள மாழ்கினுன்றவன்
கோயிலுட்போய்த்தொழல் குணமென்றுன்னினுன். (கள)

அப்பொழுதத்தவ னருகிலாதிகாண்
மெய்ப்பொருளோதிய விகிதசற்குரு
துப்பொளிர்கற்கலைத் தொண்டர்சூழ்தர
வெய்ப்பொருங்கொருவமு தென்னவெய்தினன். (கஅ)

கண்டிடனளவறக் கசிந்துதாழ்தலு
மெண்டிவர்வாய்மலர்ந் துரிமைபேசியே
கொண்டுபோயத்திருக் கோயிலேக்கலா
லுண்டிமுற்குருத்துவ மென்னவுன்னியே. (ககூ)

கோயிலுட்போனசற் குருவுங்கூட்டமா
மேயினசீடரும் வீழவீழ்ந்தெழ
லாயினவேலையங் கவரைக்கண்டிலான்
சேயினைத்தருங்கணுள் செயலென்றோர்ந்தனன் (உ0)

வம்பிடிமொழிசொலி வலக்கைதூக்குகாங்
கும்பிடுநலங்குறித் தடித்தசற்குரு
தெம்பிடுஞ்சிலையினுற் சிரத்தின்மொத்தினும்
கம்பிடுமனரு ளாமென்றன்புற்றான். (உக)

அன்றுகைப்பிரம்பினு லடித்தயோகியுட்
குன்றுவில்லாமெனக் குனித்தகொற்றவன்
சென்றுநீயடித்தலுஞ் செழுந்தமிழ்க்கவி
யொன்றுரைத்தானென துருவன்றுனென்றான். (உஉ)

பொருவருந்திருவருட் போதமெய்தலா
லிருவருமெத்தலத் தெதிர்ப்பட்டாலுமாங்
கொருவரையொருவர்தா முறவணங்கினர்
மருளின்மெய்யடியவர் வழக்கிதென்னவே. (உங)

ஆலயத்துட்புகுந் தரனேக்கைதொழுஞ்
சீலமார்தவசியுஞ் சிவாகமப்பெரு
நூலறியோகியு மடியர்நோன்மையைச்
சாலவுற்றூர்தமுட் டவறுநீங்கியே. (உச)

அத்தனியோகியெய் தகன்றிட்டான்கொலோ
வித்தவனருளைவிட் டேகிடாதுற்றான்
மத்தகமுரித்தவன் மகிழ்ச்சிகூர்ந்துதன்
பத்தனென்றுலகெலாம் பகரச்செய்தனன். (உடு)

ஊரினும்வனத்தினு முலவினுன்றனைப்
பாரியமலைநடு வசிக்கப்பண்ணலாற்
சீரியகுகைநமச் சிவாயனென்றொரு
பேரிகமெங்கணும் பிறங்கக்கண்டனன். (உசு)

அங்கிருக்கின்றவற் காகவேண்டுவ.
வெங்கிருந்தியாவரா லேனுமென்றென்றும்
பொங்கியபெருங்களி பூப்பப்பூப்பவெண்
சங்கியல்காதினன் றருவித்தானரோ. (உஎ)

ஈறுதீர்மெய்ப்புக ழியைந்தபோகற்கு
மாறுதீர்கொங்கணன் வாய்த்தவாறெனத்
தேறுமேலவர்குழாந் தினமுமன்பொடு
கூறுமோர்சீடனைக் கூட்டினனன்றே. (உஅ)

அப்பெருஞ்சித்தனன் றடைந்தவாச்சையே
யிப்பெருந்தவனுமெய் தலினிச்சீடனு
மெப்பெருங்கரினு மேகிவந்தவன்
கைப்பெருஞ்சித்தியாற் காமமூட்டினன். (உசு)

தினந்தொறும்புதுப்பரு வத்துச்சேயிழை
மனந்தனைடைனந்துமுன் றுயின்றவாயெழுந்
தினந்தமர்பாற்கன வினைத்தென்றேறிட
வனந்தரஞ்செய்தன னருள்கொண்டையகோ. (ஈ0)

எம்பிரானருள்பெறு மீடிளாரெணில்
வம்பிவாறியற்றினு மகிதலத்துளார்
தம்பிரார்த்தனையுமா தவமுமாகுமா
னம்பியேயதுபெற னலத்தின்மிக்கதே. (ஈக)

இத்தகைவஞ்சக வின்பமார்ந்திடு
மெய்த்தவரிருவர்தா மவரைவெஞ்சம
னுய்த்ததூதுவர்களு மோதிமத்தினன்
கைத்தலங்களுந்தொட வில்லைகாண்மினே. (ஈஉ)

அப்படிநடக்கையி லரனுக்கீந்துள
மெய்ப்படிவத்தவன் விரகத்தாற்புனர்
செப்படித்துணைமுலைச் சிறுமியாமவ
ளிப்படிமானிடத் திலையொர்நாளிலே. (ஈஈ)

கொங்கணனெங்கணுங் குளிகையாற்சென்று
னங்கவனெத்திறத் தறிந்திட்டான்கொலோ
சங்கரன்றிருவுளத் தயைபெற்றோர்களுக்
கிங்கரிதாயதொன் றிருக்குமென்பரோ. (ஈச)

ஒருதினந்தக்கதா யொருத்தியின்மையா
லருணையின்வடபுலத் தமருந்துர்க்கையை
வருதியென்றழைத்தலு மனிதமங்கையாய்க்
குருவளர்செம்மலைக் குகையிற்சேர்ந்தனள். (ஈடு)

சேர்ந்தவட்புணர்தலுஞ் சிறிதுங்காமநீ
ரார்ந்தவளுருகில தகண்டத்தவ
னேர்ந்தநீயார்கொன்மெய் நிகழ்த்துகென்னவே
யீர்ந்தையுடன்வினு விடலுஞ்செப்பினுள். (கசு)

அக்கணமகளிர்மா றவிட்டோடின
னிக்கதைத்துணையென விலங்கும்போகன்முன்
றிக்கறிதரப்பெருஞ் சீனநாட்டிடைப்
புக்கனன்பலமினுர் போகம்வேண்டியே. (கஎ)

கல்லுருவனிதையைக் கருதிநீயெவள்
சொல்லுதியெனவினு வளவுந்தொல்கதை
புல்லுதல்பற்றியே பொதுவிற்கூறினே
னல்லுணர்வினரதை நவையென்னுர்களே. (கஅ)

முந்துகல்வினவுகான் மூகைபோன்றது
பிந்துகற்றன்பெயர் பேசிப்போயதா
லிந்துவாழ்சடைப்பிரா னியாவன்மீதரு
ளுந்துறவைத்துளா னேனுன்கோர்மினே. (கக)

ஒருசிலமந்திர மொன்றுமில்லதோன்
றருளுடைப்பனவரா ராதித்திட்டதா
லிருதிறமங்ஙன மிலங்கலுற்றன
மருண்மலிபுன்றவர் மதிக்கொண்ணுதவே. (சஂ)

இருநிலத்திக்குலத் தின்னவாவரு
மருமகனெனத்தெரி வருமச்சீடன்முன்
குருபதம்வருடுமோ ரிரவிற்கூறையை
வெருவரலொடுமிகக் கசச்சிவிட்டனன். (சக)

ஆங்கியன்றமைதெரிந் தருட்பெருங்குரு
வீங்கிதேன்செய்தனே யெனலுந்தில்லையி
லோங்கியசபைத்திறை யோரந்தீக்கெழீஇ
வேங்கிளர்ச்சியதற விலக்கினேனென்முன். (சஉ)

அருகிருந்தவன்றனே யணைத்தென்றன்குருப்
பெருமைபெற்றனேயெனப் பேசினனைதைத்
திருவருளாற்சகந் தெரிந்திச்சீடன்பேர்
குருநமச்சிவாயனென் றினிதுகூறிற்றே. (சங)

ஒருமரத்திருகளி முர்த்தகொக்குரா
மிருவருமொருதலத் திருக்கையென்னவக்
குருவவன்றன்னோ டுறித்ததில்லையின்
மருவுதியெனமகிழ்ந் தனுப்பினுன்மன்னே. (சச)

வேறு.

கோதிலாவருணைமலையிலுள்ளகுகை நமசிவாயமுனிகுன்றவிற்
சோதிமீதுபலவெண்டலைக்கவிகள் சொல்லியேதனிவசித்தனன்
போதினனையபுலவரும்பழுதில் புனிதமாதவரும்வந்துவந்
தீதிவாறெனவுணர்ந்துபோயினர்க ளெண்ணிலார்தினமுமென்பரே. ()

அம்மலைக்கருகமைந்தமாநகரி லந்தநாளின்முசுகுந்தனுஞ்
செம்மல்சேனையதிபர்க்குமக்களென வந்துவாழ்மரபர்திரளுநீஇத்
தம்மகத்துவமுணர்ந்திடாமலிழி சாதியோர்கணடைதழுவல்கண்
டிம்மகாமுனிவனன்னடைத்திற மியைந்திடப்பெரியம்பினன். (சசு)

செப்புமம்மொழிவினவியோர்சிலர் திருந்தினர்பலர்சினத்தராய்
வெப்புரைத்தொகைமொழிந்திகழ்ந்தனரொ ரிடையன்மாய்ந்தசினமேடத்தோ
டொப்புடைக்குருவையோரிரண்டிதனு ளுள்ளகொண்மினெனவோதியே
பப்புபாதிலைதிருத்தியங்குலவு பலருநன்கறியநிலவினன். (சஎ)

அவர்கடம்மிலொரிடக்கனித்தசை யருந்துமாசையிலழுந்துமோர்
தவசியிம்மலையினடிவுறுங்குகை தனிற்றனித்துளனெனச்சொனு
னுவகையோடுசிசமென்றுசென்றவ னுரைத்தலுந்தவனுறுத்திடா
தெவளவென்றுவிலைவினவினாலவரு கீதுமென்றினிதனுப்பியே. (சஅ)

கற்றைவார்சடிலநாதனேப்பெரிது கருதியன்பொடுகசிந்துநீ [ர்
யிற்றையென்னிடமிதுய்த்ததேனெனவொரினியபாடல்சொலிறீற்றிலோ
சற்றையிட்டனனெழுந்திரண்டுகுரு ளையுமளித்ததுசணத்திலப்
பொற்றையிற்றழைகொய்திட்டுமங்கதுபுரந்தனன்பொருவில்பொறுமையான்.

அன்றுபோய்மறுதினத்தவாயனவ ணடைதலுந்தனதொராடுதான்
கன்றுபெற்றுநிலைநிற்கைகண்டளவில் களியினேடுவியனடையவே [நிற்
பொன்றுமஃதுகொலுமுனிவனென்னல்பகர் பொருள்கொலோவிவைகொல்வேட்கை
கென்றுகேட்டலும்வணங்கியன்னவைகொ டேகினன்மலையிறங்கியே. ()

போமவன்பழையதெருவிலுற்றது புகன்றனுப்பினனையெள்ளியத்
தீமகன்சொல்வழியுகியம்பெறுத றேற்றமேயெனினுமத்தவர்
சாமயந்தினுமொரீனனென்றமொழி தழலெனச்சுடுவதென்றுமம்
மாமயேசன்முனியிற்பல்கோடியிடர் வந்துசூழனிசமென்றுமேல். (நிக)

அருணையீசனவனன்றியில்லையிலை யென்றுமாயிரவிதத்தவாம்
பொருணயம்படுசொலோதியோரிரு புயத்தினுங்துவள்புனிற்றிளங்
குருளையேந்திமுதனுள்சுமந்தவது கூடவேயினிதுகூய்வரச்
சுருள்குழற்றன்மனையாதியோருவகை தன்னவேமனையினண்ணினன். ()

அன்றனுப்புகையினுந்தடாதசில ரங்குகூடியொருமைந்தனை
யின்றமாமுனியெழுப்புவானெனி லெழுந்திரேலெனவொர்பாடையிற்
றுன்றவைத்தவன்முனேகியிப்பிண மெழுந்துபேசவருளென்றலும்
பொன்றலுற்றவுயிர்போயதென்றன னவாறுபோயதெமபுரமரோ. (நிகூ)

பொய்ப்பிணங்கிருவணமலைக்கடவுள் பொற்பதம்பரவுபுனிதனுன் [ய்த்
மெய்ப்பிணத்தகையடைந்தபோததொட வீணராமவர்வொருண்டுபோ
தப்பிதஞ்செயன்மொழிந்துவாடினர் தமர்க்குளுள்ளசிலதகுதியோ
ரிப்பிழைப்பயனெவாறுமுற்றுறுவ தோவெனப்பெரிதிடைந்தனர் (நுச)

கோளர்வைகுநகர்கொல்லினும்புகலல் கேட்டிடாதநகர்கோரவெங்
காளையாகுமவர்கதறுமூர்நெடிது கனபழிச்சுமைசுமக்குமூர்
தேளைநேர்பதகர்வாழுமூரெனுரை செப்பியேயழியுமூரெனு
தாளுநாதனடநாளுளேனெனலி லழிவுறுதருணமலையெனு. (நுந)

ஒருதமிழ்க்கவியுரைத்தமாமுனிவ னுள்ளெழுந்தசினமொருவினுன்
மருவுபன்னிருசகத்திரங்குடி வளங்கொளக்குலவுமனிதர்தாம்
பெருமிதக்கலியுநோயுமெய்தியதி பேதவாதவல்விகாதராய்ப்
பருவரற்சுமைகொடேகினுரளவில் பலபலூர்தொறும்வசிப்பவே. (நுசு)

ஊருடன்குலமுமதமுமங்ஙன முரைத்திடும்பலபல்கூட்டமுஞ்
சேருமோர்புருடனுல்விளங்குமொரு தீயனுலழியுமென்றசொற்
பாரும்வானமுமுரைக்கைமெய்ப்பட.வொர் பதிதனப்பரமமுனியிடங்
காருடற்பொதுவன்மாய்ந்தவாட்டின்வில கழறுமாறுவிடல்காட்டுமே ()

சேணிடத்திரதகுளிகையாலுலவு சித்தரும்பெரிதுசிந்தியா
நாணிடச்செயனடத்தியுற்றகுகை நமசிவாயமுனியிசையினுல்
வாணிலாவருணநனிவிளங்கியது வம்புசெய்தகலுமாபினிற்
பேணியோர்சிலரவூரிலுற்றனர் பிறந்தமாட்சிமைபிறங்கவே. (நுஅ)

ஒருதினத்தினிலொரிடையனூறுபசு வோடவெற்பருகிலுற்றபோ
தருமைமிக்குறுமவற்றுளொன்றையடல் வேங்கைபற்றியகலத்தெரிந்
திருமருப்பழகுமுதலவுஞ்சொலி யிரங்கியேயவன்விரைந்துபோய்த்
திருவருட்கடலையனேயவம்முனி செவிப்படச்சொலியிறைஞ்சினுன். ()

ஆயன்வந்ததனைடோதன்மட்டுமொ ரரைக்கவிக்கிடையறைந்துபின்
மாயவன்விழிசுமந்திடுஞ்செழு மலர்ப்பதங்கொளருணேசனைக்
கூயதைக்கடிதுபார்பழிச்சுமை கொளேலெனுவரையுமோதினுன்
றீயவெம்புலிகொணர்ந்துவிட்டது திரும்பிவந்தவழிசென்றதே. (சுo)

அப்புலிக்கடியினுலுகுங்குருதி யடைபடப்பொடியினுலடைத்
திப்புன்வாதனைசெயாதினேயுலரு மேனையோர்சொல்வழிமூன்றுநாள்
பொய்ப்புலிக்கெலிகொலாதவாறென நினைந்துசிற்சிலபுரிந்திடே
றப்புருதிவணளித்துளானினை யென்றனன்பொருவிறவசியே. (சுக)

ஆயனங்கதுவினுவியுன்னேயல தறிகிலேனுருவர்தம்மையென்
றேயவோதுபுவணங்கியப்பசுவொ டேகியங்கதைநினைந்தழும்
வாயகன்றமுதருந்தவூட்டியதன் வகைபலர்க்குரைசெய்துற்றனன்
சேயசோணகிரிநாதன்மெய்யருள் செறிந்தவர்க்கரியதில்லையே. (சுஉ)

கச்சிமாநகர்விடுத்தொர்தாதகுரு கனகதண்டிகையிலேறியே
நச்சியுத்தரதிசைக்கொடேகுகையி * ஞகன்மைந்தன்விழிநண்ணியாண்
மெய்ச்சிவன்†கிரிதெரிந்ததிங்கிதென் விழிப்படாதுமறைமின்னென்ரூன்
றைச்சிடுங்கலிகளால்விளங்கும்விரு தான்மறைத்தனர்கடாசரே. (சுஉ)

அதுநடந்ததுபல்காததூரமதி லருணையின்குகையுளமர்வலோன்
கதுமெனுநகைசெய்தொருதமிழ்க்கவி கனற்பிழம்பெனவிளம்பினன்
விதுவணிந்தசடைநம்பனேப்பரவும் விரகிலாதுகெடும்வீணனென்
றிதுபிறந்திடலுமவன்விழிக்கணெளி யிற்றதெட்டுணையுமின்றியே. (சுச)

உரகவெற்பிலவனுற்றதுங்கரிய னுக்கியைந்தபணிசெய்தது
மரனேயம்மலையினிற்றுதித்தியென வன்னவன்சொலியனுப்பலுங்
கரவில்சிந்தையுடனுந்தரத்தில்வெகு கவிசொலிக்கணிணேபெற்றதும்
பரவையாடைபுனேபாரின்மீதுபகர் பற்பன்மானிடருளார்களே. (சுஎ)

பின்னுமங்ஙனமநந்தமாடல்கள் பிறங்கிடும்படிசெய்துற்றனன்
மன்னுதென்னருணேயீசர்தம்மருள் வசத்தனுகுமொருமன்னனுற்
பொன்னுடன்பன்மணியணிதருஞ்சிவிகை புவியெலாமறியவீந்ததன்
முன்னுகைக்கவுமியம்பினர்வயது முறையினூறுநிறைவாயதே. (சுசு)

பிரமனிட்டபொதுவாயுண்முற்றியது பின்னுமிங்குறுதல்பிழையெனத்
தரமதற்குரியவாறுசெய்ததொர் சமாதியின்குழியிறங்கலும்
பரமன்விண்ணினிடைநின்றுவந்துளவர் பற்பலோர்களும்விணவவே
யுரமொடின்னமுமவளவுநாளுலகி லுறுகவென்றுரைசெய்தானரோ. ()

வேதனன்றெழுதும்விதிபிறழ்ந்ததுபல் வெற்பிலுற்றபலசித்தருந்
தாதளேந்தசிலகற்பமேவயது தருவதென்றமொழிதப்பிய
தாதவன்சியொடங்கியுங்கணெனு மருணேநாதர்திருவருளினு
லேதடைந்திடினுமடையலாகுமென விகமும்வானமுமிசைத்தவே. ()

வெளியில்வந்துமுனமொத்திருக்கையின் மிலேச்சமன்னவனெருத்தன்வெங்
களிறுபோல்பவனகித்தெனும்பெயர்கொள் கண்டகன்பொருவில்காதக
றளிர்கிறத்துமடமாதரைப்பலபல் சாதியிற்கவர்தருக்கினன் [ன்
வளியெனச்செல்பலபரியினுலகை வாட்டினன்கலியன்மகிழவே. ()

தண்டமிழ்ப்பெரியதேயமெங்குமொரு சமயமிஞ்சையுறவுஞ்செய்தான்
வண்டனுமவனியற்கையாவையும் வகுத்துரைப்பதிழிவாகுமத்
துண்டரீகனழிகாலம்வந்ததுயர் சோணவெற்புருவமாகுவார்
கொண்டகோயிலினிடம்புகுந்துபல கோரணித்தொழினடத்தினன். ()

அக்கடும்பிழைசகித்திடாதுகுகை யதனில்வாழுமுனியவனுடன்
றொக்கசேனையுமெரிந்துவீழ்ந்தரவொர் சொற்சொலாதுதிரிசுடர்களா
முக்கணுதன்மிசைநெற்றியுற்றகணு முடிவினித்திரையடைந்ததோ
கைக்கணிச்சிபரிபோயதோவெனவொர் கவியுரைத்தனனிரங்கியே. ()

---

* ஞகன்மைந்தன் - கண்ணப்பநாயனர். † கிரி - திருக்காளத்திமலே.

அன்றிராவிலகிதின்கனவினிடை யருணையீசொருதவசியாச்
சென்றிலங்குபடையொன்றினன்முது கிடத்திலோர்சிறிதுகுத்தினர்
வென்றிவீரர்குலகாலனுமவன் விழித்தனன்சிறிதுவேர்க்குரு
வென்றியம்பரியவூறலோடவ ணெழுந்ததோர்கொடியபிளவையே (எஉ)

அதுதெரிந்துமனமஞ்சினனவனெ டங்குவந்தசிலபெரியர்பா
லிதுவிளம்பினனிவாலயத்தினி லிருக்கொணுதெனலுமேகினன்
சதுமுகப்பிரமனனையவேதியர் சடங்குபற்பலவியற்றியே
விதுவிருந்தசடையீசர்பூசைவிதி விலகிடாதுநிறுவினரரோ. (எஊ)

போயவன்பிளவைமிகவளர்ந்துபல் புழுக்கள்பற்களுளவாமரீஇ
யேயதுன்பமொருகோடிநல்கிடலுமி யாக்கையூனவையருந்திடா
தாயசூலுடையமகளிரைக்கொலைசெய் தவர்சிசுக்களெயெடுத்ததிற்
றோயவைத்தனனெனச்சொல்வார்பலர் துடித்திறந்தனனெரிரவிலே. ()

அவனிறந்தினமுலகிராவணனி ரணியனுதியரழிந்தநா
ளெவளவார்வமருவுற்றதோவவள வெய்தலுற்றதிதுமெய்மையே
தவளவாரணமுகைத்துளானகர் தனிற்குலாவமரர்தாமுமிக்
குவகைவாரியிலழுந்தினரிவை யொருங்கியம்மலரனெருவனே. (எடு)

முன்னைநூறுவயதுங்கழிந்தபடி முக்கணனுவலுநூறுமற்
றன்னைதந்தைகுருதெய்வமாமலையி லன்றுசெய்குழியினிடைபுகுந்
தென்னையிவ்வுடலெனச்சொலேன்மினென வேயியம்பியருவெய்தினன்
பின்னையுள்ளவரிலிங்கம்வைத்தினிது பேணியுயந்தனர்பெருக்கவே. ()

இந்தமாமுனிவன்வெண்டலைக்கவிக ளெண்ணிலாதபலசொல்லினு
மந்தமாதிதொடர்பாடல்சோணகிரி யாதிமீதுசொலனூறுதான்
முந்தவிப்பெரியன்வந்துபோகின்முத லாகுமக்கவியின்முதியனென்
றெந்தநாவலவனும்புகழ்ச்சிபெற வில்லியீதறிவள்வாணியே. (எஎ)

அந்திவானனையவருணாதர்திரு வருள்வளக்கடலின் மூழ்கலா
னந்தியன்னகுகைநமசிவாயர்கதை நானறிந்தளவி லோதினேன்
பிந்தியன்னவர்தமடிமையாய்க்குரவ னெவெனுவவர்சொல் பெருமைபெ
றுந்திசைப்புலிசை நகரிலேகினர்த முயர்வுகூறுவனெர்சிறிதரோ. [ம்

குகைநமசிவாயசுவாமிகள்சருக்க முற்றிற்று.

ஆதிருவிருத்தம் - கடுகஉ.

முப்பத்தைந்தாவது

குருநமசிவாயசுவாமிகள் சருக்கம்.

நலஞ்சேருணைக்குகைவாழு நமச்சிவாயர்
பொலம்போல்பதநாடலிற்சற்குரு போதம்வாய்ந்தோ
னலந்தேதில்லைக்கேகையிலம்மலை யாரமாகப்
பலஞ்சாலும்வெண்பாவொருநூறு பகர்ந்திட்டானே. (க)

அவனுங்குருவேயெனவெண்கவி யன்றிரும்பாவுஞ்
சிவனன்றிமற்றைச்சிறுதெய்வமுஞ் சிந்தியான்றுன்
புவனம்புகழ்தில்லையிற்போய்ப்புலி யோடுபாம்புந்
தவமுன்செயற்காடஞ்செய்சபை தன்னைக்கண்டான். (உ)

அங்குற்றபொன்விக்கிரகத்துரு வாயமூர்த்தி
தங்குற்றதன்னன்புடைச்சற்குரு வாகித்தோற்றிற்
றிங்குற்றதனற்பிழையின்றென வெண்ணித்தேறி
யெங்குற்றதுமோர்பொருளென்றுண ரீடுவாய்ந்தான். (ஊ)

ஒருக்காலெனக்காவின்னுமாட லுளற்றுண்ணுதோ
விருக்காணுவலும்பர்முன்கண்ட தெனக்கொப்பாமோ
மருக்காலிதழித்தொடையாயென்றிரும் வண்டமிழ்ப்பாத்
திருக்கால்குனித்தாடினன்மீதங்கு செப்பினனே. (எ)

அப்பாடலுரைத்தலுமவ்வம் பலத்தின்முன்னர்ச்
செப்பாலுருவஞ்சமைந்துற்ற சிவன்களீரென்
றிப்பாருலகிற்பலர்காணுற வேநடித்தான்
பொய்ப்பாசமற்றூர்கவியாது புரிந்திடாதே. (ஏ)

அதுகண்டுவப்பாம்பெருஞ்சாகரத் தாழ்ந்துஞான
மதுவுண்டவண்டாமெனத்தன்னை மறந்துவானின்
விதுவொன்றுசடைப்பெருமானருள் வென்றிதுன்றிப்
பொதுவென்றநிலத்தலைநின்றுளம் பூரித்தானே. (ஐ)

மனிதத்திரளும்பலதேவரு மற்றையோருங்
கனிவிற்றுதிக்குந்திருத்தில்லையிற் காத்திருந்தான்
பனிவெற்புடையாண்மணவாளன் பகர்ச்சிதன்னற்
புனிதத்தலம்பற்பலகண்டன்பிற் போற்றப்போனன். (ஒ)

போகுந்தலந்தோறுடந்த புதுமைகோடி
யாகும்பகர்தற்கறியேனறை வாருங்காணேன்
பாகும்பழிக்கப்படுசெந் தமிழ்ப்பாண்டிநாட்டில்
வாகும்புகழுங்கொடிமீடு மதுரையூரில். (ஓ)

போனின்பலவீட்டினுழன்னம் புசிக்கைவேட்டுத்
தானைப்புகுந்தேற்றுமொர்சற்றுங் தரப்பெற்றில்லான்
மேனாளரசாட்சிபெற்றெண்டிக்கும் வென்றுமீண்ட
மீனும்பிகைசங்நிதன்னில் விரைந்துசேர்ந்தான். (கூ)

ஆலம்புரையுங்கறுப்பாரங் கயற்கணம்மே
காலங்கழியும்புகல்சொற்கழி யாதுகண்டாய்
சாலப்பசித்தார்க்குமின்பாலமு தந்துய்த்தார்க்கும்
போலப்பொழுதேகுமென்பாடல் புகன்றிட்டானே. (கo)

அப்பாடலுரைத்தலுமப்பரை யாருங்காண
மெய்ப்பார்ப்பனப்பெண்ணுருக்கொண்டு விளங்கிவின்னோர்
துய்ப்பாமமுதம்புரைபாலும்வெண் சோறுமீந்து
மைப்பாற்குலவுஞ்சிறுமின்னின் மறைந்திட்டாளே. (கக)

மீனக்கொடிக்காவலன்செய்ததொர் வேள்விவந்தா
டானன்னமிடும்படியெண்ணிய தன்மையாலே
மானம்மதுரைப்பதிவைகிய மாதரெல்லா
*ஞானம்முனிக்கில்லையென்றோத நடாத்தினளே. (கஉ)

எந்தத்தலமுந்திருத்தில்லை யிடத்திற்காணு
மந்தச்சபையுள்ளமைந்துள்ளன வாமென்றோர்ந்து
முந்தக்குரவன்பகர்ந்திட்ட முறைவழாமல்
வந்தங்கமைந்துற்றனன்சிந்தை மகிழ்ச்சிகூர்ந்தே. (கங)

ஞானப்பெருங்கூத்தினன்பாதங்க ணண்ணலாலென்
னீனக்கொடுங்கூத்துகளியாவு மிழந்துவிட்டேன்
வானத்தவரிந்திரன்மாலய னுதியோராம்
யானற்புதமீதென்றோர்பாட்டு மிசைத்திட்டானே. (கச)

குருவாய்குருவோவெனச்சொல்பயன் கொண்டதொண்டன்
பெருவாய்மைமுற்றிப்பிரமாதியர் பேசிக்கொள்ள
மருவார்மலர்க்கொன்றையன்பொன்னடி வாய்ப்புகுந்தான்
கருவாதனையென்றுசொலேழு கடலுந்தித்தே. (கடு)

திடமிஞ்சியபத்தியுளார்பலர் சேர்ந்துசீர்சான்
மடமுந்திருக்கோயிலுஞ்செய்து வணங்கலுற்றூர்
நடனம்புரிபூங்கழற்போற்றுநர் நாசமில்லா
ருடலும்பரமாயதென்றோதினு மொக்குமன்றே. (கசு)

சிரத்திற்குருநாமந்திகழ்ந்த நமச்சிவாயன்
வரத்திற்புவிசொல்லிடக்கேட்டன மட்டுஞ்சொன்னேன்
நரத்திற்பெரிதோங்கியதத்துவராய மூர்த்தி
சரத்திற்சுருக்கப்படமேலினிச் சாற்றுவேனே. (கள)

குருமசிவாயசுவாமிகள்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கடுஉ.

---

* மானமதுரை / ஞானமுனி } என்பன இசைபற்றி மகரமிகுந்து வந்தன.

முப்பத்தாறுவது

தத்துவராயசுவாமிகள் சருக்கம்.

சோழநாட்டிரு வைதிகவேதியர் சொருபநிச்சயந்தன்னே
வீழவல்லவ னொருவன்றத்துவத்தையே விழைபவனொருவன்றும்
வாழவந்ததோர் சாதியின்முறைப்படி மாமனுமருகோனு
மாழநெஞ்சகத் தாற்பெரிதுழைத்துமெய் யருளடைந்திலர்மன்னே. (க)

குரவன்றன்னருள்பெறினன்றியாதுங்கை கூடிடாதெனத்தேறிப்
பரவைஞாலமேற் றெற்கினும்வடக்கினும் பறிந்தனரிருவோரு
முரமொடப்பய னொருவனுக்கெய்தின்மற் றொருவனுக்குபதேசங்
கரவிலாதுசொற் றிடுதலேகடனெனுங் கட்டுரைகுறிக்கொண்டே. (உ)

இருவர்தாமுமஃ தெய்தினுமெய்திடா திடையினும்வழக்கின்றென்
றொருவர்சொல்லவும் வேண்டுமோதென்றிசை யுறுஞ்சொருபானந்தன்
மருவுஞாழலங் காட்டிடையொருபெரு மாதவன்றனைக்கண்டு
திருவருட்செய லடைந்துபோயினவழி திரும்பிவந்தனன்மன்னே. (ங)

மற்றைத்தத்துவ ராயன்வேங்கடம்வரை வருந்துபுடங்தேகி
யொற்றைநாளினுந் தனைத்தடுத்தாள்பவ னொருவனைக்காணை
வற்றைநாள்பிரிந் திடும்வயினடைதலு மவனொருமுனியாகிக்
கற்றைவார்சடைத் தம்பிரானெனத்திகழ் காட்சிகண்டடிவீழ்ந்தான். (ச)

அம்மலைக்குமுத் தரத்தினுமவன்செலா மையினிமித்தமதோதிற்
றம்மதன்றிய கலியினம்பயில்வுறு தானமென்றிடலோர்ந்தே
செம்மவாவறத் துறந்தமாமுனிவனத் திறமிவனையுஞ்சேரக்
கைம்மலர்ச்சிரத்தமைத்தொருமொழிசொலிக்கடாட்சமுஞ்செய்தானே.

சொருபனுகிய குருபரனநுபவந் துகளிறத்துவராய
னிருதயத்தினு ணிகழ்ந்ததாலுவகைவா ரிதியின்மூழ்கினரானுர்
சருவ்காரண மானமனேலையந் தனைக்குறித்திலராகி
யருமைநூல்வழி பிதற்றும்வாய்ஞானிகட் கத்தனேபாடின்றே. (சு)

சீடனுமவன் செந்தமிழ்ப்பெருங்கடற் சீர்முழுதறிந்துற்றும்
பாடல்விட்டன னிராப்பகலநுபவப் பழக்கமேசெயலானு
னீடறிந்தில ரவனேயத்துவிதியே யென்னினுங்குருபத்திப்
பீடனேந்தமை யுணர்ந்தவர்சமரசப் பிடிப்பனென்றிசைப்பாரே. (எ)

குரவன்பத்தியிற் சீரியரளவிலார் குவலயத்தவிர்ந்தாலுங்
கரவினெஞ்சுடைத் தத்துவராயனைக் கடிப்பவரிலர்மெய்யே
யரனுமாயனு மயனுமற்றையவிண்ணோ ரனைவருமவனேயென்
றிரமுற்றோனது வேமறைத்துணிபுமாஞ் சிறியவருணாரே. (அ)

அத்தகைப்பெருஞ் சீடனுமவன்முனு ளறிந்துவப்படைந்
முத்தமிழ்ப்பயன் வீண்படாநிமித்தமே முதிரருள்வடிவான
வுத்தமக்குரு வவன்றன்மேற்சினஞ்செய வுன்னினனிடங்காணுன்
சித்தமுற்றுருப் படுமவர்தம்மிசைத் தீங்கெவர்தெரிவாரே. (கூ)

கருமவாதிக டருப்பணஞ்செயத்தகு காலமத்தனையுள்ளு
மருமையாமமா வாசையிற்றயிலமிட் டாடல்வேட்டனனுசான்
வருநனுளிது வெனச்சொலத்துவக்கிய மாவெனச்சொலிவிட்டான்
றருமமியாஞ்சொலன் முறையலவெனுமதி தகியில்வந்ததனுலே. (க0)

கழறுமம்மொழி வினவலுங்காலமுங் கருமமுங்கடந்தேன்பால்
விழலேநேரவற் றினைக்குறித்தரைமொழி விளம்பினைநின்ஞானத்
தழகுநன்றுநன் றினியென்முனிற்கொணு தகன்றுபோகுதியென்னத்
தழலேநேர்கொடுஞ் சினத்தர்போற்பேசினன் சற்குருபரன்மாதோ. (கக)

சிடர்தஞ்சிகா மணியதுவினவியுந் தெண்டனிட்டுடனீங்கிப்
பாடனெஞ்சுறு தாம்வகைதொடுத்தலைப் பரவையில்விழப்போனுன்
கூடவுற்றவர் களிலொருவனேவிடுத் தருட்குருவவன்றேகம்
வீடலெய்துமு னியாமழைத்தனமென விளம்பிமீட்குதியென்றுன். (கஉ)

அவன்சென்றுழியி லிறங்கிநீர்கழுத்தள வாம்வரைபொறுத்தன்னே
னுவந்துன்றேசிக னுனையழைத்தானென வோதலுமுடன்மீண்டு
கவன்றுபெண்மட லேறுவதாப்புதுக் கவித்தொடைதொடுத்தேகிச்
சிவன்றனைப்புரைந் தமர்சொருபானந்தன் சேவடிபணிந்தானே. (கங)

பணிந்தசீடனைக் குருபரனணைத்துநின் பாடல்கள்பார்மாதுக்
கணிந்தபூணெனத் திகழ்தரும்பொருட்டினே யலக்கழிதனன்கண்டாய்
துணிந்தநீயினுஞ் சிலகவிப்பனுவல்கள் சொலிமுடிக்குதியென்றுன்
றணிந்தசிங்கையோ டவனுனதாணையிற் றவறிடேனெனச்சொல்லி. (கச)

பரணியோரிரண் டொடுபலவிதம்படு பாடுதுறையுநல்ல
பிரமகீதையா தியசிலநூல்களும் பேசுபுமுடித்திட்டா
னரவநேர்சில புலவராயிரங்களி றடுத்திறமையுமுன்றன்
குரவனுமெதி யுளன்கொலோபரணியேன் கூறினேயெனக்கேட்டார். ()

கேட்டபாவலர்க் கம்முனியென்குரு கிளர்களிற்றினங்கொல்லான்
வேட்டநெஞ்சக மாமதமாப்பல விழிமலர்கொடுகொல்வான்
வாட்டடங்கைவீ ரரிற்கடையேயென மதிக்குரீவண்வந்தாற்
கூட்டமோயெர் நிருவிகற்பப்பதங் கொளச்செய்வானிசமென்றுன். ()

அன்னவாசகங் கேட்டலுமதுநிச மாமெனிற்சொலலாகு
மென்னவக்குழாத் தினரவனுடனெழுந் தேகினராங்கேகு
முன்னமக்குரு வுணர்ந்தவர்தம்மிசை முண்டகக்கட்பார்வை
துன்னநோக்கின னேக்கலுஞ்சீடன்வாய் சொன்னவாறிருந்தாரே. (கஎ)

எழுதுசித்திரக் கூட்டமொத்தங்கவ ரிருந்தாலவர்ச்சேர்ந்தோ
ரழுதுநெட்டியிர்த் திறந்தனரோவென வையுறீஇத்துயர்ப்பட்டார்
பழுதுறுத்தவ மெத்தனேபிறப்பினிற் பரிந்துசெய்தனர்கொல்லோ
முழுதுமாகியொன் றேனுமாகாநிலை முன்னுமுனடைந்தாரே. (கஅ)

எந்தச்சித்தியு மிதயமதனேயடக் கிடுதலிற்கடையென்ன
முந்தச்சிற்சிலர் நூல்சொலுமவ்வழி முயல்பவர்களுமோர்வார்
மந்தப்பக்குவ ரறிந்திடார்தத்துவ ராயனவ்வலியோடு
சந்தப்பாவரை தெளிதருபுலமையுந் தலைக்கொடுதிகழ்ந்தானே. (கசூ)

தனதுசற்குரு வாஞ்சொருபனேயவன் றன்குருவொடுபாடி
யனகமெய்ப்புக ழுறச்செய்தானவன்பக ரருந்தமிழ்க்கவியின்றேற்
பனகபூடதி தலைச்சுமையாகெடும் பாரினிற்பலர்தாமு
மினதன்மைக்குரி யாரென்றவ்விருவரோ டிவனேயுமியம்பாரே. (உ0)

மகர்க்குப்பேரிடு வார்பலருலகினில் வழுவிறத்துவராயன்
றகப்பனேர்குரு தந்தையாகிமுழு தாதைக்குப்பெயரிட்டா
னுகப்பவேமுதற் சிவப்பிரகாசனென் றுள்ளவாறுணராதார்
சகத்திற்பின்றமிழ்ப் புலவனுகிழந்தவன் குனெனமருள்வாரே. (உக)

மூந்துகாள்சொரு பானந்தனுய்வுற மொய்த்தஞாழலினின்று
வந்துபோயவன் குலமுறையாதிய வகுத்துரைப்பவரின்றே
யிந்துசேகரன் மாலயனுதிய ரினத்தொருவன்குனே
வைந்துவெம்புல னடக்கியுய்ந்தவரினத் தொருவனேவருள்சான்றே. ()

சொருபன்றன்றிரு வருளினுல்விகற்பமில் சுகபதமடைந்தோரைப்
பொருவிலாச்சக சகிலையில்வரும்படி பொருத்தினனேமீட்டா
னெருசில்லோர்துற வடைந்தனரொருசில ருலர்புளிப்பழமொத்தார்
நிருபர்தம்மினு ஞானிகண்மேலெனு நிசம்விளங்கியதன்றே (உங)

பத்திவேறுமெய்ஞ் ஞானம்வேறெனப்பகர் படிற்றுரைப்பலமூடர்க்
கித்திறத்துயர் தத்துவராயன்ற னியற்புலமையுமோன
சித்திரல்குசற் குருவிசுவாசமுந் தெளிவுமெய்தரிதேயா
மெத்திறத்தது மாயையான்பிரமமென் றியம்பன்மிக்கெளிதாமே. ()

யான்பரம்பொரு ளென்றுசொல்லினுங்கதி யெய்தலாமெனுநூல்க
டான்பயின்றிலன் போலுமத்தத்துவ ராயனுந்தவசீலன்
கான்படர்ந்தகொன் றைத்தொடைச்சிவனிகர் கருணையங்குருமூர்த்தி
வேன்படுஞ்சினஞ் செயல்பொறுதலைக்கடல் வீழ்ந்திடச்சென்றனே. ()

சொருபன்போல்பவ னல்லனேயென்னினுந் தொடர்ந்தொருசொற்சொன்ன
குருவைத்தெய்வமென் றுணர்பவனெண்ணங்கள் குறைவறநிறைவேறு
மருவமேபர மெனத்துணிவார்கட்கு மதுபெருந்துணையேயாம்
பருவமெய்துமுன் பிஞ்சினிற்பழுத்துப்பாழ் படுமெவர்பலரம்மா. (உசூ)

துவிதமதத்துவி தமெனப்போராடுநர் தூயமெய்யுணர்வில்லா
செவிதத்தாயினுஞ் சித்தியுமுத்தியு மெய்தலேகுறியாகு
மவிதத்தன்னவன் றன்னேயத்துவிதியென் றறைபவர்பலரேனுங்
தவிதத்தீர்தரு குருபத்திமிகுதியாற் சமரசியானனே. (உள)

பண்ணமைந்தநான் மறைப்பொருட்குரியபார்ப் பனக்குலமகவாகித்
தண்ணளிச்சொரு பானந்தற்கடிமையாந் தத்துவராயன்ரு
னெண்ணமிக்கவே தாந்தசித்தாந்தவாழ் வெய்தியதரிதன்று
வண்ணநாவலர் தங்களிலொருவனும் வாழ்வுறல்வியப்பாமே. (உஅ)

சொருபனென்றசற் குருபரன்கழிக்கருங் தொம்பதங்கடந்தப்பா
லருவமாம்பரத் திடைக்கலந்திட்டதுண் டதன்வகைவினவில்லேன்
பொருவிறத்துவ ராயனுகியதமிழ்ப் புலமைசான்முனிவீட்டின்
மருவலுற்றநா ளவனுடல்சமாதியில் வாய்ந்ததாப்பகர்வாரே. (உக)

தண்டமிழ்ப்பெருந் தகவுடைத்தத்துவராயனுங் குரவோனு
மண்டகோடியுண் டவிர்தருமகண்டமூ டடைந்தவாறுரைத்திட்டேன்
றெண்டனிட்டதொண் டருக்கெலாம்வீடரு டிருச்சிற்றம்பலநாடி
கொண்டதாஞ்சரித் திரமுங்கேட்டளவினிற் கூறிடத்துணிந்தேனே. ()

தத்துவராயசுவாமிகள்சருக்க முற்றிற்று.

ஆடு திருவிருத்தம் - கருடுக.

முப்பத்தேழாவது
திருச்சிற்றம்பலநாடிகள் சருக்கம்.

வளனுட்டொரு சைவவேளாளன் மகத்துவம்பெறு குருத்துவம்வா
யிந்தோ, ளுளதன்பன்னியோ டருந்தவமுயன்றிட் டோரிரண்டுபா லகர்
தமைப்பயந்தான், பளபளீரென வெயினிலவெறிக்கும் பரிதியும்பனி
மதியமும்போல்வார், களவின்ஞானமுஞ் சித்தியுமெய்துங் காரணந்த
னேக் கருதிநொந்தனரே. (க)

சீர்த்ததாகிழ முயற்சியாதென்னிற் றெய்வசிந்தனை யேயெனத்தே
றிக், கூர்த்தவேலனை மூத்தவன்கருதிக் குறிக்கொண்டானிளங் கோக்க
ளிறனையான், ஞார்த்தராகிய சாரணர்க்கெமனுத் தோன்றியேபெருஞ்
சோதியிற்கலந்த, * மூர்த்தநாடுபு ரனிமுயன்றிட்டான் மொழியுபாசனை
முதிர்ச்சியெய்திடுநாள். (உ)

சென்றின்மாநகர்க் கேகினன்முன்னேன் றேசிகோத்தம னுக்குகன்
விழிமுன், வந்தியைந்தமெய் யருட்பயனளித்தான் மகிதலத்தரும் வான
நாட்டினருஞ், சிந்தியாவொரு நாமமன்னவற்குத் திருச்சிற்றம்பல நாடி
யென்றளித்தார், முந்தியன்னையுந் தந்தையுமிடும்பேர் மொழியக்கேட்டி
லன் மூதுலகினரே. (ஈ)

---

* மூர்த்தம் - திருஞானசம்பந்தமூர்த்தி.

இளையன்கண்ணெதிர் காழியர்பெருகா னெழிலுருக்கவர்ந் திட்ட செஞ்சோதி, வளைகுலாஞ்செவிக் கோலமீத்தந்த மைந்தன்றன்னுரு வே கொடுவெயங்கித், தளையையன்னமற் றையலிலையாவுந் தணந்ததத்துவா தீதமாஞான, விளைவுங்கண்ணுடை வள்ளலென்பெயரு மேவுநல்கலின் மிகமகிழ்ந்தானே. (ச)

அந்தஞானசம் பந்தர்தங்கூட்டத் தவரிலுற்றவ னிவனென்பாரது பொய், பிந்தவந்துபா சித்தவன்ரூனே பேசுமன்னவன் பிரியதூலொன் றுட், பந்தமற்றபட் டினத்தடிகளையும் பழுதில்பத்திர கிரியையும்பகர்ந் தா, னிந்தஞாயநன் குற்றுணர்வார்க்கே யென்சொன்மெய்ப்படு மேனை யர்பலரே. (ஞ)

சமணரைக்கழு வேற்றுரீரென்னச் சாற்றும்பட்டினத் தடிகளையத ற்கா, விமலனேத்துதித் தாரின்முந்தினரா விளம்புவார்மொழி யதுவுமெய் யாமோ, தமயன்றம்பியென் றிருந்தவவ்விருவர் தம்மின்மூத்தவன் றன் னிடமிளையோன், சிமயவில்லினன் சமயமாஞ்சைவ தீட்சைபெற்றதாற் றெளிந்ததுண்டம்மா. (ட)

அருள்பெற்றுற்றவ ரிருவரின்முன்னே னமித்ததொண்டருக் கவர வரடையும், பருவங்கண்டுப தேசஞ்செய்திருந்தான் பகருமற்றையன் பழையசாதனமும், ரொருவிஞானமொன் றேயுரைத்தளவி லுறுகணீர் தன னுணர்ந்துமுன்னவன்பின், வருமவன்றனைத் திருத்தியுமவனவ் வம் புசெய்திடன் மறந்திலனன்றே. (எ)

அதுகண்டென்னெதி ரினிவரேலென்ன வண்ணன்சீறின னவனு முட்சினங்கொண், டிதுநின்றீட்சையின் குறியினிவேண்டே னெனக்கைப்புண்டரங் களிற்சிலவழித்துக், கதுமென்றேகுபு காவிரியாறு கடந்திட்டானுடன் கண்ணுதற்பெருமான், விதுவொன்றுஞ்சடை விட்டிழிந்தாங் கே வெள்ளமந்நதி மேற்பரந்ததுவே. (அ)

வெள்ளங்காண்டலுந் தன்னதான்மார்த்த விமலன்மேயபெட் டக த்தின்மேல்விழைவுற், றுள்ளதொந்துபோற் றிசைத்தனனதுதா னூர்ந்து நீந்தியங் குற்றதுகண்டோர், வள்ளனீர்மையித் தகைத்தெனவண்ணன் மாட்டுரைத்தலு மற்றவன்வியவா, தெள்ளநீரவைந் தொழிற்செயும்பரம னிதுசெய்திட்டதோ ரேற்றமன்றென்றான். (கூ)

சரியையாதிய சாதனமூன்றும் தவறுஞானதத் துவநிலையொன்றே, யுரியதென்றுதன் ரொண்டர்கட்கெல்லா முரைக்கின்ரோன்சிவ லிங்க மொன்றிடத்திப், பிரியமுற்றவா றென்னெனவியந்து பேசினர்பலர் சிலர் பெரியோனே, யரியசற்குரு நாதனென்றடைந்தா ரவனண்ணுமலைக் கரு குபோயினனே. (கo)

உற்றகண்ணுடை வள்ளலங்கொழிவி லொடுக்கமென்ரோர்ந்து லு ரைத்தனனுறுதி, முற்றமைந்தவர்க் கினியதேதவத்தின் முயல்கின்ரோ

ரிகழ் முழுவிரோதமதே, சொற்றமெய்ப்பொருள் சமரசமெனினுந் துவி தகண்டனர் துணைக்கொளுந்தகைத்தே, செற்றமிக்கவ னழித்தவெண் ணீற்றின் சிரும்பாரினிற் சிலர்தழுவினரே. (கக)

அவன்றனதுதொன் மரபினுக்குரிய வங்கமாயிருந் தடைந்தனனு கஞ், சிவந்ததியில்வெந் தேயொழிந்திருக்குந் திருச்சிற்றம்பல நாடியென் பவன்ரு, னுவந்தெணெண்மரோ டையமேற்றருந்தி யுடலிறந்தொழிந் திடிற்றொடற்குலகோர், கவன்றிடாதிழுத் தெறிந்திடக்காலிற் கயிறுங் கட்டுபு களித்துலாவினனே. (கஉ)

குரவன்றன்னெடக் குழுவினர்தம்மைக் கூட்டித்தம்மனைக் கொண்டுபோயொருவர், பரவியன்னமிட் டிடிலொருங்கயில்வார் பலதினத்தது பலிப்பதின்ரும, லரனிலோடுகொண் டிலந்தொறுமேற்றேற்றயில்வ தேதொழி லாயினொருநாள், கரவிலாவொரு வன்பெருமுயற்சி கைவந் தன்னவன் கடிமனைபுகுந்தார். (கங)

பாதபூசைசெய தரம்பைநெட்டிலைகள் பரப்பியுப்புமுற் பகர்பலநி றைத்துச், சாதமுந்துவ ரையினதுபருப்புந் தக்கவாறிட்டுத் தனைமறந்த வனுப், போதநெய்யென வேம்பதன்றயிலம் பொருக்கெனப்படைத் தா ன்மனைப்பூவை, யீதமைந்ததா னத்ததுமதுவைத் திருந்ததானத்தி லிது வும்வைத்தலினே. (கச)

வஞ்சமொன்றறி யாளவள்செங்கை மாற்றிவைத்தது மரன்றிருவரு ளா, லெஞ்சல்கூடித லின்றியேசமமா யிலங்கிடுங்கல சங்களுமாகி, லுஞ் சல்போன்றசை தரக்கயிற்ரூற்செ யுறியின்மாறுத லொருவியப்பன்றே, நஞ்சமுண்டவ னடியரீதுண்கை நவையன்றென்றுசொனரருமுள்ளாரே.

அன்னமுண்பவர் களிற்சிலர்சிறிது மறிந்திடாதுற்ரு ரருள்வசத்தி னரா, யின்னவாறடங் கிட்டதென்றுணர்ந்து மியம்பொண்ணுதென வே சிலரயின்ரு, சென்னனுனெரு பக்குவக்குறைவோ னீதுவேயென விசை த்தடங்கினனும், பின்னரவ்வித மிட்டவரறிந்து பெரிதுவாடலே பேச ருங்கொடிதே. (கசு)

ஒற்றைக்காலினிற் பழுதைகட்டினரா வுலவுமாறுபத் தோடொரை ந்தவரு, மற்றைப்போதொரு சூழலிற்கூண்டிற் றனுபவத்திற மவையுசா வியபி, னிற்றையங்குவே யென்றவன்வருகென் றிணையில்சற்குரு வியம் பலும்பணிந்தான், பொற்றைவில்லிதன் றில்லையில்வசிக்கப் போதியெம் மிடைப் புகறகாதென்றும். (கள)

ஆலயத்தினிற் பத்திசெய்தற்கே யருகனென்றுமங் ஙனஞ்சிஞள் செய்தாற், சீலமெய்துவை யென்றுகன்கோதித் திருவெண்ணீறளித் தனுப் பினன்சென்ரூன், பாலருத்துதாய் நீத்தலின்மேய்வான் பசும்புற்காட்டு றும் பசுவின்கன்ரெத்தான், கோலமாதிய வொன்றுநீக்காலுக் குருவுந் தெய்வமு மொன்றெனக்குறித்தான். (கஅ)

அகத்தின்பாவனே யேயெனப்பலவா, மறுபவங்கள்கண் டார்வமிக் கடைந்துஞ், சகத்தின்மானிட ரியாவருங்காணத் தக்கசற்குரு சங்நதியி டஞ்சேர்ந், துகப்பதேபய னெனவிழைந்துழைத்தா னுண்மைக்குண்மை யுண் டெனுமுறைப்படியே, தகப்பன்ரூய்புரை யுரித்துறுமவனுந் தனது நெஞ்சினோர் சார்நினைந்திருந்தான். (ககூ)

அத்தகைத்திருச் சிற்றம்பலப்பே ரடிகளோர்தின மறுபத்துமூன் று, பத்தர்தம்முடன் விழியெதிர்கண்டார் பலருங்கைதொழும் படியினி தேகிச், சித்தகாட்டுறு மொருசெல்வன்றன்பாற் சேரயாமெலாஞ் சிவகதி யடைவே, மித்தரைக்கணெண் ணெண்குழியமைத்திட் டிலிங்கத்தாபன மியற்றுகென்ரூனே. (உ0)

அவனவாறவ ணிசைத்தலின்முதனு ளம்பலத்தர னத்தனித்தொ ண்டற், கிவணமாங்கியல் கின்றதுபோகென் றிசைத்திட்டானவ னெழி னடைகொண்டா, னுவகையார்தரக் குருமற்ரோர்தம்மை யொவ்வொரு த்தரா வொவ்வொருகுழியுய்த், தெவளவேற்றந்தாழ் விருப்பினுஞ்சமஞ் செய் தேகமாகத்த னிடங்கலந்தானே. (உக)

தனித்தசற்குரு வுள்ளதோர்குழியிற் ரூனிருந்துமூன் றன்சொலாற் றில்லை, யினிற்சென்ரூனேயுங் கூட்டிலமிங்ஙா ளிவர்க்கெலாந்தகு மிதஞ் செய்தேற்றனமே, தொனித்தவர்கடப் புவியிகழாதோ தொண்டுகொ ண்டொர்சொற் சொன்னதுண்டன்ரூ, வந்தங்காட்டநம் முறைப்படி பழுதை யணிந்ததும்பொயோ வெனவழுங்கினனே. (உஉ)

அக்கணத்தவ னங்குவந்திறைஞ்சி யாண்டசற்குரு வாஞ்சிற்றம்பல வா, மிக்கநீயடி யேனெருவனுக்கா மீண்டுமீண்டெழுந் தருளவேண்டா வோ, சக்காயுத னன்முகனறியாச் சச்சிதானந்த சாகரந்தின்னிற், புக்க தோடது வாயெனவையாப் போதென்ரோர்தமிழ்ப்புதுக்கவிபுகன்ரூன்.

அதுவினுவலும் வருகெனவழைத்தன் னவனைத்தன்றுடை யாம்ப யினிருத்திக், கதுமென்றேயவ ஞியுந்தன்னுட் கலப்பக்கொண்டுதண் கங்கையுங்கவின்ரூய், விதுவுஞ்சூடின னருளிடைத்தான்போய் விரவ லுற்றனன் விண்ணவர்தாமுஞ், சதுமுகத்தயன் மரபராமுனிவோர் தா முமவ்வியன் சாற்றினரன்றே. (உச)

குற்றவாளியென் றகற்றிடப்பட்டான் குறித்தபாட்டுடன் கூறினனு னுன், மற்றமாதவர் கல்வியின்பெருமை வகுக்கவேண்டுங்கொ லோவ கையறியேன், பற்றறுத்துவீட் டுறச்செயுநூல்கள் பலசொன்னுரெனப் பார்சொலும்பாச, மற்றஞானசிற் றம்பலநாடி யகவலொன்றுமிக் கவிர் தரலுளதே. (உடு)

ஒன்றுங்குற்றஞ்செய் திலருடலெல்லா மொவ்வொர்தானத்திற் றனி த்தனியுறலு, மன்றுகுற்றஞ்செய் தவனுடலாசா னுகந்தன்னுட னணைந் துறும்வியனு, நன்றுடைத்தவ ரேயறிகிற்பார் நானுணர்ந்தமை நவின்றி

டவேண்டின், மன்றுடைப்பிரா னருள்பெறுமவர்க்கெவ் வாழ்வும்வந்து றும் வழியெளிதாமே. (உசு)

பஞ்சகிர்த்திய நடம்புரிகின்ற பரமன்மெய்யருட் பயன்கொண்மேல வர்க்குத், தஞ்சமத்துவத் துயிர்களின்கரும சாலந்தீர்தரத் தமிற்கலந்த வன்றன், கஞ்சநாண்மலர்ப் பதத்தபேதமதாக் கலக்கும்வண்மையுங் கை வருமாகி, லஞ்சன்வேள்சம ஞதியர்ச்செகுப்ப தருமையாகுமென் ரூர் பகர்வாரே. (உஎ)

செந்திலான்குரு வாதலிற்றெளிந்த திருச்சிற்றம்பல நாடிகள்சரிதம், புந்தியாற்பெரி யாருணர்ந்துவக்கப் புவியிற்கேட்ட வாபுகன்றனனினி மேன், மந்திநேரிளம்புலவருக் கெமன்போல் வயங்குமாண் புடைச்சிவப் பிரகாசன், றந்தியீருரி யான்றிருவருளாற் றவம்பெற்றுய்ந்தமை சாற்ற லுற்றேனே. (உஅ)

திருச்சிற்றம்பலநாடிகள்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கஙஅள.

முப்பத்தேட்டாவது

சிவப்பிரகாசசுவாமிகள் சருக்கம்.

செந்தமிழ்த்தேயத்தினிடைத் திகழ்தருபற்பலவூரி
லெந்தநகரத்தினிடை யிருந்தோவோர்வேளாளன்
முந்தவயனரிசெயும்போர் முடிவுபெறச்சிவன்மலையா
வந்தவருணையின்சேவை வாஞ்சைகொடுபுறப்பட்டான். (க)

பரிசனங்கள்சிலசூழப் பண்டியிற்பல்பண்டங்கள்
விரிவெனக்கொண்டுள்ளபல விடுதிதொறுமிருந்தேகிப்
பிரியமுறுதலங்காணப் பெறுந்தினத்திற்றன்பூசைக்
குரியசிவலிங்கமுறு மொருபெட்டியினேக்காணன். (உ)

அங்கிருந்துமுன்னிரவி லமர்விடுதிக்காளனுப்பி
யிங்கியலப்பெற்றிலனே லிவ்வுடலிலென்னுவி
தங்கிடவாழ்கிலனென்னுந் தனிவிரதங்கொடுநொந்து
சங்கியல்காதுடைப்பெருமான் றண்ணருளால்வரப்பெற்றான். (ங)

அன்றுபுசிப்பிலதாலு மான்மார்த்தமிழந்ததனற்
றுன்றுபெருஞ்சோர்வாலுந் தூலமுதிர்ச்சியினாலும்
பொன்றுநரிற்கிடந்துருண்ட புண்பாடுதெரியாதார்
சென்றுதிரும்பாதாளென் செல்லவிட்டானென்பாரே. (ச)

போனவுயிர்மீண்டாங்குப் பூசனைப்பெட்டகம்பெற்றான்
றானடைந்தசுத்தசைவத் தன்மையினைத்தணந்தப்பான்
மானமலிவீரசைவ மார்க்கமேவலிதாமென்
றீனமறக்கழுத்தினிலவ் விலிங்கமதையணிந்தானே. (ஞ)

சுத்தசைவமுற்றியதாற் முடியாயவீரசைவந்
தெத்தனேயோமேலோர்புக் கீடேறினரென்பா
ரத்தகையநெறிநீங்கி லாசாரவீனர்களாய்ப்
புத்தர்முதலினர்போலப் புலைத்தன்மையடைவாரே. (சு)

பெட்டகத்திலிங்கமதைப் பேணியணிந்திடன்மேன்மை
கட்டலவிழ்த்தோரிலங்ஙன் காத்தவர்களிலரேயாந்
துட்டர்பலர்தரித்ததனைத் துறந்துசமன்றூதர்களா
னட்டமிகத்தோய்ந்தெரிவாய் நரகில்விழுவுளதம்மா. (எ)

அச்சைவனன்றுமுத லடல்வீராகமியாகி
மெய்ச்சைவசித்தாந்தர் வியந்திறைஞ்சும்வீறெய்திப்
பொய்ச்சைவராருவருப்போர் பூணுகப்புனைந்தவிர்ந்தா
னெச்சைவர்களுநீறக் கிலிங்கமுடையவர்தாமே. (அ)

தன்னினத்திற்சிலர்தன்னைச் சார்ந்திலிங்கதாரணராய்
மன்னிடவும்பெறுமந்த மாபுருடனில்லறத்திற்
றுன்னிமகிழ்ந்திருளிற் றுலங்குசிவப்பிரகாச
னென்னியற்பேருறுபுதல்வ னியானேயெனப்பிறந்தானே. (கூ)

பின்னுமிருமகர்கருணைப் பிரகாசனென்றுமெழின்
மன்னுபுகழ்வேலனென்றும் வந்துபிறந்தனரப்பாற்
பொன்னுறமுகலம்வாய்ந்த பூவையொருத்தியும்பிறந்தா
ளின்னுரையார்நால்வர்களு மினிதுவளர்ந்திருளில். (கo)

தந்தைசிவகதிசேர்ந்தான் முயருநான்மக்களுமோர்
நிந்தையில்லாவாழ்க்கையராய் நிலவுகையின்முதன்மைந்தன்
சிந்தையிடங்கோயில்கொளுஞ் சிவனருளாற்செழுந்தமிழில்
விந்தைமலிகவிபாடும் விரகினனுமிளிர்ந்தானே. (கக)

கைத்தலத்துமார்பகத்துங் கவின்றங்துகதிசேர்க்கு
மத்தனெனுமிட்டலிங்கத் தபிடேகமாலைமுதற்
சித்தமதிற்றோற்றியவா சிலபனுவல்வனைந்திட்டான்
புத்தமிழ்தொப்பாஞ்சுவையும் பொருட்பொலிவுமுறும்படியே. (கஉ)

அழுக்காறுமலிகவிஞ ராம்பலர்நெஞ்சஞ்சாராய்
வழுக்காண்பார்போற்பெரிது வாதுசெயுந்துயர்நீர
முழுக்காதலுற்றதனன் முதுநூல்சொல்விதிகூறு
மொழுக்காளர்களிற்சேர்த்தோ னுளனெனைக்கேட்டுணர்ந்தேனி. (கூ)

திருநெல்வேலியின்கீழ்பாற் சிந்துபூந்துறைமடத்தின்
மருவும்வெள்ளியம்பலவா ணப்பெயரோன்வார்சடையா
னருள்பெறுவார்நூறுறுந்தா னறைபாக்கள்கலந்ததனு
லிருநிலத்தோர்வெள்ளியென வியம்புமடையாளமுற்றுற்றேன். (கச)

இலக்கணநூற்றிறந்தருவா னெனநம்பியவனிலிங்க
மலர்க்கரத்திற்கொளும்போது வணங்கினன்மற்றவன்முன்
கலக்கமுறேனின்னெறியே கடைப்பிடித்துக்கோடியென்று
தலக்கமுறச்சொல்லியவன் சூழ்ச்சிமுற்றுமுணர்ந்தப்பால். (கடு)

வேறு.

தனன தனதன தனதன தனதன.

குகரமுதலொடு கடையினு மமையவொர் குறியகவிபக ரெனவவ
ணவலலு, நிகரில்பரிதியி னெயிறுகொள் பவனட னெடியனெணுமொரு
* கிரியெயி றணிபவ, னிகழ்வில்வடதிசை புகுவளி யிரதன திகலனவன
கர் புலிசைந லுடையதள், கனமிசையினும் வருபரி விடையெனெர்
கவிதைதளவலி யொடுகழ றினனரோ. (கசு)

கழறுமதுவின வலுமதி மகிழ்வொடு கலசமுனிவன தடியரின் முத
ன்மைய, னழகுபெறமொழி தருவிதி முழுமையு மமையவுதவின னவை
கவர் தலுமுள, பழமையினரறி வரியன சிலபொருள் பகர்தலிசைதலி
னவன்வியன் முழுகினன், மழலைமொழிபகர் மதலைத னிலுமுயர் மதி
யெய்தலின்மகிழ் வுறுமர னிகரவே. (கள)

அரனெரவுணனை யடும்வகை முருகனெ டறைதல்புரையவ னவ
னும மகனுட, னுரமொடெனையிகழ் தருமொரு கவியுள னுவனுளகமழி
வுறுதல்செய் தகல்கென, வரதனடிதொழு தவனரு தினமுறும் வயினெ
துரையென வவனலை யெறிநகர், மரகதமலையை நிகர்மயி னடவுநன் மரு
வுதலவகை களில்வலி தெனலுமே. (கஅ)

உடனவியல்வல னவனிட மணுகிய னுடனினுரவலி யுளவனை
யிகலுதி, திடமல்கிடுமொரு பனுவலும் வனகுதி சிறிதெனிலெதரி தர
வனை குவனென, நடனமயிலுட னயில்கொரு மவன்மிசை நகுமதர
முயல் வணுவள வுமிலது, படபடெனவிரு பதொடொரு பதுகவி பக
ரும்விரைவினி லவன்மிக வெருவியே. (ககூ)

உனதுவலியள வெனதிட மிலையிலை யுரைசெய்திடும்வழி நடைகொ
ள்வ னெனலும, வனகனெனதொரு குருவுள னவனினை யடிகண்முடி
மிசை யணிகுதி யவன்மிசை, முனமெய்தியபகை யொழிகுதி யெனது
வன் முறையிலொழுகினன் முனிகளி கொடுதனி, மனதுகுளிர்தர விடை
யுத வினனனை மகரொடுறும்வயின் மருவினன் விரைவிலே. (உ0)

வேறு.

கல்வியின்பொலிவார்சிவப்பிரகாசன்கவிமழைபொழிதருகார்போற்
பல்விதத்தலங்கடொறும்பலபலவாம்பனுவல்கள்பாடுபுபடித்து
நல்வினைத்துணைவராமிருவருக்குநுந்தமிழ்ச்சுவையுறக்கொடுத்துச்
செல்விகேரிளையாட்சாந்தலிங்கப்பேர்ச்சிரியன்மனவியாச்செய்தே. ()

* கிரி - பன்றி.

சிற்சிலுள்கழித்துத்தாய்சிவகதியிற்சேர்ந்ததற்காவனசெய்து
நற்சிறுதுணைவரிருவர்தம்மோடுநாடெலாமுலவினனைவைதீர் [யு
பொற்சிலைக்கரத்தானனேயவேமனன்றன்புகழ்க்குலத்தணியெனப்பொலி
மிற்சிறப்பினனண்ணுமலைப்பெயரோனிவர்கண்மூவனையுமிச்சித்து. ()

தன்னுடைச்சுமைக ளாமெனவகித்துத் தமிழ்வலாராமவர்தமக்கு
மின்னுறழ்மருங்குற் சிறுமியர்தம்மை விதிவழிமணம்புரிவிப்பா
னுன்னுபுசிறிதன் னவுளக்குறிப்பு முணர்தரவசாவினனவருண் [ன்.
முன்னுதித்தவனு முத்தியேகுறிக்கு மொய்ம்புடைக்களிறனன்மொழிவா

சேய்கொண்டசுவர்க்கத் திறைவனுங்கமலச் செம்மலுஞ்சீரபையர
வப், பாய்கொண்டமாலும் பரவுசீர்ப்பட்டுச் சுரத்தரனேபல வாய,
நோய்கொண்டிட்டாலுங் கொள்ளலாநூருண் டளவினுதடங்கரிதாம்
வன், பேய்கொண்டிட்டாலுங் கொள்ளலாம்பெண்கொண் டிடவொணு
தென்னுர்பாட் டிசைத்தான். (உச)

அக்கவியினிற்பட் டுச்சுரத்தரனே யறைந்ததன்காரணமவ்வூர்ப்
பக்கலிலங்கா ளிருந்தனர்கொல்லோ பாவையர்மயலறப்பார்க்கத்
தக்கவனந்த மூர்த்திதானென்றே தம்மிடமம்மொழிவினவு
மிக்கவனபிமா னத்தலமதுவோ விதமிதென்றுலகர்விண்டிலரோ. (உரு)

அன்னவனப்பாட் டினைத்திடலுணர்ந்து மவனுதித்திடுமகட்டவற்குப்
பின்னர்வந்தவரா மிருவருமடவார் பெயருரைத்திடினுமால்பெருகு
மென்னலையவருக் கிசைந்தசற்பனேயோ டிருகவியிடத்திசைத்திட்டார்
மன்னனேயனேயானவர்மணமுடித்துமற்றவன்பந்தமாற்றினனே. (உசு)

வெங்கையூர்க்கோவைபழமலையந்தாதிமுதலாம்வியன்கொணூல்பலவுஞ்
சங்கையில்புகழ்தோய்ந்தொலிதருசோணசயிலமாலையுமல்லமன்று [யுங்
னங்கைமாயையெவென்றடியர்பற்பலர்க்குநலஞ்செய்கா வியமுநன்னெறி
கங்கையாற்றெழுகும்வெள்ளமேயென்னக்கழறுபுதிரிதருநாளில். (உஎ)

தானதத்ததன தானனந் தய்யதன.

பாலையப்பெயர்கொ டேசிகன்கள்ளிதரு
பால்குடித்துமகிழ் கூர்பவன்கையில்வடி
வேலைவைத்தவனு பாசகன்சைவர்களுள்
வீரர்கட்கொரர சாயவன்பொய்யர்சிலர்
மாலையிட்டுமண லோடுவெண்கல்லடையு
மாகுடத்தினிடை சீனிகண்டொல்வகைசெய்
தோலைபெற்றவர்செய் வேலையுங்கொள்ளுமுனி
யோதிவிட்டனனெர் பாவலங்கல்விழைவே. (உஅ)

தனனதானதன் தனனதன தானதன்.

அதுவினுவுதலு மனிதர்மிசைபாடுகில
னரனைமாதரியை யவர்தருகுமாநர்களை
மதுரமார்கவிகள் கொடுதுதிசெய்வேனெனமுன்
வருமவாள்வெருள வுரைசெய்தனனேடியவ
னிதுசொனனிகலு மவர்கடலிலோர்சிலையொ
டிமிகாண் *மயில மலையில்வருஞானமுனி
சதுரர்மீதுமொழி தருபுலவன்மீதிலொரு
தவிடுகோர்சினமெய் துபுருகனேநாடினனே. (உசு)

தானதானனனத் தந்ததன தந்ததன.

போதன்வாய்விடத் தண்டனைசெயுங்கடவுள்
பூவுநாருமத் தங்கொடவனெஞ்சினிடை
பாதசாரியிற் சென்றெனதுதொண்டன்மிசை
பாடலாகுமிக் கின்பம்வருமென்சொலிசை
யாதகோரநிற் கொன்றிலிவைகொண்டொருரு
லாரமேலுநத் தும்படிவனேந்திடென
வோதலால்விழித் தங்கவனிடந்தன்மன
மோடவேதுதித் தொஞ்சுபுநடந்தனனே. (உ0)

தந்ததந்தனத் தாத்ததன தானதன.

சென்றுதெண்டனிட் டேத்துதலுமாசுதவிர்
திங்களுஞ்சடைக் கூத்தனிகர்பாலையனு
நன்றுநன்றுனட் பேற்றனமெனுவுவகை
நன்கடைந்தருட் பேற்றியலுமாறருளி
யொன்றுதொண்டருட் சீர்த்தபதமீகுதலு
முய்ந்தவிந்தையைப் பாத்தொடைகளாலுரைசெய்
தென்றுறழ்ந்தமெய்க் கீர்த்திகொடுமாதவசி
யென்றிகழ்ந்சொலத் தாட்சிகளுமேவினனே. (உக)

வேறு.

ஓரூரின்மடமொன்றிலுறுநாளிலவ்வூருடைக்காளிதன்
சீரூர்விழாவந்துதேரூருமமையஞ்செறிந்தோர்மடத்
தேரூர்முருங்கைக்கிளைக்கொய்தடங்காதிசைத்திட்டதாற்
காரூர்களத்தான்மெயருணடியொருபாடல்கடிதோதினன். (உஉ)

தேர்வெந்ததிற்றுற்றவருவெந்துகோயிற்றிறற்கூரைவெந்
தூர்வெந்துருத்தோதுமவர்காவும்வெந்திட்டவுருமாரவேள்
சீர்வெந்திடச்செற்றவிழிநம்பனருள்பெற்றதெய்வீகர்தந்
நீர்வெந்தொர்சொற்சொல்லியனுதியோரேனுநீறுவரே. (உங)

* மயிலம் - சுப்பிரமணியத்தலங்களி லொன்று.

மற்றோர்நகர்க்கண்வைகறையொன்றிலாங்குள்ளமாஞ்சோலைவா
யுற்றோர்பழங்கீழ்விழக்கண்டெடுத்துத்தனுமேவிவாழ்
புற்றோலுடைத்தம்பிராற்காகுமென்றெண்ணுபோதோர்பொலா
னெற்றோன்றுமுன்வந்திருடாவெனச்சொற்றெழுந்தானரோ. (கச)

வந்தான்மடிக்கட்கையிட்டுப்பிடித்தீர்த்துவைதானிதைத்
தந்தாலும்விடுகில்லனென்றுன்வெணீறுத்திராக்கந்தவச்
செந்தானைசிவலிங்கமுடனிட்டமுனியென்றுசிறிதெண்ணிலா
னந்தாமரைத்தேவன்விதிமுற்றிடற்கீதொரடையாளமே. (கடு)

அடித்திட்டதொண்டன்றனக்காகவன்றந்தகற்றுளிஞற்
றடித்திட்டதுண்டென்னினின்பூசைகைவேதனத்திற்குரா
னெடித்திட்டவிம்மாங்கனிக்காவென்மடிதொட்டவிப்பாவியைப்
படித்திட்டபின்னென்றுவரவேண்டுமென்றங்கொர்பாட்டோதியே. ()

அத்திங்களின்சூரியன்கன்னியிற்காணலுஞ்சொன்னபின்
மெய்த்திங்கள்சூடுஞ்சடைக்கற்றையான்றன்னேமிகநாடலுங்
கைத்திண்டிறற்றண்டமணியேமன்விடுதூதர்கணமங்குவந்
தெய்த்திஞ்சையுறமோதியவனுவியைக்கொண்டிரிந்தார்களே. (கஎ)

இவ்வாறவன்செய்தவிளையாடல்பலவாமெனச்சொல்வரியா
னவ்வாறனேத்துந்தெரிந்தோதிடற்கானவறிவெய்திலே
னெவ்வாறுமமர்சென்னியானன்பினுலுய்ந்திடுக்கொண்டரே
வெளவாறுசமயத்துளாருக்குமேலென்னுமாவீரரால். (கஅ)

ஏகத்துவர்க்காகும்வேதாந்தசூடாமணியுமோர்மையிற்
காகத்தினிலமென்னவாழ்வார்தம்வீராகமத்துண்மையுஞ்
சோகப்பெருக்கீயுமதவாதமுஞ்சொல்லலங்காரமுந்
தாகத்துடன்பாடுமவனேத்தெரிந்தோதுதவரியாவரே. (கசு)

அவனேடுதுணைவந்தவிருவோர்களுங்கூடியாமூவருஞ்
சிவன்மேவுகயிலைக்குகிகரானகாளத்தியின்மான்மியங்
தவசீலரொடுவல்லபுலவோருமார்வந்தலைக்கொள்ளநல்
லுவமானமுவமேயமுதலாயசீரோடுரைத்தார்களே. (சஂ)

தன்றம்பிமாருக்குமவர்பின்னரேவந்ததங்கைக்குளோ
னென்றங்கியைந்தாற்குமற்றும்பலோருக்குமிவனேந்தெழுத்
தொன்றந்தரங்கத்தொடுயர்வண்டமிழ்ச்சீலமுரைசெய்யினுங்
குன்றன்னநிலைநின்றருருத்தன்பெரும்பேறுகொண்டானரோ. (சக)

அவனத்துவிதமோதினுனென்றுகளிமிக்கடைந்தேபலோர்
புவனத்தின்முயல்வார்களவனிற்றமிழ்ப்பாடல்புகல்வண்மையுஞ்
சிவனேப்பணிந்தன்புசெயுநீருமொன்னூர்ச்செறுந்தீரமுந்
தவசிற்பெறும்பேறெனத்தேறியதனுடசாரார்களே. (சஉ)

ஏற்றாருமிறைவன்றனருள்வில்வமுள்ளாகியெழிலாருநல்
லாற்றாரிலவனேப்பதஞ்சேர்த்தசாச்சொல்வரவ்வாவியைக்
கூற்றாறுதொடராதுகுகியாதுபெற்றுக்குளிர்ந்தான்கொலோ
பாற்றாயரவன்மேனியதனைத்தமுறையிற்பணிந்தார்களே. (சஈ)

திரகாமமுடையாரைநிகராகுமெய்யன்பர்தேருஞ்சிவப்
பிரகாசமுனிவன்புகழ்ச்சிலமொருவாறுபேசுற்றனன்
வரசாந்தலிங்கப்பெயர்ச்சீடனவனேதும்வழிசென்றதாற்
பரசாயுதத்தண்ணல்பதநீழலுறுமாறுபகர்வேனரோ. (சஉ)

சிவப்பிரகாசசுவாமிகள்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ஈசுஈக.

முப்பத்தோன்பதாவது
சாந்தலிங்கசுவாமிகள்சருக்கம்.

செந்தமிழ்ச்சீர்மன்னுஞ் சிவப்பிரகாசப்பெயரோன்
வந்தவயிற்றினிற்பின் வந்தாண்மணவாள
னெந்தவிதத்தாலோ வில்லறச்சீர்முற்றலுற்றுச்
சொந்தவுணர்வாற் றறவறத்திற்றேய்ந்தானே. (க)

நற்குலத்தோர்தம்முறையி னரிதருமைத்துனனுஞ்
சொற்குறிப்பெல்லாமுணருந் தூயபுகழ்ப்பாவலனு
நிற்குணிலேசோரா நிசத்துறவோர்சேகரனுஞ்
சற்குருவுமானன் றனைச்சார்ந்தொழுகினனே. (உ)

சின்னளுடன்வசித்துச் செந்தமிழ்ப்பாச்செய்திறமும்
பைந்நாகம்பூண்ட பரமனருட்பாங்குந்
துன்னுமகிழ்கூருந் தோற்றமுணர்ந்தக்குரவ
னுன்னசைக்கேற்றதல மொன்றிடைவாழ்கென்றனே. (ஊ)

சாலக்கருணை தழைத்தகுருதாள்பணிந்து
கூலப்பொலிவாருங் கொங்குவளநாட்டினிடை
மேலச்சிதம்பரமா மிக்கபுகழ்ப்பேரையினிற்
சீலத்தர்போற்றத் திருமடஞ்செய்துற்றனே. (எ)

தன்குரவன்போலத் தலந்தோறலியாம
லின்குணத்துத்தொண்ட ரினஞ்சூழவாங்கிருந்து
நன்குமுத்திவீட்டிலுறு நான்குபெருவாயில்களே
யென்குணங்கட்போற்றிடுநூ லீரிரண்டுசெய்தானே. (ஏ)

கூசலறக்கருணை கூட்டுங்கொலைமறுப்பு
மீசனதுபத்திக் கினிதாஞ்சதகமும்பொய்ப்
பாசமுழுதும் பறித்தெறியுங்கீபமுமெஞ்
சூசனிகராட்டொழிக்கு முந்தியுமானூற்பெயரே. (ஐ

அந்நூல்களோன்றியபி னன்றதுறவோர்பலரு
மெய்ந்நூல்களென்றவற்றை வேண்டுவழக்குண்டாயிற்
றெந்நூல்கடாமு மிரக்கமுதனுன்கினுக்காச்
செய்ந்நூல்களென்னத் தெளிகின்றேர்திண்ணியரே. (எ)

கொல்லாமைநாட்டக் குறித்தமுதனூலிடத்திற்
பொல்லார்களிற்றலையாம் பூருவமீமாஞ்சநெறி
யொல்லாதென்னுதசிறி தொப்பினன்போற்செப்பியதால்
வல்லார்சிலர்தா மனத்தாபமெய்தினரே. (அ)

வேள்விப்பெரும்பகையாம் வீரசைவசித்தாந்தக்
கோள்விட்டிடாத குருவாமவனூலில்
வாள்விப்பிரர்செய்கொலை மட்டுமொப்பலெனென்னுங்
கேள்விக்கெதிர்ச்சொற் கிளத்துமாறேர்ந்திலனே. (கூ)

வண்டமகஞ்செய்பனவர் வாஞ்சையிடைமூழ்குந்
தண்டமிழ்த்தேயத்துச் சனங்கள்பலவாதலினுல்
விண்டதன்னூன்மாயா விதங்கருதிமீதிலொப்பிக்
கொண்டனனென்னிறுவ்வொருகாற் கூறலன்றிவேறிலையே. (கo)

யாகக்கொலைநலமென் றெண்ணுகின்றேனைமொருவன்
போகத்தயக்கமற்றுப் போய்ப்புகுந்தால்விட்டினிலுஞ்
சாகக்கொலைசகியாத் தண்ணருளுந்றேனைருவ
னுகத்துடன்வீ முளறுயர்வென்பாருளரே. (கக)

பெற்றதைக்கீழாக்கிப் பெறுததனைமேலாக்குங்
குற்றமுயிரின் குணமென்றேர்பாசுரத்திற்
சொற்றனனவ்வாறுபல சொற்களுலகத்தனையும்
விற்றளித்திட்டாலும் விலைமேவாவிண்டனனே. (கஉ)

எம்மதத்திலுள்ளவர்க ளெங்கிட்டைசொன்னுலுஞ்
சம்மதமேயாமெனக்குத் தற்போதமாயிலெனப்
பொய்ம்மதத்தோர்நாணப் புகன்றருளுமப்புனிதன்
மும்மதமாப்போலு முழுஞானவீரனம்மா. (கங)

கற்புடையமாதர்நிகர் காதலுடைத்தொண்டருண
ரற்புதச்சீர்ச்சித்தி யநந்தமாச்செய்திட்டான்
புற்புதநீர்வாரிபுனை பூமியிலுள்ளோர்பலர்க்கும்
வெற்புயர்தீபம்போல் விளங்குசித்திசெய்திலனே. (கச)

கன்னடதேயத் * திறைவன் கைதொழுதுபோற்றிடலுந்
தன்னடைமேற்கொண்டொழுகுஞ் சங்காசியாக்கியவ
ளின்னவற்றேற்றென்றேரியற்றமிழ் † வல்லாற்கொணர்கா
லன்னவற்காளாமா றருள்புரிந்தும்விட்டானே. (கஞ)

* இறைவன் - குமாரதேவசுவாமி. † வல்லான் - சிதம்பரசுவாமி.

ஏறும்விடைபுரப்போ னேடுகைக்கொண்டே படிப்போன்
சோறுசமைப்போன் முகிற்பணிசெய்வோன்முதலாத்
தேறுமிமித்தந் திருத்தொண்டுசெய்பவராக்
கூறுமடியார் குழாஞ்சிறிதுங்கொண்டானே. (கசு)

அங்குவசிப்போர்வந் தன்புசெய்துபோவதற்காத்
தங்குமவரென்னச் சாற்றுமிருபாற்றவர்க்கு
மெங்குமிருந்துவிழை வெல்லாமுமெய்துவித்தான்
கங்குல்புரையுங் கழுத்துடையகாரணனே. (களை)

ஆனந்தமென்னு மலியில்பெருஞ்சாகரத்தி
லீனந்தவிர்ந்தே யிருந்துபலநாட்கழித்துத்
தானந்தமாதி தவிர்பதத்துற்றுனவன்ற
னானந்தவூருக் கொருகோயினல்கியதே. (கஅ)

பாந்தணிகர்கோரம் பலரிடத்துங்காட்டாத
சாந்தலிங்கமூர்த்தி சரித்திரத்திற்சற்றுரைத்தேன்
காந்தழுக்காறில்லவர்வாழ் கன்னடதேயம்புரந்த
வேந்தனருள்பெற்ற விதஞ்சிறிதுவிள்ளுவனே. (கசுஙை)

சாந்தலிங்கசுவாமிகள்சருக்க முற்றிற்று.

ஆடதிருவிருத்தம் - கசுடுo.

நாற்பதாவது

குமாரதேவசுவாமிகள் சருக்கம்.

கருநாடதேய முழுதும்புரந்து கனவண்மை யுற்றவரசன்
பொருவாதவீர சைவத்துளார்கள் போற்றச் சிறந்தபுனிதன்
றிருவார்குமார தேவப்பெயர்ச்சு சிலன் சிவன்றனருளா
லொருதாய்வயிற்று ணுழையாதமுத்தி யுறுமாறு நாடினனரோ. (க)

அத்தேயம்விட்டுமனேயாதியாகுமவர்தம்மைநீங்கியகலூ
டுத்தேசமானபடிநற்குருக்களுறல்பேரையென்னவினவா
முத்தேவுமானசிவலிங்கமுற்றமொய்ம்போடுகண்டுபணியா
மெய்த்தேவதேவனிவனேயெனவுள்விழைவோடுதொண்டுசெயுநாள். (உ)

அவிர்சாந்தலிங்கமுனியென்றநாமமணியுந்திறம்கொளாசான்
றவிசேறுமன்னர்பலர்போற்றும்வாழ்வதனைவிட்டுவந்தமகனைச்
செவிதோறுமிட்டவளையார்பதங்கள்சிந்தித்திடச்சொலியதாற்
கவிபாடும்வண்மையொடுசிற்சிலசித்திகைவந்திடச்செய்தனனே. (ஙை)

அத்தன்மைகண்டுகுரவன்றனைத்தஞ்சரணவப்புமுறையின்
மெய்த்தன்மையன்பர்பணியக்குலாவும்விமலன்றலங்கள்பலவும்
றெந்தன்மையுற்றபதிபிக்கதென்றுனிதயந்தெரிந்திடுமோர்
சித்தன்மைகுன்றிடாவண்ணம்லைகெனச்சொற்றனுப்பினனரோ. (ச)

வெகுவாயுணர்ந்தகுரவோர்களிந்தவியன்மேதினிக்கண்முறையிற்
றகுசிடர்தம்மையனையார்களாயதருணத்தின்மற்றிருங்கரிற்
புகுமாறுரைக்கைகண்டேனிதன்னபுதுமைக்குணங்கொலற்யேன்
மிகுதொண்டரேறுபுகலிப்பிரானில்வீட்டுச்செல்வார்கள்சிலரே. (நு)

அத்தேசிகன்சொல்வழுவாதவண்ணமருள்சேர்குமாரதேவ
னெத்தேயமுற்றசிவனுலயத்துமேகிப்பணிந்துவருநாள்
சிதத்தேறவாடினனவ்விதங்கள்செப்பத்தெரிந்திலேன்வெண்
முத்தேயெனும்பலாண்முன்புதாதுமுக்கண்ணனேகு*ங்கர்வாய். (சு)

எவ்வூரிலுற்றதேருக்குமேலெனிரதத்திலீசனுறுநா
ளவ்வூரின்மாந்தர்பலர்கண்கள்காணவங்கேகிநின்றுதொழலும்
வெவ்வூற்றெரிமைந்தனிதுவீரசைவமருளென்றுரோரில்வைதான்
செவ்வூகமுற்றுளாருக்குநிந்தைதீயாக்குமென்கைதிறமால். (எ)

நின்வீரசைவமருளாகிலிந்நெடுந்தேர்நடக்கவருளே
லென்வீரமியார்செய்திடினுஞ்செலாமலேநிற்கவென்னவிசையா
வுன்வீரமெஞ்சம்வேவுஞ்சினமுகொடொருநன்மடத்திலுற்றான்
முன்வீரர்சென்னியடுதுங்கவாளுமுடியுந்துறந்தமுனியே. (அ)

முன்னுளிமுத்தமனிதத்திரட்குமுப்பங்கிமுத்துமசையா
தின்னுவளிக்குமத்தேர்விழாவினீறெய்துமுன்னமியாதுந்
தின்னுதஞ்சைமன்னுதியோரொர்தெய்வீகமீதெனுணர்வுற்
றென்னுர்செய்தார்கொலோசொன்மினென்றவீட்டத்திறைவினவா

ஒருசிற்சிலோர்தமொழியானடந்தவுண்மைத்திறந்தெரிதலுந்
தெருள்புத்தியோரொடம்மன்னனங்குசென்றந்தமுனிவனடிவீழ்ந்
திருள்பட்டநெஞ்சன்வசனவைக்குறிக்கொடிவ்வாறியற்றியதனால்
வருபத்தர்பற்பலோராவிமாயும்வம்புற்றதென்றனனரோ. (கo)

அரசன்சொனண்ணியம்மாதவத்தனந்தக்கணத்திலவணுற்
றிரதந்தனிற்குலாவுந்தியாகனெதிர்நின்றுன்வீரசைவஞ்
சரதம்புனைந்தவருளேன்முனேறுதானத்திலேகுகவரு
முரமெண்றுதீயமருளாகினிற்கவெனமுஞ்சொன்மாற்றிடலுமே. (கக)

சேந்தன்கவிக்குரலடைந்ததானதில்லைத்தலத்திரதமொத்
தாய்ந்தந்தமாந்தர்களும்விண்ணுளோருமெதியார்வமுற்றுமொழியப்
போந்தன்றுபற்கவேண்டுந்தலத்தெரிபொன்மேருவென்னவுறலால்
வேந்தன்றுதித்தமுனியைத்தனுட்டின்மிகவைகுமாறுதொழுதான். (கஉ)

அம்மன்னனுக்கின்மொழிகூறிடாமலரணெண்ணமுற்றுமென்றுன்
செம்மன்னையன்னகுருமேனிகொண்டுசிக்கைதக்கவினிடையும்
றிம்மண்ணிலின்மிக்கமுதுகுன்றிடத்திலேகென்றியம்பிடலுமப்
பொய்மன்னனுக்கவிதமுஞ்சொலாதுபோனன்விடுத்தபொழுதே. (கங)

* கங் – திருவாரூர்.

வழியிற்றிகழ்ந்ததலமொன்றிலூடும்வழிபாடுசெய்யநுழையா
தொழிவற்றபத்தியாலொவ்வொர்கும்பிடுதவிக்குறித்தபதிபோய்
மொழிதற்கடங்கிடாமேன்மைதன்முழுத்தாந்திக்கண்மூழ்கி
விழியுற்றநெற்றியார்கோயில்புக்குவெற்பன்பெணேடுதொழுதான். (கச)

அங்குற்றளப்பில்செபமுந்தியானமதுவுஞ்செய்திட்டவவன்மேற்
சங்குற்றகாதரினுமிக்கவன்புதாயாம்விருத்தைகொளலாற்
பொங்குற்றசாரமுறுபாடல்கொண்டுபுணேயென்றவட்சொலுபுமற்
றெங்குற்றவர்க்குமினிதாயநூல்களீரெட்டியம்பினனே. (கடு)

கழறுந்தொகைக்குளுயர்சுத்தசாதகமெனக்குலாவுமொருநூன்
மழமைந்தர்ஞானவழிகட்கொவாதுமாயோகசாதனையினிற்
கிழமென்றிலங்குமவரேகொள்வார்கள்கீழ்முத்திநம்புமவரைத்
தழலின்கணுற்றபுழுவென்னவாட்டுதகவுற்றதென்கைகிசமே. (கசு)

பந்தக்குழிக்குள்வீழாமலுய்ந்தபலமாதவர்க்குளுயர்வா
மந்தக்குமாரதேவன்றனிட்டையதிகீட்சியென்றுமமலே
வந் * தத்தவட்டிலிற்கோயில்வைத்தவண்பாலளித்ததாயு
மிந்தக்கடற்றணுலகிற்பன்மாந்தரின்றுஞ்சொல்கின்றதுளதே. (கஎ)

கற்பாரமொன்றுமேலேறிடாதுகனவாதைசெய்யிலதுசெய்
கிற்பான்வணங்குதலுநீறுகொண்டுகீழ்விட்டுமேலெய்திடல்செய்
தற்பாவுகண்டனதுகோயில்வாயிலருகிற்கலாகமுடனே
நிற்பார்செய்தார்களெனநன்னிவேதனஞ்செய்யநேர்சொலினனே. (கஅ)

அன்றந்தவிக்கிரகமோரிரண்டினடல்கூர்புறத்திலக்கற்
குற்றன்னபாரமுறலாலுறைந்தகுறிகண்டபேர்கள்பலரென்
றென்றம்புவிக்கணுவல்வாரனேகரீசன்றனெஞ்சிலெய்தத்
துன்றன்பொடம்பையருளச்சிறந்ததொண்டற்கிதாற்றலெளிதே. (கசு)

அவ்வூர்வடக்கிலமர்துர்க்கைதன்னையருமந்திரத்தனெருவன்
வெவ்வுறுசெய்யவரலஞ்சியந்தமேலோனிடத்திலிவள்போ
யிவ்வுருழித்தியெனநின்றிரப்பவேதேவன்செய்திடலும்
வெளுகமற்றுவிழிகெட்டுவந்தவழிதேடியோடினனேரோ. (உ0)

இவ்வாறவன்செய்வினையாடலியாவுமியாரேயுணர்ந்துபகர்வார்
செவ்வானமேனியுறுசேயையன்னனென்றேதுவார்கள்சிலர்மற்
றவ்வானவன்றனதுபேர்கொண்மேன்மையறியாதபேருரரோ
வெவ்வாள்விழிப்பெரியநாயகிப்பெண்வெண்பாலளிக்கைபொதுவே. ()

ஒருபாவலோனமுனிதாள்வணங்கியுபதேசமோதுகெனலு
மருளார்தனதுகுருமுன்னருய்த்தனவனேதிருந்சொலதுபெற்
றிருடருஞானவழிகூறினனெனனேயார்தமுள்ளிலிசையு
மருண்மாயுமுன்னம்வெகுமூடருக்கும்வலிதோதிடத்துணிவரே. (உஉ)

* அத்தவட்டில் - பொற்கலம்.

திடமொன்றுஞானசித்திக்குமாரதேவன்றனதுசிந்தை
யிடமொன்றுமிட்டலிங்கத்தொடியாவுமாமொன்றினுடெய்தியயின்
முடமொன்றுமாட்டலார்வைகுமந்தண்முதுகுன்றிலவனதடியார்
மடமொன்றுமன்னர்முதலாடசெல்வர்மகிழ்வால்விளங்கியதுவே. (உ கூ)

முதுகுன்றில்வைகுமுதியோல மணந்தமுதியாடன்மூதருளினன்
மதுரங்கொள்பாடல்பொழியுங்குமாரதேவன்றன்வண்மையிவைமேம்
கதுமென்றவன்றனருள்பெற்றகங்கொள்கவிவாணருங்கைதொழுவா
முதுலன்சிதம்பரப்பேர்கொண்மூர்த்தியதுவண்மையுஞ்சொலுவனே. ()

குமாரதேவசுவாமிகள்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ககூஎச.

நாற்பத்தோன்றுவது

சிதம்பரசுவாமிகள் சருக்கம்.

மன்னனென்றரன் றுணுமம்பிகை மாதுமோதும்வை வேலனு
முன்னவிர்ந்தருண் மாட்சிதன்னெடு முத்தமிழ்ப்பெருக் குங்குலாந்
தென்னனுட்டிறு மேழியங்கொடிச் செல்வர்தங்குலஞ் செய்தவ
மன்னபாலன்சி தம்பரப்பெய ரப்பன்வாயிடச் சூடினேன். (க)

கல்விகேள்வியிற்சீர்த்துமான்மலிகாளையம்பருவங்கழித்
தல்விராவுகளத்தர்வாழ்திருவாலயத்தலந்தோறும்போய்
நல்வினைப்பயனனசித்தியுஞானமும்பெறுமாசையா
லொல்விசேடருளார்கொலென்னவுசாவலேதொழிலாயினன். (உ)

கன்னிநாட்டொடுசோழநாடுகடந்துகொங்குநன்னுடும்பார்த்
தின்னிசைத்தமிழ்ளவைசான்றவரேய்ந்தநாடெனுந்தொண்டைநாட்
டன்னியந்தவிர்ந்துற்றதாடுநாட்டிற்காசிக்கதிகமாத்
தன்னியற்கைகுலாவுசீர்விருத்தாசலத்தலமேவினன். (ங)

அங்குபோயரனொடம்பிகையாளையுந்தொழுதங்ஙகர்
தங்குவாரிடமாதவத்தருளார்கொலென்னவினுவலு
மிங்குநேரில்குமாரதேவனிருக்கின்றுனிலிங்கம்புனை
மங்குல்போல்பவனிட்டையின்பெருவண்மையாளனெனச்சொனார். (ச)

சென்றுதெண்டனிட்டேத்தியன்னவன்சிலங்கண்டுமிக்காசித்தா
னன்றுவந்தவன்கல்வியாதியறிந்தன்னேனுமன்பாகினன்
குன்றுவில்லெனக்கொண்டுளாரருள்கூட்டுதற்குலப்பாருண்டோ
நன்றுபெற்றனமென்றுவந்திருநாவலோருஞ்சின்னஞற்றூர். (ஞ)

தென்னனுட்டினன்கன்னடப்பெருந்தேயநீத்தவன்றன்னிடத்
தென்னகத்தருட்சீர்குலாவல்செய்தேற்றுக்கொள்ளெனச்சாற்றலு
மன்னவன்றனேயந்தமாமுனியாண்டசற்குருசந்நதி
முன்னருய்த்திடவேண்டுமென்றுளின்முன்னியேயழைத்தேகினன். (சு)

நீரைச்சென்னியில்வைத்தளகைநினைத்துநீறணிவார்கள்வா
ழூரைத்தம்மடைப்பள்ளியாவிழைந்துண்டுசிற்சிலநாளினிற்
பேரைத்தொல்பதிகண்டங்குற்றபெருந்தகைக்குரவன்பணிச்
சீரைத்தாங்கிவசிக்குநாளிற்குமாரதேவனேகோக்கியே. (எ)

பிந்தவந்தவனியாவனீயவற்பேணிநின்னெடுகூட்டியேன்
வந்தென்றுயர்சாந்தலிங்கவரோதயன்றனிகேட்டலு
மிந்தமானிடனல்லபாவலனின்னவற்கருள்செய்துநின்
கந்தநாண்மலர்த்தாள்கள்சூட்டிடவேண்டுமென்னக்ழறினன். (அ)

அச்சொற்கேட்டலுமெற்குநீயுளையாதலாலுனக்கியான்சொலு
மெய்ச்சொற்சொற்றுநின்சீடனுக்குதியென்றுநல்விடையீந்தன
னிச்சொற்பெற்றுவணங்கித்தாழுனிருந்தோர்தலத்தெய்தியே
பொய்ச்சொற்றீர்ந்தசிதம்பரப்பெயர்ப்புண்ணியன்றவனுகினன். (கூ)

கோதில்சற்குருநாதனென்றகுமாரதேவகுணையன்
மீதிலன்புமிகுந்துநெஞ்சுவிடுக்குந்தூதுவிளம்பியத்
தீதிலான்குருச்சொன்னவாகித்திசைந்ததூலொருநான்கிற்கு
மாதிரம்புகழ்கின்றமாட்சிவளர்ந்தபேருரையுஞ்செய்தான். (கo)

தேசிகோத்தமரானமேலவர்சிற்சிலோர்முறையின்படி
யாசிவிண்டுதொழும்புசெய்துமெய்யன்பனுந்தனிச்சீடனே
யேசிலாத்தலமியாதிலேனுமுற்றேன்றமாதவஞ்செய்கெனப்
பேசிநீறளித்தேவினுன்பிரிந்தேகினனவன்பேதற்றே. (கக)

ஆலவாய்ப்பதிதன்னிலேகியங்குற்றவம்பிகைபொற்பதஞ்
சாலநாடிவணங்கியேன்றுதவஞ்செய்தானவடண்ணருட்
கோலமெய்திமுன்வந்துபோரியிற்கோயில்கொண்டவிர்கொற்றவை
வேலனுலயவேண்டுநீயவண்மேவுகென்னவிளம்பினுள். (கஉ)

அந்தவாறவனங்குபோதலுமாமோமயிலூரும்வேற்
கந்தகாயகன்றன்னையாண்டருள்காரணக்குருக்கோலமாய்
வந்தகங்களிகூர்தரத்தகும்வாசகஞ்சிலகூறினு
னிந்தமூர்த்தியுமந்தமூர்த்தியுமேகமாகியவிர்ந்தவே. (கங)

பேருமொன்றுபட்டுற்றதாலணுப்பேதமுந்தவிர்ந்தின்புழ்ரு
ளூருளேற்றயின்றற்கொர்திண்னையிலுற்றுறங்கொரிராவினிற்
கூருறுங்கதிர்வேலன்முன்புனைகூறையாலுடற்போர்த்தியே
யாருமன்னவன்றன்மைகன்குணர்ந்தேத்துமாறுசெய்தானரோ. (கச)

புண்ணியத்தினவாவுளார்பலர்போற்றியேதருபொன்கொடு
திண்ணியோர்கள்பராவுகோயிற்றிருப்பணித்திரள்செய்கையி
னண்ணித்தஞ்சையின்மன்னனுங்குற்றங்குமாயிரம்பொன்னினும்
பெண்ணினல்லணல்கோர்ணஞ்பெரியதன்றுபேசினனுமரோ. (கஞ)

மன்னன்கைப்பொருட்கல்லுஞ்சுண்ணமும்வாங்குதற்குபயோகித்தா
னன்னமன்னவள்கொட்டைநூற்றதனுலளித்தபணத்தினே
மின்னனேர்சுடர்வேற்பிரான்றிருமேனித்தொண்டினிற்சேர்த்திட்டா
னின்னஞாயத்தினுலென்றேர்ந்தவரேகதேசமிருப்பரே. (ககூ)

மற்றுளோரைவருத்திச்சேர்ப்பவர்மாழையாயிரத்துந்தமேற்
சற்றுவேர்வைசிந்தச்செய்பாட்டினர்தங்கள்காசொன்றுமேற்றமே
கற்றுளார்தவத்தோர்களென்னுங்கணத்திற்சீர்த்தவனுதலாற்
சொற்றுக்காட்டினனந்தவாதிருத்தொண்டியாவுமுடிந்தவே. (கஎ)

கண்ணுடைப்பெருவள்ளலன்றுகணித்துக்கூறிடுநூலினுக்
கெண்ணுடைப்பொருடோன்றுமாறெழுதென்னவேசிலரேற்றனர் [க
விண்ணுடைப்புலவோர்கள்வாழ்வையும்வீணென்றெள்ளுமெய்ஞ்ஞானி
டண்ணுடைக்கருத்தின்பமார்தரத்தக்கவாச்சமைத்தானரோ. (கஅ)

முந்துபாட்டிற் * களாசமென்னமொழிந்ததோர்மொழியின்பயன்
வந்துதோற்றமிலாமையாலுளமாழ்கிவேலனேநாடினு
னிந்துநோர்நரைக்கோலமாமுன்னிலங்கிவேத்திரமொன்றுகைத்
தந்துகொள்ளுதியென்றப்பேர்சொலித்தன்னுருக்கரந்தானன்றே. (ககூ)

தறையில்வாழ்புலவர்க்குரல்லமுதந்தனேப்புரைசந்தி
முறையென்றேர்கவிமாலைபோரியின்முருகன்மீதுமொழிந்திட்டோ
ரிறையுந்தீங்கில்பஞ்சவதிகாரவிளக்கமென்றெர்ன்னூலுநான்
மறையுமாகமக்குழுவுந்தோய்ந்தருண்மகவெனுவகுத்தான்மன்னனே. (உ0)

அன்னவன்றிருமூலனூலுக்கருத்தஞ்செய்யவுத்தேசித்தான்
பொன்னவாவினெர்தொண்டன்றன்னெண்ணமுற்றுமென்றுளம்பூரித்தா
னின்னநூற்குரைசெய்யொணுதனவெஃகவேலன்மறுத்திட்டான்
பின்னப்பொன்மயற்காரனெந்தபெருந்துயர்க்களவின்றம்மா. (உக)

அவன்வருத்தமுணர்ந்துதன்னருகாக்கூவியொர்செப்புக்கா
சுவகையாற்றருகென்றுவாங்கியுறுத்திப்பார்த்துப்பொன்னுக்கியே
தவபலம்பெரிதாகும்வீணிற்றயங்கிடேலெனச்சாற்றினு
னிவணமன்னவன்செய்தவாடல்களெண்ணிலாதனவென்பரே. (உஉ)

மண்ணிலெத்தனேபேர்கட்கோவவன்வாய்திறந்துபதேசித்தான்
றிண்ணிமைக்கருத்தோர்களாய்ச்சரிதஞ்சொலும்படிதேறிலார்
வண்ணிலாவியபண்பளாமொர்வண்ணுரப்பெண்புகழ்மாத்திரம்
புண்ணியத்தினர்சிற்சிலோருணர்ந்தோதிடப்பொலிவுற்றதே. (உங)

இட்டலிங்கமலாதொர்தெய்வமுமேற்றிடாமதத்தெய்தியுங்
துட்டநிக்கிரகஞ்செய்வேல்புனேதோள்வலான்றிருத்தொண்டுசெய்
சிட்டனூலுரைக்காரிற்சிறந்தோன்சிதம்பரப்பேர்முனி
† நட்டமுத்தியிற்சேர்ந்திட்டானுடனதற்சமாதியிலுற்றதே. (உச)

---

* களாசம் வேத்திரம், என்பன பிரம்பு. † நட்டமுத்தி - விரும்பியமுத்தி.

சீரியோர்புகழ்பாண்டிநாட்டிற்செனித்துமாதவச்செல்வனுப்
போரிமாநகர்க்கந்தன்ஞாளிற்புகுந்தவன்புகழ்போற்றினே
னீரின்மிக்குயர்சோலையப்பெயர்நின்மலத்தவயோகிதன்
பேரியற்கைவினவுமாறினிப்பேசிடத்துணிந்தேனரோ. (உந)

சிதம்பரசுவாமிகள்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ககூகூக.

நாற்பத்திரண்டாவது

சோலையசுவாமிகள் சருக்கம்.

மலயமால்வரைச் சாரலிற்குலாம் வளமைதோயுநா டதனில்வைகிவா
முலகின்மாந்தர்தஞ் சாதிபேதத்தூ டனுப்பரென்றபே ராளர்தம்மனைக்
குலவுபாலனு வந்தபுண்ணியன் குடிவளத்தினிற் குறைவில்பேறுளா
னிலவுகல்வியுந் தவமுநல்குநன் னேயனுக்கொரா னெனநிலாவினன். (க)

சோலையப்பெயர்ச்சூடுமன்னவற்றொண்டனுமெனக்கொண்டதேசிகன்
பாலியொக்கவேமுடிவெளுத்தபின்பருவமாதொருத்தியைமணந்தனன்
சேலையன்னகண்ணவடன்வாலிபந்தீருமுன்னுடற்றிரைமலிந்ததா
லோலிபற்றுகைத்தூதர்நேர்வரென்றுன்னியோர்சொலன்னவனெடோதுவான். (உ)

இன்னநாளிலியான்விண்ணிலேகுவேனெனதுபள்ளிக்கூடத்தைநீவகித்
துன்னதன்னேயோடிவளையும்புரந்தொழுகவேண்டுமென்றேதியேகினு
னன்னசொற்புரந்திடலுமூரிலுற்றார்கள்சொன்னசொல்லறையலாவதோ
தன்னதன்னேயப்பனுமுடன்பிறந்தாருமச்சொலைத்தழுவினாரோ. (ங)

கல்விகல்கினன்பன்னியென்றுளிற்கருதிலாயிதென்காரணங்கொலோ [ன்
நல்வினைத்தொடர்ச்சியினர்போலுநீநரகவாதனைத்தொழில்செய்கிற்பதே
வல்விரைந்துகைவிடுதியென்றுரேவாய்படச்சொனர்மனமெரிந்துபோ
யல்விடங்குடித்தவனைநம்புகென்றவளொடோதிமெல்லடிவணங்கியே. ()

உன்னையென்னனைக் கெண்மடங்குமே லுபசரிக்கவே யுன்னினேன
தற், கென்னைபாவமோ தடைசெய்திட்டதியா னினியிவூரில்வை கேனெ
னச்சொலித், தன்னையாதியோர் தம்மதெண்ணமே தவறென்றுன்னிடத்
தவசியாகியே, பொன்னைமாதரைப் புவியையெள்ளுமெய்ப் போதமெய்
தியேபோயினனரோ. (ஙி)

போனமாதவன்பலபலூரினும்புக்கிரந்துணும்பொருவிறீரமுற்
றீனமின்றியேபகலிராவுமோரெண்ணமேகுறிக்கொடுழையன்றனன்
றேனளாவுசொற்குரவனுதபத்தினியையங்குளார்தெண்டனிட்டுநின்
மானமோர்ந்தனஞ்சினமுறேலெனுவலிதியன்றயாவையும்வழங்கினர். ()

அவனையோர்தினம் பொருநைமாநதிக் கருகிலுற்றநெல் லேயிலொ
ராண்டகை, குவலயம்புகழ் வடமலைப்பெயர்க் கொற்றவன்பசுங் குவளை

மாலையான், சிவனெனக்குறித் தடிவணங்கியிச் செல்வத்தோடருட் செல்
வமும்பெறற், குவகையாலொர்சொற் சொல்லெனவிரங் தோதலிற் செபி
த்துறுதியெய்தினன். (எ)

அந்தமன்னனுற் செந்தின்மூர்த்திகா ராழிவிட்டுமீண் டதுவுமாங்க
ணேர், வெந்தகைப்பொலா வயிணவன்பல்பா விண்டநாள்கொடை மிக
வழங்கலுங், கந்தவார்குழற் கவரிநெல்லையிற் கனவிரண்டொர்காற் காட்
டியாண்டது, மிந்தவாறியன் றிட்டகாதையா யிரமுமீண்டியம்பிட வொ
ணுதவே. (அ)

சோலையப்பெயர்ப் பரமயோகிதான் சொன்னபாடலின்முகையகந்தமா
வேலைதொட்டுமா மலயமட்டுமே மிகவுலாவுநீர் மேவினனெர்காட் [ம்
காலையிற்றிருக் குருகையூரினிற் கரியனன்பர்நேர் கருமவேதியர்
மாலைவீதிவா யொருமனேத்தலே வாயிலிற்சிவா வெனவிருந்தனன். (கூ)

அதுவினுவியம் மனேயிலுற்றதோ ரந்தணன்கொதித் தருகுவந்துநீ
கதுமெனுவெழுந் தேகுகென்னவே கடுகடுத்தனன் கண்டுதொண்டர்தம்
பொதுவனுமுதற் கடவுளேபலோர் போற்றுமாறருப்புனேயுமுண்மைதே
சதுரனன்றுநன் றெனவவ்வூர்மயா னந்தனிற்புகுந் தான்விளைந்தசோ.[ர்

வெந்தநீறுடன் முழுதணிந்துவெள் ளெண்புமாலைதோண்மீதிலிட்டுவெங்
கந்தமாருமூ மத்தெருக்கலர் கவினச்சூடியே கைக்கபாலத்தோ
டந்தகற்செகுத் திட்டமூர்த்திபோன் றந்தவூரினந் தணர்தம்வீதிவாய்
வந்தனன்சிலோ ரோடினுர்சிலோர் வாழுந்தம்மனே வாயின்மூடினுர். ()

அந்தமட்டில்விட்டேகிடாதவூராலயத்தினுட்போதல்வேட்டனன்
பைந்தகைப்பிரானடியரிற்பலோர்பயமெய்திக்கபாடங்கள்சாத்தினுர்
சிந்தமோதிடக்கருதுமூர்க்கர்முற்றியபேய்கள்பூதங்கள்காவலா
வந்தவாறுதோற்றியதவ்வேளையில்வடமலைப்பெயர்மன்வந்தானசோ. ()

அருள்வினேதத்தான் மன்னங்கெய்தல்கண் டந்தணரஃ தோதி
னரவன், றெருளுமம்முனிக் கடிமையாதலிற் றெண்டனிட்டிதேன் செய்
தியென்றபோ, திருளுமுற்பவத் திவர்நெறிக்கணும் றியானிசைத்தநூ
லிதனுள்வைத்துளேன், பொருளின்மிக்கதா மதையெடுத்திடப் போதல்
வேட்டனன் பொய்யன்றேயென்றுன். (கூ)

அற்புகத்ததா மச்சொற்கேட்டபோ தங்குளார்மனத் தையமெய்தியிச்
சொற்பொயாகிலெம்முயிர்விடுக்குவஞ்சொன்னவண்ணமச்சுவடிகல்கினு
னிற்பணிந்துநீ யேமயேசனு நிசமுள்வேமென்றூர் நிருபனேடக்கோ
யிற்புகுந்தொர்கற் கீழொர்பெட்டகத் திட்டவாறெடுத்தீந்திட்டானசோ.

அந்தநூலின்பேரறியகிற்கிலேனகிலமீதறிந்தார்களியாவசோ
வந்தமன்னனுஞ்சிந்தைநொந்தபல்வைணவக்குழாத்தினருமின்புற்றூர்
கந்தன்முதைபோனின்றமாதவன்கடிதுமற்றுரூர்வயினடைந்தனன்
பிந்தவன்னவன்செய்தவாடல்கள்பேசுவார்கள்பல்பெரியர்தாமுமே. ()

நீடுகாளவண் டிரியுமாமுனி நிகமவாகமச் சமரசம்பெறப்
பாடுசச்சிதா னந்தமாலையின் பாடன்முப்பதிப் படியிலுள்ளன [சித்
வோடும்வாசியைக் கொடுமுயன்றெலா வுலகமுந்தனுள்ளொளிர்தரப்பல்
தாடுவார்கடம் மரபிலுள்ளவர்க் கார்வமிக்களித் திடுபவாகியே. (கசு)

அவனதாமுடற் போனவாறிதென் றறியொணதெனப் பலர்சொல்
வார்சிலோர், தவவிசேடனிட் டையிலிருக்கையிற் றழலிடைப்பொலார்
தாமழுத்தலாற், சவமெனக் கழுத்தளவும்வெந்துநற் றலைபறந்துபோய்த்
தன்னெர்சீடன்முன், னுவகையோடுசிற் சிலமொழிந்துபே ரொளியிலு
ற்றதென் றோதுவார்களே. (கள)

உள்ளதாயவப் பனுவலொன்றுமுன் னுடலொடுற்றபோ தோதலெ
ன்றும்பின், னெள்ளறீர்தரத் தலைதனித்தபோ தியம்பலென்றுமோ துந
ருமிங்குளார், வள்ளலாமரன் றிருவருட்பெரு வாழ்வுஞ்செந்தமிழ் வள
மும் தோய்ந்ததிற், கள்ளமின்மையா லிதனிலத்தவன் கதையுரைத்த
தாங் கண்டுகொண்மினே. (கஅ)

ஆயும்வண்புகழ்ச் சோலையன்றிறத் தடியனேனறிந் திட்டமட்டினிற்
றோயும்வண்சுவைக் கவிகளாலிவண் சொல்லினேனினிச் சுரமிஞர்வனப்
பேயுமாதரண் மனையினிற்புணர்ந் திடுதனட்டபோ திசைவருதுபோற்
தாயுமானவன் சரிதமிச்சகந் தனிலுணர்ந்தவா சாற்றுவேனரோ. (கசு)

சோலையசுவாமிகள்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - களகஅ.

நாற்பத்துமூன்றுவது
தாயுமானசுவாமிகள் சருக்கம்.

சோழநாட்டிற்குடிகொள் வேளாளர்மரபினிற் சுத்தசை வாகமத்தி,
னுழுமுறுபத்தியொடு வாழுமொருவன்செய்தவ மதனில்வரு புதல்வன
டல்கூர், வேழமனையன்றுயு மானவனெனும்பெயர்மி லிந்தவன் கல்வி
கேள்வி, யூழதன்வழிக்கொடுமி கப்பொறுத்துப்பருவ முறுபுருட னாகி
னனரோ. (க)

இருமாதரின்பமுங் கவுரிகுலமன்னவனி டங்கணக்கெழுது தொழிலுங்
திருமூலர்மரபில்வரு மவுனகுருதேசிகன் செப்புமுபதேசநிலையு
மொருபூமிமித்தமண் மாரிபெய்வித்தசிவ னுற்றசிரகிரிவாசமும்
பொருவாதகெம்பீர வுற்சாகமுங்கொண்டு பூரித்திலங்கினனே. (உ)

இளையாடனேத்தனது பணிசெயுமொர்வாலிபனு ளிச்சித்திளைத்த
தோர்ந்து, வளையார்கரத்தவளொ டதுசொலியவற்கூவிமகிழ்வி லறுபவி
யென்றலும், கிளையோடுநாசம்வரு மென்றஞ்சியவரடிக் கீழ்வீழ்ந்தெழுந்
தெனினேவால், விளைபாவநீக்கியுய் வேனெனக்காசியைவி ரும்புபுரடன்
தானரோ. (ஊ)

இக்காதையான்வணங் கத்தகுமொர்பெரியவரி யம்பிடக்கேட்டது ண்டுண்டு, டக்காரணம்புவியு ளார்சொல்லவில்லைநிச மாங்கொலோபொய் தான்கொலோ, மெய்க்காமரசமுஞ்சி னுளதுபவித்ததால் வீறுமகனெரு வனுண்டா, யெக்காலமுங்குலவ வகவலொன்றேதினென னச்சொல் வார்பலருளாரே. (ச)

அத்தாயுமானவனெ னும்பெயர்த்தவசீல னருளாட்சியெய்தியணிகூர் வித்தாரகவிபாடன் முதலாயவண்மைகளே விசையரங்கையனெனுமன் னித்தாரணியின்மாந்தர் பலராலும்வினவுற் றெனக்குநீபணிசெயற்க வெத்தாகமெய்தினுங்ல் குவனுனதுசீலியினில்லை கெனவினியம்பினனே. (ஞ)

அதுமுதன்மனைத்தலேயி லவனுதவிகொண்டுறினு மானந்தங்ட்டை கூடிப், பொதுமுதலினைச்சமர சந்திகழ்தரப்பெரிது போற்றலேதொழி லாகினுன், விதுவணிதருஞ்சடில ரடியவனெனும்பெருமை மேன்மேலு மிஞ்சுதலினுற், கதுமெனக்காண்பவர்க ளிற்பலர்வணங்குடுங் கழல்கொடு நிலாவினனரோ. (சு)

அங்ஙாளினிற்பயிரின் விளைவுகுறைவாதலினி வகிலமெலிவடைதல் சகியா, மைங்ஙாகங்கர்மன்ன னவனிருந்துழிசென்றுன் மகிமையுலகறியும் வண்ண, மிங்ஙாளின்மழையொன்று பெய்திடச்செய்கெனவி ரந்தன னிசைந்தவன்றுன், பைங்ஙாகமணிதருப ரன்றனங்னேந்தொர்கவி பாடி டல்விழைந்தானரோ. (எ)

சைவசமயஞ்சமய மென்னிலதிலுறுதெய்வந் தன்பிறைமுடித்த தென்னி, லிவரையும்வென்றுகளி கூர்வதேமுத்தியெனி லறம்வளர்த்த வளங்ஙகரா, மைவனப்புக்கொண்டல் காள்பெய்மின்மழையெனவொர் வண்கவியுரைத்திடலுமே, செய்வரம்பிற்புனல்வ ழிந்திடும்படியதிக சிக் கிரம்பெய்ததம்மா. (அ)

அவ்வற்புதந்திகழ்த லான்மகிமைமுன்னையிலு மதிகமானதுசிஞள் போய்த், தெவ்வர்க்கெமன்புரையு மன்னன்பொனுலகிடை தேவரெதிர் கொளவேகினுன், மெளவற்றொடைப்புதல்வ னிதமகிதமறியாத மதலை யம்பருவமுறலா, னெளவற்பெருந்தருவி னிழல்கொள்பார்முழுதுமவ னுரியரசாகியதரோ. (கூ)

அம்மாதுதருணியம் பருவத்தளாதலின டற்கருப்புச்சிலேக்கைப் பொய்ம்மாரனிரவுபகல் போராடலானெந்து புல்லியரிணக்கமொல்கி மெய்ம்மாதவத்தாயு மானவனேவெஃகிவெகு விதமாகவுபசரித்துக்[ளில். கைம்மாறிலாவுமுதல் வாயிலுடையரண்மனைக் கண்வரவழைத்தொர்நா

தன்குறிப்புத்திகழ வணுகினளறிந்தத்த போதிமுனிந்திடாம [யேகி னின்குறிப்பின்படிசெய் குவன்விரையல்சிறிதுபொறு நீயெனச்சொல்லி யின்குணத்தரிவையரொ ளெபந்தமியாவையுமி கழ்ந்திராவேடந்து வன்குரற்சேயநிகர் வழுதிநாட்டிள்ளதொர்வ னத்திடைமறைந்தானரோ.

அத்தவனுரைத்தமொழி சத்தியமெனக்கருது மம்மகளி . த்தொரவுணன்
செத்தபினவன்றன்மனை யாளெடுநாண்மருவு சீதரன்விழைந்தவடி வே
யொத்ததுதினங்கலவி செய்ததிமகிழ்ச்சியிலு றும்படிபு ரிந்தனனிதா
லித்தரையிகழ்ச்சிமுத லாயபலதீமைகளி லாதியலலோர்பெருமையே.

அச்சுகமமாதநுப வித்திலளெனிற்றுயு மானவனறைந்தவார்த்தை,
பொய்ச்சொழியநீதியொன் றும்புவிபுரந்துவளர் புண்ணியரிட த்திலென்
றும், பச்சுருவமால்கலியி ருக்குமெனும்வேதமொழி பழுதுபடுபாவமொ
ன்று, மெய்ச்சுடரிரண்டெனவெ றிக்குமன்றோவிதன்வி தந்தெரிகுவார்
கள்சிலரே. (கஈ)

பொய்ம்மையும்புரைதீர்ந்த நன்மைதருமாகிற்பொ ருந்துபெருவாய்
மையென்னு, மெய்ம்மறைப்படியந்த மாதிடத்தப்பொய்சொலி லில்லிய
துமேம்பாடதே, கைம்மலியனையபலத் தொருவனேத்தேடாது கல்வி
யொடுஞானமெய்து, மெய்ம்மகத்துவபுருட னொருவனேவிரும்பியதும்
விபசாரமாகிடாதே. (கச)

மன்னவன்றேவியையு மாதவனையுஞ்சேர்த்து மதனலீலையிலியக்கிப்,
பன்னரியநிந்தையுல கஞ்சொலக்கேளாத பரதெய்வ மெடிதுவாழி, நன்ன
யச்சொற்சுவையு டன்சமரசப்பொருளு நளிர்சீவகாருணியமும், துன்ன
வெகுபாடல்பகர் வான்புகும்வனத்தொருவர் தொடர்பின்றியுலவினனே.

அங்ஙகரிலுள்ளவர்க ளெங்குபோயினனெவ றிந்திலேமெனநினைந்தார்
செங்கலமுடைக்கவுரி குலதீபமனையன்மனை சித்திவலியால்மறைந்து
மெய்ங்ஙசைமலிந்துதன் னுயிரொகலந்தேமி ளிர்ந்துளா னெனமகிழ்ந்தா
ளெங்ஙவையுமின்பமா மீசனருளெய்திடிலெ னற்கிதோர்சான்றுனதே. ()

அவ்வனத் துற்றதவ னங்குளகி முங்குகனி யாதியபுசித்தான்கொ
லோ, வெவ்வமென்றெல்காது கொட்டின்மலிபட்டிதொறு மிரவிலேற்
றுண்டான்கொலோ, வெளவரியசிவயோக சாதனையிலூற்றவரு மதியமு
தருந்தினனோ, தெவ்வரிவருறவரிவ ரெனும்விகற்பந்தவிர்சி றப்பொடு
திகழ்ந்தானரோ. (கள)

ஒருதினத்தொருமரத் தடியின்புதாரினிடை யுலகொடுதனையுமறந்த
நிருவிகற்பசமாதி யோகத்திருந்தான நிட்டையின்பெருமையளிதோ
வருபசுக்கூட்டம்பு ரக்கின்றமைந்தர்சிலர் மாயந்தபிணமிதெனமதியா
வருகுறுமொருநில்வளர் சிற்றரசனுக்கிந்த வதிசயமுரைத்தார்களே. ()

அப்பாதகன்சிறிது மெண்ணுதுபாராத முற்கிடையிடப்புகன்று
னிப்பாரிலுள்ளவறி வாளனொருவன்செவியி லேணுமதுதுழையவில்லை
முப்பாலதாகிநிகழ் காலமுந்தெரிகின்ற முனிவோர்களுஞ்சகித்தார்
மைப்பாவைபாகனுஞ் சம்மதித்தனனந்த வாறியற்றினரையகோ. (கசு)

பாதியுடல்வெந்திட்ட பின்னிட்டைதவறிப்பு டித்தலையுணர்ச்சிவந்தித் தீதிழைத்தவன்வங்கி சங்கெடுகவென்றுர்சொற் செப்புபுமறைந்தானை வோதிடுமிவுலகமவ் வாசுதத்துப்புதல்வ ருழிகின்றுபொலிவிழந்த [ஞ தாதின்னவுரென்று சைப்பாருமுளரென்மன மவ்வளவுமிசையவிலையே.

நான்கும்பிடும்போத சைக்கும்பிடாதலா னுன்பூசைசெய்தன்முறை யோ, வேன்கும்பிடுந்தொண்டு செய்குவேனென்னுமொழி யின்பயனதா குமுலகீர், வான்கும்பிடும்பேறு பெற்றுலுமீசனேவ ணங்குமவரடியரடி யார், தான்கும்பிடுந்தெய்வ மென்னுமடிமைத்திறந் தலைமிசைக்கொள் ளல்கடனே. (உக)

எப்பொருளுமீசன்வடி வேயெனுமறைத்துணிவி னைக்குறித்தந்த வண்ண, மப்பொருளுரைத்தந்த நிலைநின்றவன்றன்னே யான்றசற்குரவ னென்றும், கைப்பொருளெனைக்காக்கும் விதிவேண்டுமாயாத காயசித்தி யுமதற்கா, மெய்ப்பொருட்டுணையுமிக வேண்டுமுலகிற்றனிசெல் விரதி கட்காகாததே. (உஉ)

அங்கியுமதிற்றகித் திடுமாறுசொன்னவனு மவ்வுடலுமற்றியாவு [தே மெங்கினுமிருக்குமெய்ப் பொருள்வடிவமேயாமெ னிற்சிறிதுமீனமின் சங்கியல்குழைக்காது முதலியகுறிக்கொளிற் றுனிதுதழற்செற்றையு மங்கியொழியொண்ணுது சமணர்முற்சம்பந்த மதலையிடுசுவடிசான்றே.

அனகவிரதங்கருனை யாதியகலம்பலகொ டவிர்தாயுமானவன்றுன் பனகமணியும்பரனு ருக்கருதிடாவெறும் பாசமண்டனல்லதுடி மனநிலைபெற்றும்பொழுதி லதனைக்கரைத்தெங்கு மருவுநிட்களநாட்டமுற் றுனலரியமுத்தியே கருதிமுயலுற்றனனி வுண்மையுணர்வதுமருமையே.

முள்ளொன்றுதைத்திடினு முயிர்பதைக்கச்செயுடன் மூட்டியகொ ருப்பிலிட்டு, மெள்ளொன்றினைவுமசை யாதுகருதோரம்வெந்திட நின்ற நிலையற்பமோ, கள்ளொன்றுமதுரக்க விந்திறமுபாசனைக் கண்ணிலார்க ளுமடைவரோ, வள்ளொன்றுதுவிதவத் துவிதமெனிரண்டுமெனும் விர கடைவதருமையாமே. (உடு)

முன்னியன்றனவுமினி மேனடப்பனவுமொரு முனிவன்வந்துரை செய்தாலுங், கல்லினிற்றிரண்முழினுரு தருணிமதலீலையின் காரணமு ரைக்கைபோலு, மெல்லினிலிவ்வளவுரைத்த துமிகையேயாமி கத்தெரி பரத்துமியாது, மங்கியந்திருவருட் செயல்லுக்கலையென்ப தழிவறுந் சரதமாமே. (உசு)

காவையம்பிகைவரைசொல் சகுணபேதமுரிட்க ளப்பொருளுமேக மென்னும், பாவைமிகதுவழுயு மானவன்சரிதமிப் படியிலுணரளவுரைத் தேன், கோவையங்கனிவாய்த்த டாதகையுமரனுங்கு மாரனுமளித்தரூட் டிற், சேவைகுந்தப்பதியில் வருகுமரகுருபரன் றிறமினிச்செப்புமேலை.

தாயுமானசுவாமிகள்சருக்க மூற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - களசடி.

குமரகுருபரசுவாமிகள் சருக்கம்.

பொருதைநதிவடகரையிற் புருடோத்தமக்கடவுள்
பெருமைமலிதருகள்ளப் பிரானென்னவாழ்ரி
லருண்மிகுமோர்வேளாள னருந்தவத்தின்பயனகி
யொருபுதல்வனெழின்மிக்கா னுமையாய்ப்பிறந்தானே. (க)

ஐந்துவயதாமளவு மவனென்றும்பேசிலனும்
றந்துளதாய்தந்தையர்தந் தனையனெடுதுணிந்தேகிச்
சிந்துமுழங்கியவோசைச் சீரார்ந்தசெந்தூரின்
மைந்துறும்வேற்படைகொடுவாழ் வானவன்பொற்ரூள்வணங்கி. (உ)

இம்மகனேர்மண்டலத்தி லினியசொற்பேசிடவேண்டு
மெம்மதவாவங்ஙனமே யெளிதுமுடித்திலையாகின்
மைம்மகராலயப்புனலின் மாய்ந்தொழிவோமெனும்விரதந்
தம்மதொருமையிற்கொண்டு தக்கவண்ணமுயற்சித்தார். (ங)

உப்பிலாவெற்றன்ன மொருபோதுண்றெங்காராய்த்
திப்பியசெந்தமிழ்வண்ணத் திருப்புகழாதியபோற்றி
யெய்ப்பினிலுமுயிர்விடுத லேற்றமெனுந்தேற்றமொடு
செப்பியநாற்பதிற்றைந்தாந் தினமுதிப்பக்கண்டனரே. (ச)

அன்றுபகற்பூசைமுற்றி யருக்கன்மறைந்ததற்பின்ன
ரின்றுபயன்கைவருமோ விறப்புவருமோவென்னச்
சென்றுதிருச்சந்நிதியிற் சேயினெடுகைதொழுது
நின்றுருகுமவ்வேளை நீலமயிலோனருளால். (ஞ)

அருச்சகன்மீதாவேச மாகியங்கைவேலெடுத்து
மருச்செறிபூமாலையொன்றம் மதலைகழுத்தினிலிட்டுக்
கருச்சளந்தீர்த்தருணீறுங் கமண்டலதீர்த்தமும்பெய்து
விருச்சிகம்போற்ரொடர்பண்டை வினைத்திறந்தீர்தரநோக்கி. (ட)

பூவென்னப்புகன்ரூனப் புத்திரனம்மொழிபற்றிப்
பாவென்னுமினத்துயரும் பஃறொடைவெண்பாப்பகர்ந்தா
னுவென்னவங்குற்ரு ரனேவோருமதிசயித்தார்
தேவென்னத்திகழ்பொருளாற் செயத்தகாதனவின்றே. (எ)

வாய்மையாற்றவம்புரிந்த மாதாவுந்தந்தையுந்தஞ்
சேய்மையலறுமாற்றஞ் செவிமடுத்துத்திருத்தியுற்ரு
ருமையாய்ப்பிறந்ததனு லுருத்திரசன்மன்கொலெனத்
தூய்மையோர்பலர்துதித்துத் தொழுதெழவுந்துணிந்தாரே. (அ)

முன்னமோருமையையு முடவனேயுந்திருத்தியவா
பின்னரோருமையையும் பேசுவித்தானெனுஞ்சீர்த்தி
கன்னல்வேய்போல்வளருங் கழனிமலிதிருச்செந்தூர்
மன்னனுமுருகேசன் மாட்சியிடைவாய்ந்ததுவே. (சூ)

அமரர்களும்வியந்தோது மச்சிசுவின்றிருநாமங்
குமரகுருபரனென்றே கூறியதிவ்வுலகெல்லாஞ்
சமரெடுத்தனிவேற்கைச் சண்முகவன்சம்மதத்தை
யெமரபினர்மாற்றுபுவே றிசைத்திடற்குவல்லாரே. (கo)

அக்குமரகுருபரனே டருந்தவத்தோர்பலர்தாமு
மிக்குணர்ந்தபாவலரும் வேட்கையொடுகூட்டமிட்டார்
தொக்குமடாலயந்தோறுஞ் சுவைத்தமிழ்ப்பேரவைதோறும்
புக்குபசாரங்கள்பெற்றுப் புலியேறெழுத்துலவினனே. (கக)

ஓதாமலுணர்ந்தானென் றுசிதகுணத்தினெல்லாம்
பாதாரவிந்தத்திற் பணிந்தவன்சொற்பணிசெய்தார்
தாதார்பூம்பொழின்மலியுந் தருமபுரமடத்ததிபன்
மாதாவிற்கருணைமலி மாசிலாமணிக்குரவன். (கஉ)

இன்னவன்வந்துறுமாரூர்ந் தினியபரிகலமெடுத்துத்
தொன்னெயில்வைத்திருமினெனச் சொல்லியெழுந்ததற்பின்ன
ரன்னவன்வந்தம்முனியே யருட்செந்தூராசானுத்
தன்னதுகண்களிற்றூற்றச் சாட்டாங்கமாத்தொழுதான். (கங)

கடல்விண்டமடைபோல்வான் கண்டுதெண்டனிட்டதுணர்ந்
துடன்வந்தோரதிசயித்தா ருவனுமவன்றனைத்தழுவி
நடனஞ்செய்திருவடியி னன்னிலைமையுணர்வித்துத்
திடமிஞ்சப்பரிகலத்தைச் சிவவேடத்துடனீந்தான். (கச)

தண்டுகுடையாளர்களாச் சாதுசங்கப்பேரரசாத்
தொண்டர்குழாம்போற்றிசைப்பச் சுகித்தாலுந்தொல்லுலகி
லுண்டுசுத்தஞானிகளென் றுரைத்தமொழிநிசமாயிற்
றண்டர்களும்பெறலரும்பே ரானந்தமடைந்தானே. (கஙி)

ஞானகுருபரன்மகிமை நன்குணரமாட்டாதார்
போனவனேத்திருத்தொண்டர் புராணத்தின்கவியொன்று
லீனமுறச்செயித்தாண்டா னெனச்சொல்வாரிவனந்தத்
தானமதற்கொருபெரும்பொற் சாளிகையாயவிர்ந்தானே. (கசு)

சின்னுள்சென்றக்குரவன் றிருவாக்கின்வழிதேறிப்
பன்னுமெலந்துழலும் பருவரன்முற்றறநீங்கி
முன்னனகாசியினே முன்னினனங்காளின்
மின்னுமுண்மருங்குன் மீனுட்சிவிழைந்ததனால். (கஎ)

கார்கொண்டவென்றெடுத்துக் கவின்பிள்ளைக்கவிபாடிச்
சீர்கொண்டமதுரைநகர்த் திருமலைநாயகனெனுமன்
னேர்கொண்டவரண்மனைவா யிலிற்சென்றுனங்குற்றூர்
கூர்கொண்டமதியிலராய்க் கொடுஞ்சொற்கள்கூறினரே. (கஅ)

அவ்வளவிலவன்றுணைக்கொண் டரங்கேற்றுமாசையொழித்
திவ்வளவுஞ்செய்யாதா ளென்செய்வாளெனுஞ்சினங்கொண்
டொவ்வருமவ்வூர்க்கோட்டை யுத்தரவாயிலிற்றுயின்றான்
றெவ்வடார்வேல்வழுதிதரு திருமகண்மெய்யருள்கூர்ந்து. (ககூ)

வே று.

அந்தமன்னவன்கனவினின்முதற்குலத் தரிவைதன்னுருவாய்ப்போய்
வந்தமாதவன்சென்றதுந்துயில்வதும் வாட்சடையொடுசேர்த்துச்
செந்தமிழ்க்கவிவடிவமாந்தனைக்கொடு செலநினைத்ததுஞ்சொல்லி
யிந்தமாநகருயும்படியழைத்தரங் கேற்றுவித்திடுகென்று. (உ0)

சிறிதுறுத்துரைத்தக்கணமம்முனி சிந்தையின்கனவூடும்
பொறிநிலாவுமார்பினனனுன்வருந்திறம் புகன்றனள்விழித்திட்டார்
செறியுமன்பொடுமன்னனுந்தவன்றனைத் தெண்டனிட்டழைத்தேகி
யறிஞர்கண்டுகண்டின்புறத்தக்கவா டம்பரம்பலகாட்டி. (உக)

சடையிற்கட்டுண்டுகிடப்பதாந்தன்னெரு சக்களத்தியின்றன்மை
யடையுமம்பிகைவடிவமாம்பிரபந்த மதனையத்தனீக்கி
மிடைதரும்பலபுலவருந்தவத்தரும் வேதியர்களுஞ்சூழப்
படைகொண்மன்னனுமின்புறச்சங்கதி யினிற்படித்தனன்மன்னே. (உஉ)

அந்தப்புத்தகந்தாங்கியூர்வலம்வரு மானையாதியின்சீருஞ்
சந்தக்கோகிலமனையமீனும்பிகை சங்கதிச்சிறப்புஞ்சேர்த்
திந்தத்தானத்தினூறுபாட்டியம்பினு மினிதெனக்கொடுபேசு
மந்தப்பக்குவர்பலருளாரங்ஙனம் வகுப்பதென்னிசைவன்றே. (உங)

காப்புமுற்பகர்பருவமோரைந்தையுங் கடந்தபின்வாரானைப்
பாப்புகன்றிடத்துவக்கலுமம்பிகை பட்டர்தம்மகளாகி
மாப்புரந்தரனனையமன்மடிமிசை வந்திருந்ததுமுற்றிற்
போய்ப்புகுந்தழியறிவுருவண்ணமே பொருக்கெனமறைந்தாளே. (உச)

மறையுமக்கணம்வந்துபோயினமகண் மானிட்மலளென்ன
நிறையுமன்பினர்சிலரயிர்த்துசாவலு நிசம்படவியந்தார்த்தா
ரிறையுமித்தனைபேறுநான்பெற்றவா றென்னெனக்களிகூர்ந்தான்
குறையுஞ்சொற்றுமுற்றியதவன்றவபலங் கூறிடுந்தகைத்தன்றே. (உடு)

ஆணமிக்குமன்னத்தவற்கம்பொனு மாடையுமணிக்கூட்டுந்
தோணல்கியென்னுலியன்றனவெனச் சொல்லுபுதொழுதேத்தி
நாணலோர்ந்துமலயத்துவசனுநிகர் நலமடைந்தனையென்றிட்
டேணருட்குரு சங்கதிசேர்வனென் றியம்புபுகடந்தானே. (உசு)

நடந்துசோழமண்டலத்தின்வேலூரினே நண்ணுபுகமாதுக்
கிடந்தரும்பெருமானடிதொழுதபி னெஃகவேற்குமரன்முன்
றொடர்ந்தெனைத்துதித்தேகுதியென்றலுஞ் சுரருணுமமுதென்னத்
திடந்தருஞ்சுவைத்தாயபிள்ளைக்கவித் தெரியல்செய்தணிந்தானே. (௨௭)

முன்னும்பின்னுமெத்தனேதலமோவிதி முறைப்படிதொழுதிட்டான்
றன்னுடைக்கவிவிழைபவர்க்கேதுதி சாற்றுதன்மையன்போலு
மன்னுதில்லையிற்போய்ச்செய்யுட்கோவையென் வண்டமிழ்த்தொடைசாத்திப்
பன்னுகாசிகண்டரன்பதத்தொருகலம் பகத்தொடைபுனைந்தானே. ()

நீதிநன்னெறிவிளக்கமுந்தவளநன் னிறக்கலிமகண்மாலே
யாதியாஞ்சிலபனுவலும்பகர்ந்தன னதன்றொகைமுந்நான்கென்
றோதிஞர்பலர்வகைதெரிந்தோர்பல ருரைப்பரப்பெருந்தேயத்
தேதின்மாற்றமுந்தருமமில்லாமையு மிலங்கல்கண்டுளொநொந்தே. (௨௮)

இந்துத்தானிநாட்டினிலருந்தமிழ்நிறு விடுதன்மிக்கரிதேயா
முந்துநல்லறநடப்பதுமருமையோ வென்னமுன்னுபுமுன்னண்
மைந்துறுங்குருகுலத்தர்வாழ்ந்திருந்தமா நகரிலங்காள்வைகி
வெந்துவீரசேகரனெனத்திகழ்தரு மிலேச்சமன்னனேக்கண்டான். (௨௯)

கண்டமன்னனீயாரெனவினவலுங் கடற்புவிமுழுதுஞ்செ
யண்டர்நாயகனடிமையென்றனனுட னவனுளனெனப்போற்றுந்
தொண்டரியாவர்க்கும்பொதுவனேவென்றனன் றுணிந்தவனுமென்னீ
வுண்டலெம்மொடுசெயற்கைவாய்கொலென் றுசிதமில்விளச்செய்தான்.

அவர்களுண்பனகேட்டறிந்தேனமட் டருந்திடாதேனென்றுன்
றவலரும்புகழ்க்குருசொலவிலையெனச் சாற்றலுமவ்வாறே
சிவனெனுங்குருவெமக்குமாமிசந்தினச் செப்பிடவிலையென்ன
வுவகையோடுதெய்வீகமொன்றேனுமீண் டுரைற்றுதியெனச்சொன்னன்.

இன்றிராவினின்றெய்வமேயெனைத்தெரித் திடுமெனப்புகன்றோர்பால்
வென்றிவேலனைக்கருதிநொந்திருந்தனன் வேறுபல்குருவாயு
நின்றிலக்கமினெறிசெயுமவனவ னிதந்தொழுங்குருவாகிச்
சென்றிங்குற்றவன்விருப்பமீந்தனுப்புதி சீக்கிரமென்றானே. (௩௧)

அக்கனுப்பெறுமன்னவன்விடியுமுன் னம்முனிவனைக்கண்டெம்
மக்கதேசிகன்மொழியினுனின்பெரு மான்மியமறிந்துற்றேன்
றக்கவாறுநின்வேட்கைமுற்றுறச்செய்வேன் சாற்றுதியெனப்போற்ற
நக்கன்மேயகாசியின்மடமறுபத்து நான்குசெய்திடவேண்டும். (௩௨)

அதற்குவேண்டியநிலம்டொலமாதியு மாட்சகாயமுநல்கென்
றிதத்தொடோதினனங்ஙனமீதலு மெளிதினின்முடித்திட்டுக்
கதத்தராகுமத்தேயத்தார்நாணுறக் கமலநான்முகனால்சொல்
விதத்தவாமறமுழுமையுஞ்செய்தனன் விண்ணவர்வியந்தாரே. (௩௩)

ஓட்டகம்பசுமேடமாதியபல வுயிர்வதைத்தூனுண்ணுங்
துட்டர்கைப்பொருட்குவைகொடுபுலவருந் தூயமாதவத்தோரு
மிட்டமாந்தருமங்கண்மிக்கியற்றின னெறிகடலுவர்நீரால்
வட்டமாநிலமுய்யநன்னீர்பெயு மழைமுகிலுறழ்ந்தானே. (உசு)

அங்குசிற்சிலகாள்வசித்துரைக்கரு மருந்தவகனியாற்றி
மங்குலார்பொழிற்காசியூர்புரந்தருள் வயிரவப்பெருமானுட்
பொங்குகங்கையிற்சிறியகாற்புனல்புகல் போற்கலந்தொன்றுனு
னிங்குமற்றுருபிறப்பவற்கெய்திடா தெனுமொழிதிறந்தானே. (உள)

கனியுமின்சுவைச்சந்தமோதிடும்படிக் காசெனுமொருதொண்ட
னனியவன்பணிசெய்தனனெனச்சிலர் நவில்வரன்னவன்சாதி
தனில்வந்தோனென்பர்சிலர்சிலர்செங்குந்தர் தம்மனேச்சிசுவென்பார்
பனிமலர்ப்பொழிற்களந்தையிற்பிறந்ததாப் பகர்தன்மாற்றிலர்மன்னே.

தில்லையம்பதிச்சிவன்படிக்காசளித் திட்டதாச்சிலர்சொல்வா
ரெல்லையின்றியவூர்தொறுமஃதிரந் தனனென்பார்சிலரின்னேன்
சொல்லவேட்டரனளித்திடிற்காயவூர்த் துலுக்கனதியர்ப்பாடுந்
தொல்லையன்னவற்றுருடர்வுறுதெனத்தெளி தூயவர்சிலர்தாமே. (உசு)

தய்யச்சந்தமேமிகைபடப்பாடுமத் தமிழ்ப்புலவனேவீணே
வையச்சம்மதமெனக்கிலையவன்குரு மான்மியத்துடன்சேர்த்துப்
பையக்கேட்டமட்டிரைத்ததுமுவகைமேற் படுந்தகவெனத்தேர்மின்
செய்யசொற்சுவையுணர்ந்தவரவன்றனைச் சிறிதுமெள்ளாரம்மா. (சo)

கந்தவேள்பணிவயித்தியநாதர்தங் கலம்பகத்துடன்சிற்சில்
சந்தவான்கவியன்னவன்சொன்னவாச் சகத்தினிற்கண்டேன்மற்
றுமதனைவந்தவூரகைப்பிரபந்தமெனுமொழிகளுமேலுமுன்னேன்
சொந்தமேனியுமுயிருமெய்தியகதி சொல்பவர்க்காணேனே. (சக)

செந்திலான்றிருவருளினுலாமைவாய் திறத்தலுங்கவிபாடுந்
தந்தியன்னவன்சரிதமுமவனடி சார்ந்தவன்றன்மாண்பும்
வந்திலங்கியமட்டிரைத்தேனினி மாவலியாசாட்சி
முந்தியுற்றவூராறுமாமுகப்பெயர் மூர்த்திசீர்மொழிவேனே. (சஉ)

குமாகுருபரசுவாமிகள்சருக்க முற்றிற்று.

ஆடி திருவிருத்தம் - கஎஅஎ.

நாற்பத்தைந்தாவது

ஆறுமுகசுவாமிகள் சருக்கம்.

ஓங்கும்பெருமைத்திருக்கோவ லூரிற்குடிகொளொருமுனிவ
னுங்குப்பிறந்துவளர்ந்தோனே வலதோளூர்விட்டுவந்தோனே
தாங்குமிலிங்கதாரணத்தோன் றவத்தாலருட்பேறடைந்துய்ந்தோன்
றீங்குதவிர்த்தன்னவற்கருண்முன் செய்தகுருப்பேர்தெரிந்திலனே. (க)

தந்தக்கரித்தோற்பரன்வீர சைவாகமத்தோர்தலிவனென்பார்
கந்தக்கடவுளுபாசனையின் கனத்தோனென்பார்கவுமார
ரெந்தப்பொருளுமொன்றெனத்தேர்ந் திடும்வேதாந்தியென்பர்சில
ரந்தப்புருடனுண்மைநிலை யறிந்தோராரோவருள்சான்றே. (உ)

அல்லலொழிக்குமுதலாசா னுறுமுகப்பேரணிந்தவிர்ந்து
கல்லபுலமைத்தொழில்வாய்ந்து கறுஞ்சொற்றமிழ்ப்பாப்பலபாடி
யில்லந்துறந்துமடமாத ரிச்சைக்கடனீந்தினரல்லாற்
புல்லருணராநிட்டாது பூதித்தனிநூல்புகன்றனே. (ங)

இடமும்பொருளுமேவலும்பெற் றேனுரமூக்காறெய்திடுஞ்சி
ருடன்வைதிகவாழ்வுறுநாளி லுரஞ்சேர்வீரபத்திரப்பேர்க்
கடகுஞ்சரநேரொருதொண்டன் கருணைக்குருவேபரமென்னுந்
திடமொன்றினையேகுறிக்கொண்டு செய்யும்பணியிற்றிறம்பாதான். (ச)

எடுத்தவுடலின்வினைமுடிவுற் றேகுந்தநிகர்ந்திட்டமையா
லடுத்தகுருவின்முகநோக்கி யழுதானவனேனெனக்கேட்பத்
தொடுத்தவுனதுபணிவேட்கை தொலையாமையினுலென்றிடலும்
கடுத்தவுடலோடியச்செய்திலன் றயையோடவைகைத்தகைமலிந்து. (ஞ)

வருந்தேலுனதாருயிரினையோர் மாதாவயிற்றின்மகவாக்கித்
திருந்காதரவாலெடுத்தாண்டு தேற்றியருள்வேனெனச்சொல்லிப்
பொருந்தோர்கணத்திலதுதனது போதவெளியிற்புக்கவர்ந்தப்
பருந்தூலத்தைப்பிறரெடுத்துப் படியிற்புதைக்கும்படிசெய்தான். (ட)

காணுவுயிரைக்கண்டுதனுட் கலக்குந்திறமைபெறுமொருவன்
வாணுளளித்தவ்வுடலினையேன் வாழ்வித்தில்லானெனமறுத்து
வீணுங்கதையென்றிடமாட்டார் விரியார்த்துளவெள்விடையுகைத்து
ணீணுகப்பூணணிபரம னியமமதுவென்றுணர்ந்தோரே. (ஏ)

ஈண்டுமகப்பேற்றிச்சையினு லினைத்தபுனிதரெனையிரக்க
வேண்டுமென்னத்திருவருளே வெகுவாகினைந்தான்மெய்த்தவத்தாற்
றூண்டுமயிலோனனையனையத் தன்மையாராந்தம்பதிக
ளாண்டுபணிந்தங்கனமொருநா ளிரந்தாரவர்பாலறைகின்றனன். (அ)

உமக்காண்மகவேவாரிரண்டுதிக்கி லவற்றுண்மூத்ததனையுரித்தோ
டெமக்கேசொந்தமாக்கொடுத்தற் கிசைவீர்கொல்லோவெனக்கேட்டா
னிமக்கார்வரைமின்னெடுசிவனே யெனமுன்னின்றுரிச்சவுற்றூர்
தமக்கேடறுமம்முனிகரத்தாற் றவளத்திருநீறளித்தானே. (சு)

அந்தமதியிற்சூலுண்டா யதற்குப்பத்தாமதிமுடிவிற்
சந்தமதலையொன்றுபெற்றுள் சார்த்தூலத்தின்கன்றெனவே
மைந்தனவனையம்முனிவன் மனத்துளிருந்தவுயிரென்பார்
பிந்தமூன்றுண்டாயவுடன் பிறந்ததோராண்பிள்ளையதே. (கo)

முனிசொற்பலிதமுணர்ந்தவர்தா மொழிந்தபடியேமுதன்மகவைத்
தனியேகொடுபோயவண்விடுத்தத் தவன்பொற்கமலச்சரண்பணிந்திட்
டினியெங்கரத்துமதலையிட செய்தாதளிக்கைகடனென்றூர்
துனியுற்றதுமாய்ந்திடலிந்தச் சுதனைத்தருவேனெனச்சொன்னன். (கக)

சொன்னமொழிகேட்டுளநடுங்கித் தொழுதுபுகழ்ந்துதுரிசுடையே
மென்னவறியாமையிற்புகன்றே மெனினும்பொறுப்பதுனக்கியல்பா
முன்னதருட்சொற்பலிதமுணர்ந் திருந்துமயங்கேமெனவோதி
யன்னதாயுந்தந்தையும்போ யதற்பினறவோனம்மகவை. (கஉ)

சண்முகமெனும்பெயரிலிங்கந் தவளத்திருநீறக்கமணிந்
துண்முகமுநெக்குருகவெடுத் துச்சிமுகந்துமெய்தழுவித்
தண்முகவனேதனைநினைத்துத் தயங்காவண்ணந்தான்பழகி
விண்முகவமுதுறழுணவும் வேறூட்டாதேயுடனருத்தி. (கஊ)

மின்னனிகர்வேற்படைநிறுவி விழியாலிதுபார்த்திருவென்ன
நன்னர்மொழியாற்றியானமதும் பழக்குவித்தாலுமெவ
னென்னதவஞ்செய்தனன்கொல்லோ யானின்பணிவேட்டனனெனச்
றன்னகுரவன்றன்பணியா மருமைசெயப்பெற்றனன்மன்னே. [சொற்

இவ்வாற்றவன்பக்குவமெய்தியெவனப்பருவமதுமடைந்திட்
டொவ்வாமதுரத்தந்தாதி யொன்றுமுருகற்குரைத்தணிந்தா
னவ்வாறுயகாலத்தே யாறுமுகப்பேரருட்குரவன்
செவ்வானனையபெருஞ்சோதிச் சிவன்சேவடியிற்புகுந்தானே. (கஎ)

அச்சண்முகப்பேர்முனிவரனே யகிலமுழுதுஞானியென
மிச்சம்படவேசொல்லியது விருத்திவிரியாதொடுங்கியென்று
மெச்சங்கத்துமமுழுந்தாம லேகநிலையிற்றேய்ந்ததவ
னச்சலெதுவாயினுஞ்சிறிது நழுவாவண்ணநடந்தனவே. (கசு)

கும்பிட்டிறைஞ்சாரிடத்தொருசொற் கூறுநிலையுங்கொடிதிகழ்ந்தான்
றெம்பிற்றிருப்பாதிரிப்புலியூர்ச் சீரார்மடமுஞ்செய்தாண்டா
னம்பித்தனைச்சூழ்பவரறிய நவின்றதினத்தங்நாழிகையிற்
கம்பிட்டவிர்காதுடைப்பெருமான் கழற்றுண்மலரிற்கலந்தானே. (கஅ)

ஆறுமுகப்பேர்முனிபுகழு மடித்தபிறப்பிலவனருளாற்
றேறுமகிமைச்சண்முகப்பேர்த் தெளிஞன்செயலுஞ்சிறிதுரைத்தேன்
சாறுமலிதில்லையின்முத்துத் தாண்டவன்ரூன்றமிழ்ப்பாடல்
கூறுநலத்தாலரியகதிகொளுமா றுரைக்கக்குறித்தேனே. (கஅ)

ஆறுமுகசுவாமிகள்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கஅ0ங.

நாற்பத்தாருவது

முத்துத்தாண்டவர் சருக்கம்.

ஆழியானறி யாமலர்த்தாளுளான்
வாழிடங்களுண் மாமலரோன்ரெழுங்
காழியூரிற் கணிகையரியாவரும்
வீழியத்தொர் விடலையுற்ரூனரோ. (க)

இட்டமங்கைய ரெண்ணிலர்ச்சேர்ந்ததாற்
குட்டநோயடைந் தான்விரற்கூட்டமுன்
னட்டமாடிந ரின்புறநல்லியங்
கொட்டதீர்ந்து குழிப்புண்கள்கொண்டவே. (உ)

இச்சித்தார்க ளெதிர்வரக்காணினுஞ்
சிச்சியென்றிடச் சீரழிந்தானெர்நாள்
பச்சிளங்குயி லன்னபராபரை
நச்சிடாமுன்க ணுவில்வந்தாளரோ. (ங)

காண்டலுந்தொழு தான்கலுழ்ந்தானெனல்
வேண்டலியாதறி வாயெனவிண்டனன்
ரூண்டவப்பெயர் தாய்தந்தையிட்டிடப்
பூண்டவிர்ந்துபின் புண்பட்டுளானன்றே. (ச)

கட்டுத்தாண்டவ னென்னக்கழறினோர்
முட்டுத்தாண்டவ னென்றுமொழிதரப்
பட்டுத்தாபமுற் ரோனவட்பார்த்தலு
நட்டுற்தாழ்குண முற்றவநல்கலே. (ஙு)

அன்னவன்மிசை யம்பிகையார்வமாய்ப்
பொன்னதாற்செயு மம்பலம்போற்றிஞ
லுன்னதின்ன லொருங்கொழிந்துய்குவா
யென்னவோதிமறைந்தனளியாமத்தே. (சு)

அன்றுதொட்டவ னோந்தொழுடைகந்
துன்றுதில்லையிற் போய்த்தொழச்சோம்பிலான்
குன்றுவில்லெனக் கொண்டவரன்னவன்
கன்றுநெஞ்சினுங் காண்டாலாயினர். (எ)

அந்தணுள ராறைதருமாற்றமே
முந்தவுற்றிட வைத்துமுறைப்படிச்
செந்தமிழ்த்துய மெய்யெனச்செப்பலுஞ்
சிந்தநேகங் தினஞ்சொலிப்போற்றினன். (அ)

எய்த்துத்தாழ்வுற வேய்ந்தவிரும்பிணிக்
கொத்துத்தீர்ந்து குலாவெழிலெய்தலுங்
தத்துத்தோய்முடத் தாண்டவனென்புவி
முத்துத்தாண்டவ னென்னமொழிந்ததே. (கூ)

வரும்வழிக்கணெர் மாசுணந்தீண்டலா
லருமருந்தென் றணிகிளர்கீர்த்தனே
பொருவிறில்லையிற் புண்ணியன்மேற்சொலி
மருளுறுதுயிர் வாழ்க்கைபெற்றுனரோ. (கo)

கொள்ளிடங்கரை கொள்ளரிதாயநீர்
வெள்ளம்வந்து தடுத்ததனன்மிக
வுள்ளுடைந்தொரு கீர்த்தனேயோதினன்
கொள்ளுக்காலங் கழித்தற்குறித்தரோ. (கக)

உடனங்நீர்வறங் திட்டதங்குற்றுயிர்
நடனநாயக னல்லருட்சோதியிற்
கடமதோடு கலந்துகொள்வேனெனுங்
திடமிலங்க வொருகவிசெப்பினன். (கஉ)

இன்னவண்ணங் தினந்தினமேத்தலோர்ந்
தன்னவாகனத் தார்தலைமாலையா
னின்னலின்றி யவனுய்தற்கேற்றபைம்
பொன்னளித்தன னென்றும்புகல்வரே. (கங)

கரந்தமாயைக் கடல்கடந்தப்புறஞ்
சுரந்தவின்னருட் டோற்றமிக்கெய்தலா
னிரந்தரந்தனே நீங்கலனுகிவா
ழரன்றனுதெனெ ராதிரைநாளிலே. (கச)

மாறுதீர்புகழ் மாணிக்கவாசகர்
பேறுநல்குதி யென்றெர்பெருங்கவி
கூறுமக்கணங் கூட்டொடுசோதியி
லூறுதீர்கதி பெற்றுவந்தானரோ. (கஞ)

முன்னடைந்தபன் முத்தர்தம்முத்திபூ
டின்னமுத்தி யினிதினிதென்னவே
பன்னவல்லமெய்ப் பாவலர்சிற்சிலோர்
நன்னர்நான்முகத் தோனனையார்களே. (கூ)

சிந்தநேகஞ்சொல் சீர்முத்துத்தாண்டவ
னந்தமுத்தி யடைந்தமைகூறினேன்
கந்தனுடற் கவிசொலக்கச்சியூர்
வந்தவேதியன் மாண்புரைப்பேனரோ. (எ)

முத்துத்தாண்டவர்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கஅஉஉ.

நாற்பத்தேழாவது

கச்சியப்பசிவாசாரியர் சருக்கம்.

கவினுர்தொண்டைநாட்டிற் கணக்கினகரிற்றலையென்
றவிர்சீர்க்காஞ்சிப்பதியி லமையுங்குமரகோட்டம்
புவியோர்பலரும்போற்றும் புகழ்வாய்ந்திடச்செய்புனித
னவிலாகமவேதியர்த நல்லகுடியிற்பிறந்தோன். (க)

சீரவிருமடிக்குமொழித் திரள்சேர்த்துச்சிந்தைநெகிழ்
வாரமுறுகண்ணிகளின் வகையநந்தமாவகுத்திட்
சேகத்திலுளமாத சொருங்குவப்பவுரைத்தானே. (கo)

மாதர்முறையத்தனையும் வாய்ந்தினுன்மடகல்லார்
போதவுபசரித்திட்டார் புகழேந்திக்கிழ்வுண்டோ
மாதவனேமறவாமன் மனவெளியினினைத்திந்த
வேதமொழித்தருள்கூரென் றிரந்துசின்னுளிருந்தானே. (கக)

வே று.

மதத்தவாரணமேல் வளவனுற்றவன்றன் மணிமுடிமிசையொட்டக் கூத்தன்
பதத்துணைபுனைந்து வருடத்திலொருக்காற் பவனிவந்திடுதின முதித்த
கதத்தனைமடவார் களுஞ்சொலவினவி யவரிடமப்புல வன்று [ந்தான்.
னிதத்தசொற்பலசொற் றியானதுகாண்டற் கியன்றனசெய்ம்மினென் றிர

வஞ்சகமடவார் நெஞ்சகமிசையின் மாநிலத்தியாதுதான் செய்யா
ரஞ்சலென்றவனுக் குறுதிசொற்றந்த வானேபோந்தெருவினுக் கடுத்து
மிஞ்சவேயவரை படர்தருபந்தர் மிசையொருமிரளியில் வைத்தார்
செஞ்சரண்விலங்கும் தலைமிசைக்கவித்த சித்திரச்சட்டியுமாக. (கசு)

அதனிடைத்துளைத்த கண்வழித்தன்கண் ணுமவற்றெளிசெல விருந்து
கதமிகுமுதலை வாய்ப்படுகரியுங் கனகனுற்றுயர்கொள்காள் முளையு
மிதமிலாரவையி லழுமொருமகளு மெண்ணியதெண்ணின னவன்றன்
பதமிரண்டையுஞ்சின் மாதராங்குரத்தாற்பாய்ந்திடாவாறு பற்றினரே.

அவ்விராவதனிற் பல்லியமுதலா மளவிலாடம்பர மமையச்
செவ்வியபவனி வருதலுமந்தச் சிந்துரஞ்செங்கண்மால் வடிவம்
வெளவினனிருந்த பந்தரினருகில் வந்தொருமலையென வசையா
தெவ்விதங்குறித்தோ நின்றதாங்கியன்று ரியாருங்கைகொட்டி நக்காரே.

நக்கபோதரசன் வியப்பொடுபயமு ராணமுஞ்சினமுமேற் கொண்டு
மக்களியாவரையு மெழுதுசித்திரம்போல் வயங்குறவடக்கியே வினவ
மிக்கநின்னம்பா ரியின்மிசைக்கவிகை மிளிர்தல்கண்டலது வேறில்லை
யிக்கவினிரவிற் காட்டுவாரற்ப சொனல்பழமொழியன்றே வென்றூர். ()

தேவர்தம்பவனிக் கெனிற்றகுமக்கிச் செயுமுகாதென்பது முன்னிக்
காவலன்றனது முடிமிசைக்கமலக் கழல்சுமத்தினன்றனே நோக்கிப்
பாவலர்தேவ ரனையராலிதற்குப் பகர்திநீஞாயமென் றுரைத்தான்
கோவலன்றடையா லவன்மருமகள்சொற் கொடுத்திடாதிருந்தனளம்மா.

அவனுடன்கவிபா டாதலமாலோர்ந் தளவிலாரவமதித் ததற்பின்
பவளவாய்க்கரியோ னருள்குறித்தவரைப் பத்தர்மீதிருந்தவன் பலரும்
விவரமாத்தெரிய வெண்சொலேயடுக்கி வெள்ளியதாமரை மிசைவாழ்
தவளபாரதியா ளருளினுலிடிபோற் சாற்றினனொருதமிழ்க் கவியே. ()

அண்டமீதுலவு மருந்ததியென்னு மருந்திறற்கற்பினு ளுன்னைக்
கண்டதாலுறுபடவொணுதென்னைக் கருதிநீங்குலிற்கவிகை[பொருளா
கொண்டதுமுறைதான் குலோத்துங்காவெனலே கூறுமக்கவிதையின்
மண்டனிபுரப்போர் மாதரார்கற்பை வளர்த்தலுங்கடமையா மன்றே.()

அக்கவிவினவி யதிசயித்தரச னங்கையாலவனையங் கெடுத்துச்
சிக்கமும்பதமும் புனைந்தமைகளைந்து சிரத்தின்மீதிருந்தவ னுடன்வைத்
திக்கடும்பிழைநேர்ந் திட்டதென்னெனமிக் கெண்ணியேயானையை யுகைத்தான்
மக்களாங்கியன்ற வாறெலாம்புகன்றூர் வகுத்துரைத்திடற்கரி யனவே.()

கோதில்சீரொட்டக் கூத்தன்றுன்கவிதை கூறுமுன்னவன்மனைப் பொம்
மோதியதென்றுஞ் சிலர்சொனரங்க னுள்ளகமொருமையில் பலரு[மை
நீதிவேந்தனைக் கிகழ்வதற்கொருமை நேர்ந்தமையோர்ந்திடினிலமுண்
டாதிகாளுமிழ்ந்திட் டளந்தளித்திடுமோ லருள்விளையாடலா மம்மா. ()

எத்திறமுடையா னென்னினுமொருவற் கியல்பலாதனசெய்வா னென்னினி
கைத்திறமுதவா தவமதிப்படைந்து கடைப்படுமெனற்கிதோர் கரியா[ம்
மத்திறமரச னனைவிட்டிழியு முன்னமேயம்பொனூர்த் தலைவன்
மெய்த்திறமுடியோ டிழந்திரிதரவெல் வேந்தன்மாமகள்வின வினளால்.

வினவலுமிழுது சொரிதருகனல்போல் வெஞ்சினமிகைபடக் கொண்டு
தனதுநாயகன்செ யரசியல்வழுவாற் றழைத்ததிப்பிழையெனத் தேறி
யனகமங்களச்செந் திருவொடுகலிமின் னனையடன்னரண்மனை வாயிற்
கனமுறுகதவஞ் சாத்தியோர்தாளு மிட்டனள்கவின்வளைக் கையால். ()

ஆனைவிட்டிறங்கி யரசன்மெய்ப்புலவ ராமிருவரையுநேர் நோக்கி
யேனையோரின்றித் தனிவருபிழைக்கும் விலங்கிமிகற்குமிக் கிரங்கிப்
பூனைபோற்கொல்லா தளித்தமைக்குவந்து புகழிகழ்வழிவுறு தென்று
தேனைநேர்மொழித்தன் மனையிற்குறித்தத் திறமையோர்தம்மொடுஞ் சென்றான்.

சென்றமன்னதவாங் கடைத்தமையுணர்ந்து செழியன்மாமகள்சின மஞ்சி
வென்றலதினைத் திறக்கொணுதென்றவ் வினைக்கெலாம்வித்தென வருகி
னின்றவன்றனைப்பார்த்தொருகவியினிதா நிகழ்த்தெனக்குறிப்பினுரைப்ப
முன்றனைமோசஞ் செயுஞ்கலிமகடான் முன்னுபுமொழிதர லானுன். ()

இழைவகிர்ந்தனைய நுண்ணிடைக்கவினு சேந்திழாயெஃகவே லென்னக்
குழையுடன்பெருங்கூர்ங் கண்ணுறுமயிலே கொண்டகோபத்தணிந் தருள்க
மழையுறுந்தடங்கை மானவாபரணன் வந்தனனின்றிரு வாயில் [ன்றான்.
பிழைகளொன்றிரண்டுபொறுப்பதேகடமையன்றுகொல்பேதையர்க்கெ

என்றசொற்பொருளார் கலித்துறைவினவி யியல்வளர்த்தவன்றிருப் புதல்வி
யுன்றனதினத்தார் தொழின்முறைநினைவா லுதித்தசொல்லிசைவுதா னுள்ளங்
கன்றலுற்றிடுமென் னுருவெழில்கழறி யழைப்பதுகடமையோ வுடனே
வன்றழற்சினந்தீர் கெனலருவருப்பே மழைக்கையுமானமு முள்ளான்.()

நாட்டிலிம்மன்ன னெருவன்றானுளனே நான்பிழைபொறுப்பது
நின்னேக், கேட்டினித்தானே பேதையென்றீண்டுக் கிளத்திடறகுதியோ
கிளர்போர், மூட்டிடத்தகுந்தீங் கிழைத்தனையன்தோ வெனச்சொலி
முரணெட்டக் கூத்தன், பாட்டினுக்கிரட்டைத் தாளென்றுங்கூறிப் பட
க்கெனமற்றுமொன்றிட்டாள். (உஅ)

இன்னசொற்றிரளிற் போர்விளைத்திடுந்தீங் கெனுஞ்சொலைமன்ன
னன் கெண்ணித், தன்னதுபுலவற் றலையிடற்பொருட்டாற் றடம்புயவழு
திதான் சினந்தா, லென்னவாமென்னுங் குறிப்பெனத்தேறி யியற்புகழே
ந்தியை நோக்கி, நின்னதுபாட்டொன் றுரைக்கினன்றென்ன நிகழ்த்திடா
வண நிகழ்த்தினனால். (உக)

நானுனைக்கபாடந்திறவெனவேண்டே னளினநாண்மலர்ப்பொகுட்டுறை
தேனுறழ்பாவாய்நின்கரஞ்சென்தா மரையெனச்செப்பலுமிறைவன் [யுந்
பானுவின்குலத்தோனென்பதுநிசமேற் பகருமுன்றிறக்குமென்றுரைத்தான்
சூனுரைவண்ணஞ்திறந்தவற்பணிந்தா டொல்லபிமானமன்றன்றே. (கூ0)

தன்கைதாமரையன் றென்றிடிற்சற்பிற் றகையினிற்சூழ்வுவந் தெய்தும்
வன்கைமாவுகைக்குமன்னவன்பானுமரபினனல்லனென்றுரைத்தாற் [தா
புன்கையன்றன்னேப் புணர்ந்ததீங்கமையு மாதலிற்பொருக்கெனத் திறந்
ளென்கைநன்குணரா ரியாதுவேறென்றுங் கியம்பினுமிழிதகையதுவே.

பம்பியபாண்டி நாட்டினர்தவத்தின் பயனெனத்திகழ்புக ழேந்தி
கும்பிடுந்தன்ன திறைமகடனக்குக் குளிருமாசிகண்மிகக் கூறி
வெம்பிவேருந்தே லவரவர்க்கமைந்த விதியெவர்விலக்கலா மெனலுஞ்
செம்பியனமைத்த வுறையுளிற்புகுந்து திருமகளருளும்வாய்ந் தனனே.()

ஒட்டக்கூத்தனுமன் னுரைபெறீஇத்தான்வா ழுறையுள்புக்குள்ள
நொந்தழன்று, னிட்டத்தாற்பெரிய மன்னனுமனையு மிரவெலாமியன்
றன பேசி, நட்டத்தாலிழிந்த வாற்றினுக்கிரங்கி நலங்கொள்பொன்வில
ங்கிடம் குவந்தார், சட்டத்தாற்றுழ்ந்த குலத்தசென்றுணர்ந்துந் தமிழி
னுல்வணங்கு தக்கோரால். (கூக)

உலத்தினேப்புரைதோள் வளவன்றனையி லுறுதிதாறுமொட்டக்கூத் தனுக்கு
வலத்தினுமற்றேற் கிடத்தினுநாளும் வயங்குமாதனங்களீந் தனனோர்
கலத்தலில்கருத்தோ ராயினும்புலவோர் கவிச்சுவையளவினிற் கலந்தார்
பலத்தங்தனேயும் புகழ்ச்சியுமிருவர் பாகமாத்திகழ்ந்தபா ரிடத்தே. ()

அந்தநாளிருந்த பாண்டியன்றனிலு மதிகனுத்தமிழ்ச்சுவை யளவிற்
சென்தகைப்புலிக்கே தனனிகழ்ந்ததனும் சீதனப்புலவனென் றுலகின்
மைந்தர்சிற்சிலர்கூ றிடப்புகழேந்தி வந்தவன்போகிடா திருந்தா
னிந்ததேபுரைசீர் பெறுமொட்டக்கூத்தற் கிலக்கினச்சனியனு மெனவே.

ஒருதினத்தரச னவைசிறந்ததற்பி னெற்றராங்கோடிவக் தும்பல் [த்தா
பெருமதம்பொழிந்து நிகளமுமுரித்துப்பெயர்ந்துபோகின்றதென்றுரை
ரருகுறுமவ்வூர்ப் புலவன்ரூன்கலிங்கத்தடலிகலவருளா ரென்ரே
திருமலிதமிழ்நாடதன்மிசைச்சினந்தோ வென்ரெர்பாச்செப்பினன்றெழித்தே. ()

அதுசொலிமுடிக்கு முன்னமேசினங்கொண் டாணவப்பாண்டிநாட்
டவன்ரூன், கதுமெனத்தென்ன னுகைக்குமாலியானேக் கால்விலங்கினுக்
கும்வண் களியான், மதுகரமுரல்பூம் பொழில்கொள்சோணாட்டு மன்ன
வன்மனேவிதா லிக்கும், பொதுவதாம்பூட்டொன் றேயென்ரேர்பாடல்
புகன்றனன்புயலிடி போன்றே. (கூஎ)

அவனுளத்துரமும் பொருணயமாகி யனவுநன்காய்ந்தறிந் தரச [ர்
னிவனவனுறுந்தா னங்கண்மாற்றுவித்தா னென்னவுஞ்சிற்சில ரிசைப்பா
தவரெனக்கவிஞர் தாமுமற்ரெருவர் தமைமதியாரெனுந் தகவு
நவரசக்கவிச்சீ ருணர்பவருவப்பு நானிலமுழுது மோங்கினவே. (கூஅ)

அந்தநாளவர்வா ழூரின்வாணியப்பெண் ணுமொருகன்னிகை யனேய
சென்தமிழ்ப்புலவ ரிருவரிற்புகழேந் தியைமதித்தொட்டக்கூத் தனேநேர்
கிந்தனேபுரிந்தா ளதனேயன்னவன்ரு னிருபனுக்குரைத்தன னைழைத்தே
னிந்தவாறியற்றத் துணிந்தனேயெனலு மிறைவனேரம்மக ளிசைப்பாள்.

உன்னதகுடைக்கு ளடங்கிடாதனவிவ் வுலகினிலிரண்டெ வவற்றை
யின்னவையேயென் றிசைப்பவன்றனேநீ யறிகுதியானறிந் துள்ளே
னென்னவோதுபோ யினளவனவர்ப்பார்த்தியம்புதிரென்றன னியாதுந்
தன்னவனுரையா திருந்தனன்மற்ரேன் சவைமுழுதறிதரச் சாற்றும். ()

மற்ரெப்பில்கொடைக்கைச் செம்பியராச வரோதயமாழைமால்
வரையின், சுற்ரெக்கப்படர்ந்து வளர்ந்ததுன்கீர்த்தி தூர்த்தமன்னவர்
தலைத் துணிக்கும், விற்ரெட்டுநின்ரேள் விழைதருமடவார் விரகமும
டங்குரு தென்னச், சொற்ரெக்கபாட லொன்றுரைத்துணர்ந்தோர் முடி
யெலாந்துளக்குவித் தனனே. (சக)

இன்னவாறவரு ளியன்றனவய வியல்விவகாரமெத் தனேயோ
வன்னவைமுழுதும் விரிப்பதற்கறியே னறிந்தவர்பற்பல ரறைவா
ரென்னவாயினுமத் தகைப்புகழேந்தி யியல்பினேவிளக்கிய கருவி
கொன்னகுதனிவேற் சோழன்றனுயிர்போற் குலவியவொட்டக் கூத்தனரோ. (சூ)

அப்புகழேந்தி யருமையையொட்டக் கூத்தனெத்தறிபவ ரில்லே
செப்புசொற்சுவைசா லொட்டக்கூத்தன்றன் சீர்புகழேந்தியே யறிவான்
கைப்புருவுரிமை யுடனிருவோருங் கனிந்துறவாம்படி செய்யாத்
தப்புநன்குணரிற் றவளபாரதியா டன்னேயேசார்தரு மம்மா. (சக)

சூரியன்முன்ன ரொளிமழுங்கிடலாற் சுதையுமிழ்கிரணவான் மதியஞ்
சீரியதன்றென் றிகழ்பவர்போல்வார் திறற்புகழேந்திதன் பெருமை
காரியர்தாமு மறிதரமுயன்ற காவலன்றனேயிகழ் கின்றேர்
பாரியதனேயிட் டின்னல்செய்ததனைப் பாரதிபழிப்புமீக் தனளே. (சச)

இருமகார்தம்மைப் பெறுமொரேந்திழைதா னென்றையொன்றிடர்
செயக்காணி, லருமையாங்கெதன்மேற் செலுத்துவாள்கொல்லோ வதனை
னன்கறியவல் லார்தாம், திருமகள்கணவ னனேயவன்முடிமேற் சேவடி
வைத்தவன் றன்னே, வரும்விருந்தொருவ னற்கலிமகடான் வருத்திய
வாறுணர் வாரே. (சடு)

மன்னவன்முதலா மாந்தர்பற்பலரும் வழுத்துசீர்பெறுபுக ழேந்தி
தன்னதுபகைபோன் றவிசொட்டக்கூத்தன் முன்புகழ்பயன்மிக விழைந்
தின்னமுற்றதுவும் பெற்றுவப்பெய்திக் கேழலுஞ்சீயமு மீறு [து
மன்னபல்லுருக்க ளெடுத்துமாநிலங்காத் தருளரிபதம்புகுந் தானே. ()

ஆனையைக்குத்திச் சொல்லினன் மறைத்தா ராமிருமகளிரோ ரனேபான்
மானையொத்துதித்தா ரவரையுமக்கான் மன்னவன்மனேகளாப் பகர்வார்
தேனேகேர்கவியா லவர்திறம்விதரித்த தெய்வகாவலன்பெயர் தெரியேன்
மீனேயோர்கொடியா வுயர்த்தவன்பயந்த மெல்லியலாரல ரலரே. (சஎ)

அக்கதையினேவீ ணுவிதின்மொழிவ தழகன்றன்றருவருப் பதுமா
மிக்கவியொன்று விங்ஙனம்புகன்ற தேனெனிலெரியிடைப் பிறந்து
நக்கனேப்புணர்ந்தா னனேயளாய்ச்சோழ னன்மனேயாமவ டன்மேன்
மக்கள்சிற்சிலரப் பிழையினேச்சூட்டி மலிகரகடைவுரு வணமே. (சஅ)

வண்டமிழ்நாட்டு மன்னவன்பேரூர் வளவனுக்கார்வ மிக்களித்த
வொண்டமிழ்ப் புகழேந்தியின்கதையவனுங் குறின்முள்பெருமையோ டுரைத்தேன்.
வெண்டமிழ்ப்புலவோ ராங்குரங்கினங்கள் வெருளுறவேழ மொத்தடக்கும்
தண்டமிழ்ப்புலமைத் திறலொட்டக்கூத்தன் சரித்திரஞ் சற்றுரைப்பேனே.

புகழேந்திப்புலவர்சருக்க முற்றிற்று.

ஐம்பத்துநான்காவீது

ஒட்டக்கூத்தர் சருக்கம்.

பசுபதியருளாலங்நாள் பார்முழுமையுங்கைக்கொண்ட
மூசுகுந்தன்றுணையாவந்த மூரட்பெருவீரர்மைந்தர்
விசுவமேற்செய்ததாய மெய்த்தவப்பயனேயாகிச்
சிசுவொன்றுசோழநாட்டிற் சீயமொத்துதித்ததம்மா. (க)

அன்னசேயினுக்குப்பெற்ற ரானந்தக்கூத்தனென்ன
முன்னமேநாமமிட்டார் முருகவேளருளோடிடிக்
கன்னலம்பாகேயென்னக் கவித்தமிழ்பொழியுமாண்புஞ்
சொன்னவாறியற்றுமாண்புந் துரிதமாப்பெற்றனன்றே. (உ)

அத்தகவறிந்துசோழ னுதரித்தழைத்தாங்கெய்து
முத்தமிழ்ப்புலவர்தங்கண் முறையறிதலைமைசூட்டி
யெத்தனேபயன்வேட்டாலு மெளிதளித்திவனேர்தேவ
னெத்தவன்றனேயென்றிவ் வுலகமுற்றுரைக்கச்செய்தான்

வேய்யினைத்தோளிபங்கன் விழியினன்மேனுளீன்ற
சேயினுக்கிளையோர்தம்மாற் செகத்தினிற்பிறக்துள்ளோமா
றுயினைக்கொலினுங்கோழி தனைக்கொலாச்சாதிகாமென்
றுயிரம்விதத்தாற்சுற்றத் தவரையாதரித்தானன்னேன்.

வன்குணத்தொழில்கணீத்து வருத்தமோருயிர்க்குஞ்செய்
வின்குணத்தினராநூல்கொண் டிடுந்தொழில்புருடர்க்கே
புன்குணந்தணந்துதெய்வம் புணையுமன்கலத்தராகி
நன்குணத்தவஞ்செய்பான்மை நாரியர்கொளவுங்கண்டான். (ங)

உரனுடையவரியாமென்றே யுரைக்குமவ்வொருவன்சொற்கேட்
டரசனிவ்வுலகோராற்கு காவதொன்றியற்றுகென்று
னிரதமிக்கியலுமீட்டி யெழுபதென்றெருதுல்பாடிக்
கரவினெஞ்சகத்தாராந்தன் னினத்தரைக்கணமாக்கூட்டி. (ச)

மற்றையகுலத்தினோர்நம் மகிமைகன்குணரவேண்டி
யிற்றையீதரங்கேற்றற்கா யிரந்தலைதருதிரீண்டப்
பொற்றைமீதிருந்துசொல்வே னென்றனன்பொருக்கென்றீந்தா
ரற்றையாங்குரைப்பக்கேட்டோ ரதிசயித்தயர்ந்தாரம்மா. (எ)

வெட்டத்தாமிருகூறாகி விழுந்தவர்தம்மையெல்லாங்
கிட்டப்பார்த்திருந்தோர்மெச்சக் கிளர்ந்தவேலவனேப்போற்று
மிட்டத்தாற்பழையவண்ண மிலங்கிடப்பொருத்திவிட்டா
னெட்டக்கூத்தனெனுநாம முலகமுற்றுரைத்ததன்றே. (அ)

தன்னுடன்வாதுகூறித் தருக்கியபுலவோர்சென்னி
மன்னும்வார்சிகைதன்சென்னி மருவியகுடுமியோடு
துன்னுறமுடிந்திட்டூர்த்துத் தோல்வியுற்றிடவேவென்று
மின்னும்வாட்படையாற்றுண்டா வெட்டினன்பலரையென்பர். (கூ)

பல்வகைக்குலத்திலுள்ள பாவலர்தாமும்வந்து
நல்வசனங்கள்கூறி நாடொறும்பணியவாழ்ந்தான்
செல்வமுமளவுறுமற் சேர்ந்ததோர்வியப்பாமன்றே
சொல்வலியினளுமம்பொற் றேகையுஞ்சேர்ந்ததாலே. (கo)

அத்தகவினளுவன்னே னுங்கவிர்தருமந்நாளிற்
சுத்தநீர்ப்பொன்னிநாட்டுச் சோழனேச்சுரர்வந்தெய்தி
மத்தகவேழமூரு மகபதியழைத்தானென்று
ரித்தரையாசைநீத்திட் டிமைப்பினிலேகினனே. (கக)

அன்னவனடைந்தபோதே யவன்றருகுலோத்துங்கப்பேர்
மன்னவன்றனக்குத்துங்க மறையவர்பலருங்கூடிப்
பொன்னவமணிவாய்ந்துள்ள புதுமுடியொன்றைமுன்னூல்
சொன்னமந்திரநீராட்டிச் சுபமுறப்புனைந்திட்டாரே. (கஉ)

மாதவமுனிவர்தாமும் வழுவில்வேதியருமன்பாற்
போதவெண்ணீறுமஞ்ச ளரிசியும்போட்டபின்னர்க்
காதல்கூரொட்டக்கூத்தன் கடைமணிநாவாடாமற்
பூதலமுழுதுந்தன்னேர் குடையினுட்புரப்பக்கொண்டோன். (கஙு)

பிரானெனவலக்கைதூக்கிப் பேசரைக்கவிமுற்றுமுன்
னிராகவனனேயான்போது மெனத்தடித்தியற்பாவல்லீர்
பராவுமின்னவன்றுள்சூடும் பண்பினின்னுனென்றென்னேச்
சுராசுரர்சொல்வாரென்றப் பாதியுஞ்சொன்னுன்மன்னே. (கச)

அத்தகைப்புலமைதோயா ரியசொற்சுவைதேறுசே
முத்தமிழ்ப்புலவர்க்கூவி மொழியுமம்மொழிவழாம
லுத்தமர்பலர்கொண்டாட வொருவருடத்துக்கோர்நாண்
மத்தகக்களிற்றவ்வாறூர் வலம்வந்துங்காட்டினனே. (கஞ)

வன்னியைநம்புந்தெய்வ மறையவர்மறைநீராட்டும்
பொன்னியன்மகுடமீது புலவர்பூங்கழல்கள்சூடுஞ்
சென்னியேசென்னியென்னத் திகழ்தருமிமித்தஞ்சோணாட்
டின்னிசைவேந்தர்க்கப்பே ரியாவரும்பகர்வதாமே. (கசு)

எத்தனேபுலவரோமுன் னிறைவரைவசஞ்செய்துற்று
ரத்தனேபேருளாரு மருந்தமிழ்தொட்டக்கூத்த
னெத்தவர்முடிமேற்றந்தா ளுறவைத்தஇல்லையில்லை
யித்தனையதிட்டமன்னுஞ் சிசைந்தமையேற்றந்தானே. (கஎ)

தென்னனுடொருவிவந்த செழுந்தமிழ்ப்புலவன்முனிற்
பொன்னதால்விலங்குபூட்டிப் பொருவிறன்னையிரேபோலு
நன்னலமடவார்சூழ நடுவில்வைத்தளித்தவார்வஞ்
சின்னெஞ்சுடையோர்தேரூர் தெளிபவர்சிலர்தாமம்மா. (கஅ)

வீமனும்விசையன்முனும் வென்றியும்விறலுமீங்கித்
தாமணிபடைகள்சென்னி தனிற்சுமந்திடச்செய்மாய
னுமகட்குரைத்திட்டன்றே நலங்கிளரொட்டக்கூத்தற்
பாமரரிகழச்சில்கால் பகர்ச்சியற்றுறச்செய்தானுல். (கக)

வயினவர்பலரைச்செவ்வேள் வசஞ்செய்தான்மறுத்திடாமல்
வெயிலுமிழாழிச்செங்கை விண்ணவனிருந்தானென்றே
பயில்பூகழேந்திக்காகப் பகைவரையடர்க்கும்வென்றி
யயில்வனெட்டக்கூத்தற் கருள்செயாதிருந்தவாறே, (உ0)

வெட்டுற்றதலைகடம்மை மீளவும்பொருத்தும்பாட்டோன்
றிட்டுற்றதுரைக்குஞாலஞ் செயஞ்சில்காலவன்பாற்பெற்றோன்
கட்டுற்றவிலங்குதுண்டாங் கவியொன்றுபாடினானு
முட்டுற்றவாறுஞ்சொல்லு முளரிவெண்மலரான்சான்றே. (உக)

செயமொடுதோல்வித்தந் திறத்தினுற்பெறுவதன்றன்
றியலுமுன்வினையினுலென் றியம்பலாமிதுவேயுண்மை
மயல்செய்நீருடனுணுண்பார் மதஞ்சில்கால்வலிமைத்தாகி
யயனுவல்சமயமாறு மலமரலதற்கோர்சான்றே. (உஉ)

மேழியங்கொடியினேரும் வீரர்வங்கிசத்தினேரு
மூழிதொட்டளவளாவு மொருவழக்கிருந்தன்றேவவ்
வாழியனழைக்கும்வேளை யருவராதவன்வீட்டுற்றோன்
கீழினிவரல்லாரூன் விழைதருகிழமையோரே. (உங)

குவளையந்தாரான்றுங் குகற்றெழுமிலக்கத்தோடு
நவர்தம்வங்கிசத்தானென்று நவின்றுநாயிரைதின்கின்றே
செவ்வளவுதிறல்பெற்றாலு மெறும்பினமெறும்பிப்பேர்கொள்
கவளமால்கரிகடங்க ளினமெனல்கடிக்குமாதோ. (உச)

வேறு.

உன்னியபுகழ்பெறு மொட்டக்கூத்தன்றோன்
கன்னியல்களிறுடை யிராகவன்கதைப்
பின்னியபாகத்தைப் பிறங்குசெந்தமிழ்த்
தன்னிரக்கவிகளாற் சாற்றினனரோ. (உடு)

கம்பன்முன்னுட்கதை கழறிவிட்டது
மிம்பர்போற்றிவன்பினுட் கதையியம்பலும்
வம்பலவெண்மலர் மகளும்வாரிதிச்
செம்பதுமக்கணன் றுணுஞ்செய்தசே. (உசு)

கோவையுமுலாவுமந் தாதிக்கூட்டமுந்
தேவரூண்சிவணுறச் செப்பினனெனைப்
பாவைமிக்குணர்சிலர் பகரக்கேட்டுளே
னுவைவேட்டுறைமினு ணன்குதேர்வளே. (உஎ)

உடன்முதிர்வெய்தலா லும்பரூர்புகுங்
கடமைநேர்ந்திட்டதாக் கணிப்பக்கார்மயி
னடனநாயகன்பத நாடிநல்லெழில்
படர்தருமனையினிற் படித்துற்றனரோ. (உஅ)

இனிப்பிழைத்திடுங்கொலென் றெண்ணியோர்தரத்
தனித்தவன்மனையினுட் புகுந்தொர்தானத்தின்
மனித்தர்காண்பரியனு வைகினன்றமிழ்த்
தொனிப்புகழோங்கியாம் பெயர்கொயேனே. (உகூ)

அக்கணத்தவன்மக ளட்டபாலிடை
மிக்கவெண்சருக்கரை யிட்டுமேதகு
கைக்கலத்திற்கொடு காட்டிச்சற்றுநீ
யிக்கணமருந்தவே வேண்டுமென்றலும். (கூ0)

செல்லுநாள்கூழதுஞ் செலுஞ்செல்லாதநா
ளெல்லுறழ்மெய்ப்புக ழோங்கிப்பாவலன்
சொல்லும்வெண்பாவதன் சுவையையூட்டினு
மொல்லுமோவெனமக னுடன்சொற்றனரோ. (கூக)

அம்மொழினவலு மவன்விளங்கியே
யிம்மொழிக்கேதவ மியான்செய்தேனெனுஞ்
செம்மொழியுரைத்தவற் சென்றுபுல்லிப்பன்
மெய்ம்மொழியுளக்களி மிகச்சொன்னனரோ. (கூஉ)

அதுசொலித்தீர்தலு மாங்கப்போழ்தினிற்
கதுமெனத்தூலமெய் கழித்துப்போயினன்
பதுமநாண்மலர்ப்பொகுட் டிறைந்துபார்தரு
சதுமுகற்புடைத்தவன் றனதுலோகத்தே. (கூங)

கோமளக்கவியொட்டக் கூத்தன்வீதலு
மேமவல்விலங்குமுன் னிடப்பெற்றுனிநா
ணுமகடானுநூல் வாங்கினுளெனக்
காமசோர்வெண்கவி கழறினனரோ. (கூச)

வெட்டத்தற்கொண்டொர்நாள் வீதிதோறும்போ
மொட்டக்கூத்தன்றன துயிர்துறந்தது
நட்டப்பாடாயெனி நலங்கொள்கம்பனு
மிட்டத்தாலொருகவி யியம்பினனரோ. (கூடு)

குட்டியபிள்ளைப்பாண் டியனுங்கோரத்தா
லட்டிசெய்வார்செவி யறுக்கும்வில்லியும்
வெட்டியவொட்டக்கூத் தனும்விண்போயதான்
மட்டில்பாவலர்களி மலிவுற்றுரென்றே. (கூசு)

தானங்காளவனிடங் தலைதப்பும்படி
மானவேல்விழிக்கலை மடந்தைநாட்டிய
தேனளாவியசுவைத் திறுதமென்றசொல்
லானதையதனிடை யமைத்திட்டானரோ. (கூஎ)

மன்னலந்தெரிசில காவலோர்களு
மன்னனுமவன்பெரு மாபினோர்களும்
பொன்னவள்கலைமகள் புரையுமாதரு
மின்னலுற்றனவெலா மியம்பொண்ணுதவே. (கூஅ)

ஓங்கியகவித்திற லொட்டக்கூத்தன்றன்
பாங்கினேயிங்ஙனம் பகர்ந்திட்டேனினித்
தாங்கிசைக்கம்பன்றன் சரித்திரத்தையு
மீங்கியன்றிட்டமட் டியம்புவேனரோ. (கூகூ)

ஒட்டக்கூத்தர்சருக்க முற்றிற்று.

ஆடி திருவிருத்தம் - உகசுரு.

ஐம்பத்தைந்தாவது
கம்பர் சருக்கம்.

நாடார்தருஞ்சோழ நாடதிலுறந்திருவெ ழுந்தூரினிற்
பீடாருமோச்சக்கு லத்தொருவனவ்வூர்ப்பெ ருங்கோயில்வாய்
நாடானுதிக்குந்தொ றுஞ்சென்றுசங்கூது நல்வேலையான்
கோடாமலதுசெய்து வருநாளிலொருநாளிற் கூறுயிடை. (க)

கம்பத்தினருகோர்சி சுக்கண்டுபெருகுங்க ளிப்போடெடுத்
தம்பத்தனேயும்வென்ற விழியுற்றமனேயாள்கை யதினல்கினன்
கும்பத்தைநிகர்கொங்கை யழுதூறன்முதலாய குணமெய்தலா
னம்பத்திகண்டீச னருள்செல்வமிதுவென்ன நனியெண்ணினர். (உ)

கம்பத்தினடியிற்கி டந்திட்டதாற்கம்ப னென்னப்பெய
ரும்பர்க்குமெய்தாத பேரூனபிள்ளைக்கு வந்தோதினு
ரிம்பர்க்குளெப்பேறு மீவாளுளாரென்ன வெண்ணுதசில்
வம்பர்க்கழுக்காறு மல்கின்றதொடுசேயும் வளர்வுற்றதே. (ஊ)

கன்னன்பிறப்பும்பி ளிற்றுலங்கிற்று கம்பன்பிறப்
பின்னங்தெரிந்தார்க ளிலையில்லைமுக்காலு மிதுமெய்ம்மையே
தன்னந்தனிச்செல்லு மவனேடொர்நாளங்கொர் தவயோகிதா
னன்னந்தனப்போலு நிறவாணிமறைநன்க றைந்தானரோ. (சு)

அதனைச்சலிக்காம லுருவேற்றிமிகநாடி யருள்பெற்றடற்
புதனுக்கொரிணையான புலமைத்திறங்கொண்டு பொலிவுற்றநாள்
சுதவர்க்கமல்லாது முழுமானிடத்தன்மை தோய்வுற்றிலா
னிதனைத்தெரிந்திந்த வுலகோர்வியப்புற்றி சைத்தார்களே. (நி)

அங்நாளினிற்சோழ னருகுற்றசெங்குந்த ராசாகுமோர்
செங்நாவலன்பற்பல் குலமுற்றபுலவோர்தி ரட்கூட்டியே
நுங்நாவினுலொவ்வொர் கவிபாடுமெனவேது வன்ருனவா
றெங்நாவலோருஞ்சொ லும்போதிலிவனுஞ்சொ வினனென்றரோ. (சு)

கோக்கண்டுமக்கட்கு லஞ்சத்திலார்கொங்கு மலிதாமரைப்
பூக்கண்டுசிறுகொட்டி பூவாதொழிந்தில்ல புகழ்தேயுகின்
பாக்கண்டுபாவாணர் மறைவார்களோவம்பு பண்ணேனெனத்
தாக்கண்டுசிங்கேறெ னச்செப்பினுனன்மை தருமாறவே. (எ)

இவனித்தனிப்பாடல் பகர்தற்குமுன்னங்கி ருந்தோர்களா
மவரிற்சிலோர்சென்னி யறவெட்டினுனென்று மறைவாரையோ
தவமுத்தமிழ்ப்பேறு பொன்னென்பவெய்திற்ற ருக்குற்றிடா
தெவருக்குமார்வஞ்செ யத்தக்கருணமெய்த வினிதாகுமே. (அ)

இப்பக்குவத்திப்பொ ருட்சாரமுறுபாட லெளிதோதினேன்
மெய்ப்பக்குவத்தெத்த கைப்பாடல்விள்ளுங்கொ லெனவெள்கினேன்
பொய்ப்பக்குவப்பாவ லர்க்கீடிலிடியேறு போல்வானதா
லெப்பக்குவப்பேறு மெழில்வாணிவிளையாட லெனலாகுமே. (சூ)

அப்பாடலின்றன்மை யறிவுற்றுமற்றோர்க ளையும்விட்டதா
லிப்பான்மையுலகெங்கும் விரிவுற்றியற்கம்ப னிசைநீடல்கண்
டொப்பாருமில்லாத வளவன்றனருகேயு றக்கூவினீ
தப்பாதெனவையின்கண் வரவேண்டுமென்சொற்ற கக்கூறியே. (கo)

பொன்னுடைபணியானே பரியானமுதலாய போதக்கொடுத்
தின்னுனுமரசன்ற னபிமானியெனுமோசை யெழல்கண்டெயிர்ந்
மின்னுளமணமுஞ்செய் வித்தானவன்சாதி மேயார்களோ
டன்னுனமகவேயெ னக்கொண்டவிருவோரு மளிகூரவே. (கக)

கைக்கோளரெனவோச்சர் களுமாணவத்தோடு களியெய்தினர்
மிக்கோர்களாஞ்சிற்சில் குலவாண்ரதுகண்டு மிகவெள்கியித்
தக்கோரையனையார்த மரபூடுபிறவாத தாழ்வெண்ணினர்
மெய்க்கோன்றனபிமானம் விழையாதபேர்முற்றும் விட்டோர்களே. ()

உளம்வெம்புதகவொன்று செங்குந்தர்மரபிற்கு ளுயர்சீலனுங்
களமொன்றுஞ்சற்கு மவனேவுவாதாடு காளிக்குமே
யளவின்றிநசைமிக்க பணிசெய்யுமோச்சர்க்கு ளதியோகனும்
வளவன்ற னவையின்க ணிருகண்களெனவொன்றி மகிழ்நாளிலே. (கூ)

புகழேந்தியெனுமிக்க புலவோனெநாட்டிழ்பொ லிந்தான்கொலோ
விகலந்தவிருவர்க்கு ளொருவற்கெனச்சொல்லு மிகமற்றவற்
ககமொன்றுமுறவென்று நுவலாதவிதமென்கொ லறிகின்றிலேன்
பகரின்றமுக்கால முந்தேறுஞானத்தர் பகர்பாலதே. (கச)

அவர்மூவர்களுமீசன் முக்கண்ணெனச்சோழ னருகுற்றநன்
னவநாள்கள்பலவேயெ னச்சொல்லலாமந்த நலமொன்றுமிவ்
வுவராழியுலகஞ்செ லக்கேட்டிலேன்கம்ப னுடன்வந்தவன்
விவகாரவிகல்செய்தி ருந்தாலதைச்சொல்லு மிகவெஃகியே. (கடு)

உறவைச்சொலற்குள்ள மொருமைப்படாதிந்த வுலகத்தினோர்
மறமிக்கபகையைச்செ லற்கார்வநனியெய்தும் வகையெண்ணினல்
லறமூற்றநூல்கைத்த மூக்காறுமுதலாகு மகமோதுநூல்
பெற்றத்துபுலவோர்க ளனேயார்களேயென்பர் பெரியோர்களே. (கசு)

வே று.

ஓட்டக்கூத்தனு மொண்டிறற்கம்பனுங்
கிட்டவைகக் கிளர்தருசோழன்றன்
னிட்டமிக்க விரவிகுலத்தினுட்
பட்டமன்னர் பலரினுஞ்சீரியோன். (கள)

ஆனவென்றி யிராகவனுடலே
மானவண்டமிழ் கொண்டுவகுத்திரென்
றீனமொன்றுமி லேமமிக்கிந்துதா
னானமின்றி யுபசரித்தானரோ. (கஅ)

அன்றுதொட்டெயட்டக் கூத்தனங்கக்கதை
கன்றுபாடல்க ளாகவின்றுன்மற்றே
னென்றுமோதல ஞகியுரம்பெறத்
தின்றுலாவிச் செருக்கினனென்பரே. (கக)

சிறிதுநாள்கழித் துச்சென்னிசெந்தமி
ழறிஞராமிரு வோரையுமங்கழைத்
தெறிமணிக்கிலை யாங்கவியெத்தனே
செறிதலுற்றன செப்புமென்றனரோ. (உ0)

இருவர்தாமும்பப் பாதியெனக்கொடாங்
கொருமையெய்தி யுரைப்பரென்றேயந்த
நிருபனெண்ணம்பி னேர்தலஃதாயினு
மருமையோடன் றதுசெய்திலார்களே. (உக)

என்னவோசிறி தேன்றமட்டுங்கவி
சொன்னவன்றுகை சொல்லுமுன்சொற்றிலான்
மன்னர்மன்னன் மறிகடற்சேதுசெய்
யன்னகாதைமட் டாயதென்றனம்மா. (உஉ)

அதுபொ யென்றறிந் தன்றசெங்குந்தன் ரு
னிதுவரைக்கு மிசைத்ததுண்டேலொர்பாக்
கதுமெனப்புக லென்றலுங்காசில்வெண்
பதுமைதாள்கரு திப்பகர்ந்தானரோ. (உக)

குமுதனிட்ட குலகிரிக்கூற்றினுற்
றிமுதம்வாரி தெறித்ததென்றக்கணத்
தமுதமென்ன வறைதலுமஞ்சிடா
தெமுதலென்றிரண் டாமெதுகைச்சொலே. (உச)

பற்றிவாது பகர்தலும்பாருளோர்
செற்றிருஞ்சொலென் றேதுணிந்தோதினு
ணுற்றிவுண்மை யுணர்குவமென்னவே
வெற்றிமன்சபை விட்டகன்றார்களே. (உடு)

இருவர்தங்குடி மிக்குமுடிச்சிட்டித்
தெருவுதோறுந் திரிந்தனரையகோ
வொருவன்சிந்தை யுழன்றதுமற்றவன்
கெருவந்தானுங் கிளத்தரிதாயதே. (உசு)

சயிலம்போலுந் தனத்தொரிடைச்சிதான்
றயிர்கடைந்திருந் தாளந்தத்தாழியுட்
கையினேயிட்டது கான்முளைகண்புகிற்
செயிர்விளைக்குஞ் *திமுதமென்றுளரோ. (உஎ)

புளிப்புகண்ணிற் புகிற்சிறுபுத்திரன்
களிப்புநீங்கக் கரிக்குமென்றேர்கலா
வெளிற்றுநெஞ்சர் வியக்கலர்வேதத்தா
யளிக்கநாடிடி லார்தடுப்பார்களே. (உஅ)

வன்றுளைக்கைகொண் மாங்கொரட்டக்கூத்
தன்றுணிந்துவை தான்கலத்தையலை
யின்றுதான்பிறந் தான்கம்பனென்றுசூழ்ந்
தொன்றுமாந்த ருரைத்துவந்தார்களே. (உக)

இடைச்சியச்சொ லியம்பிலளேலிவற்
படைக்கையாலவன் கொல்வன்மெய்பாருளீர்
கிடைக்கைகொண்டவன் றன்னைக்கெடுத்திலான்
விடைக்கவின்பெறும் வீறுடைக்கம்பனே. (ஈ0)

அவன்றனுள்ள மழுங்குபோயினு
னிவன்களிப்பெரு வாரியொடேகினு
ணவந்தமன்னனு முள்ளபன்மாந்தரு
நிவந்தவாச்சரி யச்சொனிகழ்த்தினர். (ஈக)

---

* திமுதம் - திவலை.

கொளலருந்துயர் கூரொட்டக்கூத்தன்முன்
தளவமூரற் றவளமின்னுடன்மே
லிளமையோற்கதி யிச்சைகொண்டாய்கொலென்
றளவுறுத வகந்தைகள்பேசியே. (கூஉ)

துவக்குபாடற் சுவடியைத்தீயிலிட்
டவக்கிலேச மடைந்தகத்துற்றனன்
றவற்றுமாற்றங்கம் பன்சொலுந்தன்மையோர்ந்
துவப்பொழிந்தர சுள்ளுடைந்தானரோ. (கூங)

மன்னன்சிந்தை வருத்தமுமாறுகொ
லென்னலன்சின மெய்தியுளுற்றலு
நன்னகர்க்கணுற் றூர்பகர்ஞாயமு
முன்னலாலுள மொல்கியகம்பன்முன். (கூச)

வே று.

எவ்விதத்தினுமி ராமகாதைகவி யாதல்செய்வனென வெண்ணியே
யவ்விடத்திலுற வாகிவைகுபல பாவலார்களாயிருடன்
செவ்வியார்சிவிசை யேறியேவடதி சைக்கணேகிமிரு செல்வமோ
டெவ்விடற்கிணையில் பண்புமேவின னுளன்கொலோவெனவுசாவினன்.

சீரியர்க்குரையர் சுந்தரற்கருள்செய் சிவனிலாவுதிரு வெண்ணெய்நல்
லூரினிற்சடைய னென்றுருத்தனுள னுழுதொழிற்பயிர்மு யற்சியோன்
பாரிலித்தினம வற்குமீக்கவர்க ளிலையெனப்பலர்ப கர்ந்ததாற்
காரினங்கடலி னேக்குறித்தெழுக வின்பொரக்கடுகி யேகினன். (கூசு)

எங்குளன்சடைய னெங்குளன்சடைய னெனவினுவியவ ணேகல்கண்
டங்குளார்வயலி டத்துளானெனவ ழைத்தவன்றனரு குய்ப்பநீ
யிங்குவந்ததென தினமெலாமுயற வத்தரும்பயனெ னப்புகன்
றுங்குகொண்டுவரு முணவையேயினித ளித்தரும்பசியொ ழித்தபின்.()

அவருடன்சிலரை மனையினிற்கொடினி தமர்தரச்செயவ னுப்பிவிட்
டிவனும்வல்விரைவி லேசவிழ்த்துமுழு கிச்சிவார்ச்சனையி யற்றியங்
குவகையோடுபுகு முன்னமேயமுத மெந்தெழிற்குரிய ருத்தியா [வாய்.
லெவர்கள்சிந்தினர்க ளோவெனும்படிசெ லனையிறைத்தனர்முன் வாயில்

வந்தவண்ணலது கண்டுசெஞ்சகம்வ ருந்தியேயவைபொ றுக்கினு
னந்தவேலைமுடி வாகுமுன்னமமு தங்கொர்வேலைநிறை வாயதாங்
கிந்தவாறவன்மு யன்றபோதுசில வியல்வலார்களிவ னென்செய்வான்
சிந்தனைக்கணதி லோபமுற்றதென வோதினரதுதெ ரிந்தனென். (கூகூ)

அவர்தமக்கிலையின் முத்துடன்பலவி ரத்தினங்களைய மைத்துணற்
குவகைகூறிவித ரணமுநெல்லினது யர்ச்சியுந்தெரித லுற்றபின்
னிவளவுங்களோமி னெச்சிலாதலினெ னச்சிலோருடனி யம்பலுந்
தவறுபேசியசில் புலவர்விட்டிலர்த ருக்கினுனகைசெய் தானரோ. (சூ0)

தனதுசார்பினர்கள் சொன்னபுன்மொழிகள் சடையன்வார்செவியினுழை
றினவிதஞ்செய்தன வென்றுமீதறியரு ளீடுசாலிணையில் கம்பனங் [தலுற்
கனகவாசகமி கப்பகர்ந்தவர்க டம்மையாதரவு செய்தபின்
னனமுடன்பல்கறி முதலவாமுணவ ருந்தியாருமகிழ் வாகியே. (சக)

இலேதரித்தளவ ளாயபின்னவணி யன்றவாறவன்வி ஞவலுங்
கலேமகட்கிடமெ னக்குலாவியக வின்கொணுவுடைய கம்பனங்
நிலேவழக்குமுழு தும்பகர்ந்தனனி கழ்த்துகென்றுரைவ ழுங்கியே
விலேவகுக்கரிய வுதவிநாடொறும்வெ வேறெணுமிகவி யற்றினுன். (சஉ)

பாயிரத்தினேமு டித்தபின்புயப லத்திராமகதை யைப்பதி
னுயிரங்கவிக ளிற்சொனனவன யோத்திமேவிமுடி யணியுமட்
டேயிதன்குறைய வன்சொலாவணமி யக்கினுள்பிறரும் வினவிலார்
வாயினிற்பவள்செய் வஞ்சகத்தினெம றுக்கவல்லவர்க ளியாவரே. (சங)

எட்குளெண்ணெய்புரை மாயனுடல்களெ னச்சொலக்கதையி னிடையி
கட்குடித்துவிளே யாடலாதியன கழறியேபழைய காவியத் [னிற்
துட்குறித்தசரி தம்பிறழ்த்தியுமு ரைத்தனன்புலவ ரொருவிலார்
வெட்குறச்சயம்வி ளக்கும்வாணியருண் மேவலோர்க்குளம்வெ ருண்டரோ. (சச)

தாயினும்பெருகு கருணைவித்துவச னங்கண்மீதுபொழி சடையனே
யாயிரங்கவிக ளுக்கொர்பாடலில றைந்தனன்சதம தற்கொர்பாட்
டேயியம்புகவெ னச்சொனுனுருவ னிவனேநூற்றுளொரு வனெனநா
னுயினங்ஙனமு ரைக்கலாமெனவ டக்கினுனைவையி யக்கவே. (சடு)

அவனவைக்கணவை முழுதுமேசெழுப தும்பகர்ந்தளவில் பரிசுபெற்
றுவகைமிக்குரக மீதுகாவிரியி னிடையுறங்கரிசந் நதியின்வாய்
நுவல்வனென்றுசெல வங்கிருந்தவர்க ணெண்டிநாடகந டித்திடும்
சிவனகர்ப்பனவ ரொப்பிடிற்கொணர்தி யென்றுசெப்பினர்தி ரண்டரோ.

அங்குசென்றுசில நாள்வதிந்துமவ ரனேவருங்குழுவி டாமையாற் [ளான்
பொங்கும்வெந்துயர டைந்துநொந்தனனுர் புதல்வனன்னவர்கு லத்தி
வெங்குணத்தரவு தீண்டிமாய்தலின்ம யானவாய்ப்பலரு மேவினுர்
தங்குமேட்டொடுத நித்தகம்பனுமெ வண்புகுந்துவரல் சாற்றினுன். ()

சிவிகையாதியன வின்றிவந்தயர்செ யற்குறித்துவகை செப்பியுங்
கவிஞராயிரவர் சூழும்வாழ்வுடைய கம்பனென்றமைக ணித்திலா
ரவிரிலங்கையர சன்றன்மைந்தன்விடு மரவபாசமறு பட்டசீர்
நவிலுமவ்வயினி ரண்டொர்பாடல்பகர் நாமறிந்திடவெ னச்சொனுர். ()

அந்தவாறவன றைந்தனன்பிணம தாய்க்கிடக்குமக வாகமேற்
செந்தகைக்கருடன் வந்துமோதியது சீவனெய்தியதெ ழுந்ததா
லந்தணுளர்பலர் தாமுமன்னவர்த மாதிநாதனென வாடியே
யிந்தநான்முழுது மருண்மொழித்திரளெ னத்துணிந்தினியம்பினுர். ()

அன்னவர்க்குமணி யம்பலத்துறும ரற்குமன்புசெய்த கன்றுபோய்ப்
பொன்னரங்கனெதி ரோதினனதுபு கன்றுமுற்றுதலு மப்பிரா
னன்னலங்கொள்சட கோபன்மாட்சிமைம ரின்றிலாயெனவி ளம்பலாற்
பன்னருங்கவிக ணூறுரைத்தனன வற்றினந்தமடி பற்றியே. (ரு0)

அங்குமன்னர்முத லரியினேர்பெரித டர்ந்தபேரவைநி றைந்ததாற்
றங்குதற்குயரி டம்பெறுமலொரு சாரிருந்துமகிழ் சடையனே
யிங்குநீயுறுத லென்னெனுஞ்சிலரொ டினையில் கம்பனிவன் வைகுதற்
கெங்குமியாருமுணர் நல்லிடங்களீ ரைந்துபெற்றுளனெ னச்சொனான்.

வங்கசோழனுயர் கம்பனைக்கொடுமுன் வாழ்ந்தவாறமைய வைத்தபின்
னந்தராமகதை யிற்சொலாதவன்வி டுப்பவுற்றனவ னேத்தையு
முந்தடம்புலமை யொடுகுலாவுதனி யொட்டக்கூத்தனினி தோதினான்
முந்தவிண்டவனி வற்கெனக்கருதி விட்டதென்றுமொழி வார்களே. ()

இராகவன்றனர சாட்சியுங்குதிரை யாகமாதியவி னைதமும்
தராதலத்தின்மீ னபுக்கதும்புதல்வர் தம்மிடத்தரசை நல்கியே
நிராமயப்பதம டைந்ததுஞ்சொலிநி றைத்தபுண்ணியவ சத்தினாற்
பராவுமெய்க்கதிய டைந்தனன்புலவர் பலர்வணங்கியப தத்தனே.(ருக)

இம்பரிற்புலவர் குதிகொள்வாரினியெ னப்பரிந்தொர்கவி யோதினான்
கம்பனன்னவன திட்டமிழ்சியது காவலன்பெரிது மாவலாய்க்
கொம்பணிச்சிவிகை யேறியிக்கவிஞர் கோமகன்செல்வழி தோறுமியான்
பைம்பயிர்ப்பகுதிகொள்கிலேனிதுமெ யென்றுருத்தரவுபண்ணினான்.

கன்னல்வில்லிபுரை மைந்தனேப்பொருவில் கம்பனீன்றுகளி யுற்றபின்
மன்னனுக்கொருபெண் மகவுதித்ததிரு வாலுடப்புரைய வவர்வளர்ந்
தின்னலின்றிவிளை யாடலுந்தமிழி யற்கையுந்தெரிவ தாயினா
ரன்னவர்க்குணிகழ் தீமையாலவர ழிந்தகாவுலக மறையுமே. (ருஙு)

கம்பன்மைந்தன்வய தொருபதோடுசில கழிதருந்ததியி லொருதினத்
திம்பர்சூழிறைய வைக்கணன்னவனெ டேகினனிறையி வன்றன்வாய்
செம்பதக்கவிசொ லுங்கொலோவெனவி னுவியாமெனல்செ விக்கொளா
வும்பர்போற்றுமெடி மாலுறங்கிடமொ ருங்குரைத்தியென வோதலும்.()

வேங்கடத்தில்வட வாலில்வேலியினி லென்றபோதுதடை மேவலு
மாங்கவட்கருதி யப்பனுவெனவ தட்டினன்புதல்வ னுத்துரந்
தோங்கடற்றடியி னுந்துயின்றிடுமெ னுவுரைத்தொர்மக னுற்றமா
ருங்களின்றியயர் கின்றவாறுகவி சாற்றினன்சுவைத ழைக்கவே. (ருஎ)

அத்திறந்தெரித லுங்களிப்புமலி வாகியாத்தியணி தோளினன்
புத்திவண்மையின னேதன்மாமனது புதல்வனென்றுரைபு கன்றனன்
பத்தினிக்குநிக ராயபாடறரு பாவலோரையது சூடுவார்
நத்தியங்ஙனம ழைக்கைவாரிபுனை நானிலத்தினர்வ ழக்கமே. (ருஅ)

மற்றொர்நாளிரவி னகரிசோதனைசெய் மன்னவன்கரையின் வடபு றத், துற்றொருங்குபல பேய்செய்பூசனைகொ டொளிசெய்காளியியல் போர்ந்துதா, னற்றொலைந்திடுமு னருள்கொள்கம்பன்மனை யணுகியேமக னழைத்ததாற், சொற்றொனிப்புகழ்கொ ளப்பனைதியசொ லாலுணர்ந் துகளி தோய்ந்தனன். (நுகூ)

சந்தனத்தையொரு பேயரைத்ததும தனையொர்பேய்விரலி னலெடித் திந்தவாசகல மேயெனச்சொலிமு கந்ததுஞ்சினமெய் திடுமொர்பே யந்தவேளைவளை கத்திகொண்டுவிர லைக்குறைத்ததுவு மவர்சொலுஞ் செந்தமிழ்க்கவியி னாடொலித்ததுதெ ரிந்துவெள்குபுதி ரும்பினள். ()

இந்தவண்ணமவர் செய்தவாடல்பல வென்னவேயுலகி யம்புமா லந்தவாறுமுழு துந்தெரிந்துரைசெ யற்குநானறிகி லேனயிற் கந்தவேளுமத வேளுமேயனைய காவலன்கொள்களி மிகுதியா லெந்தவாழ்வுமர சர்க்குமேலென விலங்கிடும்படியெய் தினரோ. (சுக)

வே று.

மன்னனிடமற்றுமொரு மன்னினிதுவந்து
நன்னலமியைந்தசொ னவின்றுறையும்வேளை
கன்னன்மதாம்புரை கவிச்சுவைகொள்கம்ப
னன்னவனெடுஞ்சபை நினைந்துவரலானன். (சுஉ)

அன்னமிவர்வான்மனை யருட்பெறுமொருத்தன்
றன்னதியமாகிய தழங்கொலிகுறித்தாங்
கின்னவிறையாவனென வேவளவர்கோன்பாற்
றுன்னலுறுமன்வினவு சொல்லுரைசெய்தானல். (சுஊ)

எம்மதுகவிப்புலவ னென்றுவிடைகூற
மம்மர்கொடுநெஞ்சகம் வருந்திமிகநாணி
நம்மவனையிங்ஙன நலஞ்செய்திலமதனு
லிம்மனைவனென்றன மெனக்கருதியுற்றன். (சுச)

துன்பமறியாரதுகொள் வார்துடிதுடிப்பப்
பின்பதைவளர்த்துமகிழ் பெற்றியெனவந்த
மன்பதைபதைப்பவொரு வாறுமுயலுற்று
னின்பமறுமாறிவனை யெய்தியதம்மா. (சுடு)

வந்தவணிருந்திலகு கம்பனெதிர்வளவ
னிந்தநலமியாருதவ வெய்தினைசொலெனலுங்
கந்தமலிவெண்கமல பீடமிசைகவிஞ
ரந்தமதுதாயுதவி னனெனநவின்றன. (சுகூ)

உன்னனையுனக்குதவ லுண்மையெனினீயே
யென்னதுபுகழ்க்கவி யிசைத்தனைசொலெனலு
மன்னனெனனீகொலகல் வானுமுனதேயோ
வின்னதமிழ்கற்றதனை யெண்ணுநினைவாலோ. (சுஎ)

என்னேவிழையாதம னிகத்திலெகுரங்கு
தன்னேயடைதாங்காத கொம்புமுளதேயோ
வென்னவொருவெண்கவி யிசைத்தனன்வெளுத்த
வன்னேயருளால்விளேயு மார்வமலிவுற்றே. (கூஅ)

கம்பனதுசொல்பொழுது காவலவன்வினவி
யிம்பரிடைநின்பெயரொ டென்பெயர்சொலாதுற்
றம்பலறுமெய்ப்பய னடைந்துவருவாயே
னெம்பவலதென்றுருத லுடகலுமாறே. (கூகூ)

விட்டனனவன்கடிது வேலையதன்மீதே
யிட்டகலமேறியிய லின்பமுணராதே
திட்டனிகர்சொற்கள்பகர் சிங்களவரூர்போய்ப்
பட்டசளமாவன பகர்ந்துமுடியாவே. (எ0)

மண்கொடுசெயுஞ்சுவர்கள் வைத்துயர்னேத்தே
யெண்கொடுதெருத்தொறு மலிந்தவணேரேழை
கண்கொடுகரங்கொடுசெய் சைகைநிலைகருதி
வண்கொடை-நெலென்றுதெரி வுற்றதுவகுத்தான். (எக)

வைத்திடுதொறுஞ்சுவர் சரிந்துவிழுமாற்கிப்
பத்தியொடுவெண்கமலை பாதமலர்நாடி
யித்திருவனுடரு நெ லியான்கொடுசெலளவுஞ்
சத்திகொடுநிற்றியெனெர் பாடலதுசாற்றி. (எஉ)

அப்படிநிலைத்திடல்செய் தஃதுகொடவழியே
கப்பன்மிசையேறியுயர் கன்னிவளநாட்டிற்
றப்பறவிறங்கிமுதிர் தண்டமிழ்வளர்ந்த
மெய்ப்பதியிலெய்தியும வேலைமுயலுற்றான். (எங)

தேறிடமண்வெட்டியெவர் செய்துதவினாரோ
கூறியலுணர்த்தியருள் கோதைதரலேயோ
வீறியலவன்சொல்பெரு நூலைமலர்வேம்பு
நாறியபுயத்திறைய நாள்விழைதலானும். (எச)

அந்தமுதிர்காவிய மதன்பயனெய்தாராய்ச்
செந்தமிழ்வலோர்பலர் தியக்கமுறுமெய்யச்
சந்தநகரிற்பலப லோர்மொழிதலாலே
யிந்தவறிஞன்செவிக ளுள்ளினுமெய்திற்றே. (எடு)

சடையன்மரபோருறு தருக்குலையகீர்தா
முடையபுகழ்கம்மியர்கை யுதவலெனவோதிக்
கொடைநனியளித்தவிறை குன்றவெதிரெள்ளிக்
கடையர்செய்தொழிற்கொடி கலக்கமுறுகம்பன். (எசு)

அக்கவிஞர்செல்பொழுதொ ராளெனவுடன்போய்
மிக்கவரசன்சபையி னேரமதின்மேவித்
தக்கபொருள்சொல்கையி லுவந்துதவறுங்காற்
றுக்கமிகையெய்தின ணுணர்ந்தனர்கடொக்கார். (எஎ)

மன்னனதுணர்ந்தவனே மாட்டுறவிருத்தி
யின்னபனுவற்பய ணுணர்ந்தனவிருந்தா
லன்னவையனேத்தையு மறைந்திடுகெனலும்
புன்னகையுடன்புயல் பொழிந்தெனமொழிந்தான். (எஅ)

தன்கவிகளுக்குரைசெய் வான்றகுதிகண்டு
மன்களிமலிந்தன னவைக்கணுறைவாரி
னன்கணருவப்பெனுமொ ராழியினனேந்தார்
வன்கணர்துயர்க்கடலின் மூழ்கினர்வருந்தி. (எக)

வே று.

அற்றைமன்னனுங் கவற்குநல்லாடையா பரணமாதியநல்கி
யெற்றைவந்தனை நின்சரித்திரமுழு தியம்புதியெனக்கேட்டான்
கற்றைவார்குழற் கலிமகளுணர்த்துநான் கழறுணுதெனச்சொல்லி
யிற்றைதொட்டிதன் பொருள்சொலனின்கட னென்றிடற்கிசைந்தானே.

அந்தவாறிரண் டொருதினஞ்சொல்கையி லளவறுமழுக்காற்று
ணெந்தசில்லிளங் கவிஞர்தாமிரவிடை நுவலொணுன்றனைக்கூவி
வந்தவின்னவன் றன்னைநின்ஞாதியா மன்னன்முற்பகர்கென்று
தந்தநீள்பொருட் கொடையுமீந்தனரவன் சபையருகினினின்றே. (அக)

வருமவன்றனை யண்ணனீயிற்றைநாள் வரையெவணிருந்தாயென்
றருகுசென்றுறத் தழுவினனவனுமாங் கவற்கிதமொழிசொன்னு
னிருவர்தம்மையுங் கண்டுமன்னவன்சிறி திதயமொல்கினனப்போ
தொருவன்றன்மனத் திடைவிடாதிருக்கும்வெள் ளுருவினடனேநாடி. ()

இந்தவேளைநின் றிருவடிச்சிலம்பிலொன் றீதியெற்கெனவாங்கி
யெந்தம்பாகத்தி லிஃதெனதின்னு மமான் றிவனிடத்துளதானீ
யந்தவொன்றையுஞ் சேர்த்துநின்மனோவிதாட் கணிதரும்படிவாங்கி
வெந்தகைக்கலி யறப்பொனல்கெனச்சொலி வேந்தன்முன்வைத்தானே.

அதனைக்காண்டலு மாதவனிலத்திழிந் தானெனவவணுற்றே
ரிதனைமூடிடி னல்லதுவிழிக்கொணு தென்றுகண்புதைத்தாரவ்
விதமுணர்ந்துடன் மயிர்வினைக்கீழ்மகன் மெய்யுரைத்தடிவீழ்ந்தான்
கதமலிந்துமன் னவர்கண்மேற்கனலெனக் கறுவிநோக்கினன்மாதோ. ()

இன்னலூரின னெனத்தெரியாதுறு மியல்வலானிவர்தம்மா
லென்னதேற்றனன் கிலங்கியதாற்பொறுத் திரிதரத்துரத்தென்று
னின்னவாறியற் றியபினரிச்சிலம் பாரதென்றிறைகேட்பச்
சொன்னலத்தின டனதெனக்கம்பனே யிவனெனத்துணிந்தாரே. (அடு)

துணிந்துதெண்டனிட் டளவறப்புகழ்ந்தனர் சூழ்ந்தவர்பலர்தாமும்
பணிந்துமன்னனிச் சிலம்பினையிக்கணம் பாரதிக்குதவென்ரு
னணிந்துகொள்ளென நீட்டலுமறைந்தபி ஞத்திமாலிகைச்சோழன்
றணிந்தொர்சொற்சொலாதங்ஙனமனுப்பியசரிதமியாவையுங்கேட்டான்.

அந்தச்சோழன்ரூன் குலோத்துங்கனல்லனுங் கவன்றருமகனென்று
மிந்தப்பாண்டிய னந்தநாளிருந்தவ னின்றவன்சேயென்றுங்
தந்தக்கார்மலே நிகர்புகழோந்திவிண் டலத்தநாளுறலென்றுஞ்
சந்தப்பாவல ராமவர்நிகழ்தரு தன்மையாலறிவாரே. (அஎ)

கம்பன்வாய்மொழி கேட்டலுமிந்திரன் கனகமாமுடிவீழ
வும்பரோடவென் றவன்றிருமரபின னெற்றராலுழுவைச்சீர்
வெம்படாகையற் கிங்ஙனமெதிரினீ வருகெனவிளம்பிப்பின்
கும்பமாமத களிற்றினிற்கொண்டுபோய்க் கூட்டுவித்தனன்மன்னே. ()

வழுதியானையின் மிசைவருகம்பனை வளவன்றன்களிற்றேற்றித்
தொழுதுநின்பெருந் தாய்செயலறிகிலேன் சொற்பொறுத்தருளென்று
பழுதில்சீர்கொடங் நாட்டிடையுய்த்தலும் பத்தினிதனைச்சேயை
யழுதுகொந்ததாய் தந்தையைக்கண்டுள மலவறக்களித்தானே. (அக)

அழுகின்மிக்கபா ரதிதிசிலசொலி யப்பன்ரூய்கடன்றீர்த்துக்
கிழவிவாதினுற் சிறிதவமதிப்புற்றுக் கிளர்தருசிலநாட்போய்க்
கழகமெங்கணுந் தொனிதருபுகழ்கொடு கம்பன்ரூனிகழ்நாளிற் [னே.
பழமையாருமோர் தரித்திரனவன்சொலோர் பாக்கொளல்விழைந்தா

அவன்றனக்கிவன் பாடலின்விருப்புற லழல்புரைமிடிநீங்கி
நிவந்தசெல்வமெய் திடும்பொருட்டேயிவ னிகழ்த்தலாயிரம்பைம்பொ
னுவந்தளித்தவர்க் கேயெனக்கேட்டுநெஞ் சுழன்ரூருபாயத்தாற்
கவர்ந்துகொள்வது நினைத்தனனையகோ காதலிற்கொடிதின்றே. (கூக)

தன்னையன்றிமற் ரூருவரைவிழைகலாத் தகவுமானையாளா
மின்னையேவியன் னவன்றனக்கதிமயல் விளைவித்துக்கொனர்கென்ரு
னென்னைசெய்வணு யகன்மொழிதவறிடா ளேகியின்மொழிபேசி
மன்னையன்னனின் றிராக்களவாயிவண் வருமென்ரூர்தினஞ்சொன்னுள்

பாய்விரித்தொரு தீபம்வைத்தேவழி பார்த்திருந்தனளன்னுன்
ரூய்விருப்பொடு வந்ததிலிருத்தலுஞ் சுருக்கெனவவள்கேள்வன்
காய்விழிக்கடுங் கூற்றுவனெனத்தடி கைக்கொடுநெருங்குற்ரூன்
வேய்வியந்ததோ ளாள்கொண்கன்சொற்படி விளக்கினையவித்தாளே. ()

இருவர்தாமுஞ்செய்வஞ்சமென்றறிந்திடா தினிக்கொல்வானெனவஞ்சிப்
பொருவில்கம்பனியா னடித்திடேலெனச்சொனுன்புகன்மொழிமெய்யாகி
லொருதமிழ்க்கவி யிக்கணம்பகர்தியிவ் வொண்டொடிதனைக்காணி
லருவருப்பவன் பெயர்சொனுயார்கொனீ யெனவதட்டினன்மாதோ. ()

மைக்கிணைப்படும் விழிக்கணைகொண்டெனை மருட்டலினிருட்டே
பொய்க்கிலேசமுங் களவுமுற்றிருந்தனன் புனர்ந்திலனடாமெய்
கைக்கியைந்ததோர் குறுந்தடிகொடுகழுத் தினைமுறித்திடவோங்கு
முக்கிரக்குணச் சக்களவாவவ டங்கையென்றுரைத்தானே. (கூடு)

அந்தப்பாடன்முற் றலுமுடன்றீபமிட் டவரிருவருமொன்று
வந்தப்பாவலன் ருளில்வீழ்ந்தெழுந்துள வாறெலாமுரைத்திட்டா
ரிந்தப்பாடொரு பாடலுக்காப்பட்டீ ரெனவியந்துரைத்தேகித்
தந்தப்பாழியங் களிற்றினீராடுவா டையெறச்செய்தானே. (கூசு)

எத்தகைப்பெருந் தோற்றத்தோராயினும் பிறர்மனைக்கேக்கற்றூற்
சித்தசஞ்சல முடனுயிர்ப்பயமெய்தித் திகைப்பரென்றிடுதற்கு
முத்தவாணகை யாரிலுள்விருப்பில்பொய்ம் மோகங்காட்டிடுவாரு
மித்தரைக்கணுண்டென்னற்குமீதோர்சான்றெண்ணிநன்குணர்வார்க்கே.

ஒருதினத்தினிற் கம்பன்போய்ச்சோழன்ற னுள்ளரண்மனையின்கண்
ணருமைவாசகம் பேசியுற்றனனவ னடைப்பைதாங்கிடுங்காலை
வெருவாதவ ணுளவெலாம்பார்த்திறை மெல்லியலொடுதுஞ்சும்
பொருவில்கட்டிலிற் கொண்டபொய்த்துயின் மெயாய்ப் போதமற்றதுமாதோ. ()

பட்டினத்தடி களினடித்தொழும்பனும் பத்திரகிரிமன்னன்
கட்டிலிற்படுத் திட்டதொர்தாதியின் கனமடைந்தனனுங்கே
மட்டில்பேரெழிற் சசியினையேகிக ரிறைமனைதன்னுக
மொட்டிடும்படித் துயின்றனளிறைகலை போர்த்ததாலுணர்ந்தில்லாள்.()

அரசன்வந்தவ ளுயிர்த்தெழச்செய்துடன் றுயின்றுளானுன்னிற்
கரவினெஞ்சின ணீயெனகினைத்துடன் கண்டுயின்றனனென்றுள்
பரவுகற்புறு மவளையவ்வறையுளோர் பாங்கருய்த்ததற்பின்ன
ருரமலிந்தவா ளுறைகழித்தவனெழும் படியெழுப்பினன்மாதோ. (கஂஂ)

எத்திறத்தின னெவெனுமையமற் றினந்தெரிதலுநீயீண்
டித்திறஞ்செயத் தகுங்கொலோவென்றலு மிதுபிழையெனச்சோர்ந்தான்
மெய்த்திறற்புல வோன்றனளாதலின் வெட்டிலம்விடுகின்றேன்
பொய்த்திறத்தொரு சமர்த்துரைக்குவனது புகன்றுபோகெனச்சொல்வான்.

நெற்பணிச்செய்நென் மேனியூர்க்கற்பணி நிதஞ்செய்கங்கணவன்மின்
விற்பணித்தநன் னுதலுடைமின்மினி மினியெனுமவள்சொல்லுஞ்
சொற்பணித்தொழில் செய்ததுந்துருதுரு வென்றுடன்சொலித்தீர்த்தான்.
பொற்பணிக்கலை போர்த்துவிட்டுடனவ னறிவுறுவணம்போனான். ()

அடைப்பைக்காரனெங் கெங்கெனவிருந்தவ னவன்வருதலுங்கையாற்
புடைக்கைக்கெத்தனஞ் செய்தலுநடந்தன புகன்றனன்பொற்றூணை
கிடைக்கையோதில ணுதலினிக்கவி கேட்டமன்னவன்றூன்மெய்க்.
கொடைக்கையானல னென்றிகழ்ந்திட்டபின் கொடுத்தநீஃதெனவீர்த்தான்.

கண்டுகம்பனம் மரசனேயரசனுங் கன்னலெப்பவனென்ன
விண்டுமெச்சலு முடனம்மானெனவிளித் தருகிலவ்வேவுத்துற்றுன்
மண்டுதீச்சினத் துடனிகழ்ந்ததும்விளை வினனெனமதித்தாங்கோர்
திண்டுமோதன முங்கொடுத்திருத்தியோர் செழுந்தமிழ்க்கவிசொன்னுன்.

போற்றினுந்தகப் போற்றுவர்வெஃகிய பொருள்கொடாவிடில்வீணே
தூற்றினுந்துணிந் தேமிகத்தூற்றுவர் சொன்னசொற்களையெல்லா
மாற்றினும்முர ணுகவேமாற்றுவர் வடவைநேர்கடுங்கோபக்
கூற்றினுந்தமிழ்ப் பாவலராமவர் கொடியபண்பினரென்றே. (க0டு)

அன்னவாகனத் தயன்புணர்மனேயவ ளமர்ந்தகாவலிபெற்ரு
ரென்னசொல்லினுங் தகுமென்வுரைத்திறை யெழுந்துதன்மனேபுக்கா
னின்னுவாறியன் றிட்டதாற்சிறிதொல்கி யியற்றமிழ்க்கவிக்கம்பன்
றென்னனுட்டிற்றன் சிறப்பொடுபோயிவண் டிரும்புவலெனச்சென்ரூன்.

மதுரையிற்சில நாள்வசித்திருந்தபின் மலேயமால்வரைகாண்பான்
கதுமெனச்செல்கா லங்கொளூர்க்கழனியிற் கடைசியர்சிலர்கேட்ப
முதுபயிர்த்தலேக் கதிரினங்கற்பினர் முகம்புரைந்தனவென்ரு
னிதுவினுவலு மறுத்துக்கட்டிடுகுல மிதுவென்ரூளொருமாதே. (க0எ)

ஆங்கியைந்தவா றுணர்ந்தொளூர்ச்செல்கையி லறலிறைத்திடும்பாட்டோ
மூங்கிலின்னிலே மேலெனநிறுத்தின னதன்றுணைமொழிகூட்டும் [ன்
பாங்கியாதெனக் கருதியவ்வயினிரு பகலிருந்தவன்வாயாற்
றூங்கிடும்பனி நீரெனக்கேட்டுளச் சோர்வொடுசென்ரூனே. (க0அ)

அங்கொளூரினூ லிழந்தவள்சில்லென வலர்சிறுநெருஞ்சிக்காட்
டிங்கொருத்தியா நில்லெனநிறுத்தியே னேகினீரோவென்னப்
பொங்கொலிப்பட வழுதவீரடிக்கவி பொருடளேமுதற்சீர்க
டங்கொராச்சரி யந்தெரிந்துளமிகச் சலித்துமீண்டனன்மாதோ. (க0கூ)

சிலம்பையுங்கையிற் கொடுத்துவாங்கியகலேச் சேயிழைதிறல்வேடர்
குலம்பரிந்துறை யவுமிடந்தருந்தமிழ்க் குன்றுகாட்டிடலளந்தோ
நலம்பிறங்கிய சோழநாடடைந்துசின் னள்கழித்தலுமுன்னேப்
பலம்பொருந்திய வினேந்தொடர்பால்வரும் பயனேயும்பகர்வேனே. ()

முதலிற்றன்னது கவிகளிற்சிலர்தத்த மொழிகலந்திடலோர்ந்து
விதனமுற்றன னப்புறமம்பிகா பதிப்பெயர்மிலைந்துற்ற
சுதனங்காட்டிறை மகளினேக்களவினிற் ரேய்ந்ததாப்பலர்தாமு
மிதமின்றிப்பகர் மொழிவினுவலிற்றுயர் வேலையினிடைவீழ்ந்தான். ()

வேறு.

மன்னவன்மனத்தினு மகளேமற்றவன்
றன்னதுவசஞ்செயுந் தன்மைதோற்றலா
. லின்னவாறவனேயீன் றவற்குக்காட்டிய
பின்னர்தண்டனேசெயப் பெரிதுமுன்னினுன். (ககஉ)

இந்துசேர்முகத்தியு மியல்வல்லான்றவம்
தந்துளபுதல்வனுஞ் சகசமாச்செயு
முந்துபேருறவினன் மோசம்வந்ததென்
றுந்துசீர்மன்னனுள் ளுடைந்துமாழ்கினன். (ககஊ)

ஆண்மகார்பெண்மகா ராமவர்க்கிடை
மாண்மலியுறவது மலியின்மாரவே
ளேண்மலர்க்கணைதொடற் கிடமுண்டாமெனக்
காண்மதியினர்க்கதோர் கரியுமாயதே. (ககச)

மைந்துறுகோனரண் மனையிலன்னவன்
வந்துபோய்க்களிப்புறும் வழக்கைமாற்றிலான்
செந்துவரிதழவட்சேர்ந்த தீமைதான்
பிந்துநாள்கம்பன்முற் பிறங்கக்காட்டவே. (ககடு)

மயிற்புரைசாயலார் தம்மின்மற்றையர்
வெயிற்படுபுழுவென வெதும்பிவெள்குற
வெயிற்புறத்தெறியுநா லேணியேறிவந்
தயிற்பொருகண்ணிதோ ளணைந்தும்போதலால். (ககசு)

ஒருபவுரணைத்தினத் தரசனெண்பிறைப்
புருவமின்னரந்தப் புறத்துற்றுன்மதிட்
கருகுறுதோட்டத்தி லம்பிகாபதி
வெருவுறுதொருகவி விளம்பினனோ. (ககள)

பூவரசடியிலே புதுநிலாவிலே
வேவல்செய்திடும்பொலா விரகத்தீயினு
லாவல்கொண்டுள்ளநா னர்பெண்ணையினுங்
காவலென்றறிவனே வென்னக்காட்டியே. (ககஅ)

அக்கவிவினவிய வரசனுள்விடுத்
திக்கணமவற்கொணர் கென்றுவந்தபின்
றக்கபூவரசடி தன்னிற்சாற்றிய
தெக்கவியதனையீண் டியம்புகென்றலும். (ககஙூ)

பூவரசடியிலே புதுமிடாவிலே
வேவல்செய்பயற்றினே விறகுத்தீயினு
லாவலுக்கிசைந்தவா றவித்துத்தோண்டிடிற்
காவலென்றறியுமோ கையென்றுனரோ. (கஉ0)

அங்குபோய்ப்பார்த்தலு மலர்வெண்டாமரை
தங்குவாளங்ஙனஞ் சமைக்கக்கண்டவன்
பொங்குபேரார்வமாய்ப் புதல்விதன்னேயம்
மங்குனேர்புலவன்பால் வழங்கிலானந்தோ. (கஉக)

எதிவில்லாதிகொண் டிகன்றுபோர்செய்தன்
சாதியிலொருவனைத் தழுவுவாளெனின்
மாதிரமிகழ்ந்திடா தென்னுமானமே
நீதியல் செம்பியன் சிந்தித்தானரோ. (கஉஉ)

அத்தனையருள்பெறு மந்தப்பாவல
னுத்தமமாமட லூர்ந்துங்கொள்ளலா
மெத்தனைமேன்மையெய் திடினுந்தினை
யுய்த்தலைத்தடிப்பதற் கொருவர்வல்லரோ. (கஉஊ)

கற்றுயர்கம்பனு மகனுந்தன்னரு
குற்றுணவுணச்செய லுன்னிமன்னவன்
முற்றுசீர்பெறுமகண் முளரிக்கைகளால்
வற்றுருவுவப்பொடு வட்டிக்கச்சொனான். (கஉச)

மட்டின்மாலுறக்கொளின் மதியுமானமும்
விட்டிடும்படிவரு மெனுஞ்சொன்மெய்ப்பட
வெட்டியவடியினை யெடுத்தமற்றொன்றை
வட்டிலமருங்கினை மகன்சொன்னனரோ. (கஉரு)

கோனம்மானென்றசொற் கூறிக்கம்பன்ற
னனனநோக்கின னவன்கொட்டிக்கிழங்
கூனமின்றிப்பகர் வலைப்பெண்ணைசையாம்
தேனகிலம்பெறு மென்றுசெப்பினன். (கஉசூ)

அவளெங்குற்றுளெனி லரண்மனைத்தலைக்
கவளமால்களிற்றரு கெனலுங்கண்டன
ரிவளவுதயைபுரிந் திறக்கவிட்டதத்
தவளபாரதிபெரும் தவறென்பார்களே. (கஉஎ)

அந்தமட்டினிலமு தயின்றபின்னரம்
மைந்தன்மார்பகத்திறை மகிழ்விற்றன்கையாற்
சந்தனம்பூசித்தன் றனையட்கீதளித்
திந்தவேளையிலிவண் வருகென்றேவினன். (கஉஅ)

களவுடைக்காமிக டனித்துக்காண்டொறு
மளவளாவுதல்வழக் காதலாலவ
னுளமுறத்தழுவிவந் தானுரத்தின்மே
லிளமுலைத்தழும்புபூ ணெழிலொடேய்ந்ததே. (கஉகூ)

காட்டினன்மன்னவன் கம்பன்கண்டொன்
கோட்டியமுகத்தனைக் குற்றங்காணுறு
நாட்டிறையவர்முறை நடாத்துகென்றுதன்
வீட்டினிற்போய்மனம் வெதும்பிவிம்மினன். (கஉ0)

விம்மலுற்றனனுடன் வெள்ளைவாணியை
யெம்மகற்காத்தியென் றியல்கொண்டேத்திலா
னம்மகற்பயந்ததா யதுவினுவலான்
மம்மருற்றுழந்தமை வகுக்கற்பாலதோ. (கஉக)

கம்பனேகலுமவன் மகன்முற்காவல
னிம்பரிலுள்ளபேரொயிலைச்சூழுமுன்
கம்பலைதவிர்த்தருள் கடவுட்போற்றுபாட்
டெம்பருமறியநா றியம்புவாயெனில். (கஉஉ)

என்மகடனையுனக் கீவன்முற்றுமுன்
மன்மதன்மகிழ்கவி வழங்குவாயெனிற்
கன்மமீதெனக்கொடுங் கழுவிலேற்றுவேன்
றன்மமேசாட்சியென் றுரைசெய்தானரோ. (கஉஊ)

அப்படிப்படியாங் கதனைச்சூழ்ந்தன
னெப்பறும்பாத்தொணூற் றெண்பதாதலுஞ்
செப்பணிமுலைகொளச் சிறுமிமேடையும்
றெப்படிச்செல்கின்று னென்னநோக்கினள். (கஉச)

அன்னவள்பார்க்கையி லவனும்பார்த்திட
முன்னவர்செயும்வினை முடுகித்தூண்டலாற்
றன்னகங்குறித்தது தவறிச்சாயகக்
கன்னல்வில்லான்மகிழ் கவியொன்றோதினன். (கஉடு)

சற்றசைந்திடுதலுந் தனங்குலுங்கலு
முற்றணித்தளமு முகின்மென்கூந்தலு
ஙற்றகையதமு நடையுங்கொண்டதேர்ப்
பொற்றலைக்கவின்மட்டும் பொலிந்ததென்னவே. (கஉசு)

அதுதெரிந்தற்றையே யரசனங்கவற்
கதுமெனக்கொலைக்கடுங் கழுவிலிட்டனன்
வதுவைசெய்தவளிலெண் மடங்குளன்புடைப்
பதுமினியிரவிற்போய்ப் பரிந்துபுல்லியே. (கஉள)

செத்ததுகண்டுதன் னுறையுள்சேர்ந்துள
மெய்த்தனைப்பிரேதமா யிருந்துமாழ்கினு
ளத்தமிழ்ப்புலவன்ற னுகமத்தலை
யுய்த்தவாறிருந்ததா லோர்சின்னளரோ. (கஉஅ)

மன்னன்போய்ப்பார்த்ததன் வாயினின்றுசில்
சின்னவெண்புழுவரற் றெரிந்துகம்பன்பா
லின்னவாறென்னென வினுவிலென்மகன்
றன்னதன்றன்மக டனதுரூவதே. (கஉஎ)

அவனுயிர்போம்பொழு தவடன்னுச்சுவைத்
தெவளவோகூறுபற் கறித்ததென்றலுங்
கவளமாவனேயன்போய்க் கண்டக்கன்னியைத்
தவளநீற்றறையினிற் றள்ளிநீற்றினன். (கசo)

வே று.

கம்பனன்றுதன்மகனு மிறைமகளுமெழுந்துவரக் கவிகள்பாடி
லும்பர்வியந்திட நடக்கு மொட்டக்கூத்தன்செயலு முன்னிலானவ்
வம்பரிருவருமர சண்டமுற்றுரொனமதித்து மமைந்தானில்லை
யிம்பர்வெறுத்தரசனேயு மிகழ்ந்துதுறவறத்தேனு மேகிலானே. (கசக)

எத்தனேதான்பொருள்கைவசத் திருந்தாலுமிவ்வுலகத் தியற்றவேண்டு
முத்தமகாரியங்தெரியார் பலரதுபோன்றவன்புலமை யொளிர்ந்ததந்தோ
மத்தகவேழத்தினுக்குப் பயந்துதன்பால்வருமரசன் மகனேக்கையில்
வைத்தவெழுத்தாணியினுற்கவியானேச்செயலிதெனவதைத்திட்டானே.

தன்னருமைக் குலக்கொழுந்தைத் தமிழ்ப்புலமைத் திறங்கொள்
கம்பன் சதித்ததோர்ந்து, மன்னன்வடி வாளெடுத்தங் கோடினன்கண்
டவனெடிய மாயனை, நின்னடிக்கொன் முயபுவி நடந்தோடற் கிடங்
கொடுக்கை நிகழ்த்துகென்று, னின்னமுஞ்சில் சேயிருந்தாற் கொடுத்
தனது கவிபுனேவே னென்றுபோனன். (கசஉ)

பொன்றியமைந்தனேக்குறித்துச் சிற்சிலபாப்புகன்றழுது பொருமு
ங்கம்ப, னின்றிதுநாஞ்செய்ததற மன்றெனவுந்தேறிமன மிடைந்தங்கும்
ரூன், சென்றிமென்செலச்செலத்தன் குலக்குணமேலிட்டுமகற் செகுத்
தோன்றன்னேக்,கொன்றிடலேகருமமெனத்துணிவுற்றுன்வினேப்பயனேக்
குலேப்பாரியாரே. (கசச)

மன்னன்மனேமகளொடுதன் மகனேயுந்தோற்றிட்டதுயர் வாரிவீழ்ந்தா
லின்னமுதகவிக்கம்பன் மனேயதனிற்பாதியடைந்திட்டாளந்தோ
வென்னவென்பேனங்காட்டுற் ரூர்பலருகொந்தவித மியம்பற்பாற்ரே
முன்னமவரநுபவித்த சுகமுழுதுமிதற்கீடா மொழியொண்ணுதே. ()

மட்டில்புகழுறுஞ்சோழன் றன்மரபின்கொடியாமோர் வல்லியத்தைப்
பெட்டியினுள்ளுய்த்துநனி பிரகாசந்தருமறையுட் பேணிவைத்துப்
பட்டினியாதியதுயர்ப்பட் டழல்கின்றகம்பனேயும் பரிந்துய்த்திஃது
ளிட்டிருக்கும்பொருளேவெளிப்படுத்துவதன்கடமையென வியம்பினனே.

சென்றுதிறத்தலுமதனு ளிருந்தபெரும்புலிகுதித்துச் சீறித்தன்னேக்
கொன்றுதினற்காமுயற்சி செய்ததிதுபதினுறு கூரைவீழ்க
வென்றுகவியொன்றுரைத்துக் கையினெழுத்தாணியினே பெறிந்தானவ்வா
றன்றுதுணிபட்டதனு லரசன்முதலோர்வியப்புற் றடிவீழ்ந்தாரே. ()

பின்னுமன்னன்றனக்கினிய சிற்பனெருவனேக்கொடொருபெட்டிசெய்து
மின்னுமம்பும்வில்லுமத லுள்ளமைத்துத்திறந்தாரை விரைந்துகொல்லு
மென்னுமியல்பினதாக்கித் திறத்தியென்றனடந்தவெலா மெளிதுதேற
முன்னுவன்றவாணியெங்கோமறைந்திட்டாள்விணேப்பயன்முற்றியதாலந்தோ. ()

திறத்தலுமார்பகத்துருவிப்போயதுமன்னனேப்பார்த்துச்சீறிச்சொல்வான்
மறத்தகைசால்வில்லம்பு சொல்லம்பைவெல்லாதுன் வஞ்சவில்லம்
பிறத்தலெனக்கீந்ததென்சொல் லம்புனதுகுலமுழுதுமெரித்ததென்றுன்
மறத்தலில்வெண்மகள் பதத்திற்புகுந்துய்ந்தானிரவிகுலமாய்ந்ததன்றே.

இம்பரிற்பாவலர்பலரு மிகபரச்சீர்கருதுநல மெய்தவேண்டிக்
கம்பனதுசரித்திரமு மவன்மகன்காதையுங்களித்துங் கவன்றுஞ்சொன்னே
னும்பரில்வாழ்புலவர்சிறை குகன்மீட்டாங் கிவ்வுலகிலுறும்பாவல்லார்
தம்பதத்தின்றளைகளைந்தகாளமேகப்புலவன் றகைசொல்வேனே. (கூ0)

கம்பர்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உஙகஙு.

ஐம்பத்தாறுவது
காளமேகப் புலவர்சருக்கம்.

அகிலந்தனே யுண்டுமிழ்மாய னரங்கத்துற்றுர்
மகிழத்திருக் கோயிலிலுண்டி வளஞ்செய்கின்றுன்
முகிலிற்றிகழ் கோலமுந்தக்கமெய் மொய்ம்பும்வாய்ந்தோ
னகிலச்சுமை மாதர்நல்லாரது ராகமிக்கோன். (க)

காவைச்சிவன் கோயிலிலுற்ற கணிகைமாருட்
டேவைப்புரை வாளதிரூபத்தெதார் செல்வியன்னு
ணவைக்குரு வாக்கொடுசொற்படி நானுஞ்செய்தே
சாவைத்தணந் தார்பெறுமின்பந் தலேக்கொண்டானே. (உ)

அவ்வாறவ னுர்வமெய்திக்குல வந்தநாளிற்
செவ்வாய்க்கரு மாமுகில்போலரி சீரங்கத்தி
னெவ்வாச்சுவை தோய்பலவுண்டியு மானேக்காவின்
மைவார்குழ லாள்பலருண்ண வழங்கினுளே. (ஊ)

அப்புத்தல மாஞ்சம்புகேசுரத் தண்ணலார்முன்
னெப்புத்தவிர் மார்கழிமாதநல் லுற்சவத்திற்
செப்புத்துணே போலுமுலேச்சியர் தீபமேந்தி
யுப்புப்பெருக் கார்திருப்பாடல்க ளோதும்போது. (எ)

மல்லாருமெங் கொங்கைகணின்பதம் வாழ்த்துமன்ப
ரல்லார்புயஞ் சேரற்கவென்றுர்சொ லாங்குவந்த
தெல்லாருஞ்சொன் னுரவரோடிவ டானுஞ்சொன்னுள்
பல்லாருமொன் முயிவடன்முகம் பார்த்துநக்கார். (ஙு)

வெண்ணீறணி யாதுமண்ணிட்டரி வேட்கைகொள்ளுங்
திண்ணீர்மையற் சேர்வதெண்ணிச்சிரித் தார்களென்றோர்ந்
தெண்ணீர்மைய ளாய்மனைக்காப்பினிற் ருளுமிட்டுக்
கண்ணீர்ததும் பும்படிவைகினள் காதனீத்தே. (சு)

வழக்கப்படி யேயந்தவேதியன் மாதவன்றன்
முழக்கப்பெருங் கோயிலின்கைத்தொண்டு முற்றியப்பாற்
சழக்கற்றமெய் யன்பொடுதோட்சுமை தாங்கிவந்தான்
பழக்கந்தவிர் நாளிதென்றோதிப் பயணமிட்டு. (எ)

காப்புந்திற வாதவளாகிக் கடுகெடுத்தா
லேய்ப்புண்டுகொ லென்குற்றமுண்டுகொ லேதஞ்செய்யின்
மாப்புண்டுகொ லின்றுகொனிற்கு வழங்கவேண்டுங்
கோப்புண்டுகொ லுண்மையையிக்கணங் கூறுகென்றான். (அ)

என்னென்முடி யாதனசொல்குவை யென்னிலந்தோ
ணின்னைசவிட் டியக்கலனுவியை நீப்பனென்றுஞ்
சொன்னன்மனச் சாட்சியென்னச்சொலுஞ் சொற்பொயாமோ
வன்னலுரு கித்தனதெண்ண மறைவதானுள். (கூ)

இன்றைக்கெனி னத்தினென்னே யிகழ்ந்தவாற்றுற்
கொன்றைச்சடை யானடியாரலர்க் கூடிடாமாண்
பொன்றைப்பெரு நோன்பெனக்கொண்டுள் ளுறுதியுற்றே
னென்றைக்கு மிதிற்றிறம்பேனென் றியம்பினளே. (கo)

அதுகேட்டலு மக்கணமூழ்கியவ் வந்தணன்றான்
பதுமாதன மிட்டுறுமோர்தவன் பக்கலேகி
விதுவேங்கர் நீற்றுடனக்கமும் வேண்டிப்பூண்டப்
பொதுமாதுதன் வாயிலிற்சென்று புகழ்ந்துகூவி. (கக)

எனைப்பார்த்தனுப் பேகுவனென்றிரந் திட்டபோதம்
மூனைக்கோல்விழி யாளுமவ்வண்ண முகத்தைநோக்கி
மனைக்காயிரம் பங்குளத்தன்பு மலிந்துசேர்த்தாள்
வினைப்பாசத்தை யெத்திறத்தாலும் விலக்கொண்ணுதே. (கஉ)

வே று.

இரவெலாமொரு கணப்பொழுதாக வின்பவாரியி னிடைதிளைத் திட்டார், பரவுசெங்கதிர்ப் பண்ணவன்கீழ்பாற் பருப்பதத்தினிற் பசும் பரிதேர்மேல், வாலும்வேதிய னெழுந்துசற்றேனு மானமின்றியே மறுபிறப்பினன்போ, லரனன்னுமங்கள் சிலசொலிவந்தா னறிஞர்சிற்சில ரதிசயித்தனரே. (கங)

ஏனைமானிடர் காண்டொறுங்கைசெய் திகழ்ந்தவாறியம் பரியனவேயா
மானையன்னகண் ணுளவளன்றி மற்றியாவரு மதிக்கலாரனு
ராணையீரூரி யானடியரினு மளவில்பற்பல ரவமதித்திட்டார்
சோனைமாமுகி லனையவனடியார் சுடலும்வெட்டினுந்தோடமின்றென்றார்.

உண்டியாதியு மவள்பொறுப்பாயு முரிமைமேலிடலாலுனே யன்றி
யெண்டிசாமுகத்ததிபர்கள்வரினு மிணங்குறேனென வேகலந்திருந்தாள்
வண்டினம்புரை கண்களான்மருட்டும் வளைவின்மாதரார் மரபினுமிலையாள்
பண்டிருந்ததனுலவளாசை பழிநல்காதிசைப் பலிதமீந்ததுவே. (கடு)

கலந்தநெஞ்சுறு மாதர்கடம்மேற் காதல்குன்றுபு கபடமங்கையர்தோ
ளலந்தலைந்திடல் காமிகள்முறைமை யாதலாலவ ளன்பறிந்ததற்பி
னுலந்தரும்புயத்தரசர்கண் முதலாவுலகிலுள்ளவ ரொருங்குபோற்றிசைக்கு
நலந்தரித்தல தமைவுறேனெனுமோர் நசையெழுந்தது நல்விஜேவசத்தே.

அன்றிராவினி லரியவெண்ணீறு மக்கமாலையு மளித்தமாதவன்பாற்
சென்றிறைஞ்சியென் னெண்ணமீதென்னைச் செப்பினனவன் றிருவுள
மகிழ்ந்து, நன்றிமந்திர மளவறச்செபித்தா னுன்முகத்தவ னன்மனையாட்டி
வென்றிநல்குவ ளவளுருவின்ன விதத்ததாமென விளம்பிவிட்டன்னே.

தவளமேனியுங் கரியவார்குழலுந் தடையில்பேரருட் சலதிநேர்விழியும்
பவளவாயுநாற் கரங்களுமேடும் பளிங்குமாலையும் பரித்தபேரெழிலு
மிவளவென்றளக் கரியசீர்பிறவு மெண்ணியெண்ணிமிக் கிரவொடுபகலு
மெவளவோவுருச் செபித்தனனெதிர்வந் தீயில்வாக்களித் திட்டனளினிதே.

தெய்வவாணிவந்தோசையுநயமுஞ்செறிந்தசெந்தமிழ் வாக்களித்திடலுஞ்
சைவமேபொருளெனப்பலபாடல் சாற்றினுன்சில சமயநேர்ந்திடுங்கான்
மைவனக்கிரியனேயமாயனேயும் வழுத்தினுன்றனை வணங்கிடாமாந்தர்
